பாபாசாகேப்

டாக்டர் அம்பேத்கர்

நூல் தொகுப்பு :

தொகுதி 12

டாக்டர் பாபாசாகேப்

அம்பேத்கர் :

பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு

தொகுதி 12



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம் : ஏப்ரல் 14, 1891 *பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956*

''தனிநபர் சொத்துரிமையையும் தனிநபர் லாபநோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் வணிகம் (வியாபாரம்) ஒரு முக்கிய கருவியாகும். அது இல்லாமல், தங்கள் உழைப்பால் சிறப்பாக உற்பத்தி செய்த பண்டங்களை அந்தச் சமுதாயத்தின் உறுப்பினர்கள் பகிர்ந்தளிக்க (Distribute) முடியாது. குலுக்குச் சீட்டு முறையோ அல்லது ஒரு நிர்வாக முறையோ அதன் இயல்புக்கு ஒவ்வாததாக இருக்கும். அது தனது தன்மையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனில், தனித்தனியான தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒரேமுறை, தனியார் வியாபாரமே. வியாபாரம் செய்யும் சமுதாயம் தவிர்க்க முடியாத வகையில் பணம் சம்பந்தமுடைய சமுதாயமாகவே இருக்கும்; அவசியத்தின் காரணமாக, அதன் பேரங்களைப் (நடவடிக்கைகளை) பணத்தின் ஆதாரத்தில் நடத்தும் ஒரு சமுதாயம் அது. உண்மையில் பங்கீடு பிரதானமாகப் பண்டங்களைக் கொடுத்துப் பண்டம் பெறும் அடிப்படையில் இல்லாமல், பணத்திற்குப் பிரதியாகப் பண்டங்களை வழங்குவதாகும். அத்தகைய சமுதாயத்தில், எல்லாமே பணத்தை மையமாகக் கொண்டே சுழல்கின்றன. எல்லா மனித முயற்சிகள், நலன்கள், விருப்பங்கள், லட்சியங்கள் ஆகியவற்றுக்குப் பணம் குவிமையமாக இருப்பதால், வியாபாரத்தொழில் செய்யும் சமுதாயம், விலை என்ற அமைப்பில் செயல்பட்டாக வேண்டும்; பொருளை வாங்க முதலீடு செய்யப்பட்ட தொகைக்கும் அதனை விற்கும் விலைக்கும் இடையே சரியான இடைவெளி உள்ளபடி நேர்த்தியாகக் கணக்கிடுவதன் விளைவுகளைப் பொறுத்தே வெற்றிகளும் தோல்விகளும் அங்கு கிடைக்கும்.''

- டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் -

'ஒரு இரட்டை உலோக நாணய மதிப்பிலிருந்து
ஒரு வெள்ளி நாணய மதிப்பிடு'

This Volume XII in Tamil forms the second part of the English Volume 6 : **Dr. Babasaheb Ambedkar - Writings Published by the Education Department, Government of Maharashtra, 1982.**

முதற் பதிப்பு : ஏப்ரல், 1997
சைத்ரா, 1919

விலை ரூ. 40/-
நூலகப் பதிப்பு : ரூ. 100/-

வெளியீட்டாளர்:

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு,
புது டில்லி.

விற்பனை நிலையம்:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,
41 B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 98.

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
சென்னை - 600 014.
தொலைபேசி: 8532441, 8532973

ஆலோசனைக் குழு

மாண்புமிகு பல்வந்த்சிங் ராமுவாலியா
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

திரு. கே.கே. பக்ஷி, இ.ஆ.ப.
செயலாளர், நல அமைச்சகம்

பி.எல். சர்மா, இ.ஆ.ப.,
உறுப்பினர் - செயலாளர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

எச்.ஆர். பீமா சங்கர், ஐ.ஆர்.எஸ்.,
இயக்குநர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்) :

டாக்டர் எஸ். பெருமாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

ஆங்கிலத் தொகுப்பாளர் :

திரு. வஸந்த் மூன்

பம்பாய்

தமிழ் நூல் பதிப்பாளர் :

டாக்டர் எஸ். பெருமாள்

மொழி பெயர்ப்பாளர்கள்:

திரு. ஏ.எஸ். மணி
திரு. பசுமைக்குமார்
முனைவர் மு. இளங்கோவன்
திரு. தியாகராஜன் (தியாகு)
திரு. என். இராமகிருஷ்ணன்

ஒப்பு நோக்கியோர்:

டாக்டர் பி. ஜெகதீஸ் காந்தி
டாக்டர் கு. இரவீந்திரகுமார்

பிழைதிருத்த உதவி:

பேராசிரியர் எஸ். தேவராசன்

அணிந்துரை

சமுதாயத்தில் சிலர் தம்மை உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொள்வதும், பிறரை இழிந்தவர்கள் என்று அவமதிப்பதும் உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொள்வோர் மற்றவர்களைத் தொடுவதற்குக் கூட அஞ்சுவதும், வெறுத்தொதுக்குவதும் வழக்கமாக உள்ளது. இந்தப் போக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கக் கூடியதாகும். இந்த மனநிலை இப்போது மாறிவரக் காண்கிறோம். பழையன கழிந்து, புதியன புகுதல் நிகழ்வதோடு, இந்த மாற்றத்தை ஏற்படுத்த பாடுபடுவோரும் பெருகி வருகின்றனர். இவர்களின் முயற்சி வெற்றி பெற்றே தீரும்.

புத்தரின் நெறியை அறியாதவர்கள் வெகுசிலர். அவர் காட்டிய நெறியைப் பின்பற்றிச் சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கும் பணியைப் பலரும் மேற்கொண்டுள்ளனர். சமத்துவமற்ற நிலையைப் போக்கிடப் பாடுபட்டவர்களில் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர் வகுத்தளித்த சமத்துவக் கொள்கையைப் பாரத அரசு நிறைவேற்றப் பாடுபட்டு வருகின்றது.

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர், தீண்டாமையைத் தீரமுடன் எதிர்த்த சிறப்புக்குரியவர். மக்களிடையே பிறப்பினால் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதை அறவே வெறுத்தவர்.

நம் நாட்டின் விடுதலைக்காக எண்ணற்றவர்கள் இரத்தம் சிந்தியுள்ளனர். அவர்கள் சிந்திய இரத்தத்தில் வேற்றுமை இல்லை. இந்த உண்மையை அறிந்த பின் மக்கள் அனைவரும் சமமே என்பதில் நாம் உறுதியாக இருப்பதோடு, மக்களிடையே நிலவும் அனைத்து வகை வேறுபாடுகளையும் களைந்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்.

இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் நமது பாராட்டுக்கு உரியவர்களாகின்றனர்.

பல்வந்த் சிங் ராமுவாலியா
நலத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

புது டில்லி

வாழ்த்துரை

'பாரத் ரத்னா' விருதுபெற்ற டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் ஒப்பற்ற அறிஞரும், உண்மையான தேசபக்தருமாவார். அவர் நம் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை; எண்ணற்றவை. நம் நாட்டை நலிவடையச் செய்த பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் போக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்.

சமுதாயத்தில் நிலவும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணமாக உள்ள சாதி, மத வேறுபாடுகளை ஒழித்தால் தான் நாடும், மக்களும் முன்னேற்றம் காணமுடியும். மக்களிடையே வேற்றுமை பாராட்டும் தீண்டாமைக் கொடுமையை ஒழித்து ஒன்றுபட்டு வாழும்போதே உயர்ந்த பண்பாடுள்ள சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்ற நிலையை எய்த முடியும். இத்தகைய கொள்கையை எடுத்துரைத்து நிலைநிறுத்துவதற்காகத் தம் வாழ்நாள் முழுதும் அயராது பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். இந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள், தம் கருத்துகளை ஆங்கில மொழியில் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார். அவருடைய சிந்தனைகளை இந்திய மொழிகளில் வெளியிட்டுப் பரப்பும் பணியை மாண்புமிகு நலத்துறை அமைச்சர் திரு. பல்வந்த்சிங் இராமுவாலியா அவர்களும், நலத்துறைச் செயலாளர் திரு. கே.கே. பக்ஷி அவர்களும் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றனர்.

சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் எண்ணங்களையும், கருத்துகளையும் தாங்கிவரும் இந்தத் தொகுதியும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

புது டில்லி

பி.எல். சர்மா,
உறுப்பினர் - செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம்

பதிப்புரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கில மொழியில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுதிகளை இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடும் பணியை இந்திய அரசின் நல அமைச்சகத்தைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது. இந்தப் பணி மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் 10-வது தொகுதியை நாட்டு மக்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். உயர்ந்ததொரு இலட்சியத்தை நோக்கி நம் நாடு செல்லும் பயணத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்கள் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆங்கில நூல்களை இந்திய மொழிகளில் அளிப்பதில் முனைந்து பணியாற்றும் பதிப்பாசிரியர்கள், மொழிபெயர்ப் பாளர்கள், ஒப்புநோக்குவோர், அச்சகத்தார் ஆகிய அனைவரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள். இந்த அரிய பணியில் ஒத்துழைப்பு நல்கும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக் கின்றோம்.

ஏனைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதி யையும் மக்கள் வரவேற்று ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

புதுடில்லி, **எச்.ஆர். பீமா சங்கர்,**

இயக்குநர்

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

தமிழ் நூல் பதிப்பாசிரியர் உரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கிலத்தில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபா சாகேப் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் ஆறாம் தொகுதி, தமிழில் இரு பகுதிகளாக வெளியிடப் படுகின்றது. தமிழில் முதல் பகுதி பதினொன்றாவது தொகுதியாகவும், இரண்டாம் பகுதி பன்னிரண்டாவது தொகுதி யாகவும் அமைந்துள்ளது.

இந்திய நாட்டுச் சமூகம் அரசியல் சிக்கல்களில் ஆழமும் நுட்பமும் நிறைந்த பேரறிஞராக விளங்கிய பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் சட்டத்துறையிலும், பொருளாதாரத்திலும் ஆர்வமும் ஆழமான அறிவுத்திறனும் கொண்டவர் என்பதனை இவ்விரு தொகுதிகளும் வெளிப்படுத்துகின்றன. 1915-ல் 24 வயது இளைஞராக விளங்கிய டாக்டர் அம்பேத்கர், அமெரிக்க நாட்டு கொலம்பியா பல்கலைக்கழக மாணவராக இருந்த காலம் முதற்கொண்டே இந்திய நாட்டில் ஆங்கிலேயராட்சி நிலைபெற்ற வரலாற்றுப் பின்னணி யில் சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூர்ந்து ஆய்ந்து ஆய்வேடுகளாக அளித்திருக்கிறார் என்பது வியப்புக்குரியது. பன்னிரண்டாவது தொகுதியில் அடங்கியுள்ள 'ரூபாயின் பிரச்சினை' முதலாவதாக 1923-இல் வெளிவந்து மீண்டும் 1947-இல் 'இந்தியச் செலாவணி மற்றும் வங்கித் தொழிலின் வரலாறு' என மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியில் சிறந்த சிந்தனைக் களஞ்சியமாக விளங்கும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளியிடும் மகத்தான பணியை மேற்கொண்டுள்ள இந்திய அரசின் நலத்துறையும், டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனும் பாராட்டுதலுக்கு உரியவை. இந்த நூல்களை மொழிபெயர்க்கும் பணியைப் பலர் மேற்கொள்வதால் மொழிநடையிலும், சொல் லாட்சியிலும் வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகி யுள்ளது. இந்தக் குறைகளைத் தமிழ் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள் என நம்புகின்றோம்.

இந்த அரிய பணியில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர் ஆகிய யாவரும் நன்றிக்குரியவர்கள். முந்தைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதியையும் மக்கள் வரவேற்று ஏற்பார்கள் எனவும் நம்புகின்றோம்.

எஸ். பெருமாள்

தமிழ் நூல் பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

ரூபாயின் பிரச்சினை அதன் தோற்றமும் அதற்கான தீர்வும்

பி.ஆர். அம்பேத்கர்
பம்பாயில் உள்ள
சைடன்ஹாம் வணிகப் பொருளாதாரக் கல்லூரியில்
அரசியல் பொருளாதாரத் துறையின்
முன்னாள் பேராசிரியர்.

லண்டன்
பி.எஸ்.கிங் அண்டு சன் லிமிடெட்,
ஆர்சர்ட் ஹவுஸ், 2 & 4 கிரேட் ஸ்மித் தெரு,
வெஸ்ட் மினிஸ்டர்
1923.

எனது தந்தையார் - தாயார் அவர்களின்
நினைவுக்கு சமர்ப்பணம்

அவர்கள் புரிந்த தியாகங்களுக்கும் எனது கல்வி பற்றி
அவர்கள் காட்டிய தேர்ந்த ஞானத்திற்கும் எனது
நீங்கா நன்றிக்கடனுக்கு அடையாளமாகச்
சமர்ப்பணம்.

இந்தியச் செலாவணி, வங்கித் தொழிலின் வரலாறு

பி.ஆர். அம்பேத்கர்

பம்பாயில் உள்ள
சைடன்ஹாம் வணிகப் பொருளாதாரக் கல்லூரியில்
அரசியல் பொருளாதாரத் துறையின்
முன்னாள் பேராசிரியர்.

(1947இல் வெளிவந்ததின் மறுபதிப்பு)

எனது தந்தையார் - தாயார் அவர்களின்
நினைவுக்கு சமர்ப்பணம்

அவர்கள் புரிந்த தியாகங்களுக்கும் எனது கல்வி பற்றி
அவர்கள் காட்டிய தேர்ந்த ஞானத்திற்கும் எனது
நீங்கா நன்றிக்கடனுக்கு அடையாளமாகச்
சமர்ப்பணம்.

இரண்டாவது பதிப்பிற்கு முன்னுரை

''**ரூபாயின் பிரச்சினை**'' என்ற நூல் முதலாவதாக 1923இல் பிரசுரிக்கப்பட்டது. அது வெளிவந்ததலிருந்து அதற்கு மிக அதிகமான தேவை ஏற்பட்டது. அதற்கு அவ்வளவு அதிகம் வாசகர்களிடமிருந்து தேவை ஏற்பட்டதால், ஓரிரு ஆண்டுகளில், எல்லாப்பிரதிகளும் விற்பனையாகிவிட்டன. அதற்கான தேவை (Demand) தொடர்ந்து இருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக இரண்டாவது பதிப்பை என்னால் வெளியிடமுடியவில்லை. அதற்குக் காரணம்: நான் பொருளாதாரத்திலிருந்து அரசியலுக்கும் சட்டத்துறைக்கும் மாறியதால், அத்தகைய ஒரு கடமையைச் செய்ய நேரம் கிடைக்கவில்லை; எனவே வேறுதிட்டத்தை வகுத்தேன்: இந்தியச்செலாவணி (Currency) வங்கித் தொழிலின் (Banking) இன்றைய வரையிலான வரலாற்றை இரு தொகுதிகளாக வெளியிடுவது என்பது, அது **ரூபாயின் பிரச்சினை** என்பது முதல் தொகுப்பில் அடங்கும். 1923லிருந்து துவங்கி இந்தியச் செலாவணியின், வங்கித் தொழிலின் வரலாறு இரண்டாவது தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்களுக்காக இப்பொழுது வெளியிடப்படும் **ரூபாயின் பிரச்சினை,** வேறு ஒரு பெயரில் வெளிவரும் மறுபதிப்பே. **ரூபாயின் பிரச்சினை** வெளிவந்த காலத்திலிருந்து அதில் எந்த மாற்றமும் தேவைப்படுமாறு இந்திய செலாவணித்துறை பற்றி எதுவும் கூறப்படவுமில்லை, எழுதப்பட வுமில்லை என்று பொருளாதாரம் போதிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள எனது நண்பர்களில் சிலர் எனக்கு உறுதி கூறியது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த மறுபதிப்பு பொதுமக்களுக்கு முழுமையாக இல்லாவிடினும் ஓரளவு திருப்தியளிக்குமென நம்புகிறேன். இரண் டாவது தொகுப்பிற்கு அவர்கள் அதிகம் காத்திருக்கவேண்டியிருக்காது என அவர்களுக்கு உறுதியளிக்கமுடியும். மிகக் குறைந்த காலத்தில் அதை வெளியிட வேண்டுமென்று உறுதிபூண்டிருக்கிறேன்.

ராஜகிரகா,

பி.ஆர். அம்பேத்கர்

நூலாசிரியரின் முதல் பதிப்பிற்கு முன்னுரை

நாணயமாற்றுத் திட்ட அமைப்பை (Exchange Standard) நிறுவுவதற்குக் காரணமாக இருந்த சம்பவங்களை விளக்கவும், அதன் தத்துவார்த்த அடிப்படையைப் பரிசீலனை செய்யவும் பின்வரும் பக்கங்களில் நான் முயற்சி செய்துள்ளேன்.

இந்தப் பொருள் பற்றி வரலாற்று நிலையில் பரிசீலிக்கும் பொழுது, மற்றவர்கள் ஏற்கனவே கூறியுள்ளவற்றைத் திரும்பச் சொல்வதைத் தவிர்த்திருக்கிறேன். உதாரணமாக, நாணயமாற்று விகித அமைப்பு எப்படிச் செயல்படுகிறது என்பதை விளக்கும்போது, நான் அளித்துள்ள விமர்சனத்தை வாசகர் புரிந்துகொள்வதற்குப் போதுமான விவரங்களை மட்டும் தொகுத்துப் பொதுவாக விளக்குவதோடு திருப்தி கொண்டிருக்கிறேன். அதிகமான விபரங்கள் தேவைப்பட்டால் அவற்றை மற்ற ஆய்வுக்கட்டுரைகளில் நிறையக் காணலாம். அவற்றை மறுபடியும் இங்குக் கொடுத்திருந்தால், அது தேவையில்லாத பணி யாகியிருக்கும்; மேலும், என் வாதத்தின் பொதுவான அம்சத்தை தெளிவற்றதாக்கிவிடும். ஆனால், மற்ற அம்சங்களைப் பொறுத்தவரை, பிற நூலாசிரியர்கள் செய்துள்ளதைவிடப் பரந்த வரலாற்று அடிப்படை யில் எடுத்துக்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1893ஆம் ஆண்டு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டதற்கான சூழ்நிலைகள் பற்றிய எந்தக் கருத்தையும், குறைந்தபட்சம் தேவைப்படும் கருத்தையாவது இந்தியச் செலாவணி (நாணயம்) பற்றி வெளிவந்த ஆய்வுக்கட்டுரை கள் தரவில்லை. முந்திய வரலாறு பற்றி எடுத்துக்கூறினால்தான் செலாவணி நெருக்கடியில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றியும் புரிந்துகொள்ள உதவும். இதன்காரணமாக, இந்திய நாணயத்தின் புறக்கணிக்கப்பட்ட காலத்தை - 1800 முதல் 1893 வரையிலான காலத்தைப் பற்றி எடுத்து விளக்கியிருக்கிறேன். நாணயமாற்றுத் திட்டம் (Exchange standard) பற்றிப் பிற நூலாசிரியர்கள் தொடர்ச்சி இல்லாதமுறையில் துவக்கிஎழுதியுள்ளது மட்டுமில்லாமல், நாணய மாற்று திட்டம்(மதிப்பு) இந்திய (அரசால்) முதலில் ஆலோசிக்கப்பட்ட (திட்டம்) என்ற கருத்தினை அவர்கள் பிரபலப்படுத்தியுள்ளனர். அது

1913வரை, இந்தியச் செலாவணியைப் பொறுத்தவரை, தங்கமாற்றுத் திட்டம் என்பது இந்திய அரசின் நோக்கமாக இருக்க வில்லை. அந்த ஆண்டு நியாயமாக்கப்பட்ட சேம்பர்லயன் குழு, அதைத் தொடர்வதற்கு ஆதரவாகச் சிபாரிசு செய்திருந்தாலும், யுத்தம் முடியும்வரை அதன் சிபாரிசுகளை அமுல்படுத்தாது என்று இந்திய அரசு வாக்களித்தது; இவற்றை விமர்சனம் செய்வதற்கும் பொதுமக்க ளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. சென்ற யுத்தகாலத்தில் நாணய மாற்று(திட்டம்) அஸ்திவாரத்திலிருந்து ஆட்டம் கொண்டதால், (அரசு) தங்கள் வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியது. திரும்பத் திரும்ப வந்த கண்டனங்களைப் பொருட்படுத்தாமல், ஸ்மித் (குழு விற்கு) வரையறைகளைக் (Terms of reference) குறுக்கியது; அதாவது, நாணயமாற்று (திட்டத்தின்) ஸ்திரத்தன்மைக்கு உத்திரவாதம் செய் வதற்கான சிபாரிசுகளைச் செய்யும்படி கேட்டுக் கொண்டது; அதாவது, இந்தியச் செலாவணியைப் பொறுத்தவரை அந்த மதிப்பளவு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதுபோல், நாணயப் பரிமாற்றத் திட்டம் ஸ்மித் (குழு) ஆலோசனைகள் ஸ்திரப்படுத்து வதை உத்திரவாதம் செய்யாததால், இந்தியச் செலாவணி பரிமாற்ற அமைப்பை பலமான அடிப்படையில் வைக்கவேண்டுமென்று (அரசு) மட்டுமின்றி பொதுமக்களும் விரும்புகிறார்கள் என்று உணர்த்தப்படுகிறது. இந்த நோக்கத்தைச் சிறந்த முறையில் நிறை வேற்றுவதற்கான அடிப்படையை எடுத்துக் கூறுவதுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த ஆய்வை வெளியிடுவதன் எனது குறிக்கோள்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் (பொருளாதாரத்துறை) பணி யாற்றுபவரும் எனது ஆசிரியருமான பேராசிரியர் எட்வின் (கேனன்) அவர்களுக்கு எனது ஆழமான நன்றியைத் தெரிவிக்காமல் இந்த முன்னுரையை நான் முடித்துக்கொள்ளமுடியாது. என்மீது அவருக் குள்ள பரிவும், எனது இந்தப்பணியில் அவர்காட்டிய அக்கறையும் அவருக்கு என்னைக் கடனாளியாக்கியுள்ளது; இதற்குப் பிரதியாக நான் எதுவும் செய்யமுடியாது. இந்நூல் அவரின் ஆழமான மேற் பார்வைக் குட்பட்டது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்; எனினும், நான் வெளியிட்டுள்ள கருத்துகளுக்கு எந்த விதத்திலும் அவர் பொறுப் பல்ல. தத்துவார்த்தரீதியிலான எனது வாதங்கள் அவரின் கடுமை யான பரிசீலனைக்குட்படுத்தப்பட்டதால், பல தவறுகளிலிருந்து அது என்னைக் காப்பாற்றியது. வில்சன் கல்லூரிப் பேராசிரியர் வாடியா எழுத்துப்பிழைகளைத் திருத்தும் சுவாராஸ்யமற்ற பணியை உற்சாகத் தோடு செய்ததற்கு, நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அணிந்துரை

பேராசிரியர் எட்வின் கேனன்

தமது நூலைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதற்குத் திரு. அம்பேத்கர் எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

அவரது விமர்சனத்தின் கணிசமான பகுதியோடு எனக்கு உடன்பாடில்லை என்பதை அவர் அறிவார். 1893இல் கொடுக்கப்பட்ட ஆலோசனை எடுத்துக்காட்டிய முறையில், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில், ரூபாயைத் தங்கத்தோடு வைக்கமுடியும் என்று நம்பிய சில பொருளாதாரவாதிகளில் நானும் ஒருவன்; பல ஆண்டுகள் கடந்தும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்பதால் அந்த நம்பிக்கையிலிருந்து பின்வாங்கவில்லை. ''பொருளியல் விமர்சனம்'' பத்திரிக்கை, ஜுலை 1898, பக் 400-403)[1] அந்த அமைப்பைப் பற்றித் திரு.அம்பேத்கருக்குள்ள எதிர்ப்பை நான் பகிர்ந்துகொள்ளவில்லை; அதற்கும், அதை ஆதரிப்பவர்களுக்கும் எதிரான அவரது வாதங்களில் பெரும்பாலானவற்றை நான் ஏற்றுக் கொள்ளவில்லை; ஆனால், அவர் தமது நோக்கத்தில் நன்றாக வெற்றி பெற்றுள்ளார் (To hit the nail on the head); அவர் கூறுவது முற்றிலும் தவறு என்று நான் நினைத்தபொழுதும், அவர் வாதங்களும் அதற்கான காரணங்களும் சிந்தனையைத் தூண்டும் புதுமைத் தன்மை கொண்டவையாக இருப்பதைக் காண்கிறேன். மூலநூலில் உள்ள விசித்திரமான கருத்துகளை, அம்பேத்கர் கூறுவதுபோல் ''கடினமான பரிசீலனைக்குட்படுத்துவது'' கடினமாகிலும், என்போன்ற ஒரு பழைய ஆசிரியர் இவற்றைச் சகித்துக்கொள்ளக் கற்றுக்கொள்கிறார்.

நடைமுறைக்கான அவரதுமுடிவில், அவர்சரியான நிலையை எடுத்திருக்கிறார் என்றுநான் நினைக்கிறேன். எளிமையான தங்கத் திட்டத்திற்குப் பதிலாகத் தங்கப் பரிமாற்றுத் திட்டத்தை அமலாக்குவது நாட்டுக்கு அளிக்கப்படும் ஒரே ஒரு நற்பலன், அது மலிவாக இருப்பதாகும்; அதாவது தங்கத் திட்டத்தைவிட, உலோகச் செலாவணி கொஞ்சம் குறைந்த மதிப்பைக் கொண்டுள்ளது என்ற அர்த்தத்தில். ஆனால் இந்த முறையில் கிடைக்கும் லாபம் கொஞ்சம்தான். அநேக

மாக மிகக்குறைவே; நிர்வாகிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் தவறான வழியில் பயன்படுத்தமுடியாத செலாவணி என்ற நற்பலனும் இதில் இருக்கிறது. எதிர்ப்பாளர்களின், நடுநிலைமையாளர்களின் சமீபகால அனுபவம் எடுத்துக்காட்டுவது, எளிமையான தங்கத் திட்டம், யுத்தத்திற்குமுன் நாம் புரிந்துகொண்டபடி, தவறாகப் பயன்படுத்த முடியாததல்ல; ஆனால், தவறாகப் பயன்படுத்த முடியாததற்கு அருகில் உள்ளது. தங்க மாற்று திட்டத்தை விட குறைவாகவே போக்கிரிகளால் பயன்படுத்தக்கூடியது. தங்க திட்டம் புரிந்து கொள்ளக் கூடிய நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர் களின் சதவிகிதம் வருந்தத்தக்க விதத்தில் சிறியது; ஆனால் தங்கப் பரிமாற்றுத் திட்டம் புரிந்து கொள்ளும் சதவிகிதத்தை விடப் பத்து அல்லது இருபது மடங்கு அதிகமாக இருக்கிறது; தொடர்ந்தும் அம்மாதிரியே இருக்கலாம். எளிமையான தங்கத் திட்டம், சில லஞ்ச நோக்கத்திற்காக நெறிமுறையற்ற முறையில் பயன்படுத்தப்படுவதை விட தங்கப் பரிமாற்று அமைப்பை அவ்வாறு பயன்படுத்துவது மிகக் கணிசமான அளவு அதிகமாகும்.

அம்பேத்கர் சிபாரிசு செய்யும் திட்டத்தை ஏற்றுக்கொள்வது, அதாவது, ரூபாய் வெளியீட்டை (Issue) மேலும் விரிவாக்குவதைத் தடைசெய்யயவேண்டும் என்பதும், தங்கத்தை இறக்குமதி செய்பவர் களுக்கும் அதை விற்பனை செய்பவர்களுக்கும் ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலையில் நாணயச் சாலைகளைத் திறந்துவிடவேண்டும் என்பது மாகும்; இதனால், நாளாவட்டத்தில் ஒரு நிர்ணயிக்கப்பட்ட ரூபாய் சேமிப்போடு, உருக்கி ஏற்றுமதி செய்யும் தங்கக் காசுகளையும் இந்தியா பெறும்; இது ஐரோப்பிய முன்மாதிரியைப் பின்பற்றுவது. 18ஆவது நூற்றாண்டு இங்கிலாந்தில் தங்க நாணய மதிப்பு தானே அறிமுகப்படுத்திக்கொண்டது; ஏனெனில், வெள்ளி நாணய (காசு) விகிதம் பாதகமான நிலையில் இருப்பதைச் சட்டமன்றம் அனு மதித்தது. 19ஆவது நூற்றாண்டின் பிரான்சிலும் பிறநாடுகளிலும், அது ஏன்வந்தது என்றால், வெள்ளிக்காசுக்கு விகிதம் சாதகமாக இருந்த போது, வெள்ளி நாணயத்திற்குச் சட்டமன்றங்கள் நாணயச் சாலைகளை மூடியதால், தங்கத்திற்குப் பக்கத்தில் வெள்ளிக்காசுகள் முழுவதும் சட்டரீதியான செலாவணியாகப் பெரும் எண்ணிக்கையில் தொடர்ந்து இருப்பது, கோட்பாடு ரீதியில் விசித்திரமாக இருந் திருக்காது; ஏனெனில், அதே நடைமுறை ஓரளவு குறைந்த அளவில் பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் நிலவியது.

இந்தியா தங்கக் காசுகளை விரும்பவில்லை என்று சமயங்களில் கூறப்படுகிறது. இந்தியாவில் உள்ள சூழ்நிலை, சந்தர்ப்பங்களில் பொருத்தமான உருவ அளவிலான (Size) தங்கக் காசுகள் சாதகமாக இருக்காது என்பதை நம்புவதில் கணிசமான கஷ்டம் உள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆங்கிலேயர் ''காகித நாணயத்தை விடத் தங்கக் காசுகளை அதிகம் விரும்புகிறார்கள்'' என்ற பழைய குற்றச்சாட்டைப்போல் சந்தேகப்படும் படியாக இருக்கிறது இந்தக்குற்றச்சாட்டும். இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 5 பவுண்டுக்குக் குறைவான தொகைக்குக் காகித நாணயம் வெளியிடப்படுவதை சட்டம் தடை செய்திருந்தது என்பதைத் தவிர, ஆங்கிலேயர் பற்றி கூறப்பட்டதற்கு வேறு எந்த அடிப்படையும் இல்லை. அதேசமயம் ஸ்காட்லாந்து, அயர்லாந்து மற்றும் அநேக ஆங்கிலம் பேசும் நாடுகளிலும் ஒரு பவுண்டு அல்லது அதற்குக் குறைந்த தொகைக்கும் காகித நாணயங்கள் அனுமதிக்கப்பட்டுத் தடையின்றிப் புழக்கத்தில் இருந்தன. இங்கிலாந்தில் 1816இல் தங்கமும் பெயரளவில் வெள்ளியும் என்று அமைப்பு தற்செயலாக உருவாக்கப்பட்டதற்கு முன்னால், இந்தியாவில் கம்பெனி எடுத்த முடிவுதான் வெள்ளிக்கு கிடைத்தநிலை (Position) என்பதுதான் அதிகம் சாத்தியமானதாக இருக்கலாம். வெள்ளிக்கு இருந்த இந்த நிலை இந்தியர்கள் தங்கத்தை விரும்பாததால் அல்ல; ஐரோப்பியர்கள் அதை மிக அதிகமாக (நேசிப்பதால்) விரும்புவதால், அதில் எதையும் பிரிவதைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதால் என்பது நீண்ட காலமாகத் தெரிந்திருக்கிறது.

கீழை நாடுகளுக்குத் தங்கம் போவதை அனுமதிக்க விருப்பமில்லாது(தயங்குவது) ஒழுக்கக் கண்கொண்டு பார்த்தால் அருவருப்பானது; உலகம் முழுமைக்கு மட்டுமல்லாது, யுத்தத்திற்குமுன் தங்க நாணய மதிப்பைக் கொண்டிருந்த, இன்றும் கொண்டிருக்கிற அல்லது மீண்டும் கொண்டுவரவிரும்பும் நாடுகளின் பொருளாதார நலனுக்கும் முரணானதும் கூட.

அடுத்து உடன்வரும் காலத்தில் தங்கம் ஒரு பண்டம் அல்ல; இதன் உபயோகத்தைக் கட்டுப்படுத்துவது அல்லது சிக்கனமாக்குவது இதர நாடுகளுக்கு விரும்பத்தக்கதாகும். சென்ற நூற்றாண்டு இறுதியில், அது (தங்கம்) மிகப்பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டதால், அதனை வாங்கும் சக்தியை நிலைநிறுத்தி அதன்மூலம் மதிப்பின் அளவை ஸ்திரப்படுத்துவது சாத்தியமில்லாமல் போனது; இன்றைக்கு அதைச் சேமித்து வைத்திருப்பவர்கள் பெருமளவில் அதை வைத்திருக்க விரும்புபவர்கள் அல்லது பெருமளவில் புதிதாகச்

புதிதாகச் சப்ளை ஆவதின் பெரும்பகுதியை எடுத்துக்கொண்டதும், பொதுவான விலைகளின் யதார்த்த உயர்வைத் தடுத்தன. அப்படி இல்லையென்றால் நிலைமை (விலைகள்) வேறாக இருந்திருக்கும். அப்படியும் இப்பொழுதைய விலைகளின் நிலவரம் கஷ்டமானது தான். யுத்தத்திற்குப் பின் அதன் விலைஉயர்வை விரும்பாத அமெரிக்கர் அனைவரின் ஆதரவுடன் பெடரல் ரிசர்வ் போர்டு[1] தங்கச் சுரங்கங்களில் உற்பத்தியானதை எடுத்துக்கொள்ளும் ''வெள்ளை மனிதன் சுமை'' என்ற நடைமுறையைப் பின்பற்றியது; வெள்ளியை வாங்குவதன் மூலம் அதன் மதிப்பை நிலைநிறுத்த ஐக்கிய அமெரிக்கா தவறியதுபோல, முடிவாக தங்கத்தின் மதிப்பையும் நிலைநிறுத்த அது தவறும். சில உயர்மட்ட அதிகாரிகளின் கருத்து எதுவாயினும், தங்க ரிசர்வுகளை வாங்குவதற்கான ஐரோப்பாவின் வங்கிகளின் புதுப் பிக்கப்பட்ட தேவைகள் அதற்கு உதவும் என்பது நிச்சயமாகச் சாத்தியமல்ல. காகித நாணயங்களின் மதிப்பு நிலவறைகளில் மூடி வைக்கப்பட்ட 'பாதுகாப்பு' அல்லது 'ஆதரவால்' என்ற கதைகளால் அல்ல, காகித சப்ளையைக் கட்டுப்படுத்துவதன் மூலமே நிலை நிறுத்தமுடியும் என்பதை அனுபவம் படிப்படியாக மிகவும் மந்த புத்தியுள்ள நிதியாளர்களுக்கும்கூட கற்றுக்கொடுக்கும். முறையான எல்லைக்குட்பட்டுத் தடங்கலின்றி உருக்கப்படும் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் தங்க நாணயமாக முற்றிலுமாக மாற்றப்படக்கூடிய தாக நடைமுறைப் படுத்தப்பட்டால், சிறுஅளவிலான தங்கச் சேமிப்புகள் உள்நாட்டு அல்லது சர்வதேசத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுற்றிலும் போதுமானது என்று தத்துவமும் நடைமுறையும் நிரூபிக்கின்றன. வங்கிகளிடமிருந்து வருவதைவிடத் தனிநபர்களிட மிருந்து பெரும்அளவில் கோரிக்கை (Demand) வருவதற்கு உண்மை யில் அதிக சாத்தியப்பாடு உள்ளது. காகித நாணயத்தைக் கேலிக் கூத்தான அளவிற்குக் குறைத்த சிலநாடுகளின் மக்கள் எல்லாக் காகித நாணயத்தை ஏற்கமறுத்து, தங்கக் காசுகள் பெறுவதை வற்புறுத்தலாம் என்பது சாத்தியமானதே. ஆனால், அவர்கள் இதுவரை பழக்கப் பட்டுள்ள காகிகத்தைவிட நல்ல காகிதத்தில் அச்சான நாணயத்தைப் பெறுவதில் திருப்தியடைவர் என்பதும், உலோக நாணயம் வேண்டுமென்று அதிகம் வற்புறுத்த மாட்டார்கள் என்பதும் அதிகம் சாத்தியமாகக்கூடியது என்று தோன்றுகிறது. மொத்தத்தில், யுத்தத் திற்கு முன்பு இருந்ததைவிட ஐரோப்பா விலும் ஐரோப்பியர்களின் காலனிகளாக ஆக்கிய அதிக நாடுகளிலும் தங்கத்தின் தேவை அதிகமாவதைவிடக் குறைவாகவே இருக்கும் என்பது அநேகமாக நிச்சயம்; அது மிக மெதுவாக அதிகமாகலாம் அல்லது அதிகமாகாமலே போகலாம்.

1. கூட்டரசு ரிசர்வ் சபை

இவ்வாறாக, ஒட்டுமொத்தத்தில், தங்கத்தின் மதிப்பு குறையும்; பொதுவான விலைகள் குறைவதற்குப் பதிலாக உயரும் என்று பயப்படுவதற்குக் காரணம் உள்ளது.

சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் தங்கத்தின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது ஒரு தீர்வு என்பது ஒரு தெளிவான பரிகாரம்; இதன் மூலம் உலகின் கனிப்பொருள் செல்வாதாரங்களை எதிர்காலச் சந்ததிகளுக்காகப் பாதுகாப்பதாகும். மற்றொன்று, எந்தெந்தத் தொகைகளின் வெளியிடுவது என்று முறைப்படுத்தப்பட்ட சர்வதேசக் காகிதச் செலாவணியை வெளியிட, ஒரு சர்வதேசக் கமிஷனை அமைப்பது; இதன் மூலம் கிட்டத்தட்ட ஸ்திரமான மதிப்பைப் பாதுகாக்கலாம். பேராசிரியரின் வகுப்பறையிலிருந்து கிளம்பும் அற்புதமான ஆலோசனைகள் இவை; ஆனால், நடைமுறை அரசியலில் இப்போதைக்கு சாத்தியமில்லை; ஒரு கணிசமான காலத்திற்கும் சாத்தியமில்லாமலிருக்கலாம்.

இந்தக் கஷ்டத்திலிருந்து வெளிவருவதற்கு அதிகம் சாத்தியமான வழி, தங்கச் செலாவணியைக் கீழைநாடுகளில் வழக்கத்திற்குக் கொண்டுவருவதாகும். கீழை நாடுகள் தங்கள் உற்பத்தியில் ஒரு பெரும் பகுதியை எடுத்துக்கொண்டால் மிக ஏராளமாக இப்பொழுது இருக்கும் கனிப்பொருள் ஆதாரங்களைக் கணிப்பதற்காகத் தேவைப் படும் காலத்திற்குள் நாம் சமாளித்துக் கொள்ள முடியும். அதற்குப்பின் மாற்றம் இல்லாமல் செயல்படமுடியலாம்; அல்லது அதைவிட நல்ல ஏற்பாட்டைச் செய்வதற்கான சாத்தியப் பாட்டு நிலைய அடையலாம்.

விலைகள் உயரும்போது கூடுதலான லாபத்தை அடையலாம் என்பதைத் தவிர வேறு எதையும் சிந்திக்க முடியாதவர்களிடம் இந்த வாதம் எடுபடாது; ஆனால், இந்த அதிகப்படியான, உழைத்துச் சம்பாதிக்காத லாபத்தை எந்தமிகப்பெரும்பான்மையான மக்களிடமிருந்து பிழிந்து எடுக்கப்படுகிறதோ, அந்தமக்கள்பால் கொஞ்சம் அனுதாபம் கொள்பவர்கள் இதை ஏற்பார்கள் என நான் நம்புகிறேன்.

எட்வின் கேனன்.

இயல் 1

ஒரு இரட்டை உலோக நாணய மதிப்பிலிருந்து[1] ஒரு வெள்ளி நாணய மதிப்பீட்டுக்கு[2]

தனிநபர் சொத்துரிமையையும் தனிநபர் லாபநோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தில் வணிகம்(வியாபாரம்) ஒரு முக்கிய கருவியாகும். அது இல்லாமல், தங்கள் உழைப்பால் சிறப்பாக உற்பத்தி செய்த பண்டங்களை அந்தச் சமுதாயத்தின் உறுப்பினர்கள் பகிர்ந்தளிக்க (Distribute) முடியாது. குலுக்குச் சீட்டு முறையோ அல்லது ஒருநிர்வாகமுறையோ அதன் இயல்புக்கு ஒவ்வாததாக இருக்கும். அது தனது தன்மையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனில், தனித்தனியான தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கான ஒரேமுறை, தனியார் வியாபாரமே. வியாபாரம் செய்யும் சமுதாயம் தவிர்க்க முடியாத வகையில் பணம் சம்பந்தமுடைய சமுதாயமாகவே இருக்கும்; அவசியத்தின் காரணமாக, அதன் பேரங்களை(நடவடிக்கைகளை) பணத்தின் ஆதாரத்தில் நடத்தும் ஒரு சமுதாயம் அது. உண்மையில் பங்கீடு பிரதானமாகப் பண்டங்களைக் கொடுத்துப் பண்டம் பெறும் அடிப்படையில் இல்லாமல், பணத்திற்குப் பிரதியாகப் பண்டங்களை வழங்குவதாகும். அத்தகைய சமுதாயத்தில், எல்லாமே பணத்தை மையமாகக் கொண்டே சுழல்கின்றன. எல்லா மனிதமுயற்சிகள், நலன்கள், விருப்பங்கள், லட்சியங்கள் ஆகியவற்றுக்குப் பணம் குவிமையமாக இருப்பதால், வியாபாரத்தொழில் செய்யும் சமுதாயம், விலை என்ற அமைப்பில் செயல்பட்டாக வேண்டும்; பொருளை வாங்க முதலீடு செய்யப்பட்ட தொகைக்கும் அதனை விற்கும் விலைக்கும் இடையே சரியான இடைவெளி உள்ளபடி நேர்த்தியாகக் கணக்கிடுவதன் விளைவுகளைப் பொறுத்தே வெற்றிகளும் தோல்விகளும் அங்குக் கிடைக்கும்.

''பணத்தைவிட உள்ளார்ந்த அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எதுவும் இருக்கமுடியாது'' என்று பொருளாதாரவாதிகள் வலியுறுத்தியுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை. ''சமுதாயத்தின் ஒவ்வொரு தனி

தேவையானவைகளைச் சரியான விகிதத்தில், முறையாக வினியோகிக்கும் ஒரு சிறந்த சக்கரமாகத்தான் அதிகபட்சம் பணம் செயல் படுகிறது. பணத்தின் மதிப்புகள் தான் பொருளாதார முயற்சியின் திட்டவட்டமான விதிமுறைககள் (terms) இல்லையா என்பது விவாதத்திற்குரியதாக இருக்கலாம்.[1] ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்; பணத்தை உபயோகிக்காமல் ''வாழ்க்கைத் தேவைகள், வசதிகள், கேளிக்கைகள்'' முறையாக வினியோகிக்கப்படாது என்பதோடு, முற்றிலுமாக நிறுத்தப்படாவிடினும், துயரங்களை ஏற்படுத்தும் அளவிற்குத் தடங்கல் ஏற்படும். பொருள்களின் (பண்டங்களின்) இந்த வியாபாரம் எவ்வாறு பணமில்லாமல் நடைபெறும்? பணம் ஒரு மேற்போர்வை (Cloak) தான் என்று வலியுறுத்தியவர்கள் உள்ளிட்ட எல்லாப் பொருளாதாரவாதிகளுக்கும் பண்டமாற்று முறையின் கஷ்டங்கள் பற்றிய விஷயம் சந்தேகமின்றிப் பொதுவானதாகியுள்ளது. பண்டமாற்றுவதிலுள்ள கஷ்டங்களைத் தவிர்த்து வியாபாரத்தைச் சுலபமாக்குவதற்குப் பணம் அவசியம் மட்டுமல்ல. நுணுக்கமாக்கு வதை அனுமதித்து உற்பத்தியை நிலைநிறுத்தவும் அது (பணம்) அவசியம். ஒருவர் தனது பொருட்களை வியாபாரம் செய்து தனக்கு வேண்டியவற்றைப் பெறமுடியவில்லையெனில், தொழில்நுணுக்கம் பற்றி யார் கவலைப்படுவர்? உற்பத்தியின் பணியாள் (Hand maid) வியாபாரம் தழைக்கவில்லையெனில் உற்பத்தி சீரழியும் . வியாபார சமுதாயம் நிலைதடுமாறமல் இருக்கவேண்டுமெனில், தனித்திறமை கொண்ட தொழிற்சாலைகளின் பரஸ்பரம் கொடுத்துப் பெற்றுக் கொள்வதில் தானாகச் சரிசெய்துகொள்வதில் (adjustment) உள்ள அளவிடற்கரிய நன்மைகளை இழக்க வேண்டாமெனில், ஒரு ஆரோக்கியமான (Sound) பண அமைப்பை[2] அது அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

முகலாய சாம்ராஜ்யத்தின் கடைசிக் காலக்கட்டத்தில், அன்றையக் கால அளவுகோலின்படி கணித்தால், பொருளாதாரரீதியாக இந்தியா ஒரு முன்னேற்றமடைந்த நாடாக இருந்தது; வங்கித் தொழில் நிறுவனங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருந்தன; அதன் கடன் அளிக்கும் வியாபாரபேரங்கள் பாராட்டத்தக்க அளவு இருந்தன. 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்திய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தபோது;

---

1. டபிள்யூ.ஸி. மிச்செல் , ''பொருளாதார நடவடிக்கையின் அடிப்படைக் கோட்பாடு'' , அமெரிக்க அரசியல் பொருளாதார இதழ் "Journal of Political Economy" 1910, தொகுப்பு, பக்கம் 97ம் 197ம்; மேலும் அதே ஆசிரியரின் பொருளாதாரத் தத்துவத்தில் பணத்தில் பாத்திரம்'', அமெரிக்கப் பொருளாதாரப் பத்திரிகை (அனுபந்தம்) தொகுப்பு எண். 6 மார்ச் 1916.

2. இந்த விவாதம் முழுமைக்கும், ஹெச்.ஜே. தாவன்போர்டின் **தொழிற்சாலைகளின் பொருளாதாரம்** (1913) அத்தியாயம் II ம் IIIம்.

பரிமாற்றத்திற்கான சாதனமும் (Medium) மதிப்பின் ஒரு பொதுவான தரமும் மற்றவைகளும் அவர்களின் பொருளாதாரத்திற்கு மிக அவசியம் தேவைப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்குமுன்பு, இந்தியச் (செலாவணி) பணம் தங்கம், வெள்ளி இரண்டையும் கொண்டதாக இருந்தது. இந்து சக்கிரவர்களின் ஆட்சியில், தங்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; ஆனால், முஸ்லீம்களின் ஆட்சியில் புழக்கத்தில் இருந்த சாதனமாக வெள்ளி, பெரிய அளவில் இருந்தது.[1] இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யத்தின் பொருளாதார அமைப்பின் ஸ்தாபகரான அக்பர் காலத்தில், இந்தியச் செலாவணியின் அலகுகள் (Units) தங்க மொகராகவும், வெள்ளி ரூபாய் ஆகவும் இருந்தன. மொகர், ரூபாய் இரண்டுமே ஒரே அளவிலான எடையைக் கொண்டிருந்தன. அதாவது 175 கிராம் டிராயாக (Troy) ''உலோகக் கலவை இல்லாமல் அல்லது குறைந்தபட்சம் அதைநோக்கமாகக் கொண்டு வெளியிட்ட காசுகளாக இருந்தன''.[2] ஆனால் அவை ஒரே தரப்படுத்தப்பட்ட மதிப்பு உடையவையாக இருந்தனவா இல்லையா என்பது கொஞ்சம் சந்தேகத்திற்குட்பட்ட விஷயமாகும். அந்தக்காலத்தில் பொதுவான மதிப்பு அளவாக இருந்த மொகரும் ரூபாயும், அவைகளுக்கிடையே பரிமாற்றத்திற்காக எந்த விகிதமும் நிர்ணயிக்கப்படாமல் புழக்கத்தில் இருந்தன. எனவே தரம்(மதிப்பு) என்பது ஜேவான்ஸ் அமைத்தது போல் இரட்டை மதிப்பு[3] என்பதை விட இணைமதிப்பாக (Parallel) இவ்வாறு விகிதாசாரம் இல்லாதது, நடைமுறையில் கேடு (நஷ்டம்) களை ஏற்படுத்தாமல் இருந்திருக்காது என்பது தெளிவு. ஆனால், ஒரு விசித்திரமான உபாயத்தில் இந்தச் சிரமத்தைக் குறைப்பதற்கான சூழ்நிலை இருந்தது என்பதைக் கவனிக்கவேண்டும்; அதன்படி மொகரும் ரூபாயும் ஒன்றொடொன்று இணைக்கப்படாமல் இருந்தாலும், சாம்ராஜ்யத்தின் செப்புக்காசான டாமுடன் (Dam) ஒரு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் செயல்பட்டன.[5]

மொகரும் ரூபாயும் ஒரே நாணயத்துடன்(டாம்) இணைக்கப்பட்டதன் விளைவாக அவை ஒரு குறியிடப்பட்ட விகிதாசாரத்தில் புழக்கத்தில் இருந்தன என்று கருதுவதற்கு இடமுண்டு.

---

1. பிரின்செப், பயனுள்ள அட்வணை (Useful Tables), கல்கத்தா 1834, ப15-16

2. ராபர்ட் கால்மர்ஸ், காலனிச் செலாவணியின் வரலாறு. 1893 ப.336-340. (டிராய் - எடை; தங்கம், வெள்ளி, மற்றும் உயர்மதிப்புள்ள கற்களுக்கு இங்கிலாந்தில் கையாளப்பட்ட எடை அளவு) டாக்டர் பி.கெல்லி: நாணயமாற்றுத் துறை வல்லுநர், 1811, ப. 115

ஒரே இலாக்காவின் பல கிளைகளாக அவை இருந்தன. முகலாய சாம்ராஜ்யம் பல தனி ராஜ்யங்களாகச் சீர்குலைந்தபோது பல்வேறு இடங்களில் செயல்பட்ட சாம்ராஜ்ய நாணயச்சாலையின் கிளைகள் காசுகளை வெளியிடும் சுதந்திரமான தொழிற்கூடங்களாக ஆயின. சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியை அடுத்து ஏற்பட்ட சுதந்திரதிற்கான பொதுவான போட்டியில், சாம்ராஜ்யத்தின் மிகச் சிறந்த ஒரு சின்னமாக விளங்கிய, நாணயம் வெளியிடும் உரிமை, அப்போதிருந்த அரசியல் சூதாடிகள் மிகவும் விரும்பிய உரிமையானது; வீழ்ச்சி யடைந்து கொண்டிருந்த ராஜவம்சம் விடாப்பிடியாக வைத்துக் கொள்ளவிரும்பும் கடைசி சலுகையாக, அதிகாரத்தைப் பெறப் பாடுபடும் அரசியல் சூதாடிகள் ஆசைப்படும் முதல் உரிமையுமாக இருந்தது. விளைவு என்னவெனில், எந்த உரிமை ஒரு காலத்தில் ஆன்மீக உணர்வுடன் அமல்படுத்தப்பட்டதோ, அந்த உரிமை, வேண்டு மென்றே தவறான முறையில் உபயோகிக்கப்படும் ஒன்றாகிவிட்டது. எல்லா இடங்களிலும் நாணயச் சாலைகள் முழுமையாகச் செயல் பட்டன. இதனால் நாட்டில் பல்வேறுபட்ட நாணயங்கள் குவிந்தன; ராஜ வம்சங்களின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் பிரகடனப்படுத்திய தோடு, பரிமாற்றத்தின் தடுமாறும் சாதனமாக அவை தோற்றமளித்தன. இந்தப் பணத்தாசை பிடித்த அரசர்கள், முகலாயச் சக்கரவர்த்திகளின் மூலத்தரத்தை தாங்கள் வெளியிடும் நாணயங்களுக்கு வைத்திருந் தார்களேயாயின் ஒரே இனத் (Denomination)தில் பல்வேறு நாண யங்கள் இருந்தபோதிலும் அதிகம் கவலைப்படும் விஷயமாக இருந்திருக்காது. ஆனால், தங்களது பிரஜைகள் உபயோகிக்கும் நாணயம் தங்களால் தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டுமென்ப தால், தங்களுடையதைப் பற்றித் தாங்கள் விரும்பிய எதையும் செய்ய முடியும் என்று அவர்கள் கருதியதாகத் தோன்றுகிறது. இனங்களை (Denominations) மாற்றாமலே தங்கள் காசுகளைத் தாழ்த்தும் அள விற்கு அவர்கள் ஒவ்வொருவரும் சென்றார்கள். அவ்வாறு தாழ்த்தப் பட்டதும், (குறைக்கப்பட்டது) மதிப்பில் தாழ்த்துவது பல்வேறு அளவுகளில் இருந்ததால், பொதுவாகவும், தயக்கமின்றியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முதன்மையான குணத்தை நிச்சயமாகவே செலா வணி இழந்தது.

அத்தகைய நிலையின் விளைவாக எழும் தீங்குகள் பற்றி நன்கு கற்பனை செய்து கொள்ளமுடியும். நாணயங்களின்(காசுகளின்) அடக்கம், அந்த அளவைக்கு (Denomination) குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு பொய்யாக்கப்பட்டதால் அவை வெறும் வாணிபச் சரக் காகவே ஆகிவிட்டன; ஒரு நாணயமாற்றுச் சாதனமாகச் செயல்படும்

செலாவணியாக இல்லாமல் போயிற்று. ஒவ்வொரு நாணயத்தினுடைய உலோகத்தின் மதிப்பை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே, அதைப் பெற்றுக் கொண்டு பிரதியாக அளிக்க வேண்டியதைக் கொடுக்க முடியும்[1]. ஏழைகளையும் அறியாமையிலுள்ளவர்களையும் ஏமாற்றுவதற்காகக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், 1696இல் இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்ட மாபெரும் நாணய- புனரமைப்பிற்கு முன்பு நிலவியதைவிடக் குறைவாக இருந்திருக்க முடியாது.[2] காசுகளை அடிக்கடி நிறைபார்ப்பது, மதிப்பிடுவது, அவற்றின் உலோக மதிப்பைச் சோதனை செய்து மதிப்பிடுவது ஆகியவை, நிலவும் தீங்கின் ஒரு அம்சத்தைத்தான் உணர்த்துகின்றன. அவை மற்றொரு உறுதியான அம்சத்தையும் வெளிப்படுத்துகின்றன. சாம்ராஜ்யத்தின் மறைவுக்குப் பின், சாம்ராஜ்ய சட்டரீதியான நாணய மதிப்பு (Tender) இந்தியா முழுவதிலும் மறைந்து விட்டது. அதன் இடத்தில், சாம்ராஜ்யம் சிதறுண்ட பின் ஏற்பட்ட சிறிய ராஜ்யங்களில், அவற்றின் எல்லைக்குள் மட்டும் நிலவும் ஸ்தல 'டென்டர்கள்' (நாணயச் சாதனங்களாக) வளர்ந்தன. இந்நிலையில் அளிக்கப்பட்ட காசுகளின் உலோக மதிப்பீட்டுக்கு ஈடாக உற்பத்திச் சரக்குகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நாணயப் பரிமாற்றம் நிறுத்தப்படவில்லை. நாணயங்கள் (காசுகள்) அவை வெளியிடப்படும் பிராந்தியத்தின் சட்ட பூர்வமான செலாவணியா என்று வியாபாரிகள் உறுதிசெய்து கொள்ள வேண்டும். வங்காள 1793ஆம்ஆண்டு செலாவணிக்கட்டுப்பாடு XXXV சட்டத்தின் முகப்புரை (Preamble) இந்த விஷயத்தைத் தெளிவாக்கும்; அது கூறுகிறது:

---

1. தரக்குறைவுபடுத்தப்பட்ட (Devalued) காசுகளின் உண்மையான உலோக மதிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது; பணத்தை-மாற்றித் தரும் ஷெராப்கள் என்ற வர்க்கம் தோன்ற இது காரணமாயிற்று; தரமான சுத்தத்தன்மையிலிருந்து பொருத்தமான தள்ளுபடியைக் கழித்துக் காசுகளின் உண்மை மதிப்பைக் கணக்கிடும் தொழிலில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர் இவர்கள். அவற்றில் பொறிக்கப்பட்ட, வெளியிட்ட ஆண்டு மற்றும் அவற்றின் தன்மைகளைக் கொண்டு அவர்கள் கணிப்பார்கள்.

2. செலாவணியின் மோசமான நிலையால் ஏழைமக்கள்படும் அவதிகளை நேரில் கண்டறிந்து அதுபற்றித் தெளிவான நிலைஎடுத்த டாக்டர் ராக்ஸ்பர்க், 1791 ஜூன் 30ஆம் தேதி திரு. ஏ.டால்ரிம்பிளுக்கு எழுதிய கடிதத்தில் இந்தத் தீங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அவரது **ஓரியண்டல் ரிபோர்ட்டரில்** (2 தொகுப்புகள், லண்டன், 1808) ஒரு காகித்தை நுழைத்து அதில் குறிப்பிட்டிருந்தார்: ''கம்பெனியின் பிராந்தியங்களில் இப்பொழுது புழக்கத்திலிருக்கும் காசுகளைப் பற்றி; அவை ஆட்சியாளர்களுக்கும் ஆட்சி செய்யப்படுபவர்களுக்கும் மிகவும் பயனுள்ள நீடித்த சாதக நிலையே ஏற்படுத்தும்'' மேலும் குறிப்பிட்டார்: ''இந்தத் தீங்கைச் சரிப்படுத்த உங்களால் முடியலாம்; இதன்மூலம் நீங்கள் நிச்சயம் சுவர்க்கத்திற்குச் செல்வீர்கள் - ஏழைகளின் பிரார்த்தனையின் பலனால்; நானும் சுவர்க்கத்தை நோக்கி ஒருபடி முன் செல்லலாம்''

''வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகியவற்றின் பிரதான ஜில்லாக்கள் ஒவ்வொன்றும் ஒரு தனியான வெள்ளிச் செலாவணியைக் கொண்டிருக்கின்றன... சம்மந்தப்பட்ட ஜில்லாக்களில் புழக்கத்தில் உள்ள செலாவணிகள் எல்லாவியாபாரப் பேரங்களிலும் மதிப்பின் திட்ட அளவுகோல்கள் ஆகும். உழவர்கள் தங்கள் வார (குத்தகை)த் தொகையை ஒரு குறிப்பிட்ட ரூபாயில் கொடுக்க வேண்டியிருப்பதால், தங்களின் தானியங்களுக்கு அல்லது மூலப்பொருள்களுக்கு நிச்சயமாக உற்பத்தியாளர்களிடமிருந்து அதையே கோருகிறார்கள்; உழவர்களிடம் கடைப்பிடிக்கப்படும் அதே கோட்பாட்டின் அடிப்படையில், உற்பத்தியாளர்கள் அதே ரக ரூபாயைத் தங்களின் துணி அல்லது மற்ற பொருட்களை வாங்க வரும் வியாபாரிகளிடம் கோருகிறார்கள்.

''அதன்படி, பல்வேறுபட்ட பழைய ரூபாய்கள் குறிப்பிட்ட ஜில்லாக்களில் அங்கீகரிக்கப்பட்ட செலாவணிஆகி விடும். இதன் அத்தியாவசிய விளைவாக ஒரு ஜில்லாவில் புழக்கத்தில் இப்பொழுது இருந்த ரூபாய் எல்லா பேரங்களுக்கும் தேவைப் படுவதால் அதன் மதிப்பு உயர்த்தப்பட்டது. மேலும் இதன் விளைவு அந்த ஜில்லாவில் மக்கள் சொத்தை மதிப்பிட எந்த ரூபாய்க்கு பழக்கப்பட்டிருக்கிறார்களோ, அதிலிருந்து மாறுபட்ட ரூபாய் ஜில்லாவிற்குள் கொண்டுவரப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை; அப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டால், அதன்மீது கழிவு(தள்ளுபடி) போக மீதி மதிப்பிற்கு ஏற்கப்படும். அந்தத் தள்ளுபடி அதைப்பெற்றுக்கொள்பவர் ஷெராப் அலுவலகத்தில் அதை மாற்றினால், பழக்கத்தில் நிலவும் ரூபாய்க்கு எவ்வளவு கழிவு அவருக்குக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவாக இருக்கும். அல்லது வேறு ஒருவர் ஏற்கனவே எவ்வளவு கழிப்பாரோ அந்தத் தொகையாக இருக்கும்.

''ஒரு ஜில்லாவில் புழக்கத்தில் உள்ள காசு மற்றொரு ஜில்லாவில் மறுக்கப்படுவதிலிருந்து, நாட்டின் பல்வேறு பாகங்களிலுள்ள வியாபாரிகள், வணிகர்கள், முதலாளிகள், நிலத்தில் விவசாயம் செய்பவர்கள், நாணயப் பரிமாற்றத்தில் ஏற்படும் நஷ்டத்திற்கு உட்படுகிறார்கள்; பல்வேறு சுதந்திரமான சர்க்கார்களின் கீழான பல்வேறு ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் அவ்வாறு காசுகள் புழக்கத்தில் இருந்ததால் ஏற்படும் அவசியமான அசௌகரியங்களையும் இவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

அப்பொழுது இருந்த நிலைமையில், வியாபாரம் பண்ட மாற்றாகக் குறைக்கப்பட்டது; ஒருவர் எப்படிப் பார்த்தாலும் நாணயப் பரிமாற்றத்திற்கு ஒரு பொதுவான சாதனம் இல்லாததன் காரண மாகவோ அல்லது நாணயப் பரிமாற்றத்திற்குப் பல்வேறு இடையீட்டுச் சாதனங்கள் இருந்ததாலோ பண்டமாற்று முறைக்கு குறைக்கப் பட்டிருக்கலாம்; எப்படியாயினும், ஒரு ''தற்செயலான இரட்டை இணைவு'' இல்லாததை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உணர்ந் திருக்க வேண்டும். பரிமாற்ற சாதனம் உலோகத்தால் ஆக்கப்பட்டதாக இருப்பதால் விஷயம் இவ்வாறாக இருந்திருக்க முடியாது என்று ஒருவர் நினைக்கக் கூடும். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்; அவற்றின் நேர்த்தியில், சட்டரீதியான பரிமாற்றத்தில் இருந்த வேறுபாடுகளின் காரணமாக எழுந்த சூழ்நிலைமையில் பல்வேறு வகையான நாணயங்கள் ஏற்பட்டன; அதனால், ஒரு குறிப் பிட்ட வகைக்கு எதிராக நாணயப் பரிமாற்றம் கட்டாயமாகப் பரிவர்த் தனையை முடிப்பதில்லை. சில குறிப்பிட்ட நிலைமைகளில் மேலும் ஒன்றோடு பரிமாற்றம் செய்யக்கூடிய இடைத்தட்டுச் சாதனமாகவே மட்டும் காசுகள் இருந்திருக்க வேண்டும்; தேவைப்படும் வகைகள் கிடைக்கும்வரை இவ்வாறே தொடர்ந்து நடைபெற்றிருக்கும். சமுதாயம் ஒரு பண்ட மாற்று நிலைக்கு தாழ்ந்துவிட்டது என்பதற்கு போதுமான அறிகுறி யாகும் இது. நிலைமையின் குறைபாடு இதுவாக மட்டுமே இருந்திருந்தால், பல்வேறுபட்ட காசுகளின் வழியாக நடைபெற்ற சர்வதேச வியாபாரம் எவ்வளவு மோசமாக இருந்ததோ அவ்வளவு மோசமாக மட்டும் இருந்திருக்கும். ஆனால், காசுகளின் தொகைகள் ஒன்றாக இருந்தாலும் அவற்றின் உலோக உள்ளடக்கம் கணிசமான அளவு வேறுபட்டிருந்தது. இதனால், ஒரு நாணயம் அதே பெயருள்ள வேறு நாணயத்தோடு பரிமாற்றம் செய்யும்போது அது ஒரு தள்ளுபடி அல்லது கழிவுக்கு உட்பட்டது. கழிவு அல்லது தள்ளுபடி அளவைப் பற்றிய விவரங்கள் தெரியாததால், ஒவ்வொரு வரும் தனது பிரதேசத்தில் புழக்கத்தில் இருக்கும் தனக்குத் தெரிந்த ஒரு காசையே பெற விரும்பினர். மொத்தத்தில், அத்தகைய நிலையி லிருந்து எழும் வணிகத்திற்கான தடங்கல்கள் (இடையூறுகள்) லிய்குர் கஸின் (Lycurgus) ஆணையால் விளைந்த இடையூறுகளைவிட குறைவாக இருந்திருக்க முடியாது; லிய்குர்கஸ் இரும்புப் பணத்தை உபயோகிக்கும்படி லேஸ்டேமோனியர்களை (Lacedaemonians)க் கட்டாயப்படுத்தினார்; காரணம், மிகையான வணிகத்தில் ஈடுபடுவதி லிருந்து அதன் எடை அவர்களைத் தடுப்பதற்காக. நிலைமை ஆக்கிரமட்டுவதாக இருந்ததோடு, புண்படுத்தும் விதமாக அம்சம்

அமைத்துக் கொடுப்பதற்கான மூலதனம், சமூகத்தின் உற்பத்தி ஆதாரங்களின் மீது ஒரு வரியாகும். எனினும், யாரும் கேள்விபட்டிருக்க மாட்டார்கள் என்று ஜேம்ஸ் வில்சன்[1] எழுதினார். அவர் கூறினார்:

> ''பண்ட மாற்று அமைப்போடு ஒப்பிடும்போது காசு குறுக்கீட்டால் சேமிக்கப்படும் நேரமும் உழைப்பும் உற்பத்தி ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்ட மூலதனத்தின் (முதலீட்டுப்) பகுதிக்குப் போதுமான லாபமாக அமைகிறது. நாட்டின் மீதமுள்ள மூலதனத்தை மேலும் அதிகம் உற்பத்திக்குப் பயனளிக்கும் படி செய்து, பண்டங்களின் ஒரே நாணயச் செலாவணியாளராகச் செயல்படுகிறது''.

பண்டங்களின் ஒரே செலாவணியாக ஆக்குவதற்காக உற்பத்தி ஆதாரங்களிலிருந்து ஏராளமான மூலதனம், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், பண்டமாற்று முறையின் பாதகமான விளைவுகளைக் குறைக்க முடியாத பண அமைப்பைப் பற்றி என்ன சொல்வது? நோய்வாய்ப்பட்ட பணம், பணப் பற்றாக்குறையைவிட மோசமானது. பிந்தியது அடக்க விலையையாவது குறைக்கிறது. சமுதாயத்திற்குப் பணம் அவசியம் வேண்டும்; அது நல்ல பணமாகவும் இருக்க வேண்டும். எனவே கெட்ட பணத்தை நல்ல பணமாக உருவாக்கும் கடமை கிழக்கிந்தியக் கம்பெனியின் தோள்களின் மேல் வைக்கப் பட்டது; இந்தியாவில் முகலாய சாம்ராஜ்யத்தின் வாரிசாக இந்தக் கம்பெனி இதற்கிடையில் ஆகிவிட்டது.

சீர்திருத்தத்தின் வழிமுறைகள் 1806 ஏப்ரல் 25 தேதியிடப் பட்ட கம்பெனி டைரக்டர்கள் உத்தரவில்[2] வெளியிடப்பட்டன; இந்தியாவில் அவர்களின் பிரதேசங்களில் நிர்வாகம் நடத்தி வரும் அதிகாரிகளுக்கு அது அனுப்பப்பட்டது. இந்த வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தஸ்தாவேஜில் அவர்கள் கூறினார்கள்:

> ''17. தங்க நாணயமும் வெள்ளி நாணயமும் ஒரு குறிப்பிட்ட தராதர மதிப்பில் சட்டபூர்வமான செலாவணியாக.... நஷ்டமின்றிப் புழக்கத்தில் இருக்க முடியாது என்பது சிறந்த அதிகாரிகளால் ஆதரிக்கப்படும், அனுபவத்தால் நிரூபிக்கப் பட்ட கருத்தாகும்; காசுகளைத் தயாரித்த உலோகங்களின்

1. ''செலாவணி மூலதனமும் வங்கித் தொழிலும்'' Capital Currency and Barheins", 1847, ப. 15.
2. H of C Return 127 of 1898.

மதிப்பு ஏற்ற, இறக்கம் பெறுவதால் இந்த நஷ்டம் ஏற்படுகிறது. உலோகங் களின் மதிப்பின் அடிப்படையில் தங்க, வெள்ளிக் காசுகளுக்கிடையே விகிதாச்சாரம் சட்ட அடிப்படையில் நிர்ண யிக்கப் படுகிறது; அது மிகவும் நியாயமான கோட்பாடாக இருக்கலாம்; ஆனால் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத் தால், இந்த விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் இருந் ததைவிட வெள்ளியோடு ஒப்பிடும்போது, தங்கத்தின் மதிப்பு அதிக மாகலாம்; எனவே வெள்ளியைத் தங்கத்திற்கு மாற்றுவது லாபகரமாகிறது; எனவே (தங்கத்தால்) அந்த உலோகத்தாலான நாணயம் புழக்கத்திலிருந்து வாபஸ் பெறப்படுகிறது; வெள்ளி யின் மதிப்பு தங்கத்தோடு ஒப்பிடும்போது அதிகமானால், அப்பொழுது புழக்கத்திலுள்ள வெள்ளிக் காசுகளின் அளவு (எண்ணிக்கை) குறைக்க வேண்டிய நிலை ஏற்படும். உலோகங் களின் மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தை (உறுதியின்மை) தடுப்பது சாத்தியமில்லையாதலால், இந்த உலோகங்களாலான காசுகளில் ஏற்படும் விளைவுகளையும் அதேபோல் தடுப்பது நடைமுறை சாத்தியமற்றது; தங்க, வெள்ளி நாணயங்களின் ஒப்பீடு சார்ந்த மதிப்புகளை, அந்த உலோகங்களின் மதிப்புகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கேற்பச் சரி செய்து கொள்வது தொடர்ந்து கஷ்டங்களை ஏற்படுத்தும்; அத்தகைய ஒரு கோட்பாடு அமைந்தால் அசௌகரியத்தையும் நஷ்டத்தையும் தொடர்ந்து உண்டாக்கும்.''

எனவே 'ஒரு உலோக நாணயத்திற்கு (Monometalism)' சாதகமான நிலையை எடுத்து, இந்தியாவின் எதிர்காலச் செலாவணி யின் லட்சியமாக அவர்கள் அறிவித்தனர்.

''21.... (இந்தியாவில்) எல்லா இடங்களிலும் கணக்கிடப் படும் பணமாக வெள்ளி இருக்க வேண்டும்.... அதே மதிப்பளவு களில் - ரூபாய், அணா, பைசாவில் கணக்குகள் வைக்கப்பட வேண்டும்''.

முகலாய சாம்ராஜ்யத்தில் இருந்ததுபோல் ரூபாயின் நேர்த்தி யும் எடையும் இப்பொழுது இருக்காது. ஆலோசனை என்னவெனில்,

''9. புதிய ரூபாயின்... மொக்க எடை

டிராய் நிறை	....	180
உலோகக் கலவைக்காக 1/20க்கு கழிவு	....	15
நேர்த்தியான வெள்ளி டிராய் (கிராம்)	....	165

இந்தியச் செலாவணியைச் சீர்திருத்தம் செய்ய டைரக்டர்கள் குழு முன் வைத்த ஆலோசனைகள் இவை.

நிறை 180 கிராம் டிராயாகவும், 165 கிராம் சுத்த வெள்ளியாகவும் கொண்ட ரூபாய் இந்தியாவின் எதிர்காலச் செலாவணி அமைப்பில் மூல அளவையாக இருக்க வேண்டுமென்று தேர்வு செய்தது நன்கு சிந்தனை செய்ததன் விளைவாகத்தான்.

இந்தக் குறிப்பிட்ட எடையைக் கொண்டதாக ரூபாய் இருக்க வேண்டுமென்ற தேர்வுக்கான பிரதான காரணம், அப்பொழுது புழக்கத்திலிருந்த ரூபாயின் எடையிலிருந்து அதிக வித்தியாசம் இல்லாமல் எவ்வளவு குறைவாக இருக்க வேண்டுமோ அவ்வளவு குறைவாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தால்தான். முகலாயர்கள் தங்களுக்கு விட்டுச் சென்ற குழப்பமான செலாவணிகளில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தும் தங்கள் முயற்சியில் அவற்றை இரட்டை உலோக அடிப்படையில் ஏற்கனவே சில மாகாணங்கள் வைத்துள்ளன; நாட்டில் புழக்கத்திலிருந்த எண்ணற்ற நாணயங்களிலிருந்து குறிப்பிட்ட இனங்களைத் (Species) தேர்ந்தெடுத்துப் பெரிய அளவு முன்னேறியிருந்தன; அந்த இனத் தங்க, வெள்ளி நாணயங்களைத் தங்கள் தங்கள் பிரதேசங்களில் நாணயப் பரிமாற்றம் செய்யும் தனியுரிமையுள்ள சட்டபூர்வமான சாதனங்களாக ஆக்கின. செலாவணியின் மூலஅளவுகளாக அவை தேர்ந்தெடுத்த நாணயங்களின் நேர்த்தி, எடை மற்றும் விவரங்கள் சுருக்கமாக அட்டவணை I இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு மாகாணங்களின் (Presidencies) இந்தப் பிரதான மூல அளவைகளை ஒரே பிரதான மூல அளவாகக் குறைக்க, எடையின் அளவில் அதிகம் அடுத்ததாகவும், மிகக் குறைவான அசௌகரியம் கொடுப்பதாகவும், அதேசமயம், ஒரு ஒருங்கிணைந்த எண்ணாகவும் இருப்பது 180 கிராம் என்பது தெளிவு. எப்படியும், நடைமுறையில் இருந்த எந்த மூலஅளவின் எடையைவிடக் குறிப்பிடத்தக்க அளவில்

வித்தியாசப்படாதது. மேலும் முகலாய நாணயசாலைகளில் முதலில் வெளியிட்ட ரூபாய் நாணயத்தின் அங்கீகரிக்கப்பட்ட (standard) எடை 179.5511 கிராமாக இல்லாமல் 180 கிராமாக இருந்தது என்று நம்பப் பட்டது. இதனால், இந்த நடைமுறையை அமலுக்குக் கொண்டு வருவது பழைய மூலஅளவையே திரும்பவும் கொண்டு வருவதாகும். புதிதாக ஒரு மூல அளவு புகுத்தப்படவில்லை.[1] 180 கிராம் டிராய் கொண்ட மூலஅளவுக்குச் சாதகமாகக் கூறப்பட்ட மற்றொன்று, முன்னால் இருந்து மறைந்த அதே மூல அளவு, அதே எடையில் மீண்டும் செலாவணியின் மூல அளவாக ஆகிவிட்டது. இந்தியாவில் மூல அளவின் எடை, முன்பு எல்லாக் காலத்திலும் பிரதான நாணயத்துடன் இணைக்கப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதாகும்.[2] எனவே **சேர்** மற்றும் **கையினால் செய்யப்பட்ட** அளவைகளும் ரூபாயின் மடங்குகள் மாத்திரமே. ரூபாய் முன்பு 179.6 கிராம் டிராயாக இருந்தது.

அமலாக்கப்படவிருக்கும் பிரதான நாணயத்தின் எடை 180 கிராம் டிராய் ஆக இருப்பதிலிருந்து வேறுபட்டால், அது பண்டைக் கால நடைமுறையிலிருந்து சந்தோஷம் அளிக்காத விலகல் என்று நம்பப்பட்டது; மற்ற எடைகளையும் அளவைகளையும் அளப்பதற்கு நாணயத்தின் எடையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பண்டைய காலத்தில் மேலும் மூல அளவின் எடை 180 கிராமாக இருப்பது இந்தக் கோணத்திலிருந்து பொருத்தமாக இருந்தது மட்டுமின்றி இங்கிலாந்து மூல அளவுகள் எடையுடன் இந்திய மூல அளவின் எடையை ஈர்த்துக்கொள்ளப்படும் (assimilating) அசௌகரியமும் அதற்கு சாதகமாக உள்ளது.[3]

---

1. The Despatch op. cit. para 8.

2. பாரா 26-28, ஜேம்ஸ் பிரின்செப் கல்கத்தா நாணயச்சாலைக் கமிட்டிக்கு எழுதிய கடிதம். ஜான்முல்லரின் இந்திய அட்டவணைகளுடன் பின் இணைப்பில் கொடுக்கப்பட் டுள்ளது - கல்கத்தா, 1836.

3. ஜேம்ஸ் பிரின்செப் கல்கத்தா நாணயச்சாலைக்கமிட்டிக்கு எழுதிய கடிதம். பாரா 28. ஆங்கில எடை அமைப்பும் இந்திய எடை அமைப்பும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் முறையில் அமைக்கப்பட்டதைக் கீழே கொடுத்துள்ளவற்றிலிருந்து காணலாம்.

இந்திய		ஆங்கிலேய
8 ருட்டிகள் (Rutts)	= 1 மஸ்ஸா	= 15 டிராய்கிராம்
12 மஸ்ஸாக்கள்	= 1 தோலா (அல்லது சிஸ்ஸா)	= 180 "

அட்டவணை I

செலாவணியின் பிரதான மூல அளவுகள்

சர்காரால் வெளியிடப் பட்டது	புழக்கத் தில் இருந்த பிரதேசம்	வெளியீட்டின் தேதியும் ஆதாரமும்	வெள்ளி நாணயங்கள்			தங்க நாணயங்கள்		
			பெயர்	மொத்த எடை டிராய் கிராம்	சுத்தமான அடக்கம் டிராய் கிராம்	பெயர்	மொத்த எடை டிராய் கிராம்	சுத்தமான அடக்கம் டிராய் கிராம்
பம்பாய்	மாகாணம்		சூரத்ரூபாய்	179.0	164.740	மொகர்	179	164.740
சென்னை (Madras)	,,		ஆர்க்காடு ,,	176.40	166.477	ஸ்டார் பகோடா	52.40	42.55
	வங்காளம் பிஹார் ஒரிஸ்ஸா கட்டாக்	விதிமுறைகள் XXXV,19 வது XII, 1805	சிஸ்ஸா சூரியன் (Sun)	179.6	175.927	மொகர்	190.804	189.40
வங்காளம்	பிரிந்த(Ceded) மாகாணங்கள் கைப்பற்றப்பட்ட மாகாணங்கள் பெனாரஸ் (காசி) மாகாணங்கள்	XLV,1803 III,1806	புர்ருகாபாத் ரூபாய் (லக்னோ சிஸ்ஸா (40ஆவது சூரியன்) பெனாரஸ் ரூபாய் (முச்லீதர்)	178 175	166.35 168.675			

செலாவணியின் பிரதான மூலஅளவை 180 கிராம்டிராய் எடையில் நிர்ணயித்ததற்கான காரணங்கள் இவையாக இருந்தாலும், அதை 165 கிராம் நேர்த்தியாக (fineness) ஆக்கும் திட்டத்தில் நியாயம் இல்லாமல் இல்லை. நேர்த்தியின் நிர்ணயிக்கப்பட்ட (Standard) எடையை 165 கிராமாகத் தேர்ந்தெடுத்ததற்கான முக்கியகாரணம், அங்கீகரிக்கப்பட்ட எடையைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் இன்றைய ஏற்பாடுகளில் மிகக்குறைவான குழப்பம் மட்டும் ஏற்படுவதற்குத் தான். நேர்த்தியின் அங்கீகரிக்கப்பட்ட எடை இந்தியாவின் பல்வேறு சர்க்கார்கள் அனுமதித்துள்ள செலாவணியின் பிரதான மூல அளவான வெள்ளி நாணயத்தினுடையவற்றைவிட அதிகம் வேறுபடவில்லை. கீழ்க்கண்ட ஒப்பீட்டு அறிக்கையில் இதைக் காணலாம்.

அட்டவணை II

பிரதானமான அங்கிகரிக்கப்பட்ட ரூபாயிலிருந்து வெளியிடவிருக்கும் நேர்த்தியின் (கலப்பற்ற) தரத்தில் விலகல்கள் (Deviations)

பிரதான மூல அளவுகள் என்று அங்கிகரிக்கப் பட்ட வெள்ளிநாண யங்களும் அவற்றின் நேர்த்தியும் (Fineness)		ஆலோசிக் கப்பட்ட வெள்ளி ரூபாயின் நேர்த்தியின் தரம்	ஆலோசிக்கப் பட்டுள்ள ரூபாயை விட அதிக மதிப்பு		ஆலோசிக்கப் பட்ட ரூபாயைவிட குறைவான மதிப்பு	
நாணயத்தின் பெயர்	சுத்தமான அதன் உள்ளடக்கம்- டிராய் கிராம்		கிராம்	பி.ஸி (P.C)	கிராம் களில்	பி.ஸி (P.C)யில்
சூரத் ரூபாய்	164.74	165	..	..	.26	.157
ஆற்காடுரூபாய்	166.477	165	1.477	.877	.	.
ஸிக்கா ரூபாய்	175.927	165	10.927	6.211	.	.
பரூக்காபாத் ரூபாய்	166.135	165	1.135	.683	.	.
பெனாரஸ் ரூபாய்	169.251	165	4.251	2.611		

சிஸ்கா, பனாரஸ் ரூபாய்களைத் தவிர ஆலோசிக்கப்பட்ட நேர்த்தியின் தரம் மற்ற ரூபாய்களோடு மிக நெருக்கமாக ஒத்திருக்கின்றன என்பதைக் காணலாம்; கணிசமான சீர்குலைவு இல்லாமல் ஒருமுழுவேறுபாடில்லாத நிலையை அடையவேண்டும் என்ற நலன் காரணமாக அதை அமலாக்குவதற்கு எதிரான எல்லா ஆட்சேபணைகளும் தள்ளுபடியாகின்றன. 165 கிராமை நேர்த்திநயத்தின் (Fineness) தரமாக தேர்ந்தெடுக்க டைரக்டர்கள் சபை முடிவு செய்ததற்கு மற்றொரு காரணம், அடிப்படை (Standard) எடையாக 180கிராமும் உடன் இணைத்து, 11/12 அளவில் தூய்மை நயமாக ரூபாயை ஆக்கவேண்டுமெனக் கணக்கிடப்பட்டதாகும். ஒரு குறிப்பிட்ட அளவு தூய்மை நயத்தை நிர்ணயிப்பது ஒரு தொழில்நுட்ப விஷயமானதால் டைரக்டர்கள் சபைக்கு அது ஒரு கஷ்டமான விஷயமாகும். ஆனால், நாணயச் சாலைகள் - காசுகள் பற்றி 1803இல் அமைக்கப்பட்ட பிரிட்டிஷ் கமிட்டியின் கருத்து என்னவெனில்:

பங்கு சுத்தமான உலோகமும் மிகச்சிறந்த விகிதா சாரமாகும்; அல்லது தேர்ந்தெடுக்கக்கூடியதில் நல்லதும் ஆகும்''.[1]

அதிகார பூர்வமாக இவ்வாறு அங்கீகாரம் பெற்ற இந்தத்தரத்தை இந்தியச் செலாவணியின் அவர்களது புதியதிட்டத்தில் இணைக்க (டைரக்டர்கள்) சபை விரும்பியது. எனவே பன்னிரண்டில் பதினொன்று தூய்மை நேர்த்தியில் ரூபாயை வைப்பது என்று ஆசைப் பட்டனர். மேற்சொன்ன கருத்திலிருந்து அவ்வாறு செய்வதற்கு 165 கிராம் சுத்தஉலோகத்தை கொண்ட பிற்கால நிகழ்ச்சிகளின் புகைப் புலனிருந்து பார்த்தால், ஒற்றை உலோக நாணயத்திற்கு டைரக்டர்கள் சபை, முன்னுரிமை கொடுத்தது கொஞ்சம் தூர நோக்கற்றதாகும் என்று இதைபற்றி ஒருவர் நினைக்கக்கூடும். எனினும் அந்த சமயத்தில், அவ்வாறு முன்னுரிமை கொடுத்தது சரியான அடிப்படையைக் கொண்டதே. நிர்வாகக் காரணங்களுக்காக மாகாணங்களாக பிரிக்கப் பட்டதில் மூன்று மாகாணங்கள், ஆட்சிப்பொறுப்பை ஏற்ற உடன், முகாலயர்கள் காலத்திலிருந்து இணைச்செலாவணிகளை மாற்றி இரட்டை உலோகச் செலாவணி முறையை அமலாக்கி மொகருக்கும் மாற்றுவிகிதத்தை நிர்ணயித்தன. ஆனால் எந்த மாகாணத்திலும் இந்தப் பரிசோதனை ஒரு முழுமையான வெற்றியாகவில்லை.

வங்காளத்தில்[2] 1766, ஜூன் 2இல் வரிவசூல்களை கஜானாக் களில் வாணிகத்துக்குப் பாதகமான முறையில் சர்க்கார் பூட்டி வைத்தது; பணமுடை ஏற்பட்டதற்கு இதுதான் பெருமளவு காரணம். இதைக் குறைப்பதற்காக 179.66 கிராம் டிராய் எடையும் 149.92 கிராம் சுத்த தங்கத்தையும் கொண்ட தங்க மொகரை வெளியிட அது உறுதி பூண்டது; 14 சிஸ்கா ரூபாய்க்குமாற்றிக்கொள்ளக்கூடிய சட்டபூர்வ மான நாணயமாக அதை ஆக்கியது. இதன் சட்டரீதியான விகிதம் 16.45க்கு ஒன்று; சந்தையில் நிலவிய விகிதமாகிய 14.81க்கு ஒன்று என்பதிலிருந்து பெரிதும் வேறு பட்டதால், இரு நாணயங்களையும் ஒரே சமயத்தில் புழக்கத்தில் வைக்கச்செய்த முயற்சி தோல்வியில் முடியும் என்பது முன்பே அறிந்திருந்ததே. சீனா, மதராஸ், பம்பாய் ஆகியவற்றின் தேவையின் காரணமாக வங்காளத்திலிருந்து வெள்ளிவெளியேறியதால், பணமுடை மேலும் மோசமாகியது; இதனால், 190.773 கிராம் டிராயும் 190.086 சுத்த தங்கமும் கொண்ட, 16 சிஸ்கா ரூபாய்களுக்கு சமமாகவும் கொண்ட மற்றொரு தங்கமொகரை, 1769 மார்ச் 20இல் சர்க்கார் வெளியிட்டது. இதன் சட்டரீதியான விகிதம் 14.81க்கு ஒன்று, அப்பொழுது (நாட்டிலும் வெளியிலும்) சந்தையில் நிலவிய விகிதத்தை

1. 'தி டெஸ்பாச்', மேல் குறிப்பிட்ட இடம், பாரா. 9.
2. எப்.சி. ஹாரிசன், எக்கானமிக் ஜெர்னல், தொகுதி - 3, பக். 54.

விட அதிகமாக இருந்தது; இந்தியாவில் 14க்கு ஒன்றாகவும் ஐரோப்பாவில் 14.61க்கு ஒன்று ஆகவும் இருந்தது; உடன்இயங்குகிற இரு நாணயங்களை புழக்கத்தில் விடும் இந்த இரண்டாவது முயற்சியும் முதல் முயற்சியை விட மேலான பலனை அளிக்கவில்லை. கறாராக வகைப்படுத்தும் (rating) கடமை அவ்வளவு சிக்கலாகத் தோன்றியதால் தங்க நாணயத்தை நிறுத்தி, ஒற்றை உலோகச் செலாவணிக்குச் சர்க்கார் மீண்டும் திரும்பிச் சென்றது. பணமுடை தங்க நாணயத்தை மீண்டும் அடித்து வெளியிடும்படி 1790இல் சர்க்காரை நிர்ப்பந்தித்தது; மொகரையும் ரூபாயையும், அவற்றை ஒரு நிர்ணயித்த விகிதத்தில் இணைக்காமல் புழக்கத்தில் விடுவதைத் தேர்ந்தெடுத்தது. 1793இல்தான் இரட்டை உலோக நாணய மதிப்பை உருவாக்கும் மூன்றாவது முயற்சி வங்காளத்தில் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆண்டில் ஒரு புதிய மொகர் வெளியிடப்பட்டது; 189.4037 கிராம் சுத்தத் தங்கம் கொண்ட அதன் எடை 190.895 கிராம். சட்டபூர்வமான நாணயப் பரிமாற்றத்தில் அது 16 ஸிங்கா ரூபாய்களுக்குச் சமமாக இருந்தது. இதன்விகிதாச்சாரம் 14.86க்கு ஒன்று; ஆனால், அது அன்று சந்தையில் நிலவிய விகிதாசாரத்திற்கு ஒத்தாக இல்லாததால், இரட்டை உலோகச் செலாவணியை வங்காளத்தில் கொண்டுவரச் செய்த மூன்றாவது முயற்சியும், 1766இலும் 1799இலும் செய்த முயற்சிகள் போலவே, தோல்வியடைந்தது.

சென்னை அரசாங்கம்[1] மேற்கொண்ட இத்தகைய முயற்சிகள், வங்காளத்தில் மேற்கொண்ட முயற்சிகளைவிட அதிகமாக வீணாயின. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் அந்த மாகாணத்தில் இரட்டை உலோகச் செலாவணியைக் கொண்டுவர முதலாவது 1749இல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது; அப்பொழுது 350 ஆர்க்காடு ரூபாய்கள் 100 நட்சத்திர பகோடாக்களுக்கு சமமான விகிதத்தில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டது. அன்று சந்தையில் நிலவிய விகிதத்தோடு ஒப்பிட்டால் மாகாணத்தின் தங்கநாணயமான பகோடா குறைந்தமதிப்பில் (Undervaluation) வைக்கப்பட்டது. பகோடா மறைந்துபோனது கடுமையான பணமுடையை ஏற்படுத்திற்று; 1750 டிசம்பரில் அதை மீண்டும் செலாவணியாக்கவேண்டிய கட்டாயம் சர்க்காருக்கு ஏற்பட்டது. இதை ஒரு இரண்டு அம்சத் திட்டத்தில் செய்தது; நாணயச்சாலை விகிதம் சந்தை விகிதத்திற்குச் சமமாக இருப்பதற்காக சர்க்கார் கணக்கில் தங்கத்தை இறக்குமதி செய்வதன் மூலமும், சர்க்கார் கஜானாக்களில் வரவும் செலவும் பகோடாக்களில் மட்டுமே இதைச் செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதின் மூலமும் இதைச் செய்தது. இரண்டாவது உபாயத்தின் பலன் (மதிப்பு) குறைவே என்று நிரூபணமாகியது; முந்தியது,

அதன் பரிமாணத்தின் காரணமாக விரும்பிய பயனைத் தந்து நிலைமையின் கடுமையைக் குறைத்தது. துரதிர்ஷ்டவசமாக இது ஒரு தற்காலிகமானதாகவே இருந்தது. 1756க்கும் 1771க்கும் இடைப்பட்ட காலத்தில், ரூபாயின் பகோடாவின் சந்தை விகிதம் ஒரு கணிசமான அளவு மாறியது. 1756இல் அது 364க்கு 100 ஆகவும் 1768இல் 370க்கு 100 ஆகவும் இருந்தது. 1768க்குப் பின்புதான் சந்தையின் விகிதம் 1749இல் நிர்ணயிக்கப்பட்ட சட்டரீதியான விகிதத்திற்குச் சமமாக ஆயிற்று; சுமார் 12 ஆண்டுகளுக்கு அது ஸ்திரமாக நீடித்து இருந்தது. இரண்டாவது மைசூர் நடத்துவதற்கு ஏற்பட்ட அவசியத்தின் காரணமாக வெள்ளியின் இறக்குமதி அதிகரித்தால், விகிதத்தை மீண்டும் குலைத்தது; யுத்த முடிவின்போது 400 ஆர்க்காடு ரூபாய்கள் 100 நட்சத்திர பகோடாக்களுக்குச் சமமாக இருந்தன. யுத்த முடிவுக்குப்பின், ரூபாயையும் பகோடாவையும் உடன் புழக்கத்தில் கொண்டுவரும் முயற்சியை (சென்னை) மதராஸ் சர்க்கார் செய்தது. சந்தை விகிதத்தை 400க்கு 100 என்று சட்டரீதியாக ஆக்குவதற்கு பதிலாக மாகாணத்திற்குள் அதிகரித்துவரும் தங்க இறக்குமதியைக் கணக்கில்கொண்டு, 1749இல் ஏற்படுத்திய சட்டரீதியான விகிதத்திற்கு சந்தை விகிதம் அடுத்து உயரும் என்று நம்பியது. எதிர்பார்க்கும் மனோநிலையால் உந்தப்பட்டு, விகிதத்தை முதலில் 365க்கு 100 என்று 1790இல் முடிவு செய்தது. விளைவு, விரும்பியதைவிட மாறாக இருந்தது இயல்பே. ஏனெனில் பகோடா குறைவாக மதிப்பிடப்பட்டது. ஆனால் தவறைத் திருந்திக் கொள்வதற்குபதிலாக, 1797இல் விகிதத்தை மேலும் 350க்கு 100 என்று உயர்த்தி நிலைமையை மேலும் கடுமையாக்கியது; இதன் விளைவாக பகோடா முற்றிலுமாகப் புழக்கத்திலிருந்து மறைந்தது; இவ்வாறாக, இரட்டை உலோகச் செலாவணியைக் கொண்டு வருவதற்குச் செய்யப்பட்ட இந்த இறுதி முயற்சி படுதோல்வி அடைந்தது.

இரட்டை உலோகச் செலாவணியின் நுட்பங்கள் பம்பாய் சர்க்காருக்கு அதிகமாகத் தெரிந்திருந்தது போலும். ஆயினும் அது அந்த அமைப்பின் நடைமுறைக் கஷ்டங்களைச் சமாளிக்க அதற்கு உதவவில்லை. அந்த மாகாணத்தில்[1] இரட்டை உலோகச் செலாவணியைப் புகுத்திய முதல் முயற்சியின்போது மொகரும் ரூபாயும் 15.70க்கு 1 என்ற விகிதத்தில் வகைப்படுத்தப் பட்டன. ஆனால் இந்த விகிதத்தில் மொகரின் மதிப்பு அதிகமாக்கப்பட்டது என்று காணப்பட்டது. அதனால், வெனிஸிய நாணயத்தின் நேர்த்தியும்

1. பம்பாய் மாகாணத்தில் நாணயத்தின் வரலாறு பற்றி டாக்டர் ஸ்காட்டின் அறிக்கை - பின்னிணைப்புகளும், பொதுமக்கள் கருத்துக்களும் அடங்கியது.

வெள்ளி ரூபாயின் எடையும் கொண்ட தங்க மொகர்களை அடிக்கும் படி 1774 ஆகஸ்டில் தங்கச்சாலை அதிகாரிக்கு உத்தரவு அளிக்கப் பட்டது. இந்தமாற்றம் சட்டரீதியான விகிதத்தை 14.83க்கு 1 என்று குறைத்தது. அப்பொழுது சந்தையில் நிலவிய விகிதமாகிய 15க்கு 1 என்பதற்கு முற்றிலும் ஒத்ததாக இல்லாவிடினும், அதற்கு மிகவும் அடுத்து இருந்தது. தகாதது எதுவும் நடந்திருக்காவிடில், மற்ற இரண்டு மாகாணங்களில் உண்மையில் நடந்ததைவிட பம்பாய் மாகாணத்தில் இரட்டை- உலோகச் செலாவணி பெரியளவு வெற்றி யடைந்திருக்கும். ஆனால், அவ்வாறு ஆகாமல் போயிற்று; ஏனெனில் சூரத் நவாபின் அயோக்கியத் தனமான செயலால் நிலைமை முற்றிலும் மாறியது. அந்த நவாப், பம்பாயின் எடையும் நேர்த்தியும் கொண்ட தமது ரூபாய்களின் மதிப்பை 10, 12, ஏன் 15 சதவிகிதத்திற்குத் தாழ்த்தினார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் பம்பாய் ரூபாய்களின் மதிப்பிற்கு இணையாக கம்பெனியின் பிரதேசங்களில் (நவாபின் அல்லது சூரத்தின் ரூபாய்கள்) வினியோகிக்க அனுமதிக்கப்பட்டிருக்காவிடில் ரூபாயின் மதிப்பைத் தாழ்த்திய இந்தச் செயல் பம்பாய் மாகாணத்தில் நிலவிய இரட்டை உலோகச் செலாவணியின் மீது எந்த பாதிப்பையும் ஏற்படுத்தி யிருக்காது. சூரத் ரூபாய்கள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நாணய மாக இருந்ததன் விளைவாக அவற்றின் மதிப்பு தாழ்த்தப்பட்டவுடன், பம்பாய் ரூபாய்களையும் புழக்கத்திலிருந்து விரட்டியது மட்டுமில் லாமல், மொகரும்கூட விரட்டப்பட்டது; ஏனென்றால் தாழ்த்தப் பட்ட ரூபாயின் விகிதம், தங்கத்திற்கு பாதகமாக ஆயிற்று; இரட்டை உலோகச் செலாவணி அமைப்பு வெற்றிபெறுவதற்கான ஒரே சந்தர்ப்பம் திடீரென்று மறைந்தது. மொகருக்கும் ரூபாய்க்கும் இரு உலோகவிகிதத்தைத் தீர்மானிக்கும் பிரச்சினை, சூரத் ரூபாயைத் தனது நாணயச்சாலையில் அடிக்க பம்பாய் சர்க்கார் அனுமதித்த போது, மீண்டும் எழுந்தது. 1774 (வழி விதிமுறைகள்)படி தங்க மொகர்களை உற்பத்தி செய்வதைத், தொடர்ந்து செய்வது என்பது சாத்தியிமாகியிருக்காது. ஒரு பம்பாய் மொகர் 177.38 கிராம் சுத்தத் தங்கத்தைக் கொண்டிருந்தது; 1800 ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட திட்டஅளவுப்படி, 15 சூரத் ரூபாய்கள், 247.11 கிராம் வெள்ளியைக் கொண்டிருந்தன. அந்த விதிகளின்படி, தங்கத்திற்கு வெள்ளியின் விகிதாச்சாரம் 247.11/177.38 அதாவது 13.9க்கு 1 என்று இருந்திருக்க வேண்டும். இங்கு (இதில்) மொகர் குறைவாக மதிக்கப்பட்டிருக்க வேண்டும்.எனவே, மொகரின் மதிப்புடன் சூரத்ரூபாய் மதிப்பை 14.9க்கு 1 என்ற விகிதத்திற்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் தங்கை விகிதம் 15.5க்கு 1 என்பதை நோக்கிச் சென்றதால்

அவர்கள் முன் உள்ள இத்தகைய அனுபவம் காட்டிய வெளிச்சத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள் சபை, ஒற்றை உலோக மூல அளவே இந்தியாவின் எதிர்காலச் செலாவணி அமைப்பின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்று நிர்ணயித்தது சரியானதே. செலாவணியின் விதிமுறைகளின் பிரதானக் குறிக்கோள், பணத்தின் மாறுபட்ட மூல அளவுகள், ஒன்று மற்றொன்றுடன் உள்ள உறவுகளின் மதிப்பில் நிர்ணயிக்கப்பட வேண்டும். மதிப்பை நிர்ணயிக்காவிடில், செலாவணி குழப்பமான நிலையில் இருக்கும். அந்த நிர்ணயிப்பில் ஏற்படும் தற்காலிகக் குலைவுக்குக் கூடக் எதிராக எந்த எச்சரிக்கையையும் குறைத்து மதிப்பிட முடியாது.

செலாவணியின் பல்வேறுபகுதிகளுக்கு இடையே மதிப்பை நிர்ணயிப்பது, நன்றாக முறைப்படுத்தப்பட்ட நாணய அமைப்பிற்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதை உணர்ந்ததால், டைரக்டர்களின் சபை அதற்கு விசேஷ முக்கியத்துவம் கொடுத்தது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாது; அதுவும், செலாவணியை ஒரு நிரந்தர அடிப்படையில் அமைக்கும் கடமையில் ஈடுபட்டிருந்ததால், அவர்கள் சரியாகவே முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்த உலோக நாணயத்திட்டத்தை ஆய்ந்து அமையாத முடிவு என்று சொல்ல முடியாது; ஏனெனில், ஒரே உலோக நாணய மதிப்பைவிட அதிகப்படியான உத்திரவாதங்களை அளிக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். முந்தியதில் அது தன்னியல்பாகவே வருவது; பிந்தியதில் அது நிர்ப்பந்திக்கப்படுகிறது.

டைரக்டர்கள் சபையின் இந்தச் சிபாரிசுகளை நிறைவேற்றும் பொறுப்பு இந்தியாவிலுள்ள சர்க்கார்களிடம் விடப்பட்டது. எப்பொழுது, எந்தமுறையில் நிறைவேற்றவேண்டும் என்பதை அவற்றின் உசிதம்போல அவை செய்துகொள்ளலாம் என்று விடப்பட்டது. இந்தஉத்தரவுகளை முரணில்லாத முறையில் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்குக் கொஞ்சகாலம் பிடித்தது. அப்பொழுதும் சபையின் திட்டத்தில் ஒரு சீரான (Uniform) செலாவணியை அமைக்க வேண்டுமென்பது சம்பந்தமான பகுதிகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் பல்வேறு சர்க்கார்களும் முதல் கவனத்தைச் செலுத்தின.

செலாவணியின் மூலஅளவுகளைக் குறைக்கவேண்டுமென்று சபை (Court) அளித்த கடமையை முதலாவது விதித்தது மதராஸில்.

1818 ஜனவரி 7இல் சர்க்கார் ஒரு பிரகடனத்தை[1] வெளியிட்டது; அதன்படி, பழைய செலாவணி மூலஅளவுகளான ஆர்க்காடு ரூபாயும் (நட்சத்திர) ஸ்டார் பகோடாவும் அகற்றப்பட்டு, அவற்றிற்கு பதில் புதிய மூல அளவுகள் - ஒரு தங்கரூபாயும் ஒரு வெள்ளி ரூபாயும் புழக்கத் திற்குக் கொண்டு வரப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 165 கிராம் சுத்த உலோகத்தைக் கொண்டு, 180 கிராம் டிராய் எடையைப் பெற்றிருந்தன. ஆறுவருடங்கள் கழித்து பம்பாய், மதராஸைப் பின்பற்றி, 1824 அக்டோபர் 6இல் ஒரு பிரகடனத்தை[2] வெளியிட்டது; ஒரு தங்க ரூபாயும் ஒரு வெள்ளி ரூபாயும் - மதராஸில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட வற்றின் தரத்தைக் கொண்டவை - மாத்திரமே அந்த மாகாணத்தின் செலாவணிமூலஅளவுகள் என்று அந்தப்பிரகடனம் அறிவித்தது. வங்காள சர்க்கார்மிகப்பெரிய பிரச்சினையைச் சமாளிக்க வேண்டி யிருந்தது. அங்கு நிலவிய (இருந்த) மூன்று வெள்ளி மூல அளவுகளைச் சபையின் ஆலோசனைப்படி ஒன்றாகக் குறைக்கவேண்டிவந்தது. நீக்குவது - மாற்றுவது (திருத்திஅமைப்பது) என்ற அமைப்பின்மூலம் புனரமைப்புச் செய்யும் பணியை அது துவங்கியது. 1819இல் பெனாரஸ் ரூபாய் நாணயத்தை ரத்து செய்து[3], அதன் இடத்தில் பரூக்காபாத் ரூபாயைக் கொண்டு வந்தது; அதன் எடை 180.234 கிராமாகவும் அதில் உள்ள சுத்த உலோகத்தின் எடை 135.215 கிராம் டிராயாகவும் திருத்தி அமைக்கப்பட்டது. இது சரியான திசைவழியிலிருந்து ஒருபடி தள்ளி இருந்தது என்று தோன்றுகிறது. ஆனால், இங்கும்கூட, நேர்த்தியைப் (Fineness) பொறுத்தவரை அது சரியான பார்வை கொண்டதாக இருந்தது; ஏனெனில், பரூக்காபாத் ரூபாயில், மதராஸ் ரூபாய் களைப்போல், பன்னிரண்டுக்குப் பதினொன்று விகிதத்தில் சுத்த உலோகம் இருந்தது. பெனாரஸ் ரூபாயை அகற்றியபின், பரூக்காபாத் ரூபாயின் தரத்தை மதராஸ், பம்பாய் ரூபாய்களின் தரத்திற்குக் கொண்டுவருவது அடுத்த நடவடிக்கையாக இருந்தது. இதைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

இவ்வாறாக இரு-உலோக அமைப்பை ரத்து செய்யாமலே, சபை விரும்பிய சிறந்த மூலஅளவை அடைவதற்கான முக்கிய

---

1. செயின்ட் ஜார்ஜ் கோட்டை, பொதுஇலாகா ஆலேசானைக் கூட்டம் (Consultation) எண் 19, தேதி 7, 1818)

2. பம்பாய் நிதி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம், தேதி அக்டோபர், 6, 1824

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை III

கி.பி. 1833 இறுதியில் நாணயத்தின் ஒரே மாதிரித்தன்மை

சர்க்காரால் வெளியிடப் பட்டது	வெள்ளிக் காசுகள்			தங்கக் காசுகள்			சட்டரீதியான விகிதம்
	மதிப் பளவு	எடை	நேர்த்தி (சுத்த உலோகம்)	மதிப் பளவு	எடை	நேர்த்தி (சுத்த உலோகம்)	
வங்காளம்	சிக்கா ரூபாய்	192	176 அல்லது 11/12	மொகர்	204.710	187.651	1க்கு 15
	பரூகா பாத் ரூபாய்	180	165 அல்லது 11/12	..	..	..	..
பம்பாய்	வெள்ளி ரூபாய்	180	165 அல்லது 11/12	தங்க ரூபாய்	180	165 அல்லது 11/12	1க்கு 15
மதராஸ் (சென்னை)	வெள்ளி ரூபாய்	180	165 அல்லது 11/12	,,	180	165 அல்லது 11/12	1க்கு 15

1833 இறுதியிலுள்ள நிலைமையைக் கணக்கில் கொண்டு பார்த்தால், ஸிஸ்காரூபாயும் வங்காளத் தங்கமொகரும் தவிர, நாணயப் புழக்கத்தைப் பொறுத்தவரை, அதில் ஒருமித்த தன்மை அடைய வேண்டுமென்ற டைரக்டர்களின் திட்டம் நிறைவேறியது என்பது உண்மை. அதைப் பூரமாணக்குவதற்கு ஸிஸ்காரூபாயை விட்டுவிடுவதும் (அகற்றுவதும்) தங்கத்தின் மதிப்பைக் குறைப்பதும் தவிரச் செய்வதற்கு வேறு எதுவும் இல்லை. ஆயினும் இந்த நிலையில் டைரக்டர்கள் சபைக்கும் இந்தியாவிலுள்ள மூன்று சர்க்கார்களுக்குமிடையே கடுமையான மோதுதல் ஏற்பட்டது. தங்கத்தின் மதிப்பைக் குறைப்பதற்கு கணிசமான தயக்கம் காட்டப்பட்டது. சபையின் திட்டப்படி, செலாவணிச் சீர்திருத்தத்தை முதலில் எடுத்து நடத்திய மதராஸ் சர்க்கார், ரூபாய் நாணயத்துடன் தங்க நாணயமும் வெளியிடப்பட வேண்டுமென்று வற்புறுத்தியது[1] மட்டுமில்லாமல், இரட்டை நாணய

1. ரூபாயோடு இணைக்கப்படாமல் தங்கநாணயத்தை அச்சிடுவதையும் வினியோகிப்பதையும் அனுமதிக்க டைரக்டர்கள் சபை தயாராக இருந்தது; அவர்கள் அனுப்பிய ஏட்டில் (Despatch) பின்வருமாறு கூறியிருந்தனர்.

அமைப்பு, சட்ட ரீதியாக அதனுடைய பிரதேசத்தில் ஏற்கனவே நிலவும் விகிதத்தில் தொடர்வதிலிருந்து விலகுவதைக் கடுமையாக மறுத்தது.[2] சபை திரும்பத்திரும்ப ஆட்சபேணையைத் தெரிவித் திருந்தும்[3] வங்காளம் இரு உலோக நாணயமதிப்பை அதே அளவு பிடிவாதத்துடன் வைத்துக்கொண்டது. தங்கமொகரின் மதிப்பைக் குறைப்பதற்குப் பதிலாக, அதன் சுத்தத்தங்க எடையை 189.4037 கிராமிலிருந்து 187.651 டிராய் கிராமிற்குக் குறைத்து[4], அதன் மதிப்பை (Standard) மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது; இது மொக ருக்கும் ரூபாய்க்கும் இருக்கும் விகிதத்தில் உள்ள சாத்தியமான வேறு பாடுகளை (Difference) திருத்துவதற்காக ஒருவேளை இருக்கலாம்[5].

ஆனால் மற்றொரு திசையில், சபை விரும்பியதைவிட மேலும் அதிகமாகச் செய்ய இந்தியசர்க்கார் விரும்பியது. ஒரு ஒருங்கிணைந்த (ஒரே மாதிரியான ஆனால் சுதந்திரமான மூல அளவுகளாகக் கொண்ட செலாவணி) செலாவணிதான் இந்தியாவுக்குத் தேவைப்பட்டது என்று சபை (Court) நினைத்தது. உண்மையில், செலாவணியை எளிமைப்படுத்தும் விஷயத்தில் வேறுஅதிகமாகத் தாங்கள் எதையும் விரும்பவில்லை என்பதையும் ஸில்காவையும் மொகரையும் அவை அப்பொழுது இருந்ததுபோலவே ஒன்றுபடாமலேயே தொடர்ந்து இருப்பதை அனுமதிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகச் சபை,

---

(அடிக்குறிப்புத் தொடர்ச்சி)

''வெள்ளி ரூபாய் மதிப்பின் பிரதான அளவாகவும் கணக்குவைப்பதற்கான பணமாகவும் இருப்பதன் தகுதிபற்றி முற்றிலுமாக நாங்கள் திருப்தியடைந் துள்ளபோதிலும், தங்கம் புழக்கத்தில் இருப்பதை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்து வதை நாங்கள் விரும்பவில்லை. பொதுஉபயோகத்திற்கு முக்கியமாகப் பொருத்த மானதாக தங்க நாணயத்தை ஆக்கவிரும்புகிறோம். எங்கள் அபிப்ராயத்தில், தங்கரூபாய், வெள்ளிரூபாயின் தரத்திற்கு ஏற்ப செய்யப்படவேண்டும்''

2. செயின்ட் ஜார்ஜ் கோட்டை, பொதுமக்களுடன் ஆலோசனைகள், ஆகஸ்ட் 19,1817 குறிப்பாக அகௌன்டென்ட் ஜெனரலின் கடிதம் குறிக்கப்பட்டிருக்கிறது.

3. மதராஸீக்கு அனுப்பப்பட்ட பொது அறிக்கைகள் மார்ச் 6, 1810; ஜூலை 10, 1816; ஜூன் 12, 1816.

4. வங்காள விதிமுறைகள் XIV, 1818 என்றாலும் அது அதன் எடையை 190.895 லிருந்து 204.710 டிராய் கிராமிற்கு உயர்த்திற்று. வங்காள் விதிமுறைகள் VII, 1833

சர்க்காருக்கு உணர்த்திற்று.[1] மொகலாயர்கள் தங்களுக்குப் பின் ஆட்சிக்கு வருபவர்களுக்கு விட்டுச் சென்ற சூழ்நிலையில், ஒரு ஒருங்கிணைந்த செலாவணி, பெரிய முன்னேற்றமே. ஆனால், அது மட்டும் போதாது. ஒன்றிணைந்த செலாவணிக்குப் பதிலாக ஒரே மூல அளவை அடிப்படையாகக் கொண்ட பொதுவான செலாவணி அன்று நிலவிய சூழ்நிலையில் தேவைப்பட்டது. ஒன்றிணைந்த செலாவணியின் கீழ், ஒவ்வொரு மாகாணமும் தனது சொந்தப் பணத்தைத் தானே அடித்து வெளியிட்டது. ஒரு மாகாணம் வெளியிட்ட நாணயங்களைத் தவிர மற்ற மாகாணங்களின் நாணய சாலைகளில் அடித்து வெளியிடப்பட்ட நாணயங்கள் அந்த மாகாணத்தில் சட்டப்படிசெல்லத் தக்கதல்ல. மூன்று மாகாணங்களுக்கிடையே நிதி சுதந்திரம் இருந்திருந்தால் (சுதந்திரமான இந்த நாணயமுறை) அதிகத் தீங்கை விளைவித்திருக்காது. உண்மையில் ஒவ்வொரு மாகாணமும் அதன் சொந்த வருவாய் அமைப்பைக் கொண்டிருந்தாலும், தங்களின் நிதிப் பற்றாக்குறையைப் போக்க, அவை ஒன்றை ஒன்று சார்ந்திருந்தன. அவற்றிடையே தேவைகளை அளிக்கக்கூடிய முறையான ஏற்பாடு (சப்ளை ''Supply'') இருந்தது.

ஒன்றில் உபரியாக இருந்தவை, ஒழுங்காக மற்றவற்றின் பற்றாக்குறையைப் போக்க, எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒரு பொதுவான செலாவணி இல்லாததால் ஆதாரங்களைப் (Resources) பெறுவது கணிசமான அளவு பாதிக்கப்பட்டது. பொதுவான செலாவணி இல்லாமல் இருந்தது. ''வழங்கும்'' (Supply) பணிகள் பொறுத்தவரையான கஷ்டங்கள் இரண்டு வெவ்வேறுபட்ட வழிகளில் உணரப்பட்டன. மற்ற மாகாணங்களின் (நாணயத்தை) பணத்தைச் சட்டரீதியான செலாவணியாக உபயோகப்படுத்துவது சாத்தியப்படாததால், வணிகத்திற்கு பாதகமாகும் முறையில் ஒவ்வொன்றும் சுய-தேவை நிலையில் இருப்பதற்காக, நடைமுதல் நிலுவை இருப்பாகப் பெருந்தொகையை முடக்கி வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.[2] பெரும் இருப்புத்

---

1. வங்காளத்திற்கு அனுப்பப்பட்ட மார்ச் 11, 1829 தேதியிட்ட அறிக்கை (உத்தரவு)

2. வங்காள அக்கவுண்டன்ட் ஜெனரல், கல்கத்தா நாணயச் சாலைக் கமிட்டிக்கு 1823 நவம்பர் 21இல் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்:

''பாரா 32. செலாவணியின் நிலையைப் 'பொருத்து' கட்டாயமாக இருப்புத் தொகை இருக்க வேண்டும். மதராஸ், பம்பாய், புரூக்காபாத் ரூபாய்கள் வேறுபட்ட எடையிலும் உள்ளார்ந்த மதிப்பிலும் வேறுபடுவதற்கு பதிலாக, ஒரே தரத்தில் எடையும் மதிப்பும் கொண்டு ஒரு உட்பொறிப்பும் (conscription) கொண்டதாக இருந்தால், ஒரு மாகாணத்தில் மிகையாக (உபரியாக) உள்ள பற்றாக்குறை உள்ள மற்றொரு மாகாணத்திற்கு எந்த சமயத்திலும், நாணயசாலை வழியாகச் செல்லாமல், நேராகக் கிடைக்கும்; மூன்று மாகாணங்களிலும் செலவழிக்க அதிகப்படியான அளவு செலாவணி கிடைக்குமானால், அந்த விகிதாச்சாரத்திற்கேற்ப இந்தியாவின் இருப்புத்தொகை குறைக்கப்படலாம்''.

(பம்பாய் நிதி ஆலோசனைகள், 25.2.1824)

தொகையை வைத்துக்கொள்ளும் அவசியத்தை ஏற்படுத்திய அதே அமைப்பு, மற்ற மாகாணங்களிலிருந்து கிடைக்கும் நிவாரணத்தையும், விரும்பியதைவிடக் குறைவான பயனே கிடைக்கும் படி செய்தது. ஏனெனில் சப்ளையைப் பொறுத்தவரை, எந்த மாகாணம் அனுமதித்ததோ, அதன் செலாவணி ரூபத்தில் அது தேவைப்பட்டது; அதை, அது பயன்படுத்துவதற்கு முன்னால், அதைத் தேவைப்படும் மாகாணம் மீண்டும் நாணயமாக அடித்துச் செலாவணியாக்க வேண்டியிருந்தது.

மறு நாணயம் அடித்தலில் (recoinage) ஏற்படும் நஷ்டத்தோடில்லாமல், அத்தகைய ஏற்பாடு வணிகர்களுக்கு அசௌகரியத்தையும் சர்க்காருக்குத் தடுமாற்றத்தையும் (சிக்கலையும்) ஏற்படுத்தியது.[1]

எனவே 1833ஆம் ஆண்டு இறுதியில், நிலைமை என்னவெனில், ஒரே வெள்ளி நாணயப் படித்தகவுடன் (standard) கூடிய ஒரே மாதிரியான செலாவணி இருக்க வேண்டுமென்று சபை விரும்பியபோது, ஒரு இருஉலோக நாணயத் தகவுடன் கூடிய ஒரேமாதிரியான செலாவணி இருக்க வேண்டும் என்று இந்தியாவில் அதிகாரிகள் விரும்பினர். இத்தகைய கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், எந்த ஒரு பக்கமும் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லாமலே, அன்று நிலவிய செலாவணி முறை தொடர்ந்து இருந்திருக்கக்கூடும். ஆனால், 1833இல் இந்தியாவின் மூன்று மாகாணங்களுக்கிடையே உள்ள நிர்வாக உறவுகளில் ஒரு முக்கியமான அரசியல் - சட்டரீதியான மாற்றம் ஏற்பட்டது. அந்த ஆண்டு (ஆங்கில) பார்லிமென்ட் - காமன்ஸ் சபை - நிறைவேற்றிய சட்டத்தின்படி, இந்தியா முழுவதிலும் எல்லாச் சட்டம் இயற்றும், சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரமும் கொண்ட, மையப்படுத்திய இம்பீரியல் (Imperial) நிர்வாக அமைப்பு நிறுவப்பட்டது. நிர்வாக அமைப்பில் ஏற்பட்ட இந்த மாற்றம், நடைமுறையில் இருந்த நாணய முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதை இன்றியமையாததாக்கியது. ஸ்தல நாணயங்களின் இடத்தில் இம்பீரியல் நாணயங்களைக் கொண்டு வருவதை அவசியமாக்கியது. வேறு வார்த்தைகளில் கூற

1. இந்த ஏற்பாட்டின் தீங்கு ஏற்கனவே பம்பாயில் உணரப்பட்டது. 1819ஆம் ஆண்டின் பரூக்காபாத் ரூபாயின் மதிப்பு பம்பாய் ரூபாய்க்குச் சமமாக பம்பாய் மாகாணத்தில் சட்டபூர்வமான நாணயமாக விளங்கும் என்று அந்த மாகாண சர்க்கார் 1824 ஏப்ரல் 24இல் ஒரு பிரகடனத்தை வெளியிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாயிற்று. வங்காளத்

வேண்டுமெனில், வெறும் ஒரேமாதிரியான செலாவணிக்குப் பதிலாகப் பொதுவான நாணயம் என்ற குறிக்கோளை அது ஆதரித்தது. நிகழ்ச்சிகளின் விளைவுகளைப் புரிந்துகொள்வதில் இந்திய அதிகாரிகள் (நிதானமாக) மெத்தனமாக இருக்கவில்லை. பிரிட்டிஷார் அதுவரை செய்து வந்ததுபோல், பார்லிமெண்டால் அமைக்கப்பட்ட இம்பீரியல் சர்க்கார், மொகலாயர்களின் திவான்கள் அல்லது ஏஜெண்டுகளின் பாத்திரத்தை ஏற்று வகிப்பதோடு திருப்தியடையவில்லை; செயலற்றுப் போன, அரசாட்சி செய்வதிலிருந்து மறைந்துபோன மொகலாய சக்கரவர்த்திகளின் பெயரில் நாணயங்கள் வெளியிடப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை. பொய்யான வேடத்தைத்[1] தூக்கி எறிந்து விட்டுத் தனது பெயரிலேயே இம்பீரியல் நாணயத்தை வெளியிடுவதில் அக்கறை கொண்டது; அது இந்தியா முழுவதற்கும் பொதுவானதாகவும் அதன் அரசியல் ஆதிக்கத்தை எடுத்துக் கூறுவதாகவும் இருக்கும். அதன்படி, இந்தக் கொள்கையை அமலுக்குக் கொண்டு வர விரைவாகவே ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. இம்பீரியல் சர்க்காரின் ஒரு சட்டத்தின்படி (1835 ஆம் ஆண்டு XVII சட்டம்), ஒரே சட்ட ரீதியான சாதனமாக இந்தியா முழுவதிலும் ஒரு பொதுவான செலாவணியைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தது. டைரக்டர்கள் சபைக்கு ஒரு சலுகை அளிப்பதுபோல, இம்பீரியல் சர்க்கார் மேற்சொன்னதற்கு மேலாகவும் சென்று - ஸிஸ்கா ரூபாயை ஒதுக்கியதைப் பொறுத்தவரை, இந்தப் பொதுச் செலாவணியை மிக வன்மையாகச் சபை கண்டனம் செய்தது.[2] **''கிழக்கிந்தியக் கம்பெனியின் எந்த ஒரு பிரதேசத்திலும் சட்ட ரீதியான வழங்கும் சாதனமாக எந்தத் தங்க நாணயமும் இனிமேல் இருக்கக் கூடாது''** என்று சட்டமியற்றியது.[3]

இம்பீரியல் சர்க்கார் அவசியத்தின் நிர்ப்பந்தத்தால் உந்தப்பட்டு இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுவான செலாவணியை நிறுவியது புரிந்துகொள்ளக் கூடிய ஒன்றே. ஆனால், இரு உலோகச் செலாவணி அமைப்பை, அவ்வளவு நீண்டகாலத்திற்கு அமல்படுத்திய பின், ஏன் அதை ரத்து செய்தது என்பது தெளிவாகப் புரியவில்லை.

---

1. இந்திய சர்க்கார் பற்றிய தமது நினைவுக் குறிப்புகளில் திரு. தக்கர் இந்த உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

2. இந்தியாவுக்கு அவர்கள் அனுப்பிய நிதி தஸ்தாவேஜு - எண். 9, தேதி: ஜூலை 27, 1836

3. 1835ஆம் ஆண்டு சட்டம் XVIIன் பிரிவு 9.

அதிகாரிகள் முன்பு எவ்வாறு இரட்டை - உலோக அமைப்பை நாசப் படுத்துவதற்கு எதிராக இருந்தார்கள்: அவர்களது நாணய சீர்திருத்தங் களால் தீவிரமான அமைதிக் குலைவை ஏற்படுத்தாமல் அவர்களால் முடிந்த அளவு அக்கறையுடன் பார்த்துக் கொண்டார்கள் என்பதை நினைவு கூர்ந்தால், தங்கத்தின் மதிப்பைக் குறைத்த சட்டத்தின் ஷரத்து பயங்கரமான ஆச்சரியம்தான். என்றாலும், செலாவணிச் சட்டம் (XVII, 1835) வெளிப்படுத்திய திடீர், தலைகீழ் மாற்றம் (volte - face) இந்திய வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாக எப்பொழுதும் இருக்கும். நாணயச் சீர்திருத்தத்தின் நீண்ட கடுமையான வளர்ச்சிப் போக்கின் முடிவான நிலையைக் குறிப்பதாக அது அமைந்தது; ஒரு வெள்ளியின் ஒற்றை உலோக அடிப்படையில் இந்தியாவை வைத்தது; 180 கிராம் டிராயும் 165 கிராம் எடை சுத்த வெள்ளியையும் கொண்ட ஒரு ரூபாய் பொதுவான செலாவணியாகவும், நாடு முழுவதிலும் ஒரே சட்டரீதியான நாணய மாற்றுச் சாதனமாகவும் ஆயிற்று. 1835 சட்டம் XVII போல், வேறு எந்த பிரிட்டிஷ் இந்தியச் சட்டமும் பிந்திய ஆண்டுகளில் அவ்வளவு பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியதில்லை. இரட்டை-உலோக நாணய அமைப்பை ரத்து செய்ததைப் பொறுத்தவரை, ஆச்சரியமான அளவில் நிதானமான நோக்குடன் அது காணப்பட்டது. எனினும், சட்டம் பிரதானமாக முடிவு செய்தது என்னவென்றால், இரட்டை-உலோக அமைப்பை எடுத்துவிட்டு ஒற்றை-உலோக அமைப்பைக் கொண்டு வந்தது என்பதை எல்லா விமர்சகர்களும் தெரிந்திருந்தார்கள் என்று சொல்ல முடியாது. இந்தச் சட்டம் பற்றிய பொதுவான கருத்து என்னவெனில், தங்க நாணய மதிப்பை எடுத்துவிட்டு அதன் இடத்தில் வெள்ளி நாணய மதிப்பைக் கொண்டு வந்தது என்பதுதான். இந்த உண்மை, அதிகம் பொதுவாகத் தெரிந்திருந்தாலும், அதன் காரணமாக இந்த நடவடிக்கைக்கு எதிராகப் பகைமை உணர்ச்சி எதையும் நியாயப்படுத்த முடியாது.[1]

ஏனெனில், 19ஆவது நூற்றாண்டின் மத்தியில், கலிபோர்னியா விலும் ஆஸ்திரேலியாவிலும் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டதால், இந்தியா தனது இரட்டை உலோக நாணய முறையைத் தொடர்ந்திருந்தால், அதன் விளைவு என்னவாக இருந்திருக்க முடியும்? வெள்ளியுடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட உயர்வு, 1850ஆம் ஆண்டிற்குப் பின் இந்த இரு உலோகங் களின் நாணய விலை சந்தையின் விகிதங்கள் வெவ்வேறு திசையில்

(divergence) விலகிச் செல்லும் நிலைக்கு இட்டுச் சென்றது. வெள்ளியின் குறைக்கப்பட்ட மதிப்பு அதிகமாக இல்லையென்றாலும், இரட்டை உலோக நாணய முறையைக் கொண்டிருந்த நாடுகளில் ஒரு அபாய நிலையை ஏற்படுத்துவதற்கு அது போதுமானதாக இருந்தது; அதாவது சிறிய தொகைகளுக்கான வெள்ளிக் காசுகள் உட்பட, வெள்ளி நாணயங்கள் எல்லாம் புழக்கத்திலிருந்து மறைந்து கொண்டிருந்தன. தனது சிறிய வெள்ளிக் காசுகளின் தரத்தை, அவற்றின் புழக்கத்தைப் பாதுகாப்பதற்காக, தங்கத்தின் மதிப்பை விடவும் கீழாக வைக்க - டாலருக்கு டாலர் - 1853இல் ஒரு சட்டத்தை இயற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயிற்று ஐக்கிய அமெரிக்கா.[1] பிரான்ஸை ஒத்த பரஸ்பரம் பரிமாற்றம் செய்யக்கூடிய சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் இரட்டை உலோக நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிணைந்த செலாவணியைக் கொண்டிருந்த பிரான்ஸ், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளும் இம்மாதிரியான கஷ்டங்களை எதிர்நோக்கின.[2]

---

1. பிரான்ஸின் கலாசாரச் செல்வாக்கானது லத்தீன் மொழியை ஆதாரமாகக் கொண்ட மற்ற நாடுகளையும் பிரான்ஸின் நாணய முறையை நடைமுறையாகக் கொண்டுவரும்படி செய்தது. 1831இல் பெல்ஜியம் அரசியல் சுதந்திரம் பெற்றதையடுத்து, அதனுடைய நாணய முறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. 1832ஆம் ஆண்டின் சட்டப்படி, நாணயமுறை சம்பந்தப்பட்டவரை, பெல்ஜியம், பிரான்ஸின் ஒரு சார்பு நாடாகியது. அந்தச் சட்டத்தின்கீழ், பிரான்ஸின் நாணயமுறை, அது (பெல்ஜியம்) முற்றிலுமாக நடைமுறைப்படுத்திற்று. பிரான்ஸின் 20, 40 பிராங்க் தங்கக் காசுகளுக்கும், அந்நாட்டின் 5 பிராங்க் வெள்ளிக் காசுக்கும் பெல்ஜியத்தின் சட்ட ரீதியான நாணயமாக அங்கீகாரம் அளித்து ஏற்றுக்கொள்ளும் அளவிற்கும் சென்றது. சுவிட்சர்லாந்தின் 1848 அரசியல் சட்டத்தின் 36 வரத்து, காசுப் பணங்களை அச்சிடும் உரிமையை பிரெஞ்சு சர்க்காருக்கு வழங்கியது. 1850 மே 7ம் தேதிய சட்டம் பிரான்ஸின் நாணயமுறையை சுவிட்சர்லாந்து தனதாக்கிக் கொண்டது. வரத்துக் கூறியது: ''பிரான்ஸின் முறைக்கு போதுமான அளவு நெருக்கமாக உள்ள வெளிநாட்டு வெள்ளிக்காசுகள், சுவிட்சர்லாந்தில் கடன்களுக்காக கொடுப்பதற்கு முறையான சாதனமாக சட்டபூர்வமான அந்தஸ்து அளிக்கப்படுகிறது''. பல்வேறு இத்தாலிய ராஜ்யங்கள் (சுவிட்சர்லாந்தின் ராஜ்யங்கள் அல்லது ஜில்லாக்கள் போல). அவை ஐக்கியப்படுவதற்கு முன்பு, ஒவ்வொன்றும் தனித்தனி நாணயங்களைக் கொண்டிருந்தன. ஐக்கியப்பட்டபின், ஒரே மாதிரியான தன்மையைப் பெற, பழைய முறைகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பதா அல்லது நாடு முழுமைக்கும் பொதுமை யானதான் ஒன்றை தேர்ந்தெடுப்பதா என்ற பிரச்னை வந்தது. தங்களின் சுதந்திரத்திற்காக பிரான்ஸ் ஆற்றிய உதவியின் ஞாபகமாக நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் இத்தாலிய மக்களின் மனங்களில் மிகவும் மேலோங்கி இருந்தது; பிரான்ஸின் நாணய முறையை இத்தாலி ஏற்றுக்கொள்வது அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாகும் என்று கருதப்பட்டது. அதிர்ஷ்டவசமாக, சர்டினியா ஏற்கனவே பிரான்ஸின் நாணயமுறையைக் கடைப்பிடித்து வந்தது. 1862 ஆகஸ்ட் 24 தேதிச் சட்டம் இத்தாலி முழுமைக்கும் விரிவுபடுத்தி, பெயரை மூலஅளவாக்கியது; பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து நாடுகளின் காசுகள் சட்டபூர்வமான நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ஹச்.பி.வில்ஸ், லத்திய நாணய முறையின் ஐக்கியம், சிசாக்கோ, 1910 ப. 15, 27, 36, 37)

2. ஜே.எஸ். லாப்லினின், இரட்டை உலோக நாணய முறையின் வரலாறு, நியூயார்க், 1886, பக். 79-83.

தங்களின் வெள்ளிச் செலாவணியைக் குறிப்பாகச் சிறிய காசுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு நாடும்[1] கைக்கொண்ட தனித்தனிக் கொள்கை, அவற்றினிடையே நிலவி வந்த நாணய முறையின் இணக்கத்தைச் (hormony) சீர்குலைந்துவிடாமல் இருக்க, அவை ஒரு கன்வென்ஷனில் கூடவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டன. லாட்டின் யூனியன் என்று அழைக்கப்பட்ட அந்தக் கன்வென்ஷன் 1865 நவம்பர் 20இல் கூடியபோது, 2 பிராங்க், 1 பிராங்க், 50 சென்டிம்கள், 20 சென்டிம்கள் காசுகளைப் புழக்கத்தில் தொடர்ந்து வைத்துக்கொள்வதற்காக, அவற்றைத் துணை நாணயங்களாக ஆக்குவதற்காக அவற்றின் நேர்த்தியின் அளவை 1000க்கு 900 என்பதிலிருந்து 1000க்கு 835 என்று குறைக்கவேண்டுமென்று அதில் கலந்துகொண்ட நாடுகள் கோரின.[2] தங்கம், வெள்ளி நாணயங்களிடையே ஒப்புநோக்கு மதிப்புகளில் ஏற்பட்ட இந்த அமளியால் இந்திய சர்க்காரும் சிரமத்திற்குள்ளாயிற்று என்பது உண்மை; ஆனால், அந்தக் கஷ்டம் அதனுடைய முட்டாள் தனமான செயலால்தான்[3]. 1835 ஆண்டின் செலாவணிச் சட்டம், சுதந்திரமான தங்க நாணயங்கள் அடிப்பதற்கான தனி அதிகாரம் (முடியுரிமை) (Seignorage) வருவாய்க்கு தோற்றுவாயாக இருந்ததால், அதை இழக்க சர்க்கார் விரும்பவில்லை. ஆனால், தங்கம் சட்டபூர்வமான சாதனமாகப் புழக்கத்தில் இல்லாததால், நாணயங்கள் அடிக்க நாணயச் சாலைக்குத் தங்கம் கொண்டுவரப்படவில்லை. இதனால் இந்தத் தனியுரிமையினால் வந்த வருமானம் குறைந்தது. வருமானத்தில் ஏற்பட்ட நஷ்டத்தைத் தவிர்க்கத் தங்க நாணயங்கள் அடிப்பதை ஊக்குவிக்க சர்க்கார் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துவங்கியது. முதலாவதாக, தனியுரிமை ஊதியப் பங்கை 1837இல் 2 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைத்தது. இந்த நடவடிக்கையும் நாணயச் சாலைக்குத் தங்கம் கொண்டு வருமாறு மக்களை ஊக்குவிப்பதற்குப் போதுமான தூண்டுகோலாக இல்லை. இதனால் முடியுரிமைக்

---

1. சிறுதொகைகளுக்கான வெள்ளிக் காசுகளைத் தொடர்ந்து புழக்கத்தில் வைத்திருப்பதற்காக வெள்ளியின் அளவைக் குறைத்த முதல் நாடு சுவிட்சர்லாந்து ஆகும். குறைக்கப்பட்ட நேர்த்தியை (சுத்த உலோகத்தை) க் கொண்ட இந்த சுவிட்சர்லாந்துக் காசுகள், அந்த நாட்டின் எல்லைகளைத் தாண்டி லத்தீன் மொழியை ஆதாரமாகக் கொண்ட நாடுகளிலும் சட்டபூர்வமான செலாவணியாகின; அதிக வெள்ளி எடையைக் கொண்ட அதிக மதிப்புள்ள அதே தொகைக்கான நாணயங்களின் மதிப்புடன் அவற்றின் இடத்தைப் பிடித்துக்கொள்ளத் தொடங்கின. இதன் விளைவாகச் சட்டபூர்வமான செலாவணி என்ற அதிகாரத்தை, 1864 ஏப்ரல் 14 உத்தரவின்படி பிரான்ஸ் ரத்து செய்தது. லத்தீன் மொழி நாடுகள் ஒன்றிணைந்த நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டன.

2. [illegible] பக். 146-149

கூறுமூலம் வருமானம் உயரவில்லை. இதற்கு அடுத்த நடவடிக்கையாக, ஒரு தங்க மொகருக்குச் சமமாக 15 ரூபாய் என்ற விகிதத்தில் தங்க நாணயங்களை வாங்கும்படி கஜானாக்களின் பொறுப்பு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் பிரகடனத்தை, 1841 ஜனவரி 13ஆம் தேதி அரசாங்கம் வெளியிட்டது. ஆனால், கொஞ்ச காலத்திற்குத் தங்கம் எதுவும் அவர்களால் பெறப்படவில்லை. காரணம், பிரகடனத்தில் அறிவித்த விகிதப்படி தங்கம் குறைவாக மதிப்பிடப்பட்டது.[1] ஆனால், ஆஸ்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது நிலைமையை முற்றிலுமாக மாற்றியது. முன்பு குறைவாக ரூ. 15/- ஆக மதிப்பிடப்பட்ட தங்க மொகர், புதிய நிலைமையில், அது உயர்மதிப்பாக ஆகியது; தங்கத்தைப் பெற்றுக் கொள்வதில் ஒருசமயம் ஆர்வம் காட்டிய சர்க்கார், அதன் அதிக வரவால் பீதியடைந்தது; தங்கம் சட்டபூர்வமான சாதனமாக இருக்காது என்று அறிவித்தும், அதே சமயம் சர்க்காரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதைப் பெற்றுக்கொள்வதும் என்ற நடைமுறையைப் பின்பற்றியதால் ஒரு இக்கட்டான நிலைமையை எதிர்கொள்ள வேண்டிய பாதகமான நிலை ஏற்பட்டது.

அதாவது, சாதாரணமாக அதன் மதிப்பை விட அதிகமாகக் கொடுத்திருக்க வேண்டிய நாணயத்திற்குப் பயன் இல்லாமல் போயிற்று. நிலைமையைப் புரிந்துகொண்டு நாணயத்தை அதிகமாக்குவதன் மூலம் வருமானத்தை உயர்த்த முடியும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு 1841இல் வெளியிட்ட பிரகடனத்தை வாபஸ் பெறும் புதிய பிரகடனத்தை 1852 டிசம்பர் 25இல் வெளியிட்டது. தங்கத்தை, அதற்குள்ள அரைகுறைச் சட்ட ஏற்பு செலாவணிச் சக்தியைப் பிடுங்கிக் கொள்ளாமல், அதை சட்டரீதியான பொதுவான நாணயமாக ஆக்கியிருந்தால், இந்த இக்கட்டான நிலைமையைத் தவிர்த்திருக்கலாமா என்பது வேறுவிஷயம். ஆனால், இரட்டை உலோக செலாவணியைக் கொண்டிருந்த பிற நாடுகள், தங்களின் செலாவணியில் வெள்ளியின் பகுதியைப் பாதுகாப்பதில் பட்ட துயரங்கள், இடுக்கண்களிலிருந்து இந்தியா காப்பாற்றப்பட்டது; இரட்டை- உலோகச் செலாவணி முறையை ரத்து செய்தது எவ்விதத்திலும் ஒரு சிறிய சாதனை அல்ல. அப்பொழுது பார்க்கப்படாத, பின்னால் வெளிப் படுத்திக் கொண்ட மாற்றங்களுக்கு எதிராக முன்கூட்டியே தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கு இந்த நடவடிக்கை நல்ல பயனளித்தது.

---

1. முன் குறிப்பிட்டது, பக்கம். 8
   " பக்கம். 10

எனவே, இரட்டை- உலோகச் செலாவணி முறை இந்தியாவில் ரத்து செய்யப்பட்டதும், அதைத் தொடர்ந்து 1835ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டதும் நிந்தனைக்குரிய ஒரு காரணமாகாது. இரட்டை உலோகச் செலாவணியைக் கண்டிப்பது, வெள்ளியை ஒரே உலோகச் செலாவணியாக்கியதை நியாயப்படுத்தியதாகாது என்ற வாதத்திற்கு இடமுண்டு. ஒற்றை உலோக நாணய அமைப்பு என்றால், அது தங்க ஒற்றை நாணய முறையாகவும் இருந்திருக்கலாம். உண்மையில், வெள்ளி ஒற்றை உலோக நாணய முறைக்கு முன்னுரிமை கொடுத்தது கொஞ்சம் விசித்திரமானதல்ல. இங்கு லார்டு லிவர்பூல்[1] என்ன கூறினார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒற்றை உலோக நாணய அமைப்பிற்கு ஆதரவாளரான அவரின் கருத்தை டைரக்டர்கள் சபை கோரியபோது, அன்று இங்கிலாந்தில் நிலவிய செலாவணியின் இத்தகைய சீர்கேடுகளுக்காகத், தங்க ஒற்றை உலோக நாணய முறையை இந்தியாவுக்குச் சிபாரிசு செய்தார். அவர்களின் ஆலோசகரின் கருத்திலிருந்து டைரக்டர்கள் சபை இந்த விஷயத்தில் ஏன் இவ்வளவு கடுமையாக விலகிச்[2] சென்றார்கள் என்பது, ஏராள மான கடுமையான விமர்சனத்திற்கு ஆளாயிற்று. முதலில் ஒன்றைச் சொல்லி விடலாம்: உள்நோக்கம் இருந்ததாகக் கூறுவது ஆதாரமற்றது; லார்டு லிவர்பூல் ஒரு ''தங்க மூட்டைப் பூச்சியுமல்ல'' (Gold bug); சபை ''வெள்ளி மனிதர்களை''க் கொண்டதாகவும் இருக்கவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், தங்கமா அல்லது வெள்ளியா மதிப்புத் தரத்தில் உயர்ந்தது என்ற கண்ணோட்டத்தில் அவர்கள் யாரும் இந்தக் கேள்வியைப் பரிசீலிக்கவில்லை. அன்று பரிசீலிக்கத் தகுதி வாய்ந்தது என்று கருதினால், அன்றைக்கு நிலவிய கருத்துப்படி, சபையின் தேர்வு, லார்டு லிவர்பூலின் தேர்வை விட நல்லது என்ப தாகும். வெள்ளி நாணய மதிப்பிற்குச் சாதகமாக லோக்கோ, ஹாரிஸ், பெட்டி போன்ற தத்துவவாதிகள் மட்டும் இருந்தார்கள் என்றில்லாமல், உலக முழுவதிலும் நிலவிய நடைமுறை, வெள்ளிக்குச் சாதகமாக இருந்தது. 1816இல் இங்கிலாந்து தங்கத்தின் அடிப்படையில் தன்னை வைத்துக் கொண்டது உண்மையே. ஆனால் அந்தச் சட்டம் சுதந்திரமான வெள்ளி நாணயங்களுக்கு நாணயச்சாலைகளை மூடிவிடுவதற்கு பதிலாக, ஒரு அரசு பிரகடனப்படி[3], அதை அவற்றிற்கு திறந்து வைத் திருந்தது. அந்த பிரகடனம் உண்மையில் ஒருபோதும் வெளியிடப்

1. ''நாணய உலகைப் பற்றிய ஆய்வுரை'' (A treatise on the coinage of the Realm) யின் ஆசிரியர் - வங்காள கவர்னர் தமது நிகழ்ச்சி பதிவில் இதை எதிர்பார்த்திருந்தார்.

2. ஹெச்.எம். கன்னிஸ் ''இந்திய நாணயச் செலாவணி'' 1898; மேலும் எஸ்.வி.

படவில்லை; ஆனால், இந்த விஷயம் தீர்வு செய்யப்பட்டு விட்டதாக ஆங்கிலேயர்கள் கருதினார்கள் என்று நம்பிவிடக் கூடாது. தங்க நாணய மதிப்பு இங்கிலாந்தின் செலாவணி அமைப்புச் சிக்கலில்லாமல் இலகுவாகச் செயல்படுவதற்குச் சாத்தியமில்லாத மிகக் குறுகலான அடிப்படையையே தந்தது என்பதை 1825ஆம் ஆண்டு நெருக்கடி எடுத்துக்காட்டியது; அன்றைய நிபுணர்கள் கருத்துப்படி[1] தங்க நாணய மதிப்பு, இங்கிலாந்து வாணிகத்தின் உயர்வுக்குக் காரணமாக இருக்காமல் அந்த நாட்டின் செழிப்பிற்குத் தடங்கலாக இருந்தது என்பதாகும்; ஏனெனில் வெள்ளியை உலகின் மற்ற பாகங்கள் மிகப்பெரும் அளவில் அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அவற்றி லிருந்து இங்கிலாந்து துண்டிக்கப்பட்டது. அன்றைய பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கூடத் தங்க நாணய அடிப்படைக்குத் திட்டவட்டமான முன்னுரிமை அளிக்கவில்லை. 1826இல், வெள்ளிக்கு முழு சட்டமுறை பரிமாற்று சாதனமாக நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்பட வேண்டுமென்று குஸ்கிஸன், சர்க்காருக்கு ஆலோசனை கூறினார்.[2] 1844 வரையில் கூட, நாணயத் திட்டம் பற்றிய விஷயம் தீர்க்கப்படவில்லை; அமைச்சரவைக்குத் தாம் அளித்த அறிக்கையில் பீல், தங்க நாணய முறையைக் கைவிட்டு, அதற்கு பதிலாக வெள்ளி உலோக அல்லது இரட்டை உலோக நாணயமுறைக்கு, மாறுவதற்கான சாத்தியக்கூறு பற்றி மனச்சாட்சிக்கு எந்தத் தயக்கமும் இல்லாமல் முன்கூட்டியே ஒன்றை நினைக்காமலும், சாதகமாக விவாதிக்கிறார். நிதி வருமானத் துறையில் தனிமைப் படுத்தப்பட்டதால் ஏற்பட்ட கஷ்டங்கள், நாணயமுறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும்படி நிர்ப்பந்திக்கும் அளவுக்கு சமாளிக்க முடியாதவையல்ல. ஆனால், குஸ்கிஸ்ஸன் திட்டத்தின் பகுதியை 1844 வங்கிகளின் உரிமைச் சட்டத்தில் (Bank Charter Act) அவரது பிரசித்தி பெற்ற ஷரத்தாக உட்படுத்து வதற்குப் போதுமான அளவு அவை இருந்தன; அதன்படி, மொத்த வெளியீடுகளுக்கு நான்கில் ஒன்று அளவுக்கு வெள்ளிக்கு எதிராகக் காகித நாணயங்கள் வெளியிடுவதை அனுமதித்தது.[3]

---

1. நாணயக் கமிட்டி முன் ஏ. பாரிங் (பின்னர் லார்டு அஸுபர்ட்டன்) அளித்த சாட்சியம். H & C return 31 of 1830.

2. அமைச்சரவைக்கு அவர் சமர்ப்பித்த மகஜரைக் காண்க. (அச்சிட்டது கிப்ஸ்) ''செலாவணியைப் பற்றிய கலந்துரையாடல்'' (1894) - இணைப்பு பக்கம். XIVII.

3. ஆன்டிரீடஸின், பேங்க் ஆப் இங்கிலாந்தின் வரலாறு, இணைப்பு அனுபந்தம் 1. காலாவதியான அவரது ஷரத்தின் ஆரம்ப நோக்கம் பற்றி Bank Charter Act பற்றி அவர் ஆற்றிய உரையைப் பார்க்க, ஹன்சார்டு, தொகுப்பு LXXIV, பக். 1334-35.

வெள்ளியின் ஸ்திரத் தன்மை பற்றிய உலகளாவிய நம்பிக்கை அவ்வளவு அதிகம் இருந்ததால், ஹாலந்து, நடைமுறையில் இருந்த தங்க ஒற்றை உலோக நாணய முறையிலிருந்து ஒற்றை உலோக வெள்ளி நாணயமுறைக்கு 1847இல் மாறியது. காரணம் அதன் ராஜதந்திரிகளின் நம்பிக்கைப்படி:

> ''இங்கிலாந்தின் நாணயமுறைக்கு ஒத்த முறையை வைத்திருப்பது ஹாலந்தின் வணிக, தொழில் நலன்களுக்கு நாசகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது நிரூபண மாகியுள்ளது. தங்க நாணய முறையை அமலுக்குக் கொண்டு வந்தபின் இங்கிலாந்தின் நிதி நெருக்கடிகள் (revulsions) வேறு எந்த நாட்டிலும்விட அடிக்கடியும் அதிகமாகவும் நிகழ்கின்றன; அதன் பாதகமான விளைவுகள் இங்கிலாந்தைவிட ஹாலந்தில் குறைவாக உணரப்படவில்லை. அந்த நெருக்கடிகளின்போது, ஹாலந்தின் பணத்தை இழுத்துக் கொள்வதால் வெள்ளி நாணய மதிப்பைக் (முறையை) கொண்டுவந்தால், ஹாலந்தின் உள் நாட்டு வணிகத்திற்குச் சீர்குலைவு ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்தும் என்று அவர்கள் கருதுகிறார்கள். (ஹாலந்து) அந்த நாட்டில் தோன்றாத அந்தத் தீங்குகளுக்குப் பொறுப்பில்லாத ஹாலந்து அவற்றிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும்.''[1]

டைரக்டர்கள் சபையோ அல்லது லார்டு லிவர்பூலோ தேர்ந் தெடுத்த உலோக நாணய முறையைப் பொறுத்தவரை, அவை ஸ்திரத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல. விஷயம் அப்படி இருந்திருக்குமானால், அவர்கள் வெள்ளியைத் தேர்ந்தெடுத்திருக் கலாம். இரண்டு பகுதியினரின் தேர்வில் உள்ள வித்தியாசம் மேலெழுந்த வாரியாக மட்டுமே (அப்பொழுது) இருந்தது. லார்டுலிவர்பூலுடன் டைரக்டர்கள் சபை கருத்து வேறுபாடு கொண்டது, எந்த உள் நோக்கத்தின் காரணமாகவும் அல்ல, ஸ்திரதன்மையல்ல, மாறாகப் பொதுமக்கள் அளிக்கும் முன்னுரிமை தான் உலோகத் தரத்தை நிர்ணயிப்பதற்கான அடிப்படைக் கோட்பாடு என்பதில் இருவரும் உடன்பட்டனர். அவர்களின் அபிப்ராய வித்தியாசங்கள் இந்த உடன் பாட்டிலிருந்து தர்க்கரீதியாகச் சென்றது. செலாவணியின் கலப்பு (Composition) பற்றி ஆராயும்போது, இங்கிலாந்து பெருமளவு தங்கத்தை யும் இந்தியா பெருமளவு வெள்ளியையும் கொண்டிருந்தது காணப் பட்டது. அவர்களின் பொதுவான ஆதாரத்தை ஒத்துக் கொண்டால்,

இங்கிலாந்துக்கு லார்டு லிவர்பூலால் தங்கத்தையும், இந்தியாவுக்கு சபை, வெள்ளியையும் தேர்ந்தெடுத்தது ஏன் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். நாணயத்தின் உண்மையான கலவை பொது மக்களின் முன்னுரிமைக்கு இருந்த சான்றாக இருந்ததா, இல்லையா என்பதைச் சபையும் லார்டு லிவர்பூலும் வரட்டுத்தனமாக உறுதி படுத்திக் கூறியது போல உறுதியாக சொல்ல முடியாது. இங்கிலாந்தைப் பொறுத்தவரை, லிவர்பூலின் விளக்கம் டேவிட் ரிகார்டோ என்ற சிறந்த பொருளாதாரவாதியால் ஆட்சேபிக்கப்படுகிறது. பொன், வெள்ளிப் பாளங்களின் உயர்விலை (High Price of Bullion) என்ற தமது நூலில் டேவிட் ரிகார்டோ எழுதுகிறார்:

> ''லார்டு லிவர்பூல் அளித்த பல காரணங்களால், தங்க நாணயம் ஒரு நூற்றாண்டுக்குப் பக்கமாக, மதிப்பின் பிரதான அளவு கோலாக இருந்து வந்துள்ளது என்று சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் தோன்றுகிறது. தங்க சாலை விகித வீதம் கறாராக நிர்ணயிக்கப்படாதது இதற்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன். தங்கம் வெகு அதிகம் உயர்வாக மதிப்பிடப்பட்டது; நிர்ணயிக்கப்பட்ட அதே எடையைப் பெற்றிருந்து எந்த வெள்ளி நாணயமும் புழக்கத்தில் இருக்க முடியாது. ஒரு புதிய விதிமுறை அமுலுக்கு வந்தால் வெள்ளி அதிக உயர்வான மதிப்பைப் பெறும்; அப்பொழுது தங்கம் மறைந்து விடும். வெள்ளி, நாணயத் தகவுப் (Standard) பணமாகும்.''[1]

பொதுமக்களின் முன்னுரிமையை விடத்[2] தங்க சாலையின் விகித வீதங்கள், இந்தியாவில் வெள்ளி அதிக முக்கியத்துவம் பெற்றதற்கு[3] சமமாகவே காரணமாக இருந்திருப்பது சாத்தியமே.

---

1. Works, p. 271

2. மற்றபடி பிரமாதமான தமது கட்டுரையால், தங்கத்திற்குப் பதில் வெள்ளி வந்தது, தென்னிந்தியாவில் அந்த உலோகத்திற்கு இயல்பாகவே மக்கள் முன்னுரிமை அளித்ததால் என்று திரு. டாட்வெல் கருத்துத் தெரிவித்துள்ளதாகத் தோன்றுகிறது. திரு. துரைசுவாமி போன்ற எழுத்தாளர்களின் வாதங்களைச் சந்திப்பதில் அதிகம் அக்கறை காட்டுவதால், அவரது ஆதாரங்களே அவரது ஆய்வுக்கு எதிராக உள்ளன என்பதைக் காணத் தவறுகிறார்.

3. 1800 முதல் 1835 வரை, எப்.ஸி. ஹாலசன்னின் கணிப்புப்படி (கல்கத்தா ரெவ்யூ, ஜூலை 1892) இந்தியாவின் மொத்த நாணயங்கள் வருமாறு)

தங்கம் ...	3,845,000 அவுன்ஸ்
வெள்ளி ...	3,781,250000 அவுன்ஸ்

(குறிப்பு: ரூபாயைப் பொறுத்தவரை, ஒப்புநோக்குவதற்காக ரூபாய்கள் அவுன்சாக மாற்றப்பட்டன).

பொது மக்களின் முன்னுரிமையைத் தவிர வேறு ஏதாவது காரணம் இருந்திருந்தால், சபை, தங்க ஒற்றை நாணய முறையை ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு இட்டுச் சென்றிருக்குமா என்பது தர்க்கத்திற்குரிய ஒரு விஷயமாகும். சட்டம் இயற்றப்பட்டபோது வெள்ளி உலோக (ஒற்றை நாணய) அமைப்பு நன்கு ஆதரிக்கப்பட்ட போதிலும், நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த நடவடிக்கை போதுமானதாக இல்லை என்பது பிற்பாடு நிரூபண மாயிற்று. இதே காலத்தில், இந்திய மக்களின் பொருளாதாரத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம். அத்தகையவற்றில் ஒன்று பண்டமாற்றுப் பொருளாதாரம், பணப்பொருளாதாரமாக மாறியதாகும். இந்த மாற்றத் திற்கான முக்கிய காரணங்களில் முதலிடம் கொடுக்கப்பெறுவது, பிரிட்டிஷ் வருமானம் - நிதி அமைப்பாகும். இந்திய சமுதாயத்தைப் பணம் தொடர்பானதாக மாற்றுவதில் அதன் விளைவுகள், ஏற்கனவே அவை யதார்த்தமானவையாக இருந்த போதிலும், அவை போது மானதாக உணரப்படவில்லை. உள்நாட்டு ராஜாக்களின் கீழ், மிக அதிகமாகக் கொடுக்கல் வாங்கல் (பண்ட மாற்று முறை) பெரு மளவு பண்டங்களாகவே இருந்தன. சர்க்காரால் அமைக்கப்பட்டு அதனாலேயே செலவு ஏற்றுக் கொள்ளப்படும். நிரந்தர ராணுவம் சிறியதாகும். ராணுவத்தின் பெரும்பகுதி, ஜாகீர்தார்களாலும் நிலச் சுவான்தார்களாலும் அமைக்கப்பட்ட ஒருமாதிரியான ஸ்தல உப ராணுவமாகும் (militia). இந்த நிலாதிபதிகளின் துருப்புகள் அல்லது சேவகர்கள், அவர்கள் எந்த ஜில்லாக்களில் நிறுத்தப்பட்டிருக்கிறார் களோ, அங்கேயே தானியங்கள், பலசரக்கு மற்றும் சாமான்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. தலைமுறை வழியிலான ரெவின்யூ, போலீஸ் அதிகாரிகளுக்குப் பொதுவாக நிலமான்யங்கள் அளிக்கப் பட்டன. பண்ணை வேலையாட்களும் தொழிலாளிகளும் சம்பளமாகத் தானியங்களைப் பெற்றனர். அதிகாரிகளில் மிகப் பெரும்பான்மை யோரின் சம்பளம் பொருட்களாகக் கொடுக்கப் பட்டதால் அரசு தீர்வையாக வசூலித்ததில் பணமாக வசூலித்தது சிறிய அளவே. பண மற்ற வருமான நிதி அமைப்பில், பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்த புதுமையான முறைமைகள் மிகக் கடுமையான தன்மை வாய்ந்தவை. பிரதேசம் பிரதேசமாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்த போது, முதலாவது எடுத்த நடவடிக்கை, நிலச்சுவான்தார்களின் ஸ்தலப் படைக்குப் பதிலாக முறையாக அமைக்கப்பட்ட நன்கு கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிரந்தர ராணுவத்தைக் கொண்டு வருவது; அவ்வாறு பல்வேறு ராணுவ நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த ராணுவத்திற்குச் சம்பளம் பணமாகக் கொடுக்கப்பட்டது. ராணுவத்

பெற்றுக்கொண்ட ரெவின்யூ, போலீஸ் அதிகாரிகளுக்குப் பதிலாக ரெவின்யூ கலெக்டர்களும், மாஜிஸ்ட்ரேட்டுகளும், அவர்களுக்குத் தேவையான விரிவான அளவில் சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டனர். அவர்களின் சம்பளமும் அங்கு நிலவிய (காசுகளில்) பணத்தில் கொடுக்கப்பட்டது. ராணுவம், போலீஸ் மற்றும் அதிகாரிகளின் சம்பளம் பணமாகக் கொடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், சுதேசிகளுக்கு அதுவரை தெரியாத மற்ற வசூல்களையும் பிரிட்டிஷ் சர்க்கார் அமல்படுத்தியது; அவை ''வீட்டு வரிகள்'', ''பொதுக் கடனுக்கு வட்டி'' முதலியனவும் பண அடிப்படையில் அமைந்திருந்தன. பணமாகக் கொடுப்பது என்ற பொறுப்பை அரசு மேற்கொண்டதால், எல்லா வரிகளையும் பணமாகப் பெறுவது என்ற கட்டாயத்திற்கு உட்பட்டது; ஒவ்வொரு பிரஜையும் பணமாகக் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானதால், அவரும் தன் பங்குக்குப் பணம் தவிர வேறு எதையும் பெற முடியாது என்று நிபந்தனையை ஏற்படுத்தினார். இவ்வாறாக, சமுதாய அமைப்பு முழுவதும் ஒரு முழுமையான மாற்றத்தை அடைந்தது.

இந்தக் காலத்தில், இந்திய மக்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மற்றொரு முக்கிய மாற்றம், வாணிபத்தில் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சி. ஒரு கணிசமான காலத்திற்கு, பிரிட்டனின் ஏற்றுமதி-இறக்குமதி (வரி) தீர்வைக் கொள்கையும், கப்பல் வாணிபச் சட்டமும் இந்திய வியாபாரம் விரிவடைவதற்கு உண்மையான தடைகளாக இருந்தன. தனது பருத்தி மற்றும் உற்பத்திப் பொருட்களையும் பெயரளவிலான (2½ சதவிகிதம்) இறக்குமதித் தீர்வையில் பெறும்படி இந்தியாவை இங்கிலாந்து கட்டாயப்படுத்தியது. அதே சமயம், இந்தியாவில் தயாரான, போட்டியிடும் அத்தகைய பொருட்களுக்கு (ஏற்றுமதி வரியாக) 50 சதவிகிதம் முதல் 500 சதவிகிதம் வரை கடுமையான தீர்வையை விதித்துத் தனது நாட்டில் நுழைவதற்குத் தடைவிதித்தது. பரஸ்பரம் நன்மை பயக்கும் கொள்கையை இங்கிலாந்து இந்தியாவின்பால் கையாளாதது மட்டுமல்ல: அவர்களின் பொருட்களைப் போன்ற (இந்திய) பொருட்களுக்குத் தனது காலனிக்குச் சாதகமான, இந்தியாவிற்குப் பாதகமான கொள்கையைக் கையாண்டது. இந்த நியாயமற்ற முறைக்கு எதிராக ஒரு பெரும் கிளர்ச்சி நடத்தப்பட்டது[1]. முடிவில், 1842ஆம் ஆண்டு செய்யப்பட்ட

1. இந்திய வாணிபத்தைப் பாதிக்கும் தீர்வைகள் பற்றிக் கிழக்கு இந்திய மாளிகையில் நடந்த விவாதங்கள்; **ஆசியாட்டிக் ஜர்னல் அன் மந்த்லி ரிஜிஸ்டர் பார் பிரிட்டிஷ் அன்ட் பாரின் இந்திய, சைனா, ஆஸ்ட்ரேலியா** (லண்டன், புதிய வெளியீடுகள், தொகுப்பு XXXVII, ஜனவரி தொகுப்பு XXXVIII மே, 1842).

சீர்திருத்த ஏற்றுமதி- இறக்குமதி வரிமுறையின் அடிப்படையில் குறைந்த தீர்வையில் இந்தியப் பொருட்களை சர் ராபர்ட் பீல் அனுமதித்தார். கப்பல் வணிகச் சட்டம் ரத்து செய்யப்பட்டதும் இந்திய வணிகம் விரிவடைவதற்கு மேலும் ஊக்கமளித்தது. இத்துடன் சேர்ந்தே, இந்திய உற்பத்திப் பொருட்களுக்குத் தேவை (demand) அதிகரித்துக் கொண்டிருந்தது. 1854 கிரிமிய யுத்தம் ரஷ்யப் பொருட்களின் வரத்தைத் துண்டித்தது. அந்த இடத்தை இந்தியப் பொருட்கள் பிடித்துக் கொண்டன. 1853இல் ஐரோப்பா முழுவதிலும் பட்டு உற்பத்தி தோல்வியுற்றதால், ஆசிய நாடுகளின் - இந்தியா உட்படப் - பட்டுக்குத் தேவை அங்கு அதிகரித்தது.

இந்த இரு மாற்றங்களும் செலாவணி நிலைமையில் ஏற்படுத்திய தாக்கம் தெளிவானதே. இரண்டும் பணத்திற்கான தேவையை அதிகரித்தன. ஆனால், பெறுவதற்கு மிகவும் கஷ்டமானது பணமே. மிகவும் விலையுயர்ந்த உலோகங்களை எந்தக் கணிசமான அளவிலும் இந்தியா உற்பத்தி செய்யவில்லை. அவற்றை அடைவதற்குத் தன் வாணிபத்தை (இந்தியா) சார்ந்திருக்க வேண்டிய நிலை. ஐரோப்பிய அரசுகளின் வருகைக்குப் பின் மிக விலை உயர்ந்த உலோகங்களை நாடு பெற முடியவில்லை. விலை உயர்ந்த உலோகங்களை ஏற்றுமதி செய்வதற்கு ஐரோப்பாவில் அன்று நிலவிய தடைகளின்[1] காரணமாக, அவற்றைப் பெறுவதற்காக ஒரு மார்க்கம் அடைக்கப்பட்டது. அம்மாதிரித் தடைகள் இல்லாமலிருந்தாலும், இந்த உயர் உலோகங்களை ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்வதற்குச் சந்தர்ப்பம் மிகக் குறைவே. உண்மையில் அந்தத் தடைகள் வாபஸ் பெறப்பட்டபொழுதும்[2] உயர் உலோகங்கள் இந்தியாவிற்கு வரவில்லை. உயர் உலோகங்கள் வருகைக்கான தடைக்கான காரணத்தை, சென்னை சீர்திருத்தக் கமிட்டிக்கு 1799இல் அனுப்பிய தமது குறிப்பில் திரு. பெட்ரி நன்றாகச் சுட்டிக் காட்டினார்.[3] திரு. பெட்ரியின் கூற்றுப்படி, பிரதேசங்களைத் தங்களுடைய தாக்கிக் கொள்ளும்முன் ஐரோப்பியர்கள்,

---

1. இங்கிலாந்து விதித்த தடைகளின் வரலாறு, ரூடிவ், **நாணயங்கள் பற்றிய மதிப்பு வரலாறு,** 3ஆவது பதிப்பு, தொகுப்பு I பக்கம் 353-54, 372, 376, 386-87; தாமஸ் வைலட்டின் : ஸீஸருக்கு வேண்டுகோள், லண்டன், 1660, ப. 26.

1. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதியான உயர் உலோகங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் கீழ்வருமாறு:

1652 - 1703	...	1,131,653 பவுண்டுகள் (பெட்ரியின் குறிப்பிலிருந்து)
1747 - 1795	...	1,159,654 பவுண்டுகள் (")

''இந்தியாவின் உற்பத்திப் பொருட்களை ஐரோப்பிய உலோகங்களைக் கொண்டு வாங்கினர்; அதற்குப் பின்பு இந்தியாவின் தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டு இவற்றை வாங்கினர். வெளிநாட்டுத் தங்கம் - வெள்ளிப் பாளங்களிலிருந்து கிடைத்த வருமானத்தில் பெற்று, இந்திய சுதேசியின் தொழிலுக்கு அவனது நாட்டின் தங்கம், வெள்ளியைக் கொண்டே கொடுத் தனர். வணிகத்தின் கோட்பாட்டில் ஏற்பட்ட இந்தப் புரட்சியின் விளைவு ஆரம்பத்தில் குறைவாகவே உணரப்பட்டது; ஆனால், வளமை நிறைந்த பெரும் பரப்பளவிலான டொமினியன்களை ஆங்கிலேயர்கள் தேடிப்பெற்ற பொழுது, யுத்தத்தில் அடைந்த வெற்றியும், வணிகத்துறையில் இருந்த போட்டியில் கிடைத்த வெற்றியும், மற்ற ஐரோப்பிய நாடுகளின் மீது பெற்ற தீர்மான மான உயர்நிலையும் (Superiority), கிழக்கு நாடுகளுடன் வணிகம் முழுவதிலும் கவர்ந்திழுக்கும் நிலையை ஏற்படுத்திய பொழுது, கிழக்கே உற்பத்தியான பொருட்களாக ஐரோப்பா விற்கு அனுப்பப்பட்ட தொகை ஆண்டுக்குப் பல மில்லியன் கணக்கில் இருந்தது. இந்தப் புரட்சியின் விளைவு இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் கடுமையாக உணரப்பட்டது. மித மிஞ்சிய நீரைக் கொண்டு வரும் ஆற்றோட்டத்தை இழந்ததால், ஆறு அதன் கரைகளிலிருந்து வேகமாக ஓய்வுபெற்று தன் னுடைய அபரிமிதமான நீரால் அடுத்துள்ள நிலங்களை வள மாக்குவதை நிறுத்திக் கொண்டது''.

தடைகள் வாபஸ் பெறப் பட்டபின், உயர் உலோகங்களைப் பெறுவதற்கு இருந்த ஒரே வழி , கப்பத் தொகையை விட அதிகமாகப் பொருட்களை அனுப்புவதுதான்; மீதியுள்ள தொகைக்கு அவற்றை (உலோகங்களை)க் கொண்டு வரலாம். இந்தியப் பொருட்களைக் குறைவான (இறக்குமதி) வரிக்கு பீல் அனுமதித்தபோது இது சாத்திய மானது. தனது வளர்ந்து வந்த தேவைகளுக்குப் போதுமான அளவில் உயர் உலோகங்களை முதலாவதாகப் பெற இந்தியாவால் முடிந்தது. ஆனால், செலாவணியாகச் செயல்பட உயர் உலோகங்களைப் பெறுவதில் ஏற்பட்ட சாதகமான நிலை கொஞ்சகாலமே இருந்தது. என்றாலும், 1850க்கு பின் ஏற்பட்ட கஷ்டங்கள், இந்தியா உயர் உலோ கங்களைப் பெறுவதில் இருந்த எந்தத் தடையினாலுமல்ல. தடைகள் இல்லாததோடு, உயர் உலோகங்களை இறக்குமதி செய்வதும் ஏற்றுமதி செய்வதும் முற்றிலும் சுதந்தரமாக இருந்ததோடு, அவற்றைப் பெறுவதில் இந்தியாவிற்கு இருந்த சக்தி அதேபோல் அதிகமாக இருந்தது. உயர் உலோகங்கள் கிடைக்காததால் ஏற்பட்ட

கஷ்டங்கள் அல்ல அவை. 1850க்கு பின் உயர் உலோகங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு கொஞ்சமாக இல்லை. கஷ்டம் இந்தியாவே ஏற்படுத்திக் கொண்ட தாகும். சுலபமாகப் பெறக்கூடிய அந்த உயர் உலோகங்களை ஆதாரமாகக் கொண்டு அதன் செலாவணி அமையாததால்தான்; இதைச் சுலபமாகச் செய்திருக்க முடியும். 1835ஆம் ஆண்டுச் சட்டம், வெள்ளியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இந்தியாவை வைத்தது. ஆனால் துரதிர்ஷ்டமவசமாக, 1850க்குப் பின் உயர் உலோகங்களின் மொத்த உற்பத்தி பெருகிய போதிலும், உலகத்தின் தேவைகளுக்கு ஏற்ப வெள்ளியின் உற்பத்தி இல்லாமல் இருந்தது; உலகின் மிகப் பெரும்பாலான இடங்கள் வெள்ளியை ஆதாரமாகக் கொண்டிருந்தன. இதன் காரணமாக, வளர்ந்துவரும் வியாபாரம் ஒருபுறம், மறுபுறம் குறுகி வரும் செலாவணி - என்ற ஒரு இக்கட்டான நிலையில் இந்தியாவை அதன் செலாவணிச் சட்டம் வைத்தது; பக்கம் 56ல் உள்ள அட்டவணை IV இதை எடுத்துக்காட்டும்.

நிலைமையைப் பார்த்தால், பண நெருக்கடிக்கு எந்த அவசியமும் இல்லை. வெள்ளியின் இறக்குமதி பெருமளவில் இருந்தது. அதேபோல் அதை நாணயமாக்குவதும் பெருமளவு இருந்தது. அவ்வாறாயின் ஒரு நெருக்கடி ஏன் இருந்திருக்க வேண்டும்? இதற்கு பதில் பெறுவது கஷ்டமானதல்ல. புழக்கத்திலிருந்த அச்சிட்ட வெள்ளி நாணயத்தின் அளவு புழக்கத்தில் நிலை நிறுத்தப்பட்டிருந்தால், இந்த நெருக்கடி தோன்றாமல் இருந்திருக்கலாம். உயர் உலோகங்களை அழுத்தி (sink) வைப்பதில் இந்தியா நீண்ட நாட்களாக மோசமான பெயர் எடுத்திருந்தது. இந்த நிகழ்வை விளக்க திரு. காசல்ஸ் வழங்கிய எச்சரிக்கையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

> ''நாணயமாற்றுச் சாதனம் என்ற முறையில் வாணிபத்தின் தேவைகளை வெள்ளி நாணயங்கள் திருப்திப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வெள்ளித் தட்டாருக்கும் நகை வியாபாரிகளுக்கும் போதுமான வெள்ளியை அளிக்க வேண்டியிருந்தது. நாணயச் சாலையில் கஷ்டப்பட்டு உருக்கி அதிகப் பொறுமையுடனும் திறமையுடனும் ஒருவர் நாணயமாக உற்பத்தி செய்யும்போது, மற்றொருவர் அதை விரைவாக வளையங்களாக வடித்து விடுகிறார்''.[1]

---

[1] [illegible] செலாவணி என்பது பற்றிய கூட்டக் குறிப்பு, 1863 டிசம்பர் 8,

அட்டவணை IV[1]
வாணிகமும் செலாவணியும்

ஆண்டுகள்	வாணிகச் சரக்கு (விற்பனைப் பொருட்கள்) Merchandise		அரும்பொருள் நிகர இறக்குமதி		நாணயங்களின் மொத்தம்		நிகர இறக்குமதியில் நாணயத்தின் மிகை (+) அல்லது குறைபாடு (-)		வருட உற்பத்தி (பவுண்டுகளில்) -00,000 நீக்கப்பட்டுள்ளன	
	இறக்குமதி	ஏற்றுமதி	வெள்ளி	தங்கம்	வெள்ளி	தங்கம்	வெள்ளி	தங்கம்	தங்கம்	வெள்ளி
1850-51	11,558,789	18,164,150	2,117,225	1,153,294	3,557,906	123,717	+ 1,440,681	- 1,029,577	8, 9	7, 8
1851-52	12,240,490	19,879,406	2,865,357	1,267,613	5,170,014	62,553	+ 2,304,657	- 1,205,060	13, 5	8, 0
1852-53	10,070,863	20,464,633	3,605,024	1,172,301	5,902,648	Nil	+ 2,297,624	-1,172,301	36,6	8.1
1853-54	11,122,659	19,295,139	2,305,744	1,061,443	5,888,217	145,679	+3,582,473	- 915,764	31,1	8, 1
1854-55	12,742,671	18,927,222	29,600	731,490	1,890,055	2,676	+ 1,860,455	- 728,814	25,5	8, 1
1855-56	13,943,494	23,038,259	8,194,375	2,506,245	7,322,871	167,863	+ 871,504	-2,338,382	27, 0	8, 1
1856-67	14,194,587	25,338,451	11,073,247	2,091,214	11,220,014	128,302	+146,767	- 1,962,912	29, 5	8, 2
1857-58	15,277,629	27,456,036	12,218,948	2,783,073	12,655,308	43,783	+ 436,360	- 2,739,290	26, 7	8, 1
1858-59	21,728,579	29,862,871	7,728,342	4,426,453	6,641,548	132,273	-1,086,794	-4,294,180	24, 9	8,1
1859-60	24,265,140	27,960,203	11,147,563	4,284,234	10,753,068	64,307	- 394,495	- 4,219,927	25.0	8, 2

★ ''பல்கிரேவின் செலாவணியும் மதிப்பின் தரமும் பற்றிய மகஜரி''ல் உள்ள புள்ளி விவரங்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. வணிகத்திலும் தொழில் உற்பத்தியிலும் தொய்வு (depression) பற்றி ராயல் கமிஷனின் மூன்றாவது அறிக்கையின் Bயின் இணைப்பு - 1886ன் C 4797. காலண்டர் ஆண்டுகளில் தங்கம், வெள்ளி உற்பத்தி பற்றிய விவரங்கள் ஆர். பேர்லேயின் ''வெள்ளிப் பிரச்சினையும் தங்கப் பிரச்சினையும்'' என்பதிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

அட்டவணை IVஇல் கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து, இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளி அனைத்தும் நாணயங்களாக்கப் பட்டுச் செலாவணி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். தொழில்களுக்கோ மக்களின் சமூகத் தேவைகளுக்கோ பயன்படுத்த பாக்கி இருந்தது மிகக் கொஞ்சம் அல்லது எதுவுமில்லாமல் போயிற்று. விஷயம் இவ்வாறு இருக்கும்போது நாணயங்களாக ஆக்கப்பட்ட வெள்ளியின் ஒரு பெரும்பகுதி, நாணய முறைக்குரிய நோக்கங்களுக்கில்லாமல் அவையல்லாத காரியங்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. பண நெருக்கடிக்குக் காரணமான மறைத்து வைக்கப்பட்ட பகுதி எங்குச் சென்றது என்பது புரிந்துகொள்ள முடிகிறது. நாணயம் சார்ந்த நோக்கங்களிலிருந்து நாணயம் சாராத காரியங்களுக்காக ஈர்க்கப்பட்ட செலாவணி வேகம் தான் காரணமாயிற்று என்பது அன்றைய மனிதர்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த ஒன்றாகும். மேலே சொன்ன அதே ஆதாரத்திலிருந்து மேற்கோள், காட்டப்படுகிறது:

> ''ஏராளமான அளவு இறக்குமதிகள் ஆகியிருந்த போதிலும், பணத்திற்கான தேவை இதுவரை அதிகமாகியுள்ளது... புழக்கத்தில் இருக்கும் நாணயம் பஞ்சத்தின் காரணமாக வியாபாரம் அநேகமாக ஸ்தம்பிக்கும் நிலைக்கு வந்துள்ளது. ரூபாய்கள் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு அச்சிட்டு வெளி வருகின்றனவோ, அவ்வளவு வேகமாக அவை உள்நாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டுப் புழக்கத்திலிருந்து மறைந்து விடுகின்றன - சேமிக்கப்படுவதற்கோ அல்லது பட்டரையில் வளையல்களாக மாறுவதற்கோ''[1]

(இந்த நெருக்கடியிலிருந்து மீள) இருந்த ஒரு வழி, பணம் சம்பந்தமான தேவைகளுக்கும் பண சம்பந்தமில்லாத தேவைகள் ஆகிய நாட்டின் இரண்டு தேவைகளுக்கும் போதுமானதாக இருக்க மேற்கொண்டும் அதிகமாக வெள்ளியை இறக்குமதி செய்வதுதான். ஆனால், வெள்ளியின் இறக்குமதி ஏற்கனவே உச்சகட்டத்தில் இருந்ததுபோலும். ஏனெனில் திரு. கேசல்ஸ் வாதித்தபடி:

> ''உலகம் முழுவதிலும் ஒரு ஆண்டு வெள்ளி உற்பத்தி பத்து

மில்லியன் (1 கோடி) ஸ்டெர்லிங்குக்கு அதிகமாக இருக்க வில்லை. உலகம் முழுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட இந்த உலோகத்தை விட அதிகமாகக் கடந்த சில ஆண்டுகளில் இந்தியா ஆண்டுதோறும் எடுத்துக்கொண்டு அதை மிகப் பெரு மளவு உட்கொண்டும் விட்டது. கடுமையான, இக்கட்டான நிலையைத் தோற்றுவிக்காமல் இதை அதிககாலம் தொடர்ந்து செய்ய முடியாது என்பது தெளிவு. ஒன்று ஐரோப்பியச் சந்தைகள் நமக்கு சப்ளை செய்ய முடியாமலோ அல்லது விருப்பமில் லாமலோ போகலாம்: அல்லது வெள்ளியின் மதிப்பு அபரிதமான அளவு உயரலாம். அம்மாதிரி சந்தர்ப்பங்களில், இன்றைய நெருக்கடி தொடர்ந்து ஏற்படும் என்பதை முன்னமேயே ஊகிப்பது கடினமல்ல. நாணயப் புழக்கச் சாதனத்தின் பற்றாக் குறை (பஞ்சம் - Scarcity)யால் நாட்டின் வாணிபம் நிரந்தரமாக இல்லாவிட்டாலும் அவ்வப்போது முடக்கப்படும்''.[1]

கடன் தரும் சாதனம் எதுவும் இருந்திருந்தால், செலாவணியின் சுருங்குதல், அப்பொழுது இருந்ததுபோல் அவ்வளவு கடுமையாக உணரப்பட்டிருக்காது. கடனாகப் பெறக்கூடிய பணம் செல்லக்கூடிய மாதிரி எதுவும் இல்லை. வட்டி தரக்கூடிய கஜானா பத்திரங்களை (notes) சர்க்கார் வெளியிட்டது. அதுவும் புழக்கத்திலிருக்கும் நாட்டின் சாதனமாக ஆகின. இந்த கஜானாப் பத்திரங்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தொகைக்கு இல்லாமல் போனதோடு[2], இந்தப் பத்திரங்கள்

''ஒரு தோல்வியாக நிரூபிக்கப்பட்டன; காரணம் முதலாவதாகத் தீர்வை வருவாய்க்காகப் பன்னிரண்டு மாதங்

1. Report op. cit. பக். 189.

2. பட்டுவாடா செய்யப்படாத கஜானா நோட்டுகளின் தொகை

1850 ஏப்ரல் 30	..	804,988
1851 ஏப்ரல் 30	..	802,036
1852 ஏப்ரல் 30	..	770, 301
1853 ஏப்ரல் 30	..	850, 432
1854 ஏப்ரல் 30	..	850, 627
1855 ஏப்ரல் 30	..	889, 875
1856 ஏப்ரல் 30	..	967, 711

கிழக்கிந்தியக் கம்பெனியின் வருமானம் பற்றிய விவர அறிக்கை. அறிக்கையின் அட்டவணை 2 லிருந்து எடுக்கப்பட்டது. - பார்லிமென்ட் தஸ்தாவேஜுகள் 201, தொகுப்பு VIII 1858.

களுக்கு அவற்றைப் பெறக்கூடாது; இரண்டாவதாக, அவை எங்கு வெளியிடப்படுகிறதோ அந்த இடத்தில்தான் கொடுக்கல், வாங்கல் செய்ய முடியும். எனவே இவ்வாறான வெளியீடு கல்கத்தா, மதராஸ், பம்பாய் ஆகிய இடங்களில் மட்டுமே நடந்தது. அவற்றின் பயன், புழக்கத்தின் நோக்கத்திற்கு அவற்றைப் பயன்படுத்துவது ஆகியவை இந்த நகரங்களில் மட்டுமே நிகழ்ந்தன... கடைசியாக, அவற்றின் தொகை மிக அதிகமாக இருந்தன: வட்டிக்கான காலம் மிகக் குறைவாகவே இருந்தது''.[1]

வாணிகத்தின் தேவைகளைத் திருப்தி செய்யும் அளவுக்கு வங்கித் தொழில் அவ்வளவு விரிவாக வளர்ச்சியடைந்திருக்கவில்லை. டைரக்டர்கள் சபையின் கண்ணோட்டமே அதன் வளர்ச்சிக்கு இருந்த பிரதானத் தடை. நாணயப் பரிமாற்றங்களையே பிரதானமாகக் கவனித்து வந்த வணிக நிறுவனமாகச் சபை இருந்ததால், வங்கி நிறுவனங்களின் வளர்ச்சியில் அவை போட்டியாகிவிடக் கூடாது என்று கருதி அக்கறை கொண்டிருக்கவில்லை; வியாபார ராஜாக்களின் அமைப்பாக இல்லாமல் போனபின்பும், வழிவழிவந்த பழக்கமை உணர்வுக் கொள்கை தொடர்ந்து இருந்ததால், வணிக வளர்ச்சியோடு சேர்ந்து வங்கித் தொழில் வளரவில்லை. 1856ஆம் ஆண்டு வரைக்கும்கூட, இந்தியாவில் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை மிகச் சிலவே; பக்கம் 57ல் அட்டவணை Vஇல் காண்பிக்கப்பட்டுள்ளது போல, அவற்றின் வெளியீடுகளும் (Issues) வெகு குறைவே.

வெள்ளியின் பற்றாக்குறையும் தவணைமுறை (Credit)ச் செலாவணி இல்லாமல் இருந்ததாலும் வணிகத்திற்கு அப்படி ஒரு இக்கட்டான நிலையை ஏற்பட்டதால், 1835 செலாவணிச் சட்டத்தின் பால் நிலவிய கண்ணோட்டத்தில் ஒருமாற்றம் வளர்ந்து வந்தது; இந்த ஒரு தடவையாவது மக்கள் கேள்விகேட்க ஆரம்பித்தனர்; இரட்டை உலோகச் செலாவணி அமைப்பிலிருந்து ஒற்றை உலோகச்

---

1. **இந்தியாவின் நிதிக் கஷ்டங்களை சமாளிப்பது எப்படி**, லண்டன் 1859, பக். 13. இது பலவிக்கில் ஒரு சிறப்பான பிரசுரம்; இந்தியச் செலாவணி, வங்கித் தொழில் பிற்காலச்

அட்டவணை V

இந்தியாவில் வங்கிகள்[1]

வங்கியின் பெயர்	நிறுவப் பட்ட வருடம்	தலைமைச் செயலகம்	கிளைகளும் ஏஜென்சிகளும்	முதல் (Capital) ஒப்பியது (Subscribed) £	முதல் (Capital) செலுத்தியது (Paid up) £	புழக்கத்தில் இருந்த நோட்டுகள் (பவுண்டு) £	கருவூலத்தில் உள்ள காசுகள் £	தள்ளுபடிக்குட்பட்ட உண்டியல்கள் (Bills under discount) (நாணயங்கள்) £
பேங்க் ஆப் பெங்கால்	1809	கல்கத்தா	கல்கத்தா ஆக்ரா, மதராஸ், லாகூர், காண்டன், லண்டன், பம்பாய், சிம்லா, முசௌரி, ஆக்ரா ஏஜென்ஸிகள்: டெல்லியிலும் கான்பூரிலும்	1,070,00	1,070,000	1,714,771	851,964	125,251
பேங்க் ஆப் மதராஸ்	1843	மதராஸ்		300,000	300,000	123,719	139,960	59,871
பேங்க் ஆப் பாம்பே	1840	பம்பாய்		522,000	522,000	571,089	240,073	195,836
ஓரியண்டல் பாங்க்	1851			1,215,000	1,215,000	199,279	1,146,529	2,918,399
ஆக்ரா-யூ.பி வங்கி	1833			700,000	700,000	-	74,362	-
என்.டபுள்யூவங்கி	1844	,,		220,560	220,000	-	-	-
லண்டன் தன்டு ஈஸ்டர்ன்	1854	,,		250,000	220,000	-	-	-
கமர்சியல் பாங்க்			லண்டன், கல்கத்தா, காண்டனில், ஷாங்காயில் ஏஜெண்டுகள்	1,000,000	456,000			
டெல்லிபாங்க்	1854	டெல்லி		-	180,000	-	-	-
சிம்லாபேங்க்	1844		லண்டன், கல்கத்தா, பம்பாய், மதராஸில் ஏஜெண்டுகள்	-	63,500	-	-	-
டாக்கா பேங்க்	1846			30,000	-	-	-	-
மெர்கென்ட் டைல் பேங்க் இந்தியா, சைனா ஆஸ்ட்ரேலியா பாங்க்		பம்பாய்	லண்டன், கல்கத்தா, கொழும்பு, கண்டி, காண்டன், ஷாங்காய்	500,000	328,826	777,156	77,239	109,547
				இன்னமும் வங்கி அலுவல்கள் தொடங்கவில்லை.				

1. ஆர்.எம்.மார்ட்டினின், **இந்திய சாம்ராஜ்யம்**, தொகுப்பு 1, பக்கம் 565.

குறிப்பு: அட்டவணையில் மூலப்பிரதி தேதிகளைக் குறிப்பிடவில்லை; உள்ளே உள்ள ஆதாரங்கள், அது, சுமார் 1856 என்று காட்டுகின்றன

செலாவணியாக மாறியது சரியென்றாலும், ஒற்றை உலோக வெள்ளிச் செலாவணிக்குப் பதிலாக ஒற்றைத் தங்கச் செலாவணிக்கு முன்னுரிமை கொடுத்திருந்தால் மேலும் நன்றாக இருந்திருக்காதா என்று கேட்டனர். மேலும் மேலும் அதிகமாகத் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுக் காசுகள் அடிக்கப்பட்டன; அதற்கு அன்றுநிலவிய இந்தியச் செலாவணி[1] அமைப்பில் சட்ட ரீதியான அந்தஸ்து வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அவ்வளவு பலமாக வளர்ந்தது. ஒரு தங்கச் செலாவணி என்ற கோட்பாட்டில் எல்லோருக்கும் உடன்பாடு இருந்தது; ஏதாவது கருத்து வேறுபாடு இருந்திருந்தால், அதைக் கொண்டு வருவதன் முறையைப் பற்றித்தான். தங்கத்தை இரட்டை உலோக அடிப்படையில் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. ஏனெனில், தங்கத்திற்கும் வெள்ளிக்கும் மதிப்பை நிர்ணயித்து அந்தமதிப்பை ஒப்புக்கொள்வதைக் கட்டாயப்படுத்துவது என்பது 'பயனற்ற முயற்சி' என்று கருதியதால் அதை ஏற்றுக்கொள்ள சர்க்கார் மறுத்தது.[2] சர்க்கார் பரிசீலிக்க[3] ஒத்துக்கொண்ட திட்டங்கள் (Projects) வருமாறு: 1. சவரன்,'' அல்லது வேறு எந்தத் தங்க நாணயத்தை அறிமுகப்படுத்தி, வெள்ளி விஷயத்தில் போலவே, அந்தந்த நாளில் நிலவும் அதன் மார்க்கெட் மதிப்பில் புழக்கத்தில் விடுவது; 2. எவ்வளவு ரூபாய்க்கு சமம் என்று பொறிக்கப்பட்ட ஒரு புதிய தங்க நாணயத்தை வெளியிட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சட்டப்படியான நாணயமாற்றுச் சாதனமாக ஆக்குவது; அந்தக் காலத்திற்குபின் அது சரிசெய்யப்பட்டு (readjust) அதன் மதிப்பை மீண்டும் நிர்ணயித்துப் புதிய விகிதத்தில் (விலையில்) அதேமாதிரியான காலத்திற்குச் சட்ட ரூப நாணய மாற்றுச் சாதனமாக ஆக்குவது; 3.ஆங்கில சவரனை, ரூ 10 மதிப்புக்கான சட்டப்படியான செலாவணிமாற்றுச் சாதனமாக்குவது; ரூ. 20 அல்லது 2 சவரன் தொகைக்கான சாதனமாக வரம்பை ஏற்படுத்திக் கொள்வது 4. வெள்ளி நாணய மதிப்பிற்குப் பதிலாக ஒரு தங்க நாணய மதிப்பாக ஏற்றுக்கொள்வது.

---

1. 1859 ஏப்ரலில் கல்கத்தாவின் ஷெராப்புகளாலும் வியாபாரிகளாலும் முதலாவதாக இந்த விஷயம் எழுப்பப்பட்டது. வங்காள வர்த்தகசபையின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில், இந்தியாவில் தங்கச் செலாவணி அவசியம் குறித்து சர்க்காரை வற்புறுத்துவதென இருவரும் ஒப்புக்கொண்டனர். (**இந்தியாவில் ஒரு தங்கச் செலாவணியைக் கொண்டு வருவது சம்பந்தமான தஸ்தாவேஜுகள்**, கல்கத்தா, 1866, பக்கம் 1-3).

2. முன்சொன்னது ; பக்.6.

இந்தத் திட்டங்களில் முதல் மூன்று திட்டங்களும் செலாவணிச் செலவினங்கள் (cash dividents) என்ற முறையில் பாதுகாப்பானது அல்ல என்பது தெளிவு. செலாவணியின் பல்வேறு பாகங்களுக்கிடையே உள்ள மதிப்பை நிர்ணயிப்பது, நன்குமுறைப் படுத்தப்பட்ட பணஅமைப்புக்கு ஒரு அத்தியாவசியான முன்தேவை. ஒவ்வொரு காசிலும் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும் - மிகவும் விவரம் தெரியாத அறிவாளியும் மற்ற நாணயங்களுக்கு மாற்றக் கூடியதாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் அது ஆகிவிட்டால், அது ஒரு பண்டமாக மட்டுமே ஆகிவிடுகிறது; அதன்மதிப்பு சந்தையிலுள்ள ஏற்றஇறக்கத்திற்கு ஏற்ப மாறும். இந்த அடிப்படைச் சோதனை முதல் இரண்டு திட்டங் களையும் சாத்தியமற்றதாக்கி விடுகிறது. அதன்மதிப்பு நாளுக்குநாள் என்ன என்பதைஉறுதிசொல்லமுடியாத ஒருகாசை மதிப்பின் ஏற்ற இறக்கங்களைத் தெரிந்து கணிப்பதுதான் என்ற கஷ்டத்துடன் கூடவே அறிமுகப்படுத்துவது சர்க்காருக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியிருக்கும். முதல் திட்டத்தின் விளைவு இதுவாகத்தான் இருந்திருக்கும். அதை ஏற்றுக்கொள்ளாதது சர்க்காரின் புத்திசாலித் தனமான செயல் என்று நிச்சயம் கூறமுடியும். முதலாவது திட்டத் திற்குப் பதிலாக 2ஆவது திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி சிபாரிசு செய்திருந்தால், அதில் எந்த நன்மை யும் ஏற்பட்டிருக்காது. அதை ஏற்றுக்கொண்டிருந்தால், (தங்கத்தின் நிர்ணயித்த விகிதம் ஒரே அளவாக இருந்த காலத்தில் தங்கம் புழக்கத்திற்கு வரும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருந்த அதன் மதிப்பு குறைவாக இருந்தது என்று வைத்துக்கொண்டால்) வருடக் கடைசி யில், விகிதம் மாற்ற மடைந்திருக்கும் என்பதும் காசின் மதிப்பு தங்கத்தின் வீழ்ச்சிக்கு ஏற்ப குறைக்கப்படும் என்றும் தெரிந்திருந்தால், அதிகமாக மதிப்பு தரப்பட்டிருந்த தங்கக்காசுகளை கை (கழுவி) விடுவதற்கும் தவிர்க்க முடியாத நஷ்டத்தை மற்றவர்களின் தோள் களுக்கு மாற்றுவதற்கும் போராட்டம் நிச்சயமாக நடந்திருக்கும். மூன்றாவது ஆலோசனை ஒரு மாதிரி விசித்திரமானது. (கைமாறு)விலை குறைவான உலோகத்தில், சிறிய தொகைகளுக்குக் கொடுக்கக்கூடிய, அதன்மதிப்புக்குக் குறைந்த தொகைகளுக்குக் காசுகள் அடிப்பதும் அவற்றின் நாணயப்பரிமாற்றத்தை மட்டுப்படுத்துவதும் சாத்தியமே. ஆனால், உயர்வான விலை வைக்கப் பட்ட உலோகத்தால் பெரிய அளவிலான பேரங்களுக்கு இது சாத்தியமல்ல. இந்தத் திட்டத்திற்கு எதிரான ஆட்சேபணைகளை மறைக்க முடியாது. தங்கம் குறைந்த

மதிப்பில் வைக்கப்பட்டால், அது புழக்கத்தில் இருக்காது. பெரிய அளவிலான பேரங்களைச் சமாளிப்பதில் உதவாத ஒரு நாணயத்தைக் கடைக்காரர்களும் வியாபாரிகளும் வைத்திருப்பார்கள்.

இந்தக் குறைபாடுகள் இல்லாத ஒரே திட்டம் தங்க நாணய(மதிப்பை)த் திட்டத்தை, வெள்ளியை உபசெலாவணியாகக் கொண்டு, அமலுக்குக் கொண்டு வருவதுதான். இக் கோரிக்கைக்கு எதிராக சர்க்கார் முன்வைக்கக்கூடிய பலமான வாதம், ''வெள்ளியில் கொடுக்கப்படவேண்டும் என்று பேசி ஒப்புக் கொள்ளப்படும் அடிப் படையில் எல்லாப் பேரங்களும் செய்யயப்படும் ஒரு நாட்டில், வேறு ஒரு (உலோக) நாணயத்தில் கொடுக்க வேண்டு மென்று சட்டம்மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டால், கடன் பெற்றவருக்குச் சாதக மாகவும் கடன் கொடுத்தவரை ஏமாற்றுவதுமாகாதா? மக்களிடையே நிலவும் நம்பிக்கையை உடைத்தெறிவதாகாதா?''. இந்த வாதம் எவ்வளவு நியாயமானதாக இருந்தாலும், இந்தியச் செலாவணியை, விரிவாகிவரும் அடிப்படையில் வைக்கவேண்டும் என்று வளர்ந்து வரும் கோரிக்கையைத் தீர்ப்பதற்கு இது மிகவும் போதாது; தங்கச் செலாவணிக்குத் தனது எதிர்ப்பை உண்மையிலேயே அக்கறையுடன் சர்க்கார் தெரிவித்தது எனக்கூறமுடியாது. அதன் எதிர்ப்பிற்கு பலம் சேர்க்கத் தனது வாதங்களின் நியாயத்தைச் சார்ந்திருக்கவில்லை; தங்கச் செலாவணியைக் காட்டிலும் ஒரு நல்ல தீர்வு கையிலிருக்கிறது என்று அது கண்டுபிடித்ததால்தான். அன்றுநிலவிய செலாவணிக்கு ஒரு துணைஏற்பாடு (Supplement) செய்வதுதான் விரும்பப்படுவது என்றால் சர்க்கார் முன்வைத்த பரிகாரத்தைக் குறைகூறமுடியாது. தங்கம் வந்தால் சிக்கனமற்றதாகவும் சௌகரியமற்றதாகவும் இருக்கும். காகித நாணயத்தின் பக்கபலத்தோடு வெள்ளிச் செலா வணியைச் சிக்கனமானதாகவும் சௌகரியமானதாகவும் விரிவடையக் கூடியதாகவும் ஆக்கும். அதிகாரபூர்வமான மாற்றுத் திட்டத்திற்குச் சாதகமான அம்சங்கள் அவ்வளவு அதிகம் இருப்பதால், வெள்ளி நாணயத் திட்டத்திற்கு எதிரான முதல் முயற்சியின் விளைவாய்த் தங்க நாணயத் திட்டம் கொண்டு வரப்படவில்லை. மாறாக, அன்றிருந்த வெள்ளி நாணய அமைப்பிற்கு உதவியாக சர்க்காரின் காகித நாணயத்தைக் கொண்டு வந்தது.

இருந்தபோதிலும், ஒரு தங்க நாணய அமைப்பிற்கான ஆசை

புறக்கணிக்கமுடியவில்லை; மாற்று ஏற்பாட்டினால் அது நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், முதலாவதாகத் திரு. வில்சனால் முதலில் சிந்திக்கப்பட்ட காகித நாணயம், தங்கத்திற்கான கிளர்ச்சிக்கு எதிர்த்தாக்குதலாயிற்று. அவர் கருத்திலிருந்து மாறுபட்ட திரு.லியாவ் இந்தியச் செலாவணியிலிருந்து தங்கத்தை ஒதுக்குவது ''காட்டுமிராண்டித்தனமானது'' (Barbarous) என்று கருதினார். வில்சனின் அகாலமரணத்தின் காரணமாக, மசோதவை வழிநடத்தும் பொறுப்பு அவர் பொறுப்பில் வந்தது; மூல மசோதாவில் இருமுக்கிய ஷரத்துகளை அவர் சேர்த்தார். அதில் ஒன்று, காகித நாணயத்தின் குறைந்தபட்சத் தொகையை 5 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்கு உயர்த்தியது. மற்றொன்று,

> ''கவுன்சிலின் கவர்னர் - ஜெனரல் அவ்வப்போது, கல்கத்தா, மதராஸ், பம்பாய் கெஜட்டுகளில் பிரசுரிக்கப்படும் பிரகடனத்தின் மூலம் பின்கண்ட உத்தரவைப் பிறப்பிக்க அதிகாரமளிப்பது: மொத்தம் தங்கம் வெள்ளி நாணயங்கள் பாளங்கள் வெளியிடும் அளவிலிருந்து, நான்கில் ஒருபங்கு காகிதநாணயம், தங்க காசுகளுக்கு அல்லது பாளங்களுக்கு நாணயபரிமாற்றம் செய்துகொள்வதற்காக வெளியிடுவது; அந்த உத்தரவில் நிர்ணயிக்கப்படும் விகிதத்திற்குத் தங்க, வெள்ளி நாணயங்களுக்கு நாணய மாற்றாக அவை இருக்கும்''

என்பது.

அந்த மசோதா சட்டமாக்கப்பட்டபொழுது இரண்டாவது காப்பு(ஷரத்து) வாசகம் (Proviso) முழுமையாக நிறைவேற்றப்பட்டது; முதல் வாசகத்தைப் பொறுத்தவரை மிகக் குறைந்ததாக ரூ.10/- ரூபாய்க்கு (நோட்டுகள்) காகித நாணயங்கள் வெளியிடப்பட வேண்டுமென்ற மாற்றத்தோடு நிறைவேறியது. அதன் பொதுவான நோக்கம் தெளிவாக இருந்தாலும், அதிகாரபூர்வமான தஸ்தாவேஜிகளிலிருந்து பார்த்தால் 2ஆவது வாசகத்தின் நோக்கம் தெளிவாக இல்லை. காகிதச்செலாவணி மசோதாவிற்கான தேர்வுக்குழு (Selection committee) இந்த வாசகம் நல்லதாக இல்லாவிட்டாலும், தீங்கற்றது என்று கருதியது:

> ''விசேஷ சந்தர்ப்பங்களின்போதும், குறிப்பிட்ட பேரங்களிலும், ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் (Rate) பணமாகத் தங்கம் கிடைக்கும்படி செய்யலாம் என்று தெரிந்து, அது தங்களுக்கு

பெரிதும் சாதகமானது என்று வணிகசமுதாயம் நினைக்கலாம். மறுபக்கத்தில் விலை (விகிதம்) நிர்ணயிக்கப்பட்ட தங்கம் புழக்கத்திற்கு வரவில்லை யெனில், பரிமாற்றம் செய்யக்கூடிய உத்திரவாதம் உள்ள காகித நோட்டுகளுடன் சேர்ந்துவெள்ளி முழுநம்பிக்கை அளித்து, வணிகத்திற்கும் மற்ற சமுதாயத் தினருக்கும் தேவைப்பட்ட எல்லாவற்றையும் பூர்த்திசெய்தது என்று நிரூபணமாகவிடும். அந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கும்; அதுமுற்றிலும் தீங்கற்றதாகவும் இருக்கும்.''

ஆனால், தங்க நாணய முறைக்கு மாற்றுவதற்கு அது ஒரு சுலபமான சாதனமாக திரு.லியாவ் பார்த்தார் என்பதில் சந்தேக மில்லை. 1862 மே 7ஆம் தேதிய தமது கூட்டக்குறிப்பில் (minutes) அவர் எழுதினார்:

''இந்த வாசகத்தின் (ஷரத்தின்) நோக்கம் என்ன வெனில், எதிர்காலத்தில் தங்கத்தின் உபயோகத்திற்கு ஜாக் கிரதையான, பரீஷார்த்தமான சோதனைக்கு வழியைத் திறந்து வைப்பதுதான். தங்கத்தின் இறக்குமதி ஏற்கனவே இருக்கிறது, அதிகரித்தும் வருகிறது; சுதேசி மக்களால் இந்த உலோகம் உயர்வாக மதிக்கப் படுகிறது; உயர்செலாவணியாக மாற்றக் கூடிய சக்திபடைத்தது என்று கருதுகிறார்கள். இவ்வாறாக, ஒரு காலத்திற்குப்பின், தங்கத்தின் உபயோகம் பொதுவாக அதிகரித்தால், அதன் மதிப்பு உயர்வாக நிர்ணயிக்கப்பட்டால், மேற்கொண்டு சில நடவடிக்கை கள் எடுக்கப்படலாம்''.[1]

இதுதான் இந்தியத்துறை அமைச்சரின் கருத்தாக அப்பொழுது இருந்தது; காகித நோட்டுக்களைத் தங்கத்திற்கு எதிராக வெளியிடு வதற்குச் சாதகமான சிபாரிசின் பலத்தை உணர்ந்திருந்தார். ''இந்தியா வில் தங்கச் செலாவணியைக் கொண்டு வருவதற்கு இதுபயனுள்ள முறையில் உதவும்'' என்றும் கருதினார். வணிக சமுதாயத்திற்கு உதவு வதற்காக என்றோ, தங்க நாணயச் செலாவணியைக் கொண்டு வரு வதற்கான வழியென்றோ இந்த வாசகம் சேர்க்கப்பட்டாலும், அது அமல் நடத்தப்படவில்லை. இந்தியத்துறைஅமைச்சர் இதுபற்றி[2] எந்த நடவடிக்கையையும் எடுப்பதை ஆட்சேபித்தார். இதற்கிடையில்

1. இந்தியாவிற்கான செயலாளர் / அமைச்சர் (Secretary of State) அனுப்பிய குறிப்புகள். பாரா 59, எண். 158; தேதி: 16, செப்டம்பர், 1862.

காகித நாணயம் எதிர்பார்த்தபடி சர்வரோக நிவாரணியாக ஆக வில்லை. எந்த அளவுக்கு அது வியாபித்தது, பொருளாதாரத்தில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை ஒப்புநோக்கிப் பார்த்தால் அது குறிப்பிடும்படியாக இல்லை.

அட்டவணை VI

காகித நாணயத்தின் அளவும் பொருளாதாரமும்

மாகாணங்கள்	புல்லியன் (Bullion)	நாணயங்கள் (காசுகள்)	சர்க்கார் பத்திரங்கள் (Securities)	புழக்கத்திலிருந்த நோட்டுக்களின் மதிப்பு
கல்கத்தா, 1863	..	1,84,55,962	1,10,44,078	2,95,00,000
அக்டோபர் 31இல் மதராஸ் 1863	..	73,00,000	..	73,00,000
அக்டோபர் 31இல் பம்பாய் 1864	1,17,00,000	1,19,00,000	..	2,36,00,000
ஜனவரி 4ல்				
மொத்தம்	1,17,00,000	3,76,55,922	1,10,44,078	6,04,00,000

கேஸல்ஸ் சுட்டிக்காட்டியபடி,[1] காகித நாணயங்கள், மூன்று ஆண்டுகளுக்குப்பின், மொத்தஉலோக நாணயங்களில் அப்பொழுது திரு.வில்சன் கணக்குப்படி 100,000,000 ஸ்டெர்லிங்காக இருந்தது. 6 சதவிகிதமே எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. மீண்டும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் முதலீட்டை (Capital) விடுவிக்கவேண்டுமென்ற அந்தப் பிரிவின் (ஷரத்தின் Proviso) குறிக்கோளில் 1 மில்லியன் ஸ்டெர்லிங்குகளே அதாவது மொத்தத்தில் 1 சதவிகிதமே விடுவிக்க வேண்டு மென்ற குறிக்கோளை அவை உண்மையில் நிறைவேற்றின. அமெரிக்கப் பருத்திக்குப் பதிலாக லிவர்பூல் சந்தையில் இந்தியப் பருத்திக்குத் தேவை (Demand) ஏற்பட்டதால், உள்நாட்டு யுத்தத் தின் போது அமெரிக்காவின் ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. வளர்ந்து வந்த வெளிநாட்டு வணிகம் (ஏராளமான) அபரிமிதமான விகிதத்தில்

1. பம்பாய் சர்க்காருக்கு அவர் 1864 ஜனவரி 1ஆம் தேதி எழுதிய கடிதம் இந்தியாவில் தங்கத்தின் அறிமுகம் பற்றிய ஆவணங்களைக் காண்க, பக்கங்கள் 51-69.

பெருகியது. காகித நாணயங்கள் எந்த உதவியும் செய்யாததால், முழுபளுவும் வெள்ளியின் மேல் விழுந்தது. வெள்ளியின் உற்பத்தி முன்புபோல் அதிக வேகமாக உயரவில்லை; அதை இந்தியா ஈர்த்துக் கொள்வது குறையவில்லை. நாணயமாற்றுச் சாதனத்தின் பற்றாக் குறை (Inadequacy), காகித நாணயம் வழக்கத்திற்குக் கொண்டு வரப் பட்டிருந்தபோதிலும், முன் போலவே கடுமையாக உணரப்பட்டது. தங்கம் அதிகமான அளவு இறக்குமதி செய்யப்பட்டது மட்டுமல் லாமல், பண (நாணய) நோக்கங்களுக்காக அது சட்டப்பூர்வமான நாணயமாற்றுச் சாதனமாக இல்லாமல் இருந்தாலும், பயன்படுத்தப் பட்டது. பம்பாய் வர்த்தகச் சங்கத்தால் இந்த உண்மை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.[1] தங்க நாணயச் செலாவணி யைக் கொண்டு வரவேண்டுமென்று அந்தச் சங்கம் சமர்ப்பித்த மகஜர் வேண்டிக்கொண்டது.

''இன்று நடைமுறையில் உள்ள வெள்ளிச் செலாவணியிலுள்ள குறைபாடுகளுக்கு மூர்க்கமான பரிகாரமாக (but the natives of the country)[1] தங்க வார்ப்பான (ingot) செலாவணியை ஏற்படுத்த வேண்டு மென்றபோக்கு வளர்ந்து வருகிறது'' என்றும், ''பம்பாய் வங்கிகளின் முத்திரையிட்ட தங்கப்பாளங்கள் இந்த நோக்கத்திற்காக நாட்டின் பல பாகங்களில் வினியோகிக்கப்படுகின்றன'' என்றும் அந்த மகஜர் குறிப்பிட்டது.

காகித நாணயச் சட்டத்தின் ஷரத்தை[2] அமல் நடத்தும்படி சர்க்காரைக் கோரும் கிளர்ச்சிக்கு இட்டுச்சென்றது. அந்தஇயக்கம் பிரமாதமான வீச்சைப் பெற்று சர்க்காரை நிர்ப்பந்தத்திற்குள்ளாக் கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற் கான திட்டம் துணிச்சலுடன் தீட்டப்பட்டது. எந்த ஷரத்தின்மீது சர்க்கார் செயல்பட வேண்டும் என்று கோரப்படுகிறதோ அதன் பலஹீனமான அம்சத்தை சர் சார்லஸ் டிரிவெலியன் கண்டறிந்தார். காகித நாணயத்திற்கு அமலிலிருக்கும் நாட்டின் காசுகளிலேயே கொடுக்கவேண்டும். அப்பொழுது அது வெள்ளி ரூபாய் - என்று வாதித்தார்;

---

1. பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸின் (Chamber of Commerce) அறிக்கை, 1863-64, App,1 பக்கம் 206.

2. இந்த சமயத்தில் எல்லா வர்த்தகசங்கங்களாலும் வங்காளம், பம்பாய், மதராஸ்- சர்க்கார் மகஜர்கள் சமர்ப்பித்தன. பம்பாய் சங்கத்தாலும் மான்செஸ்டர் வர்த்தகர் சங்கத்தாலும் நடவடிக்கை வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. அந்த இயக்கம் பம்பாய் சர்க்காரின் மிகப் பலமான ஆதரவைப் பெற்றது. குறிப்பாக சர் வில்லியம் மேன்ஸ்பீல்டின்

அட்டவணை VII[1]
வியாபாரமும் செலாவணியும்

ஆண்டுகள்	வாணிகச் சரக்குகள்		அரும்பொருட்கள்		மொத்த நாணயங்கள்		மிகை(+) குறை(-) நிகர இறக்குமதியில் நாணயங்கள்		ஆண்டு உற்பத்தியில் (00.000 நீக்கப்பட்டுள்ளன)	
	இறக்குமதி £	ஏற்றுமதி £	நிகர இறக்குமதி வெள்ளி £	நிகர இறக்குமதி தங்கம் £	வெள்ளி £	தங்கம் £	வெள்ளி £	தங்கம் £	தங்கம் £	வெள்ளி £
1860-61	23,493,716	32,970,605	5,328,009	4,232,569	5,207,150	65,038	-30,859	-4,167,531	23,9	8,2
1861-62	22,320,432	36,317,042	9,086,456	5,184,425	7,40,030	58,667	-1,616,426	-5,125,758	22,8	8,5
1862-63	22,632,384	47,859,645	12,550,155	6,848,156	9,355,405	130,666	-3,194,750	-6,717,490	21,6	9,0
1863-64	27,145,590	65,625,449	12,796,717	8,898,300	11,556,720	54,354	-1,239,997	-8,843,952	21,4	9,8
1864-65	28,150,923	68,027,016	10,078,798	9,839,964	10,911,322	95,672	+832,524	-9,744,292	22,6	10,3
1865-66	29,599,228	65,491,123	18,668,673	5,724,476	14,639,353	17,665	-4,029,320	-5,706,811	24,0	10,4
1866-67	29,038,715	41,859,994	6,963,073	3,842,328	6,183,113	27,725	-779,960	-3,814,603	24,2	10,1
1867-68	35,705,783	50,874,056	5,593,961	4,609,466	4,385,080	21,534	-1,208,881	-4,587,932	22,8	10,8
1868-69	35,990,142	53,062,165	8,601,022	5,159,352	4,269,305	25,156	-4,331,717	-5,134,196	22,0	10,0
1869-70	32,927,520	52,471,376	7,320,337	5,592,016	7,510,480	78,510	+190,143	-5,513,506	21,2	9,5

1. அட்டவணை IVக்கு ஆதாரமானவற்றிலிருந்து எடுக்கப்பட்டது.

காகித நாணயங்களுக்குப் பிரதியாகக் கொடுக்க முடியாத ரிசர்வ் தங்கத்தின் ஒரு பகுதியைப் பிடித்து வைத்துக்கொண்டால், அரசியல் நம்பிக்கை இன்மை அல்லது வாணிபத்தில் பீதி ஏற்படும் காலங்களில் அதை மாற்றமுடியாத அபாயத்தை ஏற்படுத்தும் என்றார். அதனால், கிளர்ச்சியின் நோக்கங்களுக்கு அப்பால் சென்றார்; இந்தியச் செலாவணி அமைப்பில் தங்கத்தைப் பின்கதவு வழியாக அனுமதிப்பதற்குப் பதிலாக, அது இந்தியாவின் நாணயமதிப்பாக ஆக்கப்பட வேண்டும் என்று கூறினார். வெள்ளி நாணய அமைப்பிற்குப் பதிலாகத் தங்க நாணய அமைப்பைக் கொண்டு வந்தால், அது ''கடன் கொடுத்தவர்களின் நம்பிக்கையை உடைப்பதாகும்'' என்று திரு.வில்சன் கூறியதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. வெள்ளிச் செலாவணிக்கு[1] துணைப்பாத்திரம் கொடுக்கப்படுவதற்குமுன், தங்கத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்துவது, இப்போதைக்கு ஒரு இரட்டை-நாணயத்தை ஏற்படுத்தும் என்ற வாதத்தால், அவர் தளர்ச்சியடையவில்லை. எல்லா நாடுகளிலும் இரட்டை-நாணய அமைப்பு என்ற இடைக் காலத்தை, ஒற்றை உலோக நாணய அமைப்பை ஏற்படுத்தும் போது, கடந்துதான் ஆகவேண்டும்'' என்று வாதித்தார். அதற்கு ஏற்ப 1) பிரிட்டனின் அல்லது ஆஸ்திரேலியாவின் சவரன்களும் அரைச் சவரன்களும், சவரனுக்கு 10 ரூபாய்வீதம் இந்தியாவில் சட்டபூர்வ நாணயமாற்றுச் சாதனமாக இருக்கவேண்டும். 2) சர்க்காரின் காகித நோட்டுகள் ரூபாய்களுக்கோ அல்லது ஒரு சவரன் ரூ.10 என்ற விகிதத்தில் நாணய பரிமாற்றம் செய்யக்கூடியதாகவோ இருக்க வேண்டும்; ஆனால், அவை பொன், வெள்ளிக் கட்டிகளுக்கு நாணயப் பரிமாற்றம் செய்யக்கூடாது என்று ஆலோசனை தந்தார்.

அவருடைய ஆலோசனைகள் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன; இந்தியா விவகார மந்திரி (Secretary of State of India) அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.[2] ஒற்றை உலோக நாணய

---

1. 1864 ஜூன் 20 தேதிய அவரது குறிப்புகளிலிருந்து ''இந்தியாவில் தங்கம் பற்றி'' பக்கம் 147.

காகித நாணயச் சேம ஒதுக்கீட்டில்கூட வெள்ளிப் பாளங்களை வைத்திருப்பதையும்கூட அவர் எதிர்த்தார்; ஏனெனில், வெள்ளியை நாணயங்களாக அடித்துவைக்க செலாவணித்துறை நிர்ப்பந்திக்கப்படும். அன்றுள்ள இந்திய நாணயச்சாலைகளின் உற்பத்தி அளவுகுறிப்பிட்ட நிலையில் இருந்ததால் அதிக காலம் எடுத்துக்கொள்ளும் - காகித நாணயங்களுக்கு ஷேரினால் காசுகளில் கொடுக்கவேண்டிய நிலையில் இருந்ததால் காகிதச் செலாவணி வெளியேறுவதைச் சமாளிக்க வேண்டிய சிரமம் இருக்கிறது; காசுகளில் அதற்குப்

வேண்டுமென்று வர்த்தக சபை வலியுறுத்தியது. ஆனால் '' தங்கத்திற்கு பதிலாகக் காகிதச் செலாவணி, உயர் உலோகங்கள் - இரண்டில் எதையும்விட வசதியான, ஏற்றுக்கொள்ளக்கூடிய நாணயமாற்று சாதனமாக இருக்கும் என்று எதிர்பார்த்து'', அதைக் கொண்டு வந்ததாக சர்க்கார் கருதியது.[1]

''காகித நாணயத்திற்கு மாற்றாகவோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ தங்கத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்முன், நாட்டின் தேவைகளுக்கும் பழக்கங்களுக்கும் போதுமான சாதனமாகக் காகித நாணயம் நிரூபிக்கவில்லை அல்லது நிரூபிக்கமுடியாது என்பதை எடுத்துக்காட்டவேண்டும்''

எனவே, ''1861ஆம் ஆண்டுசட்டம் XIX கீழ் அமைக்கப்பட்ட இன்றைய செலாவணி ஏற்பாடுகளின் செயல்பாடுகளை'' விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. ''வெள்ளியோடு கூடுதலாகத் தங்கத்தைச் சட்டபூர்வமான நாணயமாற்றுச் சாதனமாக கொண்டு வருவது சூழ்நிலைக்குத் தகுதி வாய்ந்ததாக இருக்குமா என்பதையும் அதன் சாதகங்கள் எவையாக இருக்கக்கூடும்'' என்பதையும் கமிஷன் விசாரித்துச் சொல்லவேண்டும்.[2] பல்வேறு விரிவான பரிசீலனைக்குப் பின் பல்வேறு காரணங்களால் காகித நாணயம், நாணயமாற்றுச் சாதனமாகத் விரிவான பரிசீலனைக்குப் பின் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் தவறியது என்றும், ஆனால், தங்கம் மக்களின் பேரங்களில் அதிகமான இடத்தைப் பெற்று வருகிறது என்ற முடிவுக்கு கமிஷன் வந்தது.[3] ''இந்தியாவின் செலாவணி முறையின் பாகமாகத் தங்கத்தை சட்டபூர்வ நாணயபரிமாற்று சாதனமாக ஆக்கும்படி'' கமிஷன் சர்க்காரை வற்புறுத்தியது. இப்பொழுதும் இந்த சிபாரிசை நிறைவேற்றும் பொறுப்பு சர்க்காரிடம் இருந்தது. ஆனால் விசித்திரம் என்னவெனில், தான் நியமித்த கமிஷனின் சிபாரிசை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அதுசெல்லவில்லை. கமிஷன் சிபாரிசு செய்தபடி தங்கத்தை சட்டபூர்வ நாணயமாற்றுச் சாதனமாக ஆக்குவதற்குப்பதில், சர்க்கார் எடுத்த ஒரே நடவடிக்கை 1868 அக்டோபர் 28ஆம் தேதி மற்றுமொரு அறிவிப்பை வெளியிட்டதுதான்: ஒருதலைப்பட்சமான நடவடிக்கையில் எழும், தீங்கான விளைவைத் தவிர்ப்பதற்காக வேறு எதும் செய்யாமல், தங்கத்தின் விகிதத்தை ரூ. 10-8 ஆக மாற்றியது அந்த அறிவிப்பு. சர்க்காருக்கு அதிர்ஷ்டவசமாக, விகிதத்தில் செய்யப்பட்ட

---

1. ''இந்தியாவுக்குத் தங்கச் செலாவணி'' பற்றி சர் வில்லியம் மேன்ஸ் பீல்ட் குறிப்பின் அட்டவணை A H.C. Return 79 of 1865.

2. நிதி இலாக்காவின் பிப்ரவரி 3, 1866, தேதி தீர்மானம்; அறிவிப்பு 592ன் கீழ் போர்ட் வில்லியம் கெஜட்டில் வெளிவந்தது.

3. கமிஷனின் அறிக்கைக்கு, H of C Return 148 of 1868 காண்க.

இந்தத் திருத்தமும் நாட்டின் புழக்கத்தில் தங்கம் பெருக்கெடுத்து வருவதை ஊக்குவிக்கவில்லை. இதற்குள் செலாவணிக் கஷ்டங்கள் குறைந்தன; சர்க்கார்மீது எந்தப் புதுநிர்ப்பந்தமும் ஏற்படவில்லை; தங்கத்தை இந்தியாவுக்குள் அறிமுகப்படுத்த சர்க்கார் மேற்கொண்ட கடைசி இருமுயற்சிகளும் வெற்றிபெறவில்லை என்பதை இது நிரூபிக்கிறது.

அந்தச் சமயத்துக்கு, இயல்பான வளர்ச்சிப்போக்குகளால் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டது. ஆனால் பிந்திய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டியதுபோல், தங்கநாணயத் திட்டம் இந்தியாவுக்கு மேலானதாக இருந்திருக்கும்[1]; ஐரோப்பாவின் நலன்களுக்காக வரவேற்கப்பட்டிருக்கும்[2] அப்பொழுது தங்கம் அளவுக்கு அதிகமாக இருந்ததால், அதிக விலை உயர்வால் ஐரோப்பா கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், இந்திய சர்க்கார் உண்மையில் வழிகளின் சந்திப்பில் இருந்தது ; மாற்றம் வேண்டு மென்ற சக்திகள் பக்கம் சேர்ந்து, வெள்ளிச் செலாவணி முறைக்குப் பதிலாகத் தங்கச் செலாவணி முறையைக் கொண்டு வந்திருந்தால் - அதை மிகச் சுலபமாகச் செய்திருக்க முடியும் - அதன் மீதும், அதன் மக்கள் மீதும் விழவிருந்த துரதிர்ஷடங்களைத் தடுத்திருக்கலாம். இந்த மாற்றத்திற்கு எதிராக இந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த வர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதால் அது கண்டிக்கத்தக்க நேர்மையற்ற செயல் என்று சொல்லிவிட முடியாது.[3] ஆனால், தீங்கான மனித வழிகளைப் பற்றி எடுத்துக் கூறும் மற்றும் ஒரு உதாரணமாகும், இது. தாங்கள் வாழும் சூழ்நிலை தங்க ளுக்கு உண்மையிலேயே மிகவும் அபாயகரமானதாக இருக்கும்போது, தாங்கள் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாகப் பல சந்தர்ப்பங்களில் நினைக்கும் நிலைக்கு மனிதர்களை அது இட்டுச் செல்கின்றது. செலாவணி நிலை மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக அவர்கள் நினைத்ததால் நாணயச் சாலைச் சட்டத்தைத் திருத்தி அமைத்து

---

1. தங்க நாணய முறையை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்குப் பேராசிரியர் ஜே.கி. கார்னெஸ் எதிர்ப்புத் தெரிவித்தார். பின்பு தமது ஆட்சேபணைகளை அவர் வாபஸ் பெற்றார். அரசியல், பொருளாதாரம் பற்றிய அவரது கட்டுரைகள், லண்டன், 1873, பக். 88-90.

2. ''வாணிகத்தின் அகராதி'' ஜே.ஆர். மக்லோச், 1869ம் ஆண்டு பதிப்பு, பக்கம் 1131.

ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை வந்தபோது, எதுவும் நடக்கவில்லை என்று அல்லது எதுவும் நடக்காது என்று திருப்தி அடைந்து, 1935 ஆம் ஆண்டின் வெள்ளிச் செலாவணி அமைப்பைத் தங்கத்தைக் கலவை செய்யாமல் சுத்தமாக இருப்பதைத் தொடரச் செய்தனர்.[1]

அந்தோ, பரிதாபம்! ''சட்டம் பற்றிய அம்சத்தை விட வேறு எதையும் தாங்கள் கவனிக்க அவசியமில்லை என்று அப்பொழுது கூறியவர்கள்,[2] அவர்களுக்கு என்ன காத்திருக்கிறது என்பதைப் பற்றி எதுவும் தெரிந்து வைத்திருக்கவில்லை.

1. நாணயச் சாலைகளும் நாணயங்களும் என்ற மூல மசோதாவில், பொது கஜானாக்களில் 1868ஆம் ஆண்டு அறிவிப்பின்படி சவரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி சர்க்காரை நிர்ப்பந்திக்கும் ஷரத்துகளை உட்கொண்டிருந்தது. கெஜட் ஆப் இந்தியா, பாகம் V, தேதி ஜூலை 23, 1870 காட்டப்பட்ட அக்கறையின்மை அவ்வளவு அதிகம் இருந்ததால், இந்த ஷரத்துகள் செலக்ட் கமிட்டியால் கைவிடப்பட்டன; நிர்வாகத்தின் உசிதத்திற்கு இந்த விஷயம் விடப்பட்டதை அது சரியானது என்று கருதியது.

2. 'நாணயமும் நாணயச் சாலையும்' என்ற மசோதாவை அறிமுகப்படுத்தியபோது, மதிப்பிற்குரிய திரு. ஸ்டீபன் 1870 செப்டம்பர் 6இல் ஆற்றிய உரை. உயர் சட்டமன்ற நடவடிக்கைகள் - பார்க்கவும்.

இயல் - 2

வெள்ளிநாணய மதிப்புத் தகவும் பிறநாணயச் சமமதிப்பில் குலைவும்

இந்தியச் செலாவணி சம்பந்தமான வளர்ச்சிப்போக்கு ஒரு வெள்ளி நாணய செலாவணி அமைப்பை ஏற்படுத்துவதில் உச்சநிலை எய்தியது. ஒரு தங்க நாணயச் செலாவணி வேண்டுமென்பதற்கான கிளர்ச்சி, வெள்ளிச் செலாவணிக்குத் துணையான சாதனைமாகக் காகித நாணயம் வந்ததில் முடிந்தது. அத்தகைய கலவை (Mixed) நாணய அமைப்பின் செயல்பாடு பற்றி ஆராயும்முன் அதன் கட்டுமானத்தன்மை பற்றி பரிசீலனை செய்வது பயனுள்ளதாகும்.

உலோகப்பகுதியை 1870ஆம் ஆண்டு XXII சட்டம் முறைப் படுத்திற்று. அதன் கீழ் அதிகாரம் அளக்கப்பட்டு வெளியிடப் பட்ட சட்டபூர்வமான நாணயங்கள் பற்றி விவரங்கள் அட்டவணை VIIஇல் காண்பிக்கப்பட்டுள்ளன. நாணயச்சாலைகள் வெளியிட்ட நாணயங்களின் எண்ணிக்கை பற்றியோ, அவற்றின் சட்டபூர்வ அதிகாரங்கள் பற்றியோ சட்டம் புதிய வழிமுறைகள் எதையும் வகுக்கவில்லை. நாணயங்கள் சம்பந்தப்பட்ட முந்திய சட்டங்களை ஒத்ததாக இந்தச் சட்டம் இருந்தாலும்[1] முன்பு எப்பொழுதும்

இதைக் கீழ்க்கண்டவற்றிலிருந்து காணலாம். (Ref: அட்டவணை VIII)

A. தங்க நாணயங்கள்: i,ii,ii ஆகியவை 1835ஆம் ஆண்டுச் சட்டம் XVII ஷரத்து VII ஆல் அங்கீகரிக்கப்பட்டது.(அதிகாரம் அளிக்கப்பட்டது) iv தான் வலுப்படுத்தப்பட்ட (Consolidated) இந்த 1870ஆம் ஆண்டு சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

B. வெள்ளிநாணயங்கள்: i, ii, iii இவை மூன்றுக்கும் 1835ஆம் ஆண்டு XVII சட்டம் ஷரத்து Iஇன்படி அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தச்சட்டம் ''இரட்டைரூபாய்'' என்றழைக்கப் பட்ட வெள்ளி நாணயத்தை வெளியிடுவதையும் அனுமதித்தது; ஆனால் 1862ஆம் ஆண்டுசட்டம் XXX ன் II ஷரத்துப்படி அதை நிறுத்திவைத்து அதன்இடத்தில் IVஇல் குறிப்பிட்டுள்ள வெள்ளிநாணயத்தைக் கொண்டுவந்தது.

C. செப்புக்காசுகள்: I,II,IV மூன்றும் 1835,சட்டம் XXII, ஷரத்து I ஆல்

இல்லாதபடி நாட்டின் நாணயச் சட்டத்தை நிறைவுபடுத்தும் விதத்தில் சட்டம் பற்றிய ஷரத்துகள் அமைந்திருந்தன. ரத்துசெய்யப்பட்ட முந்தியச் சட்டங்கள் நாணய விலை ''பரிகாரம்'' அல்லது ''சகிப்புத் தன்மை'' என்று அழைக்கப்பட்ட கோட்பாட்டை அங்கீகரிப்பதில் செட்டாகச் (Sparingly) சிக்கனமானதாக இருந்தன. இந்தவிஷயம் வெறும் நாணயச்சாலைத் தொழில்நுட்பம் என்றுபெரும்பாலும் கருதப்பட்டது. அது அப்படித்தான்; ஆனால் அதனுடைய பண முக்கியத்துவம் இல்லாமல் போகவில்லை. எடையில் உயர் உலோ கங்கள் நடப்பில் இருந்தபோது, ஒரு நாணயச் சாலையின் சகிப்புத் தன்மை எழுவதற்கு சாத்தியப்படாமல் இருந்திருக்கலாம்; ஏனெ னில், தான் பெறுவதை ஒருவர் எடையைச் சரி பார்த்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது. நாணயம்(காசு) கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து, செலாவணி பற்றித் தகவல் மூலம் (Vide) வந்தபோது, அந்தக் காசுகள் எவ்வளவு மதிப்பு கொண்டன என்று உறுதியளிக்கப்பட்டதோ அதன்படி உலோகத்தை உட்கொண்டிருப்பதாக ஒவ்வொருவரும் நம்பினர்.

அட்டவணை VIII

நாணயச்சசாலைவெளியிட்ட நாணயத்தின் (காசுகளின்) மதிப்பு	மொத்த எடை டிராய் கிராம்	ஏற்கத்தக்க மாறுபாட் டளவு இழப்பீடு (Remedy)	நேர்த்தி (சுத்த உலோகம்) டிராய் கிராம்	நேர்த்தி யியல் இழப்பீடு (Remedy in Fairness)	சட்டரீதியான நாணயமாற்று அதிகாரம்
I. தங்கநாணயங்கள் (a)					
i. மொகர்	180	2/1000	165	2/1000	சட்டப்படியான நாணய மாற்றுச் சாதனமல்ல
ii. மொகரில் மூன்றில் ஒருபங்கு	60	"	65	"	
iii. மொகரில் மூன்றில் இரண்டுபங்கு	120	"	110	"	
iv. இரட்டை மொகர்	360	"	330	"	
II வெள்ளி நாணயங்கள் (b)					வரம்பில்லாத சட்டப்படியான நாணய மாற்றுச் சாதனம்
i) ரூபாய்	180	3/1000	165	2/1000	
ii) அரை ரூபாய்	90	"	82.5	"	
iii) கால் ரூபாய்	45	7/1000	41.25	3/1000	ஒரு ரூபாயின் பின்ன மதிப்புக்குச் சட்டபூர்வ நாணய மாற்றுசாதனம்
iv) ரூபாயில் எட்டில் ஒன்று	22.5	10/1000	20.625	"	
III செப்புக் காசுகள் (c)					
i) பைசா (pice)	100	1/40	-	-	ரூபாயின் 1/64 பாகத்திற்கு சட்டபூர்வநாணயமாற்று சாதனம்
ii) இரட்டைப் பைசா	200	"	-	-	ரூபாயின் 1/32 பகுதிக்கு சட்டபூர்வநாணயமாற்று சாதனம்
iii) அரைப்பைசா	50	"	-	-	ரூபாயின் 1/128 பாகத்திற்கு சட்டபூர்வநாணயமாற்று சாதனம்
iv) பை (pie)சல்லிக் காசு	33.3	"	-	-	ரூபாயின் 1/192 பாகத்திற்கு சட்டபூர்வ நாணய மாற்று சாதனம்

எவ்வாறாயினும், உண்மையில் உறுதியளிக்கப்பட்ட மதிப்பிற்கு சரியான அளவில் எப்பொழுதும் ஒத்திருக்க முடியாது. அம்மாதிரியான வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்யும்; நாணயம், அடிக்கும் கலையில் எல்லாவித முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், இவை தவிர்க்க முடியாதவை. நாணயச் சாலை உண்மையான தரத்திலிருந்து விலகல் எந்த அளவு உள்ளது என்பதுதான் விஷயம். எனவே, எல்லா நாடுகளின் நாணயச் சாலைச் சட்டங்களைப் பொறுத்தவரை, உறதியளிக்கப்பட்ட மதிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு (margin) அதிகமாக நாணயங்கள் குறைபாடுடையவையாக இருந்தால் அவை சட்டப்படி நாணயப் பரிமாற்ற சாதனமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதற்கான ஷரத்துக்களை அவை உட்கொண்டிருந்தன. அவற்றின் குறைபாட்டிற்குச் சகிப்பின் (toleration) எல்லை விதிக்காமல் நாணயங்களைச் சட்டரூபப் பரிமாற்ற சாதனமாக ஆக்கினால் மோசடிக்கு வழி திறந்துவிடுவதாகும். சகிப்பின் எல்லையை நாணயச்சாலைகள் வெளியிடும் நாணயங்களுக்குச் சட்டம் விதித்ததால், அது ஒரு ஆரோக்கியமான நடவடிக்கையாக இருந்தது. சட்டத்திற்கு நாணயங்கள் ஒத்ததாக இருந்தனவா என்பதை உறுதி செய்வதற்கு எந்த அமைப்பையும் (சாதனத்தையும் - machinery) சட்டம் ஏற்படுத்தாதது வருந்தத்தக்கதே.[1] சட்டத்தில் கொண்டுவரப்பட்ட மற்றொரு அபிவிருத்தி, சுதந்திரமான நாணயம் என்ற கோட்பாட்டை அங்கீகரித்ததாகும். இந்தக் கோட்பாடு எந்த அளவிற்கு வேண்டுமோ அந்த அளவு கவனத்தை ஈர்க்காவிடினும் அது ஒரு ஆரோக்கியமான செலாவணியின் அடிப்படையே ஆகும்; சமூகத்தின் நாணயப் பரிமாற்றத்திற்குத் தேவையான நாணயத்தின் அளவு (quantity) என்ற மூலாதார விஷயத்துடன் முக்கியமான தாக்கத்தைக் கொண்டதாகும். இந்த அளவை முறைப்படுத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒரு வழி, நாணயச்சாலையை மூடிவிட்டுத், தேவைக்கு ஏற்பச், செலாவணியைத் திறமையுடன் சமாளிப்பதை சர்க்காரின் விவேகத்திற்கு விட்டுவிடுவது. மற்றொன்று, நாணயச் சாலைகளைத் திறந்து வைத்துக் கொண்டு, அவர்களின் தேவை அளவை நிர்ணயிப்பதைத் தனி நபர்களின் சுய-தேவைகளுக்கு (நலனுக்கு)

---

1. இங்கிலாந்தில் ''Pyx ன் விசாரணை'' (Trial of the Pyx) என்ற அமைப்பு அமைக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் வரலாறு, அதன் செயல்பாடு பற்றி அறிந்து கொள்ள ஹெச் ஆப் ஸி (H of C) (Return) ரிட்ர்ன் 1866இன் 203ஐ காண்க. கிழக்கிந்தியக் கம்பெனியில் நிர்வாகத்தின் போது இந்திய நாணயங்களின் சுத்தத்தரத்தை ஏற்படுத்துவது என்பது டைரக்டர்கள் சபையின் ஒரு முக்கியமான கவலையாக இருந்தது. இந்திய நாணயச் சாலைகள் வெளியிட்ட நாணயங்கள் முறையாக அவற்றின் தரத்தை Pyx பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டது. அந்தப் பரிசோதனைகளின் தீர்வு இந்த நாணயச் சாலை பொறுப்பதிகாரிகளுக்கு, (Masters) அவர்களும் எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக இருக்க அனுப்பிவைக்கப்பட்டது. கம்பெனியின் நிர்வாகம் மூடிவிடக் வந்தபின், நாணயச் சாலை பொறுப்பதிகாரிகளைக் கண்காணிக்க

விட்டுவிடுவதாகும். மூடப்பட்ட நாணயச் சாலைகள் சம்பந்தப்பட்ட வரை, விவேகத்தைக் (discretion) கையாளுவதை, வழிகாட்டத் தேவையான, தவறிப்போகாத சோதனைகள் இல்லாமல் போனதால், இரண்டில் நாணயச்சாலைகள் 'திறந்திருப்பது' (மற்றதைவிட) நல்லது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 'திறந்துள்ள தங்கச்சாலைகள்' என்ற திட்டப்படி, ஒவ்வொரு தனிநபரும் தங்கம், வெள்ளி உலோகங்களுக்கு நாணயங்களைப் பெறவும், நாணயங்களைத் தங்கம், வெள்ளியாக மாற்றிக் கொள்ளவும் முடியும் என்பதால், (செலாவணியின்) அளவு தானாக முறைப்படுத்திக்கொள்கிறது. வணிகத்தின் வளர்ந்து வரும் தேவைகளுக்குப், புழக்கத்திகாளான சாதனம் அதிக அளவில் தேவைப்பட்டால், இந்த நோக்கத்திற்காகத் தனது மூலதனத்தில் ஒரு பெரிய அளவை ஒதுக்குவது சமூகத்தின் நலனுக்கு உகந்ததாகும்; மாறாக, நிலவும் வணிகத்தின் சூழ்நிலையில் அதன் தேவை குறை வாக இருந்தால், நாணயத்தின் ஒரு பகுதியை வாபஸ் பெற்றுச் செலாவணியில்லாத மற்ற நோக்கங்களுக்காக வேறு எந்தப் பண்ட மாகவும் மாற்றிக் கொள்ளலாம். 1870-ஆம் ஆண்டுச் சட்டம் 'திறந் திருக்கும் நாணயச் சாலைகள்' என்ற கோட்பாட்டைத் தெளிவாக அங்கீகரித்தால் அதற்கு முந்திய தேதியில் நாணயச் சாலைகள் மூடப்பட்டிருந்தன என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. உண்மை என்னவெனில், வெள்ளி மட்டும் சட்டபூர்வ சாதனமாக இருந்த போதிலும், தங்கம், வெள்ளி இரண்டின் சுதந்திர நாணயங்களுக்கு நாணயச் சாலைகள் 'திறந்து' இருந்தன. ஆனால் தம்மிடம் அளிக்கப் பட்ட எல்லா உலோகங்களையும் நாணயமாக்க, நாணயச்சாலைப் பொறுப்பாளர் கடமைப்பட்டிருப்பதாக ஒரு வார்த்தைகூட முந்திய எந்தச் சட்டமும் கூறாதது விசித்திரமாகத் தோன்றலாம்; அத்தகைய நிபந்தனை 'திறந்த நாணயச் சாலை' அமைப்பில் அத்தியாவசிய மானதாகும். இது விஷயத்தில் சட்டத்தின் (1870) ஷரத்துகள் சந்தேகத் திற்கிடமளிக்கவில்லை. அது கோருகிறது:-

> ஷரத்து 19. ''தற்போது அமலிலிருக்கும் நாணயச்சாலைகளின் விதிகளுக்கு உட்பட்டு, நாணயச் சாலைப் பொறுப்பதிகாரி (Master), நாணயச் சாலைக்குக் கொண்டுவரப்படும் எல்லாத் தங்க, வெள்ளிப் பாளங்களையும் நாணயங்களையும் கீழ்க் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டுப் பெற்றுக் கொள்வார்:
>
> ''அத்தகைய (உலோக) பாளங்களும் நாணயங்களும் நாண யங்களாக அடிக்கப் பொருத்தமானவையாக இருக்க வேண்டும்.
>
> ''ஒரு நபர், ஒரு சமயம் கொண்டுவரும் அளவு, தங்கமாக

இருந்தால் 50 தோலாக்களுக்குக் குறையாமலும், வெள்ளியாக விருந்தால் 1000 தோலாக்களுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

''ஷரத்து 20. நாணயமாக்குவதற்காக நாணயச் சாலைக்குக் கொண்டுவரப்படும் எல்லாத் தங்கப்பொருட்களுக்கும் தங்க நாணயங்களுக்கும் நாணயச் சாலைகளின் விதிகளின்படி ஒரு சென்டுக்கு ஒரு ரூபாய் வீதம் தீர்வை (duty) விதிக்கப்படும்.

''ஷரத்து 21: நாணயமாக்குவதற்காக, நாணயச் சாலைக்குக் கொண்டுவரப்படும் எல்லா வெள்ளிப் பாளங்களுக்கும் அல்லது நாணயங்களுக்கும், அதைக் கொண்டுவருபவருக்கு அவற்றில் செய்யப் பட்ட பொருட்கள் பற்றிய விவர அறிக்கையின்படி அவற்றின் மீது நாணயச்சாலை விதிகளின்படி 2 சதவிகிதம் தீர்வைக்கு உட்படுத்தப்படும்.

''ஷரத்து 22: நாணயச் சாலையில் பெற்றுக் கொள்வதற்குத் தகுதி வாய்ந்ததாக ஆக்க, உருக்கி, வெட்டுவதற்காகத் தங்க பாளம், நாணயங்கள் மீது ஒரு மில்லிக்கு (mille) நான்கில் ஒரு பங்கும் வெள்ளிப் பாளங்கள் - நாணயங்கள் மீது மில்லிக்கு ஒன்றாகவும் தீர்வை விதிக்கப்படும்.

''ஷரத்து 23: நாணயச்சாலைக்குக் கொண்டுவரப்படும் எல்லாத் தங்க, வெள்ளிப் பாளங்களும் நாணயங்களும், சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நேர்த்தித்தரத்திற்கு மட்டமாக (Inferior) இருந்தாலோ, அவற்றின் பிரகாசம் அல்லது வேறு காரணத்தாலோ, நாணயமாக அடிப்பதற்குப் பொருந்தாததாக இருந்தாலோ, அவற்றைச் சுத்தப் படுத்த வேண்டியிருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள தீர்வையோடு, அவற்றைச் சுத்தப்படுத்துவதால் ஏற்படும் நஷ்டத்துக்கும் செலவுக்கும், இதற்காக கவர்னர் ஜெனரல், நிர்ணயிக்கும் தொகையும் வசூலிக்கப்படும்.

''ஷரத்து 24: தங்க, வெள்ளிப் பாளங்கள் அல்லது நாணயங்கள் நாணயங்களாக அடிக்கப் பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் அவற்றை அளித்த முதலாளி, பொதுவான கஜானாவில் கொடுக்க வேண்டிய அத்தகைய பாளங்கள் - நாணயத்தின் நிகர அளவு (எடை) பற்றி உலோகங்களை உரசித் தரம் பார்க்கும் மாஸ்டரிடம் (Assess master) இருந்து ஒரு நற்சாட்சிப் பத்திரத்தைப் பெற்று நாணயச் சாலையின் மாஸ்டர் முதலாளிக்குத் தருவார்.

''ஷரத்து 25: அஸ்ஸெஸ் மாஸ்டர் நற்சான்றிதழ் அளிக்கும் எல்லாத் தங்கப் பாளங்களுக்கும் நாணயங்களுக்கும் எவ்வளவு

கிட்டத்தட்ட முடியுமோ அவ்வளவு 1835ஆம் ஆண்டு சட்டம் XVII படி அடித்த தங்க நாணயங்களாகக் கொடுக்கப்படும்; (அதற்குமேல்) முதலாளிக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி (ஏதாவது இருந்தால்) பிரிட்டிஷ் இந்தியாவில் வெள்ளியாகவோ, வெள்ளி அல்லது செப்பு நாணயங்களாகவோ கொடுக்கப்படும்.

சர்க்காரின் காகிதச் (பேப்பர்) செலாவணியைப் பொறுத்த வரை, முன்பு நாட்டில் நிலவிய, வெளியிடும் சுதந்திரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயலாற்றவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். சர்க்கார் காகிதச் செலாவணி அறிமுகப்படுத்தும் முன் நோட்டுகளை வெளியிடும் உரிமை இந்தியாவின் மூன்று மாகாண வங்கிகளுக்கு மட்டுமே இருந்ததாக ஒரு தவறான கருத்து நிலவு கிறது. சுதந்திரமான வங்கி அமைப்பு என்று அழைக்கப்பட்டது இந்தியாவில் நிலவி வந்தது என்பது உண்மை; அதன்படி ஒவ்வொரு வங்கியும் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடும் உரிமை பெற்றி ருந்தது. மாநிலங்களின் (Presidency banks) நோட்டுக்கள், மற்ற வங்கிகள் வெளியிட்ட நோட்டுகளை விடக் கொஞ்சம் உயர்ந்த அந்தஸ்து பெற்றிருந்தன; அதன்படி மாநில வங்கிகளின் நோட்டுக்கள் ஓரளவு சர்க்காருக்கு வரவேண்டிய வரி (revenue)க்காக[1] பெற்றுக் கொள்ளப் பட்டன. இதற்காக (இந்தச் சலுகைக்காக) அந்த வங்கிகளின் வியாபாரங்கள் (business) மிகக்கடுமையான சட்ட ரீதியான கட்டுப் பாட்டிற்கு உட்பட்டன.[2] மற்றவர்களின் நோட்டுக்கள் அவ்வளவு

---

1. எப்.ஸி. ஹாரிசன், எகனாமிக் ஜெர்னல் (Economic Journal) 1891, தொகுப்பு 1, பக்கம் 726.

2. இந்த கட்டுப்பாட்டிற்கான காரணங்களை, சர்க்காருக்கும் மாகாணங்களுக்குமிடையே இருந்த பிரத்தியேகமான உறவுகளில் காணலாம்; 1862க்கு முன்பு, அவை திவாலாவதைத் தடுக்கப் பாதுகாப்பாக, அவை எந்தவிதமான வியாபாரங்ள் செய்யலாம் (வியாபாரங்களில் ஈடு படலாம்) என்பதை இம்பீரியல் வங்கியின் உரிமைப் பத்திரம் கட்டுப்படுத்தியது. பிரதானமான கட்டுப்பாடுகள் வெளி நாடுகளுடன் நாணயப்பரிமாற்றம் செய்வது, வெளிநாடுகளில் கொடுக்க வேண்டிய டெபாசிட்டுகளைப் (deposit) பெறுவது, ஆறுமாதகாலத்திற்கு மேல் கடன் வழங்குவது, அடகுவைப்பதன் பேரில் கொடுப்பது, இரண்டு நபர்களுக்கு குறைவாக உள்ள கடன் பத்திரங்கள் மீது கொடுப்பது, இடம் பெயராச் சொத்துக்ள் அடகு வைப்பதன் மீது வழங்குவது, பொருட்கள் மீது அவை அல்லது அவற்றின உரிமையாளர்ள் வங்கிக்கு உத்திரவாதம் அளிக்காமலிருந்தால் வழங்குவது ஆகியவை தடை செய்யப்பட்டிருந்தன. வங்கிகளில் சர்க்கார் பங்குகள் இருந்தன; அவற்றின் டைரக்டர் குழுக்களில் சர்க்காரின் பிரதிநிதிகளும் இருந்தனர். நோட்டுகள் வெளியிடும் உரிமை 1861இல் வாபஸ் பெறப் பட்டவுடன், வங்கிகளின் செயல்பாடுகளில் விதிக்கப்பட்ட கட்டாயக் கட்டுப்பாடு கள் பெருமளவு தளர்த்தப்பட்டன; ஆனால், அவற்றின் மீது சர்க்காருக்கு இருந்த அதிகாரம் மாற்றமில்லாமல் தொடர்ந்தது. வங்கிகள் சில விஷயங்களில் தங்களுக்கிருந்த உரிமையை துஷ்பிரயோகம் செய்ததால், முன்பு இருந்த கட்டுப்பாடுகள், மாகாண வங்கிகளின்

(தொடர்ச்சி 81 இல்)

சலுகை பெற்றிருக்காவிடினும் அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பட்டன (immune). ஆனால், சட்டம் அனுமதித்திருந்தபடி நாணயங்கள் வெளியிடும் உரிமை பெற்ற மற்ற வங்கிகளைச் சோர்வடையச் செய்யும் அளவுக்கு இந்தச் சாதகமற்ற தன்மை போதுமானதாக இல்லை. எனினும், வெளியிடும் இந்தச் சுதந்திரத்தை வங்கிகள், மாகாண வங்கி கள் கூட, பெரிய அளவில் உபயோகப்படுத்திக் கொண்டதாகத் தோன்ற வில்லை[1]; 1861இல் இந்த உரிமை, அவை எல்லாவற்றிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்பட்டது[2] அப்பொழுது, காகித நாணயச் செலாவணி இலாகா என்று அழைக்கப்பட்ட ஒரு சர்க்கார் இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் இந்தியா முழுவதற்கும் தேசிய அளவிலான காகித நாணயங்கள் வெளியிடும் அமைப்பு நிறுவப்பட்டது. உலோக நாணயங்கள் விஷ யத்தைப் போல, காகித நாணயத்தின் அளவை (எண்ணிக்கையை) நிர்ணயிப்பதில் விவேகத்தைப் பயன்படுத்தத் தனி நபர்கள் அனு மதிக்கப்படாமல் இருந்தனர்; காகிதச் செலாவணியை முறைப்படுத்து

(முன்பக்கத் தொடர்ச்சி)

சட்டத் (1876)தின்படி மீண்டும் கொண்டுவரப்பட்டன ஆனால், சர்க்கார் அவற்றின் நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடுவது, அதிகாரபூர்வ டைரக்டர்கள் நியமிப்பது, தனது பங்குகளை வங்கிகளில் கட்டுவது ஆகியவற்றை சர்க்கார் கைவிட்டது.

இந்த வரம்புகளில் (limitation) 1920ஆம் ஆண்டுச் சட்டம் XVIIIஇல் இணைக்கப் பட்டன; மூன்று மாகாண வங்கிகளையும் இந்தியாவின் இம்பீரியல் வங்கி என்ற பெயரில் ஒன்றாக இந்தச் சட்டம் இணைத்தது. இந்தியக் கம்பெனிகளின் சட்டத்தின் ஷரத்துகளுக்கு இணக்கமாக மற்ற வங்கிககள் செயலாற்ற வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்தச் சட்டக் கட்டுப்பாட்டிலிருந்தும் அவை விலக்கு அளிக்கப்பட்டன. இது சம்பந்தமாக சர் ஹென்றி மெயினின் குறிப்புகள் எண். 472ஐயும், அத்துடன் இணைக்கப்பட்ட டபுள்யூ. ஸ்டோக்ஸின் குறிப்பையும் காண்க. இந்த வங்கிகள் மீதான கட்டுப்பாடு என்பது இந்தியாவில் வங்கித் தொழில் பற்றிய சட்டத்தின் ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

---

1. 1860இல் புழக்கத்தில் இருந்த மூன்று மாகாண (Presidency) வங்கிகளின் காகித நாண யங்களின் மொத்தம் அவற்றின் நடப்புக் (Current) கணக்குகளின் தொகையை விட அதிகமாக இருந்தன என்பதைக் கீழே கொடுத்துள்ளவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

வங்கியின் பெயர்	நடப்புக் கணக்குகள் (current A/c)	புழக்கத்திலிருந்த காகித நாணயங்கள்
பேங் ஆப் பெங்கால்	1,254,875	1,283,946
பேங்க் ஆப் பாம்பே	438,459	765,234
பேங்க் ஆப் மதராஸ்	161,959	192,291

(பேங்கர்ஸ் மேகஸின், ஏப்ரல் 1893 ப. 547)

2. [illegible] வெளியீட்டுக்கும் சர்க்கார் வெளியீட்டுக்கும் சம்பந்தப்பட்ட விவரகம்

வதில் சர்க்கார் இலாக்காவுக்கும் உசிதம்போல நடந்துகொள்ள எந்த உரிமையும் அளிக்கப்படவில்லை. உலோக நாணயங்கள் பற்றி நாணயச் சாலையின் மாஸ்டருக்கு எவ்வளவு உரிமை இருந்ததோ அதற்கு அதிகமான எந்த உரிமையும் காகிதச் செலாவணி இலாகாவிற்கும் இல்லை.

சட்டப்படி[1] இலாகாவின் கடமை பிற்கண்ட தொகைகளுக்கு பரிமாற்றமாகக் காகித நாணயங்களை வெளியிடுவது மட்டுமாகும்: (1) நடப்பிலிருக்கும் இந்திய சர்க்காரின் வெள்ளி நாணயம்; (2) தரமான வெள்ளிப் பாளங்கள் அல்லது வெளிநாட்டு வெள்ளி நாணயம் - நாணயம் அடிப்பதற்குப் பொருந்துகிற தரமானது - வெள்ளி 1000 தோலாக்களுக்கு ரூ. 979 என்று கணக்கிட்டு; அதே வட்டாரத்தில் கொண்டுவருபவர் கோரும் மற்ற தொகைகளுக்கு இந்திய சர்க்கார் வெளியிட்ட மற்ற காகித நாணயங்கள் (4) இந்திய சர்க்காரின் தங்க நாணயங்களில், அல்லது வெளிநாட்டுத் தங்க நாணயம் அல்லது பாளம் - கவர்னர் ஜெனரல் வகுத்த விதி முறைகள் படி நிர்ணயித்த விகிதத்தில் கணக்கிட்டுத், தங்கத்திற்கு எதிராக வெளியிட்ட காகித நாணயங்களில் அளிக்கப்பட்ட நாணயம் அல்லது தங்கப்பாளத்தின் மொத்தத்தொகையில் நாலின் ஒரு பங்கிற்கு அதிகமில்லாமல் இருக்க வேண்டும். வெளியிட்ட காகித நாணயத் தொகைக்குஈடாக இந்தத் தொகை முழுவதும் ரிசர்வில் வைக்கப்பட வேண்டுமென்று சட்டம் கோரியது. இதற்கு விதிவிலக்கு சர்க்காரின் பாதுகாப்புப் பத்திரங்களில் செலுத்தி வைக்கப்பட்ட தொகைகள்; அவற்றில் கிடைக்கும் வட்டிதான் சர்க்காருக்கு வருவாய். இம்மாதிரி முதலீடு செய்யும் தொகையின் வரம்பு, ''காகித நாணயத்தின் (மதிப்பு) வீழ்ச்சியடையலாம் என்பது பற்றிய நியாயமான அனுபவத்தின் படி கணக்கிடப்பட்ட மிகக்குறைந்த (lowest) தொகை''[2] இந்த அடிப்படையில் மதிப்பீடு செய்து, முதலீடு செய்யும் பங்கின் வரம்பு 1861இல் 4 கோடியாகவும்,[3] 1871இல் 6 கோடியாகவும்[4] 1871இல் 8 கோடியாகவும்[5] நிர்ணயிக்கப்பட்டது. முதலீடு செய்வதன் பங்கு தொடர்ந்து அதிகரித்து வந்த போதிலும், மக்களின் நம்பிக்கை பெற்ற இந்த முதலீட்டுத் தொகை, காகித நாணயச் சட்டத்தின் அத்தியாவசியமான கோட்பாட்டை நீக்கும் அளவுக்கு ஒருபொழுதும் பெரிய

1. 1861 ஆம் ஆண்டுச் சட்டம் XIX , ஷரத்து IV
2. காகித நாணயங்களின் மசோதா - 1870 மார்ச் 25 தேதியிட்டது - சமர்ப்பித்து சர் ரிச்சார்ட் டெம்பிளின் உரை. supreme Legislative council proceedings, Vol. IX. பக்கங்கள் 151-152
3. சட்டம் XIX, ஷரத்து X ஐப் பார்க்க
4. சட்டம் III, ஷரத்து 16.
5. சட்டம் XV, ஷரத்து 1.

அளவில் இல்லை[1]; அந்தச் சட்டத்தின் நோக்கம்: உலோக நாணயங்களின் அளவுக்கு அதே போல் குறைத்தும் விரிந்தும் தனது மதிப்பை எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்ளும் முறையில் காகித நாணயங்களின் அளவை (volume) முறைப்படுத்துவதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு முக்கிய மாற்றத்தைப் பெறுவதற்குமுன் கலப்புச் (mixed) செலாவணி அமைப்பு இத்தகையதாக இருந்தது. கலவைத் தன்மையைக் கொண்டிருந்தாலும், காகித நாணயம் ஒப்புநோக்கில் மொத்தத்தில் ஒரு சிறு பாகமாகவே இருந்தது. காகித நாணயம் பெரிய அளவில் வராததற்கான பிரதான காரணங்களைக் காகித நாணய அமைப்பிலேயே காணலாம்.[2] அத்தகைய ஒரு காரணம், சிறு தொகைகளுக்கான உலோக நாணயங்களின் இடத்தைப் பிடித்துக் கொள்ளச் சாத்தியமில்லாமல் மிகக் குறைந்தபட்ச மூல அளவு காகித நாணயமே பெரிய தொகைக்கு இருந்ததாகும். 1861ஆம் ஆண்டுச் சட்டப்படி காகித நாணயங்கள் குறைந்தது ரூ. 10 லிருந்து ஆரம்பித்து ரூபாய் 20, 50, 100, 500, 1000 என்று இருந்தன. கொடுக்கல் வாங்கல் (transactions) சராசரியில் ரூபாய் 1க்கு மேற்படாத, ஒரு அணாவும் அதற்கும் கீழும் இருக்கும் ஒரு நாட்டில், மக்களின் பேரங்களில் காகித நாணயங்கள் பெரியளவு இடம்பெறும் என்று

கீழ்க்கண்ட அட்டவணை காகித நாணயங்கள் (சேமிப்புகள்) மூன்று வெவ்வேறு காலங்களில் வினியோகிக்கப்பட்டன என்பதை காண்பிக்கிறது.

காலங்கள் (கால அளவு) (Period)	புழக்கத்தில் இருந்த நோட்டுகள்	ரிசர்வ் (ஒதுக்கி வைத்த) கலவை				ரிசர்வின் ஒவ்வொரு கலவையும் மொத்தம் புழக்கத்திலிருந்ததன் சதவிகிதம்		
		வெள்ளி	தங்கம்	கடன் பத்திரங்கள்	மொத்தம்	வெள்ளி	தங்கம்	கடன் பத்திரங்கள்
1862-1871	7.63	4.80	0.03	2.80	7.63	63	"	37
1872-1881	11.82	5.89	"	5.84	11.82	51	"	49
1882-1891	15.74	9.64	"	6.10	15.74	61	"	39

2. இங்கிலாந்தில் காகித நாணய ஸ்தாபனத்தின் தெளிவான, கறாரான படத்தை, ஐக்கிய

எதிர்பார்ப்பது சாத்தியமல்ல. 1871ஆம் ஆண்டு முதலில் அனுமதிக்கப் பட்ட ரூ. 5 காகித நோட்டுகள் கூட மக்களின் பொருளாதார வாழ்க்கை யில் ஊடுருவும் அளவுக்குக் குறைந்த தொகையல்ல. நோட்டுக் களை ரொக்கமாக மாற்றுவதில் உள்ள கஷ்டம், நோட்டுச் செலா வணி அதிகமாவதற்கு இருந்த மற்றொரு தடங்கல். இந்தியாவில் காகிதச் செலாவணியின் மற்றொரு சந்தேஷமளிக்காத நிகழ்வுகளில் ஒன்று, அந்த வட்டாரத்தில் எல்லா இடங்களிலும், அவை சட்ட பூர்வமான நாணய மாற்றுச் சாதனமாக்கப்பட்டிருந்தாலும் அவற்றை வெளியிட்ட அலுவலகத்தில் தான் அவற்றை ரொக்கமாக மாற்ற முடியும் என்பதாகும். இந்தியாவில் காகித நாணயத்தின் அமைப்பு அத்தகைய பிரத்தியேகத் தன்மை கொண்டதாக இருந்ததற்கு, நாட்டில் பெருமளவு நிலவிய (internal exchange) உள்நாட்டு ரொக்கமாற்று[1] ஏற்பாடுதான். சர்க்கார் சமாளிக்க வேண்டிய ஒரு முக்கியப் பிரச் சினையை அது எழுப்பியது. எங்கும் (எல்லா இடங்களிலும்) காகித நாணயங்கள் ரொக்கமாக மாற்றிக் கொள்ளக் கூடியவையாக இருந் தால், காகித நோட்டுக்களைச் செலாவணியாக உபயோகிப்பதற்கு பதிலாக, உள் நாட்டு ரொக்கமாற்றலைத் தவிர்ப்பதற்காக, வியா பாரிகள் அவற்றைப் பல்வேறு மையங்களில் கட்டுவதற்காகப் பயன் படுத்துவர் என்ற பயம் இருந்தது.

---

1. மாநில வங்கிகள் காகித நாணயங்கள் வெளியிடுவதை நிறுத்தி விட்டபோதிலும், ''இந்த வெளியீட்டுக்கு இந்திய சர்க்காரின் கடன் பத்திரங்களுக்குப் பணம் கொடுப்பதற்கு, பரிமாற்றிக் கொள்வதற்கு ஆகிய பணிகளை மேற்பார்வையிடுவது நிர்வகிப்பது, வெளியீட் டின் விவகாரங்களைக் கவனிக்கும் ஏஜெண்டுகளாகச் செயலாற்றுவது ஆகியற்றிற்காக'' 1861ம் ஆண்டுச் சட்டம் XXIVஇன் படி சர்க்காருடன், செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி இந்த வங்கிகள் நியமிக்கப்பட்டன; ''ஏஜென்ஸியான வங்கிமூலம் பட்டுவாடா செய்யப்படாத புழக்கத்தில் இருக்கும் சர்க்காரின் காகித நாணயங்களின் தினசரி சராசரி மீது'' வருடத்திற்கு 3/4 சதவிகிதம் ஈட்டுத் தொகையாக (remuneration) வழங்கப்பட்டது. இந்திய சர்க்காருக்கும் இந்திய விவகார மந்திரிக்குமிடையே கருத்துமோதல் ஏற்பட்டது; காகித நாணயங்களைப் பரவலாக்கவும் பிரபலப்படுத்தவும் அவற்றின் பாத்தியதையை உறுதிப்படுத்தவும் வங்கி களை நியமிப்பதன் மூலம் சாத்தியமாக்கலம் என்று இந்திய சர்க்கார் கருதியது; வெளியிடும் தொழிலையும் வங்கித் தொழிலையும் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கோட்பாட் டிற்கிடை இந்த ஏற்பாடு சமரசம் செய்துகொள்கிறது என்று இந்திய விவசாய மந்திரிக்குத் தோன்றியதால், அவர் அதை விரும்பவில்லை. இரண்டு பக்கத்தினரும் ஒரு உண்மை யைப் புரிந்து கொள்ளவில்லை; உள் நாணயமாற்றும் முறை நிலவியதன் காரணமாக, பல்வேறு மையங்களின் அனுப்பப்பட்ட தொகை அவ்வளவு அதிகமாக இருந்தால், தங்க ளுடைய கிளைகளில் அவற்றைத் தடங்கல் இல்லாமல் பணமாகப் பெறுவதற்கு, காகித நாணயங்களின் புழக்கத்தை வளர்ப்பதற்கு, அவற்றைத் தூண்டுவதற்கு (அவற்றிற்கு அளிக்கப்பட்ட கமிஷன்) போதுமான தொகை இல்லாமல் மிகக் குறைவாக இருந்தது. உள் நாணயப் பரிமாற்றம் அவ்வளவு அதிகம் இருந்ததால், காகித நாணயங்களைப் பிரபலப் படுத்துவதற்கு வங்கிகள் தயங்கின. எனவே, 1866 ஜனவரி 2 முதல், காகித நாணயங்களின் ஏஜெண்டுகள் என்ற பொறுப்பிலிருந்து சர்க்கார் அவற்றை விடுவித்தது (கிழக்கு இந்திய (காகிதப்பணம்), காமன்ஸ் சபையின் விவர அறிக்கையைக் காண்க).

அவ்வாறாயின் ரொக்கப் பணம் கொடுப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கப் பல்வேறு மையங்களுக்கு இங்கும் அங்கும் நிதியை அனுப்பி வைக்க வேண்டிய கட்டாயம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கும். நீண்ட தூரங்களில் உள்ள மையங்களுக்கு, விரைவாக அனுப்பி வைக்கும் (quick transport) வசதிகள் மிகக் குறைவாக இருக்கும்போது, நிதியை அனுப்பி வைக்கும் மிகப் பரந்த ஏற்பாட்டைச் செய்வது சர்க்காருக்கு சாத்தியமில்லை என்பது தெளிவு;[1] எனவே, தான் வெளியிட்ட காகித நாணயங்களை ரொக்கமாக மாற்றும் வசதிகளைச் சர்க்கார் குறைத்தது. காகித நாணயங்களைப் பொறுத்தவரை, அவற்றை வெளியிடும் வட்டாரங்களாக (Circles) சர்க்கார் நாட்டைப் பிரித்தது; இந்தச் செலாவணியின் ஒவ்வொரு வட்டாரமும் உப வட்டாரங்களாக மேலும் பிரிக்கப்பட்டன;[2] அவை எங்கு வெளியாகின்றவோ அந்த வட்டாரம் அல்லது உப வட்டாரத்தின் பெயர் அவற்றின் முகப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும். எந்த வெளியீடும் ஏஜென்ஸியின் காகித நாணயங்களும், அது எந்தச் செலாவணி வட்டாரத்தில், இருக்கிறதோ அந்த வெளியீட்டு வட்டாரத்திற்கு வெளியே மற்ற செலாவணி வட்டாரத்தில் அவை சட்டபூர்வமான நாணயமாற்று சாதனமாக அங்கீகரிக்கப்படமாட்டா; அவற்றின் வட்டாரத்திற்கு வெளியே அவற்றை ரொக்கமாகவும் மாற்றிக் கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல; அதே பிரதான வட்டாரத்திற்குட்பட்ட உப-வட்டாரங்கள் வெளியிட்ட நோட்டுகளும் (ஒரு உபவட்டாரத்தின் நோட்டு) பரஸ்பரம் மற்ற உபவட்டாரங்களிலும் சட்டப்படி செல்லும். ஆனால், எந்த உபவட்டாரம் வெளியிட்டதோ அங்கும், அதன் பிரதான வட்டாரத்திலன்றி வேறு எங்கும் அவற்றைப் பணமாக மாற்ற முடியாது. உப வட்டார நோட்டுக்களை இவ்வாறு இரு இடங்களில் பணமாக மாற்றிக் கொள்ளலாம்; பிரதான வட்டாரத்தின் அலுவலகம் வெளியிட்ட நோட்டுகள், அதன் முழுப் பிராந்தியத்திலும் சட்டபூர்வமான சாதனமாக இருந்தாலும், அதன் சொந்தக் கவுன்டரில் (Counter) மட்டுமே பணமாக மாற்றிக் கொள்ள முடியும்[3]. அதன் உப வட்டார அலுவலகத்தில் கூட மாற்ற முடியாது. எல்லா இடத்திலும் (Universal

---

1. காகிதச் செலாவணி மசோதாவின் மீது மேதகு திரு. லியாங் ஆற்றிய உரை; தேதி 161 பிப்ரவரி 16. எஸ்.எல்.ஸிபி (S.L.C.P) தொகுப்பு VII, பக்கங்கள் 73-74.

2. ஒவ்வொரு உப வட்டாரமும், அதற்குள் வெளியிடும் ஏஜென்ஸிகள் பல இருந்தன; அந்த மையங்கள் நாணயங்கள் வெளியிடும் மையங்கள் மட்டுமே, ரொக்கமாக மாற்றும் மையங்களல்ல.

3. அசௌகரியமான 'வட்டார' அமைப்பு பற்றியும், நோட்டுகளைப் பணமாக மாற்றுவதைச்

encashability) பணமாக மாற்றுவதற்கான ஏற்பாடு இல்லாதது, இக்கட்டான நிலைமை ஏற்படுவதிலிருந்து சர்க்கார் விடுபட்டாலும், நோட்டுகள் மக்களிடையே பிரபலமடைவதற்கு அது ஒரு பெரும் தடையாக இருந்தது என்பது நிரூபணமாயிற்று; நோட்டுகளின் தொகை அப்பொழுது இருந்ததை விட மேலும்குறைவாக இருந்திருந்தாலும் நோட்டு நாணயங்கள் அப்பொழுது இருந்ததைவிட அதிகம் முன்னேறி யிருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமானது.

எனினும், நிர்வாக சர்க்கார் (Executive Government) விரும்பியது போல, இந்தியச் செலாவணியைச் சிக்கனமாக ஆக்க வேண்டுமென்பது[1] இந்தியச் சட்டசபையின் (Indian Legislative) நோக்கமல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவை ஒரு புது பெரு (Peru) நாடாக ஆக்கும்படி காகிதச் செலாவணி மசோதாவைத் தயாரித்தவர் (அதன் மூலகர்த்தா) சட்ட சபைக்கு வேண்டுகோள் விடுத்தார், அந்த நாட்டில் எவ்வளவு குறைந்த தொகையில் நாணயத்தைப் பெற முடியுமோ அவ்வாறு பெறலாம்;[2] ஆனால் சட்டசபை அத்தகைய கொள்கையை ஆதரிப்பதில் ஜாக்கிரதையைக் காண்பித்தது. பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய மையங்கள் அவ்வளவு சிறு எண்ணிக்கையில் இருந்தன; அவை ஒவ்வொன்றிற்கும் உட்பட்ட பிரதேசம் அவ்வளவு பரவலாக இருந்தது; ஒரு வட்டாரத்தின் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு இருந்த தூரம் 700 மைல்கள்; சிறிய மூல அள வுள்ள நோட்டுக்களை அங்கீகரிப்பதில் பயம் ஏற்பட்டது; அவற்றை ஏழை மக்கள் ஏற்க மறுக்க முடியாவிட்டாலும் அவற்றைப் பணமாக மாற்ற அவர்களால் முடியாது.[3] நோட்டுக்களைப் பணமாக மாற்று வதில் உள்ள கஷ்டங்களோடு, அவை இந்திய விவசாயியின் கரங்களில் ''மறைத்து வைக்கப்படும் பொக்கிஷங்களாக'' ஆகி விடலாம் என்றும் சட்டசபை பயந்தது. அவற்றை மழையிலிருந்தும் எறும்புகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள முடியாதபோது, அந்த

---

1. 1860, செப்டம்பர் 22ஆம் தேதியன்று கனம் திரு. ஸ்கோன்ஸ் ஆற்றிய முழு உரையைக் காண்க. S.L.C.P. தொகுப்பு, பக். 1143

2. இந்தியாவில் பேப்பர் நாணயங்களின் மூலகர்த்தாவான திரு. வில்சன் 1860 மார்ச் 3ஆம் தேதி தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''சுருங்கக் கூறவேண்டுமானால், புழக்கத்தில் விடவேண்டுமென்ற யாந்திரிகமான நோக்கத்திற்காக, அவ்வளவு அதிகம் காசுகளைப் பெறுவது, அவற்றினிடத்தில் மாற்றக்கூடிய நோட்டுகளைக் கொடுப்பது அதன் விளைவு இப்படித்தான் இருக்கும்: வெள்ளியை மிகக் குறைந்த செலவில் அல்லது செலவே ஆகாமல் உற்பத்தி செய்யும் ஒரு செழிப்பான சுரங்கத்தை ஒரு மைதானத்தின் நடுவே கண்டுபிடித்தாற்போல்.

3. மேதகு திரு. போர்பேசின் உரைகள், ஜூலை 13, 1861, S.L.C.P 1154.

நோட்டுக்களைத் தன்னிடமிருந்து அகற்றக், கமிஷனாக ஒரு பெரிய தொகையைக் கொடுத்து மீதத்தொகைகள் அவன் ஏற்றுக்கொள்ளும் படி நிர்ப்பந்திக்கப்படலாம்.[1] உலோக நாணயங்களை விரட்டியடிப் பதற்காகக் (அகற்றுவதற்காக) கொண்டுவரப்பட்ட பேப்பர் நாணய மசோதாவின் சிக்கனப்படுத்தும் ஷரத்துகளுக்கு அவ்வளவு அதிகம் எதிராக சட்டசபை இருந்ததால், சட்டபூர்வ மாற்றுச் சாதனமாக உயர்ந்த தொகைக்கான நோட்டுகளுக்கும், சட்டபூர்வமான மாற்று சாதனமாக இல்லாத குறைந்த தொகைகளின் நோட்டுக்களுக்கும் இடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைச் சர்க்காருக்கு அளித்தது.[2] சட்டபூர்வ மாற்றுச் சாதன நோட்டுக்களையே சர்க்கார் தேர்ந்தெடுத்ததால், அவை உயர்ந்த தொகைகளுக்கு இருக்க வேண்டு மென்று தன் பங்கிற்குச் சட்டசபை வற்புறுத்தியது. முதலில் மிகக் குறைந்தபட்சத் தொகைக்கான நோட்டுகள் ரூ. 20/-க்கு என்று கூறியது; பின்னால் அதை ரூ. 10/- ஆகக் குறைக்க ஒத்துக் கொண்டது; 1861இல் ஆட்சேபணையின்றி ஒத்துக் கொண்ட மிகக் குறைந்த தொகை அதுவே. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான், ரூ. 5/-க்கு நோட்டுகள் வெளியிடப்படுவதற்கு சட்டசபை சம்மதம் தெரிவித்தது; அதுவும், அவற்றைப் பணமாக மாற்றிக் கொள்ள அதிகப்படியான சட்டபூர்வ வசதிகள் செய்துகொடுக்க சர்க்கார் வாக்களித்தபோதுதான்[3]. ஒட்டு மொத்தத்தில், இந்திய சட்டசபையின் விருப்பம், இந்தியச் செலா வணியைச் சிக்கனமாக்குவதை விட, அதை அதிகம் பத்திரமான தாக்குவதுதான் (Safer); சந்தேகமில்லாமல் அதுதான்.

இந்தியச் செலாவணி அமைப்பு, அது ஏற்படுத்தப்பட்ட விதத்தில், எவ்வாறு செயல்பட்டது? ஒரு நல்ல செலாவணித் திட்டத்தின் பிரதான முன் தேவைகளில் ஒன்று, மதிப்பின் ஸ்திரத் தன்மை. இந்தியக் கண்ணோட்டத்திலிருந்து இந்தியச் செலா வணியை நாம் கணித்தால், அதன் மதிப்பில் இருந்த வேறுபாடுகள் அத்தகையவையாக இருந்ததால், அந்த அமைப்பு ஒரு தோல்வி என்ற முடிவுக்கு வருவதிலிருந்து தப்புவது கடினம்.

---

1. மேதகு திரு. போர்பேசின் உரை, ஜூலை 13, 1861, Supreme Legislation Council Proceedings, தொ. VII, ப. 768.

2. மே.த. திரு. ஸ்கோன், 1860 செப்டம்பர் 22இல் ஆற்றிய உரை. S.L.C.P. தொகுப்பு VI, பக். 1151.

3. அத்தகைய அதிகப்படியான வசதிகள் பற்றியும் அவற்றைச் சாத்தியமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள, மே.த. சர் ரிச்சாட் டெம்பிளின், காகிதச்

உள் நாட்டு வணிகத்திற்குச் செலாவணியின் போதுமான தன்மையை ஆதாரமாக (Evidence) த் தள்ளுபடியின் (Discount) காகிதத்தை எடுத்துக் கொண்டால், உயர்ந்த நிதி நிபுணரான திரு. வான்டென் பெர்க்கின் கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்; இந்தியப் பணச் சந்தையில் ஏற்பட்ட எதிர்பாராத கடுமையான திருப்பங்களும் (Contortions) திடீர்ப் பெயர்ச்சிகளும் (Transitions) உலகின் எந்த ஒரு பாகத்திலும் எந்த ஒரு பணச் சந்தையிலும் ஏற்படாதவை என்பது அவரது கருத்து[1].

பருவமாறுபாடுகளுக்கு (Seasons) ஏற்ற இறக்கங்களுக்கு (சுழற்சிகளுக்கு -swings). உட்படும் புகழ்பெற்ற நாடு இந்தியா. கோடை மத்தியில், நடவடிக்கைக் குறையும்; வசந்தகாலத்தில் எல்லா சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் சக்தி பெற்று விறுவிறுப்படையும். பருவ காலங்களில் உற்பத்தி மட்டும் பாதிக்கப் படுவதில்லை. பண்டங்களைப் பயன்படுத்துவதிலும் (Consumption) இந்தியாவின் சமுதாய வாழ்க்கை பருவ மாறுபாடுகளால் பாதிக்கப் படுகின்றது. திருமணங்களின் காலம், விடுமுறைக் காலம், திருவிழாக் கள் காலம் என்று உள்ளன. வினியோகம்கூட இந்த பருவ காலத் தன்மையைக் கொண்டுள்ளன. தீர்வை, சம்பளம், லாபத்தில் பங்கு களை அளிப்பது (Dividend), குறிப்பிட்ட காலத்திற்கு என்று (ஆண்டு) கணக்கு முடித்தல், ஆகிய பழக்கங்கள், மேற்கத்தியப் பொருளா தாரத்துடன் ஏற்பட்ட தொடர்பால் வளர்ந்து வருகின்றன. இவை யெல்லாம் பணத்திற்கான சமுதாயத் தேவையால் தாளஇசை போன்றதை ஏற்படுத்துகின்றன; ஆண்டின் ஒருசில கட்டங்களில் அதிகரித்தும், மற்ற சமயங்களில் குறைந்தும் உள்ளன. பொருளாதார, சமூக வாழ்க்கையின் பருவகாலத்தன்மையைப் பொறுத்தவரை, தள்ளுபடி(கழிவு) விகிதத்தில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள், பேரங் களை முடிப்பதற்கு அது குறைவாக இருக்கவேண்டிய(பழைய) சுறுசுறுப்பான மாதங்களில் அதிகமாகவும் சந்தையைச் சோர் வடையவதின்றும் தடுக்க அதிகமாக இருக்க வேண்டிய மந்தமான மாதங்களில் குறைவாக இருப்பதும் தவிர்க்க முடியாதவை. இந்தியப் பணச் சந்தையில் ஏற்பட்ட பயங்கரத் திருப்பங்கள் ஏன் அவ்வளவு

---

1. பிரிட்டிஷ் இந்தியாவின் காகிதச் செலாவணியும் பணச் சந்தையும், பட்டாவியா, 1884, பக்.3.

நாடு முழுவதிலும் விறுவிறுப்பான (தீவிரமான-Busy) மந்தமான(Slack) காலங்கள் ஒரே மாதிரியாக இல்லை. அவை எவ்வாறு பரவியிருந்தன என்பதுபற்றி அநேகமாகச் சரியான (Rightly) விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

அருவருக்கத்தக்கதாக ஆக்கியது எது என்றால், பருவகாலத் தள்ளுபடி விகிதங்கள் அவ்வளவு அசாதாரணமாக இருந்த சூழ்நிலைதான்.[2]

(அடிக்குறிப்புத் தொடர்ச்சி)

மாதங்கள்	கிழக்கு இந்தியா		மேற்கு இந்தியா பம்பாய் & கராச்சி	வடக்கு இந்தியா		தெற்கு இந்தியா மதராஸ் (சென்னை)
	ரங்கூன்	கல்கத்தா		கான்பூர்	லாகூர்	
விறுவிறுப்பான (Busy)	3 மாதங்கள்	4 மாதங்கள்	6 மாதங்கள்	6 மாதங்கள்	9 மாதங்கள்	6 மாதங்கள்
Slank மந்த	9 மாதங்	8 மாதங்	6 மாதங்கள்	6 மாதங்கள்	3மாதங் கள்	3 மாதங்கள்
ஜனவரி	விறுவிறுப்பு (தீவிரம்)	மந்தம்	தீவிரம்	மந்தம்	தீவிரம்	மந்தம்
பிப்ரவரி	,,	,,	,,	தீவிரம்	,,	தீவிரம்
மார்ச்	,,	,,	,,	,,	,,	,,
ஏப்ரல்	மந்தம்	,,	,,	,,	,,	,,
மே	,,	,,	மந்தம்	மந்தம்	,,	,,
ஜூன்	,,	,,	,,	,,	,,	,,
ஜூலை	,,	,,	,,	,,	மந்தம்	,,
ஆகஸ்ட்	,,	தீவிரம்	,,	,,	,,	மந்தம்
செப்டம்பர்	,,	,,	,,	தீவிரம்	,,	,,
அக்டோபர்	,,	,,	,,	,,	தீவிரம்	,,
நவம்பர்	,,	,,	தீவிரம்	,,	,,	,,
டிசம்பர்	,,	மந்தம்	,,	மந்தம்	,,	,,

தீவிரம் (விறுவிறுப்பு)	ஜனவரி முதல் மார்ச் வரை	ஆகஸ்டு முதல் நவம்பர் வரை	நவம்பர் முதல் ஏப்ரல் வரை	பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை	ஏப்ரல் முதல் ஜூன் வரை	பிப்ரவரி முதல் ஜூலை வரை
மந்தம்	ஏப்ரல் முதல் டிசம்பர் வரை	டிசம்பர் முதல் ஜூலை வரை	மே முதல் அக்டோபர் வரை	மே முதல் ஆகஸ்டு வரை	ஜூலை முதல் செப்டம்பர் வரை	ஆகஸ்டு முதல் ஜனவரி வரை
தீவிரம்	,,	,,	,,	செப்டம்பர் முதல் நவம்பர் வரை	அக்டோபர் முதல் மார்ச் வரை	,,
மந்தம்	,,	,,	,,	டிசம்பர் முதல் ஜனவரி வரை	,,	,,

2. தனிநபர்களின் 30 நாட்கள் அல்லது அதற்கும் மேலும் கொண்ட பத்திரங்கள் மீது வங்காள வங்கி வழங்கிய வட்டிவிகிதங்கள் மாற்றப்பட்டன:

1876இல் 16 தடவைகள் 6 1/2 சதவிகிதம் குறைவானதாகவும் 13 1/2 சதவிகிதம் அதிகபட்சமாகவும்

1877இல் 21 தடவைகள் 7 1/2% குறைவானதாகவும் 14 0/0

அத்தகைய ஒரு சந்தையின் விசித்திரத் தன்மைக்கு விளக்கம் வேண்டுமெனில், நாட்டின் பணத் தேவையைப் பூர்த்தி செய்வதில் (சப்ளை) ஒரே சீராக இல்லாததைத்தான் சொல்லவேண்டும். பணம் ஒரேசீரான (Uniform) விலையில் கிடைக்கவேண்டுமெனில், அதன் தேவையைப் பொறுத்துக் கிடைக்கும்படி முறைப்படுத்தவேண்டும். பணத்தின் தேவையை எப்பொழுதும் திட்டவட்டமாக நிர்ணயிக்க முடியாது. ஜனத்தொகைப்பெருக்கம், வியாபாரப் பெருக்கம் முதலான காரணமாக வருடத்திற்கு வருடம் பணத்தின் தேவையில் ஏற்படும் மாற்றம். செல்வாக்குகளால் பணத்தின் தேவையில் ஏற்படும் பருவ கால, ஏற்ற, இறக்கங்களிலிருந்து அடிப்படையில் (சாராம்சத்தில்) வேறுவகையைச் சேர்ந்தது என்பதைப் புரிந்துகொள்ளும்வரையில் எந்தப் பயனும் ஏற்படாது. ஒரு நன்கு முறைப்படுத்தப்பட்ட செலா வணியில், பணத்திற்கான தேவையில் (Demand) ஏற்படும் மாற்றங் களில் இந்த இரு வித்தியாசமான வகைகளைப்பிரித்துப் பார்க்க வேண்டியது அவசியம்; ஒன்று, ஸ்திரத்தன்மை கொண்டதாகவும் விரிவுபடுத்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும். மற்றது நெகிழ்வுத் தன்மை (Elasticity) கொண்டதாகவும் இருக்கவேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கும்போது காகிதப் பணம் நெகிழ்வைத் தருவதுபோல் உறுதித் தன்மைக்கும், ஸ்திரத்தன்மைக்கும் ஏற்ப, விசேஷமாகத் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும்படி உலோக நாணயம் உள்ளது என்றும் தோன்றுகிறது. அவற்றின் தனித்தனிப் பாத்திரங்கள் பொருத்தமான தாகத் தோன்றுவதால், ஒரு நல்ல செலாவணியைப் பளுவானதாக அல்லது ஆபத்தானதாக ஆக்காமல் அவை தங்களின் தனித்தனி கடமைகளைப் பரஸ்பரம் மாற்றிக் (Interchange) கொள்ள முடியாது என்று வலியுறுத்தப்படுகிறது.[1] சிறிய வியாபாரப் பரிமாற்றங்கள் நேரடிப் பண்டமாற்று முறையில் நடப்பதைத் தவிர எந்த ஒரு

(அடிக்குறிப்பு முன்பக்கத் தொடர்ச்சி)

1880இல் 8	,,	5 1/2%	,,	9 1/2 %	,,
1881இல் 9	,,	5 1/2 %	,,	10 1/2 %	,,
1882இல் 9	,,	6 1/2 %	,,	12 1/2 %	,,
1883இல் 14	,,	7 1/2 %	,,	10 1/2 %	,,

வான் டென் பெர்க், மேலே காட்டியது

1. பேராசிரியர் ஆர்.பி.பால்கனர், இன்டியானா பொலிஸ் கன்வென்ஷனின் நிதிக் கமிஷனின் விசாரணைபற்றி விவாதம் (A Discussion of the interrogative of the Monetary Commission of the Indianapolis Convention) 1898.

முன்னேறிய நாட்டின் பண்டங்களை(விலைக்கு) வாங்கும் சாதன மாக எப்பொழுதும் பணமும் கடன் பொறுப்பில் வாங்குவதும் சேர்ந்தவை யாக இருக்கும் என்பது இந்தக் கருத்தின் ஆரோக்கியத் தன்மைக்குச் சான்று என்று கொள்ளலாம்.

இந்தியச் செலாவணியைப் பார்த்தாலும், அது, பணம், கடன் (குறிப்பிட்ட காலத்தில் அந்தத் தொகையைக் கொடுப்பது என்ற அடிப்படையில்) என்ற கலவையைக் கொண்டது என்பதைக் காணலாம்; அதனால், விரிவிற்கும் நெகிழ்விற்கும் வழிவகைகளை அது உட்கொண்டிருந்தது என்று ஊகம் செய்து (எடுத்துக்) கொள்ளலாம். ஆனால், நாம் அதை ஆராயும்போது, நெகிழ்வுதிற னுக்கு எத்தகைய வழிமுறையையும் அது செய்துகொள்ளவில்லை என்பதை நாம் காண்கிறோம். பருவகாலத் தேவைகளுக்கு ஏற்ப அதன் கடன்பகுதியை விரிவடைய அல்லது சுருங்குவதற்கு அனுமதிக் காததோடு, தேவையின் அளவில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் எடுக்காமல் காகித நாணயச் சட்டம் அதை வெளியிடுவதில் கடுமை யான வரம்பை ஏற்படுத்திற்று. இங்குத்தான் இந்தியப் பணச்சந்தை யில் கழிவு விகிதங்களில் (Discount Rates) ஏற்படும் ''குலைவு களுக்கு''ஆன காரணங்களில் ஒன்றைக் காணலாம். திரு.வான்டென் பெர்க் சுட்டிக் காட்டியது போல்,

> ''வாணிக நடவடிக்கைளுக்குத் தேவைப்படுவது தங்கம் அல்லது வெள்ளி நாணயங்களைவிடச் சுலபமான நாணய மாற்றுச்சாதனம் என்பதால், இந்திய சட்டசபையால் நிறுவப் பட்டதாகிய நாணயம் அந்தநோக்கைப் பூரணமாக நிறை வேற்றுகிறது. ஆனால், மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள செலாவணியை வெளியிடுவதற்கும், தங்களின் கணக்குப் பட்டியல்கள் அல்லது பண்டங்களை நிலவும் நாணயமாற்றுச் சாதனங்களுக்கு மாற்றிக்கொள்ள மக்களின் தேவைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
>
> பணச்சந்தையில் எதிர்பாராமல் ஏற்படும் குலைவு களுக்கும் திடீர் மாற்றங்களுக்கும் ஒரே காரணமாகும் இது, வாணிக நடவடிக்கைகளுக்கு முற்றிலும் தீங்கு விளைவிக்கிறது.
>
> பிரிட்டிஷ் இந்திய வியாபாரம் தொடர்ந்து இந்தக் கஷ்டத்தைத் தான் எதிர்நோக்குகிறது.''[1]

இந்தக் கருத்து மேலெழுந்தவாரியானது என்று ஆட்சேபணை கிளப்பப்படலாம். இந்தியக் காகிதச் செலாவணிச் சட்டம், அதன் எல்லா அத்தியாவசிய அம்சங்களிலும் 1844ஆம் ஆண்டு ஆங்கில வங்கிச் சட்டத்தின் முழு மறுபதிப்பே. ஆங்கில வங்கிச் சட்டத்தைப் போலவே, மக்கள் நம்பிக்கை பெறும் நோட்டுகளை வெளியிடுவதற்கு ஒரு திட்டவட்டமான வரம்பை ஏற்படுத்துகிறது. அதுபோலவே (நோட்டு கள்) வெளியிடும் தொழிலை வங்கித் தொழிலிருந்து பிரித்தது[1] இந்தியாவிலுள்ள வங்கிகளைக் கமிஷன் வங்கிகளாக மட்டுமே ஆக்கியது என்றால், அது வங்கி சாசனச்சட்டத்தை அப்படியே பிரதி எடுத்ததால்தான். அந்தச் சட்டம், இங்கிலாந்து வங்கிகளுக்கு - இங்கிலாந்து வங்கி உள்ளிட்ட அளிக்கப்பட்ட நோட்டுகளை வெளி யிடும் உரிமையைப் பறித்துக்கொண்டது. எனினும், இந்தியப் பணச் சந்தையில் ஏற்பட்டதுபோல இங்கிலாந்துப் பணச்சந்தை அத்தகைய ''குலைவுகளுக்கும் திடீர் மாற்றங்களுக்கும்'' உட்படவில்லை. அதற்கு மாறாக, ''இங்கிலாந்து வங்கியும் பிற வங்கி உரிமையாளர் களும் ஒரு குறுக்கப்பட்ட அமைப்பின் கீழ் எப்படிச் செய்திருப் பார்களோ, அவ்வாறே, இப்பொழுது 1884 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் முன்பணம் கொடுப்பதில் (கடன்)(Advances) அதிகரிப்பது அல்லது குறைப்பது என்ற தாராள மனப்பான்மையைப் பொதுவாகக் கொண் டுள்ளனர்,'' என்பது திரு. ஜீவான்ஸின்[2] தெளிவான கருத்து. அவர் வேறு இடத்தில் விவாதிப்பதுபோல, ''நாணயமான செலாவணியை வெளியிடுவதில் கட்டுப்பாடுவிதிப்பது தன்னிச்சையானது; மக்கள் அதிகப்பணத்தை விரும்பினால் உலோக நாணயத்தை அவர்கள் எப்பொழுதும் உபயோகிக்கமுடியும்; வரம்பு விதித்துள்ளது பணத் தில் மேல் இல்லை; அதன் பிரதிநிதித்துவப் பங்கின்மீது''[3] அதன் முன்னோடி மாதிரியான ஆங்கிலச்சட்டம் தோற்றுவிக்காத தீங்குகளை

---

1. ''பணச்சந்தையில் அடிக்கடி நிகழும் இலையுதிர்காலநிர்ப்பந்தமும் இங்கிலாந்து வங்கியின் நடவடிக்கையும்'' என்ற அவரது கட்டுரை. செலாவணியிலும் நிதியிலும் ஆய்வு. (ஆர்.பாக்ஸ்வெல்(), 1884 ப.179 . ஆனால் மூலத்தில் ஒரு எழுத்துப்பிழை ஏற்பட்டிருக்கிறது - மேற்கோள்களின் கடைசியில்; அது ''ஒரு கட்டுப்படுத்தப்பட்ட அமைப்பின் கீழ் அவை இருப்பதுபோல''

2. '' பணமும் நாணயமாற்று அமைப்பும்''ஹேகன்பால், லண்டன், 1890, பக்.. 225

3. இங்கிலீஷ் வங்கி உரிமைச்சட்டம் செய்ததைவிட அதிகமாகப் பிரிப்பது என்ற கோட்பாட்டை இந்தியக் காகிதச் செலாவணிச் சட்டம் முன்கொண்டு சென்றது. வங்கிஇலாக்காவின் கீழ், வெளியிடும் இலாக்கா செயல்படுவதைத் தடைசெய்வதோடில் லாமல், இரண்டும் ஒரே கட்டிடத்தில் இயங்குவதையும் அது தடை செய்தது. வங்கி உரிமைச்சட்டம் பற்றிய விவாதத்தில் அத்தகையரீதியில் பிரிப்பதை சர்.சார்லஸ் ஒட் கற்பனை செய்தார். (Hausard Parliamentary debates தொகுப்பு LXXIV ப.136) அப்பொழுது அவர் ஏமாற்றம் அடைந்தாலும், இந்திய விவகார மந்திரியாக அவர் ஆனதும் அவரது லட்சியத்தை அடைய அவர் தவறவில்லை.

இந்திய காகிதச் செலாவணிச் சட்டம் ஏற்படுத்தியதற்கான காரணம் என்ன? ஒரு முன்மாதிரி இருக்கும்போது அத்தகைய சட்டத்திற்கு உட்பட்ட ஒரு பணச்சந்தையில் அத்தகைய குலைவுகளுக்கு அவசிய மில்லை. நோட்டுக்களை வெளியிடுவதில் வரம்பு ஏற்படுத்தியதன் மூலம், பருவகாலத் தேவைகளுக்குக்கூட உலோக நாணயங்களை உபயோகப்படுத்துவதைத் தவிர வேறு எந்தவகையையும் சட்டம் செய்யவில்லை எனத் தோன்றுகிறது. கடன் பெறுவதற்கு நோட்டுகள் தான் ஒரு வடிவம் என்றால், அது உண்மையாக இருக்கலாம். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல. வங்கிகள் வெளியிடும் கொடுப்பதாக வாக்களிக்கும் கடன்பத்திர வடிவத்தை அது எடுக்க லாம். வங்கிக்குக் கொடுக்கும்படி உத்தரவிடும் வடிவத்தையும் அது எடுக்கலாம்; அவற்றை உபயோகித்த மக்களின் சமுதாயப் பொருளா தாரத்தில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாமல் செய்யலாம். சட்டத்தின் ஷரத்துகளின்படி, வாக்குறுதிப் பத்திரங்களை வெளி யிடுவதில் கட்டுப்பாடுகளுக்கு வங்கிகள் உட்பட்டால், ''பதிலாக உலோக நாணயத்தை உபயோகிப்பதுதான்''அவர்களுக்குள்ள ஒரே வழி என்பதாகாது''. ஏனெனில், அவை விரும்பும் எண்ணிக்கையில் கொடுக்கப்படவேண்டும் என்ற உத்தரவுகளை (Orders to pay) மதிக்க ஒப்புகொள்ளவும் அதே அளவு உரிமை உண்டு. சட்டம் வெற்றி பெறுமா தோல்வியடையுமா என்பது, இந்த இரண்டு வழிகளில் வங்கிகள் எதை நடைமுறைப்படுத்தப் போகின்றன என்பதைப் பொறுத்துள்ளது. சட்டத்தின் விதிகளுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்பவர்கள், உலோக நாணயத்தைப் பயன்படுத்துபவர்கள் இந்த ''குலைவுகளை''ப் பொறுத்துக் கொண்டாக வேண்டும்; பல்வேறு கடன் உருவங்களைப் பயன்படுத்திச் சட்டத்தை ஏமாற்றுபவர்கள் இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வர். சட்டம் இங்கிலாந்தில் ஏன் அவ்வளவு நன்றாகச் செயல்பட்டது, இந்தியாவில் அவ்வளவு மோசமாகச் செயல்பட்டது என்பதற்கான பிரதான காரணம் இதுதான்; நோட்டுகள் முறைக்குப்பதிலாக இங்கிலாந்து வங்கிகள் கடனுக் காக உத்தரவு அல்லது காசோலை (Cheques) முறையைக் கொண்டு வருவதில் வெற்றி பெற்றன; துரதிருஷ்டவசமாக இந்திய வங்கிகள் தோல்வியடைந்தன. எனினும், அவை தோற்றுப்போனது தவிர்க்க முடியாதது. காசோலை முறையை உபயோகிப்பதற்கு முன் தேவை கல்வி கற்றறிந்த மக்கள்; அத்துடன் மக்களின் தாய்மொழியில் தொழிலை நடத்தும் வங்கி அமைப்பு. இந்த இரு நிபந்தனைகளில் எதுவும் இந்தியாவில் இல்லை. மக்களில் பெரும்பான்மையோர் கல்வியறிவு இல்லாதவர்கள்; அவ்வாறாக நிலைமை இல்லாவிடினும்

தொழிலை நடத்த வங்கிகள் மறுக்கின்றன. மேலும் காசோலை அமைப்பின் வளர்ச்சிக்கு முன்தேவை, வங்கிகளின் கிளைகள் வலைப் பின்னலைப் போல் பரவலாக இருப்பதாகும். இதுவும் இந்தியாவில் நிறைவேற்றப்படவில்லை. வங்கி அமைப்பு இல்லாத போது, கையாள்வதற்கு மிகவும் மோசமான சாதனம் ஒரு காசோலை தான். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வங்கியிடம் சமர்ப்பிக்கப் படாவிடில், ஒரு காசோலை சாரமற்றதாகவும் மதிப்பில்லாமலும் போகும். எனவே, பாதுகாக்கும் சொத்தில் நோட்டுகளைவிடக் காசோலைகள் குறைந்த மதிப்புள்ளவையாகின்றன. நோட்டுகளின் நெகிழ்வற்ற தன்மையைத் திருந்தப் போதுமான அளவு இந்தியக் காசோலைகள் விரிவாக வராதது அதிசயமல்ல.

நோட்டுகளைத் தவிரக் கடன் வகைகளுக்குப் பயன்படுத்த வேறுவடிவத்தை பயன்படுத்துவதில் இந்திய வங்கிகள் வெற்றி பெற்றிருந்தாலும்கூட, இங்கிலீஷ் வங்கிகள் பணச்சந்தையை எந்த அளவு இலகுவாக்கினவோ, அந்த அளவுக்கு இந்திய வங்கிகள் செய் திருக்கமுடியாது. வங்கித்தொழிலின் அம்சங்களில் ஒன்று, கோரப் படும்போது ரொக்கமாகப் பணம் கொடுக்க வேண்டிய பொறுப் புடைமையில், கடன்பாட்டில் (liabilities) அடங்கியுள்ளது. அவற்றின் எல்லா சேமிப்புகளும் (deposits) ரொக்கப் பணமாகப் பெறப்பட்டால் அவற்றின் கடன்பாடு அபாய நேர்வு எதுவும் இல்லாதிருக்கும். உண்மையில், அவற்றின் சேமிப்புகளில் பெரும்பகுதி பட்டியல்களாக (bills) உள்ளன; அவற்றிற்கு ரொக்கமாகக் கொடுக்க உறுதியளிப்பது அவற்றின் (வங்கிகளின்) தொழிலாகும். எனவே, வங்கி நடத்தும் ஒருவர், முதலாவதாகக் கவனிக்க வேண்டியவற்றில் ஒன்று, பட்டியல்களின் சேமிப்பில் (Credit Deposits) ரொக்கச் சேமிப்பு எந்த விகிதாசாரத்தில் இருக்கிறது என்பதை அவர் கணக்கில் கொள்ள வேண்டும். பட்டியல்களின் சேமிப்புத் தொகையில் உயர்வு ஏற்பட் டாலும் , ரொக்க சேமிப்பில் குறைவு ஏற்பட்டாலும் விகிதாச்சாரம் பாதகமாகப் பாதிக்கப்படும். இதில் எதுவாக இருந் தாலும், அவரின் மொத்தக் கடன்பாட்டில், அவரது மொத்த ரொக்கச் சேமிப்பின் விகிதம் குறைக்கப்படுவதால், அதுவரையில் உள்ளவற்றிற்கு ரொக்க மாகக் கொடுக்கும் அவரது சக்தி பலஹீனப்படுகிறது. பில்களின் சேமிப்பு மட்டுமிஞ்சிய அளவு விரிவடைவதற்கு எதிராக அவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். காசோலை முறையில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், ஏதாவது ஒன்று அல்லது மற்ற நேரத்தில் ஏதோ கொஞ்சம் ரொக்கப்பணம் வாபஸ் பெறப்படுவதற்கான பதுங்கியிருக்கும் சாத்தியக்கூறு எப்பொழுதும் இருக்கிறது. கையில் குறிப்பிடத்தக்க குறைந்தபட்சக் (ரிசர்வ்) கையிருப்பை வங்கி

உரிமையாளர் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். இந்தக் கையிருப்பு எவ்வளவு அதிகம் இருக்கவேண்டும் என்பது, ரொக்கமாக வாபஸ் பெறப்படுவதற்கு என்ன சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதைப் பொறுத்தது. விஷயம் என்னவெனில், எந்த அளவுக்கு ரிசர்வ் இருக்கிறதோ, அதைப் பொறுத்து வங்கியின் கடன் வழங்கும் சக்தி குறைக்கப்படுகிறது. வங்கியின் ரிசர்வ் ஏற்கனவே குறைந்தபட்ச அளவில் இருந்தால், அது கழிவு தள்ளிக் கொடுப்பதை (Discounting) நிறுத்தவேண்டும் அல்லது தனது கருவூலப் பெட்டியிலிருந்து எடுத்த ரொக்கப் பணத்தைத் திரும்பப் பெற்று தன் நிலையைப் பலப்படுத்த வேண்டும். திரும்பப் பெறப்பட்ட பணம் வங்கிகளுக்குக் கிட்டக் கூடியதாக நடப்பு கொடுக்கல் வாங்கலில் வைக்கப்பட்டிருந்தால், அவை, தங்களுடைய நிலையை உடனே மீண்டும் பலப்படுத்திக் கொள்ளலாம்; ஆனால் பணச்சந்தையின் தேவைகளைச் சமாளிப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து இந்திய வங்கிகளின் நிலை என்ன? காசோலை முறை இல்லாமல் இருந்ததால், ரொக்கப் பணம் திரும்பப் பெறப்படும் சாத்தியப்பாடுகள் மிக அதிகம்; அதன் காரணமாக ரிசர்வ் அதிகமாகத் தேவைப்பட்டது. அவற்றின் நிதிகள் இவ்வாறு சேமஒதுக்கீட்டிற்காக வைக்கப்பட்டிருப்பதால், கழிவு அளிப்பதற்கான உதவியாதாரம் சிறியதாக இருந்தது. வாபஸ் பெறப்பட்ட பணம் அவற்றிற்கு விரைவாகத் திரும்பி வராததால், கடன் வழங்குபவர்கள் என்ற அவர்களின் நிலை மேலும் பலஹீனமானது. இதன் விளைவு என்னவெனில், தங்களின் ரொக்கத் தொகைக்கும் கடன் தொகைகளுக்கும் இடையே தேவைப்படும் விகிதாசாரத்தைப் பாதுகாப்பதற்காக, இங்கிலீஷ் வங்கிகளைவிடக், கழிவு அளவை அதிகமான அளவு வெட்டிக் குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாயின இந்திய வங்கிகள். இது சம்பந்தமாகக் கிளை வங்கி முறை இல்லாதது போக்கப்பட வேண்டிய ஒரு மிக முக்கியமான தேவை என்பதாகும். ஆனால், கிளை வங்கிகள் இருந்திருந்தாலும், வாபஸ் பெறப்பட்டப் பணம் திரும்பி வரமுடியாமல் இருக்கலாம்; ஏனெனில், வங்கித் தொழிலின் நடப்பு வகைகளில் அது விடப்படவில்லை. அது சர்க்கார் கஜானாக்களில் முடக்கி வைக்கப்பட்டிருந்தது; அவற்றின் செயல்பாடுகள் நாட்டின் வங்கிகளின் வணிக நடவடிக்கைகளிலிருந்து சுதந்திரமானவை. சுதந்திரமாகச் செயல்படும் ஒரு கஜானாவை சர்க்கார் வைத்திருப்பதில் உள்ளார்ந்த ரீதியில் தவறு எதுவும் இல்லை என்பது உண்மையே; அதனுடைய

தேவையில்லை. ஆனால், இந்திய கஜானாவின் செயல்பாடுகள் வணிகத்தின் தேவைகளுக்கு எதிராக இருந்தன. பதுக்கி வைக்கப் பட்டிருந்தவற்றை விடுவித்திருக்க வேண்டிய நேரத்தில், அவற்றைப் பூட்டி வைத்திருந்தது.

எனவே, இந்தியப் பணச் சந்தையைக் ''குலைவுபடுத்திய'' காரணங்கள் கடன் வழங்கும் அமைப்பு நெகிழ்வற்ற தன்மை கொண்டிருந்ததும், சுதந்திரமாகச் செயல்படும் கஜானா முறையும்; நாட்டின் பண சப்ளை (வழங்கீடு) யைப் பாதிக்கும் பிரதான அம்சங்கள் இவை. (அட்டவணை I ஐக் காண்க). கழிமான விகிதத் தில் ஏற்பட்ட அத்தகைய குலைவுகளின் தீங்கான விளைவுகளை மிகைப்படுத்திக் கூறமுடியாது[1] அநேகமாக ஒவ்வொரு வணிகரும் ஒரு குறிப்பிட்ட காலங்களில், ஆண்டு முழுவதும் இல்லாவிடினும், கடன் வாங்கிய மூலதனத்தைப் பிரதானமான ஆதாரமாகக் கொள்ள வேண்டிய ஒரு பொருளாதாரத்தில், கழிமான விகிதங்களில் ஏற்படும் திடீர் ஏற்றம் அல்லது அதிகப்படியான திடீர் வீழ்ச்சி (Fall), குறை வான விலைக்கு விற்கும் அல்லது அதிகமான விலைக்கு விற்கும் நிலைக்கு இட்டுச் செல்லும். அத்தகைய ஏற்ற இறக்கங்கள் வணிக நடவடிக்கைகளில் தீங்கு விளைவிக்கும்; வணிகத்தின் செலவுகள் அதிகமாகும். நுகர் வோருக்கு அதிக விலையில் அளிக்கப்படும். இவை விலைகளில் ஊஞ்சலாட்டங்களைக் கொண்டு வருகின்றன; சூதாட்டத்தை ஊக்குவிக்கும், பீதிக்கு வழி வகுக்கும்.

வேறு எந்த நாட்டிலும் இத்தகைய தீங்குகள் நிகழ்ந்திருந் தால், அவற்றைச் சமாளிப்பதற்குத் தக்க, பொருத்தமான நடவடிக்கை களை மேற்கொள்ள அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பர். அவை வணிக சமுதாயத்தின் மீது ஏற்படுத்திய துயரங்களைப் போக்க எந்த உருப்படியான முயற்சிகளும் எடுக்காமலிருந்தது ஒரு விசித்திரமான உண்மை. காகித நாணயச் செலாவணியைச் சீர்திருத்தம் செய்வது அல்லது சுதந்திரமாக இயங்கும் சர்க்கார் கஜானா அமைப்பை அகற்றுவது ஆகியவை நிலைமையை இலகுவாக்கியிருக்கும்; இரண்டையும் சீர்திருத்தம் செய்திருந்தால் மேலும், அதிகம் நல்ல தாக இருந்திருக்கும். எனினும், பொதுவான சமூகம் காகிதச் செலா வணியில் ஒரு மாற்றத்தை விரும்பவில்லை. ஆனால், சுதந்திரமாக

---

1. அமெரிக்காவின் அனுபவத்திற்கு, இ.டபில்யூ, கெம்மேரரின், ''நியூயார்க் பணச் சந்தையில் பருவகால மாறுபாடுகள்'' - **அமெரிக்கன் எகனாமிக் ரெவ்யூ**வில் வெளி வந்தது. மார்ச் 1911.

வரைபடம் - 1

இந்தியாவில் தள்ளுபடி விகிதங்கள்



இயங்கும் கஜானாவை மூடிவிட வேண்டுமென்பதில் அக்கறை காட்டிற்று.[1] மறுபக்கத்தில், சுதந்திரமான கஜானாக்களை அகற்ற சர்க்கார் மறுத்தது;[2] வணிக சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற தார்மீகக்

---

1. '1880ல் இந்தியா'' - ரிச்சார்ட் டெம்பிள், ப. 469; சர் சார்லஸ் உட்டின், ''இந்திய விவகாரங்களைப் பரிபாலித்தல்''; மேலும் 'இந்திய ராஜதந்திரி'' ஜனவரி 15, 1884.

2. என்றாலும், மாகாண வங்கியின் தலைமை அலுவலகமும் கிளை அலுவலகங்களும் இயங்கிய சில மையங்களில், சுதந்திரமாகச் செயல்படும் கஜானா தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நோட்டுகளை வெளியிடும் உரிமையை இழந்ததற்கு நஷ்ட ஈடாக, 1861ஆம் ஆண்டு XXIV சட்டத்தின்படி மாகாண வங்கிகளுக்குச் சில குறிப்பிட்ட சலுகைகள் சர்க்காரால் வழங்கப்பட்டது. அந்தச் சலுகைகளில் ஒன்று, அந்த வங்கிகள் சர்க்காரின் மீதியுள்ள பணத்தை உபயோகிக்கலாம் என்பதாகும். 1862இல் செய்து கொள்ளப்பட்ட முதல் ஒப்பந்தத்தின்படி, சர்க்காரின் மீதத் தொகை பற்றிக் கீழ்க்கண்ட சலுகைகளை சர்க்கார் வழங்கியது.1) ''ஒப்பந்தம் தவிரப் பெறப்பட்ட எல்லாப் பணத்தையும் மீதித் தொகையையும் அல்லது பொது கஜானாவில் உள்ள பணத்தையும்'' வங்கித் தொழிலின் நோக்கங்களுக்காகத் தடங்கலின்றி உபயோகிக்கலாம்; - அதற்குள்ள வரம்பு வங்காள வங்கிக்கு 70லட்சமும், பம்பாய் வங்கிக்கு 40 லட்சமும், மதராஸ் வங்கிக்கு 15 லட்சமுமாகும்; (2) இந்தத் தொகைகளுக்கு மேற்பட்ட பணத்தை சேமக் காப்பறையில் (Strong room) வைத்திருந்து, கோரப்படும்போதோ, சர்க்கார் தஸ்தாவேஜுகளிலோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட உறுதிப்பத்திரங்களிலோ முதலீடு செய்யும் உரிமை; இதற்கான நிபந்தனை: ''அதிகப்படியான ரொக்கத் தொகைக்கு எல்லாச் சந்தர்ப்பத்திலும் சர்க்காருக்கு பதில் சொல்லவும் கணக்கு காட்டவும் வேண்டும்'' (3) யதார்த்தத்தில் உள்ள மீதத் தொகைக்கும் வங்காள வங்கியைப் பொறுத்தவரை 50 லட்சத்திற்கும், பம்பாய் வங்கியைப் பொறுத்தவரை 30 லட்சத்திற்கும், மதராஸ் வங்கியைப் பொறுத்த வரை 10 லட்சத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகைக்கு சர்க்காரிடமிருந்து வட்டி பெறும் உரிமை (4) அவற்றின் (வங்கிகளின்) கிளைகளில் மீதமுள்ள சர்க்கார் பணத்தை இதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு உபயோகிக்க வங்கிகளுக்கு அனுமதி; தலைமை அலுவலக ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு பரிவர்த் தனைக்கும் பொருத்தமான எல்லை விதிக்கப்படும்.

இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட ஒரு ஆண்டுக்குப் பின், வங்காள வங்கியோடு கஷ்டங்கள் ஏற்பட்டன; அது மூடக்கி (locked up) வைத்திருந்த தொகை, சர்க்கார் வைத்திருந்த பொது மீதத்தொகையின் மீது எழுப்பப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத அளவுக்கு இருந்தது. எனவே, இந்த ஒப்பந்தங்களை மாற்றி அமைப்பதற்காக 1863-ஆம் ஆண்டு விவாதங்கள் தொடங்கப்பட்டன; மாற்றிமைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் 1866 ஜனவரி 2-ஆம் தேதி அமுலுக்கு வந்தன. பொது (நிதி) மீதித் தொகைகளைப் (Public balance) பற்றிக் கீழ்க்கண்ட ஷரத்துகள் (அந்த ஒப்பந்தங்களில்) சேர்க்கப்பட்டன: (1) இந்த வங்கிகளின் தலைமை அலுவலகத்தில் ''ஒரு சராசரி ரொக்கத் தொகையாக'' வங்காள வங்கியைப் பொறுத்தவரை 70 லட்சமும், பம்பாய் வங்கியைப் பொறுத்தவரை 40 லட்சமும், மதராஸ் வங்கியைப் பொறுத்தவரை 25 லட்சமும் இருப்பதற்கு சர்க்கார் உத்திரவாதம் அளிப்பது (பொறுப்பேற்பது) ''சௌகரியமான முறையில் இது செய்யப்படும் வரை.'' (2) வங்கித் தொழில் நோக்கங்களுக்காக, (அவ்வப்போது) டெபாசிட் செய்யப்பட்ட தொகைகளின் மொத்த மீதத்தொகையை உபயோகிக்க அனுமதி. (3) சர்க்காரின் மீதத்தொகை, வங்காள வங்கி, பம்பாய் வங்கி, மதராஸ் வங்கி தலைமை அலுவலகங்களின் குறைந்தபட்சம் முறையே 45 லட்சம், 25 லட்சம், 20 லட்சம் ஆகிய தொகைகளுக்குக் குறைவாக இருந்தால், சர்க்காரிடமிருந்து வட்டி பெறும் உரிமை. (4) ''கிளை அலுவலகங்களில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் உள்ள மொத்த மீதத் தொகையையும்'' வங்கித் தொழில் நோக்கங்களுக்காகப்

கடமையைக் கூட மறுதலித்தது; செலாவணியைப் பூட்டி அடைத்து வைப்பதன் மூலம் மூலதனத்தை[1]ப் பூட்டி அடைத்து வைக்கவில்லை என்ற ஒரு ஏட்டுச் சுரைக்காய் வாதத்தை முன்வைத்தது. ஒரு

(முன்பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தும் உரிமை; அது கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு:- சர்க்கார் மீதத் தொகை அந்தக் கிளையில் இருக்கும் அளவிற்கு சர்க்காரின் டிராப்ட்களுக்கு எல்லா சமயத்திலும் பணம் தரத் தயாராக இருக்க வேண்டும். மாற்றி யுமைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் 1874 மார்ச் 1 வரை அமுலில் இருந்தன. மாநில வங்கிகளின் உரிமைப் பத்திரங்களை மறுபரிசீலனை செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டது; சர்க்காரின் மீத ரொக்கத் தொகைகளை முழுவதையும் உபயோகிக்கும் உரிமையை வங்கிகளுக்குத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்பது சர்க்காரின் நோக்கமாக இருந்தது. பம்பாய் வங்கியோடு சிரமங்கள் 1874இல் ஏற்பட்டது; தன்னுடைய மீதத் தொகையை அப்பொழுது சர்க்கார் பெற முடிய வில்லை. சர்க்கார் மிச்சத் தொகையை, வங்கிகளின் மிச்சத்தொகையோடு இரண்டறக் கலந்து, அவற்றை வங்கியின் பொறுப்பில் வைக்கும் கொள்கையைப் புனர்பரிசீலனை செய்யும் நிலையை இது ஏற்படுத்திற்று. ஒரு நீண்ட விவாதத்திற்குப்பின், மாகாண தலைநகரங்களில் சேமத்தொகை (Reserve) கஜானாக்களை அமைத்து, சுதந்திரமாகச் செயல்படும் கஜானாக்கள் என்ற முறையை சர்க்கார் மீண்டும் கொண்டுவந்தது; இந்த ரிசர்வ் வங்கிகள், முன்னால் மாநில வங்கிகளிடம் வைத்திருந்த சர்க்கார் மிச்சத் தொகையைத் தங்களிடம் வைத்துக் கொண்டன - இந்த நிகழ்ச்சியின் வரலாறு பற்றித் தெரிந்து கொள்ள, (ஹவுஸ் ஆப் காமன்ஸ்) காமன்ஸ் சபை நிகழ்ச்சிகள், 1864ஆம் ஆண்டின் எண். 109, 505யையும் மாகாண வங்கிகளின் செயல்பாடுகள் பற்றி (An Account of Presidency Banks), அத். VII

1. சுதந்திரமான கஜானாக்கள் முறைக்கு அங்கீகாரம் அளித்து 1875ஆம் ஆண்டு மே 16இல் அனுப்பிய அஞ்சலில் இந்திய விவகார மந்திரி வங்கிகளைப் பின்வருமாறு கண்டித்தார்: சமுதாயத்தின் சேமிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தாத சர்க்கார் அளிக்கும் மூலதனத்தின் செயல்பாடு பற்றி எந்தவித நம்பிக்கையும் வைக்கமுடியாது. எனவே அது வணிகர்களை ஆபத்தான பொறுப்புக்களை ஏற்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறது; அது கொஞ்ச காலத்திற்கு நிலைமையை இலகுவாக்குகிறது. செழுமையைக் கொடுக்கிறது; ஆனால் , அது தற்செயலான நிகழ்ச்சியின் தயவில் உள்ளது. ஒரு அரசியல் சூழ்நிலை (நெருக்கடி) எதிர்பாராதுவந்த ஆதாரத்தைத் திடீரென பின்வாங்கிக் கொள்கிறது. இதை நம்பிய வணிகம் தனது சொந்தச் செல்வாதாரங்கள் சமாளிக்கக்கூடியதைவிட அதிகமாக வாக்குறுதியளித்ததைக் காண்கிறது.'' 1876 ஆண்டின் ஏற்பாட்டின் படி ரிசர்வ் கஜானாக்கள் அமைப்பு ஏற்பட்டபோது, ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவுக்கும் குறைவாக அவற்றின் மிச்சத்தொகை இருந்தால், வங்கிகளுக்கு முன் போலவே வட்டி அளிக்க சர்க்கார் ஒப்புக் கொண்டது. அதிகபட்சத்தொகை பற்றி சர்க்கார் எந்த சம்பிரதாய வாக்குறுதியையும் அளிக்கவில்லை. ''வங்கிகளின் தலைமை அலுவலகங்களில், தற்காலிகமாகக் கீழ்க்கண்ட தொகைகளுக்குமேல் சர்க்கார் வைத்திருக்காது. வங்காள வங்கியில் 100 லட்சம், மதராஸ் வங்கி 30 லட்சம், பம்பாய் வங்கி 50 லட்சம்'' என்று சர்க்கார் வங்கிகளுக்குக் கூறியது; ஆனால், இந்த ஷரத்து ஒப்பந்தத்தில் இடம்பெறாது; எவ்வளவு மீதித் தொகையை எந்த வங்கியில் வைக்கவேண்டும் என்ற கட்டாயத்தைச் சர்க்காருக்கு ஏற்படுத்தாது... சர்க்கார் எந்த வங்கிகளில் கணக்கு வைக்கிறதோ, அங்கு எல்லாப் பொது மிச்சத் தொகையையும் வங்கியின் முழுப் பொறுப்பிற்கும் விட்டுவிடாது.'' சாதாரண மாக வங்கிகளில் சர்க்கார் எவ்வளவு மிச்சத் தொகை வைத்திருக்கும் என்ற பிரச்சினை இவ்வாறு தீர்ககப்பட்டதால், பருவகாலத் தேவைகளைச் சமாளிக்க வங்கிகளுக்குச் சர்க்கார் உதவ ஒரே வழி, ரிசர்வ் கஜானாக்களில் அது வைத்துள்ள மிச்ச தொகையில் கடன்கள்

கொள்கையை அறிவிக்கும்படி கோரப்படாததால், நிலைமை இலகு வாக்குவதற்குக் காகிதச் செலாவணிச் சட்டத்தைத் திருத்தி அமைக்க அது எவ்வளவு தூரம் முயன்றிருக்கும் என்பதைச் சொல்லுவதும் சாத்தியமில்லை. நாணய அமைப்புக்குத் தேவைப்படும் ஒரு நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தி இந்த வாக்குவாதத்திற்கு ஒரு திருப்திகரமான தீர்வு ஏற்படுவதற்கு முன், மற்றொரு அதிகம் தீங்கான ஒரு வளர்ச்சி ஏற்பட்டது; உலோக நாணயத்தின் நல்ல அம்சமான, அதன் மதிப்பில் உறுதியையும் ஸ்திரத்தன்மையையும் நாசப் படுத்தும் அளவுக்குப் பாதித்தது. இந்தத் தீங்கான விளைவு பூதாகார மாகவும் சர்வ வியாபகமாகவும் ஆனதன் விளைவுகள் மற்ற எல்லா வற்றிலிருந்தும் இதன் மீது முழு கவனத்தையும் திருப்பியது.

செலாவணியின் பல்வேறு மூல அளவுகளுக்கு (Units) இடையே உள்ள மதிப்பு நிர்ணயம் எவ்வாறு உள் நாட்டுப் பரிமாற்றங் களுக்கு இருக்கிறதோ, அதுபோல மற்றொரு நாட்டு நாணயத்தோடு ஒப்பீட்டு மதிப்பு, அதன் உள்நாட்டுப் பரிவர்த்தனைகளுக்கு இருக்கிறது. எந்த இரு நாடுகளுக்குமிடையே உள்ள நாணயப் பரிமாற்ற ஒப்பீட்டு மதிப்பு (at par of exchange) அந்த நாடுகளின் செலாவணிகளுக்கு இடையே உள்ள நாணயப் பரிமாற்ற பாதிப்புகளைப் பிரதிபலிக் கின்றன. அவை, அதே உலோக நாணயங்களைத் தங்களது வழக்கமான திட்ட அளவுப் பணமாகக் கொண்டு, அவை உலோகப் பாளங்களாகச் சுலபமாக மாற்றப்பட்டு ஏற்றுமதி செய்யக் கூடியதாக இருந்தால் ஸ்திரமாக இருக்கும். ஏனெனில், அப்படி இருந்தால் (பொதுவான சாதனமாக ஒரு மதிப்பை நிர்ணயிக்க) ஒன்றை அவை கொண்டிருக்கும்; சுதந்திரமான வாணிகம் இருப்பதால் ஏற்றுமதி செய்வதற்கான ஏற்படும் செலவைத் தவிர - அது குறிப்பிட்ட அளவு காசுகளாக இருக்கும். அவற்றின் மதிப்பில் வித்தியாசம் இருக்காது. மாறாக, இரு நாடுகள் தங்கள் செலாவணியின் பொதுத் திட்ட அளவை வெவ்வேறு உலோக

விகிதத்தில் வழங்க அது ஒப்புக் கொண்டது. 1913 வரை 6 கடன்கள் மட்டுமே வழங்கப்பட்டன; அத்தகைய கடன்களுக்கு விதித்துள்ள நிபந்தனைகள் கடுமையானவை என்று இது எடுத்துக் காட்டுகிறது. 1913ஆம் ஆண்டின் சேம்பர்லேன் கமிஷன், சுதந்திரமான கஜானாக்கள் முறையை ஒழிப்பதற்குப் பதில் கடன் வழங்குவதை சிபார்சு செய்தது. எனினும், யுத்தம் நிகழ்ச்சிகளின் போக்கைத் துரிதப்படுத்தின. மாகாண வங்கிகளுக்கும் சர்க்காருக்கும் இடையே ஒத்துழைப்பின் அவசியத்தையும் ஒரு விரிவான பலமுள்ள வங்கி அமைப்பின் அவசியத்தையும் அது நிரூபித்தது. மாகாண வங்கிகளை ஒன்றாக இணைந்து ஒரு இந்திய இம்பீரியல் வங்கியைத் துவக்கியதன் மூலம் (சட்டம், XLVII, 1920) இது நிறைவேற்றப்பட்டது. இந்த இம்பீரியல் வங்கி துவங்கப்பட்டதுடன், சுதந்திரமான கஜானா அமைப்பு ஒழிக்கப்படும் பணி துவக்கப் பட்டது. 1876க்குப் பின் சுதந்திரமான கஜானாவின் வரலாறு பற்றி அறிய சேம்பர்லேன் கமிட்டியின் இடைக்கால அறிக்கையின் இணைப்புகளைப் பார்க்கவும். தொகுப்பு I. கீழ். 7070, 1913, எண்கள் I & II

நாணயங்களாக அவை கொண்டிருந்தால், அவற்றிடையே நிர்ணயித்த ஒப்பீட்டு மதிப்பை அடிப்படையாகக் கொண்ட நாணயப் பரிமாற்றம் இருக்க முடியாது. அப்படி இருக்கும்போது, அவற்றின் நாணயப் பரிமாற்றம் தங்கம், வெள்ளியின் மதிப்பின் வித்தியாசத்தைக் கணக்கில் கொண்டு இருக்கும்; அவற்றின் பரஸ்பர மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப மாறுபடும். அவற்றிற்கு இடையே பரிமாற்ற மதிப்பில் ஏற்ற இறக்கம் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். எனவே, இங்கிலாந்தும் இந்தியாவும் அவற்றின் உலோக பொதுத் திட்ட அளவு வித்தியாசத்தால் பிரிக்கப்பட்டிருப்பதால், தத்துவார்த்த ரீதியில், அவற்றிற்கிடையே ஒரு ஸ்திரமான நாணய ஒப்பீட்டு அளவுக்கான சாத்தியப்பாடு இருந்திருக்க முடியாது. ஆனால், உண்மை என்னவெனில், இவற்றிற்கிடையே உலோகப் பொதுத் திட்ட அளவில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றின் நாணய பரிமாற்ற விகிதம் அரிதாகத்தான் விலகிச் சென்றது[1] - அதாவது வழக்கமான 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 10 1/2 பார்த்திங்கிலிருந்து அபூர்வ மாக விலகிச் சென்றது[2]. 1873 வரை இந்த விகிதம் அவ்வளவு உறுதியாக இருந்ததால், இருநாடுகளுக்கும் வெவ்வேறான செலாவணி பொது திட்ட அளவுகளைக் கொண்டிருந்தன என்பதை ஒரு சிலரே அறிந்து இருந்தனர். ரூபாய் - ஸ்டர்லிங்க்கு இடையே இருந்த இந்த வழக்க மான சரிசம மதிப்பு (Parity) 1873க்குப்பின் சிதறிப் போனது; இது ஏற்படுத்திய அமைதிக்குறைவு அவ்வளவு அதிகமாகவும் அவ்வளவு அதிகமாக சீர்குலைவாகவும் இருந்தது (அட்டவணை 11): அது எங்குச் சென்று முடியும் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

ரூபாய் - ஸ்டெர்லிங் பரிமாற்றம் உண்யில் தங்கம் - வெள்ளி

---

1. எனினும் வரைபடத்திலிருந்து (Chart), 1873க்கு முன் ரூபாய் - ஸ்டெர்லிங் பரிமாற்றம் அவ்வளவு ஸ்திரமாக இருந்ததில்லை. ஆனால், அதன் ஏற்ற இறக்கங் களுக்குக் காரணம் ஒரு மாறுபட்ட அம்சங்களால் கிழக்கிந்திய கம்பெனியின் காலத்தில் இந்தியப் பணத்தை ஸ்டெர்லிங்காகக் குறைப்பதற்கு உபயோகித்த பரிமாற்ற விகிதங்கள் பல்வேறாக இருந்தன என்பதைக் கவனிக்க வேண்டும்; மேலும் பரிமாற்றம் செய்யப் பட்ட நாணயங்களில் உள்ளார்ந்த மதிப்புடன் அவை கொண்டிருந்த உறவு அநேகமாக தொடர்பற்று இருந்தன; அதிகாரபூர்வமான விகிதங்கள் சந்தை விகிதங்களோடு சம்பந்த மில்லாதிருந்தன. இந்த ருசிகரமான விஷயத்தோடு சம்பந்தமுள்ளது H & C சீசனல் பேப்பர்ஸ் (Seasonal Paper) 735 || 1931-32. **அட்டவணை எண். 20. இந்திய நாணயங்கள் ஸ்டெர்லிங்குகளாக மாற்றப்பட்ட விகிதங்கள் பற்றி** மேலும் தக்கர் ஹெச். செயின்ட் ஜார்ஜ், **நிதித்திட்டங்கள் பற்றிய குறிப்பு**, 1821 இந்திய சர்க்காரின் நினைவுக் குறிப்புகள், 1853, பக். 382-385

2. வழக்கமான விகிதாச்சாரம்: 15 1/2க்கு 1 என்பது தங்கத்திற்கும் வெள்ளிக்கும்

வரைபடம் - 2

ரூபாய் - ஸ்டெர்லிங் மாற்றுவிகிதத்தில் வீழ்ச்சி



பரிமாற்றத்தின் பிரதிபலிப்பே. எனவே, 1873க்கு முன் ரூபாய் - ஸ்டெர்லிங் 1 ஷி. 10 1/2 ஆக ஸ்திரமாக இருந்தது என்றால், அதன் அர்த்தம் 1873க்கு முன் தங்கம் - வெள்ளி பரிமாற்ற விகிதாச்சாரம் 1க்கு 15 1/2 ஆக ஸ்திரமாக இருந்தது என்பதாகும்; அந்தத் தங்கம் - வெள்ளிப் பரிமாற்ற விகிதாச்சாரம் 1873க்குப் பின் சீர்குலைந்தது என்றால், அது பழைய நங்கூரத்தை இழந்தது என்பதே.

எனவே இப்பொழுது எழும் கேள்வி: 1873க்குப் பின் - அதற்கு முந்தி ஒருபொழுதும் இல்லாதது - தங்கத்திற்கும் வெள்ளிக்கும் இடையே இருந்த நாணய மாற்று விகிதம் ஏன் சீர்குலைந்தது என்பதாகும். அப்பொழுது விசித்திரமான நிகழ்ச்சியாகத் தோன்றிய இதற்கு, இரண்டு அம்சங்கள் போதுமான விளக்கத்தை அளிப்பதாகத் தோன்றுகிறது. ஒன்று, உலகின் பிரதான நாடுகளில், பொதுத் திட்ட நாணய அளவாக இருந்த வெள்ளியின் மதிப்பைக் குறைத்ததாகும். எடைகள், அளவுகள், காசுகள் - ஆகியவற்றில் ஒருங்கிணைந்த நிலை (Uniformity) ஏற்பட வேண்டுமென்ற அப்பாவித்தனமான (சூழ்ச்சியற்ற) கிளர்ச்சியின் விளைவே வெள்ளியின் மதிப்பைக் குறைப்பற்குச் சாதகமான நிகழ்வு ஏற்பட்டது. அந்த இயக்கம் (கிளர்ச்சி) அத்தகைய ஒன்றிணைவை நோக்கமாகக் கொண்டிருந்ததால், அது எல்லா விதத்திலும் நன்மை பயப்பதாய் இருந்தது. நல்லதையே நோக்கமாக கொண்டிருந்தாலும் சில சமயங்களில் தீங்குகளின் மரபுச் செல்வத்தை (Legacy of evils) விட்டுச் செல்கிறது என்பதையும் உதாரணமாய் எடுத்துக்காட்டிற்று. 1851இல் லண்டன் நகரில் நடைபெற்ற சிறப்பு மிக்க கண்காட்சியில், காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்ட எடைகள், அளவைகள், நாணயங்கள் ஆகியவற்றில் அவை எந்த நாட்டைச் சேர்ந்தவையோ அவற்றிற்கும், பிற நாட்டைச் சேர்ந்தவற்றிற்கும் இடையே இருந்த வித்தியாசங்கள் காரணமாகப் பல்வேறு காட்சிப் பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் இருந்த பெரும் கஷ்டத்தை அங்குக் குழுமியிருந்த பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டிற்று[1]. எடைகள், அளவைகள், நாணயங்கள் ஆகிய வற்றில் சர்வதேச ஒருங்கிணைந்த நிலை என்ற பிரச்சினை பற்றிக் கண்காட்சியில் குழுமியிருந்த பல்வேறு விஞ்ஞான அவைகளில் விவாதிக்கப்பட்டது. அதனால் தெளிவனான நிலை எதுவும் ஏற்படா விடினும், அது கைவிடப்படவில்லை: இரு ஆண்டுகளுக்குப்பின் பிரசெல்ஸில் நடைபெற்ற சர்வதேசப் புள்ளிவிவர மாநாட்டில் இப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; பாரிஸில்

நடைபெற்ற அடுத்த புள்ளிவிவர மாநாட்டில் ஒரு பிரகடனம் வெளியிடப்படும் அளவுக்கு இக்கருத்து முன்னேறியது; இந்தப் பிரகடனம் 1859இல் வியன்னாவில் கூடிய புள்ளி விவர மாநாட்டில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது; பல்வேறு நாடுகளின் எடைகள், அளவுகள், நாணயங்கள் ஆகியவற்றில் விருப்பப்படும் ஒருங்கிணைந்த நிலை ஏற்படுவதன் அவசியத்தை அந்தப் பிரகடனம் வலியுறுத்திற்று.[1] மெட்ரிக் முறை எடைகள், அளவுகளை விருப்பத்திற்கு (Optional) விட்டுவிட வேண்டுமென்று 1862இல் இங்கிலாந்து எடுத்த முடிவால் உந்தப்பட்டு, 1863ஆம் ஆண்டில் நடந்த பெர்லின் புள்ளிவிவர மாநாடு பல்வேறு சர்க்காருக்கும் பின்கண்ட அழைப்பை அனுப்புவதென முடிவு செய்தது: ''தங்கம், வெள்ளி நாணயங்களின் தராதர எடைகள்'' எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிப் பரிசீலித்து அறிவிக்கவும், பல்வேறு நாடுகளின் நிதி அமைப்புகள் தசாம்ச (பதின்மானமுறை) உட்பிரிவுகள் அடிப்படையில் ஒரே ஒரு மூல அளவின்மீது அமைய விவரங்களை ஏற்பாடு செய்யவும் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை விசேஷ காங்கிரஸ் அனுப்பப் பல்வேறு சர்க்கார்களையும் அழைப்பது'' என..... முடிவு செய்தது[2] இந்தக் காங்கிரஸின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அது ஒரு முயற்சியை மேற்கொண்டது. முந்திய காங்கிரஸ்களில் விவாதிக்கப்பட்ட விஷயம் பெரும்பாலும் எடைகளிலும் அளவுகளிலும் ஒருங்கிணைந்த நிலையை ஏற்படுத்துவது பற்றியே. ஆனால், இந்தக் காங்கிரஸில், ''அந்தக் கட்டம் ஒருங்கிணைந்த நாணயத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்கப்பட்டது; முந்திய கட்டம் கிட்டத்தட்ட ஒதுக்கிவைக்கப்பட்டது.''[3] அந்தத் தீர்மானம் ஒரு மாற்றமாக இருந்தாலும், சீர்திருத்தம் ஒருங்கிணைந்த நாணயம் (காசுகள் Coins) பற்றி மட்டும் இருந்திருந்தால், பாதகமான விளைவுகளைக் கொண்டுவந்திருக்காது. ஆனால், அதைச் செலாவணிப் பிரச்சினைக்கும் விரிவு படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. ஒருங்கிணைந்த நாணயம் என்பதற்கான கிளர்ச்சி (இயக்கம்) விரிவடைந்து வளர்ந்தபோது,

---

1. ஹெச்.பி. ரஸ்ஸலின் சர்வதேச நிதி மாநாடுகள் 1898, பக்கம் 18-25.

2. ரஸ்ஸலால் மேற்கோள் காட்டப்பட்டது. op. cit. பக். 25.

3. இங்கிலாந்தில் விவசாயத்தில் தொய்வு பற்றி ராயல் கமிஷன், 1892, ரஸ்ஸல், op. ப. 46.

இலத்தின் யூனியன் நாடுகளை உள்ளிட்ட பிரதேசங்களில் பரவியுள்ள தனது நாணய அமைப்பு, ஒருங்கிணைப்பின் நலனுக்காக, அந்த யூனியனுக்கு அப்பாற்பட்ட மற்ற நாடுகளுக்கும் ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பிரான்ஸ் விரும்பியது. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு அன்றைய பிரிட்டிஷ் சர்க்காரை பிரான்ஸ் அணுகியது. ஆனால், ஒற்றைத் தங்க செலாவணி முறையை[1] பிரான்ஸ் நடைமுறைப்படுத்தும் வரை அந்த ஆலோசனையைப் பிரிட்டிஷ் சர்க்கார் பரிசீலிக்க முடியாது என்று பதிலளிக்கப்பட்டது. இதனால் சோர்வடைவதற்குப் பதிலாக, அப்பொழுது இங்கிலாந்தின் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்குத் தீவிர அக்கறை காட்டி, சுயதிருப்தியுடன் எவ்வித மனச்சான்றின் உறுத்தலுமின்றி பிரிட்டன் கோரிய முன் நிபந்தனையை (பிரான்ஸ்) ஏற்றுக் கொண்டது; உண்மையில் வழியிலிருந்து விலகிச்சென்று (Out of the way) 1867இல் பாரீஸில் நடந்த மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானத்தை அவை நிறைவேற்ற மறைத் திட்டம் மூலம்[2] பாடுபட்டது:- ''ஒன்றிணைந்த சர்வதேச நாணய முறைக்காக, உலகத்தின் பிரதானச் செலாவணியாகத் தங்கம் மட்டுமே இருக்க வேண்டியது அவசியம்.'' ஒருங்கிணைந்த நாணயமுறை என்ற பிரச்சினைக்கு அவ்வளவு அதிகம் முக்கியத்துவம் காட்டியபோது, அதை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எத்தகைய தியாகங்கள் செய்யக் கோரப்படுவார்கள் என்பதை அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் கவனித்தாகத் தெரியவில்லை. தங்களின் முடிவால், உலகச் செலாவணி முறையைப் பாதிப்பிற்குள்ளாக்குகிறார்கள் என்று அவர்கள் தெரிந்திருக்கவில்லை என்று கூறினால், அது ஒருவேளை அதிகமாகச் சரியானதாக இருக்கலாம். அவர்கள் அப்போது நினைத்தது எல்லாமே ஒருங்கிணைந்த நாணய முறையை வளர்ப்பதற்காகப் பாடுபடுவதாக மட்டுமேயன்றி வேறு எதுவுமல்ல. ஆனால் சாக்காக அமைந்த சூழ்நிலைமைகள் எவ்வாறாயினும், விளைவு நாசகாரமாக இருந்தது. அங்குக் கூடியிருந்த நாடுகள் இந்தத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவது பற்றிய விஷயத்தில் மாநாட்டின் உண்மையான முடிவுக் கட்டத்தில், ஒருங்கிணைந்த நாணய முறை என்பது, அவர்களின் பார்வையிலிருந்து

---

1. பேராசிரியர் பாக்ஸ் வெல்லின் சாட்சியம் Q. 23,876. இங்கிலாந்தில் விவசாயத்தில் தொய்வு பற்றி ராயல் கமிஷன், 1892.

மறைந்தது; ஆலோசிக்கப்படும் வழிமுறைகள்தான் கடைசியில் மாநாட்டின் யதார்த்த முடிவாக ஆனது.

பந்தை உருட்டி விட்ட பின், வெள்ளியின் மதிப்பைக் குறைக்கும் வேலை தீவிரமாகியது. களத்தில் முதலில் இருந்தது ஜெர்மனி. 1870 யுத்தத்தில் பிரான்சைத் தோற்கடித்ததால் தனது குழப்பத்தில் உள்ள செலாவணியைச்[1] சீர்திருத்த யுத்த நஷ்டஈட்டை அது பயன்படுத்தி[2] ஐக்கிய ஜெர்மனி சாம்ராஜ்யத்திற்கு தங்கச் செலாவணியை ஏற்படுத்த அவசரப்பட்டது. 1871 டிசம்பர் 4 சட்டம் இந்த மாற்றத்தை அங்கீகரித்தது - செலாவணியின் மூல அளவை மார்க்காக. இந்தச் சட்டத்தின்படி வெள்ளியின் மதிப்பு குறைக்கப் பட்டது. மேற்கொடும் வெள்ளிக் காசுகள் அடிப்பது நிறுத்தப்பட்ட போதிலும், ஏற்கனவே புழக்கத்திலிருந்த வெள்ளிக் காசுகள், புதிய தங்கக் காசுகளோடு சட்டபூர்வ பரிமாற்றுச் சாதனமாகத் தொடர்ந்து இருந்தன; (வெள்ளிக்கும் தங்கத்திற்கும்) அவற்றிற் கிடையே விகிதா சாரம் 15க்கு 1/2 அல்லது 1. முழுச் சட்டபூர்வ சாதனம் என்ற வெள்ளி நாணயங்களின் செல்வாக்கு (Power), 1873 ஜூன் 9 சட்டப்படி வாபஸ் பெறப்பட்டது; இந்தச்சட்டம் அதை வெறும் துணை செலாவணி என்ற நிலைக்குத் தாழ்த்தியது.[3] ஜெர்மானிய கலாசாரத்தை[4] சேர்ந்த எல்லா நாடுகளும் உடனே இந்தக் கொள்கை யைக் காப்பி அடித்தன. 1872இல் நார்வே, ஸ்வீடன், டென்மார்க் ஆகிய நாடுகள் ஒரு ஸ்கான்டிநேவிய நிதி யூனியனை - லத்தீன் நிதி யூனியனுக்கு ஒத்ததாக - அமைத்தன. ஜெர்மனி செய்ததுபோல் இவையும் வெள்ளியின் மதிப்பைக் குறைக்க ஒப்புக்கொண்டன. இந்த ஒப்பந்தம் தங்க நாணயத்திட்டத்தை ஏற்படுத்திப், புழக்கத்தில் இருந்த வெள்ளி நாணயத்தைத் துணைச் செலாவணி என்ற நிலைக்குத்

---

1. இது விஷயத்தில் பெருமைக்குரிய விதி விலக்கு டாக்டர் மீஸ் (Mees), ஹாலந்தின் பிரதிநிதியான அவர், இந்தத் தீர்மானத்தின் விளைவாக ஏற்படக்கூடிய தீங்கு பற்றி கவனத் திற்குக் கொண்டுவந்தார்.

2. 1870க்கு முன், ஜெர்மன் செலாவணியை ஐக்கியப் படுத்துவதற்கான இயக்கத்தின் வரலாறு பற்றி, ஹெச்.பி. வெல்ஸின், ''1857இன் வியன்னா நிதி ஒப்பந்தம்'' - அரசியல் பொருளாதார அறிக்கை, தொகுப்பு IV, ப. 187.

3. சட்டங்களின் வாசகங்களுக்கு இரட்டை ''**உலோக நாணயத்தின் வரலாறு**'' நூலின் பின்னிணைப்பு காண்க; நூலாசிரியர் பேராசிரியர் ஜே.எல். லாக்வின், நியூயார்க், 1886.

4. வெள்ளி மதிப்பின் தொய்வு பற்றி க் கமிட்டியின் அறிக்கை, 1876, ப. XXIX

தாழ்த்தியது. இந்த ஒப்பந்தத்தை ஸ்வீடனும் டென்மார்க்கும் 1873 இலும் நார்வே 1875இலும் உறுதிப்படுத்தின. ஹாலந்தும் இதே வழியைப் பின்பற்றியது. 1872 வரை அந்நாடு, சுத்த வெள்ளி நாணய மதிப்பைக் கொண்டிருந்தது. அந்த ஆண்டு சுதந்திரமாக வெள்ளி நாணயம் அடிப்பதற்கு நாணயச் சாலைகளை மூடியது; என்றாலும், பழைய வெள்ளிப் பணம் தொடர்ந்து சட்டபூர்வ சாதனமாக (ஏதாவது ஒரு மதிப்பிற்கு) தொடர்ந்து இருந்தது. 1875இல் மேலும் ஓரடி முன்சென்று, சுயேச்சையாகத் தங்க நாணயங்களை அடிப்பதற்காக அதன் நாணயச் சாலைகளைத் திறந்து விட்டது. அந்நாட்டின் கொள்கை, ஜெர்மானிய நாடுகளின் கொள்கையிலிருந்து ஒரு விஷயத்தில் வேறுபட்டிருந்தது; அது சுதந்திரமான வெள்ளி நாணயங்கள் அடிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது; அதே சமயம், பின் சொன்ன நாடுகள் அதன் மதிப்பைக் குறைத்தன. வெள்ளிக்கு எதிரான இந்த வெள்ள அலையை லத்தீன் யூனியனால் கூட எதிர்க்க முடியவில்லை. வெள்ளி இவ்வாறு ஒதுக்கப்பட்டதன் விளைவாக, மேற்கொண்டும் உறுப்பினர்களைச் சேர்த்து விரிவடைந்த லத்தீன் யூனியன், மதிப்புக் குறைக்கப்பட்ட வெள்ளி வெள்ளமாகப் பாய்ந்து வருவதற்கு எதிராகத் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க இயல்பாக விரும்பியது. அந்த பயத்திற்கு ஆதாரமில்லாமல் போகவில்லை; ஏனெனில், பெல்ஜிய நாட்டு நாணயச் சாலையில் 1873இல் நாணயங்கள் அடிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட வெள்ளியின் அளவு, 1871இல் கொடுத்ததைவிட மூன்று மடங்காக இருந்தது. சிக்கலில் மாட்டிக்கொள்வதற்குப் பதிலாக, 1873 டிசம்பர் 8 சட்டப்படி, பெல்ஜியம் தனது 5 பிராங்க் காசுகளை அடிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. பெல்ஜியத்தின் இந்தச் செயல், யூனியனின் மற்ற உறுப்பு நாடுகளையும் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் படி நிர்ப்பந்தித்தது. யூனியனின் பிரதிநிதிகள் பாரிஸில் 1874 ஜனவரியில் கூடிப் பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்.

> ''1886இல் உருவாக்கப்பட்ட மூல ஒப்பந்தத்திற்குப் பின் சேர்க்கையாக ஒரு ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொள்வது என்றும் தனி நபர்களிடமிருந்து நாணயங்கள் அடிக்கும் முழு அதிகாரத்தையும் வாபஸ் பெறுவதென்றும், ஐந்து பிராங்க் காசுகளை அடிப்பதை மிதமான அளவிற்குக் கட்டுப்படுத்துவதென்றும்,

காசுகளை அடிப்பதும் என்று உறுதிகொள்வதென்றும் மாநாடு தீர்மானிக்கிறது.[1]

1874க்கு ஒவ்வொரு நாட்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட கோட்டாக்கள் (பங்குகள்) ஓரளவு) 1875ல் அதிகரிக்கப்பட்டது; ஆனால் 1876இல் குறைக்கப்பட்டது.[2] ஆனால், உண்மையில் அடிக்கப்பட்ட காசுகள் இந்தச் சிறிய கோட்டாக்களின் எல்லைக்குக் கூட செல்ல வில்லை. யூனியன் அடைந்த கவலை அவ்வளவு அதிகமாக இருந்தால், ஐந்து பிராங்க் வெள்ளிக்காசுகள் அடிப்பதை, இத்தாலி தவிர[3] பிற நாடுகள் முற்றிலுமாக நிறுத்தி வைத்தன. எனினும், இது, 1878 நவம்பர் 5 ஒப்பந்தத்திற்கு (முன்) பூர்வாங்க நடவடிக்கையேயாகும். இதன்படி சுதந்திரமாக வெள்ளி நாணயம் அடிப்பதற்கு நாணயச் சாலைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் வரை மூடுவதென்று லத்தீன் யூனியன் முடிவு செய்தது. முதலில் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டாலும், முடிவில் மூடுவது நிரந்தரமானது[4] என்று நிரூபணமாயிற்று. லத்தீன் யூனியன் எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளின் போதே, ரஷ்யாவும், சீனாவுடன் நடத்தும் வணிகத்திற்குத் தேவையான தொகைக்காக மட்டுமின்றி, மற்றபடி சுதந்திர வெள்ளிக் காசுகளை அடிப்பதை ரஷ்யாவும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.[5] 1878 நவம்பர் 22இன் சக்ரவர்த்தியின் உத்தரவு (Imperial Order)

---

1. லாப்லின், பக்கம். 155.

2. பல்வேறு யூனியனின் உறுப்பு நாடுகளுக்கும் மாநாடுகளில் நிர்ணயிக்கப்பட்ட கோட்டாக்கள் (பங்குகள்) வருமாறு:-

மில்லியன் பிராங்க்குகளில்

	1874	1875	1876
பிரான்ஸ்	60	75	54
பெல்ஜியம்	12	50	36
இத்தாலி	40	15	10
ஸ்விட்சர்லாந்த்	8	10	7
கிரீஸ்	-	-	-
	120	150	110

3. 1874, மேற்கொண்டும் 20 மில்லியன் பிராங்குகள் ஒதுக்கப்பட்டன: மேற்சொன்னது ப. 155.

4. மேற்சொன்னது. ப. 158

5. வாஷிங்டன் நாணயச் சாலை டைரக்டர்களின் அறிக்கை, 1893, ப. 23.

5 ரூபிள்கள் 15 கோபக்குகளுக்கு அதிகமான எல்லாச் சுங்க வரிகளும் தங்கத்தில் செலுத்தப்பட வேண்டுமென ஆணையிட்டது.[1] ஆஸ்திரியாவும் இம்மாதிரியே சுதந்திர வெள்ளி நாணயம் அடிப்பதை 1879இல் தற்காலிகமாக நிறுத்திவைத்தது.[2] அட்லாண்டிக்கின் அக்கரையில், ஒரு முக்கிய நிகழ்ச்சி ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டது. 1837க்குப் பின் புனரமைக்கப்படாத (திருத்தப்படாத) நாணயச் சாலைச் சட்டத்தைப் பலப்படுத்துவது என்று அந்த சர்ககார் முடிவு செய்தது. 1853ஆம் ஆண்டு சட்டத்திற்குப்பின் ஐக்கிய அமெரிக்காவின் நாணயச் சாலைகள் வெள்ளி டாலர்களை மட்டுமே தடங்கலின்றி வெளியிட்டன. 1873இல் ஒன்றுபடுத்தப்பட்ட புதிய நாணயச் சாலைச் சட்டம் நாணயச்சாலை வெளியிடும் நாணயப் பட்டியலிலிருந்து வெள்ளி டாலர் எடுக்கப்பட்டது; அதனால் ஐக்கிய அமெரிக்காவில் சுயேச்சையாக வெள்ளி நாணயம் அடிக்கப்படுவது உண்மையிலேயே தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என்றாகிவிட்டது.[3] முன்பு வெளியிடப்பட்ட வெள்ளி டாலர்கள் சட்டபூர்வ முழுச் சாதனமாக புழக்கத்தில் தொடர்ந்து இருந்தன; ஆனால், அந்த சக்தியை (Power) 1874 ஜூன் சட்டம் வாபஸ் பெற்றது. அது கூறியது: ''ஐக்கிய அமெரிக்காவின் சட்டபூர்வ சாதனமாக ஒரு தடவை கொடுக்கப்படுவதில் (Payment) ஐந்து டாலர்களுக்கு மேற்படாமல் இருந்தால், வெள்ளிக் காசுகள் பெயரளவுக்கான மதிப்பில் தொடர்ந்து இருக்கும்.''

தங்கத்திற்கும் வெள்ளிக்கும் இடையே உள்ள தராதர மதிப்புகளில் ஏற்பட்ட சீர் குலைவுக்கு மற்றொரு முக்கிய அம்சம் தங்கத்துடன் ஒப்பிட்டால், அதைவிட வெள்ளியின் உற்பத்தி பெரிய அளவில் உயர்ந்ததாகும்.

---

1. பி. வில்ஸின், ''ரஷ்யாவில் நிதிச் சீர்திருத்தம்'' - பொலிடிகல் எகானமி (Political Economy) என்ற சஞ்சிகையில் V ப. 291.

2. ''ஆஸ்ட்ரியா - ஹங்கேரியில் நாணயத்தில் கொடுப்பது மீண்டும் துவக்கம்'' பொலிடிகல் எகனாமி சஞ்சிகையில், தொகுப்பு 1, பக். 380-87.

3. இந்த நடவடிக்கை ஒரு விசித்திரமான வக்குவாதத்திற்கு உள்ளாயிற்று. தங்கம் வைத்திருப்பவர்கள் (தங்க உடைமையாளர்கள்) இதுவேண்டுமென்றே செய்யப்பட்டதாக வாதித்தனர். ''அயோக்கியத்தனமாகத் திட்டமிட்டு அயோக்கியத்தனமான மறைமுகமாக இருந்து நிறைவேற்றப்பட்ட'' திட்டுத்தனமான சட்டம் என்று வெள்ளி உரிமையாளர்கள் கண்டித்தனர். இந்தச் சட்டத்தைச் சூழ்ந்திருந்த புரியமுடியாத விஷயத்தைப் பேராசிரியர் லாப்கின் நன்கு தெளிவுபடுத்தினார். 1853ஆம் ஆண்டின் சட்டம் பற்றிக் காங்கிரஸில் நடந்த விவாதங்களை எடுத்துக்காட்டி, தங்கத்திற்கும் வெள்ளிக்கும் இடையே விகிதாசாரத்தை மாற்ற மறுத்ததன் மூலம் நாட்டைத் தங்க நாணய முறையில் வைக்கிறது என்பதைக் காங்கிரஸ் அறியும். 1873 சட்டம் பற்றிய பரிசீலனையில் அதிக நேரம் வீணா[illegible] 1853ம் ஆண்டின் சட்டத்தின் விளைவுகளைச்

அட்டவணை IX

தங்கம், வெள்ளியின் தராதர உற்பத்தி (அவுன்ஸ்)

கால அளவு	மொத்த உற்பத்தி		வருடாந்திர சராசரி உற்பத்தி		சராசரி உற்பத்தி ஆண்டு உற்பத்திக்கு அட்டவணை எண். (Index Number)	
	தங்கம்	வெள்ளி	தங்கம்	வெள்ளி	தங்கம்	வெள்ளி
1493 -1600	24,266,820	734,125,960	224,693	6,797,463	100	100
1601 -1700	29,330,445	1,197,073,100	293,304	11,970,731	130.5	176.1
1701 -1800	61,088,215	1,833,672,035	610,882	18,336,720	271.8	269.7
1801-1840	20,488,552	801,155,495	512,217	20,028,887	227.9	293.1
1841 -1870	143,186,224	931,091,326	4,772,876	31,038,378	2124.1	456.6
1871 - 1890						

மதிப்புமிக்க (விலை உயர்ந்த) உலோகங்களின் நவீன கால உற்பத்தியின் வரலாறு 1493ஆம் ஆண்டிலிருந்து துவங்குகிறது; அந்த தேதி (ஆண்டு) அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்ததைக் குறிக்கிறது. 1493 முதல் 1893 வரை, மொத்தம் 400 ஆண்டு காலத்தில் உற்பத்தியின் விளைவுகளை ஆராய்ந்தால், முதல் நூறு ஆண்டுகளில் தங்கம், வெள்ளி இரண்டின் உற்பத்தியும் ஒரே அளவில் உயர்ந்திருக்கிறது. நவீனகால உற்பத்தியின் முதல் நூறு ஆண்டுகளில் (1493-1600) ஒவ்வொன்றின் சராசரி உற்பத்தி 100 என்ற வைத்துக் கொண்டால், அடுத்த நூற்றாண்டில் (1601-1700) தங்க உற்பத்தியின் அட்டவணை 130 ஆகவும், வெள்ளியின் உற்பத்தி 176 ஆகவும் உயர்கிறது. இந்த முன்னேற்றத்தின் விகிதம், அடுத்த நூறு ஆண்டுகளிலும் (1700-1800) தொடர்கிறது; இந்தக்கால அளவில் தங்கத்திற்கும் வெள்ளிக்கும் ஏறக்குறைய 270க்கு உயர்கிறது; 1840 வரை அதிகம் எந்த அமளியுமில்லாமல் தொடர்கிறது. அட்டவணை எண்கள் தங்கத்திற்கு 228 ஆகவும் வெள்ளிக்கு 293 ஆகவும் இருந்தன. இந்தக் காலத்திற்குப்பின் இரண்டு உலோகங்களின் உற்பத்தியில் ஒரு

முழுப்புரட்சி ஏற்பட்டது. அடுத்த 30 ஆண்டுகளில் (1841-70) தங்கத்தின் உற்பத்தி முன்பு எப்பொழுதும் கண்டிராத உச்சத்தை எட்டிற்று; ஒப்பிட்டுப் பார்த்தால், வெள்ளி உற்பத்தி பின்னடைந்தது. வெள்ளி உற்பத்தியின் அட்டவணை எண். 450க்குத் தான் உயர்ந்தது; ஆனால் தங்கத்தைப் பொறுத்தவரை 2124க்கு எட்டியது. இந்தப் புரட்சியைத் தொடர்ந்து ஒரு எதிர்ப்புரட்சி ஏற்பட்டது, இதன் விளைவாக 1870 முடிவில் இருந்த நிலை ஏறத்தாழத் தலைகீழாக மாறியது. தங்கத்தின் உற்பத்தி 1840-70க்கு இடைப்பட்ட காலத்தில் பெருமளவு பெருகினாலும், அதன் உற்பத்தியில் ஒரு திடீர்த் தடங்கல் ஏற்பட்டது. 1870-93 காலத்தில் அதேநிலை நீடித்தது. மறுபுறத்தில், வெள்ளியின் உற்பத்தி, 1841-70க்கு இடையில் ஒரேமாதிரியாக இருந்தது 1870-93க் கிடைப்பட்ட காலத்தில் மூன்று மடங்கு அதிகரித்தது. இதனால் வருடாந்திர சராசரி உற்பத்தியின் அட்டவணை இந்தக் கால கட்டத்தில் (1870-93) 1260 ஆக ஆயிற்று.

தங்கத்தோடு ஒப்பிடும்போது வெள்ளிக்கு ஏற்பட்ட சீர் குலைவு, வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றி எழுந்த வாக்கு வாதத்தில், இரண்டில் ஏதாவது ஒன்று தம் வாதத்தில் சம்பந்தப் பட்டவர்களுக்குப் போதுமான காரணமாக இருந்தது. வெள்ளியைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ மதிப்பைக் குறைக்கவோ செய்யாம லிருந்திருந்தால், அதன் மதிப்பு ஒருபோதும் வீழ்ந்திருக்காது என்று ஒருசாரார் வாதித்தனர். இந்த வாதத்தை கடுமையாக மற்றொரு சாரார் சவால்விட்டு எதிர்த்தனர்; அளவுக்கு அதிகமாக வெள்ளி சப்ளை செய்யப்பட்டதுதான் அதன் மதிப்புக்குறைவுக்குக் காரணம் என்று அவர்கள் நம்பினர். அதிகப்படியான (அளவுக்கு அதிகமான) சப்ளையால் தங்கத்தோடு ஒப்பிடும்போது வெள்ளியின் மதிப்பு குறைந்தது என்பது போதுமான காரணமாகுமா? அதை மேலெழுந்த வாரியாகப் பார்த்தாலும், விளக்கம் ஒரு எளிய கருத்தாக இருக்கும் சாத்தியக் கூறு உள்ளது. அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை சூத்திரங்களில் ஒன்று என்னவெனில், ஒரு பொருளின் மதிப்பு அதன் சப்ளையைப் பொறுத்துத் தலைகீழாக வேறுபடுகிறது. வெள்ளியின் சப்ளை பெருமளவு அதிகரித்திருந்தால், தங்கத்தோடு ஒப்பிடும் போது வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியுற்றது என்பதைவிட வேறு எது இயல்பாக இருக்க முடியும்? இந்த வாதத்திற்கு அடிப்படையாக அமைந்த சம்பந்தப்பட்ட பள்ளி விவரங்கள் பின்வரும் பக்கங்களில்

அட்டவணை X

தங்கமும் வெள்ளியும்[1] உற்பத்தியின் தராதரமும் மதிப்பின் தராதரமும்

கால அளவு	வெள்ளி உற்பத்தியில் தங்க உற்பத்தியின் விகிதாசாரம் (எடையில்) 1 கிரையினிலிருந்து	வெள்ளி மதிப்பில் தங்கத்தின் விகிதாச்சாரம் கிரைன் 1 லிருந்து	உற்பத்தி விகிதாசாரத்திற்கு அட்டவணை எண்	மதிப்பின் விகிதாசாரத்திற்கு அட்டவணை எண்	உற்பத்தியின் தராதரத்திற்கும் மதிப்பான தராதரத்திற்கும் இடையே சம்பந்தம்	
					வெள்ளியின் தராதர உற்பத்தியில் தாழ்வு - உயர்வு +	வெள்ளியின் தராதர மதிப்பு தாழ்வு - உயர்வு +
1681-1700	31.8	14.95	100	100	-	-
1701-1720	27.7	15.21	87	101.7	-13	-1.7
1721-1740	22.6	15.10	71	101	- 29	-1.0
1741-1760	21.7	14.70	67	98.3	- 33	+1.7
1761-1780	31.5	14.40	99	96.3	- 1	+ 3.7
1781-1800	49.4	15.08	155.6	100.8	+ 55.6	- .8
1801-1810	50.3	15.67	158.0	104.8	+ 58.0	- 4.8
1811-1820	47.2	15.68	148.0	104.9	+ 48.0	- 4.9
1821-1830	32.4	15.82	101.9	105.8	+ 1.9	- 5.8
1831-1840	29.4	15.77	92.4	105.4	- 7.6	- 5.4
1841-1850	14.2	15.81	44.6	105.8	- 55.4	- 5.8
1851-1855	4.4	15.45	13.8	103.3	- 86.2	- 3.3
1856-1860	4.5	15.28	14.0	102.2	- 86.0	- 2.2
1861-1865	5.9	15.42	18.55	103.1	- 81.5	- 3.1
1866-1870	6.9	15.52	21.7	103.8	- 78.3	- 3.8
1871-1875	11.3	16.10	35.5	107.6	- 64.5	- 7.6
1876-1880	13.2	17.79	41.5	119.0	- 58.5	- 19.0
1881-1886	17.3	18.81	54.4	125.8	- 45.6	- 25.8
1886-1890	19.9	20.98	62.6	140.3	- 37.4	- 40.3
1891-1895	20.0	26.75	62.9	178.9	- 37.1	- 78.9

* பிரஞ்ச் நாணயச்சாலையைச் சார்ந்த எம்.டி. போவில்லி அளித்த புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டது இந்த அட்டவணை. இரு உலோக நாணயக் கோட்பாளர் (The Bimetalist) 1897, ஜூலை இதழில் திரு. எம்.பி. பேர்பீஸ் பிரசுரித்தது, பக். 125.128.

வரைபடம் - 3

தங்கம் மற்றும் வெள்ளியின் இணையான தயாரிப்பும் மதிப்புகளும்



இவ்வாறு முன் வைக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இரு முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கின்றன. முதலாவது, வெள்ளியின் தராதர உற்பத்தி ஏராளமாக அதிகரிப்பு என்ற ஊகத்திற்கு உண்மையில் எந்த அடிப்படையும் இல்லை. அதற்கு மாறாகத் தராதர உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்களை நோக்கினால், அது ஒரு விசித்திரமான உண்மையை வெளிப்படுத்துகிறது; அதாவது, பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து உற்பத்தி விகிதத்தில் வெள்ளி அதிகரிப்பதற்குப் பதில் குறைந்து வந்திருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டுகளைத் தவிர, புள்ளி விவரங்களைக் கொடுத்துள்ள அட்டவணை காட்டுவது போல், தங்கத்தோடு ஒப்பிடும்போது உற்பத்தி விகிதத்தில் குறைந்துகொண்டு வந்திருக்கிறது.[1] பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பாதியில் இருந்ததுபோல், வெள்ளியின் உற்பத்தி விகிதம் எப்பொழுதும் அவ்வளவு குறைவாக இருந்ததில்லை; 1873ஆம் ஆண்டிற்குப் பின் அது வளர (உயர)த் தொடங்கியபோதும், பதினெட்டாம் நூற்றாண்டின் அளவில் பாதியைக் கூட எட்டவில்லை. இந்த விவரங்கள் உறுதி செய்வதாகக் கூறப்படும் இரண்டாவது முடிவு, வெள்ளியின் மதிப்பு, தங்கத்தோடு ஒப்பிடும் போது அதன் சப்ளைக்கேற்ப உயராதது என்பது. இந்தத் தத்துவத்தின்படி, அதன் உற்பத்தியின் அளவில் ஏற்பட்டு வந்த குறைவுக்கு ஏற்ப அதன் மதிப்பு உயர்ந்து கொண்டுபோயிருக்க வேண்டும் என்பதாகும். அதற்கு மாறாகப் புள்ளி விவரங்களைப் பரிசீலித்தால், (அட்டவணை III காட்டுவது போல்), மதிப்பிற்கும் உற்பத்திக்குமிடையே உள்ள தராதரத்தை நோக்கினால் அவற்றிற்கிடை எந்த நெருக்கமான தொடர்பும் இருப்பதற்குப் பதிலாக, அதற்கு மாறாக இருந்ததைக் காணலாம். சப்ளையும் மதிப்பும் விகிதத்தில் ஒன்றுக்கொன்று மாறாக (தலைகீழாக) இருப்பதற்குப்பதில், சப்ளை வீழ்ந்து கொண்டிருந்தபோது அதன் மதிப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. வரலாற்றின் புள்ளி விவரங்கள் இவ்வாறு இருக்கும்போது, மதிப்பு குறைவை விட்டுவிட்டு அளவுக்கு அதிகமான சப்ளைதான் வெள்ளியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்பதை ஒரு போதுமான விளக்கமாகக் கூறுபவர்களுக்கு எந்த ஆதாரமும் அளிக்கவில்லை.

---

1. இதனால், பேராசிரியர் டபுள்யூ. லெக்ஸிஸ் போன்ற பிரபலப் பொருளாதார நிபுணர் இரு உலோக நாணயக் கோட்பாளராக இருந்ததிலிருந்து ஏன் விலகினார் என்பது ஒரு அதிசயமான விஷயம்தான்; ஏராளமான அதிகரிப்பால் நிரந்தரமாக தங்கத்துடன் உயர் விகிதத்தில் வெள்ளி தன்னை நிலைநிறுத்திக் கொண்டதால், அதன் செல்வாக்கை எதிர்த்து சமாளிக்க வேண்டியுள்ளது என்பதைக் காரணமாகக் காட்டுகிறார். ''இன்றைய நிதி நிலைமை'' என்ற அவரது கட்டுரை; பிரசுரமானது: அமெரிக்கப் பொருளாதார நிறுவனத்தின் பொருளாதார ஆய்வுகள் - 1896, தொகுப்பு I எண். 4, பக்கங்கள் 273-77. வெள்ளியின் உற்பத்தி அளவை அதன் மதிப்பை ஆதாரமாகக் கொண்டு கணித்த பழக்கம்தான் இந்த ஆதாரமற்ற அபிப்பிராயத்திற்குப் பெரும்பாலும் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய சிறிய (முக்கியமற்ற) விஷயங்கள் ஒருபுறம் இருக்க, 1873க்கு முந்திய இருபது வருடங்களிலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் தனித்தன்மையின் காரணமாக, விஷயம் கணிசமான அளவு குறுக்கப்பட்டது[1]. ஒப்பிட்டுப் பாருங்கள்; 1848 லிருந்து துவங்கி 1870 ஆண்டுடன் முடியும் காலத்திலும் 1870ஐ தொடர்ந்த காலத்திலும், அவை பற்றிக் கருத்தை ஈர்க்கிற உண்மை வெளிப்படுகிறது என்று கூறப்பட்டது; இந்தக் காலகட்டங்களில் இந்த இரு உலோகங்கள் மதிப்பில் ஒன்றுக்கொன்று எதிர் எதிராக இருந்தபோதிலும், அவற்றின் தராதர சப்ளையில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒருமித்து இருந்தன. 1870க்கும் 1893க்கும் இடைப்பட்ட காலத்தில், தராதர உற்பத்தியில் வெள்ளி ஆதிக்கத்தில் (உயர்வாக) இருந்தது. 1848க்கும் 1870க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த உயர் உலோகங்களின் தராதர சப்ளையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பொறுத்த வரை முன்சொன்ன காலத்தைப்போல் இணையாக இருந்தது; தங்கத்தைப் பொறுத்த வரைதான் அளவு அதிகமானது. இரண்டாவது காலகட்டத்தில் (1870-93) இரண்டு உலோகங்களின் மதிப்பு உறவுகளை அதிகப்படியான சப்ளைதான் நிர்ணயித்திருந்தால், முதல் காலகட்டத்திலும் (1845-70) அவற்றின் மதிப்பு உறவுகள், அதேமாதிரியே இருந்திருக்க வேண்டும். அப்படியானால், இரண்டாவது காலகட்டத்தில் ஏற்பட்டதுபோல் இரு உலோகங்களின் மதிப்பு உறவுகளில் ஏதாவது குலைவு முதல் காலகட்டத்தில் ஏற்பட்டதா? இரண்டு உலோகங்களின் உற்பத்தி விகிதங்களில் முதல் காலகட்டத்தில் ஏற்பட்ட அமளி (கலக்கம்) இரண்டாவது காலகட்டத்தில் விட ஏராளமாக அதிகமாக இருந்தது என்று வலியுறுத்தப்பட்டது. உண்மையில் ஒப்பு நோக்கிப் பேசுவதென்றால், இரண்டாவது காலத்தில் ஏற்பட்ட அமளி குறிப்பிடத் தகுந்ததாக இல்லை. ஆயினும், முதல் காலகட்டத்தில், அவற்றின் தராதர மதிப்பு ஏறத்தாழ மாறாத நிலையில் 1க்கு 15 1/2 என்ற விகிதத்தில் இருந்தன; இரண்டாவது காலகட்டத்தில், அது 16.10 லிருந்து 26.75 வரை இறக்க ஏற்றமாக இருந்தது. 1873க்கு பின் வெள்ளியின் மதிப்பு குறைந்ததற்குக் காரணம் அளவுக்கு அதிகமான சப்ளைதான் என்று வாதித்தவர் ஒரு பிரச்னையை எதிர்கொள்ள வேண்டி வந்தது; அது என்னவெனில், 1873க்குப் பின் தங்கத்தின் சப்ளை (தேவைப் பூர்த்தி)

1. ஆக்ஸ்போர்டு பொருளாதாரப் பரிசீலனை (The Oxford Economic Review), 1893ல்

அபரிமிதமாக ஆனபோது அதன் மதிப்பில் வீழ்ச்சி ஏன் ஏற்படவில்லை? எனவே, இந்த இரண்டு நிலைமைகளில் எது இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்பதுதான் வாதப்பிரதிவாதத்தின் அடிப்படையாக ஆகியது. முதல் கட்டத்தில் தங்க உற்பத்தியில் பிரமாண்டமான உயர்வு வெள்ளியின் மதிப்பை 2 சதவிகிதத்திற்கு மேல் உயர்த்தவில்லையெனில், இரண்டாவது கட்டத்தில் வெள்ளியின் தராதர உற்பத்தியில் ஏற்பட்ட (ஒப்புநோக்கினால்) ஒரு முக்கியமற்ற உயர்வு எவ்வாறு தங்கத்தின் விலை அபரிமிதமாக உயர்வதற்கு ஏன் இட்டுச் சென்றது? ஒரு சந்தர்ப்பத்தில் கட்டுப்படுத்தும் செல்வாக்காக இருந்தது எது? மற்றொன்றில் இல்லாமல் போனது எது? வெள்ளியின் மதிப்பைக் குறைத்தது தான் அதன் தாழ்வுக்குக் காரணம் என்று கருதியவர்கள், எல்லா விதத்திலும் ஒன்று போல் இருந்தாலும், இரண்டு காலகட்டங்களும் ஒரு குறிப்பிட்ட வித்தியாசத்தைக் கொண்டிருந்தன எனவாதித்தனர். அவற்றைப் பாகுபடுத்திக் காண்பித்தது எதுவெனில், முந்தியதில், ஒரு பொதுவான நடைமுறை இருந்தது; அது என்னவெனில், ஒரு நாட்டின் வழக்கமான (Standard) பணம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவு தங்கம் அல்லது வெள்ளி என்று நிர்ணயித்ததாகும். 1803க்கு முன்பு இரண்டு உலோகங்களும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விகிதத்தில் மதிப்பிடப்பட்டன; ஆனால் , அதற்குப்பின் விகிதம் 1க்கு 15 1/2 என்று அதிகமாக ஒன்றிணைந்ததாக (Uniform) ஆயிற்று; அதன் விளைவாகப் பணத்தின் வழக்கமான மதிப்பு அந்தக் காலகட்டம் முழுவதும் 1 கிராம் தங்கம் அல்லது 15 1/2 கிராம் வெள்ளி என்ற இருந்தது. அதற்கு மாறாக, இரண்டாவது காலகட்டத்தில், முதல் கால கட்டத்தைப் பிரத்தியேகமாக எடுத்துக்காட்டிய ''அல்லது'' என்பது விலைக்குறைப்பு மற்றும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் சட்டங்களால் நீக்கப்பட்டது; வேறுவார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், முதல் கட்டம், இரு உலோக நாணய முறை பரவலாக இருந்த தனித்தன்மை பெற்றிருந்தது. இந்த அமைப்பில் இரு உலோகங்களும் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் பரஸ்பரம் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் அவ்வாறு அவற்றைப் பயன்படுத்த முடியாது; காரணம் பரஸ்பரம் பரிமாற்றம் செய்து கொள்வதற்குத் தேவையான நிர்ணயிக்கப்பட்ட விகிதம் ரத்து செய்யப் பட்டது. அவ்வாறு பரிமாற்ற விகிதம் இருந்தது அல்லது இல்லாமல் போனது இரண்டு காலகட்டத்திற்கும் இடையே முழுதும் வேறுபட்ட

---

* இந்த விகிதங்களுக்கு ஹெச். கிப்ஸின் ''செலாவணி பற்றிய உரையாடல்'', இணைப்பு, அட்டவணை B

நிலையை ஏற்படுத்தும் அளவுக்குப் பலமுள்ள செல்வாக்கை ஏற்படுத்தியிருக்க முடியுமா? இந்த அம்சம்தான் முழு வித்தியாசத்தை ஏற்படுத்தியது என்பது இரு உலோக நாணய கோட்பாட்டாளர்களின் கருத்தாக இருந்தது. முதல் காலகட்டத்தில் நிலவிய பண அமைப்பு, தங்கமும் வெள்ளியும் ஒன்றை ஒன்று ஈடு மாற்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டன; ''இரு வேறுபட்ட பலம் கொண்ட (Strengths) ஒரே பண்டம் (பொருள்)'' என்றும் அவை கருதப்பட்டன. இவ்வாறு உறவு கொண்டிருந்ததால், சப்ளை நிலைமைகள் அவற்றின் பரிமாற்ற விகிதங்கள் மீது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. ஒரு மாற்றுப் பொருள் இல்லாத ஒரு பண்டம் பொறுத்தவரை நிலைமை மாறுபாடாக இருந்திருக்கும். மாற்றுக்களாக (Substituts) இருக்கும் பொருள்கள் சம்பந்தப்பட்ட வரை, ஒரு பொருளின் தராதரப் பற்றாக்குறை மற்ற பொருளுக்கு நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்ற விகிதத்தைவிட அதிகமான மதிப்பை அளிக்காது; காரணம் பரஸ்பரம் மாற்றிக் கொள்ளப்படும் சுதந்திரத்தின் காரணமாக, (ஒன்றின்) பற்றாக்குறை மற்றொன்றின் அபரிமிதத்தால் சரி செய்ய முடியும் (made good) மறுபுறத்தில், ஒன்றின் தராதர அபரிமிதம், மற்றதன் மதிப்பைப் பரிமாற்ற விகிதத்திற்குக் கீழாகக் குறைக்காது, ஏனெனில், அதன் தேவைக்கு அதிகமானதை மற்றதன் குறைவால் ஏற்பட்ட இடைவெளி ஈர்த்துக் கொள்ள முடியும். மாற்றுப் பொருள்களாக, அவை மாற்றப் படுவதற்கான விகிதங்கள் நிர்ணயிக்கப்படும்போது, தேவை அல்லது சப்ளையிலிருந்து எழும் எதுவும் அவற்றின் விகிதத்தைக் குலைக்க முடியாது. அவை இரண்டும் ஒரு பொருளாக இருப்பதால், வணிகத் தேவைகளுக்கு அப்பால் எந்த ஒரு அமைப்பின் தேவையிலும் சப்ளையிலும் எந்த மாற்றங்கள் ஏற்பட்டாலும், விலை மட்டத்தில் வெளிப்படுகின்றன; அதாவது, அவற்றில் ஒன்றுதான் பணப் பரிமாற்றச் சாதனம் என்பதுபோல் வெளிப்படுகின்றன. ஆனால், அவற்றின் பரிமாற்ற விகிதம் எந்த விஷயத்திலும் அப்படியே பாதுகாக்கப்படும்.

இதற்கு ஆதரவாக நிபுணர் ஜீவான்ஸ் மேற்கோள் காட்டப் பட்டார்[1] அவர் கூறினார்:-

> ''வேறுபட்ட பொருட்கள் இவ்வாறு ஒரே நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் போது, அவற்றின் தேவை, பரிமாற்றம் இவற்றின் நிலைகள் சுதந்திரமானவையல்ல. அவற்றின் பரஸ்பர

பரிமாற்ற விகிதம் அதிகமாக மாறமுடியாது. ஏனெனில், அவை பயன்படுவதன் விகிதத்தால் அவை நெருக்கமாக நிர்ணயிக்கப் படும். மாட்டுக் கறியும் ஆட்டுக்கறியும் கொஞ்சம்தான் வித்தி யாசப்படுவதால், மக்கள் அநேகமாகக் கவலைப்படாமல் அவற்றைச் சாப்பிடுகிறார்கள். ஆனால், ஆட்டுக்கறியின் மொத்த விலை சராசரியாக மாட்டுக்கறியின் மொத்த விலையில் 9க்கு 8 என்ற விகிதத்தில் அதிகமாகிறது. இந்த விகிதாசாரத்தில் பொதுவாக மக்கள் மாட்டுக்கறியை விட அதிகமாக ஆட்டுக் கறியை விரும்புவர். அப்படி இல்லாவிடில் அவர் அதிக விலை யுள்ள ஆட்டுக்கறியை வாங்க மாட்டார்கள். பயன்படுத்து வதில் சமத்துவம் இருக்கும் வரை, ஆட்டுக்கறிக்கும் மாட்டுக் கறிக்கும் இடையே உள்ள பரிமாற்ற விகிதம் 8 முதல் 9 வரையிலிருந்து மாறாதது. மாட்டுக்கறியின் சப்ளை வீழ்ந்தால், மக்கள் அதற்கு அதிக விலையைக் கொடுக்கமாட்டார்கள்; ஆனால், ஆட்டுக்கறியை அதிகமாகச் சாப்பிடுவார்கள். ஆட்டுக் கறி சப்ளை வீழ்ந்தால், அவர்கள் மாட்டுக்கறியை அதிகமாகச் சாப்பிடுவார்கள். மாட்டுக்கறியையும் ஆட்டுக் கறியையும் வித்தியாசப்பட்ட பலம் கொண்ட ஒரே ஒரு பண்டமாக உண்மை யில் நாம் பாவிக்க வேண்டும் - 18 காரட் தங்கமும் 20 காரட் தங்கமும் இருபொருள்களாகவன்று: ஒரே பொருளாக நாம் கருதுவதுபோல; ஒன்றன் 20 பாகங்களும் மற்றொன்றின் பதினெட்டு பாகங்களும் சமமானவை''.

''இந்தக் கோட்பாட்டின்படி, கார்னீஸின் கருத்துக்களுக்கு இசைவாகத் தங்கத்திற்கும் வெள்ளிக்கும் இருந்த பரிமாற்ற விகிதம் அசாதாரணமாக நிரந்தரமாக இருந்ததை நாம் விளக்க வேண்டும்; பதினெட்டாவது நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து சமீப ஆண்டுகள் வரை அது ஒருபொழுதும் 15ச் ரு 1 என்பதிலிருந்து விலகவில்லை. விகிதத்தின் இந்த உறுதித் (Fixed) தன்மை உற்பத்திச் செலவு அல்லது தொகையை முற்றிலுமாகச் சார்ந்திருக்கவில்லை என்பதை ஆஸ்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப் பட்டது மிகக் குறைவான விளைவையே ஏற்படுத்தியது என்பது நிரூபித்துள்ளது; இந்தக் கண்டுபிடிப்புகள் வெள்ளியை வாங்கக் கொடுக்கும் தங்க விலையை (Gold price of silver) கிட்டத்தட்ட 4 2/3 சதவிகிதத்திற்கு மேல் ஒரு பொழுதும் உயர்த்தியதில்லை. நிரந்தரமான பாதிப்பான 1 1/2 சதவிகிதத்துக்குமேல் போகவில்லை. தராதர மதிப்பிலுள்ள இந்த நிரந்தரத் தன்மை ஓரளவு தங்கமும் வெள்ளி யும் ஒரே நோக்கங்களுக்காக உபயோகப்படுத்தலாம் என்ற

உண்மையினால் இருக்கலாம்; ஆனால், தங்கத்தின் உயர்வான பிரகாசம் காரணமாக அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு; வெள்ளியைவிட 15 அல்லது 15 1/2 மடங்கு அதிகம் விலையுள்ளதாக இருந்திராவிடில். எனினும், இன்னமும் அதிகம் சாத்தியமானது, 15 1/2க்கு ஒன்று என்று நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் இருக்கலாம். அதன்படி, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பியக் கண்டத்து நாடுகளில் செலாவணியில் இந்த உலோகங்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. பிரான்ஸின் செலாவணிச் சட்டம் XI செயற்கையான[1] சமன நிலையை ஏற்படுத்தியது:-

''தங்கத்தின் உபயோகம் = 15 1/2 x வெள்ளியின் உபயோகம்.

ஏதாவது காரணம் இல்லாமலே வோலோவ்ஸ்கியும் மற்ற சமீபகாலப் பிரெஞ்சுப் பொருளாதாரவாதிகளும் மாற்றீடு செய்யும் (replacement) இந்தச் சட்டத்திற்குத் தங்கத்திற்கும் வெள்ளிக்கும் இடையே உள்ள உறவுகளின் குலைவுகலைத் தடுப்பதில் ஒரு முக்கிய செயல்திட்டம் (Effect) உண்டு என்று ஒருவேளை கூறியிருக்க மாட்டார்கள்.''

1873க்குமுன், இருஉலோக நாணயச்சட்டத்தின் நஷ்டஈட்டுச் செயலால் இந்த விகிதம் பாதுகாக்கப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும், 1873க்கு பின் அச்சட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படாமலிருக்குமா? இரு - உலோகவாதிகள் போல் ஒரு சந்தேகமற்ற சாதகமான பதிலை அளிக்கவேண்டுமெனில், இரு - உலோகநாணய அமைப்பு எந்தநிலைகளிலும் செயல்படும் என்று கருதவேண்டியிருக்கும். சிலகுறிப்பிட்ட நிலைமைகளில் அது செயல் படக்கூடியது என்பது உண்மையாயினும், வேறுநிலைமைகளில் அது செயல்படக் கூடியதல்ல.

---

1. இரு உலோக நாணய அமைப்பில் உள்ள இந்த செயற்கைத்தன்மைதான், சிலமனிதர்களின் மனதை மறைக்கிறது; மற்றவர்களிடம் தப்பெண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வேறு எந்த இரு பண்டங்களின்விலை நிர்ணயிப்பிலிருந்து, ஏன் வித்தியாசமாகச் சட்டம் நிர்ணயிக்கும் விகிதத்தின் அடிப்படையில் பணமாக உபயோகிக்கப்படும் இரு பொருட்களின் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைச்சிலர் புரிந்துகொள்ளவில்லை. தங்கமும் வெள்ளியும் இருமாற்றுப் பொருட்களாக இருந்தால், மற்றப் பொருட்கள் எந்தவித சட்டரீதியான விகிதமும் இல்லாமல் அவற்றின் உபயோகத்தில் புழங்கும்போது, இவை இரண்டு மட்டும் ஏன் சட்டரீதியான, விகிதம் தேவைப்படுகிறது என்பது மற்றவர்களுக்குப் புதிராக இருக்கிறது. இந்தச் சிரமங்களையெல்லாம் பேராசிரியர் பிஷர் நன்கு பின்வருமாறு விளக்கியுள்ளார்: ''பணத்தின் இரு உருவங்கள் மாற்றுப் பொருள்களாக

இந்த நிலைமைகள் பேராசிரியர் பிஷரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன.[1]

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாகச் சேர்க்கும்பொழுது, தேவை நிலைமைகளின் எண்ணிக்கையைக் குறைக்கிறது; ஆனால், பிரச்சினையில் ஒரு நிச்சயமற்ற நிலையில் ஏற்படுத்துவதில்லை; ஏனெனில், மறைந்த நிலைகளை நிர்ணயிக்கப்பட்டவிகிதம் கொண்ட மாற்றுப்பொருள் அளித்து விடுகிறது. சரும்புச் சர்க்கரையின் பத்துபவுண்ட்டுகள், பீட்ருட் சர்க்கரையின் பதினொரு பவுண்ட் அதே நோக்கத்தை நிறைவேற்றமுடியுமென்றால், இந்தஈட்டின் நிர்ணயிக்கப்பட்ட விகிதம் பத்துக்குப் பதினொன்றாகும். இந்த விஷயங்களில், இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ளவிகிதம் பொதுத்தேவையைப் பூர்த்திசெய்ய அவற்றின் தராதர சக்தியை (Capacity) விகிதம் இயற்கையால் நிர்ணயிக்கப்படுகிறது; அதுதன் பங்கிற்கு விலைவிகிதத்தை நிர்ணயிக்கிறது.

''எனினும் பணம்பற்றிய ஒரு தனி விஷயத்தில் நிர்ணயிக்கப்பட்ட பொருள்கள் மாற்றீட்டுவிகிதம் இல்லை. இங்கு நாம் தராதர இனிப்பு சக்தியைப்பற்றியோ, அதன் தராதரச் செழிப்பிக்கத்தக்க சக்தி பற்றியோ, தேவைகளைப்பூர்த்திசெய்யும் வேறுசக்தி(திறமை)யைப் பற்றியோ நாம் அவற்றின் விலைகளில் இருந்த சுதந்திரமான அந்தஉலோகங்களின் உள்ளார்ந்த சக்திபற்றியோ நாம் இங்குப் பரிசீலிக்கவில்லை. அதற்கு பதிலாக, அவற்றின் தராதர வாங்கும் சக்தியைப்பற்றி மட்டுமே கணக்கில் கொள்கிறோம். அந்த உலோகத்தின் உபயோகத்தை நாம் கணக்கில் கொள்ளவில்லை; ஆனால், அது வாங்கக்கூடிய பொருட்கள் பற்றியே. சர்க்கரைகளின் விலைகளைத்தெரிந்துகொள்வதற்குமுன், பரஸ்பரம் அவை விரும்பப்படுவது, உபயோகம் ஆகியவற்றை நிர்ணயிக்கிறோம். ஆனால், தங்கத்தையும் வெள்ளியையும் எந்தவிகிதத்தில் அவற்றின் விலையை நிர்ணயிக்கிறோம் என்பதை நாம் தெரிந்து கொள்ளுமுன், புழக்கத்தில் அவற்றின் தாரதர மதிப்பைபற்றி நாம் விசாரித்துத் தெரிந்து கொள்ளவேண்டும். நமக்கு அவற்றின் பொருள் மாற்றீட்டுவிகிதம் தற்செயலாக விலை விகிதமாக இருக்கிறது. பணத்தில் இருஉருவங்கள் விஷயம் தனித்தன்மை வாய்ந்தது. அவை மாற்றுப்பொருள்கள்; ஆனால் இயல்பான பொருள் மாற்றீட்டுவிகிதம் அவற்றிற்கு இல்லை; நுகர்வோர் முன்னுரிமை அளிப்பதைப் பொறுத்தது.

தேவையை நிறைவு செய்வதும் தேவையும் என்ற அமைப்பு ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளதன் மீது சும்மா திணிக்கப்படுவதுதான் நிர்ணயம் செய்யப்படும் சட்டப்பூர்வமான விகிதம் என்று கற்பனைசெய்பவர்கள் மேற்சொன்ன விளக்கங்களைக் (காரணங்களை) காணத்தவறுகிறார்கள். இதன் மூலம் அத்தகைய விகிதம் தோல்வியடைவது நிச்சயம் என்று அவர்கள் நிரூபிக்க முயலுகின்றனர். ...இந்த உவமை சரியானதல்ல... தங்கமும் வெள்ளியும் முழுமையாக ஒப்புவமையானவை அல்ல. இருமாற்றுப் பொருள்களுக்கான நுகர்வோரின் இயல்பான விகிதம் இல்லை. எனவே செயற்கையான விகிதத்திற்கான வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது.''

பணத்தின் வாங்கும் சக்தி, 1911, பக். 376-77

---

1. **பொருளாதாரத்தின் அடிப்படைக்கோட்பாடுகள்**, 1912, பக்கம் 228-29. பேராசிரியர் பிஷர் அளித்த எடுத்துக்காட்டுகளில், அவர் அதை அவ்வாறு எண்ணாவிட்டாலும், இருஉலோகநாணய அமைப்பின் வெற்றி அல்லது தோல்வி, அந்த இரு உலோகங்களும் புழக்கத்தில் வைக்கப்பட்டுள்ளனவா என்ற கேள்வியைப் பொறுத்துள்ளது என்று கூறுவதுபோல் தோன்றுகிறது. இரட்டை உலோக நாணயஅமைப்பின் தோல்வியைக் காண்பிக்க அளித்த எடுத்துக்காட்டில் - எண் 14(b) - போட்டோப்படம் - , தங்கம் முற்றிலுமாக புழக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளதாகக் காட்டுகிறது; ஆனால் விளக்கப்படத்தில், இரட்டை உலோக நாணயமுறையின் வெற்றியை அவர் காண்பிக்கிறார் எண்.15(b). அவரது போட்டோப் படம் தங்கம் பகுதியளவில்தான் புழக்கத்திலிருந்து விடுபட்டுள்ளது என்று காண்பிக்கிறது. ஆனால் மூன்றாவது ஒரு சாத்தியப்பாடு இருக்காது என்று கருதுவதற்கு எந்தக் காரணமும்

இரட்டை உலோக நாணய அமைப்பில் எழும்பிரச்சினை என்னவெனில், தங்கம், வெள்ளிப்பாளங்களுக்கிடையே உள்ள சந்தை விகிதம், தடையின்றி அடிக்கப்பட்டு, வரம்பற்ற சட்டபூர்வ நாணய மாற்று அதிகாரம் கொண்ட தங்க, வெள்ளி நாணயங்களுக்கிடையே உள்ள விகிதம் போன்றே எப்பொழுதும் இருக்குமா என்பதுதான். இப்பொழுது வெள்ளிப் பாளத்தின் சப்ளை (தேவைப் பூர்த்தி) தங்கப் பாளத்தை விடத் தராதரத்தில் அதிகமானால் விளைவு நாணயச் சாலையிலும் சந்தைவிகிதத்திலும் வேறுபாடுஇருக்கவேண்டும். இரு உலோக நாணயமுறைச் சட்டத்தின் நஷ்டஈட்டுச்செயல் சம நிலையை மீண்டும் ஏற்படுத்துமா? அதைச் செய்வதில் அது வெற்றி யடையலாம். அல்லது இல்லாமல் போகலாம். வெள்ளிப்பாளத் தின் சப்ளை (தேவைப்பூர்த்தி)யில் அதிகரிப்பும் தங்கப்பாளத்தின் சப்ளையில் குறைவும் பின்வருமாறு இருக்குமானால்; அதாவது, வெள்ளியின் குறைவு அது நாணயத்தின் பக்கம் சென்றதாலும், தங்கத் தின் அதிகரிப்பு அது நாணயத்திலிருந்து வெளிவந்ததாலும் என்ற நிலை ஏற்பட்டு, உலோகப்பாளங்கள் என்று அவற்றைப் பழைய நிலைகளுக்குத் திரும்பக் கொண்டுவரமுடிந்தால், இருஉலோக நாணயமுறை வெற்றிபெறும்; வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டு மெனில், இரு - உலோகப் பாளங்களின் சந்தைவிகிதம் நாணயச் சாலையின் விகிதத்திற்குத் திரும்ப எடுத்துச்செல்லும். ஆனால் வெள்ளியின் சப்ளை உயர்வாகவும், தங்கத்தின் சப்ளை குறைவாகவும் உள்ளநிலைமை ஏற்பட்டால் விளைவு பின்வருமாறு இருக்கும். அதாவது, வெள்ளிப் பாளங்களின் நாணயத்தை நோக்கிய ஓட்டம் அவற்றைப் (வெள்ளிப்பாளங்களை) பழைய மட்டத்திற்குக் குறைக் கிறது என்றால் தங்கப்பாளங்கள் நாணயத்திலிருந்து வெளி வருவது அவற்றின் பழையமட்டத்திற்கு உயர்த்துவதற்குப் போதுமான தாக இல்லை என்றால், தங்கமானது நாணயத்திலிருந்து வெளிவருவது தங்கப்பாளங்களின் மட்டத்தைப் பழைய நிலைக்கு உயர்த்துகிறது என்றால், ஆனால் வெள்ளியின் நாணயத்தைநோக்கிய ஓட்டம் வெள்ளிப்பாளங்களை அவற்றின் பழைய மட்டத்திற்கு குறைக்க வில்லையெனில், இரட்டை உலோகநாணயஅமைப்பு கட்டாயம்

இருப்பதாகத் தெரியவில்லை; அதாவது, போட்டோப்படம் 8இன் நிலை எண் 14 (b) ன்படி உள்ளது என்றபோதிலும், இருஉலோகங்களில் ஒன்று முற்றிலுமாக புழக்கத்திலிருந்து தள்ளப் பட்டாலும், இருஉலோக நாணயமுறை வெற்றிபெறும் சாத்தியப்பாடு உள்ளது. இரட்டை உலோக நாணயமுறையின் வெற்றிக்கு இருஉலோகங்கள் புழக்கத்தில் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அதன் வெற்றி என்பது எதைப்பொறுத்தது என்றால், இருஉலோகங்களின் பாளங்களின் தராதரம் மதிப்புகள் சட்டப்படி ஆக்கப்பட்ட இரு நாணயங்களுக்கிடையே உள்ள மதிப்பை நஷ்டஈட்டுச்செயல் மீண்டும் வழங்குகிறதா

தோல்வியுற வேண்டும். வேறுமாதிரி சொல்வதென்றால், இரு உலோகப் பாளங்களின் சந்தைவிகிதம் இரண்டு (உலோக) நாணயங் களிடையே சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட நாணயச்சாலையின் விகிதத்திலிருந்து வேறுபட்டிருக்கும்.

இந்த இரு சாத்தியப்பாடுகளில் எதன் கீழ் 1873க்கு பிந்திய சூழ்நிலைமைகள் ஏற்பட்டிருக்கும்? இந்தக் கேள்விக்கு யாரும் (சரியான) திட்டவட்டமாகப் பதில் எதையும் சொல்லமுடியாது. முந்திய கட்டத்தில் இரு - உலோக நாணய அமைப்பின் வெற்றியை ஒப்புக்கொண்ட ஜீவான்ஸ்கூட, பிந்திய காலத்தில் அதன்வெற்றி பற்றி அவ்வளவு நம்பிக்கையாகக் கூறமுடியவில்லை. அவர் குறிப் பிட்டது வருமாறு:[1]

> ''இரு - உலோக நாணயஅமைப்பு என்ற பிரச்சினை எந்தத் திட்டவட்டமான, எளிய பதிலையும் அளிப்பதில்லை. அது சாராம் சத்தில் நிர்ணயிக்க முடியாத பிரச்சினை. அது பல்வேறு வேறுபட்ட அளவுகளையும் (Quantities) பலநிலையான அளவுகளையும் உட்படுத்துகிறது; இதில் பிந்தியது கறாரற்ற முறையில் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது, அல்லது பல எடுத்துக்காட்டுகளில் முற்றிலுமாகத் தெரிந்து கொள்ளப்படாம லிருக்கிறது.....''

எப்படியாயினும், நாணயச்சாலை விகிதத்திற்கும் சந்தை விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு, இரட்டை உலோக நாணயஅமைப்பின் கீழ், இரட்டை உலோக நாணய அமைப்பு இல்லாத நிலைமையை விடக் கட்டாயம் குறைவாக இருக்க வேண்டு மென்பது நிச்சயம். சந்தைவிகிதம், நாணயச்சாலை விகிதத்திலிருந்து எப்பொழுது வேறுபட்டாலும், இரு உலோக நாணயமுறைச் சட்டத்தின் நஷ்டஈட்டுச் செயல் சமநிலையைத் திரும்ப ஏற்படுத்த முயல்கிறது; அவ்வாறு செய்யமுடியாதபோது, இரண்டு விகிதங்களுக்கு மிடையேயான இடைப்பள்ளத்தைக் குறைப்பதில் அது வெற்றி பெறுகிறது. விஷயம் இவ்வாறு இருக்கையில், 1873க்குப் பின் வெள்ளி யின் மதிப்பு குறைக்கப்படாமலிருந்தால், முந்தியகாலத்தில் ஏற்பட்ட பணக் குழப்பத்தின்போது இருந்தது போலவே, தங்கத்திற்கும் வெள்ளிக்குமிடையிலான விகிதம் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று

---

1. ஆராய்வுகள் (Investigation) ஆசிரியர், பாக்ஸ்வெல், ப.317.

வாதிப்பது பாதுகாப்பான நிலை. எப்படியாயினும் இதுமட்டும் நிச்சயம்; அதாவது, இரண்டு உலோகங்களுக்கிடையேயான சந்தை விகிதம் நாணயச் சாலை விகிதத்திலிருந்து உண்மையில் ஏற்பட்ட அளவுக்கு வேற்றுமைப்பட்டிருக்காது.[1]

எனவே, எழுபதுகளின் நிதிபற்றிய சட்டம் ஒரு வருந்தத்தக்க சம்பவமாகும்; ஏனெனில், அது முன்பு தெரியாத ஒரு பிரச்சினையை எந்தநோக்கத்திற்காகவும் இல்லாமல் உண்டாக்கவில்லையெனினும், மோசமான நிலைமையை மேலும் மோசமானதாக்க உதவாது. 1870க்கு முன்பு, பொதுவான செலாவணியை எல்லா நாடுகளும் பெற்றிருக்கவில்லை. இந்தியாவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் வேறுஎங்கும் இல்லாதபடி வெள்ளியை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. மற்றநாடுகள், இங்கிலாந்து, போர்ச்சுக்கல் போன்ற நாடுகள் தங்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன; ஆனால், அவற்றின் பரஸ்பரப் பரிமாற்றங்களில் ஒரு பொதுவான மூலஅளவு வேண்டுமென்று அவை எதுவும் உணரவில்லை. பிரான்ஸிலும் லத்தீன் யூனியினிலும் நிர்ணயிக்கப்பட்ட விகித அமைப்பு இருந்தவரையிலும், பிரச்சினைக்குப் பரிகாரம் அளிக்கப்பட்டது; ஏனெனில், அதன்கீழ், இரண்டு உலோகங்களும் ஒன்று என்றநிலையில் செயல்பட்டதால், அதன்மூலம் ஒரு பொதுவான மூலஅளவு ஏற்பட்டது. எல்லா நாடுகளும் ஒரே உலோகத்தை மூலஅளவுப் பணமாக உபயோகிக்காவிடினும், இரண்டில் ஏதாவது ஒன்றை ஒரு வகுக்கப்பட்ட விகிதத்தில் உபயோகிக்கும் ஏதாவது ஒரு நாடு இருந்தாலும், பெரும்பாலான நாடுகளுக்கு, எந்தஉலோகத்தை அவை உபயோகித்தன என்பது வெவ்வேறு அளவில் இருந்த ஒரு அலட்சியமான மனப்பான்மைதான். இந்த நிர்ணயிக்கப்பட்ட விகிதம் அழிக்கப்பட்டதும் வெவ்வேறுஅளவிலான அசிரத்தை என்பது மிகமுக்கியமாகக் கவலையாக மாறியது. ஒருபொதுவான செலாவணி இல்லாமலே, ஒரு பொதுவான சர்வதேச மூலஅளவின் (Standard) பலன்களை முன்பு அனுபவித்த நாடுகள் ஒரு நெருக்கடியை எதிர்நோக்கின; அதில் பொதுவான தரத்தை, மூல அளவை அடையத் தனது செலாவணியைத் தியாகம் செய்வதா அல்லது தனது செலாவணியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே பொதுவான தரத்தை இழப்பதா என்பது

பிரச்சினை. ஒரு பொதுவான தரத்தின் சாதகங்கள் முடிவாக அதை அடைவதில் முடிந்தது. அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். பெரும் அளவிலான தீங்கையும் பலமான பளுக்களையும் ஏற் படுத்தாமல் அதன் விளைவு என்ன என்பதை மக்கள் உணர்ந்ததை அது நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை.

இயல் 3

வெள்ளி நாணயப் புழக்கமும் அதன் நிலையற்ற தன்மையின் தீமைகளும்

நாணய மாற்றுச் சமநிலையில் ஏற்படும் சிக்கல்கள் நீண்ட காலப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தின. இது வர்த்தக உலகை எதிரும் புதிருமாக வரையறுக்கப்பட்ட இரு முகாம்களாகப் பிரித்து வைத்தது. ஒருபுறம் தங்க நாணயப் புழக்கமும் மறுபுறம் வெள்ளி நாணயப் புழக்கமும் அவற்றின் நிலையான பணப் புழக்கங்களாக ஆகிவிட்டது. 1873 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட அளவு தங்கம், ஒரு குறிப்பிட்ட அளவு வெள்ளிக்குச் சமம் என்று இருந்தபோது, சர்வதேசப் பரிவர்த்தனைகளில் இது ஒரு சிறிய விஷயமாகவே இருந்தது. எந்த நாணயம் ஆனாலும் கொடுக்கல் வாங்கல்களில் பெரிய வித்தியாசங்கள் ஏற்படவில்லை. ஆனால், இந்த நிலையான ஏற்பாடு, ஒவ்வோர் ஆண்டும் அல்லது ஒவ்வொரு மாதத்திலும் கூடச் சீர்குலைந்தபோது, எவ்வளவு வெள்ளி எவ்வளவு தங்கத்துக்கு ஈடானது என்பதை மதிப்பிடுவதில் நாணயப்புழக்க மதிப்பீடு ஒரு நிச்சயமற்ற சூதாட்டத்துக்கு இடமளித்தது.

ஆனால் எல்லா நாடுகளும் இத்தகைய குழப்பச் சூழலுக்குள் ஒரே அளவிலும் ஒரே பரப்பிலும் இழுபடவில்லை. இருந்தாலும், உலக வர்த்தகத்தில் பங்குகொண்ட அனைத்து நாடுகளும் இச்சூழலுக்குள் சிக்காமல் தப்பிக்க முடியவில்லை. மற்ற நாடுகளை விடவும், இந்தியாவைப் பொறுத்தவரையில் இது மிகவும் சரியாகும். வெள்ளி நாணயப் புழக்கமுள்ள நாடு இந்தியா. இது, தங்க நாணயப் புழக்கமுள்ள நாட்டோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. தங்கம்- வெள்ளியின் ஒப்பீட்டு மதிப்புகளின் மீது செயல்படுகிற குருட்டுச்சக்திகள் ரூபாய்-ஸ்டெர்லிங் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் அவற்றின் பிடியில் இந்தியாவின் பொருளாதாரமும் நிதிநிலைமையும் சிக்கியிருந்தன.

யெல்லாம் தங்கச் செலாவணியில் பணத்தைச் செலுத்தவேண்டிய கடமைப்பாடு கொண்டிருந்தனவோ, அவற்றுக்கெல்லாம் சுமையை அதிகரிக்கக் கூடியதாய் இருந்தது. இப்படி அதிக அளவில் பணத்தைத் தங்கமாகச் செலுத்தக்கூடிய நாடுகளில் ஒன்றாக இந்திய அரசு இருந்தது. அதன் அரசியல் சட்டத்தின்படி, அரசாங்கம் இங்கிலாந்தின் பின்வரும் தேவைகளுக்குப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. 1.ரயில்வே கம்பெனிகள் உத்திரவாதப் பங்குகள் மற்றும் கடன்கள் மீதான வட்டி; 2. இந்தியாவில் ஐரோப்பியத் துருப்புகளை நிர்வகிக்க ஆகும் செலவு; 3. இங்கிலாந்திலேயே செலுத்தவேண்டிய பயன்சாரா உதவித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள்; 4. உள்நாட்டு ஆட்சி நிர்வாகச்[1] செலவு, மற்றும் 5. இந்தியாவில் நுகர்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு இங்கிலாந்தில் வாங்கிய பண்டங்களுக்கு ஆன செலவுகள். இங்கிலாந்து நாடு தங்க நாணயப் புழக்கம் கொண்ட நாடாக இருந்ததால் மேற்சொன்ன செலவினங்களுக்கான பணத்தைத் தங்கமாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், இந்தியாவில் சட்டப்படி புழக்கத்தில் இருந்த வெள்ளியில்தான் இந்திய அரசுக்கு வருவாய் வந்தது. அதிலிருந்துதான் இங்கிலாந்துக்குப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. தங்கத்தில் பணம் செலுத்துவது நிலையாக இருந்த தாக வைத்துக்கொண்டாலும் வெள்ளியின் தங்க மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சிக்கு இணையாக சுமை அதிகரிக்கும் என்பது தெளிவாய்த் தென்பட்டது. ஆனால், தங்கத்தில் பணம் செலுத்துவது நிலையான அளவில் இல்லை, அவை தொடர்ந்து உயர்ந்துகொண்டே சென்றன. அதனால் தங்கத்தில் செலுத்துவதற்கு ஏற்ற ரூபாய் செலவு- தங்கத்தில் செலுத்துவதற்கு ஏற்ற ரூபாய் செலவு- அளவிலும் தங்கத்தின் மதிப்பு உயர்வினாலும் - அதிகரித்தது. இந்த இரட்டை அநியாயத் தீர்வை, இந்தியாவின் வருவாயைக் குறைத்தது என்பதை அட்டவணை XI இல் உள்ள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

1. 1920 ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து இந்தச் செலவினத்தின் ஒரு பகுதி ''அரசியல்'' ரீதியானது என்று பிரிட்டிஷ் மதிப்பீடு தெரிவிக்கிறது.

அட்டவணை XI

தங்கத்தில் பணம் செலுத்துவதனால் ஏற்பட்ட அதிகப்படியான ரூபாய் செலவு +

நிதி ஆண்டு	ஆண்டின் சராசரி செலாவணி விகிதம்	1874-75ஆம் ஆண்டின் ஸ்டெர்லிங் பணச்செலுத்தல்களை எதிர்கொள்ளத் தேவைப்பட்ட மொத்த ஸ்டெர்லிங் பணச் செலுத்தல்களுக்கு அவசியமான கூடுதல் ரூபாய்கள்.	(1) 1874-75 ஆம் ஆண்டின் செலாவணி விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி.	(2) 1874-75 ஆம் ஆண்டில் தங்கத்தில் செலுத்துவது அதிகரிப்பு.
	ஸ்டெ.பெ	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
1875-76	19.626	86,97,980	41,13,723	45,84,257
1876-77	18.508	3,15,06,824	1,44,68,234	1,70,38,590
1877-78	18.791	1,30,05,481	1,14,58,670	1,15,46,811
1878-79	17.794	1,85,23,170	1,04,16,718	81,06,452
1879-80	17.961	39,23,570	1,65,37,394	-1,26,13,824
1880-81	17.956	3,12,11,981	1,92,82,582	1,19,29,399
1881-82	17.895	3,18,19,685	1,98,76,786	-1,19,42,899
1882-83	17.525	62,50,518	1,86,35,246	2,48,85,764
1883-84	17.536	3,44,16,685	2,33,46,040	1,10,70,645
1884-85	17.308	1,96,25,981	2,48,03,423	51,77,442
1885-86	16.254	1,82,11,346	2,54,95,337	-4,37,06,683
1886-87	15.441	4,69,16,788	4,46,68,299	22,48,489
1887-88	14.898	4,63,13,161	4,96,60,537	-33,47,376
1888-89	14.379	9,00,38,166	6,59,71,998	2,40,66,168
1889-90	14.566	7,75,96,889	6,06,98,370	1,68,98,519
1890-91	16.090	9,06,11,857	4,65,48,302	4,40,63,555
1891-92	14.733	10,44,44,529	6,54,52,999	3,89,91,530

அரசாங்கத்தின் நிதி நிலைமை மீது சுமை அதிகரித்து வந்தால் ஏற்படும் விளைவு எத்தகையது என்று நாம் கற்பனை செய்யலாம். அரசாங்கத்தின் நிலைமை முதலில் இக்கட்டானதாகவும் இந்தச் சுமை அதிகரித்தபோது திக்குமுக்காடவும் வைத்தது. அரசாங்கத்தின் நிதிநிலைமைகளில் வளைந்து கொடுக்காத முரட்டுத் தனமான பொருளாதாரம் மற்றும் அதிகமான வரிவிதிப்பு எனும் கொள்கையை அரசு அமலாக்கியது. 1872-73 ஆம் ஆண்டு முதல், இந்திய வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படும் நிதி ஆதார வாயில்களை ஆராயும்போது, நாட்டில் அமலில் இருந்துவரும் தீர்வைகளோடு, அதிகமான வரிவிதிப்பு இல்லாத ஆண்டே இல்லை என்று நாம் கண்டறிந்து கொள்கிறோம். 1872-73 ஆம் ஆண்டு மாகாண விகிதங்கள் என்ற பெயரில் வரிவிதிப்பு அறிவிக்கப்பட்டது. 1875-76 ஆம் நிதியாண்டில் மதுபான வகைகள் மீதான வரியில் ஒவ்வொரு காலன் மதுபானத்துக்கும் கூடுதலாக ஒரு ரூபாய் விதிக்கப்பட்டது. 1877-78 ஆம் ஆண்டில் மால்வா, அபினி மீதான நுழைவுவரி ஒவ்வொரு பெட்டிக்கும் ரூ. 600 லிருந்து ரூ.650 ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் 1878-79 ஆம் ஆண்டு லைசன்ஸ் வரி மற்றும் உள்ளூர் வரிகள் விதிக்கப்பட்டன. அதோடு, மறு ஆண்டில் மால்வா, அபினி மீதான வரி ஒரு பெட்டிக்கு ஐம்பது ரூபாய் கூடுத லாக்கப்பட்டது. இத்தகைய வரிவிதிப்புகள் மூலம் அரசாங்கம் தனது நிதிநிலைமைகளுக்குப் போதுமான அடித்தளம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்தது. 1882 ஆம் ஆண்டின் இறுதியில் தனது நிதி நிலைமைகள் பாதுகாப்பாய் இருப்பதாக அரசு கருதியது. மேலும் அதுவரையில் இருந்து வந்த சில வரிகளை ரத்துசெய்தது; வடமேற்கு மாகாணங்களில் பட்வாரி வரியையும், சுங்கவரியையும் ரத்து செய்தது. ஆனால், செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, ஸ்டெர்லிங்கில் பணம் செலுத்துவது அதிகரித்ததால் மேன்மேலும் வரி விதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏற்கனவே, இருந்த சுமையோடு 1886ஆம் ஆண்டு வருமான வரியும் சேர்ந்தது. அத்துடன் இறக்குமதிப் பொருட்கள் மற்றும் விளக்குகளுக்கு எரிபொருளாக இல்லாத பெட்ரோலியம் முதலியவற்றின் மீது 5 சதவீத வரி விதிக்கப்பட்டது. 1888 ஆம் ஆண்டில் ஒரு மணங்கு உப்புக்கு இந்தியாவில் வரி ரூ.2. லிருந்து ரூ.2½ ஆக உயர்த்தப்பட்டது; பர்மாவில் 3 அணாவிலிருந்து ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1882 ஆம் ஆண்டில் வடமேற்கு மாகாணங்களில் ரத்துசெய்யப்பட்ட பட்வாரி உபரி வரி, 1888 ஆம் ஆண்டு மீண்டும் நடைமுறைக்கு வந்தது. இறக்குமதி செய்யப்பட்ட

மதுபானங்கள் மீதான வரிகளும், மதுவகைகள் மீதான தீர்வைகளும்1890 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது மட்டுமின்றி, அதன் பிறகு ஒவ்வொரு மாகாணத்திலும் வரிவிதிக்கப்பட்டது. 1893 ஆம் ஆண்டு புளிப்பு வகை மதுபானம் மீது ஆயத்தீர்வை விதிக்கப்பட்டது. கருவாடு ஒரு மணங்குக்கு ஆறு அணா வீதம் மற்றொரு ஆயத்தீர்வை விதிக்கப்பட்டது. 1882-83 ஆம் ஆண்டிலிருந்து விதிக்கப்பட்ட வரி முதலானவை மூலம் கிடைத்த வருவாய்[1]

ஆதார வாயில்கள்	1882-83	1892-93
	ரூபாய்	ரூபாய்
உப்பு	5,67,50,000	8,14,90,000
ஆயத்தீர்வை	3,47,50,000	4,97,90,000
சுங்கவரி	1,08,90,000	1,41,80,000
தீர்மானிக்கப்பட்ட வரிகள்	48,40,000	1,63,60,000

கூடுதலாக வந்து விழுந்த இந்தச் சுமைகள் யாவும் தங்கத்தில் செலுத்த வேண்டிய பணத்தை இந்திய ரூபாயில் செலுத்தியதால் ஏற்பட்டவை ஆகும். மேலும், ''இந்தச் சுமை செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவே ஆகும், மற்றபடி அது அவசிய மற்றது.''[2]

இந்திய அரசு நிதிஆதாரவாயில்களை அதிகரித்துக் கொண்டதுடன், ஆட்சி நிர்வாகச் செலவில் பொருளாதாரத்தின் தன்மையைச் செயல்படுத்திக் காட்டியது. வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டுப், பணியில் அமர்த்தப்பட்டிருந்தவர்களுக்குப் பதிலாக, உள்நாட்டிலேயே கிடைத்த மலிவான ஏஜென்சி மூலம் வேலைக்கு ஆளெடுக்கும் மாற்று ஏற்பாட்டைச் செய்தது. 1870 ஆம் ஆண்டுக்கு முன்னர் இம்மாதிரி ஓர் ஏற்பாட்டுடன் கூடிய பயன்முனைப்பான பொருளாதாரத்துக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது.

தனிச்சிறப்பான ஒப்பந்தப்படி அமைக்கப்பட்ட பணி இடங்களுக்கான 1793[1] ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம், அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த பணியிடங்களில் இந்தியர்களை நியமனம் செய்வதற்கு 1853 [2] ஆம் ஆண்டின் அரசுப் பணிச் சீர்திருத்தங்கள் மூலம் வழி திறந்து விடப்பட்டது. அரசுப்பணியில் இருந்த ஆங்கிலேயர்கள் பெற்ற அதே அதிக அளவு சம்பளத்தை இந்தியர்களும் பெற்றனர் என்பதால், ஆட்சி நிர்வாகச் செலவில் பொருளாதாரத்தைச் சிக்கனப் படுத்த இந்தச் சீர்திருத்தம் உதவி செய்யவில்லை.

1870 ஆம் ஆண்டு சட்டம் (33 Vic. C. 3) நிறைவேற்றப்பட்ட போது, முன்னர்க் குறிப்பிட்ட ஒதுக்கீட்டு இடங்களில் இந்தியர்களைக் குறைந்த சம்பளத்தில் நியமனம் செய்ய வகை செய்யப் பட்டிருந்தது. அது, இந்திய அரசு முன்வைத்த பொருளாதாரச் சிக்கனத்துக்கு உண்மையான வாய்ப்பாகவே அரசு கருதியது. நிர்ப்பந்தம் காரணமாக இந்திய அரசு இந்தச் சட்டத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டது. பொருளாதார மேம்பாட்டுக்கான தேவை பெரிதாக இருந்தது, தனது செலவுகளைக் குறைத்துக் கொள்வதில் அரசுக்கும் அதிக ஆர்வம் இருந்தது. அதனால், நன்கு செயல்படக்கூடிய ஆட்சி நிர்வாகத்துக்கான தேவை அதிகரித்தபோது, அதற்கு அணைபோட்டுத் தடுத்து விடாமல், அதிகச் செலவிலான ஒப்பந்தப் பணியாளர்களின் ஏஜென்சிக்குப் பதிலாக, ஒப்பந்த மற்ற பணியாளர்களைக் குறைந்த சம்பளத்தில் நியமிக்கும் ஏஜென்சியைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இந்த மாற்று ஏற்பாடு, ஏதோ சிறிய அளவிலானது என்று கூறிவிட முடியாது. ஒப்பந்தப் பணியாளர்களுக்கான பணியிடங்களில் ஒப்பந்தமற்ற இந்தியர்களை அமர்த்துவதன் மூலம் 1874-1889 ஆம் ஆண்டுகளுக்கான ஆள்தேர்வு முதலில் 22 சதவீதம் குறைக்கப்பட்டது. அது மேலும் 12 சதவீதம் குறைக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.[3]

துறைசார்ந்த ஊதாரித்தனம் வளராமல் தடுக்க வெட்டுக் கத்தி வைத்ததன் மூலம் அரசாங்கம் ஒரு நிவாரணத்தைக் கண்டு

---

1. 1887 ஆம் ஆண்டு, பொதுத் தேர்வாணைய அறிக்கை சி. 5327 - ஐக் காண்க.

2. இந்த முன்னேற்பாடு 1861 ஆம் ஆண்டுச் சட்டப்படி மறுபடியும் சட்டபூர்வமாக்கப் பட்டது.

3. 1890, மக்கள் சபையில் கிழக்கிந்தியக் கம்பெனி (ஊழியர்) பற்றிய செலக்ட் கமிட்டியின் சாட்சியக் குறிப்புகள், வினா எண். 12. திரு. ஜெங்கின்சின் சாட்சியம், குறிப்பு 327.

பிடித்தது. அத்துடன் நிர்வாகத்தில் தனக்குப் பிடித்தமான ஏஜென்சியை மலிவான செலவில் பதிலியாக்கியது.[1] செலாவணி வீழ்ச்சி தொடர்ந்த காலக்கட்டம் முழுவதும் வருவாயை அதிகரிப்பது, செலவினங்களைக் குறைப்பது ஆகிய துணிச்சலான முயற்சிகளும் கூட, நிதிநிலைமையைப் பெரிதாக அபிவிருத்தி செய்துவிடவில்லை என்பதை அட்டவணை XII காட்டுகிறது.

பொருளாதாரச் சிரமங்களின் காரணமாகப் பயனுள்ள பொதுப் பணிக்கான பணத்தைத் தேடிப்பெற அரசுக்குத் திறனில்லாது போனது பெரிதும் கவலைக்குரியது. நாட்டிலிருக்கும் மிகச்சிறந்த ஆதார வாயில்களை நன்கு பயன்படுத்திக் கொள்வதையே, இந்திய மக்களின் நலவாழ்வு சார்ந்துள்ளது. ஆனால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிற முயற்சிக்குத் தேவையான உணர்வு மக்களிடம் மிகச் சொற்பமாக இருந்து வந்துள்ளது. எனவே, பொருளாதார வாழ்க்கைக்கு ஆதாரமான இரண்டு முக்கியத்தேவைகளை - போக்குவரத்து, நாடு தழுவிய நீர்ப்பாசன வசதி - வழங்குகிற கடமை இந்திய அரசின் கடமையாகிறது. இந்த நோக்கத்தோடு அரசாங்கம், மூலதனக் கடன் கள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, ''அசாதாரணமான பொதுப்பணி கள்'' என்ற பெயரில் ஒரு வளர்ச்சிக் கொள்கையைத் தொடக்கி வைத்தது. அத்தகைய கடன்வசதிகளைப் பொறுத்தவரை இந்தியா எதிர்பார்த்தபடி, மக்களிடமிருந்து இக்கடன் வசதியைப் பெற முடியாமற் போய்விட்டது. காரணம், மக்களும் ஏழைகளாய் இருந் தனர், அவர்களிடம் இருந்த சேமிப்பு, திட்ட முதலட்டில் ஒரு சிறு பகுதியை நிரப்பக் கூடப் போதுமானதாய் இல்லாமலும் இருந்தது. ஏழை மக்களின் எல்லா அரசுகளைப் போலவே இந்திய அரசும் உபரி மூலதனத்தைக் கடனாகப் பெறப் பணக்கார நாடுகளின் பக்கம் திரும்ப வேண்டியிருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த நாடுகள் தங்கச் செலாவணியைக் கொண்டிருந்தன. இவ்வளவு தங்கமானது இவ்வளவு வெள்ளிக்குச் சமம் என்று இருந்த வரைக்கும் ஆங்கில முதலீட் டாளர்கள் இந்திய அரசின் கடன்பத்திரங்கள் ரூபாய் அல்லது ஸ்டெர் லிங்கில் இருப்பது குறித்துப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், வெள்ளிக்கு எதிரான தங்க மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பது, ரூபாய் கடன் பத்திரங்களுக்கு எதிரான தங்கமதிப்பில்

[illegible] 1886 [illegible] கலைக்கப்

ஏற்பட்ட வீழ்ச்சியாகவும் இருந்தது. ஒரு காலத்தில் மிகப் பத்திர மான முதலீடு என்றிருந்தது, இப்போது மதிப்பிழந்து போனது. இந்நிலைமை, அரசை அதன் அசாதாரணப் பொதுப்பணிக்குரிய நிதி யுதவி செய்யும் விஷயத்தில் அரசைச் சிக்கலான நிலைமைக்குள் தள்ளியது. அட்டவணை XIIIஇல் உள்ள புள்ளிவிவரங்கள் ஆராயத் தக்கவை.

ஆங்கில முதலீட்டாளர்கள் ரூபாய் கடன் பத்திரங்கள் அடிப்படையில் முதலீடு செய்ய முன்வரவில்லை. எனவே, இந்திய ரூபாய் கடன்பத்திரங்களின் முக்கிய வாடிக்கையாளரை இந்தியா இழந்தது. இந்தியப் பணச் சந்தையில் பிரதிபலிப்பு போதுமானதாய் இருக்கவில்லை. இந்தியாவுக்கு முதலீட்டைப் பெரிய அளவிலும் நிலையாகவும் கொண்டுவந்து குவிக்க ஒரே வழி ஸ்டெர்லிங் பத்திரங்களை வெளியிடுவதாகத்தான் இருந்தது. ஆனால், இது தங்கத்தில் பணத்தைச் செலுத்துவதன் சுமையை அதிகரித்தது.

அட்டவணை XII

இந்திய அரசின் வருவாய் மற்றும் செலவுகள்

ஆண்டு	சராசரி செலாவணி விகிதம்	இந்தியாவில்			இங்கிலாந்தில்		இறுதி விளைவு
		நிகர வருவாய்	செலாவணி நீங்கலாக நிகர செலவு	உபரி வருவாய்	நிகர ஸ்டெர்லிங் வருவாய்	செலாவணி	உபரி(+)/ பற்றாக் குறை (-)
		ரூபாய்	ரூபாய்	ரூபாய்	பவுண்டு	ரூபாய்	ரூபாய்
1874-75	22.156	39564216	25,897,098	13667118	12562101	1045239	59778
1875-76	21.626	40053419	2 4541923	15511496	12544813	1377428	1589225
1876-77	20.508	38253366	25355285	12898081	13229646	2252611	-2584176
1877-78	20.791	39275489	27658021	11617468	13756478	2123030	-4262040
1878-79	19.794	44415139	25778928	18636211	13610211	2891902	2134098
1879-80	19.961	45258197	29384030	15874167	14223891	2878169	-1227893
1880-81	19.956	44691119	34880434	9810085	11177231	2264848	-3031394
1881-82	19.895	45471887	27717249	17754638	11737688	2421499	3595451

		ரூபாய்	ரூபாய்	ரூபாய்	பவுண்டு	ரூபாய்	ரூபாய்
1882-83	19.525	42526173	25500437	17025736	13299976	3050923	674837
1883-84	19.536	43591273	23566381	20024892	14770257	3375158	1879477
1884-85	19.308	41585347	24763779	16821568	13844028	3363986	-386446
1885-86	18.254	42635953	27352132	1528321	13755659	4329888	-2801726
1886-87	17.441	44804774	25124335	19680439	14172298	5329714	178427
1887-88	16.898	45424150	25968025	19456125	15128618	6356936	-2028832
1888-89	16.379	46558354	25051147	21507207	14652590	6817599	37018
1889-90	16.566	50005810	26367855	-23637955	14513155	6512767	2612033
1890-91	18.090	49403819	25579727	23824092	15176866	4959055	3688171
1891-92	16.733	50023142	27013618	23009524	15716780	6825909	467535

தங்கத்தில் பணத்தைச் செலுத்துவதைக் குறைக்க வேண்டும் என்பது அரசாங்க நலனுக்கு மிகவும் உகந்ததாய் இருந்தது; லண்டன் பணச்சந்தையை நாடுவதும் தவிர்க்கமுடியாததாய் ஆயிற்று; சந்தையும் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தது[1]. இதன் விளைவாக, அசாதாரணமாகப் பொதுப்பணிகளை விரிவுபடுத்தும் நடவடிக்கையை நாட்டின் தேவைக்கேற்பச் செயல்படுத்த முடியாமல் போனது. செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உருவான நிதி நிலைச் சீர்குலைவின் விளைவுகள் இந்திய அரசோடு நின்றுவிடவில்லை. அரசாங்கத்தின் நிதிஉதவியைச் சார்ந்திருந்த நகர சபைகளும் இதர பிற உள்ளாட்சி அமைப்புகளும்தான் அந்த விளைவுகளை உடனடியாக அனுபவித்தன. அரசுக் கருவூலத்தில் அபரிமிதமாகப் பணம் இருந்தவரை, அவற்றைப் பயன்படுத்திட, ''மிகவும் பயனுள்ள ஒருவழியாக'' உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றில் ஒரு பகுதியைக் கடனாகக் கொடுத்தது அரசாங்கம். ரிப்பன் பிரபுவின்

1. பின்வரும் ஆண்டுகளில் செலாவணி வீழ்ச்சியினால் இந்தியக் கடன் பகிர்வு பின்வருமாறு இருந்தது.

	ஸ்டெர்லிங் கடன்	ரூபாய் கடன்
1873 - 74 இறுதி	41,117,617	66,41,72,900
1898-99 இறுதி	124,268,605	1,12,65,04,340

உள்ளாட்சிக் கொள்கையின் கீழ் அவை அப்போதுதான் தொடக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலும் அவை, பரிசோதனை முயற்சியாகக் கருதப்பட்டன. அவற்றின் வரிவிதிப்பு மற்றும் கடன்பெறும் அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டிருந்தன. அதன் விளைவாகத், தற்காலிக முன்பணம் என்ற அடிப்படையில் மத்திய அரசு தந்த நிதிஉதவி அவற்றுக்கு விலைமதிக்க முடியாத ஆதாரவாயிலாக இருந்தது. எனினும், தொடர்ந்து செலாவணி வீழ்ச்சி ஏற்பட்டு வந்ததால் மத்திய அரசின் பணஇருப்புகள் குறைந்துகொண்டே வந்தன. இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிட்டிவந்த நிதிவசதிகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டன. அதுவும், அவை, தங்கள் அடிப்படையை வலுப் படுத்தவும் வளர்த்துக்கொள்ளவும் உதவிகள் தேவைப்பட்ட வேளையில் இத்தகைய நிலைமை வந்ததால், அவற்றின் வாழும் தன்மையே அச்சுறுத்தலுக்கு ஆளானது.

1886, பிப்ரவரி 2, தேதியிட்டு இந்திய அரசு அதன் வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பி வைத்த குறிப்பு:

> ''*10.* முந்தைய பத்திகளில் நாங்கள் முன்வைத்திருந்த உண்மைகளைத் திரும்பவும் எடுத்துக் கூறுவதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை. இந்திய நலன்களின் பார்வையில், அந்த உண்மைகளைச் சகித்துக் கொண்டிருக்கமுடியாது. நாங்கள் சேகரித்துக் கூறியுள்ள தீமைகள் முழுப்பட்டியலாகாது. வெள்ளியின் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மையானது இந்தியாவில் மூலதனத்தை முதலீடு செய்வதில் ஊக்கம் இழக்க வைக்கிறது. அதிகவிலை கொடுத்து நாங்கள் வெள்ளியைக் கடனாகப் பெறுவதும் சாத்தியமல்ல என்பதை அறிகிறோம்.

அட்டவணை XIII

இந்திய அரசின் ரூபாய், ஸ்டெர்லிங் கடன் பத்திரங்களின் விலை இயக்கங்கள்

	செலாவணி விகிதங்கள்		4 சதவீத விலை ரூபாய் தாள்				இந்திய இருப்பின்		ஸ்டெர்லிங் விலை			
			கல்கத்தாவில்		லண்டனில்		4 சதவீதம்		3 1/2 சதவீதம்		3 சதவீதம்	
	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு
1873	22 7/8	21 5/8	105	101 7/8	97	94 1/2	106 1/2	101 1/4				
1874	23 1/8	21 3/4	104 1/2	99 1/2	99 1/2		98	103 3/4	101			
1875	22 3/16	21 1/4	102 7/8	101 3/4		94	91	106 1/4	103 1/4			
1876	22 3/8	18 1/2	101 7/8	98 3/4		89 3/4	78	105 7/8	101 7/8			
1877	22 1/4	20 9/16	*98 7/8	93 3/4		89 3/4	78	105 7/8	102 1/4			
1878	21	18 3/4	96 7/8	93 1/2		88 1/2	81	104 5/8	99			
1879	20 5/8	18 6/8	94 7/8	91 1/4		80	77 1/4	105 3/8	100 7/8			
1880	20 3/8	19 3/4	100	92 15/16		81 3/8	77 3/4	105 5/8	102 1/8			
1881	20 1/16	19 1/2	104 5/8	100	86	81 1/2	106 3/8	103 7/8	103 7/8	100 3/4		

	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு	அதிக அளவு	குறைந்த அளவு
1882	20 3/16	19 1/16	102 1/16	95 5/8	85	81	105 1/8	102 7/8	101 7/8	99 3/4		
1883	19 9/16	19 3/16	101 1/8	97 9/16	82	79 3/4	104 5/8	102 7/16	103 1/8	101 4/8		
1884	19 3/4	18 15/16	100 5/8	95 5/16	81 3/4	78 1/4	104 3/8	101 5/8	107 1/8	101 3/4	96 1/4	91 3/4
1885	19 3/16	17 31/32	98 7/16	92 1/4	77 1/2	73 1/4	103 1/16	98 3/4	102 3/4	99 3/4	90 1/8	86 5/8
1886	18	16 1/8	97 3/4	97 3/16	73	66 1/4	103 1/2	101 1/4	102 3/4	100 1/4	92 3/4	95 3/8
1887	18 3/16	15 5/8	99 3/16	95 5/16	71 11/16	67 7/8	102 3/4	100 1/2	103 1/4	100 1/4	92 3/4	95 3/8
1888	17 1/8	16	100 3/16	97 3/4	69 3/8	66 1/4	102 7/8	100 1/2	107 1/4	104 5/8	98	95
1889	16 15/16	16	100 3/8	97 1/16	69 1/8	66 3/8			109 1/2	106 7/8	101 1/8	99
1890	20 29/32	16 7/8	103 7/8	96 13/16	87 1/4	68 3/4			108 1/2	105 1/4	100 3/4	95 1/4
1891	18 1/4	16 5/8	107 13/16	104 1/16	80 3/4	74 1/4			109 1/2	105	99	94 1/2
1892	15 11/16	14 5/8	108 15/16	103 11/16	74 1/2	62			109 1/2	106 1/8	98 1/2	94 7/8

''மறுபுறத்தில் நாங்கள் கட்டி அமைக்க வேண்டுமென முன்மொழிந்துள்ள எல்லைப்புற, பஞ்ச நிவாரணமாகக் கட்டப்பட வேண்டிய ரயில்வேக்கள், மற்றும் கடற்புற, எல்லைப்புறப் பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் தட்டிக் கழித்துவிட முடியாதபடி அவசிய மாகிறது. அவற்றை நிர்மாணிக்கும் பணியைக் காலவரம்பின்றி நாம் தள்ளிப் போட்டுவிட முடியாது.

''ஆகவே, நமது ஸ்டெர்லிங் கடன்களை அதிகரிக்கவேண்டும், இதற்குப் பல ஆட்சேபணைகள் உள்ளன; அல்லது ரயில்வே உதவி யின்றி நாட்டின் வர்த்தக வளர்ச்சியைப் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் படையெடுப்பு, பஞ்சத்தின் விளைவுகளிலிருந்தும் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

''11. இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் கடன்பெறு வதில் உள்ள இடர்ப்பாடுகளை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது. சுகாதார மேம்பாடுகளுக்காக, பம்பாய், கல்கத்தா நக ராட்சிகளுக்குப் பெருந்தொகை தேவைப்படுகிறது: வெள்ளி கடன் களுக்கு அதிக வட்டி வீதம் செலுத்தவேண்டியிருப்பதால் செல வினம் மிகுந்த பணிகளை அவர்கள் மேற்கொள்வதை அது தடுக்கிறது: கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் கப்பற்கூடம் கட்டுவதற்குத் தேவையான பணத்தை அரசு தன் பொறுப்பில் கடனாக வழங்க வேண்டியது அவசியம் என்பதை அண்மையில்தான் தெரிந்து கொண்டோம் என்பதை மேன்மைதங்கிய தங்கள் கவ னத்துக்குக் கொண்டு வருகிறோம். இந்திய அரசின் உத்திரவாதத்தின் கீழ் 1885 செப்டெம்பரில் 75 லட்ச ரூபாய் கடனைப் பெறுவதற்குக் கல்கத்தா துறைமுக ஆணையர்கள் முயற்சி செய்தார்கள். மொத்த டெண்டர்களின் தொகை 40200 ரூபாய். மேலும் அதன் மதிப்புக்கு ஈடாக யாரும் டெண்டர் தொகையைக் கூடக் கட்டுவதற்கு முன்வரவில்லை.....''

இதே மாதிரி காரணங்களினால் தனியார் மூலதன இறக்கு மதியும் வெகுவாகத் தடைபட்டது. இது நாட்டுக்கு ஊறுவிளை விப்பதாகவும் இருந்தது. பஞ்சங்களின் கோரப்பிடியில் அடிக்கடி சிக்கிக் கவிக்கு இந்தியா அவற்றிலிருந்து தப்பத் தொழிற்துறையைப்

பலதரப்பட்டதாக ஆக்குவதுதான் ஒரேவழி என ராயல் கமிஷன்[1] உள்ளிட்ட பலதரப்புகளும் வலியுறுத்தியுள்ளன. நிரந்தரமான நன்மைகளை வழங்க, அத்தகைய பலதரப்பட்ட தொழில்துறை வாழ்க்கை, முதலாளித்துவ அடிப்படையிலேயே அமையமுடியும். ஆனால், நாட்டில் தங்குதடையின்றி மூலதனத்தைப் பெருக்கினால்தான் அது அமையமுடியும். அப்போதிருந்த நிலைமையில் மிக அதிக அளவில் மூலதனத்தை வழங்கிவந்த ஆங்கிலேய முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்வதை நிச்சயமற்ற, ஆபத்து நிறைந்த ஒரு யோசனையாகக் கருதினார்கள்.

முதலீட்டாளர்கள் தங்களின் லாப நஷ்டங்களையும் திட்ட முதலீட்டையும் தங்கத்தின் மதிப்பில் அளவிட்டனர். வெள்ளிச் செலாவணி புழக்கத்தில் பரவியிருக்கும் ஒரு நாட்டில் தாங்கள் முதலீடு செய்கையில், வெள்ளியின் விலை, தங்கத்தின் உருவத்தில் பெறப்படும்பொழுது, ஒரு நிச்சயமற்ற நிலை ஏற்படும் என்று அஞ்சினார்கள்; மேலும் தாங்கள் முதலீடு செய்த மூலதன மதிப்பு தங்கத்தின் அளவில் குறைந்து போய்விடும் என்ற அச்சமும் அவர்களுக்கு இருந்தது. நாணயப் பரிமாற்றத்தில் ஏற்படும் சிக்கல் மூலதனம் ஊடுருவிப்பரவுவதைத் தடுத்து நிற்கும் ஒரு முட்டுக் கட்டையாக இருந்தது.

இந்தியாவில் அரசுப்பணியில் இருந்த ஐரோப்பியர்கள் தங்களது பணத்தைத் தங்கத்தில் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சி அவர்களையும் பாதித்தது. அவர்கள் சார்ந்திருந்த அரசுக்கு வெள்ளியில் வருவாய் வந்ததுபோலவே, அவர்களுக்கும் சம்பளம் வெள்ளியில் கிடைத்தது. ஆனால், இங்கிலாந்தில் இருந்த தங்கள் குடும்பங்களுக்கு அவர்கள் பணம் அனுப்பவேண்டுமானால் தங்கத்தில் அனுப்ப வேண்டியிருந்தது. 1873 ஆம் ஆண்டுக்குமுன்னர் வெள்ளியின் விலை என்பது தங்கத்தின் மதிப்பில் இவ்வளவு என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், ரூபாய், மதிப்பில் வீழ்ச்சி அடைந்ததும் நிலைமை முற்றிலும் மாறியது. வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சி அடைவதற்கு ஏற்ப, ஒரே அளவு தங்கத்துக்கு மேன்மேலும் கூடுதலாக ரூபாய்களைத் தங்களது நிலையான சம்பளத்திலிருந்து அவர்கள் அனுப்பிவைக்க நேரிட்டது. பணம் செலுத்தும் விஷயத்தில் அவர்களுக்குச் சில

1. *1880 ஆம் ஆண்டின் பஞ்சக் கமிஷன் அறிக்கை, பகுதி II, சி. 2735 (1880), பக். 175-76. - காண்க.*

நிவாரணங்கள் அளிக்கப்பட்டன என்பதில் ஐயப்பாடில்லை. அதாவது தியாகம் செய்த மாதிரி அரசு, அவர்கள் செலுத்தவேண்டிய பணத்தை, **அதிகாரப்பூர்வ செலாவணி விகிதத்தில்**[1] செலுத்தலாம் என்று சலுகை அளித்தது.

சந்தை விகிதத்துக்கும் அதிகாரப்பூர்வமான விகிதத்துக்கும் இடையிலான வேறுபாடு அப்படியொன்றும் அதிகமில்லை. ஆயினும் 1862-1890[2] ஆம் ஆண்டுகளில் சராசரியாக 2 1/2 சதவீதம் அரசுப் பணியாளர்களுக்கு ஆதாயம் கிடைத்தது. இராணுவத்தில் வேலை பார்த்தவர்களுக்கு இதே மாதிரியான நிவாரணம் பெரிய அளவில் கிடைத்தது, ஆனால் அது கிட்டிய வழிவேறு. அவர்களுக்குச் சம்பளம் ரூபாயில் வழங்கப்பட்டாலும், ஸ்டெர்லிங்கில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயம் செய்த **அரசாங்கப் பற்றாணை,** ஏற்கனவே குறிப்பிட்ட அதே நோக்கத்துக்காக ரூபாய்-ஸ்டெர்லிங் செலாவணி விகிதத்தையும் நிர்ணயம் செய்திருந்தது. ஆனால், பற்றாணையில் நிர்ணயிக்கப்பட்டிருந்த செலாவணி விகிதம் சந்தை விகிதத்தைவிட அதிகமாக இருந்தது. இராணுவ ஊழியர்களுக்கு இந்த வித்தியாசத் தொகை இந்தியக் கருவூலத்தின்[3] செலவில் ஓரளவுக்கு ஈடுகட்டப்பட்டது. ஒப்பிட்டுப்பார்க்கையில் இந்த நிவாரணம்,

---

1. கிழக்கிந்திய கம்பெனி (அரசுப் பணியாளர்கள்) பற்றிய தேர்வுக் கமிட்டி முன்னர் வாட்டர்பீல்டு விளங்கியதுபோல, அது 1824-ல் நிறுவப்பட்டது, பின்வருமாறு அந்த விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பரில் இந்தியாவுக்கு ஒரு ரூபாய் அனுப்புவதற்கான செலவை அக்காலத்தில் லண்டனில் வெள்ளிக்கு இருந்த சந்தை விலையின் அடிப்படையில் இந்திய-அலுவலகம் கணக்கிட்டது. அதே மாதிரி இந்தியா விலிருந்து கொண்டு வருவதற்கான செலவைக் கல்கத்தாவில் இருந்த லண்டன் மாற்று முறிகள் (Bills) அடிப்படையில் கணக்கிடப்பட்டது. இந்த இரண்டுக்கும் இடையிலான சராசரி கண்டுபிடிக்கப்பட்டு, எதிர்வரும் ஆண்டில் இந்திய அலுவலகத்துக்கும் இங்கிலாந்து கருவூலத்துக்கும் இடையே அது சமநிலைப்படுத்தும் விகிதமாகக் கொள்ளப் பட்டது. இது ஓர் அரசு, இன்னொரு அரசின் முகவராக மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் இது பின்பற்றப்பட்டது. ஒவ்வொரு தடவையும் அது புதிதாக நிர்ணயிக்கப் பட்டது. ஆகவே, அது ஒரு நியாயமான சராசரி விகிதமாக அமைந்தது. சில சமயம் சந்தைச் செலாவணி விலையைவிட அது மேலானதாகவோ கீழானதாகவோ இருந்தது.

2. (Ibid 0.1925 - 26) இதுவும் அது. 0.1925 - 26.

3. விலையும் செலவும். F.S. 1887 - 88, பக். 39-40. இந்தச் செலவு பின்வருமாறு இருந்தது.

1847 - 75	ரூபாய்	6,40,000
1884 - 85	"	18,43,000
1885 - 86	"	4,00,000

அவர்களுக்கு ஒரு நிவாரணமாகவே இல்லை. அரசாங்க அல்லது பற்றாணைச் செலாவணி விகிதங்கள், சந்தைச் செலாவணி விகிதங்களை விடக் கூடுதலாக இருந்தபோதிலும் அவை 1873ஆம் ஆண்டுக்கு முந்தி, பணம் அனுப்பிவைத்தபோது பயன்படுத்தப்பட்ட விகிதங்களை விடக் குறைவாகவே இருந்தன. அரசுக்குச் சுமை அதிகமானது போலவே, வெள்ளியின் வீழ்ச்சிக்கு ஏற்ப ராணுவத்திற்கும் சுமை அதிகரித்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் எச்சரிக்கை அடைந்தார்கள். அவர்களில் பலர், செலாவணியில் ஏற்படும் இழப்புக்குப் போதுமான நஷ்டஈடு கோரி மனுக்கள் மூலம் அரசை வலியுறுத்தினார்கள்.[1]

''இப்போதைய சம்பளத்தைக் குறைப்பதன் மூலம் இந்தியா நன்மை அடையும் என்று எண்ணும் அப்பாவிகள், இத்தகைய நடவடிக்கை, குறைந்த சம்பளத்தில் வாழ்வதையே சாத்தியமற்றதாக்கி விடும் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. எனவே நமக்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு வேறு வழிகளைக் காண வேண்டியது அவசியமாகிறது'' என்று அரசுக்கு அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.[2]

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்பகாலத்தில் இந்தநிலை தான் இருந்ததுஎன்பதில் ஐயமில்லை. அப்போது அரசு ஊழியர்களின் ஊதியங்கள் குறைவாக[3] இருந்ததால் அவர்கள் மாமூல் வாங்கிக் கொழுத்து வந்தார்கள். இத்தகைய கொள்ளைகளை நிறுத்திட அவர்களின் ஊதியங்கள் மிக அதிகம் என்று நினைக்கும் அளவுக்கு உயர்த்தப்பட்டன. இவ்வாறு முந்தையை உதாரணங்களை எச்சரிக்கைகளாகக்

---

1. இந்திய கரன்சி கமிட்டி அறிக்கை, 1893.

பிற்சேர்க்கை I. பக். 185 - 90 & 202, ஐரோப்பிய அரசு ஊழியர்களின் விண்ணப்பங்கள் - காண்க.

2. காண்க: கர்னல் ஹியூக்ஸ் - ஹாலெட் எம்.பி. ரூபாயின் மதிப்பு குறைவு: ஆங்கில - இந்திய ஊழியர்கள் மீது ஏற்படுத்திய விளைவு - தவறும் - தீர்வும், லண்டன் 1887, பக். 14.

3. கிழக்கிந்திய நீதி பரிபாலனம் பற்றி நாடாளுமன்ற கீழ்சபையில் விவாதம் நடைபெற்ற போது 1772 மார்ச் 30ஆம் தேதி ராபர்ட் கிளைவ் தனது உரையில், ஆரம்பகால ஐரோப்பிய அரசு ஊழியர்களின் ஊதியங்கள் குறைவாக இருந்ததற்கும் அவர்களது மாமூல் வாங்கும் நடத்தைக்கும் இடையிலான தொடர்பை நன்கு விளக்கினர். ஹான்சண்டு தொகுதி XVIII, பக். 334 - 39.

கருத வேண்டும். செலாவணி மூலமாக அரசு ஊழியர்களுக்கு இழப்பு ஏற்பட்டதன் விளைவாக அவர்கள் எந்த அளவுக்கு அதிருப்தி கொண்டிருந்தார்கள் என்பதை அவை காட்டுகின்றன.

நமது நாட்டின் வர்த்தக, தொழில்துறைமீது செலாவணி வீழ்ச்சி ஏற்படுத்திய பாதிப்பு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அரசின் விவகாரங்களுடன் அல்லது இங்கிலாந்து போன்ற தங்க நாணயப் புழக்கமுள்ள நாட்டின் வர்த்தக, தொழில்துறையுடன் ஒப்பிடும்போது, இந்திய வர்த்தகம் நல்ல நிலையிலேயே இருந்தது. வெள்ளி நாணய வீழ்ச்சிக் காலம் முழுவதும் இங்கிலாந்தில் பல்வேறு வர்த்தக, தொழில்துறைகளில் வேலைவாய்ப்பு என்பது, மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது குறைந்து கொண்டே வந்தது. துணி உற்பத்தி மற்றும் இரும்பு, நிலக்கரி, வர்த்தகம் யாவும் பலவீனமடைந்திருந்தது. அவ்வாறே முக்கிய தொழில்களான பர்மிங்ஹாம், ஷெஃப்பீல்டிலிருந்த இரும்புச் சாமான்களின் உற்பத்தி, கிரீனாக், லிவர்பூல், லண்டனி லிருந்த சர்க்கரைச் சுத்திகரிப்புத்தொழில், மண்பாண்டங்கள், கண்ணாடி, தோல், காகிதம் மற்றும் வேறுபல சிறிய தொழில் உற்பத்திகளும் பலவீனமாகவே இருந்தன.[1] இங்கிலாந்தின் வேளாண் துறையிலும் மந்த நிலை பரவலாக இருந்தது. ''இந்த மந்த நிலையின் விளைவுகள் நாட்டில் எங்கேனும் ஒரு பகுதியிலாவது இல்லை என்று 1892 ஆம் ஆண்டில் கமிஷனர்களால் சுட்டிக்காட்டிச் சொல்ல முடியாத அளவுக்கு நிலைமை மோசமாய் இருந்தது. உண்மை நிலவரம் இவ்வாறு இருந்தபோதிலும் 1882 ஆம் ஆண்டிலிருந்து பருவநிலைகள் விவசாயத்துறையைப் பொறுத்தவரையில் திருப்திகரமாகவே இருந்து வந்தது.''[2]

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது சிறப்புற்றிருந்த இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம், 1870 ஆம் ஆண்டுக்குப் பிறகு பெரிய அளவுக்கு உற்சாகத்தைத் தந்தது. செலாவணி வீழ்ச்சிக் காலகட்டம் முழுதும் தொழில் வளர்ச்சி வேகமாக வளர்ந்தது. 20 ஆண்டு குறுகிய காலத்தில் இந்தியாவின் இறக்குமதி, ஏற்றுமதியானது அதன் அளவில் இரட்டிப்பாகியது. அட்டவணை XIVஐக் காண்க.

---

1. வர்த்தக, தொழில் துறை மந்தம் பற்றிய ராயல் கமிஷனின் இறுதி அறிக்கையில் கன்ரோவன், ஃபாரெர், மன்ட்ஸ், லப்பாக் ஆகியோர் கூறியிருப்பது பத்தி 54, சி. 4893.

அட்டவணை XIV

இறக்குமதி, ஏற்றுமதி (வர்த்தகப் பொருள் மற்றும் நிதி)[1]

ஆண்டு	ஏற்றுமதி ரூபாய்	இறக்குமதி ரூபாய்	ஆண்டு	ஏற்றுமதி ரூபாய்	இறக்குமதி ரூபாய்
1870-71	57,556,951	39,913,942	1881-82	83,068,198	60,436,155
1871-72	64,685,376	43,665,663	1882-83	84,527,182	65,548,868
1872-73	56,548,842	36,431,210	1883-84	89,186,397	68,157,311
1873-74	56,910,081	39,612,362	1884-85	85,225,922	69,591,269
1874-75	57,984,549	44,363,160	1885-86	84,989,502	71,133,666
1875-76	60,291,731	44,192,378	1886-87	90,190,633	72,830,670
1876-77	65,043,789	48,876,751	1887-88	92,148,279	78,830,468
1877-78	67,433,324	58,819,644	1888-89	98,833,879	83,285,427
1878-79	64,919,741	44,857,343	1889-90	105,366,720	86,656,990
1879-80	69,247,511	52,821,398	1890-91	102,350,526	93,909,856
1880-81	76,021,043	62,104,984	1891-92	111,460,278	84,155,045

1. பிற்சேர்க்கை II (எண். 1, 2), 1898 ஆம் ஆண்டின் இந்தியக் கரன்சிக் கமிட்டி அறிக்கை.

அட்டவணை XV

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் தொழில்துறை தொழில்களின் இயல்பு*

பொன் வெள்ளி நகை வடிவச் செல்வம் நீங்கலாக இந்திய ஏற்றுமதிப் பொருள்களின் பகிர்வு				பொன் வெள்ளி நகை வடிவச் செல்வம் நீங்கலாக ஆங்கிலேய ஏற்றுமதிப்பொருட்களின் பகிர்வு					
உற்பத்தி செய்யப் பட்ட பொருள் கள்	கச்சாப் பொருள் கள்	உணவுப் பொருட் கள்	வகைப்படுத்தப் படாத பொருள்கள்	மொத்தம்	உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்	கச்சாப் பொருட்கள்	உணவுப் பொருட் கள்	வகைப் படுத்தப் படாத பொருட் கள்	மொத்தம்
11	34	22	23	100	90.9	4	4.9	.2	100
6	35	26	33	100	91.4	3.4	5.1	.1	100
6.5	40	15.5	38	100	91.5	3.8	4.6	.1	100
5.7	43.6	17.7	33	100	91.9	3.6	4.4	.3	100
5.8	46.5	15.3	32.4	100	90.4	4	4.8	.9	100
5.0	52	16	27	100	90.3	4	4.8	.9	100
3.7	58.7	10.6	27	100	91.0	4	4	1.0	100

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1864	4	69.2	9.3	17.5	100	92.5	3.7	3.7	.1	100
1865	3.5	68	12	16.6	100	92.1	3.6	3.6	.7	100
1866	4.2	67.2	10.3	18.3	100	92	3.7	3.7	.4	100
1867	4	58	11	27	100	92.2	3.8	3.7	.3	100
1868	4	58.5	11.5	26	100	92	4.4	3.4	.2	100
1869	4.8	60.5	14	20.7	100	92	4.2	3.1	.7	100
1870	4.4	63.6	9	23	100	91	4	4	1.0	100
1871	3.7	65.3	11	20	100	90	4.4	4.9	.7	100
1872	3.3	61.4	13.5	21.8	100	91.2	5.4	3.5	.9	100

1. இந்தியப் புள்ளிவிவரங்கள், பிரிட்டிஷ் இந்தியாவுக்கான புள்ளி விவரச் சுருக்கம், எண். 2 (1857 - 66) அட்டவணை 34-ல் இருந்தும், எண். 8 (1864 - 1873), அட்டவணை 24ல் இருந்தும் கணக்கிடப்பட்டுள்ளன. இங்கிலாந்துக்கான புள்ளி விவரங்கள், "வர்த்தக, தொழில்துறை மந்தம் பற்றிய ராயல் கமிஷனின் முதல் அறிக்கைக்கு பிற்சேர்க்கை சி (அறிக்கை - 6) யில் இருந்த சிறு மாறுதலுடன் கையாளப்பட்டுள்ளன. அதாவது அந்நூலில் "உற்பத்தி செய்யப்பட்ட", "அரைகுறையாக உற்பத்தி செய்யப்பட்ட" என்ற தலைப்பின் கீழுள்ள புள்ளி விவரங்கள் யாவும் இதில் "உற்பத்தி செய்யப்பட்ட" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்திய ஏற்றுமதியின் கீழ் வரும் "வகைப்படுத்தப்படாத பொருட்கள்" என்ற தலைப்பில் பெரும்பாலானவை "நகைகள்" ஆகும்.

அட்டவணை XVI

இந்தியாவின் தொழில்துறை - தொழில்களில் மாறுதல்கள்[1]

	இறக்குமதி		ஏற்றுமதி	
	உற்பத்திப் பொருள்	கச்சாப் பொருள்	உற்பத்திப் பொருள்	கச்சாப் பொருள்
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1879	25,98,65,827	13,75,55,837	5,27,80,340	59,67,27,991
1892	36,22,31,872	26,38,18,431	16,42,47,566	85,52,09,499
உயர்வு சதவீதத்தில்	39	91	211	43
ஆண்டு மொத்தம்	2.8	6.5	15	3

இந்தியாவின் வர்த்தகம் அதிகரித்து வந்ததோடு, அதன் தொழில்துறைகளும் ஆழமான மாறுதல்களை அடைந்தன. 1870 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவும் இங்கிலாந்தும் சொல்லப்போனால், ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொள்ளாத குழுவைச் சேர்ந்த நாடுகளாகும். இந்தியா, தனிச்சிறப்பான முறையில் விவசாய நாடாகவும், கச்சாப்பொருள் உற்பத்தி செய்து தரும் நாடாகவும் மாறி இருந்த வேளையில் நேவிகேஷன் சட்டங்களின் பாதுகாப்புக் கொள்கை காரணமாகவும், மற்றும் அத்துடன் உற்பத்தித் துறையில் மனிதனுக்குப் பதில் எந்திரத்தைப் பயன்படுத்துவதன் காரணமாகவும், இங்கிலாந்து தனது சக்திகளையும் மூலஆதாரங்களையும் பயன்படுத்தி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பொருள்களைக் கொண்டு முழுமையான சரக்குகளை உற்பத்தி செய்யும் நாடாக மாறிவந்துள்ளது. இந்த இருநாடுகளின் ஏற்றுமதிகளை அட்டவணை மூலம் ஆராய்ந்தால் இரண்டிலும் தொழில்துறை தொழிலில் எதிரும்புதிருமான நிலைமை இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

1870 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவற்றின் தொழில்துறை தொழில்களின் பரவல், பெரிதும் மாறுதல் அடைந்திருந்தது. இந்தியா மறுபடியும் பொருள் உற்பத்தி நாடாக மாறியது. 1870 ஐத் தொடர்ந்து வந்த 20 ஆண்டுகளில் இந்திய ஏற்றுமதி, இறக்குமதியை ஆராய்ந்தால் (அட்டவணை XVI பார்க்க) அந்தக் காலக்கட்டத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாக, உற்பத்தித் துறைகளில் இந்தியாவில் முன்னேற்றம் இருந்ததைத் தெரிந்து கொள்ளலாம்.

தொழில்துறை வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட இந்த மாறுதலை இரண்டு முக்கியமான தொழில்களின் வளர்ச்சி எடுத்துக் காட்டியது. அவற்றில் ஒன்று பருத்தி பஞ்சாலைத் தொழில். இந்தியத் தொழில்துறைகளில் பழைமையான ஒன்று. ஆனால் 1750-1850க்கு இடைப்பட்ட 100 ஆண்டுகளில் அது முழுக்க முழுக்க பலவீனமடைந்து போயிற்று. 1860 ஆம் ஆண்டுகளில் இந்தத் தொழில் துறையை முதலாளித்துவ அடிப்படையில் உயிர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விரைவான முன்னேற்றத்தின் அறிகுறிகளும் தென்பட்டன. அட்டவணை XVII அந்த முன்னேற்றம் பற்றி விளக்குகிறது.

அட்டவணை XVII

இந்தியப் பருத்தி வர்த்தகம் மற்றும் தொழில்துறை வளர்ச்சி

	1870 - 71 மு 1874 - 75 வ	1875 - 76 மு 1879 - 80 வ	1880 -81 மு 1884 - 85 வ	1885 - 86 மு 1889 -90 வ	1890 - 91 மு 1894 - 95 வ
கச்சாப்பருத்தி இறக்குமதி Thousands of cwts	23	52	51	74	89
கச்சாப்பருத்தி ஏற்றுமதி Thousands of cwts	5236	3988	5477	5330	4660
நூல்முறுக்கு/இழை	3355	3355	4434	4909	4479
	ஒவ்வொரு 5 ஆண்டின் இறுதியிலும் தொழில்துறை வளர்ச்சி				
ஆலைகளின் எண்ணிக்கை	48	58	81	114	143
கதிர்களின் எண்ணிக்கை 000 விடப்பட்டுள்ளது.	1000	1471	2037	2935	3712
தறிகளின் எண்ணிக்கை 000 விடப்பட்டுள்ளது	10	13	16	22	34
வேலை செய்தோர் எண்ணிக்கை	-	39537	61836	99224	-

சணல் தொழில்துறை, இந்தியாவில் பெரிதும் வளர்ச்சி அடைந்த மற்றொரு தொழில்துறையாகும். இந்தியப் பருத்தித் தொழில் துறை போலல்லாது, சணல் தொழில் துறையானது ஒப்பிட்டுப் பார்க்கையில், அண்மைக் காலத்தில் தோன்றியதாகும். அதன் வளர்ச்சி, பஞ்சாலைத் தொழிலிருந்து மாறுபட்டிருந்தது. ஐரோப்பிய மூலதனம், ஐரோப்பிய நிர்வாகம், ஐரோப்பியத் திறன் என அத் தொழில் துறைக்கு உதவிகள் கிட்டின. எனவே, வெகுவிரைவில் பருத்தித் தொழில் துறையைப் போலவே சணல் தொழில்துறையும், ஓரளவு குறிப்பிடத் தக்க அளவுக்கு நன்கு வளர்ச்சி பெற்றது. தொடர்ச்சியான முன்னேற்றமே அதன் வரலாறாக இருந்ததை அட்டவணை XVIII லிருந்து அறிய முடியும்.

தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட இந்த வளர்ச்சிப்போக்கு இந்திய விவசாயத்துறையில் மறைமுக விளைவுகளை ஏற்படுத் தியது. 1870 ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்திய விவசாயிக்கு வர்த்தக ரீதியிலான பார்வை இல்லை என்றே சொல்லலாம். சுய தேவைக்கே இந்திய விவசாயி உற்பத்தியில் ஈடுபட்டபின், லாபத்துக்காக அவன் அதிகம் பயிரிடவில்லை.

1870 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விவசாயமானது ஒரு வியா பாரம் என்றானது. விவசாயியின் வீட்டுத் தேவையை விடச் சந்தை விலைகளை வைத்து எதனைப் பயிரிடுவது என்பது தீர்மானிக்கப் பட்டது. அட்டவணை XIX இதை நன்கு விளக்குகிறது.

இவ்வாறாக இந்த இரண்டு நாடுகளின் பொருளாதார நிலைமை கள் எதிரும் புதிருமாகக் காணப்பட்டன. வெள்ளி நாணயப் புழக்கமுள்ள ஒரு நாட்டில் இந்தத் தனி-ஒருமாதிரியான நிகழ்ச்சிப் போக்கு, நிலையாக வளர்ச்சி பெற்றுவந்தது. தங்கநாணயம் புழக்க முள்ள நாட்டில் இப்போது ஸ்தம்பித்துப் போயிருந்தது, இதைப் பார்வையாளர்கள் பலரும் கவனத்தில் கொண்டனர். ஆங்கிலேய உற்பத்தியாளர்கள் சர்வதேச வர்த்தகப் போட்டியில் ஈடுபடும் அள வுக்கு திறமையில்லாதவர்களாக இருந்ததுதான் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டது. ஐரோப்பியப் போட்டியாளர்களை எதிர் கொள்ளும் திறனில்லாததால் மானிய உதவிகள், காப்பு வரிகள் ஆகியவற்றை ஐரோப்பியநாடுகள் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இவையே ஐரோப்பிய நாடுகளின் தொழில்துறை, வர்த்தகத்தில்

சுதந்திரமானதாகவும், தொழில்துறை பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. இதன் காரணமாக லங்காஷைர் துணி உற்பத்தியாளரும், டன்டீ சணல் உற்பத்தியாளரும் ஆங்கிலேயக் கோதுமை சாகுபடியாளரும் இந்தியாவிலிருந்த தங்களது போட்டியாளர்களுக்கு எதிராகப் புகார் செய்ய முடிந்தது. இவ்விஷயத்தில் அதற்குக் காரணம், செலாவணியில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும்.[1]

அட்டவணை XVIII

சணல் தொழில்துறை, வர்த்தகத்தின் வளர்ச்சி

வளர்ச்சி		ஒவ்வொரு ஐந்தாண்டுக்குமான சராசரி			
	1870-71 - 1874-95	1875-76 - 1879-80	1880-81 - 1884-85	1885-86 - 1889-90	1890-91 - 1894 - 95
ஏற்றுமதிகள்-கச்சா, மில்லியன் cwt	5.72	5.58	7.81	9.31	10.54
கோணிப்பைகள் (மில்லியன்கள்)	6.44	35.96	60.32	79.98	120.74
துணி (மில்லியன் கஜங்கள்)	-	4.71	6.44	19.79	54.20
தொழில்துறைவளர்ச்சி எண்ணிக்கை ஆலைகள்	-	21	21	24	26
தறிகள் (000 விடப் பட்டுள்ளது)	-	5.5	5.5	7	8.3
நூல் சுற்றும் கதிர்கள் (000 விடப்பட்டுள்ளது)	-	88	88	138.4	172.4
வேலைபார்ப்பவர்கள் (ஆயிரங்களில்)	-	38.8	38.8	52.7	64.3

1. வி.கே. தங்கம் / வெள்ளி பற்றிய ராயல் கமிஷன் இறுதி அறிக்கை, பகுதி I, பத்தி 99-101 விவாதத் தொகுப்புக்கள்.

அட்டவணை XIX

இந்திய விவசாய ஏற்றுமதி வளர்ச்சி

	1868-69	1873-74	1877-78	1882-83	1887-88	1891-92
கோதுமை	100	637.41	2313.47	5152.36	4914.37	11001.44
அபினி	100	118.38	123.83	122.47	120.20	116.82
விதைகள்	100	111.26	305.87	239.97	403.60	480.99
நெல்	100	131.66	119.84	203.28	185.55	220.36
அவுரி	100	116.91	121.57	142.17	140.76	126.33
தேயிலை	100	169.35	293.17	507.25	775.09	1075.75
காபி	100	86.04	69.98	85.31	64.59	74.11

அட்டவணை XX

கீழை நாட்டுச் சந்தைகளுக்குப் பருத்தித் துணி ஏற்றுமதி

	நூலிழை, 16 s (000 விடப்பட்டுள்ளது)		துண்டுத் துணிகள் கஜங்களில் (000 விடப்பட்டுள்ளது)	
ஆண்டுகள்	இந்தியா விலிருந்து	இங்கிலாந் திலிருந்து	இந்தியா விலிருந்து	இங்கிலாந் திலிருந்து
1877	7.927	33,086	15,544	394,489
1878	15,600	36,467	17,545	382,330
1879	21,332	38,951	22,517	523,921
1880	25,862	46,426	25,800	509,099
1881	26,901	47,479	30,424	587,177
1882	30,786	34,370	29,911	454,948
1883	45,378	39,499	41,534	415,956
1884	49,877	38,856	55,565	439,937
1885	65,897	33,061	47,909	562,339
1886	78,242	26,924	51,578	490,451
1887	91,804	35,354	53,406	618,146
1888	113,451	44643	69,486	652,404
1889	128,907	35,720	70,265	557,004
1890	141,950	37,869	59,496	633,606

அத்தகைய மாறுதல்கள் அக்காலத்தின் நிதிநிலை இடையூறுகளுக்குத் துணைபோயினவா என்பதுதான் இவ்விவாதத்தில் ஓர் அம்சமாக இடம்பெற்றிருந்தது.[1] நிதிநிலை இடையூறுகளுக்குத் துணைபோயின என்ற கருத்தை உறுதியாகக் கூறியவர்கள், செலாவணி வீழ்ச்சியானது இந்தியப்பொருள் உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாகவும் ஆங்கிலேயப் பொருள் உற்பத்தியாளர்களுக்குப் பாதகமாகவும் இருந்தது என்ற வாதத்தை முன்வைத்தார்கள். சர்வதேச வர்த்தகத்தில் ஏற்கனவே காலூன்றி நின்றிருந்த போட்டியாளர்களின் நிலையில் மாறுதல்கள் ஏற்படக் காரணமாய் இருந்த, இந்தச் சாதகமான நிலைமை சாதாரணக் கணக்கீட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வெள்ளியின் தங்கமதிப்பு வீழ்ச்சி அடைந்ததால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் உற்பத்திப் பொருளுக்கு அதிகரூபாய் கிடைத்தது. அது அவர்களது முந்தைய நிலைமையைவிட மேலானதாக இருந்தது. அதேசமயம், இந்தச் செலாவணி வீழ்ச்சியானது ஆங்கிலேய உற்பத்தியாளர்களுக்குக் குறைவான பவுனைப் பெற்றுத் தந்ததால், அது அவர்களது நிலைமையை மேலும் மோசமாக்கியது என்று கூறப்பட்டது.

செலாவணி வீழ்ச்சியானது, இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஆதாயம் தந்தது, ஆங்கிலேய ஏற்றுமதியாளர்களுக்குத் தண்டனையாக இருந்தது என்ற இந்த வாதம் கணித விதிகளைப் போல மாற்ற முடியாததாய் இருந்தது. உண்மையில் அந்தக் காலத்தின் வர்த்தக, தொழில்துறைச் சூழ்நிலைமைகளோடு தொடர்புடைய சில முக்கிய அனுமானங்களை இந்த வாதத்தை உருவாக்கியவர்கள் முன்வைத்ததை நினைவிற்கொள்க. அத்தகைய ஓர் அனுமானம் என்னவென்றால், செலாவணி வீழ்ச்சியானது, வெள்ளி நாணயப் புழக்கமுள்ள நாடுகளில் ஏற்றுமதியை ஊக்குவித்தது, இறக்குமதிக்கு இடையூறாக இருந்தது என்பதாகும். இரண்டாவது அனுமானம், வெள்ளி நாணயத்தைப் பயன்படுத்தும் நாடுகளில் இருந்த அவர்களுடைய போட்டியாளர்களைவிட ஆங்கிலேய உற்பத்தியாளர்களை இந்த செலாவணி வீழ்ச்சி அதிகம் பாதித்தது. ஆனால், இந்தச் செலாவணி வீழ்ச்சியினால்

---

1. தங்கம், வெள்ளி பற்றிய ராயல் கமிஷன் முன்னர் (1886) பேராசிரியர்கள் மார்ஷல் நிக்கொல்சன் ஆகியோர் அளித்த சாட்சியம், மனு பார்க்க. அத்துடன் பேராசிரியர் லெக்சிஸ் எழுதிய, "The Agio on Gold and international Trade," (பொருளாதார சஞ்சிகை தொகுதி V, 1895)

அத்தகைய விளைவுகள் ஏற்படமுடியுமா? செலாவணி வீழ்ச்சி பற்றிய சாரமற்ற அறிக்கையைப் பின்பற்றி ஆராய்ந்தும், வெள்ளியின் தங்க விலையை நிர்ணயிப்பது எது என்று விசாரணை செய்தும் பார்த்தால், மேற்சொன்ன இரண்டு அனுமானங்களும் நிரூபிக்க முடியாதவை என்று தெரியவரும். தங்கத்துக்கும் வெள்ளிக்கும் இடையிலான விகிதம் என்பது தங்க விலைகளுக்கும் வெள்ளி விலைகளுக்கும் இடையிலான தலைகீழ் விகிதம் ஆகும் என்பதைக் கேள்விக்கு அப்பாற்பட்ட ஒரு கூற்றாகக் கொள்ளவேண்டும். ஆக, வெள்ளியின் தங்கவிலை வீழ்ச்சியடைந்தால் அது, வெள்ளியில் அளவிடப் பட்ட இந்திய விலைகளின் ஏற்றம், மற்றும் தங்கத்தில் அளவிடப் பட்ட ஆங்கிலேய விலைகளின் இறக்கம் ஆகியவற்றில் காணப்படும் மிகவும் பொதுவான நிகழ்வுப் போக்கின் மறுபக்கம் ஆகும். செலா வணி வீழ்ச்சி பற்றி அத்தகைய விளக்கம் கொடுக்கப்படும்போது, அது எப்படி ஏற்றுமதியை அதிகரிக்கவும், இறக்குமதியைக் குறைக்கவும் உதவும் என்று புரிந்துகொள்வது கடினம். சர்வதேச வர்த்தகமானது, அதில் ஈடுபடுகிற நாடுகளின் பரஸ்பர அனுகூலங்களால் கட்டுப் பாட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வர்த்தகத்தில் ஈடு படுத்தப்படும் பொருள்களின் ஒப்பீட்டு விலைகளின் மூலமாக அந்த வர்த்தகத்தின் விதிகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. ஆக, நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தில் அதில் தொடர்புடைய பொருள்களின் ஒப்பீட்டு விலைகளின் மாறுதல்கள் காரணமாகவே அன்றி, அதன் உண்மையான அர்த்தத்தில் மாறுதல் என்பது எதுவும் இருக்க முடியாது. **முழுமையாக** வெள்ளி விலைகள் உயர்வைத் தொடர்ந்து தங்க விலைகள் **முழுமையாக** வீழ்ச்சி அடைவதாக வைத்துக் கொள்வோம். இந்தியா எதையாவது இறக்குமதி செய்வதை அதிகரித்து அல்லது ஏற்றுமதியைக் குறைத்து அதன் மூலமாகவே அன்றி இந்தியாவின் ஏற்றுமதியை அதிகரிக்க சாத்தியம் ஏற்படும் வகையில் நிதிநிலையில் இடையூறுகளை மேற்சொன்ன வீழ்ச்சிக்கு உண்டாக்கு வதில்லை.

செலாவணி வீழ்ச்சி அடைதல் பற்றிய கேள்வி தொடர்பான இதே பார்வையிலிருந்து, அத்தகைய நிதி இடையூறுகள் மற்றொன்றை விடவும் அதிகமாக ஒரு வர்த்தகத்தை அழுத்திவைத்துவிட முடியாது

கூடியதாகும் என்பதால் பொருள் உற்பத்தியாளர்கள் எல்லோரையும் இது சம அளவில் பாதித்தது. எனவே, வெட்டுக் கருவி வியாபாரத்தை விடவும் அதிகமாகப் பருத்தி அல்லது கோதுமை வர்த்தகம் பாதிக்கப் பட்டதாகச் சொல்வதற்குக் காரணம் ஏதும் இல்லை. பொதுவாக அல்லது குறிப்பிட்ட பண்டங்கள் தொடர்பாக நிலவி வருகிற வர்த்தக உறவுகளை நிலை குலைக்கிற வகையில் நிதி இடையூறுகள் எதுவும் இல்லாதது மட்டுமல்ல, இந்திய உற்பத்தியாளர்களுக்கு ஆதாயம் கிடைக்கும்படியாகவும் ஆங்கிலேய உற்பத்தியாளர்கள் பாதிப்பு அடையும்படியாகவும் எவ்வித விளைவும் ஏற்படவும் இல்லை. கொடுக்கப்பட்டுள்ள விவரத்தின்படி செலாவணி என்பது இரண்டு விலை மட்டங்களின் விகிதாச்சாரம் ஆகும். எனவே, அதிக ரூபாய் களைப் பெற்றுக் குறைந்த வாங்கும் சக்தி கொண்ட இந்திய உற்பத்தி யாளர்களைவிடக், குறைந்த பவுனைப் பெற்றும் வாங்கும் சக்தி அதிகமாகக் கொண்ட ஆங்கிலேய உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று எந்த அர்த்தத்திலும் நாம் காண்பது கடினம். பேராசிரியர் மார்ஷலின் ஒப்புநோக்கு இந்த இடத்தில் மிகவும் பொருத்தமாகும். செலாவணி வீழ்ச்சி ஆங்கிலேய உற்பத்தி யாளர்களுக்கு நஷ்டம், இந்திய உற்பத்தியாளர்களுக்கு லாபம் என்பது சரியா? ஓர் உதாரணம் பார்ப்போம். பத்தடி உயரத்தில் ஒரு கப்பலின் கேபினில் இருக்கும் ஒருவன், அக்கப்பல் 12 அடி ஆழத் தில் மூழ்கும்போது அவனும் மூழ்கிவிடுவான். ஆக, பயணிக்கும் கப்பலுக்கும் ஒரே கதி நேரிடுமேயன்றிக், கப்பலை விட்டுவிட்டுப் பயணிக்கு மட்டும் பாதிப்பு என்று கூறுவது தவறான வாதமாகும்.

இதே மாதிரிதான் இந்திய, ஆங்கிலேய உற்பத்தியாளர்கள் மீது ஒரே விதமான பண்பும் சக்தியும் செயல்படுகிறது. செலாவணியில் ஏற்படுகிற மாறுதல் என்பது இரண்டு நாடுகளின் பொதுவான விலை மட்டங்களில் பெருமளவில் ஏற்படும் மாறுதலின் ஒரு பகுதியாகும். இவ்வாறாகச் சொன்னால், ஆங்கில, இந்திய உற்பத்தியாளர்களின் நிலை, சமஅளவில் நலன் பயப்பதாகவோ தீமை பயப்பதாகவோ இருந்தது. இதில் வித்தியாசம் என்னவென்றால், ஆங்கிலேய உற்பத்தியாளர் குறைவான பவுனைப் பயன்படுத்துகிறார்: இந்திய உற்பத்தியாளர் அதிக ரூபாய்களை அதே வர்த்தக நடவடிக்கை களுக்குப் பயன்படுத்துகிறார்.

இந்தியாவில் பண்டங்களின் பாஷையில் வெள்ளியின் மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சியை விட, இங்கிலாந்தில் தங்கத்தின் பாஷையில் வெள்ளியின் மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சி மிகப்பெரிதாக இருந்திருக்குமேயானால், அப்போது மட்டுமே செலாவணி வீழ்ச்சி யானது இந்திய உற்பத்தியாளருக்கு ஆதாயமாகவம் ஆங்கிலேய உற்பத்தியாளருக்குத் தண்டனையாகவும் இருக்கமுடியும் என்பது வெளிப்படை. அந்த விஷயத்தில் இந்திய உற்பத்தியாளர் தனது பொருட்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வெள்ளியில் பணத்தைப் பெறுவதன் மூலமும், இந்தியாவில் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது பெரிய அளவில் அதிகாரம் செலுத்தி வந்துள்ள ஓர் ஊடகத்தைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமும் இந்திய உற்பத்தியாளர் திட்ட வட்டமான ஆதாயம் பெறமுடியும். தர்க்கரீதியாக அத்தகைய அனு மானத்திற்கு எவ்வித நியாயமும் இல்லை.

பொதுவில் பணடங்களின் தங்க விலையிலிருந்து மாறுபட்ட விகிதத்தில், வெள்ளியின் தங்கவிலை வீழ்ச்சி அடைய, அல்லது இங்கிலாந்திலும் இந்தியாவிலும் வெள்ளிவிலைகளுக்கு இடையில் மிகப் பெரிய வித்தியாசம் இருந்துவர எவ்வித முகாந்திரமும் இல்லா மல் இருந்தது. அத்தகைய தர்க்கரீதியான கணிப்புகளுக்கு அடிப்படை இல்லாமல் இல்லை என்பதைப் புள்ளியியல் ஆய்வுகள் காட்டு கின்றன. (அட்டவணை XXI)

அட்டவணை XXI

இந்தியா- இங்கிலாந்துக்கு இடையிலான விலைகள், சம்பளங்கள் மற்றும் வெள்ளியின் இயக்கங்கள்[1]

இந்தியாவுக்கு இறக்குமதியான மொத்த வெள்ளி		வெள்ளியின் தங்க விலை குறியீட்டு எண்	ஆண்டுகள்	இந்தியா விலிருந்த பொருள்களுக்கான வெள்ளி விலைகளின் குறியீட்டு எண்	இந்தியாவில் சம்பளக் குறியீட்டு எண்	இங்கிலாந்தில் பொருள்களுக்கான தங்க விலைகளின் குறியீட்டு எண்	இங்கிலாந்தில் சம்பளக் குறியீட்டு எண்
ஆண்டுகள்	ரூபாய்						
1	2	3	4	5	6	7	8
1871-72	6,587,296	99.7	1871	100	-	100	100
1872-73	739,244	99.2	1872	105	-	109	105.8
1873-74	2530,824	97.4	1873	107	100	111	112
1874-75	4,674,791	95.8	1874	116	101	102	113
1875-76	1,640,445	93.3	1875	103	97	96	111.6
1876-77	7,286,188	86.4	1876	107	98	95	110
1877-78	14,732,194	90.2	1877	138	97	94	109.8
1878-79	4,057,377	86.4	1878	148	99	87	107
1879-80	7,976,063	84.2	1879	135	100	83	105.8
1880-81	3,923,612	85.9	1880	117	99	88	106.5
1881-82	5,381,410	85.0	1881	106	99	85	106.5
1882-83	7.541.427	84.9	1882	105	100	84	106.5
1883-84	6,433,886	83.1	1883	106	102	82	108
1884-85	7,319,581	83.3	1884	114	101	76	109
1885-86	11,627,028	79.9	1885	113	106	72	108
1886-87	7,191,743	74.6	1886	110	105	69	107
1887-88	9,319,421	73.3	1887	111	114	68	108
1888-89	9,327,529	70.4	1888	119	112	70	109.8
1889-90	11,002,078	70.2	1889	125	112	72	113
1890-91	14,211,408	78.4	1890	125	113	72	118
1891-92	9,165,684	74.3	1891	128	118	72	118
1892-93	12,893,499	65.5	1892	141	110	68	117.4
1893-94	13,759,273	58.5	1893	138	119	68	117.4

வெள்ளியானது பண்டங்களைவிட வேகமாக அதன் மதிப் பளவில் வீழ்ச்சி அடைந்திருந்தாலும், வெள்ளியின் விலைகள் இங்கிலாந்தை விட இந்தியாவில் குறைவாக இருந்திருந்தாலும் வெள்ளியானது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குள் பிரவாகமாய்ப் பெருகி வந்திருப்பதை நாம் கண்டறிந்துகொள்ளமுடியும். ஆனால் உண்மை நிலவரம் என்ன? இந்தியாவுக்குள் வழக்கத்துக்கு மாறான அளவில் வெள்ளியின் வருகை ஏதுமில்லை என்பதுமட்டுமல்ல, 1871-1893 ஆம் ஆண்டுகளில் வெள்ளி இறக்குமதியானது அதற்கு முந்தைய இருபது ஆண்டுகளைவிடவும் மிகக் குறைவாகவே இருந்தது[1] இந்தியாவில் வெள்ளியின் விலைகள் பிற நாடுகளில் இருந்ததைப் போலவே இருந்தன. அதன் விளைவாக இந்திய உற்பத்தியாளருக்கு அவருடைய வர்த்தகத்தில் ஆதாயம் அடைய வாய்ப்பு அவ்வளவாக இல்லாதிருந்தது என்பதை உண்மை நிலவரம் காட்டுகிறது.

அவ்வாறு கூறப்படுபவை பிரச்சினைக்குத் துறவிகளின் கருத்துப் போல் இருந்தபோதிலும் தனக்குக் கிடைக்கும் ஆதாயத்தின் மூலம்தான் தனது வளவாழ்வு இருந்தது என்பதை இந்திய உற்பத்தியாளர் நன்கு புரிந்துகொண்டிருந்தார். எனவே செலாவணி வீழ்ச்சியை ஒரு சாபமாக அரசாங்கம் கருதினாலும் அதனைத் தனக்கு ஒரு வரப்பிரசாதமாகக் கருதிய இந்திய உற்பத்தியாளர், இயல்பாகவே எந்த ஒரு சீர்திருத் தத்தையும் எதிர்த்தான். இந்திய உற்பத்தியாளரின் கருத்து தவறாக இருந்தாலும் ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலமாகவே ஆதாயம் கிடைக் கும் என்ற பொதுவான கருத்து நிலவியதால், **தேசம் முழுமைக்கும்** செலாவணி வீழ்ச்சியானது லாபத்தைத் தரும் என்பது ஒரு வெகுஜன நம்பிக்கையாக மாறிஇருந்தது. செலாவணி வீழ்ச்சியிலிருந்துதான் ஆதாயம் கிடைக்கிறது என்பது உண்மைதானா? அவ்வாறு இருந் திருக்குமானால் செலாவணி வீழ்ச்சி ஒவ்வொன்றும் கட்டாயம் ஆதாயம் கொடுப்பதாக இருக்கவேண்டும். ஆனால் வெள்ளியின் மதிப்பு ஐரோப்பாவில் குறைவதற்கு **முன்னதாகவே** இந்தியாவில் குறைந்து விட்டதாக வைத்துக்கொள்வோமானால், செலாவணி வீழ்ச்சி, இந்திய உற்பத்தியாளருக்கு ஆதாயத்தைக் கொண்டு வந்திருக்க முடியுமா? மேலே விளக்கிக் கூறியுள்ளபடி இந்திய உற்பத்தியாளர் தனது உற்பத்திப் பொருளுக்காகத் தான் பெற்ற வெள்ளியைக் கொண்டு இந்தியாவில் அதிகப்படியான சரக்குகளை வாங்க முடிந்தால்

மட்டுமே இந்திய உற்பத்தியாளருக்கு ஆதாயம் பெற வாய்ப்புக் கிட்டும். இன்னும் எளிமையாகச் சொன்னால், அவனது ஆதாயம் என்பது அவனது பொருளின் விலைக்கும் அவனது முதலீட்டுச் செலவுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். இதனை மனத்தில் கொண்டால் நாம் ஓர் உறுதியான கணிப்புக்கு வரமுடியும்; அதாவது நாம் முன்கூறியபடி, வெள்ளியின்மதிப்பு வீழ்ச்சி இந்தியாவில் முதலாவதாக ஏற்பட்டு விடுமானால், இந்திய, செலாவணியில் ஏற்படும் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஆதாயம் கிடைப்பதற்குப் பதிலாக, இந்திய உற்பத்தியாளருக்கு அபராதம் கிடைத்தது போலாகி விடும். அந்த விஷயத்தில், இந்தியாவைச் சேர்ந்த ஏற்றுமதியாளர் ஒரு விஷயத்தைக் கண்டறிந்து கொள்ளமுடியும். இந்தியச் செலாவணி, அதாவது வெள்ளியின் தங்க விலை வீழ்ச்சி அடைந்தாலும் இங்கிலாந்தில் தங்க விலைகளின் விகிதமானது இந்தியாவில் வெள்ளி விலைகளை மேலும் குறைக்கும்படியாகச் செய்துவிட்டது. அதாவது, இந்திய உற்பத்திப் பொருளுக்கு வாங்கும் பணம் குறைவாக இருந்தது. இந்தியாவில் வெள்ளி வீழ்ச்சி அடையும் முன் ஐரோப்பாவில் வீழ்ச்சி அடைந்ததாக **நிலைநாட்டப்படவில்லை**[1] அப்படியே நடந்திருந்தாலும் கூட, செலாவணி வீழ்ச்சியின் மூலம் ஓர் அபராதத்திற்கான சாத்தியப்பாடு எதனை நிருபீக்கிறது என்றால் - ஆதாயமானது (bounty), அப்படி ஏதும் இருந்திருந்தால், அது ஏற்றுமதி வர்த்தகத்தினால் கிடைத்தது அல்ல; மேலும் அது நாட்டுக்கு உள்ளேயே விலைகளின் பொதுவான மட்டத்திற்கும் குறிப்பிட்ட சேவைகள் மற்றும் பொருள்களின் விலைக்கும் இடையிலான இணக்கமின்மையின் விளைவே ஆகும் என்பதையும், மேலும் நாட்டில் ஏற்றுமதி வர்த்தகம் இல்லாதுபோனாலும் ஆதாயம் **நிலவி வந்துள்ளது** என்பதையும் நிரூபிக்கிறது.

இவ்வாறாக, ஆதாயமானது கரன்சியின் பொதுவான மதிப்புக் குறைவுப் போக்கில் ஒரு சம்பவமாக இருந்தது. இந்தியாவில் சேவைகள் மற்றும் எல்லாப் பொருட்களின் விலைகளும் ஒரே சீரான விதத்தில் இயங்கவில்லை. சில பண்டங்களின் விலைகள் ஒரு சமயத்தில் கூடும்போது பொதுவான விலைவாசி வீழ்ச்சியடைவதை நன்கறிந்து கொள்ள முடியும். மறுபுறத்தில் சில பொருட்களின் விலைவாசி வீழ்ச்சி அடையும் அதே சமயத்தில் பொதுவான விலைகள் மட்டம் உயர்வடைகிறது. ஆனால், அத்தகைய எதிரும் புதிருமான இயக்கங்கள் அரிதாகவே காணப்படுகிறன்றன. அடிக்கடி என்ன நேரிடுகிறது என்றால், சில சேவைகள் மற்றும் ரக்குகளின்

1. பார்க்க: இயல் 4.

விலைகள் ஒரே திசையில் இயங்கினாலும்கூட, பொதுவான விலைகள் மட்டத்திற்கு ஏற்ற நடைவேகத்தில் இருப்பதில்லை. பொதுவான விலைகள் வீழ்ச்சிஅடையும்போது, ஒவ்வொரு முதலாளியின் மொத்தத் திட்ட முதலீட்டில் மிகப்பெரிய விஷயமாக இருக்கிற சம்பளங்கள் மற்றும் இதர நிலையான வருமானங்கள் அதே விகிதாசாரத்தில் வீழ்ச்சி அடைவதில்லை. பொதுவான விலைகள் உயரும் போது அவை பொதுவான விலைகளைப்போல வேகமாக வீழ்ச்சி அடையாமல் பொதுவில் பின்தங்கி இருக்கிறது. இதுதான் 1873-93 ஆம் ஆண்டுகளில் (பார்க் சார்ட் IV) தங்க நாணயப் புழக்கமுள்ள இங்கிலாந்திலும் வெள்ளி நாணயப் புழக்கமுள்ள இந்தியாவிலும் நடைபெற்றுள்ளது. விலைகள் இங்கிலாந்தில் வீழ்ச்சி அடைந்து வந்துள்ளன: ஆனால், சம்பளங்கள் அதே அளவுக்கு வீழ்ச்சி அடையவில்லை. இந்தியாவில் விலைகள் உயர்ந்து வந்துள்ளன: அதே அளவுக்கு சம்பளங்கள் உயரவில்லை. ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்த போதிலும் ஊழியர்கள் சம்பளங்கள் அப்படியே இருந்ததாலேயே ஆங்கிலேய உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டாரேயன்றி, அது எந்தவிதத்திலும் இந்தியப் போட்டியாளர்களின் நடவடிக்கையினால் அல்ல. இந்திய உற்பத்திப் பொருட்களின் விலை உயர்ந்தபோதிலும் இந்திய முதலாளிகள், தங்கள் ஊழியர் களுக்குக் கூடுதல் சம்பளம் கொடுக்காதிருந்ததாலேயே இந்திய உற்பத்தியாளர் ஆதாயம் அடைந்திருப்பாரேயன்றி, அது ஆங்கிலேயப் போட்டியாளரால் அல்ல.

ஆகவே, முடிவாகச் சொன்னால், செலாவணி வீழ்ச்சியானது நிலைநாட்டப்பட்டிருந்த வணிக உறவுகளைச் சீர்குலைத்து விடவுமில்லை, சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெற்றிருந்த பண்டங்களை அகற்றிவிடவும் இல்லை எனலாம். அதிகபட்சமாக அதன் விளைவு பற்றிக் கூறக்கூடியது, பொருளாதார ஊக்குவிப்பின் மீது அதன் பாதிப்புதான். சொத்தின் சமூகப் பகிர்வில் மாறுதலைக் கொண்டு வந்தததன் மூலம் அது இதுநாள் வரையில் தூண்டுதல் சக்தியைத் தந்தது அல்லது அப்புறப்படுத்தியது. இங்கிலாந்தில் விலைகள் வீழ்ச்சி அடைந்தபோது முதலாளி பாதிக்கப்பட்டான். இந்தியாவில் விலைகள் உயர்ந்தபோது, சம்பளம் வாங்கும் தொழிலாளி பாதிக்கப்பட்டான். இந்த இரண்டு விஷயத்திலும் ஏதாவது ஒரு சமூகப் பிரிவுக்கு அநீதி நேர்ந்துள்ளது. மேலும் கரன்சியின் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. ஒரு கரன்சிச் சீர்திருத்தம் அவசியம் என்பதை இங்கிலாந்து

கத்தின் ஸ்திரநிலை பெரிதும் கவர்ந்து ஈர்க்கக் கூடியதாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் 1873 ஆம் ஆண்டின் மட்டத்திற்கும் மேலாக, இந்தியாவில் விலைகள் உயர்ந்து வந்திருப்பதன் சான்று எதனையும் கண்டு கொள்ளத் தவறியிருந்தார்கள். வேறுசிலர், செலாவணியில் கிட்டும் ஆதாயம் மிகப் பெரிதாகவும், செலாவணி ஸ்திரமாக இருந்தால் அந்த ஆதாயம் பறிபோய்விடும் என்றும் கருதினார்கள். இந்த இரண்டு கருத்துகளுமே தவறு என்பது வெளிப்படை. இந்தியாவில் விலைகள் உயர்ந்தன, அதுவும் கூடக் கணிசமான அளவில்தான். அநேகமாய் ஆதாயம் இருந்தது, ஆனால் அது சம்பளக்காரர்களுக்குப் பாதகமாய் இருந்தது. இவ்வாறு பார்த்தால், ஆங்கிலேய நாணயத்தைவிட இந்திய நாணயத்தைச் சீர்திருத்த வேண்டியது மிக மிக அவசியமாய் இருந்தது. உளவியல் ரீதியில் பார்த்தால், உயரும் விலைகளுக்கும் வீழும் விலைகளுக்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க சாத்தியப்பாடு உள்ளது. ஆனால், சொத்துப் பகிர்வு மீதான சம்பவத்தின் நோக்கில் பார்த்தால், நாணயப் புழக்கத்துக்கு ஆதரவாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இந்த நாணயப் புழக்கமானது அதனுடைய மதிப்புகளை மாற்றிக் கொள்கிறது. மேலும் அது ஒப்புநோக்கில் ஏழைகளாய் இருப்பவர்களிடமிருந்து, செல்வந்தர்களாய் இருப்பவர்களிடம் சொத்தை மாற்றிக்கொடுக்கிற ஓர் ஊடகமாக மாறி இருக்கிறது. ஸ்க்ரோப் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: ''நிலையான மதிப்பு இல்லாத பணம் ஒரு மோசடியாகும். நலன்களின் முக்கியத்துவத்தைப் பாதிக்கிற, சிறுமைப்படுத்துகிற, பணம் ஒரு பெரும் மோசடி என்றே கருதவேண்டும். அவ்வாறிருக்க, இந்திய வணிகம் தொழில் ஆகியவற்றின் செழிப்பு, ஆரோக்கியமான நாணயநிலைக்குச் சான்றாக இருப்பதற்கு முற்றிலும் மாறாக ஒரு நோய்வாய்ப்பட்ட நாணய நிலையையே சுட்டிக்காட்டுகிறது''.

இதுவரை ஆதாயமாகக் கருதப்பட்டுவந்த செலாவணி வீழ்ச்சியானது, நிர்ணயிக்கப்பட்ட வருவாய் பெறுகிற பெரும்பான்மையான இந்தியர்களைப் பாதித்தது. அதாவது, வெள்ளி நாணயத்தின் ஸ்திரமின்மை காரணமாகப் பாதிக்கப்பட்ட அரசு மற்றும் அதன் ஐரோப்பிய அலுவலர்களுக்கு இணையாகப் பெரும்பான்மை இந்தியரும் பாதிக்கப் பட்டனர்.

செலாவணி வீழ்ச்சியின் விளைவுகள் பல உண்டு. ஆனால் நிதி நெருக்கடிகள் மேலும் சமூக அநீதிகள் காரணமாக அதன் தீய விளைவுகளைத் தொகுத்துக் கூறமுடியவில்லை. வீழ்ச்சியைவிட மிகவும் அதிகமாக இடையூறு செய்வது, வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் ஆகும். (பார்க்க அட்டவணை V)

ரூபாயின் செலாவணி மதிப்பு வீழ்ச்சியின் மூலம் ஏற்பட்ட இந்திய அரசாங்கத்தின் தர்ம சங்கடமான நிலைமையை இந்த ஏற்ற இறக்கங்கள் மேலும் மோசமாக்கிவிட்டன. மாண்புமிகு பேரிங் (பின்னர் குரோமர் பிரபு)[1] பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளார்:

''ஒப்பீட்டளவில் பேசுகையில், ரூபாயின் மதிப்பு குறைவாய் இருக்கிறது, அதனால் பல அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது என்பது உண்மை அல்ல. அது தொல்லை தரக்கூடியதாயய் இருந் திருக்கிறது என்றாலும், ரூபாயின் மதிப்பு எதுவாயினும் அதற்குத் தக்கபடி சரிசெய்து கொள்ளக்கூடியதாய் இந்திய நிதிஅமைப்புமுறை இருக்கிறது. அரசுக்கும் வர்த்தகத்துக்கும் அசௌகரியங்களை ஏற்படுத் தியது ரூபாய் மதிப்பின் ஸ்திரமின்மையே. இந்திய அரசின் வரு டாந்திரக் கடன்களைத் துல்லியமாக இந்திய நாணயத்தில் கூறுவது சாத்தியமற்றதாய் இருந்தது. தங்கம், வெள்ளியின் ஒப்பீட்டு மதிப்பில் ஏற்படும் வேறுபாடுகளுக்கு ஏற்ப ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கடன்களைப் புதிதாய் கணக்கீடு செய்ய வேண்டியிருந்தது. ஒரு வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் என்றாலும் இந்தக் கணக்கீடு செய்வதில் பெரிதும் சிரமம் இருந்தது.''

அத்தகைய ஏற்ற இறக்கங்கள் காரணமாக, உண்மையான சந்தை விகிதமாக மாறக்கூடிய பட்ஜெட்டில் எந்த விகிதத்தையும் கணித்துக் கூறமுடியவில்லை. ஒரு குறிப்பிட்ட வருடத்தின் சராசரி விகிதம் கூட பட்ஜெட் விகிதத்திலிருந்து பெரிதும் வேறுபட்டுள் ளது. அதனால் அரசாங்க நிதிவிஷயங்கள் நிதியமைச்சர் ஒருவரின் வார்த்தையில் சொல்லப்போனால் ''நிஜமான சூதாட்டமாகும்.''

ஸ்டெர்லிங்கில் பணம் செலுத்தவேண்டியதால் ரூபாய் செலவில் ஏற்படும் திடீர் மாறுதல்களால் எந்த அளவுக்குப் பட்ஜெட்டில் சீர்குலைவு வருகிறது என்பதை அட்டவணை XXII காட்டுகிறது.

செலாவணி ஏற்ற இறக்கங்களின் விளைவாக அரசு நிதி விஷயங்கள் நிச்சயமற்றதாய் இருந்ததால் தனியார் வர்த்தகமும் கூட ஊகவாணிபமாக மாறியிருந்தது. செலாவணி ஏற்ற இறக்கங்கள், சர்வதேச வர்த்தகத்தில் ஒரு பொதுவான சம்பவமாகும். செலாவணி ஏற்ற இறக்கங்கள், வர்த்தகத்திலும் தொழில்துறையிலும் தொடர்ச்சியின்மையை உண்டாக்கவில்லை என்றாலும், வரையறைகள் உண்டு. இந்த ஏற்றஇறக்க வரம்புகள் கண்டறியப்படக் கூடியதாய் இருந்தால், வர்த்தகத்திலும் அதனுடைய கணக்கீடு நிச்சயமானதாய் இருக்கும். மேலும் நிலைநாட்டப்பட்டுள்ள செலாவணி சமநிலையிலிருந்து எவ்வளவு தூரம் ஏற்ற இறக்கங்கள் விலகியுள்ளன எனத் தெரிந்து கொள்ளும் வகையில், செலாவணியிலும் யூகங்கள் வரம்புக்குட்பட்டிருக்கும். ஆனால், வரம்புகள் அறியப்படாததால், வர்த்தகத்தில் கணக்கீடுகள் யாவும் ஏமாற்றமளித்தன; சட்டப்பூர்வமான வர்த்தகத்தின் இடத்தைச் செலாவணியில் காணப்படும் நன்னம்பிக்கை பிடித்துக் கொண்டது. இருநாடுகள் ஒரே மாதிரியான நாணயப்புழக்கம் கொண்டிருந்ததால் இரு நாடுகளுக்கு இடையிலான செலாவணி ஏற்ற இறக்கங்களும் வரம்புக்குட் பட்டிருக்கும் என்பது வெளிப்படை. மதிப்பின் இத்தகைய பொதுவான தரம் இல்லாத இடங்களில் வரையறைகள் நடைமுறையில் இருந்தபோதிலும் கூட அவை நடைமுறையில் அவ்வளவாகப் பயன்படாத அளவுக்கு மிகவும் எல்லையற்றதாக இருக்கின்றன. செலாவணியின் நிரந்தர மாற்று வீதத்தின் முறிவானது தங்கம் மற்றும் வெள்ளி நாடுகளுக்கிடையில் மதிப்பின் ஒரு பொதுவான தரத்தை அழித்ததுடன் இத்தகைய நாடுகளுக்கிடையில் செலாவணியின் ஏற்ற இறக்கங்களின் மீதான வரையறைகளையும் தர அளவையின் மதிப்பில் ஏற்பட்ட இத்தகைய மாறுபாடுகளின் காரணமாக வர்த்தகமானது ''திடீர் பாய்ச்சல்கள் மற்றும் தயக்கங்களுடன்'' முன்னேறியது. ஊகங்கள் ஜுர வேகத்தில் சுறுசுறுப்படைந்தன.[1]

---

1. சாட்சியம்: இந்திய கரன்சி கமிட்டி, 1898, கியூ 6,290, 9, 808-10.

அட்டவணை XXII

செலாவணியின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் தங்கக் கொடுப்பல்களின் ரூபாய் அடக்க விலையில் ஏற்ற இறக்கங்கள் [1]

ஆண்டு	அந்த ஆண்டுக்கான பட்ஜெட் எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டதோ அதன் உத்தேச செலாவணி வீதம்		ஆண்டின் சராசரியின் அடிப்படையில் உண்மையில் பெறப்பட்ட செலாவணி வீதம்		உத்தேச மற்றும் பெறப்பட்ட செலாவணி வீதத்திற்கிடையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக ஸ்டெர்லிங் கொடுப்பல்களின் ரூபாய் அடக்க விலையில் ஏற்பட்ட மாற்றங்கள்	
					அதிகரிப்பு	குறைவு
	s.	d.	s.	d.	ரூ.	ரூ.
75	1	10.375	1	10.156	15,91,764	-
76	1	9.875	1	9.626	19,57,917	-
77	1	8.5	1	8.508	-	76,736
78	1	9.23	1	8.791	38,43,050	-
79	1	8.4	1	7.794	56,87,129	-
80	1	7	1	7.961	-	84,40,737

(1)	(2)		(3)		(4)	(5)
	s.	d.	s.	d.	Rs.	Rs.
1881 - 82	*1*	*8*	*1*	*7.956*	*4,24,722*	-
1882 - 83	*1*	*8*	*1*	*7.525*	*10,17,482*	-
1883 - 84	*1*	*7.5*	*1*	*7.536*	-	*3,62,902*
1884 - 85	*1*	*7.5*	*1*	*7.308*	*18,97,307*	-
1885 - 86	*1*	*7*	*1*	*6.254*	*56,82,638*	-
1886 - 87	*1*	*6*	*1*	*5.441*	*65,17,721*	-
1887 - 88	*1*	*5.5*	*1*	*4.898*	*71,90,097*	-
1888 - 89	*1*	*4.9*	*1*	*4.379*	*77,98,400*	-
1889 - 90	*1*	*4.38*	*1*	*4.566*	-	*27,31,892*
1890 - 91	*1*	*4.552*	*1*	*6.09*	-	*2,35,51,744*
1891 - 92	*1*	*5.25*	*1*	*4.733*	-	-

(முன்பக்க அடிக்குறிப்பு)

1. தங்கம் மற்றும் வெள்ளிக் கமிஷனின் இறுதி அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி வபரங்களிலிருந்து தொகுக்கப்பட்டது. பக்கம். 40 மற்றும் பிற்சேர்க்கை II, பக். 270. 1893, இந்திய கரன்சிக் கமிட்டியின் அறிக்கைக்கு.

வர்த்தகத்தின் முன்னேற்றம் ஸ்திரத் தன்மையைப் பொறுத்தே உள்ளது என்ற உண்மைக் கூற்று உண்மையில் அது மறுக்கப்படும் வரை ஒருபோதும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. அரசாங்கம் ஸ்திரமாக இருக்கும்போது, கடன்கள் பாதுகாப்பாக இருக்கும் போதும் நிலைமைகள் சீராக இருக்கும்போது ஒரு ஆரோக்கியமான நிறுவனத்திற்கு அதன் முக்கியத்துவத்தைப் போற்றுவது கடினமாக இருக்கிறது. ஆயினும் ஸ்திரமற்ற நிலைமையின் இடையூறானது, நிச்சயமற்ற நிலைமைகளினால் சூழப்பட்ட துறைகளில் ஸ்திரத் தன்மையை உருவாக்கும் பல்வகை வழிமுறைகளினால் வர்த்தகர்கள் எங்கும் வழிநடத்திச் செல்லப்படும் அளவுக்கு மிகவும் மகத்தான தாக இருந்து வந்துள்ளது. வரவிருக்கும் மாற்றங்களைப் பற்றி வர்த்த கர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கும் வர்த்தக அளவுமானிகள் எங்கும் தோன்றியுள்ளன. ஆகவே அது தங்களது நடவடிக்கை களில் தகுந்த மாற்றங்களைச் செய்வதன் மூலம் அந்த மாற்றங் களுக்கு எதிராக முன்கூட்டியே தங்களைத் தயார் செய்து கொள்ள வகை செய்கிறது. காப்பீடு (இன்ஷுரன்ஸ்) வர்த்தகம் முழுவதுமே பொருளாதார வாழ்விற்கு ஸ்திரத்தன்மை வழங்குவதை நோக்க மாகக் கொண்டுள்ளது. பொருள்களின் அளவு அறுதி செய்யப் படுவது சம்பந்தமாகவும் அவற்றின் வர்த்தகங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டிருப்பதும் பொருள்களுக்கிடையிலான உண்மையான வீதா சாரத்தின் மூலம் தர அளவைகளைப் பராமரிப்பதற்காக எல்லா வழக்கமாக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கங்களை நிர்ப்பந்தப்படுத்திய தேவையானது இதே காரணத்தினால் தூண்டப்பட்டதேயாகும். தனது தர அளவைகளை மிகவும் துல்லியமாக விளக்கும் ஒவ் வொரு நாகரிகமடைந்த நாடும், அதிலிருந்து விலகிச் செல்லு வதைத் தடுப்பதற்காக அது பராமரித்துவரும் பெரிய நுட்ப அமைவும் சொல் திறனுக்குத் துல்லியத் தன்மையையும், தங்களது தனிப்பட்ட முறையில் அல்லது நிறுவனங்களின் மூலம் தனது உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் சம்பந்தமாக அவற்றை நிறைவேற்றும் உறுதிமொழியையும் வழங்கும் விஷயத் திற்கு ஒரு பொருளாதார சமுதாயம் தொடர்ந்து அதிக முக்கியத் துவம் வழங்க வேண்டும் என்பதற்குச் சான்றுகளேயாகும்.

ஒரு சமூகத்தின் தர அளவுகள் எந்த அளவுக்கு முக்கிய மானவையோ, அதேபோன்று அதன் சமூகத்தின் அளவைகளும், அதன் மதிப்பின் அளவையும் எல்லாவற்றையும் விட மிக முக்கிய மானதாகும்.[1] எடையின் அளவைகள், விஸ்தரிப்பு அல்லது அளவு ஆகியவை குறிப்பிட்ட வர்த்தக நடவடிக்கைகளில் மட்டுமே வரு கின்றன. பவுண்ட், புஷல் அல்லது கெஜம் ஆகியவை மாற்றி யமைக்கப்படுமானால், அதனால் ஏற்படும் தீமைகள் வீச்சில் ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும். ஆனால் மதிப்பின் அளவை சர்வ வியாபகமானது.

இதனால் பாதிக்கப்படாத பொது அல்லது தனியாரின் ஒப்பந்தமோ, தேசிய அல்லது தனிப்பட்டவர்களின் ஈடுபாடோ கிடையாது என்று பீல் பிரகடனம் செய்தார்.[2] வர்த்தக நிறுவனங் கள், வர்த்தகத்தின் லாபங்கள், சமுதாயத்தின் எல்லா உள்நாட்டு உறவுகளிலும் செய்யப்படும் ஏற்பாடுகள், ஊதியங்கள், உழைப்பு, மிக உயர்ந்த மற்றும் மிகக் குறைந்த தொகைகளில் பணப் பரிவர்த்தனைகள், தேசியக் கடனை திருப்பிச் செலுத்துதல், தேசிய செலவினங்களுக்கான வழிவகை காணுதல், வாழ்வின் தேவை களின் மீது மிகக்குறைந்த மதிப்புள்ள நாணயம் செலுத்தும் அதிகாரம் ஆகிய அனைத்தும் மதிப்பின் அளவையில் ஏற்படும் மாற்றங்களினால் ''பாதிப்புக்குள்ளாகின்றன''. இதற்குக் காரணம் ஒவ்வொரு ஒப்பந்தமும் இறுதியில் அது பொருள்களில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமாக இருந்தபோதிலும் கூட அது முக்கியமான மதிப்பில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமேயாகும். ஆகவே எடை, தகுதி அல்லது அளவின் அளவைகளில் நிரந்தரத்தன்மையைப் பராமரிப்பது போதுமானதல்ல. பொருள்கள் சம்பந்தமாக ஏற்படும் ஓர் ஒப்பந்தம் வகை செய்யப்பட்ட அளவைக்குத் துல்லியமாகவே இருக்கும், ஆனால் அது மதிப்புகளின் அளவைகளில் ஏற்படும் மாற்றங்

1. சி.எஃப். ஹாரிஸ், பணம் மற்றும் நாணயங்கள் பற்றிய ஒரு கட்டுரை, (பணத்தின் அபூர்வக் காலடிகளின் தொகுதி என்ற தமது நூலில் ஜே.ஆர். மாக் குலோச்சின், மறுபிரசுரம். பாகம். டு, அலகு II, பாரா 21: பாகம் II. பாரா 11, 13 மற்றும் 20).

2. சி.எஃப். 1844 மே 6 ஆம் தேதியிட்ட அவரது உரை, பாங்க் சாட்டர்டு ஆக்டின் மீதான காமன்ஸ் சபை விவாதங்களின் போது ஆற்றப்பட்டது. ஹன்சார்டு, தொகுதி XXXIV, பக். 20.

களின் காரணமாக மதிப்புகளின் ஏற்படும் ஒப்பந்தம் என்ற முறையில் அதன் பண்பு ஒருபோதும் கெடாதிருக்கக் கூடும். ஒரு முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் ஒவ்வொரு அரசாங்கத்தின் தோள்களின் மீதும் மதிப்புகளின் அளவையில் ஸ்திரத் தன்மையைப் பேணிக்காக்கும் தேவை சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சமுதாயம் அந்தஸ்திலிருந்து ஒப்பந்தத்திற்கு முன்னேறும்போது அதனுடைய முக்கியத்துவம் சச்சரவுகளுக்கப்பால் வளருகிறது. ஒப்பந்த அடிப்படையிலான சமுதாயத்தைப் பேணுதல் என்பது அப்போது மதிப்பின் மாறாத அளவையைப் பேணுவதற்கு ஒப்பானதாக மாறுகிறது.

எழுபதுகளில் தவறாக வழிநடத்திச் செல்லப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அழிக்க உதவிய, ஏதேனும் ஒரு வடிவத்தில் மதிப்பின் ஒரு பொதுவான அளவையை மாற்றியமைக்கும் பணியை வெகுகாலம் தாமதிக்க முடியாது என்பது கண்டறியப்பட்டது. அச்சட்டம் இயற்றப்பட்ட பின்னர் தொடர்ந்த விளைவுகள் நிலைமையைத் திருத்தாதிருக்க அனுமதிக்குமளவுக்கு மிகக் கடுமையானவையாக இருந்தன என்பதை ஏற்கெனவே முன்னர் விவரித்திருக்கிறேன். பெரும் சேதம் ஏற்படுவதற்கு முன்னரே மறுசீரமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்பது, தனது நாணய அமைப்புகள் முடிந்தால் ஒரு பொதுவான அளவுகோலின் மீது வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை வர்த்தக உறவுகளினால் இணைக்கப்பட்டிருக்கும் உலகம் காட்டுகிறது.

இயல் 4

தங்கத் திட்டத்திற்கு வழிகோலல்

நிலைப்பாடுள்ள நாணயமுறைச் சூழலை நிறுவ வேண்டுமெனில், பொதுவான மதிப்பிடும் நாணயமுறையை மீட்டமைக்க வேண்டும். இந்நோக்கம் மிகத்தெளிவானது என்பதுடன் அதனை எய்துதல் அத்துணை எளிய பணியல்ல வென்பதையும் அறிவோம். இக்குறிக்கோளை நடைமுறையில் செயல்படுத்த இருவேறு வழிகள் இருப்பதுபோன்று முதலில் தோன்றலாம். முதல்வழி பொதுவான உலோகம் ஒன்றைத் திட்ட நாணயமாக ஏற்றுக்கொள்ளுதல். உலகின் முக்கியமான நாடுகளெல்லாம் தங்கத் திட்டத்தையே ஏற்றுக் கொள்ள முற்பட்டுவிட்டதால், எஞ்சிய பிறநாடுகளும் வெள்ளித் திட்டத்தைக் கைவிட்டு, தங்கத்திட்டத்திற்கே மாறிவிடவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இரண்டாவது, மாற்றுவழியாவது, தங்க, வெள்ளித் திட்டங்களைக் கடைபிடித்துவரும் நாடுகளை முறையே அவரவர் நாணயத் திட்டங்களையே பின்பற்ற அனுமதித்து, இவ்விரு நாணயத் திட்டங்களுக்குமிடையே நிலையானதொரு நாணயமாற்று மதிப்பு விகிதத்தை நிறுவுவதன் வாயிலாக இரண்டு உலோகங் களையுமே பொது மதிப்பிடும் முறையாக ஏற்றுக்கொள்ளுதல்.

இவ்விரண்டு திட்டங்களையும் ஆதரிக்கும் இருவேறு இயக்கங்களின் வரலாறே, இந்திய நாணயத்திட்டத்தின் சீர்திருத் தத்தைக்கோரும் போராட்டத்தின் வரலாறாகும். தங்கத் திட்டத்தைப் புகுத்தக்கோரும் இயக்கமே முதலில் களமிறங்கியது. இதுகுறித்து அரசாங்கத்தின் 1868 ஆம் ஆண்டு அறிக்கையின் தோல்வி, ஒரு கொள்கையின் தோல்வியைக் குறிப்பதாகக் கருதலாமெனினும், தங்கநாணயத்திட்டத்தை ஆதரித்து அறுபதுகளில் இந்தியாவில் தொடங்கப்பட்ட இயக்கம் முழுமையாக அழிந்தொழிந்து விட்ட தாகக் கருதக்கூடாது. நான்காண்டுகளுக்குப் பின்னர், சர்.ஆர்.டெம்பிள் அவர்கள் நிதியமைச்சரானபோது, 1872, மே, 15 இல், நினைவூட் டறிக்கை ஒன்றின் வாயிலாகத் திட்டத்தை மீண்டும் செயல் நிலைக்குக் கொணர முற்பட்டமை, இயக்கம் தொடர்ந்து உயிர்ப் புடன் இருப்பதற்குச் சான்றாகும். 'முந்தைய நிதியமைச்சர்கள்,

பிரிட்டானிய சவரனையே இந்தியாவின் நாணயத்திட்டத்திற்கு அடிப்படையாக்க முயன்றனர்; ஆனால் சர்.டெம்பிள் இந்தியாவுக்கென்று தனியாக 'மொகரா' எனும் தங்க நாணயத்தை நிறுவ முயன்றார்.' என்பதே முக்கியமான வேறுபாடு. சவரனின் மதிப்பை இந்தியாவில் எவ்வாறு சரியாக நிர்ணயிப்பது என்பதில் திணற நேர்ந்த சூழ்நிலையில், இந்தியாவின் நாணயச்சாலைகள் நெடுங் காலமாக மொகராக்களையே வார்த்து வருகின்றன என்று தெரிந்ததும், முந்தைய நிதியமைச்சர்கள் ஏன் சவரனையே நாணயமாக நிறுவ முனைந்தார்கள் என்பது வியப்புக்குரிய புதிராகவேயுள்ளது. மேலும் மொகராவின் மதிப்பு சரியாக நிறுவப்பட்டுப் புழக்கத்திலும் இருந்து வந்தமையால் அதையே இந்திய நாணயத்தின் அடிப்படை அலகாக எளிதில் நிறுவியிருக்க முடியும். இருந்தும் அவர்கள் அம்முயற்சியை மேற்கொள்ளாமைக்கு, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்க வேண்டுமென அவர்கள் முனைந்திருந்தே காரணமெனக் கருதலாம். சவரனை இந்தியாவின் நாணயமாக நிறுவுதல் ஒரு நோக்கமெனில், உலகமுழுமைக்கும் ஒரே நாணயம் தேவை என்ற பரவலான கருத்து உருவாகிவரும் காலகட்டத்தில், சவரனை அந்நிலைக்கு முற்படுத்தவேண்டுமென்பதும் மற்றொரு நோக்கம் எனலாம். உலகப் பொதுநாணயமாக அறிமுகப்படுத்தவிரும்பும்போது சவரனோடு ஒப்புநோக்க மொகராவுக்கு வாய்ப்புகள் குறைவு என்றே கூறலாம். ஆனால் சர் ரிச்சர்டு டெம்பிள் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட காலகட்டத்தில், உலகப்பொது நாணயம் எனவொன்றை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் வேகமாகக் குறைந்து கொண்டிருந்தன. உலக நிலவரம் எப்படியிருப்பினும், உலகப் பொது நாணயத் திட்டம் குறித்து ஆங்கில அரசு நியமித்த ஹாலிபாக்ஸ் ஆணையத்தின் அறிக்கை, ஆங்கில சவரனின் நிலையில் எந்தவிதி மாற்றம் செய்வதற்கும் எதிரான கருத்துகளை வெளியிட்டிருந்தது. எனவே, சவரனின் பரவலான பயன்பாடு குறித்து கட்டுப்பாடுகள் ஏதுமின்றி, சர் டெம்பிள் அவர்களால் (இந்தியாவில்) சவரனுக்குப் பதிலாக மொகராவைப் பரிந்துரைக்க முடிந்தது.[1]

---

1. அவர் கூறியதாவது, ''10 ரூபா 4 அணாவுக்குச் சமமாக ஒரு சவரன் பயன்படுத்தப்படுவதை நான் எதிர்க்க மாட்டேன் . சவரனின் மதிப்பு 10 ரூபாய்க்குச் சற்று கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டால் , வெள்ளி நாணயத்துடன் மாற்றுவீதங்கள் நிர்ணயிப்பதில் இடர்ப்பாடுகள் வரலாம்; அதுவே இந்தியாவில் சவரனை நாணயமாகப் புழங்குவதற்குத் தடையாய் இருக்கும். இத்தடை அழுத்தமாக எடுத்துரைக்கப் பட்டால் இந்தியாவில் சவரனின் புழக்கத்தை வற்புறுத்த மாட்டேன். ஆனால் இப்போதைய மதிப்பீட்டில் நமது கருவூலங்களில் சவரனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.''

இதுகுறித்து அவர் எழுதியதாவது, ''நாம், பதினைந்து, பத்து, ஐந்து 2 ரூபாய்களுக்கான தங்க நாணயங்களைப் பயன்படுத்தி வருகிறோம்; அவற்றுக்கான தங்க, வெள்ளி மதிப்புகளைச் சரியாக நிறுவியிருப்பதாகவும் நம்புகிறோம்..... இந்நிலையில் அவற்றுக்கான ரூபாய் மதிப்புகளைச் சட்டபூர்வமாக நிறுவ வேண்டும்; ரூபாயைத் தர நாணயமாக அலகாக நிறுவி, இரட்டைச் செலவாணி திட்டம் நிலவும் மாற்ற இடைக்காலத்தை இயன்றவரை குறுக்க வேண்டும். சிறுதொகைகளுக்கு வெள்ளி நாணயங்களின் பயன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் சட்டபூர்வத்தர நாணயமாகத் தங்க நாணயமே நிறுவப்பட வேண்டும்.''

அவர் 120 குண்டுமணி தரத் தங்கம்(அஃதாவது) 110 குண்டு மணி சுத்தத் தங்கம்) 10 ரூபாய்க்குச் சமமாக நிறுவப்படலாமென முன் மொழிந்தார்.[1] ஆனால் சர் சார்லஸ் திரெவிலியன்[2] அவர்களின் வறட்டுப் பிடிவாதம் அவரிடம் இல்லை. இந்தியாவில் தங்க நாணயம் நிறுவப்படவேண்டும் என்பதற்காக தங்கத்திற்குச் சாதகமான மாற்றுவிகிதத்தை நிறுவவும் அவர் ஆயத்தமாக இருந்தார். நாணயமாற்று விகிதத்தைப் பற்றி அவர் குறிப்பிடுவதாவது:

> ''இதை இந்திய அரசினால் நிர்ணயிக்க முடியும். தங்க நாணயத்தை நிறுவ முனையும் ஒவ்வொரு நாடும் தாமே இவ்விகிதங்களை நிறுவுகின்றன. இது முக்கியமான சிக்கல் என்பது மெய்யே. ஆனால் தீர்வு காணமுடியாத சிக்கல் என்பது மெய்யே. ஆனால் தீர்வு காணமுடியாத சிக்கலன்று; தீர்வு காணப்பட வேண்டிய சிக்கல்.''

முதன் முதலாகத் தங்க நாணயம் குறித்த முன்மொழிவு பற்றிச் சுருக்கமாகக் கண்டோம்; வெள்ளியின் விலைமதிப்பு சரியத் தொடங்குவதற்கு முன்னரே கொண்டு வரப்பட்ட முன்மொழிவு ஆதலால் இதனை வெள்ளி விலைச் சரிவின் விளைவுகளுக்கு ஈடு செய்யக் கொண்டுவரப்பட்ட திட்டமெனக் கருதுவதைவிட, முந்தைய கோட்பாடுகளின் முற்றுவிளைவு என்று கருதுவதே சரியாகும். அது இத்திட்டத்தின் தலையாய வலிமையெனலாம். வெள்ளி நாணயம் சரிந்து வீழ்ந்தபின் அதைத்தூக்கி நிறுத்துவதற்கான முயற்சிகளில் ஆற்றலை விரயப்படுத்துவதை விட, அதைத் தவிர்க்கும்

நல்ல திட்டமாக இது அமைந்தது. எனினும், வெள்ளிவிலை சரியப் போகும் அறிகுறிகள் ஏற்கனவே தோன்றியிருந்தன; அரசும் அதனை நன்கறிந்திருக்கிறது; வாணிகத் துறையில் இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்தே வெள்ளி நாணயத்தின் ஏற்புடைமை அருகில் கொண்டு வந்தது[1] ஆனால் இச்சரிவின் விளைவுகளுக்கு ஈடுசெய்யும் திட்டம் என்ன காரணங்களுக்காகவோ, கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இந்தியாவின் நாணயச்சாலைத் தலைவர் (Mint Master) கர்னல். ஜே.டி. சுமித் அவர்கள் தங்கநாணயத்தைப் புகுத்துதற்கான இரண்டாவது திட்டத்தை உருவாக்கினார். அவரது திட்டம் வெள்ளி மாற்றுவீத சரிவின் விளைவுகளை ஈடுகட்டும் முயற்சியே என்பது தெளிவு.[2] வெள்ளியும் இந்திய நாணயமாற்றும் என்ற குறிப்பறிக்கையின்[3] முதல் கட்டுரையில் அவரது திட்டம் விவரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தை அவரது சொற்களாலேயே விவரிப்பதை நோக்குவோம்:

> ''6. இந்திய நாணயத்தின் மாற்றுமதிப்பை (அதன் சரிவிலிருந்து) இயல்நிலைக்கு மீட்டாக்கும் குறிக்கோளை எய்துவதிலுள்ள இடர்பாடுகள் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட இப்போது கூடுதலாகியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. சரிவு ஏற்கனவே உறுதியாக நிகழ்ந்து விட்டதானாலேயே இந்நிலை; என்றாலும் உறுதியான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுப்பதன் மூலம் இச்சரிவைத் தடுத்து இயல்நிலைக்கு மீட்க இன்னமும் போதிய வாய்ப்புகள் உள்ளன என்று நம்பலாம். அதனை எவ்வித

---

1. இத்திட்ட முன்மொழிவின்போது, இந்திய வைசிராயாக இருந்த நார்த்புரூக் பிரபு, பன்னாட்டு வணிக ஆணையத்தின் முன்பாக (I.C.C.1898) சாட்சியமளிக்கும்போது (வினா. 8447க்கு) அச்சமயத்தில் தங்கத்தின் மதிப்பு ஏறுமுகமாயிருந்தமையால், தங்க நாணயத்திட்டத்தைத் தம்மால் செயல்படுத்த இயலவில்லையென்று கூறியுள்ளார். வரலாற்றுநோக்கில் இது உண்மையாயிருக்க வேண்டுமெனில் (உண்மையில்லை யென்பதே சரி) திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னரே அரசிடம் தரப்பட்டுக் கிடப்பில் போடப்பட்டிருக்க வேண்டும்.

2. அவர் அறுபதுகளில் (1860) உலக நாணயத்திட்டம் தங்க நாணயத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் சவரனே தர நாணய அலகாக ஏற்கப்பட வேண்டும் என்றும் போராட்டங்களில் ஈடுபட்டவர். அப்போது உலகெங்கும் ஒரே நாணயத் திட்டம் எனும் கருத்தின் ஆதரவாளராயிருந்தார். அவரது 'இந்தியாவுக்குத் தங்கநாணயமும், பிரிட்டிஷ் சவரனைத் தர நாணயமாக்குவதற்கான நடவடிக்கைகளும் பற்றிய குறிப்புகள்'' (இலண்டன் 1868) காண்க.

3. இலண்டன், எட்டிங்காம் வில்சன் 1876.

அதிர்ச்சியோ குழப்பமோ இன்றியே சாதித்தலும் கூடும். தனியார் கணக்குகளில் வெள்ளி நாணயப் பயன்பாட்டை நிறுத்துதலும், அதேசமயம் வெளிநாட்டு வெள்ளி நாண யங்களின் புழக்கத்தையும் ஏற்றுமதியையும் குறைப்பதற்கான நடவடிக்கைள் எடுத்தலும், தங்க நாணயங்களை ஏற்பதற்கான நாணயச்சாலைகளைத் திறத்தலுமே தேவையான உடனடி நடவடிக்கைகள்.

''7. இத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என விளக்குமுகத்தான் நான் கூற முனைவதாவது

''8. இந்தியப் பேரரசின் உள்நாட்டு வணிகம் அதிகரித்துள்ளது; தொடர்ந்து அதிகரித்துவருகிறது.....

''9. காரணம் எதுவாயிருப்பினும், இந்நூற்றாண்டின் (19ஆம்) தொடக்கத்திலிருந்தே, இந்தியாவில் உள்நாட்டு வணிகம் தொடர்ந்து பெருகிவந்துள்ளதன் விளைவாகத் தொடர்ந்து நாணயப்புழக்கத்தின் தேவை கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக ஐந்து மில்லியன் பவுன்- ஸ்டெர்லிங் அளவுக்குப் பெருகி வந்துள்ளது. இஃதன்றியும், அயல்நாட்டு வணிகத்திலும் ஏற்றுமதி போக எச்ச இறக்குமதி மதிப்பும் ஆண்டொன்றுக்குச் சராசரியாக இரண்டரை பில்லியன் பவுன்-ஸ்டெர்லிங் அளவுக்குக் குறிப்பாகக் கடந்த இருபதாண்டுகளில் ஆண்டுக்கு 4 மில்லியன் பவுன்- ஸ்டெர்லிங் அளவுக்கு மேலாக இருந்து வருகிறது.

''10. இச்சூழ்நிலையின் விளைவாக, ரூபாய் நாணய உற்பத்தி நிறுத்தப்படுமெனில் சரக்குஉற்பத்திக்கு எஞ்சியும் எஞ்சிய நாணயமதிப்பு கூடும்; 1870 ஆம் ஆண்டுக்கு முந்தைய 15 ஆண்டுகளாக நிலவிவந்த ரூபாய்- பவுன் மாற்றுமதிப்பு, ஒரு பவுனுக்கு 10 ரூபாய் என்ற விகிதத்திற்குத் திரும்ப மாறி நிலைபெறும், அதன் தொடர் விளைவாக ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் ஸ்டெர்லிங் அளவுக்குத் தங்க நாணயப் புழக்கம் பெருகி, நிலைக்கும்.''

13. ஆகவே, தகுந்த முன்னறிவிப்பு தந்து, தனியார் பயன்பாட்டுக்கான வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்படுவதுடன் அதை வலியுறுத்தும் 1870 ஆம் ஆண்டுச்சட்டவிதி 23 விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டமையால் வெள்ளி நாணயங்களின் உற்பத்தியை நிறுத்தி வைக்கவேண்டுமென்பதும் நமது முன்மொழிவுகளாகும்;

கொள்வதும் அவசியமாகும். மேலும் அரசு தங்கத்தை நாணயச் சாலை விலையான, அவுன்சுக்கு 38 ரூபாய் 1/4 அணா என்ற விலையில் வாங்கி 38 ரூபாய் 15 அணா மதிப்புக்கு) ஐந்து, பத்து ரூபாய் நாணயங்களாக ஏற்க அறிவிப்பதுடன் தற்போதைய வெள்ளி நாணயங்களும் ஏற்கப் படுமென்றும் அறிவிக்கலாம்.[1]

வெள்ளி கணிசமாக வீழ்ச்சியடையும் தருணத்தில் முன் வைக்கப்பட்ட சுமித் திட்டத்திற்குப் பெருமளவில் வரவேற்பு கிட்டியது. 1876 ஜூலை 15 இல் வங்காள வணிகசபை ''அரசு நாணயச் சாலைகள் வெள்ளி நாணயங்களை ஏற்றுக் கொள்வதைக் கட்டாய மாக்கும் 1870 ஆம் ஆண்டு சட்டம் XXIII இன் 19வது பிரிவையும், அரசின் நாணயத்துறை வெள்ளிநாணயங்களுக்கு ஈடான நாணயத் தாள்கள் வெளியிடுவதைக் கட்டாயமாக்கும் 1871 ஆம் ஆண்டுச் சட்டம் III இன் பகுதி, 2 பிரிவு (ஆ) வையும் தற்காலிகமாக விலக்கிக் கொள்வதுடன், பிறநாட்டுத் துறைமுகங்கள் வழியாகக் கூட ரூபாய் நாணய இறக்குமதிக்கும் தடை விதிக்க வேண்டும்'' எனவும் தீர்மானம் இயற்றி வணிகர் சமூகத்தின் ஆதரவினை வெளிப்படுத் தியது. இதேபோன்ற உணர்வினைக் கல்கத்தா தொழில்சபையும் வெளிக்காட்டியது. இதே தருணத்தில் நாணய மாற்றுவீத வீழ்ச்சி இந்திய அரசின் நிதிநிலையின் மீதும் தாக்கத்தை விளைவிக்கத் தொடங்கிவிட்டமையால், 1876-77 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையில் சர் வில்லியம் மூர் குறிப்பிடுகிறார்:

''திடீரென வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடையத் தொடங்கிய தாலும், அதன் விளைவாக அரசுச் செலவினங்கள் கூடி அதைச் சரிகட்ட ஆண்டுதோறும் இங்கிலாந்திலிருந்து 15 மில்லியன் ஸ்டெர் லிங்குகள் அளவுக்குக் கோரவேண்டியிருப்பதாலும் நமது வருங் காலத்தின் மீது கடுமையான நிழல்மூட்டம் சூழ்ந்துள்ள தென்பதில் ஐயமில்லை. இந்நிகழ்வுக்கான காரணங்கள் எவை யாயிருப்பினும் அதன் விளைவுகள் இந்தியாவின் நிதிநிலைக்குக் கடுமையான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளன என்பது தெளிவு. இப்போது அரசு நிதிக்கு விளைந்துள்ள இழப்பைவிடப் போர், பஞ்ச, வறட்சிக் காலங்களில் மிகுந்த இழப்புகள் நிகழ்ந்த துண்டெனினும், அவை தற்காலிகமாகத் தோன்றி விரைவில்

1. 1876இல் 1 உருபாவின் மதிப்பு 1 ஷில்லிங் 9.645 பென்னிகளாக இருந்ததை 2 ஷில்லிங் ஆக்குதற்கு இம்மதிப்பீடு அறிவிக்கப்பட்டது. இது தங்கத்திற்குச் சற்று கூடுதல் மதிப்பைத் தந்திருக்க வேண்டும். ஆனால் வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்பட்டமையால், தங்கத்தின் மதிப்பு ஏறி மீண்டும் இறங்கி விட்டது.

மறையக்கூடியவை; அவற்றால் இழப்பும் குறைவு; அவற்றின் பின்னடைவுகளை அரசின் தக்க நடவடிக்கைள் மூலம் விரைந்து ஈடுகட்டிவிடமுடியும். ஆனால் இன்று நம்மை அச்சுறுத்தும் நாணய வீழ்ச்சி அத்தகையதன்று; அதன் உடனடி விளைவுகளால் கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்கு கிறோம்... ஆனால் இதன் முடிவு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பது புரியாத புதிராய் விளங்குவதால், நமது வருங்காலம் பெரிய கேள்விக் குறியாக அச்சுறுத்துகிறது. ''[1]

இத்தகைய கடுமையான சூழ்நிலையில், மற்றவர்களைக் காப்பதற்கென்றில்லாவிட்டாலும் தன்னைக் காத்துக்கொள்ளுதற் பொருட்டாக எதிர்ப்பார்ப்பதே இயல்பு. மாறாக, உடனடி நட வடிக்கைகள் ஏதுமில்லை யென்பதுடன், தொடர்பில்லாத பொது மேலாளர் போன்று, வங்காள வணிகசபை தீர்மானம் நிறைவேற்றிய பிறகும் அரசு மெத்தனமாகவே செயல்பட்டது. இந்திய நாணயச் சாலைகள் தங்க நாணயங்களை வார்க்கத் தொடங்க வேண்டு மென்ற ஆலோசனை இல்லாமை வணிகசபைத் தீர்மானத்தின் குறையே. அரசு இக்குறையைச் சுட்டிக்காட்டுவதில் முனைப் பாயிருந்தது. அப்படியே வணிகசபை தீர்மானம் நிறைவேற்றி யிருந்தால்,

> ''அப்படியொரு பரிந்துரை தீர்மானத்தில் இருந்திருப்பின், தீர்மானத்தை நிராகரிப்புக்களாக்கும் தடைகளைத் தவிர்த்திருக் கலாம். ஒரு உலோகத்தின் நாணய உற்பத்தியைத் தற்காலிகமாக முடக்குவதின் மூலம் அவற்றைச் சட்டபூர்வமான தகுதியை இழக்கும். மாற்றாக வேறொரு உலோகத்தில் நாணய உற்பத்தி யைத் தொடங்காமல் இருப்பதின் மூலம் அவற்றின் சட்ட பூர்வமான தகுதியைப் பெறுவதில் தடையாயிருக்கும்.

இது அரசின் மெய்யான நோக்கமெனில், அத்தகைய பரிந் துரையையும் உள்ளடக்கி கர்னல் சுமித் திட்டத்தையும் அரசு ஏற்காதது ஏன்? அத்திட்டத்தில் அரசு சுட்டும் குறைகள் ஏதும் இல்லையன்றோ? மெய்யான காரணம் என்னவெனில், நாணயக்குழப்பங்களுக்கு அரசு வேறு காரணங்கள் உண்டென்ற முடிவுக்கு வந்ததுதான். மதிப்பு வாய்ந்த உலோகங்களின் மதிப்புச் சமனிலை குழப்பம் பல்வகைப் பட்ட வெவ்வேறு காரணங்கள் பலவற்றால் நிகழ்ந்ததாக அரசு

கருதியது[1]. அவை 1. தங்கத்தின் மதிப்பு நிலையாக இருத்தப்பட்டதால் வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. 2. வெள்ளியின் மதிப்பு நிலையாக இருப்பதால் தங்கத்தின் மதிப்பு உயர்ந்தது. 3. தங்கத்தின் மதிப்பு உயர்ந்திருப்பதால் வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந் துள்ளது. 4. தங்கம், வெள்ளி இரண்டன் மதிப்புமே உயர்ந்துதான் உள்ளன; ஆனால் வெள்ளியின் மதிப்பு உயர்ந்ததைவிட மிகுதியான அளவில் தங்கத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. 5. தங்கம், வெள்ளி இரண்டுமே மதிப்பில் வீழ்ந்துள்ளன; ஆனால் தங்கத்தின் மதிப்பின் வீழ்ச்சியை விட வெள்ளியின் வீழ்ச்சி மிகுதியானது என்பனவாம். இவற்றுள் அரசு தர்க்கநியாயம் எதையும் காட்டுதற்குப் பதிலாகச் சிந்தனை வறண்ட வெற்றுரைகளையே தந்துள்ளதெனக் காணலாம். நாணயச் சீர்திருத்தத்தைப் பரிந்துரைப்போர்க்கு அரசு விடுத்த எச்சரிக்கையாவது:

> ''பரிந்துரைககப்படும் தீர்வுகளின் தன்மையை நோக்கினால், தங்கத்தின் மதிப்பு உயர்வதால் ஏற்படும் பிறழ்ச்சிகளுக்கான தீர்வுகளின்றும், வெள்ளியின் மதிப்பு வீழ்வால் ஏற்படும் பிறழ்ச்சிகளுக்கான தீர்வுகள் வேறுபட்டிருக்கும்.''[2]

மேற்குறிப்பிட்ட சாத்தியக்கூறுகளில் , ''1872 ஆம் ஆண்டு மார்ச்சு தொடங்கித் தங்கத்தின் மதிப்பு உயர்ந்து வருவதே நிரூபிக்கப் பட்ட காரணம் ஆகும்.''[3] எனவே சீர்திருத்தம் எதையும் செய்ய வேண்டுமென்றால் தங்கத் திட்டம் நடைமுறையில் உள்ள நாடு களே செய்யவியலும். இத்தகைய சூழ்நிலையில், இந்தியஅரசு, பழிப்புகள் எதற்கும் ஆளாகாமலேயே, அவசரகதியில் செலாவணி சீர்திருத்தத்தைப் புகுத்தமுற்பட்டிருக்கலாம். ஆனால் உணர்ச்சி வேகத்தில் அவசரமுடிவுகள் எதையும் எடுப்பதைத் தவிர்த்தது அரசு; இதனை அரசின் அலட்சியபபோக்காகக் கருதவேண்டியதில்லை. மாறாக 1876 அக்டோபர் 13இல் அரசுச் செயலருக்கு அனுப்பிய அறிக்கையில் சுட்டிக்காட்டியதுபோன்று, நிதானித்து முடிவெடுக்கும் எச்சரிக்கைப் பண்பாகவே கருதிப் பாராட்டவேண்டும். ஆனால் இந்திய அரசின் மெத்தனப்போக்கை அத்தகைய பாராட்டுக்குரிய

---

1. வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சி குறித்து 1876 செப்டம்பர் 22 ஆம் தேதி அரசுத் தீர்மானத்தினை நோக்குக.
(மக்கள் சபை அறிக்கை 449 (1893), பத்தி. 6)

2. 1893 ஆம் ஆண்டின் மக்களவை அறிக்கை 449.

3. அதே அறிக்கை: பத்தி 6.

தாகக் கருதுதற்கில்லை. 'தங்கத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது; ஆனால் வெள்ளியின் மதிப்பு தாழவில்லை' என்றும் கூற்று சரியாயிருக்க முடியுமா என்றும் ஆய்வை தர்க்கவாதிகளே செய்து முடிவு காண விட்டு விடுவோம். ஆனால் வெள்ளி திட்டத்தைப் பின்பற்றும் நாடொன்று, தங்கத்தின் விலைதானே ஏறியிருக்கிறது எனக்கூறிய செலாவணித்திட்டத்தில் சீர்திருத்தம் செய்ய மறுத்துவருதல் பிழை யுத்தி என்பதில் ஐயமில்லை. போர்ப்படை விவகாரங்களில் ஒரு குறிப்பிட்டநிலையைச் சார்ந்திருத்தல் என்பதற்குப் அர்த்தமிருக் கலாம்; ஆனால் செலாவணி விவகாரங்களில் அப்படியிருக்க இயலாது. ஏனெனில் படையைப் பொருத்தமட்டில் ஒருவரின் வலிமைக்குறைவே மாற்றாரின் வலிமையாயிருக்கலாம். ஆனால் செலாவணித் திட்டத்தின் ஒருநாட்டின் வீழ்ச்சி அனைவரின் வீழ்ச் சிக்கும் வழிகோலும். எனவே, தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பினைத் தட்டிக் கழித்து வரும் இந்திய அரசின் போக்கை, பேரா.நிக்கல்சன்[1] அவர்களின் வார்த்தைகளில், 'நான் இருக்கும் அறையில் துளைகள் ஏதும் இல்லையாதலால், கப்பல் முழுக வாய்ப்பில்லை' என்று நிம்மதியாய் உறங்கச் சென்ற கப்பல் பயணியோடுதான் ஒப்பிட முடியும்.''

செயலின்மைப்போக்கின் அறிவீனம் இந்திய அரசுக்கு விரை விலேயே உணர்த்தப்பட்டது. 1876 இல் அரசு எடுத்த நிலையை இரண்டாண்டுகளுக்குள்ளாகவே மீட்டாய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. 1878, நவம்பர் 9 ஆம் தேதியில் அறிக்கையொன் றில்[2] இந்திய அரசு குறிப்பிடப்பட்டதாவது:

''5. இடர்ப்பாடுகள் பல நிரம்பிய இத்துறையில் விரைவில் தீர்வு காண வழியேதும் தோன்றாத நிலையில் இக்கடுமையான சிக்கலின் தீர்வைநோக்கிய இறுதி முடிவு எடுப்பதில் பொறுத் திருந்து போக்கினை ஊன்றிநோக்கி நிதானம் காட்டுவதே அறி வுடைமையாகும். 1877 ஆம் ஆண்டில் வெள்ளியின் மதிப்பு, 1876 ஜூலையில் இருந்த மதிப்புக்கே மீண்டும் உயர்வடைத்திருப்பது, அரசின் போக்கு சரியே என மெய்யப்பிக்கிறது; நாம் எடுக்கும் முக்கிய முடிவுகளால் உள்நாட்டுப் பணவரவுகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படக்கூடும் என்பதையும் சுட்டுவதாகக் கருதலாம்.

★ ★ ★

''21. கடந்த சில ஆண்டுகளாக வெள்ளியில் மதிப்பில் நிலையற்ற தன்மை இருந்துவருவதாலும் அதனால் விளைந்த நாணயமாற்றுக் குழறுபடிகளாலும் அரசுக்குத் தொடர்ந்து நிதி நிலை நெருக்கடி நிலவிவந்துள்ளது. இதே காரணங்களால் உள்நாட்டு வணிகச்செயல்பாடுகளிலும், இந்தியாவில் அயல் நாட்டு முதலீடுகளை வரவழைப்பதிலும் கடுமையான பாதிப்பு கள் விளைந்துள்ளன வென்பதிலும் ஐயமில்லை.

''23. நடப்பில் உள்ள செலாவணிச்சட்டத்தை நிலைநிறுத்து வதிலுள்ள இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் அரசு எடுத்துரைத்திருப்பது மிகையான கூற்றன்று. எதிர்ப்புகளோ முடக்கும் இடர்ப்பாடுகளோ இல்லாத நடைமுறைத் தீர்வு ஒன்றை எய்த முடியுமா என்பதை ஆராய்ந்து நோக்க வேண்டி யுள்ளது. இந்தியாவின் செலாவணி முறையைத் தற்போது நிருவகிப்பது எவ்வளவு சுமையானபொறுப்பு என்பதை அரசு உணர்ந்துள்ளது; அதேசமயம் அவசரப்பட்டு முடிவேதும் எடுக் காமலிருப்பதும் பொறுப்பு வாய்ந்த செயல்பாடுதான் என்பது தெளிவு. சட்டத்தை மாற்றி னாலும், மாற்றாமல் அப்படியே விட்டுவிட்டாலும் விளைவு களுக்கு அரசே பொறுப்பு என்பதால் இக்கடுமையான சிக்கலை நாம் எதிர்கொண்டே ஆகவேண்டும்.

''24. அரசின் நேரடி நடவடிக்கை மூலம், தங்கத் திட்டத் தைச் செயல்படுத்தி, வெள்ளிக்கு மாற்று செலவாணியாக தங்கத் தைப் புழங்கவிட்டு நிலையான மாற்றுவீதத்தை எய்துதல் நடை முறையில் இயலாததொன்று என்பதைக் கடந்த அக்டோபர் மாத அரசு அறிக்கை தெளிவாகக் காட்டுகிறது; எனவே இத்திட்டத்தில் மேலும் கவனம் செலுத்தத் தேவையில்லை. அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று ரூபாய் நாணயத்தில் எடை யைக கூட்டும் பரிந்துரையும், நமது கவனத்திற்கேற்றதன்று; அதனால் வருங்காலத்தில் பாதுகாப்புக்கு உறுதிப்பாடு ஏதும் கிடையாது என்பதுடன், நமது முக்கியநோக்கம் நிறைவேற்றப் படாமல் பெருத்த வீண்செலவே விளைவாக இருக்கும். மாறாக, முதன்முதலாக வெள்ளி நாணய உற்பத்தியைக் குறைக்கலா மென்று கூறப்பட்டு இந்திய அரசினால் 1876 இல் மறுதலிக்கப் பட்ட பரிந்துரையை இப்போது கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது அவசியமாகிறது.

''25. வெள்ளியின் எடைக்கு ஈடான நாணயங்களைப் பெற மக்களுக்கு அளிக்கப்படும் உரிமையை விலக்குவதற்கும், வெள்ளி

நாணய உற்பத்தியைச் சிறிதுகாலத்திற்குக் குறைக்கவோ விலக்கவோ வழிசெய்யும் வகையில் நாணயச் சட்டம் திருத்தப் படவேண்டும் என்பதே பரிந்துரையின் மையக்கருத்தாகும்.

''26. ரூபாயின் மதிப்புக்கு ஈடாகத் தங்கமாக பரிமாற்றம் செய்தலைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அரசு எடுத்துக் கொண்டு தங்க, வெள்ளி உலோகங்களில் விலைமதிப்புகளில் ஏற்ற இறக்கங் கங்களைப் பொருட்படுத்தாமல் ஸ்டெர்லிங்-ரூபாய் நாணயங் களுக்கிடையே நிலையான மாற்றுவீதத்தை நிறுவவேண்டுமென்பதும் திட்டத்தின் முக்கியமான கூறு ஆகும்.

'' 27. ஒரு ரூபாயின் மதிப்பு 2 ஷில்லிங் என்றோ, அதற்குச் சற்று கூடுதலாக என்றோ, குறைவாக என்றோ ஏதும் குறிப்பிட் படாமல் நிலையான மாற்றுவீதம் இருக்கவேண்டும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதும் திட்டத்தின் முக்கியமான கூறு ஆகும்.

''33. தங்க நாணயப்புழக்கத்தை, அதைச்சட்டபூர்வ நாணய மாக ஏற்காமலேயே, சிறுஅளவில் சுருக்கிக்கொண்டு, வெள்ளி-நாணயங்களையே நாட்டின் திட்டமாக நிலைநிறுத்துதல் நடை முறையின் இயலுமா .. என்பதே நம்மை எதிர்நோக்கும் முக்கிய வினாவாகும். இந்திய அரசு, அதன் 1876 ஆம் ஆண்டின் அறிக்கை யில் இத்திட்டத்திற்கு எதிரான கருத்தையே தெரிவித்திருந்தது..... மீண்டும் முழுமையாக எண்ணிப்பார்க்கையில் அத்திட்டம் நடைமுறையில் செயல்படுத்தத்தக்கதேயென்றும் அதனால் இடர்ப்பாடுகள் ஏதும் தோன்றா என்றும் கருதுகிறோம். இங்கு நிலவுவதைப் போன்ற நிலைமை வேறெந்த நாட்டிலும் தோன்றியதில்லையென்பது உண்மையே. ஆனால் அத்தகைய நாடுகள் பலவற்றில் மாற்ற முடியாத செலாவணி புழக்கத்தில் இருத்தலும், இருந்து வந்திருத் தலையும் நோக்கலாம். உண்மை மதிப்பில்லாத காகித செலாவணிக் கொண்டே, உள்நாட்டு நாணயமாற்று மதிப்புகளை உலோக நாணயங்களைக் கொண்டு பேணுதல் போன்றே, பேண இயலு மென்பதைக் காண்கிறோம். அவை அளவுக்கு மீறி உற்பத்தியாகாமலிருத்தல் மட்டுமே அவசியம்.

''37. பிரிட்டிஷ் ஷில்லிங், பிரான்சின் 5 பிராங்கு நாணயம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டுகளிலிருந்து, நாணயத்தின் பொருள்

தருமென்றோ கருதுதற் கில்லையென அறிகிறோம். எனவே ரூபாய் நாணயத்தைத் தற்போதைய எடையிலேயே வார்த்து, அதை இரண்டு ஷில்லிங்குக்குச் சமமாகப் புழங்கவிடடு, சிறுபகுதி தங்க நாணயங்களையும் புழக்கத்தில் விட்டு, தங்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடுகள் ஏதுமிருக்க வாய்ப்புகள் இல்லையெனலாம்.

★ ★ ★

''46. இவ்வாறாக இந்தியாவில் வெள்ளி செலாவணியின் புழக்கத்தைத் தொடர்ந்து இருத்திக்கொண்டே, தங்கத் திட்டத்தைச் செயல்படுத்தினால், சமுதாய நலனுக்கு ஊறுகளோ, எதிர்காலப் பாதிப்புகளோ ஏதும்? இப்போதைய செலாவணித் திட்டத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலமே வருங் காலத்தில் நம்மை எதிர்நோக்கும் கடுமையான இடர்களிலிருந்து இயலுமென நம்புகிறோம். எனவே, இத்தகைய செலவாணி மாற்றுத் திட்டத்தை உடனடியாய்ச் செயல்படுத்த மாண்புநிறை பேரரசியாரின் அரசுக்குப் பரிந்துரைக்க விரும்புகிறோம்; மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைளைப் பற்றி விளக்கவும் ஆயத்தமாயுள்ளோம்.

★ ★ ★

''50. இந்தியாவின் மீது தங்கத்திட்டத்தைத் திணிப்பதோ, வெள்ளிசெலாவணியை அகற்றுவதோ எமது திட்டத்தின் நோக்கம் அல்ல என்பதை மனதில் கொள்ளவேண்டும். மாறாகத் தங்கத் திட்டத்திற்குக் குந்தகம் ஏற்படாத வகையில் அத்தகைய விளைவோ, விளைவைநோக்கிய சரிவோ நிகழாமல் தடுப்பதே திட்டத்தின் நோக்கம். எனவேதான், தங்க நாணயங்களை இந்தியாவில் புகுத்து வதற்கான வசதிகளை உருவாக்கும் அதேசமயத்தில் அவற்றைச் சட்டபூர்வமான நாணயங்களாக அறிவிக்கப்போவதில்லையென்றும் முடிவுசெய்துள்ளோம். மேலும் வெள்ளிநாணயங்களின் உற்பத்தி அளவைக் குறைப்பதில்லை எனும் முடிவுடன் தங்கத்தைவிட மேம்பட்ட நிலை வெள்ளிக்குக் கிடைக்காத வகையில் அதைச் செயல்படுத்தவும் முடிவு செய்துள்ளோம்.

''51. நாம் அடைய விரும்பும் குறிக்கோள் இவையே: முதலாவதாக, இந்திய அரசுக்குச் சேரவேண்டிய தொகைகளை, அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் நாணயமாற்று வீதங்களில் பிரிட்டிஷ் அல்லது பிரிட்டிஷ் இந்திய தங்க நாணயங்களாகப் பெறும்

அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, காலப்போக்கில் படிப்படியாக, பவுன்-ஸ்டெர்லிங்-ரூபாய் மாற்றுவீதத்தை ஒரு ரூபாய்க்கு இரணடு ஷில்லிங் என நிலைப்படுத்த விரும்புகிறோம். அதேசமயத்தில் வெள்ளியை இறக்குமதி செய்யமுனைவோர்க்கு, வெள்ளியின் விலையும் வெள்ளி நாணயங்களின் மதிப்பும் மேற்குறிப்பிட்ட வீதத்தில் சமமாக இருக்குமாறு வெள்ளிநாணய உற்பத்தி கட்டுப்படுத்தப் படும். இதன் மூலம் நாட்டின் தேவைக்கேற்ப தங்க நாணய வீதத்தில் வெள்ளிநாணயங்கள் மதிப்பு தானாகவே புழக்கத்தில் நிலை பெறஇயலும்; அத்துடன் வசதியான அளவில் தங்க நாணயங்களையும் புகுத்துவதற்கு ஓரளவு வாய்ப்புகளும் உருவாகும்.''

இந்திய அரசு செயல்படுத்த விரும்பிய திட்டத்தின் சாரத்தினை மேலே கண்டோம். சுமித் அவர்களது திட்டம் எளிமை, சிக்கனம், பாதுகாப்பு ஆகிய நலன்களை அடக்கியிருந்தபோதிலும், அத்திட்டத்தைச் செயல்படுத்த, உலகெங்கும் அருகிவரும் தங்கத்தின் இருப்பிலிருந்து இந்தியாவுக்குக் கணிசமாகத் தேவைப்படும் தங்கத்தைப் பெறுவதில் இடர்ப்பாடுகளைக் கருதியே அத்திட்டம் ஏற்கப்படவில்லை. அன்றைய காலகட்டத்தில், உலகெங்கும் தங்கத்தினைப்பெற முண்டியடித்துக் கொண்டிருந்த சூழலில், இந்தியாவும் தனது தங்கத்தின் தேவையைக் கூடுதலாக்குதல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் எடுக்கப்பட்ட இம்முடிவு சரியானதே. எனவே, (சுமித் முன்மொழிவுப்படி) முழுமையான வடிவில் தங்கநாணயத்திட்டம் புகுத்தப்பட்டிருப்பின், தோல்வியையே தழுவியிருப்போம். அரசு முன்மொழிந்ததுபோன்று சிறுஅளவில் தங்கக்காசுகளைப் புகுத்தும் திட்டத்திற்குத்தான் ஓரளவு வெற்றிவாய்ப்பு இருந்தது. ஆனால், அரசுத்துறையமைச்சரும் நிதியமைச்சரும் கூட்டாக நியமித்த குழுவின்[1] ஆய்வறிக்கை இந்தச் சிறு வாய்ப்பையும் போக்கடிக்கும் வகையில் அமைந்தது. குழுவின் உறுப்பினர்கள், திட்ட முன்மொழிவுகளைப் பேரரசுக்குப் பரிந்துரைக்க இயலாதென ஒருமித்த கருத்து தெரிவித்தனர்.[2] திட்டத்தை ஏற்கமறுப்பதற்கான காரணங்கள் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. குழுவின் அறிக்கை பொதுஆவணமாகவே வெளியாகியபோதிலும் குழுவிவாதங்கள் மறைவாகவே வைக்கப்பட்டன. அவற்றை எவரும் அறியமுற்படுதல் கடுமையாகவும் உறுதியாகவும் தடுக்கப்பட்டது. அரைநூற்றாண்டுக்காலம் கடந்த

1. குழுவில் இடம் பெற்றவர்கள்: லூயில் மாலெட், எட்வர்ட் ஸ்டான்ஹோப், டி.எல்.செக் [illegible] எர்ஃபோர்ட் [illegible] ஜி.ஜெ. பால்ஃபோர்

பின்னரும் அவை இன்னும் கமுக்கமாகவே வைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் விளங்கவில்லை. ஆனால், குழு உறுப்பினர்களில் ஒருவரான சர் இராபர்ட் கிப்பன், 1898 இல் இந்திய செலாவணிக்குழுவின் முன்பு சாட்சியம் அளித்த விவரங்களிலிருந்து,[1] இந்தக் கமுக்க ஆவணத்தின் உள்ளுறையை ஓரளவு ஊகித்தறிய முடிகிறது. இந்திய செலாவணிமுறையைச் செயற்கையாகத் தூக்கி நிறுத்த அரசுமுனைவதாகக் கருதியே குழு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்திருப்பதாகத் தோன்றுகிறது. குழு தனது கருத்தை வெளியிட்ட காலகட்டத்தில், அத்தகைய திட்டத்திற்குப் பரவலான எதிர்ப்பு நிலவியது உண்மையே. நாணயமுறைத்துறையில் புகழ்பெற்ற அன்றைய எழுத்தாளர்கள் அனைவருமே, செயற்கையாகக் கட்டுப்படுத்தப்படும் செலாவணி திட்டத்திற்கு வன்மையான எதிர்ப்பாளர்களாய் விளங்கினர்.[2] இயற்கையாகத் தன் மதிப்பு நிலைபெறும் செலவாணி முறையே அன்றைய நாளில் இலக்காக விளங்கியது. இத்தகைய ஒருதலைசார் கருத்துகளைக் கொண்டிருந்தன்றியும், பல்வேறு பொருளாதார உந்தங்களின் விளைவாக, செலாவணி சீர்திருத்தம் ஏதுமின்றியே இந்திய செலாவணிமுறை நிலைப்பாட்டுக்குச் செலாவணிமுறை பாதிப்புகள் யாவும் தற்காலிகமானவையாகவே இருக்க முடியும் என்று காலஞ்சென்ற வால்டர் பேஜெட் அவர்கள் உறுதிப்பட உரைத்ததோட்பாடும்[3] குழுவின் முடிவுக்குக் காரணமாய் விளங்கியது. வெள்ளியின் வீழ்ச்சி இந்தியாவிலிருந்து ஏற்றுமதிகளை ஊக்குவித்து இறக்குமதிகளைக் குறைக்குமென்றும், அதன் விளைவாய்த் தோன்றும் வேண்டத்தகாத வாணிபநிலுவையால் ஏராளமான அளவில் வெள்ளி இந்தியாவை நோக்கிப் பாயுமென்றும் அதனால் வெள்ளிவிலை ஏறுமென்றும் கருத்து தெரிவித்தார். சிலநாடுகளில் வெள்ளிநாணயமுறை அகற்றப்படுவதால் குறையக்கூடிய வெள்ளிக்கோரிக்கையை ஈடுகட்டுதற்கு மேலான அளவிலான விளைவுகள், வேறுசிலநாடுகளில் வெள்ளிநாணய முறை அறிமுகப்படுத்துவதால் தோன்றுமெனவும் அவர் வாதிட்டார்.

---

1. கே. 10025-50

2. இத்தித்திட்டம், அந்நாளில் எத்துணை புதுமையாய்த் தோன்றியது என்பதற்கு ஒருசான்று நோக்குவோம்: 1876 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணமுறை ஆணையத்தின்முன் சில சாட்சிகள் நாணயமுறையைச் செயற்கையாய்க் கட்டுப்படுத்துதற்கு ஆதரவு தெரிவித்தபோது, ஆணையம் மிக வியப்படைந்தது. 44 வது காங்கிரசின் இரண்டாம் செனட் அமர்வு ஆவணம் 703 பக் 47-48 ஐக் காண்க.

3. அவரது, 'வெள்ளியின் வீழ்ச்சி மற்றும் அது தொடர்பான சில கட்டுரைகள்' இலண்டன் 1877; பக்கங்கள் 10,55,80 ஆகியவற்றையும் பிரபுக்கள் சபையின் 1876 ஆம் ஆண்டு(ஏடு 178 இல் கே. 1361-1-450) வெள்ளியின் வீழ்ச்சி குறித்த தேர்ச்சிக்குழுமுன் அவரது சாட்சியமும் காண்க.

செயற்கை நாணயக் கட்டுப்பாட்டுமுறைக்கு மாறாக இயற்கைமுறையை உகந்ததாகக் குழு உறுப்பினர்கள் கருதியதற்கான காரணங்கள் என்னவாக இருப்பினும், அக்காரணங்களைக் கொண்டு வெள்ளி மதிப்பு நிலைக்கு மீளும் என்ற நம்பிக்கையாலேயே அரசாங்கத்தின் முன்மொழிவைக் குழு ஏற்க மறுத்துவிட்டது. குழுவின் நம்பிக்கை முற்றுமாகப்பொய்த்துவிட்டது என்பது இன்றைய வரலாற்று உண்மை. அனைவரும் வியப்புறும் வகையில் இந்த 'வெள்ளைக்குப்பை'யை ஏற்க இந்தியா மறுத்துவிட்டது. வெள்ளியின் மதிப்பு ஐரோப்பாவில் மிகவும் வீழ்ச்சியடைந்த கட்டத்திலும்கூட இந்தியாவுக்குப் பெருமளவில் ஏன் வெள்ளி போகவில்லையென்று அக்காலத்தின் புரியாப் புதிர்களில் ஒன்றாய் விளங்கியது. பலர் அரசுத்துறை அமைச்சரின் கவுன்சில் பற்றுகளில் விற்பனையைக் குறை கூறினார்கள்[1]. இந்தப் பற்றுகள் பணம் செலுத்துததற்குச் சிறந்ததொரு மாற்றுமுறைக்கு வழிகோலியதால் இந்தியாவுக்கு வெள்ளி ஏற்றுமதி தடுக்கப்பட்டு, அதனால் வெள்ளியின் விலைமதிப்பு குறையக் காரணமாயிருந்தன என்று கூறப்பட்டது. ஆனால் இது சரியான கண்ணோட்டமல்ல என்பது வெளிப்படை.[2] கவுன்சில் பற்றுக்கள் விலக்கிக்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, அக்காலத்தில் அனுப்பப்பட்டதை விட அதிகமான வெள்ளியை இந்தியாவுக்கு அனுப்பியிருக்க இயலாது. கவுன்சில் மசோதாக்களை சேவைகள் பண்டங்களுக்கான பற்றுக்கள் போன்று கருதாமல் சாதாரணவணிகப் பற்றுகளாகவே தருதவேண்டும். எனவே இவை வெள்ளி ஏற்றுதியுடன் போட்டியிட்டு, வெள்ளி ஏற்றுமதிக்குப் பங்கம் விளைவித்திருக்க இயலாது. இவற்றால் விளைந்த ஒரே விளைவு வணிகத்தில் இவை பயன்படுத்தப்பட்ட அளவுக்கேற்ப இந்தியா பிறபண்டங்களை வாங்குவதற்குத் தடையாயிந்ததுதான். ஆனால் கவுன்சில் பற்றுக்களைச் செலுத்தியது போக இந்தியாவுக்கு எஞ்சியிருந்ததை வாங்குதற்கு யாதொரு தடையும் இல்லை. ஐரோப்பாவில் வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியடைந்து விட்டதால், இந்தியா தனது எஞ்சிய வாங்குந்திறனைக்கொண்டு, பிற பண்டங்களுக்குப் பதிலாக வெள்ளியையே இறக்குமதி செய்யுமென்று

---

1. இந்த வாதம் வெள்ளி வீழ்ச்சி பற்றிய தேர்ச்சிக்குழுவின் 1876 ஆம் ஆண்டு அறிக்கையில் (பக் . xxx - xxxv) வலிமையாக எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் தங்கம் வெள்ளி ஆணையத்தின் ஒற்றை உலோக நாணய ஆதரவு உறுப்பினர்களும் தீவிர ஆதரவு காட்டியுள்ளனர். 1886 ஆம் ஆண்டின் இறுதியறிக்கை பகுதி II பக்கம் 77-79

நிகழ்ந்து கொண்டேயிருந்தன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் நாணய மாற்றத்திற்கான தேவை ஏற்படாத போதிலும் அவர்களாகவே விரும்பி மாற்றத்தைக் கொண்டு வந்தனர். வெள்ளி நாணயத்துக்கு ஆதரவான கிளர்ச்சியாளர்களுக்குப் பணிந்து அமெரிக்க அரசு 1878 இல் பிளாண்டு அலிசன் சட்டம் என்னும் சட்டத்தை இயற்றி அதன்படி நிதித்துறைச் செயலர் ஒவ்வொரு மாதமும் 2 மில்லியன் டாலருக்குக் குறையாமலும் 4 மில்லியன் டாலருக்கு மிகாமலும் வெள்ளியை வாங்கி வெள்ளி டாலர் நாணயங்களாக வார்க்கவும் அவற்றைத் திட்ட நாணயமாக உள்நாட்டில் தனியார், பொதுத் துறைக் கடன்களுக்குச் செலுத்த வகை செய்தது. தங்க நாணயமாகச் செலுத்தியாக வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த நிறு வனங்களுக்கு மட்டுமே இதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.[1] வெள்ளியின் உலோக மதிப்பு தொடர்ந்து வீழ்ந்துவர, அவற்றின் நாணய மதிப்பு மட்டும் மாறாதிருந்தமையால், அவ்வெள்ளி டாலர்கள் மிகை மதிப்பு நாணயங்களாகவே நிலவின. ஒரு நாட்டின் நாணய இருப்பு, நாணயத்தின் எல்லாவிதமான பயன்பாடுகளுக்கும் ஒரே நிலை மதிப்பைப் பெற்றிராமை உகந்த நிலையன்று என்பது தெளிவு.[2] உள்நாட்டுப் பயன்பாடுகளுக்கு இத்தகைய நாணயம் போதுமெனினும் வெளிநாட்டுச் செலுத்தங்களுக்கு அது பயன்படாது. செலாவணித் திட்டத்தின் நிலைப்பாட்டைக் குலைத்துக் குழப்ப நிலையைத் தோற்றுவித்ததுடன், தற்கால நாணய முறையின் அடித் தளமாய் விளங்கும் வங்கி உலோக இருப்பு எனும் பயன்பாட்டிற்கும் அவை உதவாமல் போய்விடும். மேலும் கள்ள நாணய வார்ப்புக்கு இவை அகன்ற வழியைத் திறந்து விடுகின்றன. இத்தகைய நாணய முறை நிலவும் நாடுகளில் புழங்கும் நாணயங்களில் பெரும்பகுதி கள்ள நாணயங்களே என்பது அந்நாணயமுறை விளைவிக்கக்கூடிய ஆபத்தின் கூர்மையைப் புலப்படுத்துகிறது. ஏராளமான அளவில் (பொருள்) மதிப்பு குறை நாணயங்களைப் புழங்கவிட்ட நாடுகள் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் எதிர்கொள்ளும் இன்னல்களை ஒட்டோமார் ஹாப்ட் வெளியிட்டுள்ள அட்டவணை XXIII (காண்க. பக். 138) தெள்ளத்தெளிவாக மெய்ப்பிக்கிறது.

---

1. நாணயமுறை ஆணையத்தின் இந்தியானாபோலீஸ் மாநாட்டு அறிக்கை. சிகாகோ 1898. பக். 138 - 145.

2. காண்க: 1881 இல் நடைபெற்ற பன்னாட்டு நாணயமுறை மாநாட்டில் நெதர்லாந்துப் பேராளராகிய பேரா. பியர்சன் அவர்களின் உரை. அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பேராளர்களின் அறிக்கை, சின்சினாட்டி 1881. பக். 77 - 84.

தங்கத் திட்டத்தைக் கடைபிடித்து வந்ததால் இத்தீய விளைவு களிலிருந்து இங்கிலாந்து தப்பித்துக் கொண்டது. என்றாலும், மற்ற நாடுகளைப் போன்றே அதுவும் இக்கட்டான நிலையிலேயே விளங்கு கிறது. முன்னரே சுட்டிக்காட்டியிருந்தவாறு, வெள்ளியின் விலை தொடர்ந்து குறையக் குறைய, அதற்கேற்பத் தங்கத்தின் மதிப்பும் தொடர்ந்து மேலேறிவர, நாட்டின் வணிக, தொழில் துறைகளில் வரலாறு கண்டிராத மந்த நிலை உருவாகியது. இஃதன்றியும் பண மதிப்பு ஏற்ற இறக்கங்களினால் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருவாயும் கணிசமாகக் குறைய அதனால் மக்கள் பலரது வேலை வாய்ப்பு வெகுவாகக் குறைந்து விட்டது. அமெரிக்க நாட்டு ஆணையம் கூறுவதாவது:

> ''1877 ஆம் ஆண்டிலிருந்து 1897 ஆம் ஆண்டு வரையிலான இருபதாண்டு காலத்தில் பண முதலீடுகளின் ஈவு பெறுந்திறன் ஏறக் குறையப் பாதியளவுக்குக் குறைந்துவிட்டது. தங்கள் பண முதலீடு களின் ஈவுத் தொகைகளையே பெரிதும் வருவாய் ஊற்றாகக் கொண்டு வாழ்ந்து வந்த பெருமளவு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும் பெருந்தொழிலதிபர்கள், நிதித்துறை மன்னர்கள் முதலியோரின் இலாபங்களும் இவ்வாறே பாதிக்கப் பட்டன. இங்கி லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் அரசு முதலீடு களின் விலைகள் கடுமையாக ஏறிவிட்டமையால், எளிய மக்கள் அவற்றை வாங்கிப் பாதுகாப்பான வருவாய்க்கு வழிசெய்து கொள்ள இயலா அளவுக்கு அவை அரிதாகிவிட்டன.[1]

மேற்காணும் முடிவு சரிதானா என்பது பெரிதும் ஐயத்திற் கிடமானதே. ஆனால் பணமுறைப் பாதிப்புகளால், ஆங்கிலத் தலை நகரில் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் வெகுவாகக் குறைந்து விட்டன என்பது மட்டும் உண்மை. ஆங்கில மக்கள் பலருக்கு முதலீடு களே வருவாய்க்கு முக்கிய ஊற்றுகள் என்பதையும் அறிவோம்.

இத்தகைய சூழ்நிலையைச் சீர்படுத்தும் நோக்கில் தங்கம் வெள்ளி இவற்றிடையே இரு உலோக மதிப்பு ஏற்படுத்த, ஒன்றன்பின் ஒன்றாகப் பன்னாட்டு நாணய முறை மாநாடுகள் மூன்று நடை பெற்றன. முதலாம் மாநாடு அமெரிக்காவின் முன்முயற்சியில்

---

1. ஜானா மற்றும் வெள்ளி செலாவணி முறை நாடுகளில் தங்க மாற்றுக்திட்ட அறிமுகம்

1878 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்றது. இரண்டாம் மாநாடு பிரான்சு, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் கூட்டமைப்பில் 1881 ஆம் ஆண்டு பாரிசிலேயே நடைபெற்றது. மூன்றாவதான, இறுதி மாநாடு அமெரிக்காவின் விருப்பப்படி, 1892இல் புருசெல்ஸ் நகரில் நடைபெற்றது.

மாநாடுகள் கூட்டப்பட்ட மோசமான நிலையைக் கூர்ந்து நோக்கினால், இம்மாநாடுகளின் விளைவாகப் பயனுள்ள திட்டங்கள் உருவாக்கப்படுமென்பதே இயல்பான எதிர்பார்ப்பு. எவ்வித ஒப்பந்தமும் எய்தப்படவில்லை என்பதோடு, இம்மாநாட்டு உரைகளில் பல வெறும் வெட்டிப் பேச்சுகளாக அமைந்திருந்தன என்றே கூறலாம். இரண்டாம் மாநாட்டில் மட்டுமே ஒப்பந்தம் ஒன்று உருவாகும் போல நிலையிருந்தது. ஆனால் முதலாம், மூன்றாம் மாநாடுகளில் முரண் எதிர்போக்குகளே பெரும்பாலும் காணப்பட்டன. இவ்வாதங்களில் உருப்படியாக எழுந்த ஒருமித்த கருத்து வெள்ளி நாணயப் பயன்பாடு தொடர வேண்டும் என்பதுடன், அதிகரிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் வாய்ப்பேச்சுகளில் காட்டிய ஆர்வத்தில் சிறு பகுதியேனும் உறுப்பு நாடுகள் செயலாக்கத்தில் காட்டவில்லை.

அட்டவணை XXIII

பல்வேறு நாடுகளில் பண இருப்பின் பரவல்[1]

நாடுகள்	1892 ஆம் ஆண்டின் தொடக்கத்தில்			பணப்புழக்கம்	
	தங்கம்	வெள்ளி	ஈடுவைக்காத காகிதப்பணம்	சில்லறை நாணயம்	உலோக இருப்பு மதிப்பு
ஆஸ்திரியா fl	65,000,000	197,000,000	601,000,000	40,000,000	14,000,000
இங்கிலாந்து £	118,000,000	-	10,000,000	26,000,000	1,900,000
பிரான்சு fr.	3,900,000,000	3,200,000,000	572,000,000	280,000,000	280,000,000
ஜெர்மனி m	2,500,000,000	430,000,000	450,000,000	457,000,000	57,000,000
ஹாலந்து fl.	64,000,000	135,000,000	98,000,000	7,600,000	1,800,000
இத்தாலி li	485,000,000	81,000,000	847,000,000	150,000,000	75,000,000
ருசியா Rb	59,500,000	-	51,200,000	8,200,000	1,000,000
ஸ்பெயின் pes.	160,000,000	646,000,000	548,000,000	190,000,000	157,000,000
அமெரிக்க ஐக்கிய நாடுகள் $	671,000,000	458,000,000	419,000,000	77,000,000	18,000,000

1. ஒட்டோமர் ஹாப்ட் தந்துள்ள விவரங்கள் (இலண்டன், எபிங்காம், வில்சன் & நிறுவனம், 1892 பக். 160)

இம்மாநாடுகள் இரு உலோக முறை குறித்த ஒப்பந்தம் ஒன்றை அடைய இயலாததற்கான காரணங்கள் விளங்கவில்லை. இம் மாநாடுகளின் விவாத உரைகளைப் படித்துப்பார்க்கும்போது, இதில் கலந்துகொண்ட நாடுகள் தனித்தனியே வெவ்வேறு முரண்பட்ட குறிக்கோள்களைக் கொண்டிருந்தன என்பதை நோக்காமலிருக்க முடியாது. 'இரு உலோக நாணயங்களும் புழக்கத்தில் இருக்கின் றனவோ இல்லையோ, அவற்றின் நாணய மாற்று வீதம் நிலையாக இருக்க வேண்டும்' என்பது ஒரு நாட்டின் குறிக்கோள் என்றால், முரணாக, இருவகை உலோக நாணயங்களும் புழக்கத்தில் இருக்க வேண்டும் என்பதே பிறிதொரு நாட்டின் குறக்கோளாயிருந்தது. இத்தகைய முரண்பட்ட அணுகுமுறைகளின் காரணமாக இரு உலோக நாணயமுறை குறித்து இம்மாநாடுகளால் ஒப்பந்தம் எதையும் அடைய இயலவில்லை.

தங்கம், வெள்ளி இரண்டுக்குமிடையே நிலையான மாற்று வீதத்தைத் தொடர்ந்து நிறுவி இரு உலோக நாணய முறையைச் செயல்படுத்தல் என்பது ஒரு தெளிவான திட்டமே. இருப்பினும் இம்மாநாடுகளில் நிகழ்ந்த விவாதங்களின் அடிப்படையில் நோக்கும் போது, தங்கம் வெள்ளி இவற்றுக்கிடையே நிலையான மாற்று விகிதத்துடன் நாணய முறையை வெற்றிகரமாய்ச் செயல்படுத்த இயலாதென, இம்மாநாட்டில் கலந்து கொண்ட பெரும்பாலான பொருளாதார வல்லுநர்களோ அரசுகளோ மறுத்ததாகச் சொல்ல வியலாது. மாறாக, மூன்றிலும் மிக முக்கியமானதாகிய 1881 ஆம் ஆண்டு மாநாட்டில் அத்தகைய நாணயமுறை நடைமுறையில் செயல்படுத்த முடியும் எனப் பெரும்பாலோர் ஒப்புக் கொண்டுள் ளனர். ஒருசில சிறிய நாடுகளைத் தவிர எல்லா அரசுகளும் அத் திட்டத்தினை ஆதரித்தன. பிரிட்டானிய அரசும் கூடத் தனது வங்கி அறிக்கைச் சட்டத்தில், வெள்ளி நாணயம் பற்றிய பிரிவைக் கொண்டு வருவதாகக் கூறியதன் வழி இத்திட்டத்திற்கு இசைவு தெரிவித்த தெனலாம்.

இரு உலோக நாணயங்களுமே ஒரே காலத்தில் புழங்குதலைத் தொடர்ந்து பராமரிக்கும் வழிமுறைகள் குறித்து இரு உலோக ஆதர வாளர்கள் கூறும் உறுதி யாது? இரு உலோக நாணயமுறை நிலைப் பாடுடன் செயல்பட முடியும் என்பதற்கு அவர்கள் பிரான்சு நாட்டை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர். ஆனால், பிரான்சில் ஒரே காலத்

இவ்விரு நாணயங்களும் புழங்கிய தன்மையை நோக்கும்போது இவற்றின் உற்பத்தி வீதங்களில் கணிசமான மாறுதல்கள் இருந்த போதிலும் நாணய மாற்று வீதத்தில் வேறுபாடுகள் அதிகமில்லை யென்பதை ஏற்றுக்கொண்டாலும், இச்சிறு மாற்றங்களே நாணயப் புழக்கங்களின் விகிதத்தில் மிகப்பெரும் புரட்சிகரமான மாற்றங்களை விளைவிக்கப் போதுமானவையாய் இருந்தன என்பதைக் கீழ்வரும் அட்டவணை புலப்படுத்துகிறது.

அட்டவணை XXIV

பிரான்சில் தங்க, வெள்ளி நாணயங்களின் உற்பத்தி [1]

காலம்	தங்கம் (மில்லியன் பிராங்குகளில்)	வெள்ளி (மில்லியன் பிராங்குகளில்)	மதிப்பு விகிதம்
1803 - 1820	*868*	*1,091*	*1:15.58*
1821 - 1847	*301*	*2,778*	*1:15.80*
1848 - 1852	*448*	*543*	*1:15.67*
1853 - 1856	*1,795*	*102*	*1:15.35*
1857 - 1866	*3,516*	*55*	*1:15.33*
1867 - 1873	*876*	*587*	*1:15.62*

இத்தகைய தீங்குகளுக்கு இரு உலோக ஆதரவாளர்கள் மாற்றுத் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. தங்கம், வெள்ளி இருப்புகளின் அடிப்படையில் அவற்றுக்கிடையே நிலையான மதிப்பு விகிதத்தை வைத்துக்கொண்டு காகித நாணயம் வெளியிடுவதை ஒற்றை உலோக, இரு உலோக முறைகளுக்கு மாற்றாகப் பேராசிரியர் மார்ஷல் முன் மொழிந்தார்[2] என்பது உண்மையே. ஆனால் நிலையான மாற்று

---

1. பாரிசில் 1881 ஆம் ஆண்டில் நடைபெற்ற பன்னாட்டு நாணய முறை மாநாட்டில், நெதர்லாந்து நாட்டுப் பேராளரான பேராசிரியர் பியர்சன் அவர்கள் தந்த விவர அட்டவணை.

2. காண்க: இன்றைய மீள் பார்வைகள் (contemperary Reviews) இதழின் மார்ச் 1887 வெளியீடு. இத்தகையதொரு திட்டத்தை பேரா. மார்ஷலுக்கு 115 ஆண்டுகளுக்கு முன்னரே ஜேம்ஸ் ஸ்டூவர்ட் அவர்கள் வங்காள நாணயமுறைக் குழப்பங்களுக்குத் தீர்வாகக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார், என்பது சுவையான செய்தி. ஆனால் 'மனித குலத்தில் அனைவருமே மெய்யறிவாளர்களாயிருத்தல் இயலாது' என்ற கண்ணோட்டத்தில், அவர் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் தமது திட்டத்தை வற்புறுத்த வில்லை. பார்வை: அவரது ''நாணயமுறைக் கோட்பாடுகளும், இன்றைய வங்காள நாணய முறைக்கு அவற்றின் பயன்பாடும்' 2ஆம் பதிப்பு, 1772. வில்லியம் வார்டு அவர்களது, 'நாணயமுறைச் சீர்கேடுகள் குறித்து வங்கி இருப்பு உரிமையாளர்களுக்கு ஓர் கடிதம்'. இலண்டன் 1840 பக். 8.

விகிதத்துடன் விரும்பிய அளவில் நாணய உற்பத்தித்திட்டம் எனும் இரு உலோக நாணயமுறைக் கொள்கையாளர்களின் திட்டத்தில் நாணய மாற்று விகிதத்தை ஒரு குறிப்பிட்ட அளவில் நிலை நிறுத்து வதற்காக உறுதிப்பாடு ஏதுமில்லை.

இதைக் குறித்து இரு உலோக நாணய ஆதரவாளர்கள் தர முன்வரும் ஒரே ஆறுதல் மொழி என்னவெனில்,[1] நாணயமாற்று விகிதங்களின் ஏற்ற இறக்கங்கள் வங்கி இருப்புகளைத்தான் பாதிக்குமேயன்றிப் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏதும் இராது என்பதே. இஃது வெறும் கண்துடைப்பே;[2] ஏனெனில் பொதுமக்களின் மனப்பான்மைகளுக்கு மாறாக எவ்வாறு வங்கிகள் தங்கள் இருப்புக்களுக்கு ஏற்பாடு செய்ய முடியும்? தங்கம், வெள்ளி இரண்டையும் ஒரு குறிப்பிட்ட மதிப்பு விகிதத்திலேயே பயன்படுத்துவதாகப் பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டாலும் கூட, இருவகை நாணயங்களும் ஒரே சமயத்தில் இயல் தன்மையில் புழங்கும் என்பதற்கான உறுதிப்பாடு ஏதுமில்லை. நிலையான நாணய மதிப்பு விகிதத்தைப் பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றன் வாயிலாகவே நிறுவ இயலும். ஒரு நாடே முனைந்து தன் நாட்டில் மட்டும் நிறுவுதல் இயலுமென்றாலும், ஆங்கு நடைமுறையில் ஏற்ற இறக்கங்கள் மிகுதியாக இருக்கும். ஒரு உலோகம் மற்றொன்றை விட மேலோங்கும் போக்கினை வெறும் பன்னாட்டு ஒப்பந்தம் என்று கிரேஷாம் விதி கூறும் போக்குகளை அறவே நீக்கி விடுமென்று கருதல் பெரும்பிழையாகும். பணப்புழக்கத்திற்குத் தேவையான நாணயத்தின் அளவு நாணய உலோகங்களின் உற்பத்தியளவு இவற்றினைச் சார்ந்தே கிரேஷாம் விதி செயல்படும். ஒரு உலோகத்தின் உற்பத்தியளவு, மற்றொன்றின் உற்பத்தியளவை விட மிக மிக அதிகமாய், நாணயத்தேவை முழுமையையும் நிறைவு செய்தற்கேற்ற பெரும் அளவில் இருக்குமெனில் அவ்வுலோக நாணயங்கள் மேலோங்கி மற்ற உலோகத்தைப் புழக்கத்திலிருந்தே அகற்றி விட முடியும்; இதனைப் பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றினால் எவ்வாறு தடை செய்ய இயலும்? மாறாகப் பன்னாட்டு ஒப்பந்தத்தினால், இத்தகைய போக்குக்கு மேலும் கூடுதலான ஊக்கம் கிட்டுமேயன்றித் தடையேதும் நிகழாது.

---

1. பார்வை: பேராசிரியர் பாக்ஸ்வெல் அவர்களின் 'ஆக்ஸ்போர்டு எக்னாமிக் ரெவியூ'

எனவே இரு உலோக நாணய முறையைக் கடைபிடிக்க முற்படும் நாடுகள், நிலையான மாற்றுவீதமா? இரட்டைப் புழக்கமா? என இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்; ஏனெனில், நிலையான வீதத்தை வலியுறுத்தும்போது இரட்டைப் புழக்கம் குன்றிவிடுதற்கான சான்றுகள் பற்பல. இந்நிலை, 1886 ஆம் ஆண்டின் தங்கம், வெள்ளி ஆணையம் போன்ற நடுநிலைத் தீர்ப் பாயங்களில் ஒருமித்த கருத்தாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மாநாடுகள் தோல்வியடைந்ததற்குக் காரணம், பேராளர்கள் இதனை உணராமலிருந்தனர் என்பதன்று. மாநாட்டின் முறிவுக்குக் காரணம் இரு உலோக நாணயமுறை இரட்டைப் புழக்கத்திற்கு உறுதிப்பாடு அளிக்கவில்லை என்பதுதான். எனினும், இரு உலோக நாணயங் களையும் ஒருங்கே புழங்குதல் அறவே இயலாதென்றாலும் கூட, நாணயமுறைச் செயலாக்கத்தால் உடனடியாகத் தங்க நாணயப் புழக்கம் வெகுவாய் பெருகுமென்றால், பின்னடைவு ஏதுமில்லை யெனலாம். மாறாக உடனடி விளைவாக நிகழ்ந்ததென்னவோ பெருமளவில் வெள்ளி நாணயங்கள் புழக்கத்துக்கு வந்ததுதான். இதனால் அச்சுறுத்தப்பட்டே பெரும்பாலான நாடுகள் இரு உலோக நாணய முறையைச் செயல்படுத்தாது தவிர்த்தன. தங்கத்திற்கும் வெள்ளிக்குமிடையே நிலையான மாற்று விகிதத்தை நிறுவும் பொருட்டு கூடிய நாடுகள், அந்நோக்கத்திற்கு உறுதுணையாய் இருக்கக்கூடிய நல்ல திட்டத்தை, அது தங்க, வெள்ளி நாணயங்களின் புழக்க விகிதத்தை மாற்றிவிடும் என்ற நொண்டிச் சாக்கு கூறி ஏற்க மறுத்துவிட்டார்கள் என்பது மிகவும் வியப்பையே தருகிறது. ஆனால் இரு உலோக நாணய முறையை நிறுவுதல் பற்றி மக்கள் உள்ளக் கிளர்ச்சிகளெல்லாம் தலைதூக்கிக் கொண்டிருந்த காலத்தில், பெரும் பாலான ஐரோப்பிய நாடுகளில் தங்கத்தைப் போன்றே வெள்ளியும் நாணயமாய்ப் புழங்க ஏற்ற உலோகம்தான் என்ற கருத்து வேகமாக விடைபெற்றுக் கொண்டு வந்தது. எனவே, சிறிய அளவு நாணயத் தில் பெரிய அளவு மதிப்பைத் தாங்கிப் புழக்கத்தில் பயன்படக் கூடிய தங்கக் காசுகளின் புழக்கத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண் டின் பிற்பகுதியில் மேலும் மேலும் மிகுதியான மக்கள் போற்றி வரவேற்கத் தலைப்பட்டதனால், மிகுதியான தங்க நாணயப் புழக் கத்துக்கு வழிவகுக்காத மாற்றுவிகித நிலைப்புத் திட்டம் எதுவுமே எடுபடுவதற்கு வாய்ப்பில்லை. இத்தகைய ஒருதலைசார் நிலை தங்க நாணயம் வழங்கும் இங்கிலாந்து நாட்டில்தான் நிலவியதென்று கூறவியலாது. இலத்தீன் ஒன்றிய நாடுகளின் நாணயச்சாலைகள் மூடப் பட்டமையும் கூட, இரு உலோக நாடுகளிலும் மக்களின் மனப்

பான்மை மாறிவருந் தன்மைக்குத் தெளிவானதொரு சான்றாக விளங்குகிறது. ஜெவோன்ஸ்[1] அவர்களின் வாதமாவது:

> ''இரட்டை உலோக நாணயமுறை செயல்படுத்தப்பட்டதால் கனமான வெள்ளி எக்கியூஸ் காசுகளுக்குப் பதிலாக நெப்போலியன், அரைநெப்போலியன், ஐந்து பிராங்கு ஆகிய மதிப்புகளில் தங்கக் காசுகள் புழங்கத் தொடங்கியபோது பிரெஞ்சு மக்கள் எவ்விதக் குறைபாடும் கூறாது வரவேற்றுப் பாராட்டினார்கள். ஆனால், 1873 ஆம் ஆண்டில் கனத்த வெள்ளிக் காசுகள் மீண்டும் வரத் தொடங்கியதால், நிலைமை பெரிதும் மாறிவிட்டது.

மாநாடுகளில் கலந்து கொண்ட நாடுகளில் முக்கியமானவை, தங்க நாணயத் திட்டத்தின்பால் மிகையான ஒருதலைசார் ஆர்வம் மேலோங்கி விளங்கியவையாதலால், அவர்களது தங்க இருப்புகளில் ஏற்பட்ட மாறுபாடுகளுக்கேற்ப, மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் அவர்களது ஆர்வம் நலிந்தும் குறைந்தும் வந்தது.[2] 1878 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்களது செலுத்தங்களுக்குத் தேவைப்பட்ட தங்கத்தின் வரவை பிளாண்டு அலிசன் சட்டம் கட்டுப்படுத்தியதாலேயே மாநாட்டைக் கூட்ட முன்முயற்சி எடுத்தது. ஜெர்மானியோ போதுமான அளவில் தங்க இருப்பு வைத்திருந்ததால், நாணயமுறையிலிருந்து அகற்றப்படும் வெள்ளியை இழப்பின்றி விற்றுவிட முடியுமென்ற நம்பிக்கை காரணமாக மாநாட்டில் அக்கறை காட்டவில்லை. 1881 ஆம் ஆண்டிலோ பிரான்சு தனது தங்க இருப்பை முற்றுமாக இழந்திருந்தது; ஜெர்மனி தனது வெள்ளி இருப்பினை விற்க இயலாமல் இருந்தது; எனவே அவையிரண்டும் நாணயச் சீர்திருத்தத்தில் மிகுந்த அக்கறை கொள்ளலாயின. தனது நலத்திற்கும் கேடு தேடிக்கொண்ட அமெரிக்கா 1892 ஆம் ஆண்டில் தங்க இருப்பு கடிதும் வறண்டநிலையை வெள்ளியை ஆதரித்து நிற்கும் தன்னந்தனி நாடாய் நின்றது. பெரும்பாலான நாடுகள் தங்கத்திற்கு ஆதரவான ஒருதலை சார்நிலையையே கொண்டிருந்தன; இது மாற்ற முடியாத நிலையல்லதான். இந்நாடுகள் யாவும், செல்வாக்கான நாடொன்று முன்வந்து வழிநடத்த வேண்டுமென எதிர்பார்த்தன. இம்மாநாடுகளின் விவாதங்களிலிருந்து ஒன்று தெளிவாகத்

---

1. 'பணமும் நாணயமாற்று நடைமுறையும்' 1890. பக். 143.

தெரிகிறது; இங்கிலாந்து மட்டும் இரு உலோக நாணயமுறையைக் கடைபிடிக்க முன்வந்திருக்குமானால், ஏனைய நாடுகள் செம்மறி யாடுகளைப் போன்று அதனைத் தொடர்ந்திருக்கும். ஆனால் இங்கி லாந்தோ தனது நாணய முறையில் மிகுதியான பற்று கொண்டிருந் தமையால் மற்றறெதையும் ஏற்க முன்வரவில்லை; விளைவாக இரு உலோக நாணய முறை என்பது கைவிடப்பட்ட திட்டமாகி விட்டது. இங்கிலாந்தின் பிடிவாதம் காரணமாக இரு உலோக நாணயத் திட்டத்தை நிறுவ இயலாமற் போனதை ஏனைய ஐரோப் பிய நாடுகள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை; ஏனெனில் அவை ஏற்கெனவே தங்கள் நாட்டில் பெரும்பாலும் தங்க நாணயமுறைச் செயல்படுத்தி விட்டனர். ஆனால் திட்டம் கைவிடப்பட்டதால் இந்தியாவின் நம்பிக்கைகளுக்குப் பலத்த அடி விழுந்தது. 1878 ஆம் ஆண்டின் முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் மறுக்கப்பட்ட பின்னர், இந்தியா தனது இடர்ப்பாடுகளுக்குத் தீர்வாக இரு உலோக நாணயத் திட்டத்தையே நம்பியிருந்தது. ஆனால் தொடக்கத்தில் இந்தியா இத்திட்டத்தில் அவ்வளவாக அக்கறை காட்டாமலிருந்தது உண்மையே. இரு உலோக நாணய முறையின் நலன்கள் குறித்து இந்தியாவில் ஒருமித்த கருத்து நிலவவில்லை என்பதை 1881 ஜூன் 10இல் அரசுத் துறைச் செயலருக்கு அனுப்பிய அறிக்கை[1] புலப் படுத்துகிறது. இந்திய வைசிராயும், ஆட்சிக்குழு உறுப்பினரும், இரு உலோக நாணய முறை அடிப்படையில் வலிவூட்டம் கொண்ட தல்லவென்று கூறி அதனை ஆதரிக்க மறுத்தனர்.[2] ஆனால் இதற்கு மாறான கருத்து கொண்டிருந்த பெரும்பான்மையோரும் கூடப் பெருத்த எண்ணிக்கையிலான நாடுகள் இரு உலோக நாணய முறையைப் பின்பற்றுமெனில் தாமும் சேர்ந்துகொள்ளத் தயாராக இருந்தார்களேயன்றித் தாமாக முன்வந்து திட்டத்தையேற்று வழி காட்டத் தயாராக இல்லை. இந்தியாவின் நிதிநிலை இடர்ப்பாடுகள் பெருகப்பெருக, சிறிதளவாகத் தொடங்கிய இரு உலோக நாணய முறை ஆர்வம் ஆழமாக வலிமை பெற்றமையால், வெள்ளிக்கும் தங்கத்துக்குமிடையே நிலையான நாணய மாற்று விகிதத்தை நிறுவும் பொருட்டு, பன்னாட்டு நாணயமுறை மாநாட்டைக் கூட்டுமாறு இந்திய அரசு, 1886இல் அரசுத் துறைச் செயலருக்கு வற்புறுத்தி எழுதியது.[2] அச்சமயம் இரு உலோக நாணயமுறையை நோக்கிய ஆர்வத்துடிப்பு மிகவலிமையாக இருந்தமையால், இம்முறையைக் கருதிப் பார்க்குமாறு அரசுத் துறைச் செயலர் கருவூலத்துக்குத் தெரி வித்த ஆலோசனையை ஏற்க வியலாதென மறுத்தமைக்காக, இந்திய அரசு கடுமையாகக் கண்டித்தது. இத்தகைய ஆர்வமும் நம்பிக்கை

1. 1882 ஆம் ஆண்டின் பிரிவு விடை 3229, பக்கம் 33 இலிருந்து.

2. அதே நூலில் பக். 37.

யும் மிகக்கொண்ட இந்தியஅரசு பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தனது வருங்கால நலன் குறித்து போக்குகளை உன்னிப் பாக நோக்கி வந்தது. ஆனால் மாநாட்டில் கலந்துகொண்ட வேறெந்த நாட்டை விடவும் நம்பிக்கையின்மையும் அநீதியும் கொண்டு இந்தியா நடத்தப்பட்டது. இருஉலோக நாணயமுறைத் திட்டத் தில் இந்தியாவை அனுமதிக்க எந்த நாடும் ஒப்பவில்லை; ஏன், இங்கிலாந்து கூட இசையவில்லை.[1] ஏற்கனவே குன்றிவரும் தங்க இருப்புகளைக் கொள்ளைகொண்டு போகவந்த பகையாளி நிலை யில் இந்தியா நடத்தப்பட்டது. இந்தியாவை இரு உலோக நாணய முறையில் சேரவிடாமல் தடுக்கத் திட்டமிட்டது மட்டுமின்றி, இந்தியா தங்கநாணயங்களைச் சட்டபூர்வமாக அறிமுகப்படுத்தி நிலையான நாணயமாற்றுத் திட்டத்தை நிறுவுவதில் வெற்றி கண் டாலும்கூட, இரு உலோக நாணமுறை நாடுகளின் நலன்களுக்குப் பாதிப்பு ஏதும் விளைவிக்கக்கூடாதென உறுதிமொழி தரவேண்டு மென்றும் வற்புறுத்தப்பட்டது.[2] இரு உலோகநாணயமுறை இறுதி யாக வெற்றியடையும் என்ற நம்பிக்கையில் இந்தியா இத்தகைய வாக்குறுதிகளையெல்லாம் தயக்கமில்லாமல் வாரிவழங்கியது. எனவே, அத்திட்டத்தின் தோல்வி இந்திய அரசின் உள்ளத்தை நொறுக்கும் பேரிடியாக ஏமாற்றம் விளைவித்தது. இத்தகைய ஏமாற் றத்தை இந்தியாவுக்கு விளைவித்ததில் பிரிட்டானிய அதிகாரிகள் பெற்றபங்கு, நயவஞ்சகம் என்று கருதத்தக்க வகையிலான பொறுப் பற்ற பான்மை எனலாம். தங்கத்தின் இருப்பில் இந்தியா பங்கு கோராமல் இருக்கவும், வெள்ளியை நன்னிலைக்குயர்ந்த பிரிட்டன் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென்ற பிற நாட்டுக் குற்றச் சாட்டிலிருந்த தப்பவும், இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாக, வெள்ளித் திட்டத்தையே பின்பற்றுமாறு இந்தியாவை வலிந்து பணிய வைத்தனர்.[3]பணியவேண்டிய இந்தியாவிடமிருந்து வலிந்து பறித்த சலுகை இஃதொன்று மட்டுமன்று. நாணயமுறைச் சீர் திருத்தம் குறித்து சுதந்திரமான நடவடிக்கையேதும் எடுக்கவொட்டா மல் இந்திய அரசைத் தடை செய்ததுடன், மதிப்புக் குறைந்து வரும் உள்நாட்டு நாணயங்களால் விளையும் இழப்புகளை ஈடுசெய் வதற்கான நடவடிக்கை எதையும் (ஆங்கிலேயப் பாராளுமன்றத்தின்) மக்களவையின் ஒப்பிசைவு பெற்றாக வேண்டும் எனவும் கட்டாயப்

---

1. 1886 ஆம் ஆண்டில் தங்கம் - வெள்ளி ஆணையத்தின் முன் S. சுமித் அவர்களின் வாக்குமூலம். கே. 4825-30, வாட்னியின் வாக்குமூலம் கே. 9427.

2. இந்தியப் பேராளர்களின் அறிக்கை, பக். 12.

3. [illegible] நாணயமுறை மாநாட்டின் முன்றாம் அமர்வில் கோச்சென்

யிருப்பின், அரசு நாணயச்சாலைகளில் புதியவார்ப்புப் பொறிகளை நிறுவும் செலவுக்கு மேல் வேறு இழப்பு ஏதும் நேர்ந்திராது.[1] ஆனால் 1893 ஆம் ஆண்டில், தங்கத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு இவ்விரண்டுமே பயனற்றவை போன்று தோன்றின. நாணய மாற்றுத் திட்டம் இயலாதென்பது ஏற்கவே இயலாத கூற்று. 1893 ஆம் ஆண்டில் வெள்ளியின் மதிப்பில் 35 விழுக்காடு அளவுக்குக் குறைந்து விட்டது. நாட்டில் ஏராளமான அளவில் ரூபாய் நாணயங்கள் புழக்கத்திற்கு விடப்பட்டமையால், சுமித் திட்டம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளும் கூட மங்கிவந்தன. ஆனால் 1878 ஆம் ஆண்டிலேயே அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அன்று தொடங்கிப் புதிய நாணயங்கள் தங்கத்திலேயே உற்பத்தியாகியிருக்குமாதலால், 1893 ஆம் ஆண்டில் வெள்ளியோடு ஒப்பிடத் தங்க நாணயங்கள் பெருமளவுக்குப் புழக்கத்திற்கு வந்திருக்குமாதலால், தங்கத் திட்டத்தைச் செயல்படுத்துதல் எளிதாயிருந்திருக்கும். தங்கத் திட்டத்தை ஏற்கெனவே நிலவும் நாடுகளுக்கு இணையாக நிலைப்பாடும் பெற்றிருக்க முடியும். மாறாக, 1893 ஆம் ஆண்டில் ஏராளமான வெள்ளி நாணயங்கள் புழக்கத்திற்கு வரவிடப்பட்டதால், இனி வெள்ளி நாணய உற்பத்தியை நிறுத்தி ரூபாயை நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரப் பல பத்தாண்டுகள் தேவைப்படுமென்ற நிலை உருவாகிவிட்டது.

---

1. இதன்பயன் தெள்ளத் தெளிவாக அறியப்பட்டிருந்தமையால்தான், உடனடி அவசர மாற்றம் ஏதும் தேவையில்லையென்று கருதிய இலண்டன் டைம்ஸ் எனும் இதழ்கூட, 1876 அக்டோபர் 25 ஏட்டின் (பக். 9. பத்தி. 2) முக்கிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ''இந்தியாவின் நாணயமுறை தற்போது ஆரோக்கியமாக இல்லையெனும் நிலையிலும், தங்க நாணயமுறைக்கு மாறுதல் போன்ற செலவு மிக்க தீர்வை நாடும் அளவுக்கு அவசர நிலையேதுமில்லையென்று இந்தியத் தலைமை ஆளுநர் அவையில் மறுப்பு தெரிவித்துள்ளார்; இது திட்டத்தின் தன்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையின் விளைவே. வெள்ளி நாணயங்களுக்கு மாற்றாகத் தங்க நாணயங்களைப் புகுத்தல் செலவு மிக்கதான விரிவான திட்டமே. ஆனால் வெள்ளி நாணய வார்ப்பை நிறுத்தித் தங்க நாணயங்களை மட்டுமே முழுமையாக வார்க்க முடிவெடுத்தால் புதிய எந்திரங்களை நிறுவுதற்காகும் செலவு ஒன்றே கூடுதல் செலவாயிருக்கும். ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்படுமென்றும், அதற்குப் பதிலாகத் தங்க நாணயங்களே வார்க்கப்படுமென்றும், அத்தேதிக்குப் பின்னர் அரசுக் கருவூலங்களில் வெள்ளி நாணயங்களைக் கொடுத்து நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் தங்க நாணயங்களைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டிருப்பின், பிரான்சில் நிலவுவது போன்ற இரு உலோக நாணய முறை அறிமுகமாகிப் படிப்படியாக நாணயமுறை மாற்றத்திற்கு வழிகோலியிருக்கும். தொடக்கத்தில் உடனடியாகத் தங்க நாணய வார்ப்பு தொடங்கி விடாதெனினும் வெள்ளி நாணய வார்ப்பு நிறுத்தப்படுவதன் விளைவாக, ரூபாயின் மதிப்பு உயர்ந்து, தங்கத்திற்கும் ரூபாய்க்குமுள்ள வீதம் நிறுவப்பட்டு, கோரிக்கை மிகுதியாக எழுவதன் விளைவாகத் தங்க நாணய வார்ப்பு பெருகும்; புழக்கமும் பெருகும்; இத்தகைய நிகழ்முறை மிக மெதுவாகச் செயல்பட்டாலும் அதிகச் செலவின்றித் தானாகவே, தங்க நாணய முறை செயலுக்கு வருவது உறுதி....''

இத்தகைய தேக்க நிலையிலிருந்து மீளப் பரிந்துரைக்கப்பட்ட இது போன்ற ஆலோசனைத் திட்டங்கள் ஏராளம். அவற்றுள் ஒன்று 2 ரூபாய் நாணயத்தைச் சற்று மிகுதியான எடையுடன் வார்த்தலாகும்.[1] இரண்டாவது திட்டம் சிறு அளவில் வெள்ளியைச் சட்டபூர்வ நாணயமாக வைத்துக்கொண்டு, இந்தியாவின் தங்க, வெள்ளி இருப்பு களைத் தங்க நாணய நிலுவைகளுக்காக இலண்டன் சந்தையில் விற்க அரசுத் துறைச் செயலருக்கு அதிகாரம் வழங்கவும் இதில் வரும் தேக்க நிலுவைகளை இந்திய அரசு ''பான்ஸ் (bons)'' எனப்படும் காகித நோட்டுகளை அச்சடித்து வழங்குவதன் மூலம் சரிசெய்து கொள்ளலாம் என்றும் பரிந்துரைக்கிறது.[2] மூன்றாவதாகத் தெரி விக்கப்பட்ட திட்டத்தின்படி, ஒன்று இந்தியாவும் இங்கிலாந்தும் சேர்ந்து கூட்டாக, புதிய நிலவர அடிப்படையில் இரு நாடுகளுக்கும் பொதுவான இரு உலோக நாணய முறையைச் செயல்படுத்த வேண்டும்[3], அல்லது இங்கிலாந்தில் இந்திய ரூபாயைச் சட்டபூர்வ மான நாணயமாக ஏற்றுக்கொள்ள வகை செய்ய வேண்டும்[4] என்பது. ஒவ்வோராண்டின் தொடக்கத்திலும் அரசுத் துறைச் செயலர் அவர்கள் அவ்வப்போதைய மாற்றுவீதங்களின் ஏற்ற இறக்கங்களின் அடிப் படையில் அவைத் தீர்மானமாக ஒப்புதல் பெற்று நிறுவும் அளவு களில் நாணயங்களை உற்பத்தி செய்வதை நாணயச்சாலைகளில் நெறிப்படுத்த வேண்டுமென்பது, நான்காவது திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ், நிர்ணயிக்கப்பட்ட மாற்றுவிகிதத்தைவிட 5%க்கு மேல் நடைபெற்ற மாற்றுவீதம் மிஞ்சாதவரை, வெள்ளி நாணயங் களின் தாராள உற்பத்தி நிறுத்தி வைக்கப்படும்.[5] அரசுத்துறைச் செயலர் அவர்கள் மசோதாக்களில் அவ்வப்போது குறிப்பிட்ட நாணய மாற்று விகிதங்களை நிர்ணயிக்க வேண்டுமென்றும், இலண் டனில் வெள்ளிக் கட்டிகளின் அன்றாட விலைக்கும் அரசு நிர்ணயித்த மாற்று விகிதத்திற்குமுள்ள வேறுபாடு, இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் வெள்ளியின் மீது சுங்கவரி விதிப்பதன் மூலம் சரி செய்யப்பட வேண்டுமென்பது, ஐந்தாவது திட்டமாகும்.[6]

---

1. பார்வை: ஆஸ்டன் மற்றும் யு. வெஸ்ட், ஐ.சி.சி. 1893 பின்னிணைப்பு III, பக். 281, 325.

2. அதே நூலில் அட்கின்ஸ் பக். 282

3. அதே நூலில் அட்கின்ஸ் பக். 282.

4. அதேநூலில் வுட்ஹவுஸ் பக். 33

5. அதே நூலில் [illegible] பக். 305

பேரரசுக்காக அல்லது ரூபாய் என்ற பெயரில், இரண்டு ஷெல்லிங் குக்கு ஈடான மதிப்பு கொண்ட நாணயம் ஒன்று, 4 விழுக்காடு தங்கமும் மீதி வெள்ளியும் கொண்டு இரு உலோக நாணயம் வெளியிடப்பட வேண்டுமென்பது ஆறாவது திட்டமாகும்.[1] வெள்ளி, தங்கம் இரண்டுக்குமிடையே நாணய மாற்று மதிப்பு ஏதும் நிர்ணயிக்கப்படாமல், தனித்தனியே தங்கம், வெள்ளி நாணயங்கள் நிறுவப்பட வேண்டுமென்பது ஏழாவது திட்டம்[2] மாறாகப் பெருந்தொகைக்கான தங்க நாணயங்கள் மட்டும் சிறிதளவு எண்ணிக்கையில் புழங்கவிடுதல் ஒரு திட்டமாகும்.[3] இந்த சாமர்த்தியமும் விந்தையுமான நாணயச் சீர்திருத்தத் திட்டங்களை இந்திய அரசு ஏற்க ஒப்பவில்லையென்றாலும், இத்திட்டங்களின் மைய நோக்கத்தை ஏற்றுக்கொண்டது; அதாவது, ஏற்கெனவே புழக்கத்தில் இருந்து வந்து ரூபாய் நாணயங்களுக்குப் பதிலாக, தங்கத்தைப் பயன்படுத்தாமலேயே, இந்தியாவில் தங்க திட்டத்தைக் கொண்டுவர முடிவு செய்தது. இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டுதான், மிக எளியதும், அறிவியல் அடிப்படையில் அமைந்ததுமான கர்னல் சுமித் அவர்களின் திட்டத்தைச் செயல்படுத்துவதென முடிவு செய்தது. இதற்கு முதற்படியாக, அரசு முன்னர் 1876இல் ஏற்கவியலாத குறைகள் மிக்கதென்று முன்னர் புறக்கணித்த, வங்காள வர்த்தக சபையின் தீர்மானத்தை ஏற்றுச்செயல்படுத்த முடிவு செய்து, 1892, ஜூன் 21 அறிக்கையில் தெரிவித்தது. தீர்மான வரைவாளரின் சொற்களில்[4] கூறுவதெனில்,

> ''இந்திய நாணயச்சாலைகளில் வரம்பின்றி வெள்ளி நாணயங்கள் உற்பத்தி செய்தலை உடனடியாக நிறுத்திக் கொள்வதுடன், இவ்வாறு நிறுத்தப்படுவதன் பயன் விளைவு தெளிவாக அறியப்படுமுன் புதிய உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாகாது''.

---

1. அதே நூலில், ஸ்டில்கார்ட் பக்கம் 322; மற்றும் அதேநூலில் மெரிங்டனனில் ஒத்த கருத்து பக். 316.

2. அதே நூலில் பெர்ரி, பக். 323.

3. அதே நூலில், கிளாரெமந்த் டேனியல், பக். 292.

4. சர் டேவிட்பார்பர், 'தர மதிப்பு' 1912, பக். 202-3 (சாய்வெழுத்துக்கள் மூலத்தில் பயன்படுத்தப்படவில்லை.

''தங்க வெள்ளி நாணயத் திட்டங்களுக்கிடையிலான மாற்று மதிப்பு விகிதத்தைப் பின்னர் முடிவு செய்து கொள்ளலாம். வெள்ளிக் காசுகளின் உற்பத்தி நிறுத்தப்படுதற்குச் சற்று முந்திய குறிப்பிட்டதொரு கால இடைவெளியில் நிலவிய தங்கம், வெள்ளி உலோகங்களின் மதிப்பு விகித அடிப்படையில் நாணயமாற்று விகிதம் நிறுவப் படுதலே பெரும்பாலும் மிகப் பாதுகாப்பானதும், சமன்தகவு வாய்ந்ததுமான நெறியாக அமையும். இந்த விகிதத்தை நிலையாக நிறுவிய பின்னர், நாணயச்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, ஆங்கே தங்க நாணயங்களின் உற்பத்தி தொடங்கப் படல் வேண்டும்; தொடர்ந்து எல்லாத் தொகைகளுக்கும் தங்க நாணயங்கள் சட்டபூர்வமானவையாக நிறுவப்பட வேண்டும்''.

இந்த முன்மொழிவுகள் துறைக்குழு ஒன்றன்முன் ஆய்வுக்காக வைக்கப்பட்டன; ஹெர்ஷெல் குழு என அழைக்கப்பட்ட இக்குழு, முன்மொழிவுகளில் முக்கியமான குறையொன்றைச் சுட்டிக் காட்டியது; ரூபாயின் மதிப்பை நிலைநிறுத்துவதற்குத் தேவையான தங்க இருப்புகளின் தேவை பற்றி முன்மொழிவுகள் அக்கறை காட்டவில்லை என்பதே அது. போதுமான தங்க இருப்புகள் இன்றிச் செயல்படுத்தப்பட்டால், திட்டம் வெற்றி பெறுமா என்பதில் பலர் ஐயுறவு கொண்டிருந்தனர். பல்வேறு நாடுகளில் நாணய முறைகள் செயல்படும் பாங்கினை விரிவாக ஆய்வு செய்த ஹெர்ஷல் குழுவின் அறிக்கை[1] கூறுகிறது:

''நம்முடைய (ஆங்கில) நாணய முறையில் உருவாக்கப் பட்டுள்ள பாதுகாப்புக் கூறுகளைப் பற்றி நாம் எவ்வளவுதான் வியந்து பாராட்டிப் பெருமிதம் அடைந்தாலும்கூட, மற்ற அயல் நாடுகளின் நாணய முறைகளை ஆய்வு செய்யும்போது, நமது முறைகளிலிருந்து அவை வெகுவாக வேறுபட்டிருப்பினும், அவர்களும் இடர்ப்பாடற்ற புழக்கத்தைச் செயல்படுத்தியுள்ளார்கள் என்பதையும், சிறிதளவு தங்கத்தையே (தங்க இருப்பு இல்லாமலே கூட) தங்கம் புழங்கும் நாடுகளுக்கொப்பாகத் தங்கத் தர நாணய மாற்றுமுறையைப் பின்பற்றி நடத்தவும் அவர்களால் முடிந்திருக்கிறது என்பதையும் கவனிக்காமலிருக்க முடியாது''.

எனவே, குழு, இந்திய அரசு முன்மொழிந்த திட்டத்தில் முழுமையான நிறைவு கண்டதுடன், அவற்றைப் பின்பற்ற இசைவு தெரிவித்ததுடன்[1], திட்டத்திற்குத் திருத்தம் ஒன்றையும் பரிந்துரைத்தது,

''இந்திய நாணயச்சாலைகளில் வெள்ளி நாணயங்களின் தாராள உற்பத்தி நிறுத்தப்படும்போது, பொதுமக்களிடையே வழங்குவதற்கான வெள்ளிக்காசுகளின் உற்பத்திதான் நிறுத்தப் படுகிறதென்றும், அரசுப் பரிமாற்றங்களின் தேவையையொட்டித் தங்க நாணய மாற்றுக்காகக் குறிப்பிட்ட மாற்று விகிதத்தில் குறிப்பிட்ட அளவில் வெள்ளி நாணயங்களின் உற்பத்தி தொடருமென்றும் அறிவிக்கப்பட வேண்டும். இம்மாற்று விகிதம் 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்னாக இருக்கலாம். அரசுக் கருவூலங்கள் பொதுக்கடன்களுக்கான தொகைகள் இந்த வீதத்தில் தங்கமாகச் செலுத்த அனுமதிக்கப் படலாம்.[2]

இப்பரிந்துரைகள் 1893, ஜூன் 26 இல் செயல்படுத்தப்பட்டது, 1835 ஆம் ஆண்டைப்போன்றே, இந்திய நாணயமுறை வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாய் அமைந்தது. அந்நாளில் ஒரு சட்டம் இயற்றப்பட்டு அதை நிறைவேற்றுமுகத்தான் மூன்று அரசாணை அறிக்கைகளும் வெளியிடப்பட்டு, திட்டம் நிறைவேறக் களம் அமைக்கப்பட்டது. 1893 ஆம் ஆண்டுச் சட்டம் (VIII), 1870 ஆம் ஆண்டின் இந்திய நாணயச் சட்டத்தை ரத்து செய்தது. சட்டத்தின் பிரிவுகள் 19-26, நாணயச்சாலைக்கு வரும் வெள்ளியனைத்தையும் நாணயங்களாய் வார்க்க நாணயச்சாலை அதிகாரிகளைப் பணித்தது.[3]

---

1. அறிக்கை, பத்தி 155.

2. அறிக்கை, பக். 156

3. தனியான பொதுமக்கள் நாணயவார்ப்புக்காகக் கொணரும் தங்கம் முழுவதையும் நாணய வார்ப்புக்குப் பயன்படுத்தவும் வகைசெய்யும் பிரிவுகள் இச்சட்டத்தில் இடம்பெற்றன. அவ்வாறு நாணயச்சாலைகளுக்கு வந்த தங்கம் சொற்பமே அவையும் சட்டபூர்வ நாணயமாக ஏற்கப்படாத மொகராக்களாக இருந்தன. இம்மொகராக்களுக்கு மாற்றாக வருநாட்களில் தங்க நாணயங்களே புழக்கத்தில் அனுமதிக்கப்பட இருந்தமையால், மீண்டும் மொகராக் காசுகளை உற்பத்தி செய்தல் ஏற்புடையதாகக் கருதப்படவில்லை. இதன் விளைவாக நாணயச்சாலைகளில் வெள்ளி நாணய உற்பத்தியுடன், தங்க நாணய உற்பத்தியும் நிறுத்தப்படலாயிற்று.

ii) 1882 ஆம் ஆண்டின் காகித நாணயச் சட்டத்தில் பின்வரும் பிரிவுகள் ரத்து செய்யப்பட்டன.[1]

அ) 1881 ஆம் ஆண்டின் போர்த்துக்கீசிய மாநாட்டுச் சட்டத்தின் படி, வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாக, காகித நாணயத்துறை, நோட்டுகளை அச்சடிக்க வேண்டுமென்ற சட்டப்பிரிவு 11(b) ரத்து செய்யப்பட்டது.[2]

(ஆ) கட்டி வெள்ளி அல்லது வெளிநாட்டு வெள்ளிக் காசுகளுக்கு ஈடாகக் காகித நாணயத்துறை நோட்டுகளை அச்சிட வேண்டுமென்ற சட்டப்பிரிவு 11(டி)[3] ரத்து செய்யப்பட்டது.

(இ) மொத்தக் காகித நாணய இருப்பில் 25 விழுக்காட்டுக்கு ஈடான தங்க இருப்பு தேவையெனச் சட்டப்பிரிவு (13) வரையறுத்தது.[4]

இந்தச் சட்டப்பிரிவுகளின் ரத்துடன், அரசாணைக் குறிப்பு எண். 2663-ம் வெளியிடப்பட்டது. ஹெர்ஷல் குழுவின் பரிந்துரைக் கேற்ப, இந்தியக் கருவூலங்கள், பொதுக்கடன் செலுத்தங்களுக் காக தற்போதைய எடையில் சவரன், அரை சவரன் நாணயங்களை முறையே 15 ரூபாய், 7 ரூபாய் 8 அணா ஆகிய விகிதங்களில் ஏற்றுக் கொள்ளுமென இவ்வறிக்கை கூறியது.

இந்தியாவில் தங்க நாணயங்கள் சட்டபூர்வ நாணயமாக அறிவிக்கப்படவில்லையாதலால், அரசுக் கருவூலங்களில் அதிக அளவில் இந்நாணயங்கள் திரண்டால், அரசு தனது செலுத்தங் களுக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவியலாத இக்கட்டான நிலை தோன்றமெனும் அச்சமும் நிலவியது. எனவே, அரசுக்

---

1. இச்சட்டப் பிரிவுகளின் ரத்தினையொட்டி, இவற்றைச் சார்ந்திருந்த பிரிவுகள் பலவும் (14, 15 போன்றவை) ரத்து செய்யப்பட்டன. பிரிவுகள் 21, 28 போன்றவை தங்கத் தர நாணயத் திட்டக் கொள்கைக்கேற்பத் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

2. அம்மாநாட்டுக் காலவரம்பு முடிவுக்கு வந்து விட்டமையால், இப்பிரிவு தொடர்ந்து நீடித்தல் தேவையற்றதாகிவிட்டது.

3. இச்சட்டப் பிரிவு தொடர்ந்து இடம் பெறுதல், நாணயச்சாலைகளின் மூடலுக்கு முரணாக விளங்கியிருக்கும்.

கருவூலங்களில், குறிப்பிட்ட அளவுக்கு மேல் தங்க நாணயங்கள் திரளும்போது, அவற்றைக் கருவூலங்களிலிருந்து பெயர்க்க மற்றொரு அரசாணை, குறிப்பு எண். 2664 பிறப்பிக்கப்பட்டது; அதன்படி தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் வேண்டுகோளுக்கேற்ப, நாணயத்துறை தங்க நாணயங்கள், தங்கக் கட்டிகளுக்கு மாற்றாக, 7.53344 குண்டுமணி சுத்தத் தங்கத்திற்கு ஒரு ரூபாய், சவரனுக்குப் 15 ரூபாய், அரை சவரனுக்கு 7 ரூபாய் 8 அணா ஆகிய வீதங்களில் ரூபாய் நோட்டுகள் அச்சிட்டுத் தரவேண்டும்.

ஹெர்ஷல் குழுவின் இரண்டாவது திட்டத்தைச் செயல் படுத்தும் நோக்குடன் மூன்றாவதாக ஒரு அரசாணைக் குறிப்பு, எண். 2662 வெளியிடப்பட்டது. அது கூறியதாவது,

''மறு ஆணைவரை, கல்கத்தா, பம்பாய் நாணயச்சாலை அதிகாரிகள், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 7.53344 குண்டு மணி சுத்தத் தங்கத்தை ஒரு ரூபாய்க்கு ஈடாக வாங்கிக் கொள்வார்கள் எனத் தலைமை ஆளுநர் அவர்கள் அவையில் அறிவித்துள்ளார். நிபந்தனைகளாவன:

1) கொண்டு வரப்படும் நாணயங்களும் தங்கக் கட்டிகளும் மீண்டும் நாணயமாய் வார்க்கத் தக்க தரத்தில் இருக்க வேண்டும்.

2) ஒரு சமயத்தில் கொண்டு வரப்படும் தங்கத்தின் அளவு 50 தோலாவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(3) தங்கசாலைக்குக் கொடுக்கும் தங்கத்தைக் காசாக வார்ப்பதில் ஆகும் சேதாரத்திற்காகத் தங்க கட்டியாகிலும், நாணயமாயினும் அதில் ஆயிரத்தில் கால்பங்கு குறைத்து மதிப்பிடப் படும்.

(4) நாணயசாலையில் கொடுக்கப்படும் தங்க நாணயம் அல்லது கட்டிக்குத் தங்கசாலை அதிகாரி உடைமையாளருக்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார். அதன் அடிப்படையில் நாணயச்சாலை மதிப்பீட்டு அலுவலர் அதற்காக எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படலாம் என்ற சான்றிதழ் தருவார். இச்சான்றிதழைக் கல்கத்தா, பம்பாய் பொதுக் கருவூலங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு காட்டி உரிய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். தொகை

எவ்வளவு நாட்களுக்கு தரப்படலாமென்பதைத் தலைமைத் தணிக்கை அலுவலர் அவ்வப்போது அறிவிப்பார்''.

இந்நடவடிக்கைகள் மூலம் ஓரளவு தலைதூக்க முயன்ற கொள்கை சிறிதளவேனும் வெற்றி காண்பதற்கு முன்னரே, அதைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1892 ஆம் ஆண்டின் பன்னாட்டு நாணயமுறை மாநாடு தோல்வி யடைந்த பின், அசல் விலைக்கு மேல் மிகை மதிப்பிடப்பட்ட வெள்ளியை ஏராளமாகத் தேக்கி அதன் சுமையால் வருந்திய பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய இரு நாடுகளும் சில நிபந்தனைகளுக்குட்பட்டுத் தங்கள் நாணயச்சாலைகளில் வெள்ளி நாணயங்களின் தாராள உற்பத்தியை 151/2:1 என்ற வீதத்தில் தொடங்கப் பிரிட்டானிய அரசுடன் பேரம்பேசத் தொடங்கினர். அவர்களது நிபந்தனைகளில் சில[1]:

1) தாராள வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்பட் டுள்ள இந்திய நாணயச்சாலைகளில், வெள்ளி நாணய உற்பத்தி தொடங்கப்படுவதுடன், இந்தியாவில் தங்க நாணயங்களுக்குச் சட்டபூர்வ இசைவுதரக் கூடாது.

2) இங்கிலாந்து வங்கியின் வெளியீட்டுத்துறையில் ஐந்தில் ஒருபங்கு வெள்ளிக்கட்டிகள் இருப்பாக வைக்கப்பட வேண்டும்.

3) (அ) இங்கிலாந்தில் சட்டபூர்வ வெள்ளி நாணயத்தின் மதிப்பை 10 சவரன் வரை உயர்த்த வேண்டும்.

ஆ) வெள்ளி மதிப்பின் அடிப்படையில் 20 ஷில்லிங் காகித நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு அவை சட்டபூர்வ நாணயமாக ஏற்கப்பட வேண்டும்.

இ) 10 ஷில்லிங் மதிப்புள்ள தங்க நாணயங்களைக் கொஞ்சங்கொஞ்சமாக வழக்கறுத்து விட்டு அவற்றுக்குப் பதிலாக 10 ஷில்லிங் காகித நாணயத்தைப் புகுத்த வேண்டும்.

4) ஒவ்வோராண்டிலும் குறிப்பிட்ட அளவில் வெள்ளி நாணய உற்பத்திக்கு ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

5) இங்கிலாந்து நாட்டு நாணயச்சாலைகளில், இந்தியா ரூபாய், பிரிட்டானிய டாலர் ஆகியவற்றின் தாராள உற்பத்தி தொடங்கப்பட வேண்டும்; இந்நாணயங்கள் கடற் சந்திக் குடியேற்ற நாடுகளிலும், வெள்ளி நாணயமுறைக் காலனி நாடுகளிலும் சட்டபூர்வ நாணயங்களாகப் புகுத்தப்பட வேண்டும்.

6) எகிப்தில் வெள்ளி நாணய உற்பத்திக்குக் காலனியாதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7) ஹஸ்க்கிசன் திட்டத்தைப் போன்று வாய்ப்பான திட்டமொன்று கொண்டுவர வேண்டும்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது, கருவூலத்தை மீண்டும் தனது பழைய நிலைக்கே திரும்ப முற்பட்டது. பிரிட்டானிய நாணய முறையில் மாற்றத்தை விளைவிக்கக்கூடிய நிபந்தனைகள் எதையும் பற்றிப் பேசவும் அது மறுத்துவிட்டது. இந்தியாவின் நாணயச்சாலை களை (தாராள வெள்ளி நாணய உற்பத்திக்கு)த் திறந்துவிடுதல் ஒன்றே, உலகில் தங்கம் வெள்ளி நாணயங்களுக்கிடையே நிலை யான மதிப்பு விகிதம் நிறுவப் பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றுக்காகப் பிரிட்டானியப் பேரரசு ஆற்றக்கூடிய மிகப்பெரும் பங்கு என அது வாதாடியது.[1] அமெரிக்க, பிரெஞ்சு நாட்டுப் பேராளர்கள் இதற்கு இசைவு தெரிவித்ததுபோல் தோன்றியது. எனினும், இந்திய அரசு மேற்கொண்ட உறுதியான நிலைமை காரணமாகப் பேச்சுவார்த்தை கள் தோல்வியடைந்தன. நெடுங்காலமாக இடர்ப்பாடுகள் பல வற்றைச் சந்தித்து வந்த இந்திய அரசு மீண்டும் பலிகடா ஆக மறுத்தது. பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் நலன்களுக் காக இந்தியாவுக்கு இழப்பையும் இன்னல்களையும் தரும் திட்டத் திற்கு இசைவுதர மறுத்தது. இத்திட்டத்தினைப் பற்றிய தனது கருத் துக்களைத் தெரிவித்து இந்திய அரசு குறிப்பிட்டிருந்ததாவது:[2]

''பேரரசி அவர்களது அரசாங்கத்திற்கு முன்மொழியப்பட் டுள்ள ஏற்பாடுகளின்படி தேவைப்படும் மாற்றங்களாவன: பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், தங்கள் நாணயச் சாலைகளில் தாராள வெள்ளி நாணய உற்பத்தியைத் தொடங்கும்;

1. பார்வை: வெளியுறவுத் துறைக்கான கடிதம், தேதி. 1897 அக்டோபர் 16, பி.பி.சி. 8667, 1897. பக். 15.

2. அரசுத் துறைச் செயலருக்கு 1897 அக்டோபர் 16இல் அனுப்பப்பட்ட கடிதம், பக். 9. (சாய்வெழுத்துக்கள் மூலத்தில் இல்லை)

தாராளத் தங்க நாணய உற்பத்தியும் அங்கு தொடரும்; மேலும் இருவகை உலோக நாணயங்களும் சட்டபூர்வ நாணயங்களாகத் தங்குதடையின்றிப் புழங்கும். பிரான்சில் நாணயமாற்று வீதம் மாற்றப்படாது; அமெரிக்காவில், பிரான்சில் நிலவும் 15 1/2:1 என்ற வீதத்திற்கு மாற்றப்படும். இந்தியாவோ தங்க நாணய உற்பத்தியை அறவே நிறுத்திவிட்டு வெள்ளி நாணயங்களை மட்டுமே உற்பத்தி செய்வதுடன் தங்க நாணயங்களை சட்டபூர்வமாக ஆக்குவதில்லையென்று உறுதிமொழியும் தர வேண்டும். பிரான்சும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இரு உலோக நாணய முறையைப் பின்பற்றும். ஏனைய பிற நாடுகள் ஒற்றை (தங்க) நாணய முறையைப் பின்பற்ற, இந்தியா மட்டும் வெள்ளி (ஒற்றை) நாணய முறையைப் பின்பற்ற வேண்டிருக்கும்.

★ ★ ★

''இவ்வாறு ஆலோசனை கூறப்பட்ட நடவடிக்கைகள் அவற்றின் நோக்கத்தில் தற்காலிகமாக வெற்றிபெற்றாலும் கூட, இந்திய ரூபாயின் மதிப்பு திடீரென 16 ஷில்லிங்கிலிருந்து 23 ஷில்லிங்குகளாக ஏறி, அதன் விளைவாக இந்திய வணிகமும் தொழில் துறையும் பெரிதும் குழப்பத்திற்குள்ளாகும். அத்தகைய உயர்வு தற்காலிகமாகவேனும், எமது ஏற்றுமதி வர்த்தகத்திற்குச் சாவுமணி யடித்துவிடும்... இத்தகையதோர் ஏற்பாடு மற்ற இரு நாடுகளை (பிரான்சு, அமெரிக்கா) விட இந்தியாவையே கடுமையாக பாதிக்கக் கூடியதாகும்; ஏனெனில் இத்திட்டம் தோல்வியடைய நேருமானால் அதனால் விளையும் பேரழிவு முழுவதும் இந்தியாவின் மீது மட்டும் சுமத்தப்படும். இத்திட்டம் முறிவடைந்து முடிவுக்கு வந்தால் மூன்று நாடுகளுக்கும் என்ன விளைவுகள் நேரிடும்? பிரான்சு நாட்டிடம் ஏராளமான தங்க இருப்பு உள்ளது; அமெரிக்க நாட்டில் அவ்வளவு தங்க இருப்பு இல்லையெனினும், இப்போதைய நிலையில் அது பிரான்சைப் போன்றே நன்னிலையில் இருக்கிறது. புதிய ஒப்பந்தத்தைச் செயல்படுத்த முனையும்போது, போதிய முற்காப்பு நட வடிக்கைகள் எடுக்கப்படாவிடில், அவ்விரு நாடுகளின் தங்க இருப்புகள் விரைவில் வெகுவாகக் குன்றிவிடும்; சோதனை முயற்சியில் தோல்வி கண்டால், இரு நாடுகளும் பேரிழப்புக்குள்ளாகுமென்பது உண்மையே. ஆனால் இவ்விரு நாடுகளிலும் தங்க இருப்புகள் குன்றி வரத் தொடங்கும் அறிகுறிகள்

நாணயங்களும் உற்பத்தி செய்யப்படும் என்பதைத் தவிர நாணய முறையில் பெரிதாக மாற்றமேதும் நிகழ்ந்து விடப் போவதில்லை. ஒப்பந்தம் முறிந்துவிட்டால், அவ்வெள்ளி நாணய உற்பத்தியும் கூட நிறுத்தப்பட்டுவிடும். எனவே, இப்பகுதி சோதனை முயற்சி தோல்வியுற்றால், அதனால் விளையும் இழப்பு முழுவதையும் இந்தியாவே தாங்க நேரிடும். இத்திட்டத்தின் தொடக்கத்தில் ரூபாயின் மதிப்பு மிக வேகமாக உயரும்; திட்டம் தோல்வி யடையும்போது ரூபாயின் மதிப்பு தலைகுப்புறப் படுபாதாளத் திற்கு வீழ்ச்சியடையும். அத்தருணத்தில், வெள்ளியின் விலையில் நேரும் ஏற்ற இறக்கங்களுக்கிடையே, எமது திட்டத்தின் மதிப்பில் கடுமையான ஏற்ற இறக்கங்கள் வராது தடுக்க யாது செய்ய இயலும்? இந்திய நாணயச்சாலைகளில் வெள்ளி நாணய உற்பத்தி தற்போது தொடங்கப்பட்டால், பின்னர் அதை நிறுத்துதென்பது நடைமுறையில் இயலாதென்பதால், எந்தவிதத் தீர்வுக்கும் வழி யிருக்காது எமக்கு. அப்படியே வலிந்து நிறுத்தப்பட்டாலும், நிறுத்தப்படு முன்னரே, ஏராளமான வெள்ளி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்து விட்டிருக்குமென்பது உறுதி.''

தங்கத் திட்டத்திற்கு மாறிவிடுவது என்ற தனது தொலை நோக்குக் குறிக்கோளிலிருந்து பின்வாங்குவதில்லையென முடிவு செய்துவிட்ட இந்திய அரசு, இப்போதைய நாணய முறையின் விளை வாக முக்கியமான சிக்கல் ஒன்றை எதிர்கொள்ள நேர்ந்தது. 1893 ஆம் ஆண்டில் வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்படுவதற்கு முன்னரே, இந்திய மக்களின் தேவைகளை நீண்ட வருங்காலத்திற்கு நிறைவு செய்யுமளவுக்கு ஏராளமான வெள்ளி ரூபாய் (நாணய) இருப்பு இந்தியாவில் இருந்தது. வெள்ளி நாணய உற்பத்தி நிறுத்தப்பட்ட தொடக்க ஆண்டுகளில், இந்திய (ரூபாய்) நாணயங்கள் ஏராளமான அளவில் மட்டுமின்றித் தேவையில்லாத அளவிலும் பல்கிப் பெருகியிருந்தன. மிக விரைவிலேயே அவற்றின் இருப்பு குறையத் தொடங்கி 1898 ஆம் ஆண்டின் இறுதியில் பற்றாக்குறை நிலைமைக்கு வந்துவிட்டதால், இந்திய நாணயச் சந்தையில் தள்ளுபடி வீதம் 16 விழுக்காட்டுக்கு உயர்ந்துவிட்டது; இப்பற்றாக்குறை மேலும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருந்தது. 'நாணயப் பஞ்சத்திற்கு' எதிரான கூக்குரல் பெருகியதன் விளைவாக, அரசு, 1892 ஆம் ஆண்டில் சட்டம் ஒன்று (எண் 11) இயற்றி, இலண்டனில் அரசுத் துறைச் செய லரிடம் அளிக்கப்படும் தங்கத்திற்கு ஈடாக இந்தியாவில் ரூபாய் நோட்டு களை அச்சிட்டுக் கொள்ள அனுமதி அளித்தது. இந்திய நாணயச்

சந்தையில் நிலவிய இறுக்கத்தை இருவகைகளில் தளர்த்த இச்சட்டம் உதவியது. 1893ஆம் ஆண்டில் எடுத்த நடவடிக்கைகளினால், தங்க நாணயங்கள் சட்டப்பூர்வமாக இடம்பெற இயலவில்லையாதலால், வெள்ளி ரூபாய் நாணயங்களில் பற்றாக்குறை ஏற்பட்டபோது அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. புதிய சட்டம், தங்க நாணயங்களைச் சட்டபூர்வமாக ஆக்காவிட்டாலும் கூட, அச்சிட அனுமதிக்கப்பட்ட ரூபாய் நோட்டுக்களுக்குப் பின்பலமாகப் பொது மக்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தது.[1] நோட்டுகள் அச்சிடப்பட்டுப் புழக்கத்தில் விடுவதற்கு முன்னர், தங்க நாணயங்களை முடக்குதற்கு இச்சட்டம் வழி செய்திருக்கலாம். ஆனால் செலுத்தப்படும் தங்கம் இந்தியா வந்துசேர மூன்று நான்கு வார காலதாமதம் ஆகுமாதலால், தீர்வு தனது மெத்தனத் தன்மையால் பயனற்றதாகிவிடுமென அஞ்சப்பட்டது;[2] இதனைத் தவிர்க்கும் பொருட்டு, இலண்டனில் அரசுத் துறைச் செயலரிடம் தங்கம் செலுத்தப்பட்ட மாத்திரத்திலேயே, சட்டப்படி அது இந்தியாவின் காகித நாணயத்துறையிடம் செலுத்தப்பட்டதாக ஏற்றுக்கொண்டு, அதற்கு ஈடாக ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட வேண்டுமென்று கூறப்பட்டது.

இவ்வாறு நடவடிக்கை எடுத்ததன் வாயிலாகச் சூழ்நிலையின் அவசரத்தன்மையே உணர்த்தப்பட்டது. திடமான நாணயத் திட்டம் என்பது விரிவு, சுருக்கம் இரண்டையும் எளிதில் ஏற்றுத் தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அரசாங்கம், 1893 ஆம் ஆண்டில் நாணயச்சாலைகளை மூடியதன் வாயிலாக, ஆபத்தின் விளிம்பு வரை நாணயங்களைச் சுருக்கிவிட்டது. 1898 ஆம் ஆண்டில் நாணய விரிவாக்கத்திற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. இவ்வுகந்த விளைவைத் தோற்றுவிப்பதற்கு இரண்டு வழிமுறைகள் தென்பட்டன. அவற்றுள் ஒன்று, மூடிய நாணயச் சாலைகளை மூடியபடியே விட்டுவிட்டு, சவரனைப் பொதுவான சட்டப்பூர்வமான நாணயமாக அறிவிப்பதன் வாயிலாய் இந்தியாவில் நாணயங்களின் அளவைக் கூட்டுதல் ஆகும். இதனைத்தான் இந்திய

1. 1893 ஆம் ஆண்டு அறிவிப்பு எண். 2664 இன்படி, தங்கத்திற்கு பதிலாக தலைமைத் தணிக்கை அதிகாரியிடம் மட்டுமே ரூபாய் நோட்டுகள் தரப்படும்.

2. 1898 [illegible] 14[illegible] மான்பாடு சர் ஜேம்ஸ் வெஸ்ட்லாண்டு

அரசின் திட்டம் முன்மொழிந்தது. 1898 மார்ச்சு, 8ம் நாள் கடிதத்தில்[1] அது கீழ்வருமாறு வாதிட்டது:[1]

''வணிகத்துறை தன்னியல் நடவடிக்கைகளையே மேற்கொள்ளுமென்பதில் நம்பிக்கை வைப்பதே எமது இப்போதைய உத்தேசம். வணிகப் பயன்பாடுகளுக்குத் தேவைப்படும் நாணயங்களின் அளவு ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே வருகிறது. இக்கூடுதலை தேவைக்கேற்ப நாணயங்கள் வார்ப்பதை நாம் நிறுத்தி விட்டமையால், நாணயங்களின் கோரிக்கை மிகுதியடைவதன் விளைவாக, இவற்றின் மதிப்பு உயர்ந்து கொண்டே வந்து ஒரு கட்டத்தில், தங்க நாணயங்களின் வருகை தடையற்றுப் பெருகிப் புழக்கத்தில் நிலைபெறும். இவ்வாறாக நமது நிலை காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் வலுவடையும்; எனினும் தொடக்க காலத்தில் நாணயமாற்று நிலைப்பாட்டுக்குத் தேவையான அளவுக்கு மேல் தங்க நாணயப் புழக்கம் அனுமதிக்கப்பட மாட்டாது. புழக்க நாண யங்களில் பெரும்பகுதி வெள்ளி நாணயங்களாகவே இருக்கும்; அவற்றின் மதிப்பு (தற்போது இருப்பதைப்போல்) தக்க வீதத்தில் பராமரிக்கப்படும். தங்க நாணயங்களும் குறிப்பிட்ட சிறு அளவிற்குமேல் போகாதவாறு புழக்கத்திலிருப்பதில் நாம் மனநிறைவு கொள்வோம். வெளிநாட்டுச் செலுத்தங்களுக்குத் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டால், அது நாணயப் பஞ்சத்தைத் தோற்று வித்து வெள்ளி நாணயங்களின் மதிப்பை வெகுவாய் உயர்த்தி அதன் விளைவாய் தங்க நாணயங்கள் மீண்டும் இந்தியாவுக்கே திரும்ப வழிவகுக்கும்; குறைந்தது, தங்கம் மேலும் வெளிச் செல்லுவதையாவது தடுத்துநிறுத்தும். இவ்வாறாக, ஆங்கில நாட்டைப் போன்ற பரவலான தங்க நாணயப்புழக்கம் இன்றியே, பிரான்சு நாட்டு நாணய முறையிலிருந்து பெரிதும் வேறுபடாத பான்மையில் இந்தியாவில் தங்க நாணயத் திட்டத்தை எய்திவிட முடியும். பரவலான தங்க நாணயப் புழக்கம் இங்கு ஒரு போதும் தேவைப்படாது''.

தங்கத்தைப் பயன்படுத்தி நாணயமுறையை விரிவாக்கல் அன்றி, இதே குறிக்கோளை அடைய மற்றொரு வழியும் உண்டு. நாணயங்களின் தேவை அதிகரிக்கும் போதெல்லாம், அரசாங்கம், தேவையான அளவுக்குக் கூடுதலாக வெள்ளி ரூபாய்களையே உற்பத்தி செய்யலாம் என்பதே அம்மாற்றுத் திட்டம். நாணயச்சாலைகள் மூடப்பட்டபோதிலும், 7.53344 குண்டுமணி சுத்தத் தங்கத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வெள்ளி ரூபாய்கள் தர, அரசு அறிக்கை 2662 இன்

1. நாணயமுறைத் திட்டங்கள் குறித்த இந்திய அரசின் கடிதப் போக்குவரத்துகள் - 1898ஆம் ஆண்டின் சி. 8840, பக். 3.

மூலம் உறுதியளித்துள்ளது[1] நினைவுகூரத்தக்கது. இச்சட்டத்தைச் செயற்படுத்தும் முகத்தான் மட்டிலுமே அரசு அவ்வப்போது தேவையான அளவில் வெள்ளி நாணயங்களை உற்பத்தி செய்து கொள்ளலாம். நாணய விரிவாக்கத்திற்கு இம்மாற்று முறையைப் பரிந்து ஆதரித்தவர்களில் முன்னிலை பெறுவோர் திரு. புரோபின் அவர்களும், திரு. ஏ.எம். லிண்ட்சே அவர்களும் ஆவர். இந்திய அரசின் புதிய நாணயமுறைத் திட்டம், தங்கத்தைச் சட்டபூர்வ நாணயமாக்குவதன் மூலம் நாணய முறையை விரிவாக்குகின்றதென்றாலும், முற்றிலும் மாற்றவியலா நாணயமாக்க முனைவதால், அவற்றின் மாற்று மதிப்புக்கு நிலைபாடு தரும் நோக்கத்தையே முறியடிக்கக்கூடிய திட்டமென அவர்கள் இருவரும் குறை கூறினர். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரூபாய் நாணயத்தை மாற்றக்கூடியதாக ஆக்கவல்ல தங்கள் திட்டமே, இந்திய அரசின் திட்டத்தைவிட மேலானது என்றும் அவர்கள் உரைத்தனர். அவ்விருவரின் திட்டங்களுமே ரூபாயை மாற்றக்கூடியவையென்றாலும் அதனை எவ்வாறு எய்துவது; அவை வேறுபட்டிருந்தன. புரோபின் அவர்களது முன்மொழிவாவது.[2]

1. 1893 ஆம் ஆண்டின் அரசரிக்கை சட்டமாக வேண்டும்; அதன்படி இந்திய மக்கள் தங்கத்திற்கு ஈடாக, 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்சு என்ற வீதத்தில் இந்திய நாணயச்சாலைகளிலிருந்தும், ரிசர்வ் கருவூலங்களிலிருந்தும் ரூபாய் பெற்றுக்கொள்ள வகை செய்ய வேண்டும்.

2. இவ்வாறு பெறப்படும் தங்கம், மொத்தக் காகித நாணய இருப்பின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்; தங்கம் இங்கிலாந்து நாட்டின் சட்டபூர்வ தங்கக் காசுகளாகவோ, ஆயிரம் ரூபாய் மதிப்புக்குக் குறையாத தங்கக் கட்டிகளாகவோ இருக்க வேண்டும்.

3. ரூபாய் நாணயத்திற்குத் தானாகவே சுருங்கும் ஆற்றலைத் தருவதன் பொருட்டு, காகித நாணயத்தின் இருப்பு தொடர்ந்து ஓராண்டுக்குத் தங்க நாணயத்தின் இருப்பை விடக் குறைவாக இருக்க நேரிடும் போதெல்லாம் ரூபாய் நோட்டு

1. காண்க: மேலே காட்டிய பத்தி.

2. பார்வை: அவரது, ''இந்திய நாணயங்களும் நாணயமுறையும்'', எட்டிங்ஹாம் வில்சன், [illegible]

களுக்கோ, ரூபாய் நாணயங்களுக்கோ, அவை 10,000 ரூபாய் மதிப்புக்கு குறையாமல் கொண்டு வருவோர்க்கு 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்சு விகிதத்தில் தங்கம் வழங்கலாமென்று அரசாங்கத்துக்கு (வழங்க வேண்டுமென்ற கட்டாயமின்றி) அதிகாரம் தரப்பட வேண்டும்.

4. தற்போது புழக்கத்திலுள்ள 10000 ரூபாய் நோட்டுகளைத் திரும்பப் பெறவேண்டும், அத்துடன் வருங்காலத்தில் வெள்ளி ரூபாய் அல்லது தங்கம் தருவோர்க்கு இவை தரப்படலாம் என்ற நிலையை மாற்றித் தங்கம் தருவோர்க்கு மட்டுமே பத்தாயிரம் ரூபாய் நோட்டுகள் தரப்பட வேண்டும். பத்தாயிரம் ரூபாய் நோட்டுகளைத் திரும்ப ஒப்படைப்பவர்களுக்கு ஈடாக வழங்குதற் பொருட்டுத் தங்கக் கட்டிகள் இருப்பில் வைக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு திரு. புரோபின் தந்த திட்டத்தினின்றும், திரு. லிண்ட்சே அவர்களின் திட்டம் பெரிதும் மாறுப்பட்ட தன்மையில் அமைந்திருந்தது. இந்தியாவில் 1 ரூபாய்க்கு 16 1/16 பென்சு என்ற வீதத்தில் ரூபாய் வரைவோலைகளையும், இலண்டனில் ரூபாய்க்கு 15 3/4 பென்சு என்ற வீதத்தில் ஸ்டெர்லிங் வரைவோலைகளையும் வரம்பின்றி விற்க அரசு முன்வர வேண்டுமென அவர் முன்மொழிந்தார்.[1] இக்கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவையான நிதியை இந்தியாவிலும் இலண்டனிலும் தனியே ஒதுக்கித் தங்கத் திட்டம் அலுவலகங்களில் இருப்பு வைக்க வேண்டும். இலண்டன் அலுவலகத்தில் அங்கு தரப்படும் வரைவோலைகளுக்கான நிதி, பின்வரும் வகைகளில் திரட்டப்படலாம்:

1) ஐந்து அல்லது பத்து மில்லியன் ஸ்டெர்லிங் மதிப்புள்ள தங்கத்தைக் கடனாகப் பெறுதல்

---

1. அவரது திட்டத்தின் தொடக்க கால விளக்கம் கல்கத்தா ஆய்விதழின் (Calcutta Review) 1878 அக்டோபர் இதழில், ''இந்தியாவிலும் இங்கிலாந்திலும் தங்க நாணய உற்பத்தியின்றியே, தங்கத் திட்டத்தைக் கொணரல்'' என்ற தலைப்பிலான கட்டுரையில் காணப்படுகிறது; அண்மைக்கால விளக்கம் அவரது, 'ரிகார்டோவின் நாணய மாற்றுத் தீர்வு' என்ற அறிக்கையேட்டில் காணப்படுகிறது. எட்டிங்காம் வில்சன் 1892. இத்திட்டம் பயோனீர் எனும் அலகாபாத் செய்தித் தாளில் 1898 ஜனவரி 6 ஏட்டில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இவற்றின் முழு மேற்கோள்கள் சி. 8840, 1898 . பக். 13இல் காணப்படுகின்றன.

2) இந்தியாவில் விற்கப்படும் வரைவோலைகள் வாயிலாகக் கிடைக்கும் வரவுத் தொகைகள்.

3) ரூபாய் நாணயங்களை உருக்கித் தயாரிக்கப்படும் வெள்ளிக்கட்டிகளின் விற்பனை மூலம் பெறும் தொகைகள்.[1]

4) தேவைப்பட்டால், மேலும் தங்கம் கடன்வாங்கல்

இந்தியாவின் தங்க திட்ட அலுவலகத்தில் வரைவோலைகளுக்குத் தேவையான நிதி பின்வரும் வகைகளில் திரட்டப்படலாம்:

1) இலண்டனில் வரைவோலைகள் விற்பதன் வழிப் பெறப்படும் தொகைகள்

2) இலண்டனின் தங்கத் திட்ட அலுவலகத்தில் வாங்கப்படும் வெள்ளிக்கட்டிகளைத் தேவைப்படும்போது உருக்கிப் புதிய ரூபாய் நாணயங்களை உற்பத்தி செய்தல்.

இந்திய அரசுப் பரிந்துரைத்த திட்டத்திற்கும் திருவாளர்கள் புரோபினும், லிண்ட்சேயும் முன்வைத்தத் திட்டங்களுக்குமிடையிலான தலையாய வேறுபாடு இதுதான். இந்திய அரசின் திட்டம் தங்க நாணயங்களின் உற்பத்தி வாயிலாகத் தங்க திட்டத்தை நிறுவ முற்பட்டது; பிந்தையோரின் திட்டங்களோ தங்க நாணய உற்பத்தி ஏதுமின்றியே தங்கத் திட்டத்தை நிறுவ முனைந்தன.

தங்க நாணய உற்பத்தியுடன் தங்கத் திட்டம் நிறுவுதல், தங்க நாணய உற்பத்தியின்றியே தங்கத் திட்டம் நிறுவுதல் எனும் இரு திட்டங்களின் சாதக பாதகக் கூறுகளை ஆய்ந்து முடிவெடுப்பதற்காக, இந்திய அரசு, சர் ஹன்றி பௌலர் அவர்களின் தலைமை

---

1. இலண்டனில் தங்கத்துக்கான வரைவோலைகளின் கோரிக்கை மிகவும் அதிகரித்துத் தேவையேற்பட்டால், ரூபாய் நாணயங்களை உருக்கி வெள்ளிக்கட்டிகளாக விற்றுத்

யில் துறைசார் குழுவொன்றை நியமித்தது. பரவலான விசாரணைக் குப் பிறகு குழு கீழ்வரும் கருத்துக்களைத் தெரிவித்தது:[1]

''50. திரு. புரோபின் அவர்களது திட்டம் பற்றிக் குழுவின் கருத்தாவது: பன்னாட்டு நாணயமாற்று ஊடகமாக வெள்ளிக் கட்டிகள் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும், வெள்ளியை நிலையான உள்நாட்டு நாணயமாய்ப் பயன்படுத்துவதற்கான முன்மாதிரி ஏது மில்லை. மேலும் நாணயத் திட்டத்தின் தர உலோகம் (தங்கம்), காசுகளின் வடிவில் வசதியாக அன்றாடப் புழக்கத்தில் இருக்கக் கூடாதென்பது இந்திய, ஐரோப்பிய நடைமுறைகள் எவற்றோடும் இசைந்து வரவில்லை. 1819 ஆம் ஆண்டின் பீல் சட்டம், பணக் கொடுக்கல் வாங்கல்களை எளிமைப்படுத்துவதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக, இங்கிலாந்து வங்கிக்கு அதன் தங்கக் கட்டிகள், நோட்டுகள் ஆகிய இருப்புகளைப் பவுண்டு 200க்கு மேல் மதிப்புள்ள சிப்பங்களாக விற்றுக்கொள்ளக் குறுகிய காலத்திற்கு அனுமதி வழங்கியது. இருப்பினும் இதற்காக வங்கிக்கு வந்த கோரிக்கை வெகு சொற்பத் தொகைக்கானதே. இச்சட்டத்தின் கூறுகளை ஆதாரமாகக் காட்டி புரோபின் அவர்களது திட்டத்தை ஏற்றுக்கொள்ளவியலாது.

★ ★ ★

''53. இந்தியாவில் தங்க நாணயத் திட்டத்திற்கு ஆதரவாகவும், புரோபினின் வெள்ளிக்கட்டித் திட்டத்தினை நிரந்தரமாகச் செயற் படுத்துவதற்கு எதிராகவும் கூறப்பட்ட வாதங்களை, 'மாற்றுத் திட்டம்' எனப்படும் லிண்ட்சேயின் சாதுரியமிகு திட்டத்திற்கெதி ராக இன்னும் வலுவாகவே கூற இடமுண்டு. கணிசமான தங்க நாணயப் புழக்கம் இல்லாத நாணய முறை மக்களின் நம்பிக்கை யைப் பெறலரிது என்பதை வலியுறுத்தும் ராத்ஷீல்டு பிரபு, சர் ஜான் லுபோக், சர் சாமுவேல் மாண்டேகு போன்றவர்கள் அளித்த வாக்கு மூலங்கள் குழுவின் கருத்தில் ஆழமாய்ப் பதிந்துள்ளன. இக்கருத் தோட்டங்களனைத்தையும் தொகுத்து நோக்கும்போது, லிண்ட்சே யின் திட்டத்தினை ஏற்றுச் செயல்படுத்தினால், இந்தியாவின் வருங் கால வளர்ச்சிக்கு இன்றியமையாததான மூலதன வரவு மிகவும் தடைபடும் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர்ப்பதற்கில்லை.

1. இந்திய நாணய முறையை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, பி.பி.சி. 9390, 1899 பக். 15.

எனவே லிண்ட்சே அவர்களது திட்டத்தையோ, அதனையொத்த, காலஞ்சென்ற ரபேல், மேஜர் டார்வின் ஆகியோரது திட்டங்களையோ நிலையான திட்டங்களாக எம்மால் பரிந்துரைக்க இயலவில்லை; மேலும் இன்றைய சூழ்நிலையில் இத்திட்டங்கள் எவற்றையும் ஸ்டெர்லிங் மாற்று வீதத்தை நிறுவுதற்கான தற்காலிகத் திட்டங்களாகக் கூடப் பரிந்துரைப்பதற்கில்லை.

இந்திய அரசின் திட்டமே ஏற்றதெனக் குழு பரிந்துரைத்து, அதனை நிலையான திட்டமாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தொகுத்துரைத்தது; அதனைக் குழுவின் கூற்றுகள் வடிவிலேயே காண்போம்:

''54. பிரிட்டானிய சவரனை இந்தியாவின் சட்டபூர்வ நாணயமாகவும், தற்காலப் புழக்க நாணயமாகவும் ஆக்குவதை நாம் ஆதரிக்கிறோம். அதேசமயம் பேரரசு நாணயச்சாலைகளின் ஆஸ்திரேலியக் கிளைகள் பின்பற்றும் நடைமுறைகளையொட்டி, இந்திய நாணயச்சாலைகளும், தங்க நாணயங்களைத் தடையின்றி உற்பத்தி செய்யத் தொடங்குதல் அவசியமென்றும் கருதுகிறோம். இதன் விளைவாக சவரன் ஒரேமாதிரி நிலையில் உள் நாட்டில் அச்சிடப்பட்டும் புழங்கியும் வரும். இந்நடவடிக்கைகளால், தங்கத்தின் தடையற்ற உள்வரவும், வெளிச்செலவு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவில் தங்கத் திட்டம் வலிவான வகையில் நிறுவப்படுமென எதிர்நோக்குகிறோம்; எனவே இந்நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறோம்''.

அரசுத் துறைச் செயலர், இப்பரிந்துரைகளை ஏற்று[1] பின்வருமாறு கூறுகிறார்:

''இந்திய நாணயச்சாலைகள் தங்குதடையற்ற வெள்ளி நாணயங்கள் உற்பத்தி செய்வதை நிறுத்தும் கொள்கை பின்பற்றப்படும்''

என முடிவுசெய்து, இந்திய அரசாங்கம் தனது நிலைகளுக்கேற்ப இயன்றவரை விரைவில்,

''பிரிட்டானிய சவரனை இந்தியாவில் சட்டபூர்வ நாணயமாகவும், அன்றாடப் புழக்க நாணயமாகவும் ஆக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன், குழு பரிந்துரைத்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுத் தங்க நாணய உற்பத்திக்கான ஆயத்தப்பணிகளைத் தொடங்கவும்'' கேட்டுக்கொண்டார்.

(இந்திய) அரசு, 1899 ஆம் ஆண்டின் இந்திய நாணய உற்பத்தி காகித நாணயச் சட்டம் (XXII)ஐ இயற்றி, முதலாவது பரிந்துரைக்குச் செயல் வடிவம் தந்தது. இச்சட்டம் இந்தியாவெங்கிலும் சவரன், அரைசவரன் நாணயங்களை, முறையே 15 ரூபாய், 7 1/2 ரூபாய் எனும் வீதங்களில், சட்டபூர்வ நாணயங்களாக ஆக்கியதுடன், இவற்றுக்கு மாறாக ரூபாய் நோட்டுடன் வழங்க அனுமதியளித்தது.

இந்திய நாணய முறையைத் தங்கத்தின் அடிப்படையில் அமைப்பதுடன், தங்க நாணயங்களின் தாராள உற்பத்திக்கெனத் தனியே ஒரு நாணயசாலை அமைக்கவும் அரசு ஆர்வம் காட்டியது. ஆனால், அந்நாளையச் சாலைகள், ஆங்கில சவரனையே அச்சிட்டு வெளியிட வேண்டியிருக்கும் என்பதால், இந்திய அரசு முழுக்க முழுக்க பிரிட்டானியக் கருவூலத்தின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்தது. 1870 ஆம் ஆண்டின் நாணய வார்ப்புச் சட்டத்தின்படி, இந்திய நாணயச் சாலையொன்றைப் பேரரசு நாணயச்சாலையின் கிளையாக ஆக்கும் அரசச் சாற்றுகை ஒன்று தேவைப்பட்டது; இதனை ஆங்கில நிதித் துறையின் ஒப்புதலையொட்டியே செய்ய இயலும். சவரனை இந்தியாவின் சட்டபூர்வ நாணயமாக்கும் சட்டத்தை நிறைவேற்றும் அதேசமயத்தில், அரசச் சாற்றுகையும், வெளியிடப்பட வேண்டுமென்பது இந்திய அரசின் நோக்கம். இதற்காக, அரசச் சாற்றுகை வந்து சேரும்வரை, சட்ட நிறைவேற்றம் ஒத்திப்போட்டு நிலுவையில் வைக்கப்பட்டிருந்தது;[1] மேலும், 'சட்ட மற்றும் நுணுக்கச் சிக்கல்கள் காரணமாக, அரசச் சாற்றுகை வெளியிடப்படுதல் மேலும் தாமதமாகலாம்' எனத் தகவல் வந்தமையால், (இந்திய) அரசு சட்டமியற்றுவதில் தயக்கத்துடனேயே செயல்பட்டது. (ஆங்கில) நிதித் துறை எழுப்பியிருந்த தடைகள் வெறும் நுட்ப விவரங்கள் சார்ந்தவையேயானாலும், தொடக்கத்தில் இவை கடக்க முடிந்த தடை

1. பார்வை: ''இந்திய நாணய உற்பத்தி & காகித நாணயமுறை' சட்ட வரைவு குறித்து மாண்புறு டாக்கின்ஸ் அவர்களது உரை, 1899, செப்டம்பர் 8.

களெனத் தோன்றின;[1] இந்திய அலுவலகம் மட்டும் ஒத்திசைந்து போகும் நோக்கைக் கடைபிடியாதிருந்திருந்தால், பேச்சு வார்த்தைகள் முறி வடைந்து போயிருக்கும். ஆனால் இத்திட்டத்திற்கு ஒரு வாய்ப்பு தர நிதித்துறைக்கு இசைவில்லை. சட்ட நுணுக்கச் சிக்கல்களில் சமரச உடன்பாடு ஒன்று எய்தப்பட்டபோது, இந்தியாவில் தங்க (நாணயச்) சாலை ஒன்று தேவைதானா என்ற வினாவை நிதித்துறை எழுப்பியது. நிதித்துறையின் வாதமாவது:

''ஒப்பந்தம் ஒன்று எய்தப்பட்டது குறித்து, எமது அமைச்சர் மனநிறைவைத் தெரிவித்துக் கொள்வதுடன், சவரனை இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு ஆதரவாக முன்னர் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களை மீள்பார்வை செய்து, கடந்த இரண்டாண்டு கால இடைவெளியில் நடந்துள்ள நிகழ்வுக் கோவைகளினால், அவ்வாதங்களின் வலுகுன்றிவிடவில்லையா என்பதையும், மாறிய சூழலில், நாணயச்சாலையின் கிளையொன்றை நிறுவுவதால் பெறக்கூடிய நலன்கள், அதை நிறுவும் செலவுக்கேற்ப அமையுமா என்பதை ஆய்ந்து பார்க்குமாறு ஜார்ஜ் ஹாமில்டன் பிரபு அவர்களைக் கேட்க விழைகிறது.... தங்க நாணயத் திட்டம் இப்போது உறுதியாக நிறுவப்பட்டு விட்டது என்பதால் இந்திய அரசு இத்திட்டத்திலிருந்து மீண்டும் பின்வாங்காது என்பதற்குப் பொதுமக்களுக்குக் காட்டச் சான்று ஏதும் தேவையில்லை. தற்போதைக் குத் தேவைகளுக்கேற்ப இந்தியாவுக்கு சவரன் நாணயங்கள் தடை யின்றிச் சென்று கொண்டுதான் இருக்கின்றன..... மாறாக, இந்தியாவில் நாணய வார்ப்புக்கெனக் கிடைக்கப் பெறும் தங்கத்தின் அளவு எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே உள்ளது என்பதன்றியும் அது கணிசமாகக் கூடுமென்று அண்மைக் காலத்தில் எதிர்பார்ப்பதற்கும் இடமில்லை...

இந்தியாவில் தங்கசாலை அமைக்கப்பட்டால், அதன் பணியாளர்களுக்கு ஆண்டின் பெரும்பகுதிக் காலம் வேலையின்றி ஊதியம் கொடுத்து வர நேர்வதில் இந்திய நிதித்துறைக்குப் பெருத்த செலவாகும். இத்தகைய தடைகளையும் மீறி இந்தியாவில் தங்க நாணயச் சாலை அமைக்கும் திட்டத்தை மேலும் தொடர வேண்டுமா என்பதை ஜார்க் ஹாமில்டன் பிரபு அவர்களே முடிவு செய்ய வேண்டும். '' இதற்கு இந்தியா அலுவலகத்தின் விடையாவது:

''இந்தியாவில் தங்க நாணயச்சாலை நிறுவுதல் ஒன்றே, புதிய நாணயத்திட்டம் உறுதியாகச் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதற்குத் தெளிவான பருச்சான்றாக விளங்கும். இந்நிலையில் திட்டம் கைவிடப்பட்டால், கண்டன விமசரினங்களும் குழப்ப நிலையுமே விளையும் எனவே, (ஜார்ஜ் ஹாமில்டன்) பிரபு அவர்கள் திட்டம் தற்போது எய்தியுள்ள நிலையில் அதைக் கைவிடும் நோக்கு ஏதும் கொண்டிலார்.''

இதற்கு, நிதித்துறை அனுப்பிய குத்தலான மறுமொழியில்,

''இந்தியாவின் நாணயத்தேவைகள் வேறு மூலங்களிலிருந்து நிறைவேற்றப்படுவதால், இந்தியாவில் தங்க நாணய உற்பத்திக்கான கோரிக்கை என்பது ஏதுமில்லை. தங்கதிட்டம் வலிவடையும் என்றும், அரசாங்கத்தின் குறிக்கோள் குறித்துப் பொது மக்கள் நம்பிக்கை கொள்வார்கள் என்றும் எமது அமைச்சர் நம்பவில்லை. குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து பெருமளவில் நிகழ்ந்து வரும் நாணயப் பரிமாற்றங்களே பொதுமக்களிடையே போதுமான நம்பிக்கை உருவாகியுள்ளதற்குச் சான்றாகும் என்பதுடன், தொடர்ந்து இந்தியாவுக்குப் பெருமளவில் தங்கம் (நாணயம்) தடையின்றி ஏற்றுமதி செய்யப்படுவதால் இந்நம்பிக்கையை வலுப் படுத்தி வருகிறோம்.''

நிதி அமைச்சகம் இத்திட்டத்தின் மீது வெளிப்படையாகவே ஒட்டுமொத்த எதிர்ப்பு காட்டியது என்பது மிகவும் வெளிப்படை. ஆனால் நிதிஅமைச்சகம் பயன்படுத்திய வாதங்கள்யாவும் முற்றிலும் சரியானவையே என்பதை மறுக்கவியலாது. தங்கத்திட்டம் நன்கு செயல்படுவதற்குத்தேவை தங்கக் காசுகளின் தட்டுப்பாடற்ற வரவுதானேயன்றி, அவை எங்கிருந்து வருகின்றன என்பதல்ல. நாணயச்சாலைகளில் தங்க நாணயங்களின் தாராள உற்பத்தி தொடரும் வரை நாணயச்சாலை எங்கிருப்பினும், தங்கத் திட்டத்தை முழுவெற்றியோடு செயல்படுத்த இயலும். சொல்லப்போனால் தங்க நாணயங்கள் இலண்டனில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு இறக்குமதிசெய்யப்படுதல், போதுமானது என்பதற்கு மேலாகச் சிக்கமானதும் கூட எனலாம்.

இந்தியாவில் தங்க நாணயச்சாலை நிறுவப்படவேண்டும் என்பதில் இந்திய அரசும் போதிய அக்கறை காட்டவில்லை. அதன் தேவையைப் பற்றி அரசுக்கே வெகுசொற்ப நம்பிக்கைதான் இருந்தது.

அதனால்தான் நிதி அமைச்சகத்தின் வன்மையான எதிர்ப்பைக் கண்டவுடன் ஆரவாரம் மிகுதியின்றித் திட்டத்தைக் கைவிட ஒப்புதல் தந்தது. இந்திய அரசின் முக்கியமான கவலை, புதிய திட்டத்தில் ரூபாய்க்குக் கிடைக்கும் விசித்திரமான நிலைமை குறித்ததாகவே இருந்தது. இந்திய அரசின் கடிதப்போக்குவரத்துகள் அனைத்தையும் நோக்கினால், ரூபாயை ஒரேடியாக நீக்கிவிட்டு, ஆங்கிலநாட்டு நாணயமுறையில் இந்திய நாணயங்களை ஈர்த்துக்கொள்ள இயலாமை குறித்த வருத்தத்தினைப் பரவலாகக் காணலாம். இக்கடிதங்களிலிருந்து அறியமுடியும் மற்றொரு நோக்கில், இந்திய அரசு தனது நாணயமுறையைப் பிரான்சு, அமெரிக்க ஐக்கியநாடுகள் ஆகிய நாடுகளின் நாணயமுறைத் திட்டங்களுடன் ஒன்றிணைத்துப் போக விரும்பியதற்கான காரணம் அவைதாம் சிறந்த நாணயத் திட்டங்கள் என்பதனாலன்று; மாறாகச் சிறந்த நாணயத்திட்டம் என்பது இந்தியாவுக்கு எட்டாக்கனியே என்னும் கண்ணோட்டத்தினால் தான். அமெரிக்க, பிரெஞ்சு நாட்டு நாணயத்திட்டக் கண்ணோட்டங்களை இந்தியா ஏற்றுக்கொண்டதற்கான முக்கியக் காரணம் தனதுநாட்டு நாணயத்திட்டம் குறித்து இந்திய அரசு உயர்நோக்கு கொண்டிராமையே. அவ்விரு நாடுகளின் நாணயமுறைகளைப் பற்றிய கண்ணோட்டத்தில் ஐந்து பிராங் காசும், வெள்ளிடாலரும் பெற்றிருந்த இடம் விந்தையானதாகவே கருதப்பட்டது. பணத்தின் பல்வேறு வடிவங்களை வகைப்படுத்த முனைந்த பேரா. பியர்சன் போன்ற திறமிகு வல்லுநர்கூட, நாணயத்துறை மரபினர்களும் ஏற்கும் வண்ணம் அவற்றுக்கு நாணயமுறைத் திட்டத்தில் உரிய இடம் தர இயலவில்லை.[1] நாணயத் துறையில் பழைமை மரபினர் கண்ணோட்டத்தில் நன்கு நிறுவப்படும் தங்கத் திட்டத்தில் தங்கக் காசுகள் மட்டுமே தாராளமாக உற்பத்தி செய்யப்படும்; அவை மட்டுமே சட்டபூர்வமாகச் செல்லும் காசுகளாய் விளங்கும்; வெள்ளி நாணயங்களும் வார்க்கப்படுமென்றாலும் இவை அரசின் தேவைகளுக்காக மிகக்குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்ப்படும்; அத்துடன் அவற்றின் அச்சிட்ட மதிப்பை விட அதிகமதிப்பு மிகக் குறைவாகவே இருக்கும், அவற்றின் புழக்கமும் வெகுசொற்பமாகவே இருக்கும். முந்தைய வகை (தங்கி) நாணயங்கள் என்ற நிலையிலும் அவை புழங்கிவரும்; இவையிரண்டும் சேர்ந்து மிகச்சிறந்ததொரு ஒற்றை உலோகத் தங்கத் திட்டத்தை, 1816 ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தில் நிறுவப்பட்டிருப்பது போன்று, நிறுவ உதவும்.

இத்தகையதொரு திட்டத்தில் 5 பிரான்ங் (வெள்ளி) நாணயத்தையும், வெள்ளி டாலரையும் பொருத்துவதில் எழுத்தாளர்கள் பெரும் இடர்ப்பாடுகளைக் கண்டனர். இந்தக் காசுகளின் நாணய மதிப்பை விட உலோக மதிப்பு வெகு குறைவாக இருந்தபோதும் அவை மாற்றவியலா நாணயமாக இருந்ததுடன் வரம்பற்ற சட்டபூர்வ நாணயங்களாகவும் நிலவின. இவ்வாறான தெளிவற்ற நிலை நிலவுவதன் காரணமாகவே, பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் நாணயமுறைகள், தங்க நாணயத் திட்டம் என ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. 'நொண்டும் திட்டம்' எனப் பகடியாக அழைக்கப்படும் திட்டத்தில் எவரும் நம்பிக்கை வைத்தல் அரிது.[1] வெள்ளிநாணயங்கள் அகமதிப்பில் குன்றியனவாக இருந்தாலும் தங்க நாணயங்களோடு கலந்து புழங்கினால், (அவற்றின் தோள் மீது ஊன்றிக் கொண்டு) அவற்றோடு எப்படியாவது சமமதிப்பில் புழங்க நிலை பெற்றுவிடும் எனும் கருத்தையே 'நொண்டும் திட்டம் எனக் குறிப்பிடுகின்றனர்.[2]

ஆனால், பிரெஞ்சு நாணயமுறையின் நிலைபாட்டுத் தன்மையில் ஐயுறும் அளவுக்கு, அது ஆங்கில நாணயமுறையிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளதா? என நோக்குவோம். இவ்விரண்டுமுறைகளுக்கிடையே என்னதான் சிறுசிறுவேறுபாடுகள் சில இருப்பினும், பிரெஞ்சு, ஆங்கில நாணயமுறைகள் இரண்டும் அடிப்படையில் ஒன்றே. பிரான்சின் 1803 ஆம் ஆண்டு இரு உலோக நாணயச் சட்டத்தையும், இங்கிலாந்தின் 1873 ஆம் ஆண்டு நாணய உற்பத்தி நிறுத்திவைப்பு ஆணையையும் ஒருங்கே ஒருபக்கத்திலும், 1816 ஆம் ஆண்டின் இங்கிலாந்து தங்கத் திட்ட சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை ஒருபக்கத்திலும் 1844 ஆம் ஆண்டின் வங்கி அறிக்கைச் சட்டத்தையும் இருத்தி ஒப்பீடு செய்து நோக்கினால், ஆங்கில, பிரெஞ்சு நாணய முறைகளுக்கிடையே சிறுதுளி வேறுபாடும் காணவியலுமா? இயலாது.1878 ஆம் ஆண்டுக்கு முன்னர், பிரான்சில் தங்க நாணயங்களும், வெள்ளிநாணயங்களும், வரம்புக் கட்டுப்பாடேதுமின்றி வெளியிடப்படும் சட்டபூர்வ நாணயங்களாகப் புழங்கிக்கொண்டும் இருந்தன. இதைப்போன்றே 1844 ஆம் ஆண்டில் இங்கிலாந்து காகித

1. இத்தகைய நம்பிக்கையின்மையால்தான், ஜெர்மனி 1907 அக்டோபர் 1இல் சட்டமியற்றி இந்நாணய் முறையை (வெள்ளி டாலர்களை) விலக்கிக் கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கூட, வெள்ளி டாலரை ஏற்றுக் கொள்வதில்லையென ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால், அதைச் செல்லாதென மறுக்க உரிமையுண்டு. காண்க: ஏ.சி. விட்டேக்கர், 'அந்நியச் செலாவணி' ஆப்பிள்டன், நியூயார்க் 1920, பக். 8, 427.

2. சி.எப்.டிபிஸ்யூ. டௌசிக், 'கோட்பாடுகள்' இரண்டாம் பதிப்பு 1918 பக். 280.

நாணய வெளியீட்டுக்கு அளவு வரம்பு விதித்தது; எனினும் அவை செல்லுபடியாவதற்கு வரம்பேதும் விதிக்கவில்லை.[1] இதே முறையில்தான், 1878 இல் பிரான்சும், (இங்கிலாந்து காகித நோட்டுகளுக்குச் செய்தது போன்றே) நாணயச்சாலை உற்பத்தி நிறுத்த ஆணையின் மூலம் 5 பிராங்க் வெள்ளி நாணயங்களின் உற்பத்திக்குத் தான் வரம்பு விதித்ததேயன்றி, அவற்றின் சட்டபூர்வப் புழக்கத்திற்கு வரம்பு ஏதும் விதிக்கவில்லை. பிரான்சின் ஐந்து பிராங்க் நாணயங்களை வெள்ளியின்மீது (காகித்திற்குப் பதிலாக) அச்சடிக்கப்பட்ட நோட்டுகள் என்று வைத்துக்கொண்டால் இரண்டு நாணய முறைகளும் ஒன்றேயென உணரலாம். இதில் ஒன்றைத் தங்கத் திட்டம் என்றும் பொருளியல் வல்லுநர்கள் கூற எங்கே இடமிருக்கிறது? வெள்ளி நாணயம் நொண்டி நொண்டி முன்னேறுகிறது என்றால் காகிதநோட்டுகளின் நிலையும் அதுதானே? இன்னும் சொல்லப்போனால் வெள்ளி நாணயத்துக்காவது சிறிதளவு பொருள் மதிப்பு உண்டு. காகித நோட்டுகளுக்கு அறவே கிடையாது. 'வங்கி நோட்டுகளைத் தங்கமாக மாற்றிக் கொள்ளமுடியும், ஆனால் ஐந்து பிராங்க் வெள்ளிக்காசுகளை அவ்வாறு மாற்றவியலாதே' யென்று வாதிடப்படலாம். ஆனால், இங்கிலாந்து வங்கியின் மாற்றவியலாத 'நம்பக' நோட்டுகளுடன் (இன்றைய 1 ரூபாய் நோட்டுகள் போன்றவை) தான் வெள்ளி நாணயங்களை ஒப்பிடவேண்டும் என்பதே யெமது பதில். எந்தவொரு காலகட்டத்திலும் இங்கிலாந்து வங்கியின் 'நம்பக' நோட்டுகளுக்கு ஈடான தங்கம் இருப்பில் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே, வரம்புநீக்கப்பட்ட ஐந்துபிராங்க் வெள்ளிநாணயங்களைப் போன்று, இந்த நம்பக நோட்டுகளும் மாற்றவியலாதவையே. ஒருவேளை நம்பக நோட்டுகளை மாற்றவியலாதவையெனக் (5 பிராங்க் வெள்ளிக்காசுகளைப் போன்று) கருதக் கூடாதெனவும் வற்புறுத்தப்படலாம், அப்படியென்றாலும், இரு உலோக முறைகளுக்கிடையான ஒப்பீடு செய்வதற்குற்ற அளவுகோலாக மாற்றவியலும், மாற்றவியலாத் தன்மைகளை வைத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று சுட்ட விரும்புகிறோம். இந்த நம்பக நோட்டுகளுக்கு இங்கிலாந்து வங்கி மாற்றவியலுந் தன்மையைத் தந்தாலும் (தராவிட்டாலும்) கூட நம்பக நோட்டுகளின் பயன்பாட்டு நிலை, ஐந்து பிராங்க் வெள்ளிக் காசுகளை விட மேம்பட்டதாகக் கொள்வதற்கில்லை. இவையிரண்டுமே ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் வெளியிடப்படுகின்றன என்பதே. இக்கண்

---

1. 1833 [illegible] இங்கிலாந்து வங்கி நோட்டுகள்

ணோட்டத்தில், வரம்புக்குட்பட்ட நம்பக நாணய வெளியீடு என்பதை மையமாகக் கொண்ட நாணயமுறைக் கோட்பாட்டின் இருவேறு ஒத்தவடிவங்களே பிரெஞ்சு, ஆங்கில நாணயமுறைகள் எனலாம்.

பிரெஞ்சு நாணயமுறை அமைப்பின் மட்டுமின்றி திட்டத்திலும் ஆங்கில நாணயமுறையை முற்றிலும் ஒத்ததாயுள்ளது. 1844 ஆம் ஆண்டின் வங்கி அறிக்கைச் சட்டம் குறித்து எழுந்த எதிர்முரண் கருத்துகளினிடையே, வங்கியியல் சிந்தனையின் எதிர்ப்பாளர்கள், ஓவர்ஸ் டோன் பிரபுவின் நோக்கங்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். ஓவர்ஸ்டோன் பிரபுவின் எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பார்த்ததைப் போன்று, காகித நாணயங்களின் மதிப்பு குன்றுவதைத் தடுப்பதில் அவர் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. தங்க நாணயம் புழக்கத்திலிருந்து அகற்றப்படக்கூடாது என்பதில்தான் அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவர் எவரும் குறை காணவியலா அப்பழுக்கற்ற வலிவான வாதங்களின் அடிப்படையில், காகிதநோட்டுகள் வெளியிடுதற்கு வரம்பு நிர்ணயிப்பதுதான்; 1844 ஆம் ஆண்டின் வங்கி அறிக்கைச் சட்டத்தின் நோக்கமும் இதுவே. அவ்வாறே, பிரான்சு வெள்ளி நாணய உற்பத்தியை வைத்தும் இதே நோக்கில்தான். முன்னரே குறிப்பிட்டுக் காட்டியிருந்தவாறு, 1873 ஆம் ஆண்டில் தொடங்கி வெள்ளியின் மதிப்பு குறைந்து கொண்டே வந்தமையால், இம்மதிப்பு குறைந்த உலோகத்தில் நாணயங்கள் வரவர, தங்கநாணயங்கள் புழக்கத்திலிருந்து விரைந்து மறைந்துகொண்டுவந்தது. இவ்விளைவு மிகப்பெரியதாய் உருவெடுப்பதைத் தடுப்பதற்காகவே, பிரெஞ்சு அரசும் ஓவர்ஸ்டோன் பிரபு எடுத்ததைப் போன்ற நடவடிக்கையை, தங்க நாணயங்களின் அளவு குன்றுவதை வெள்ளி நாணயங்களின் அளவுக்கு வரம்புகட்டிக் காத்துக்கொண்டார்கள். மாறாக வெள்ளி நாணய வெளியீட்டு வரம்பு கட்டாமல் அனுமதித்திருந்தால், தங்க நாணயங்கள் புழக்கத்திலிருந்து அறவே அகன்றிருக்கும்.

எனவே, இந்திய அரசு திட்டமிட்டு, பௌலர் குழுவின் ஒப்புதலையும் பெற்ற திட்டம், பிரெஞ்சு நாணய முறையைப் பெரிதும் ஒத்திருப்பதுடன், ஆங்கில நாணயத்திட்டக் கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாக ஜெவோன்ஸ் அவர்கள் கூறியது போன்ற ''திறமான நிதியியல் சட்டத்திற்கோர் அரிய எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கும்'' என்று கூறுதற்கு எவ்விதத் தடையுமிருக்க முடியாது.

இயல் 5

தங்க திட்டத்திலிருந்து தங்க மாற்று திட்டத்திற்கு

ரூபாய் மதிப்புக் குறைவு என்னும் சிக்கலுக்கு மன நிறை வளிக்கக் கூடிய தீர்வு காணப்பட்டுவிட்டது போல் சற்றே தோன்றியது. நீண்டு சென்ற கால் நூற்றாண்டு காலத்தில் படர்ந்திருந்த கவலை களும் இடர்ப்பாடுகளும், சென்ற இயலில் எடுத்துரைத்தது போன்ற ஒரு பரிகாரத்தினால் முழுநிறைவாக சரிசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட செலாவணி அமைப்பு (Currency system) உருப்பெறத் தவறியது. நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட ஒரு மோசமான திருப்பத்தால் இப்படியாகிப் போயிற்று. அத னிடத்தில் அனைத்து வழிகளிலும் நேர்மாறான ஒரு செலாவணி அமைப்பு இந்தியாவில் வளர்ந்தது. ஃபௌலர் குழுவின் பரிந்துரை களுக்கு சட்ட இசைவு தரப்பட்டு சுமார் பதின்மூன்று ஆண்டுகள் கழித்து, இந்திய நிதித்துறை மற்றும் செலாவணி பற்றிய சேம்பர்லைன் ஆணையம் பின்வருமாறு அறிக்கை அளித்தது:

> ''1898 ஆம் ஆண்டின் ஆய்வுக்குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட அரசினர் அவற்றைச் செயலாக்க விரும்பிய போதிலும், இன்றுள்ள இந்தியச் செலாவணி அமைப்பு அக்குழு திட்டமிட்டதி லிருந்து கணிசமாய் மாறுபடுகிறது. அதேபோது மாற்று விகிதத்தைக் (Exchange) காப்பதற்கான பொறியமை வுக்கும், திரு. ஏ.எம். லிண்ட்சே அக்குழுவிற்குத் தெரிவித்த ஆலோசனைகளுக்கும் பொதுவான சில முக்கியக் கூறுகள் உள்ளன.''[1]

திரு. லிண்ட்சேயின் திட்டப்படி இந்தியச் செலாவணி முற்ற முழுக்க ரூபாய்ச் செலாவணியாக இருக்க வேண்டும் என்பது நினைவுகூரத்தக்கது.[2] ஒவ்வொரு நேர்விலும் அரசினர் தங்கத் துக்குப் பதிலாக ரூபாய்கள் தரவேண்டும். அயல்நாட்டுப் பண

அனுப்பீடுகள் (Foreign remittances) எனும் நேர்வில் மட்டும் ரூபாய்களுக்குத் தங்கம் தர வேண்டும் என்பது ஏற்பாடு. இரு அலுவலகங்களைப் பயன்படுத்தி இந்த ஏற்பாட்டை இயக்க வேண்டும். இவற்றில் ஒன்று லண்டனிலும், மற்றொன்று இந்தியாவிலும் அமைந்திருக்கும். ரூபாய்கள் தேவைப் படும்போது லண்டன் அலுவலகம் இந்திய அலுவலகத்தின் மீதான வரைவோலைகளை விற்கும். தங்கம் தேவைப்படும்போது இந்திய அலுவலகம் லண்டன் அலுவலகத்தின் மீதான வரைவோலைகளை விற்கும். இதேபோன்ற ஏற்பாடுதான் இன்று இந்தியாவில் நிலவுகிறது என்பது வியப்புக்குரிய செய்தி. லிண்ட்சே முன்மொழிவுகளின்படி (இந்த முன்மொழிவுகள் 1898 இல் நிராகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது) இந்திய அரசு இரு சேமவைப்புகளை உருவாக்கியுள்ளது. ஒன்று தங்க வைப்பு, மற்றொன்று ரொக்க நிலுவைகளிலிருந்தான ரூபாய் வைப்பு. அதாவது காகித செலாவணியும் (Paper currency) தங்கத் திட்ட நியம வைப்புமாகும். இவற்றில் ஒவ்வொன்றும் செலாவணி அமைப்பின் இயல்பு காரணமாகவே கலப்புத் தன்மை உடையதாகும். வருவாய் வரவுகளிலிருந்து ஊட்டம் பெறும் ரொக்க நிலுவைகள் ரூபாய்களையும் அதே போல் சவரன்களையும் திரட்டிக் கொள்கின்றன. ஏனென்றால் இவை இரண்டுமே சட்டச் செலாவணி (Legal Tender) ஆகும். இவ்விரண்டையும் ஈடாகக் கொண்டு வெளியிடப்படக்கூடிய நோட்டுகள், அதாவது காகித செலாவணி சேம வைப்பில் எப்போதுமே சவரன்களும் ரூபாய்களும் அடங்கும். 1915 ஆகஸ்டு வரைக்கும், தங்க திட்டச் சேம வைப்பிலும் கூட ஒரு பகுதி தங்கமாகவும் ஒரு பகுதி ரூபாய்களாகவும் வைக்கப்பட்டிருந்தது[1] செய்நுட்ப முறையில் 'மாற்றல்கள்' என்று அழைக்கப்படும் ஒரு வகைப்படுத்தல் முறையின் மூலம், அரசு தான் ஏற்றுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான ரூபாய்கள் மற்றும் சவரண்கள் மீது ஆளுகை பெறுகிறது.[2] இந்த நிதியங்களின் இருப்பிடமும் கூட பெரும்பாலும் திரு. லிண்ட்சே திட்டமிட்டுக் கொடுத்தது போலவே உள்ளது. ரொக்க நிலுவைகள் அரசின் கைப்பணம் ஆதலால் இந்தியாவிலுள்ள இந்திய அரசுக்கும் லண்டனில் உள்ள

---

1. சேம்பர்லைன் ஆணை யத்தின் பரிந்துரையின்படி அந்தத் தேதியிலிருந்து ரூபாய்க் கிளை நிறுத்தப்பட்டு விட்டது.

2. இது தவிர, அரசுக்கு ரூபாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டால், காகிதச் செலாவணி சேம வைப்பில் உள்ள தங்கத்தை ரூபாய்களாக மாற்றி வைப்பை மறுபடியும் நிறைத்துக் கொள்ளும் சட்ட அதிகாரம் அதற்குள்ளது.

அரசுச் செயலருக்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டாக வேண்டும். அரசுச் செயலர் வசமிருக்கும் பகுதி முழுக்க முழுக்கத் தங்கமாகவும், இந்திய அரசின் வசமுள்ள பகுதி வெள்ளியாகவும் உள்ளது. தங்கத் திட்டச் சேமவைப்பானது ரொக்க நிலுவைகளைப் போலவே சட்டப்படிக் கட்டாயமான ஒரு சேம வைப்பு ஆகாது. ஆதலால் அது எங்கே இருக்க வேண்டுமென்பது முழுக்க முழுக்க ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்டது. இப்படியிருக்க, இந்நிதியத்தின் தங்கப் பகுதி லண்டனில் உள்ள அரசுச் செயலர் வசமும், ரூபாய்ப் பகுதி - அப்படி ஒன்று வைத்திருக்கப்படும் வரை - இந்தியாவில் இந்திய அரசின் வசமும் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செலாவணி சரிக்கட்டலுக்கு எளிதில் இடம் தராத ஒரே சேம வைப்பு தாள் செலாவணியின் சேமவைப்புதான். ஏனென்றால் அதன் போக்கும் இருப்பிடமும் சட்டத்தால் ஆளப்பெற்றன. இதுதொடர்பாக அந்தச் சேம வைப்பின் தங்கப் பகுதியின் இருப்பிடத்தை மாற்றுவதற்குச் சட்ட அதிகாரம் பெறப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள அரசுச் செயலரிடம் சேர்ப்பிக்கப்பட்ட தங்கத்துக்கு ஈடாக இந்தியாவில் நோட்டுகள் வெளியிட அதிகாரம் அளித்த தற்காலிக சட்டமாகிய 1898 ஆம் ஆண்டின் சட்டம் IIஇன் வழிவகையை நிரந்தரமாக்குவதன் மூலம் இது செய்யப்பட்டது. இவ்வாறு அரசுச் செயலரும் இந்திய அரசினரும் புதிய செலாவணி அமைப்பில் இரு சேம வைப்புகளை வைத்துள்ளனர். ஒன்று தங்க வைப்பு - முக்கியமாக அரசுச் செயலரின் வசத்தில் இருப்பது; லண்டனில் அமைந்திருப்பது. மற்றொன்று ரூபாய் வைப்பு - முழுக்க முழுக்க இந்திய அரசின் வசத்தில் இருப்பது; இந்தியாவில் வைக்கப்பட்டிருப்பது. ஆனால் திரு. லிண்ட்சேயின் செலாவணி அமைப்புக்கும் நடப்பிலுள்ள அமைப்புக்கும் உள்ள ஒற்றுமை இந்த நிதியங்களை வைத்துக் காப்பதோடும் அவற்றின் இருப்பிடத்தோடும் முடிந்து விடுவதில்லை. இந்த இரு நிதியங்களையும் இயக்கும் முறைகளிலும் கூட இந்த ஒற்றுமை காணப்படுகிறது. ஏனென்றால் திரு. லிண்ட்சே முன்மொழிந்துள்ளபடி, இந்தியாவில் ரூபாய்கள் தேவைப்படும் போது அரசுச் செயலர் ''மாமன்ற உண்டியல்கள்'' எனப்படுவனவற்றை விற்கிறார். இந்தியாவில் உள்ள அரசுக் கருவூலங்களில் இவற்றை ரூபாய்களாக ரொக்கமாக்கலாம். இவ்வழியில் இந்தியாவில் ரூபாய்ச் செலாவணிக்கு வழிசெய்யப்படுகிறது. தங்கம் தேவைப்படும் போதெல்லாம் இந்திய அரசு 'எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள்'' (Reverse councils) எனப்படுவனவற்றை லண்டனில்

களுக்கான தங்கம் கிடைக்கிறது. 'மாமன்ற உண்டியல்களையும்' எதிர்த் திசை மாமன்ற உண்டியல்களையும் விற்றதால் இரு சேம நிதியங்கள் மீதும் ஏற்பட்ட விளைவு என்னவென்றால், ஃபௌலர் குழு விரும்பியதுபோல் தங்கச் செலாவணியுடன் கூடிய தங்க நியமமாய் இருந்த இந்தியச் செலாவணி திரு. லிண்ட்சே விரும்பியது போல் தங்கச் செலாவணி இல்லாத தங்கத் திட்டம் எனப்படுகிற ஒன்றாக மாறிப்போய் உள்ளது.

தொடக்கத்தில் இந்திய அரசு உருவாக்கத் திட்டமிட்ட செலாவணி அமைப்புக்கு பதிலாக வளர்ந்துள்ள இந்தச் செலாவணி அமைப்பு தங்க மாற்று திட்டம் என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பெயரின் பொருள் என்னவாயினும் சரி, தொடக்கத்தில் 1898இல் இந்திய அரசு வகுத்த திட்டம் அல்ல அது. இவ்விதம் விலகிச் சென்றது எப்படி என்பதைப் பிறிதோரிடத்தில் பரிசீலிப்போம். இங்கே, **அரசு ஒரு தங்க மாற்று திட்டத்தை நிறுவப் புறப்படவில்லை** என்பதைக் கூறுவதே போதும் - இதைக் கூறுவது அவசியம் என்றும் சொல்லலாம். ஏனென்றால் அநேக எழுத்தாளர்கள் இச்செய்தி குறித்து ஒரு பிழையில் மாட்டிக் கொண்டதாக தோன்றுகிறது. பார்க்கப் போனால் அரசானது உண்மையானதொரு தங்கத் திட்டத்தை நிறுவுவதற்குத்தான் வழிசெய்து கொண்டிருந்தது. இந்த திட்டம் அதனை வகுத்தவர்களால் சரிவரப் புரிந்துகொள்ளப்படவில்லை. என்றாலும் 1844 ஆம் வருடத்திய ஆங்கிலேய வங்கி சாசனச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குச் சாரத்தில் இணக்கமாகவே இருந்தது.

புதிய செலாவணி அமைப்பு பற்றி நாம் சொல்ல வேண்டியது என்ன? தங்கச் செலாவணியுடன் கூடிய தங்க திட்டம் என்ற இலட்சியத்திலிருந்து விலகல் நேரிட்டதாக அறிக்கை அளித்த சேம்பர்லைன் ஆணையம் கூறியதாவது:[1]

> ''ஆனால் இந்த விலகல் நிகழ்ந்துள்ளது என்று உரைப்பது எடுத்த நடவடிக்கையையோ உள்ளபடியே செயலில் இருக்கும் செலாவணி அமைப்பையோ கண்டிப்பது ஆகாது...''

ஏன் ஆகாது? இந்தச் செலாவணி அமைப்பும் 1878-இல் இந்திய அரசால் முன்மொழியப்பட்டு 1879 ஆம் ஆண்டின் ஆய்வுக்

---

[1] அறிக்கை, பத்தி. 46.

குழுவினால் கண்டிக்கப்பட்ட செலாவணி அமைப்பும் ஒன்றே அல்லவா? 1879 ஆம் ஆண்டின் ஆய்வுக்குழு அந்த திட்டத்திற்கு எதிராகத் தெரிவித்த வாதுரைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல என்பது உண்மைதான்.[1] எப்படிப் பார்த்தாலும் அந்தத் திட்டம் அடிப்படையில் பழுதுடையதாக இருந்தது. ஒரு தங்க திட்டத்தை நுழைப்பதில் முக்கியமான கூறு ரூபாய்களின் பரிணாமத் துக்கான வரையறைதான் என்பதைச் சொல்லியாக வேண்டும். இந்த கண்ணோட்டத்தில் திட்டத்தை நாம் கணித்தாக வேண்டும். ஆனால் 1878 ஆம் ஆண்டின் திட்டத்தில் அந்நிலைமையை வேண்டு மென்றே தோற்றுவிப்பதற்கு எதுவும் இருந்ததாகச் சொல்ல முடியாது. இந்தத் திட்டம் ரூபாய்களின் பரிணாமத்துக்கு வரும்போதும் விதிக்க வில்லை என்பது மட்டுமல்ல, நாணயச்சாலைகள் தடையேது மின்றி வெள்ளியை நாணயமாக்குவதற்கு வேண்டுமென்ற உரிமை வழங்கியது. இத்திட்டத்தில் சற்றே கருத்துக்குரிய செய்தியாக இருந்தது என்னவென்றால், நாணய வரி அமைப்பு ஒன்று முன் னிறுத்தப்பட்டது. ரூபாயின் புலியன் மதிப்பு அதற்குத் தரப்படும் தங்க மதிப்புக்குச் சமமாகும்படி இவ்வமைப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால் ரூபாய் நாணயம் அடித்தலை வரம்புக்குட்படுத்துவதில் அதனால் பயன் ஏற்படவில்லை. நாணய வரி தாண்டுவது மட்டுமே எல்லா நிலைமைகளிலும் நாணயமடித்தலை வரம்புக்குட்படுத்து வதற்குப் போதுமானதென்று கருத முடியாது. நாணய வரியானது தங்கத்தின் பேரிலான வெள்ளியின் நாணயச்சாலை விலைக்கும் சந்தை விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு எவ்வளவு நெருக்கமாய் அமைகிறது என்பதைப் பொறுத்ததாகவே ஒவ்வொன் றும் இருந்திருக்கும். நாணயவரி இந்த வேறுபாட்டைக் காட்டிலும் குறைவாக இருந்தால், ரூபாய் நாணயமடித்தல் அதிகரிப்பதற்கு நேரடி ஊக்கம் அளித்திருக்கும். இவை தேவைக்கு அதிகமாகி விலைக் குறைப்புக்குத் தள்ளி விடும் வரை இது தொடர்ந்திருக்கும். இவ் வகையில் இத்திட்டமானது 1816 ஆம் ஆண்டின் ஆங்கிலேய தங்கத் திட்டச் சட்டத்தை மோசமான வடிவில் மறுபதிப்புச் செய்வதாகவே இருந்தது. 1878 ஆம் ஆண்டின் இந்திய அரசுத் திட்டத்தைப் போலவே அந்தச்சட்டமும்தங்க திட்டத்தைநுழைப்பதாகச்சொல்லிக்கொண்டே, நாணய வரிக் கட்டணத்துடன் தடையின்றி வெள்ளியை நாணய மாக்குவதற்கு மூடப்பட்டிருந்த நாணயச்சாலையைத் திறந்துவிட அதிகாரம் அளித்தது. தொன்மை தங்க ஒருலோகக் கொள்கையினர் அனைவரின் இலட்சியமாகிய அந்தச் சட்டத்தின் வழிவகைகள்

வெள்ளியைத் தடையின்றி நாணயமாக்குவதற்குத் திட்டமிட்ட அளவில் எவ்வளவு மடத்தனமானவை என்பது பரவலாக உணரப் படவில்லை.[1] நாணயச்சாலை அதிகாரி நாணயச்சாலைக்குக் கொண்டு வரப்படும். வெள்ளி முழுவதையும் நாணயமாக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிற அரசப் பிரகடனம் வெளியிடப்படவே இல்லை யென்பது இங்கிலாந்துக்கு நல்லதாய்ப் போயிற்று. இல்லையேல் தங்க திட்டத்தின் செயற்பாடு பேராபத்துக்குள்ளாகி இருக்கும்.[2] எப்படியும் 1816 ஆம் ஆண்டின் சட்டம் ஒரு முன்னெச்சரிக்கையாவது எடுத்துக் கொண்டது. வெள்ளியின் சட்டச் செலாவணித்திறன் மீதான ஒரு வரம்புதான் அது. இந்திய அரசாங்கத்தின் திட்டப்படி, வெள்ளி யைத் தடையின்றி நாணயமாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்ட தோடு, வெள்ளிக்கு முழுமையான சட்டச் செலாவணி உரிமையும் வழங்கப் பட்டது. ஆகவே இந்தத் திட்டம் ரூபாய்களின் பரி ணாமத்தைக், கட்டுப் படுத்துவதற்கு வழிவகை செய்யாத வரையில் அதன் நோக்கமாகிய தங்க திட்டத்தை சீர்குலைப்பதாக இருந்தது.

இந்த 1878 ஆம் ஆண்டின் திட்டத்துக்கும், இப்போது இந்தியா வில் செயல்பட்டு வரும் செலாவணி அமைப்பிற்கும் இடையிலான ஒரே வேறுபாடு என்னவென்றால், முன்னதில் நாணயச்சாலை கள் பொதுமக்களுக்குத் திறந்திருந்தன, பின்னதில் அவை அரசுக்கு மட்டுமே திறந்துள்ளன. அதாவது முன்னதில் பொதுமக்களின் சார்பாக ரூபாய் நாணயமடிக்கப்பட்டது; இரண்டாவதில் அரசின் சார்பாக ரூபாய் நாணயமடிக்கப்படுகிறது. நாணயச்சாலைகளைப் பொதுமக்களுக்கு மூடி வைக்கும் திட்டம் குறித்து 1878 இல் அரசினர் எண்ணிப் பார்க்கவில்லை எனக் கருதிவிடக் கூடாது. மறுபுறம், இந்திய அரசு அப்போது ரூபாய் நாணயமடிக்கும் பணியைத் தன் கையில் எடுத்துக் கொள்வதற்குள்ள வாய்ப்பு வழிகளைக் கருதிப் பார்த்து, மிகச் சிறந்த காரணங்கள் சிலவற்றை முன்னிட்டு அதனை நிராகரித்தது. இத்திட்டத்தை சுருக்கமாக எடுத்துரைக்கும் அறிக்கை யில் அந்நாளைய அரசு கூறியதாவது:

---

1. பார்க்கவும்: ஆர்.ஜி. ஹாட்ரீ, செலாவணியும் கடன் செலாவணியும், 1919, பக்கம் 302-3.

2. 1819இல் நியமிக்கப்பட்ட ரொக்கக் கொடுப்புகள் பற்றிய பிரபுக்கள் சபைக் குழுவின் முன் சாட்சி கூறிய சிலர் இவ்விதம் சந்தேகம் தெரிவித்தனர். 1816 ஆம் ஆண்டின் சட்டத்தில் காணப்படும் வெள்ளி விதியைக் கருத்தில் கொண்டால், மீண்டும் ரொக்கக் கொடுப்புகள் செய்வது இங்கிலாந்தில் தங்க திட்டத்தை நிறுவுவதற்கான ஒரு வழியாகப் பயன் தருமா? பார்க்கவும் : குறிப்பாக திரு. பிளெசர் அளித்த சாட்சியம்; மேலும் ஆணையத்தின் முன் திரு. முஷெட் அளித்த சாட்சியம்.

''48. முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்களை நிறைவேற்ற முயல்கையில் கவனமாய் இருக்க வேண்டிய முதற்காரியம், நாட்டின் வணிகத் தேவைகளைப் பொறுத்து செலாவணியைப் பெருக்குவதற்கு முழு சுதந்திரம் வழங்கியாக வேண்டும். பொது மக்களுக்காக வெள்ளியை நாணயமாக்குவதற்கு நாணயச் சாலைகள் அறவே மூடப்பட்டுவிட்டால் இதனைச் சரிவரச் செய்ய முடியாதென்று நினைக்கிறோம். இந்நடவடிக்கை மேற் கொள்ளப்படுமானால், வேண்டப்படும் வெள்ளியை வழங்கு வதற்கான பொறுப்பு அரசைச் சாரும். இந்தியாவில் தங்க, வெள்ளி புலியன் சந்தையின் இப்போதைய நிலையில், இப்படி ஒரு கடமையை ஏற்பது முடியாத காரியமாகி விடும்''.

''49. தங்க திட்டத்துடன் கூடிய இந்திய வெள்ளிச் செலா வணியின் பெருக்கத்துக்கு இடமளிக்க மிக எளிய வழி, ஆகவே மிகச் சிறந்த வழி என்பது வருகிற அனைவருக்கும் புதிய செலாவணி அமைப்பினால் நிர்ணயிக்கப்படும் வீதங்களில் தங்க நாணயத்துக்கு மாற்றாக வெள்ளி நாணயம் தருவதற்கு அரசு பொறுப்பேற்று உறுதியளிப்பதும், நாணயச்சாலைகள் வெள்ளிக்கு மூடப்பட்டிருக்கும் போதே தங்க நாணயம் அடிப் பதற்கு அவற்றைத் திறந்துவிடுவதுமாக இருக்கும். ஆனால் நாணயமாக்குவதற்கு அவசியமான மூலப்பொருள் கிடைக்கும் படியாக இந்தியாவில் வெள்ளி வழங்கல் ஏதும் இல்லாத நிலை யில், இத்தகைய கடப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொண்டால் புலியன் வாங்குவது, இருப்பு வைப்பது என்ற வகையில் சிக்கலான கொடுக்கல் வாங்கல்களில் அரசு மாட்டிக்கொள்ளும். இந்த வேலையில் அது இறங்குவது உசிதமற்றதாக இருக்கும்.''

இந்தக் காரணங்கள் கருத்துக்குரியவை. ஏனென்றால் இந்தியத் துறை அலுவலகம் அண்மையில் வெள்ளி கொள்முதல் செய்தது தொடர்பான முறைகேடுகளை முன்னறிவிப்பது போல் இவை அமைந்தன.[1] ஆனால் இந்தக் காரணங்கள் குறித்து நமக்கு நேரடி அக்கறை இல்லை. நாணய வெளியீட்டு முறையிலான இந்த வேறுபாட்டினால் ரூபாய்களின் பரிமாணத்துக்கு உருப்படியான வரம்பிடுவது என்ற பிரச்சினையில் அடிப்படையான வேறுபாடு

ஏதும் உண்டாகிறதா என்பதே முக்கியத்துவம் வாய்ந்தது. இப்போது, தனியார் வெள்ளி நாணயமடித்தலுக்கு நாணயச்சாலைகளை மூடி வைப்பதன் துல்லியமான சிறப்பு என்ன என்பது குறித்துப் பெரு மளவு சிந்தனைக் குழப்பம் காணப்படுகிறது. நாணயச்சாலைகளை மூடி வைப்பது ரூபாய்கள் வெளியிடுவதில் அரசுக்கு முன்னுரிமை வழங்கிவிடுவதால், இந்த முன்னுரிமை ரூபாய்களின் மிகை வெளி யீட்டைத் தடுப்பதன் மூலம் தங்கக் கணக்கில் ரூபாய் மதிப்பை எப்படியோ நிலைநிறுத்திவிடும் என்று பொதுவாக நம்பப்பட்டது. நாணயச்சாலைகள் மூடப்பட்டதால் அரசுக்கு ஒரு முற்றுரிமை யாளரின் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆனால் முன்னுரிமை எவ்வாறு மிகை வெளியீட்டைத் தடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்வது எளிதன்று. தடையின்றி வெள்ளி நாணயம் அடிப்பதற்கு நாணயச்சாலைகள் மூடப்படுவதும், நோட்டுகள் வெளியிடும் உரிமையை வங்கிகளிடமிருந்து பறித்து முற்ற முழுக்க ஒரு மைய வங்கிக்கே அதைக் கொடுத்துவிடுவதும் ஒன்று தான். ஆனால் ஒரு மைய வங்கிக்கு நோட்டு வெளியிடும் முற்றுரிமை இருப்பதால் அது மிகைவெளியீடு செய்ய முடியாது என்று ஒருவரும் ஒருநாளும் வாதிட்டதில்லை. இதேபோல் இந்திய அரசு முற்றுரிமை யாளராக இருப்பதால் அது மிகை வெளியீடு செய்ய முடியாது என்று வாதிடுவதும் அபத்தமாகவே இருக்கும். பார்க்கப்போனால் ஒரு முற்றுரிமையாளர் தனியார்கள் ஒன்றாகச் சேர்ந்து வெளியிடக் கூடிய அளவுக்கு மேல் இல்லையென்றாலும் அதே அளவுக்காவது வெளியிட முடியும். மேலும், நாணயமடித்தலின் மீது இலாபங் களின் தாக்கம் என்ற கண்ணோட்டத்தில் இப்போதைய திட்டம் 1878 ஆம் ஆண்டின் திட்டத்தைக் காட்டிலும் மட்டமானது. இரு நிலைகளிலுமே இலாபங்கள் நாணயமடித்தலின் பரிமாணத்தைப் பொறுத்தவையாகும் என்பது மெய்தான். ஆனால் முதல் திட்டத்தில் இலாபத்தின் அளவு நாணயமடித்தலுக்கு எவ்வகையிலும் ஊக்கம் தரவில்லை. நாணயமடிக்கும் அதிகாரம் ஏதும் இல்லாமற் போனதால் அரசுக்கும் ஊக்கம் தரவில்லை. நாணயமடித்தலின் பரிணாமத்தை நிர்ணயித்த மக்களுக்கும் ஊக்கம் தரவில்லை. நாணயமடித்தலின் பரிமாணத்தை நிர்ணயித்த மக்களுக்கும் ஊக்கம் தரவில்லை. ஏனென்றால் நாணய உரிமையைக் கட்டுப்படுத்தியதானது நாணயச் சாலைக்குக் கூடுதல் புலியன் கொண்டு வருவதில் இலாபம் இல் லாமற் செய்ததன் மூலம் நடைமுறையில் அதனைக் கட்டுக்குள் கொண்டு வந்தது. இப்போதையத் திட்டத்தில் நாணயமடித்தல் முழுக்க முழுக்க அரசின் கையில் இருப்பதால், செலாவணிக்குப் 'பின்பலம்' ஏற்படச் செய்வதன் அவசியம் குறித்தான அற்பக்

கருத்தினால் இலாபங்களைத் தேடி அலையும்நிலை கூடுதல் நாணயமடித்தலுக்கு பொறுப்பேற்றிட உந்துவிசை ஆகக் கூடும். குறிப்பாகச் சொன்னால் வெள்ளியின் விலை பெரிதும் வீழ்ந்து ரூபாயின் நாணயச்சாலை விலைக்கும் சந்தை விலைக்கும் இடையே அகன்ற இடைவெளியைத் தோற்றுவிக்குமானால் இந்நிலை ஏற்படக்கூடும்.[1]

முற்றுரிமையாளர் என்ற முறையில் இந்திய அரசுக்குள்ள மனவிருப்பம், அதாவது தன் செலாவணியின் மதிப்பு குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அதன் ஆசை, ரூபாய்கள் வெளியிடுவதற்கு ஒரு வரம்பை ஏற்படுத்தக் கூடும் என்றும், பரந்துபட்ட பொதுமக்களுக்கு நாணயச்சாலைகள் திறந்தே இருந்தால் இது சாத்தியமாகியிருக்க முடியாது என்றும் வாதிடலாம். இப்படி வாதிடுவார்களானால் விடை இதுதான். ரூபாய் வெளியிடுவதற்கு வரம்பு கட்டும் இந்த விருப்பம் செயலுக்கு வர வேண்டுமானால் வெளியிடமறுக்கும் அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டும். விருப்பம் என்பதைப் பொறுத்தவரை மைய வங்கிகள் தங்கள் செலாவணிகளை வரம்புக் குட்படுத்துகின்றன. ஏனென்றால் எந்த ஒருவருக்காகவும் செலாவணி வெளியிட வேண்டிய கட்டாயக் கடமை அவற்றுக்கு இல்லை. ஆனால் இவ்வகையில் இந்திய அரசின் நிலை பலவீனமாய் இருப்பது வருத்தத்திற்குரியது. கேட்கும்போது அது செலாவணி வெளியிட்டாக வேண்டும். ஒவ்வொரு வெளியீடும் நடப்பிலுள்ள செலாவணியின் பரிமாணத்துக்கு நிகரக் கூடுதல் ஆவதில்லை என்பது மெய்தான். எப்படியென்றால் புதிய வெளியீட்டின் ஒரு பகுதி சுற்றோட்டத்திலிருந்து மீண்டு வருவதன் மறுவெளியீடாகவே உள்ளது. எவ்வாறாயினும் அரசு தனக்குள்ள முன்னுரிமையின் காரணத்தால் ரூபாய்ச் செலாவணியின் பரிமாணத்துக்கு உருப்படியான வரம்பு கட்டிவிட்டது என்று சொல்வதற்கில்லை. மறுபுறம், செலாவணி வெளியிட்டாக வேண்டிய பொறுப்பிலிருந்து தப்புவதற்கு வழி இல்லாததால், இந்த மதிப்பிற்குரிய சிறப்புரிமையைச் செலுத்துவது அரசினரை எதிர்த்தடித்துள்ளது. எந்த அளவுக்கென்றால், செலாவணி வெளியிடும் இந்த முன்னுரிமை அரசின் நிலையை

1. இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, ரூபாயின் தங்க மதிப்பை வெள்ளியின் அடக்கவிலைக்குத் தொடர்பில்லாமல் நிர்ணயிக்கலாம் என்ற பேராசிரியர் கீன்சின் கருத்து. இப்போதுள்ள செலாவணி அமைப்பைக் கருத்தில் கொண்டால், சற்றே உறுதியற்ற

வலுப்படுத்துவதற்குப் பதிலாக பெருமளவுக்கு வலுவீனப்படுத்தியே உள்ளது.[1] சேம்பர்லைன் ஆணையம் தெரிவித்துள்ள கருத்தாவது:[2]

> ''அரசினர், செலாவணிச் சந்தையில் மிகப்பெரும் வணிகர்களாய் இருக்கும் அதே போது, அவர்கள் முற்றுரிமையாளர்கள் ஆக மாட்டார்கள் (!), இப்படிப்பட்ட (நிர்ணயித்த குறைந்தபட்ச வீதம்) எந்த ஒன்றுக்காகவும் ஆண்டு முழுவதிலும் எல்லாக் காலங்களி லும் அவர்களால் வெற்றிகரமாக தாங்கி நிற்க முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாகத் தோன்றுகிறது''.

நாணயச்சாலைகளை மூடியதானது ரூபாய் நாணயமடித் தலை இவ்விதம் வரம்புக்குட்படுத்துகிற நற்பலனைத் தரவில்லை, அரசினர் தங்களால் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய ரூபாயின் விலையை எப்போதும் கட்டளையிட்டு நிர்ணயிப்பது சாத்திய மாகவில்லை என்பதற்கான ஒப்புதல் என்ற முறையில் ஆணையத் தின் இந்தக் கருத்து கவனத்திற்குரியது.

இவ்வாறு இப்போதைய நியமம் 1878இல் முன்மொழியப் பட்ட திட்டத்திலிருந்து பெயரளவில் மட்டுமே மாறுபடுகிறது. செலா வணியின் பரிமாணத்தை ஒழுங்கு செய்வதற்கு மாற்றுவீதத்தை ஒரு குறியளவாகக் கைக்கொள்வது இந்த நியமத்தின் தனித்தன்மை யென்றால், பழைய நியமம் குறித்தும் இதையே தான் சொல்லியாக வேண்டும். ஆனால் திருவாளர் ஹாட்ரீ கூறுவதுபோல்[3] செலா வணியைச் சரிக்கட்டுவதற்கு எத்தகைய வழி வகைகளைக் கைக்கொண்ட போதிலும்,

> ''ரூபாயின் மதிப்பு சுற்றோட்டத்தில் இருக்கும் அளவினால் தீர்மானிக்கப்படும்.''

வேறுவிதமாகச் சொன்னால் தங்க திட்டத்தின் பாதுகாப்புக்கு இன்றியமையாதது என்று சொல்ல வேண்டியது ரூபாய்களின் மிகை

---

1. ரூபாய்ச் செலாவணி வெளியிட்டாக வேண்டிய இந்த வரைமுறையற்ற பொறுப்பில் அடங்கியுள்ள ஆபத்தை 1919 ஆம் ஆண்டின் ஸ்மித் செலாவணிக்குழு ஒப்புக் கொண்டது இந்தக் கடப்பாட்டை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அது பரிந்துரைத்தது. பார்க்கவும்: அறிக்கை, பத்தி 68. ஆனாலும் அதன் நோக்கம் வேறுதான்.

2. அறிக்கை, பத்தி. 182.

3. செலாவணியும் கடன்-செலாவணியும், 1919, பக்கம் 341.

வெளியீட்டுக்கு எதிரான ஒரு வழிவகையைத்தான். ஆனால் 1878 ஆம் ஆண்டின் திட்டமும் சரி, இப்போதைய திட்டமும் சரி, அந்த ஆபத்தி லிருந்து விடுபட்டிருப்பதாகச் சொல்ல முடியாது என்று பார்த்தோம். ஆகவே, இரண்டு திட்டங்களும் அடிப்படையில் ஒத்தாற்போல் இருப்பதால், பழைய திட்டத்தை எதிர்த்து செல்லுபடியாகக் கூடிய வாதங்கள் புதிய திட்டத்தை எதிர்த்தும் செல்லுபடியாகும் என்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டும்.

ஆனால் மாற்று திட்டம் என்பது புறந்தள்ளப்பட்ட ஒரு திட்டத்திற்கு மறுபடியும் உயிரூட்டுவதே என்பதைச் சேம்பர்லைன் ஆணையம் ஏற்றுக்கொள்ளாது. மறுபுறம்,

> ''இப்போதுள்ள இந்தியச் செலாவணி அமைப்பு மாபெரும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் வேறு இடங்களிலும் உள்ள ஏனைய செலாவணி அமைப்புகளுடன் நெருங்கிய சாயல்கள் கொண்டுள்ளது....''

என்று வாதிடுவதன் மூலம் அந்த திட்டத்தில் நம்பிக்கை ஊட்டவே அது முயன்றுள்ளது.[1] இந்தச் சாயல்கள் எவை என்பதை அறிய வேண்டுமானால், **இந்தியச் செலாவணியும் நிதித் துறையும்** என்ற திரு. கீன்சின் கருத்துக்குரிய ஆய்வு நூலின் இரண்டாம் இயலைப் பார்க்க வேண்டும். இந்தியச் செலாவணி அமைப்பின் நடவடிக்கைகளும் முக்கியமான ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் மைய வங்கிகளுக்கு வழக்கமாய் இருந்த நடவடிக்கைகளும் அடிப் படையில் ஒத்தாற்போல் இருந்ததாகக் காட்டுவதற்கு திரு. கீன்ஸ் தனது ஆய்வு நூலில் முயன்றுள்ளார். அயல் நாடுகளுக்குப் பணம் அனுப்பும் நோக்கத்திற்காக அயல் நாட்டு மாற்று உண்டியல்களை வைத்துக்கொள்வது இந்த வங்கிகளின் வழக்கமான நடைமுறை யாக இருந்ததென அவர் கண்டார். இத்தகைய அயல்நாட்டு உண்டி யல்களை விற்பதற்கும் இந்திய அரசு எதிர்த்திசை மாமன்ற உண்டி யல்களை விற்பதற்கும் இடையில் ஒரு நெருங்கிய அடிப்படை ஒற்றுமை இருப்பதை அவர் கண்டார். எப்படியென்றால் இரண்டிலுமே,

> ''முக்கியமாய்த் தங்கம் அல்லாத உள்ளூர்ச் செலாவணி யின் பயன்பாடு, உள்ளூர்ச் செலாவணிக்கு மாற்றாக உள்ளூர்

அளவில் தங்கம் வழங்கிட சற்றே தயங்கும் நிலை, ஆனால் ஒரு குறிப்பிட்ட அதிகபட்ச வீதத்துக்கு உள்ளூர் செலாவணியை விலையாகப் பெற்று வெளி செலாவணியை விற்பதற்குப் பெரு மளவிலான விருப்பம் ஆகியவை காணப்படுகின்றன.''[1]

ஆனால், பேராசிரியர் கெமரர் சுட்டிக் காட்டுவது போல[2] இந்திய அரசு எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்பதற்கும் ஐரோப்பிய வங்கிகள் அயல்நாட்டு உண்டியல்கள் வைத்திருப் பதற்கும் இடையே என்ன ஒற்றுமை உள்ளதெனக் காண்பது கடினம். ஒற்றுமையில்லை என்பது மட்டுமல்ல, இவ்விரு நடைமுறைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகவும் கருதப்பட வேண்டும்.

எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்பதன் மூலம், உள்நாட்டில் பணம் ஒப்பளவில் மிக மிச்சமாய் இருக்கும் போது, மாற்றுவிகிதம் தங்க ஏற்றுமதிப் புள்ளியை அடைந்து விட்டதால் இந்நிலை தெரியவரும்போது, அரசு தன் அயல் நாட்டுத் தங்கக் கடன்-செலாவணிக்கு (அதாவது தன்னிடமுள்ள தங்கச் சேமவைப்புக்கு) ஈடாக வரைவோலைகள் விற்கிறது. இவ்விதம் அது வரைவோலைகளுக்கு விலையாகப் பெற்ற உள்ளூர்ப் பணத்தை சுற்றோட்டத்திலிருந்து விலக்கியெடுத்துப் பூட்டி வைப்பதன் மூலம் மிதமிச்ச நிலையைத் தளர்த்துகிறது. பணச் சந்தையைப் பாதுகாப்பதற்காக அயல்நாட்டு உண்டியல்களை வைத்துக் கொள்ளும் நடை முறையின்படி, உள்நாட்டில் பணம் ஒப்பளவில் கிடைப்ப தரிதாகும் போது மைய வங்கியானது இறக்குமதிக்குத் தங்கம் பெறுவதற்கோ அதன் ஏற்றுமதியைத் தடுப்பதற்கோ ஆன வழியாகத் தன் அயல்நாட்டு உண்டியல் களை விற்கிறது. முதல் நிலையில், வரைவோலைகளின் விற்பனை தங்க ஏற்றுமதியின் இடத்தைப் பிடிக்கிறது. இதன் விளைவாக உள்ளூர் பணம் சுற்றோட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவது அடிப்படையில் ஓர் ஏற்றுமதியே ஆகும். இரண்டாம் நிலையில் வெளிநாட்டில் வரைவோலைகளை விற்பது இறக்குமதிக்கு தங்கம் பெறுவதற்கோ அல்லது அதன்

1. கீன்ஸ், **இந்தியச் செலாவணியும் நிதியும்**, பக்கம். 29.

2. பார்க்கவும்: பொருளாதார காலாண்டிதழில் கீன்ஸ் பற்றிய அவரது திறனாய்வு, 1914 பிப்ரவரி.

ஏற்றுமதியைத் தடுப்பதற்கோ ஆன ஒரு நிகழ்முறையின் பகுதியாகும்.''

ஆகவே திரு. கீன்ஸ் நம்மை நம்பச் சொல்வது போல் இந்தியச் செலாவணி அமைப்பு ஐரோப்பியச் செலாவணி அமைப்புகளை எவ்வகையிலும் ஒத்ததன்று. ஆனால் ஒப்புமை ஒன்று தேவைப்படு மானால், இங்கிலாந்தில் வங்கி இடைநிறுத்தக் காலத்தில் (1797 - 1821) நிலவிய செலாவணி அமைப்பைத்தான் உண்மையில் இந்தியச் செலாவணி அமைப்பு ஒத்திருக்கிறது. இந்திய அரசினர், அரசுச் செயலர் ஆகியோரின் பண அனுப்பீட்டு நடவடிக்கைகளை - இந்தியச் செலாவணி அமைப்பின் உண்மையான பண்புக் கூறுகளைத் தெளிவாக தெரியவிடாமற் செய்திடும் இந்நடவடிக்கைகளை - இப்போதைக்கு ஒதுக்கித் தள்ளி விடுவோமானால், இரு அமைப்பு களுக்கும் இடையிலான அடிப்படை ஒற்றுமை தெளிவுறத் தெரிய லாகிறது. திரையை விலக்கி நெருங்கிப் பார்க்கும்போது, பின்வருவன இந்தியச் செலாவணி அமைப்பின் எடுப்பான கூறுகளாகத் தெரி கின்றன :

1) தங்கச் சவரன் முழுமையான சட்டச் செலாவணி ஆகும்.

2) வெள்ளி ரூபாயும் முழுமையான சட்டச் செலாவணி ஆகும்.

3) அரசு, சவரன்களுக்கு ரூபாய்கள் தரப் பொறுப்பேற் கிறதே தவிர, ரூபாய்களுக்கு சவரன்கள் தரப் பொறுப்பேற்பதில்லை. அதாவது ரூபாயானது வெளியீட்டில் வரம்பற்ற மாற்றவொண்ணாச் செலாவணி ஆகும்.

வங்கி இடைநிறுத்தக் காலத்தில் நிலவிய ஆங்கிலேயச் செலா வணி அமைப்பின் பக்கம் திரும்புகையில் காணப்படுவதாவது:

1) தங்கச் சவரன் முழுமையான சட்டச் செலாவணியாக இருந்தது.

2) இங்கிலாந்து வங்கியின் காகித நோட்டுகள் சட்டத் தினால் அல்லவென்றால் பொது வழக்கப்படி பொதுப்படையான ஏற்புடைய பணமாகப் புழக்கத்தில் சுற்றியோடின.

3) இங்கிலாந்து வங்கியானது தங்கம் அல்லது வணிக உண்டியல்கள் அல்லது வேறு எவ்வகைப் பொருத்தமான சமதைக் கும் நோட்டுகள் தரப் பொறுப்பேற்றது. ஆனால் நோட்டுக்களுக்குத் தங்கம் தரவில்லை. அதாவது நோட்டுகள், வெளியீட்டில் வரம் பற்ற மாற்றவொண்ணாச் செலாவணியாக அமைந்தன.

ஒரே ஒரு வகையில் மட்டும் இந்த ஒப்புமை குறைபாடுடையது எனலாம். மாற்று விகிதம் நிகர் நிலைக்குக் கீழே குறைந்துபோனால் அயல்நாட்டுப் பண அனுப்பீடுகளுக்காக ஒரு நிர்ணய வீதத்தில் ரூபாயைத் தங்கமாக மாற்றிக் கொடுக்க அரசு பொறுப்பேற்றுள் ளது - சட்டப்படியான இடப்பாடாக அல்ல, ஆட்சித் துறையின் விருப்பத்துக்கு உட்பட்ட ஒன்றாகவே அது இவ்வாறு பொறுப் பேற்றிருப்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். இங்கிலாந்து வங்கி இடைநிறுத்தக் காலத்தில் இப்படிச் செய்யவில்லை என்பதை ஏற்கத் தான் வேண்டும். ஆகவே எல்லாம் இந்தக் கேள்வியைப் பொறுத்ததே. இந்த அளவு மாறுந்தகைமை என்பது இந்தியச் செலாவணியை இடைநிறுத்தக் காலத்து ஆங்கிலேய செலாவணியிலிருந்து வேறு படுத்தி தனியோர் இனமாகக் காட்டுவதற்கும், இரு அமைப்புகளுக்கு மிடையே நிலவுவதாக இங்குச் சொல்லப்படும் ஒப்புமையைச் சொல்லாமல் அடிப்பதற்கும் போதுமான ஒரு வேறுபாடுதானா? ஆம் என்றோ, இல்லையென்றோ முடிவெடுக்கும் பொருட்டு, மாறுத் தகைமையின் மெய்யான உட்பொருள் என்ன என்பதை நாம் உறுதி யாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். மாற்றவொண்ணாச் செலா வணிக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி வலுவாக உள்ளது. இதனால் ஒருவிதமான மாறுந்தகைமைக்கு எத்துணைச் சிறு அளவிலும் வகை செய்கிற செலாவணி அமைப்பு குறித்து மக்கள் எளிதில் மனநிறைவு அடைகிறார்கள். ஆனால் இந்த மனப்போக்கு நிலவுவதாக அனுமானம் செய்து கொள்வது மிகவும் அடிப்படையான ஒரு கேள்வியை அலட்சியமாகக் கையாள்வதாகும். ஒரு மாற்றவொண் ணாச் செலாவணியிலிருந்து மாற்றத்தக்க செலாவணியை அடிப் படையில் வேறுபடுத்துவது என்ன என்பதைத் தெளிவாக மனத் தில் இருத்திக் கொள்ள வேண்டும். ஒன்று தன்னியக்கச் செலாவணி என்றும், மற்றது மேலாண்மை செய்யப்படும் செலாவணி என்றும் சாதாரணமாகக் காட்டப்படும் வேறுபாட்டை ஒரு மோசமான பிழையென்று புறந்தள்ளிவிட வேண்டும். ஏனென்றால், மேலாண்மை செய்யப்படும் செலாவணி நாம் குறிப்பிடுவதன் பொருள் அச்

செலாவணியின் வெளியீடு வெளியிடுகிறவரின் விருப்புரிமையைப் பொறுத்தது என்பதாக இருக்குமானால், மாற்றத்தக்க செலாவணியும்கூட மாற்றவொண்ணாச் செலாவணியைப் போலவே மேலாண்மைச் செலாவணிதான். மாற்றத்தக்க செலாவணியின் மேலாண்மையில் வெளியிடுவதற்கான விருப்புரிமை கட்டுப்படுத்தப் படுகிறது, மாற்றவொண்ணாச் செலாவணியிலோ அது கட்டுப் படுத்தப்படுவதில்லை என்பது மட்டுமே வேறுபாடாகும். ஆனால் கட்டுப்படுத்தப்பட்டாலும் கூட வெளியீடு விருப்புரிமைப்படியான தாகவே இருந்து வருகிறது. அந்த அளவில் மாற்றத்தக்க செலாவணி மாற்றவொண்ணாச் செலாவணியிலிருந்து வேறுபட்டு தனித்து நிற்கும் அளவுக்குப் பாதுகாப்பானதல்ல. அதன் வெளியீட்டை விரிவாக்குவது வகுப்புரிமைப்படியானதாக இருக்க, இத்தகைய வெளியீடுகளின் விளைவு நாணயங்களை சுற்றோட்டத்தை விட்டுத் துரத்துவதாய் இருக்க, மாற்றத்தக்கச் செலாவணி எளிதில் மாற்றவொண்ணாச் செலாவணி ஆகிவிடலாம். ஆகவே மாற்றத்தக்கச் செலாவணிக்கும் மாற்றவொண்ணா செலாவணிக்கு இடையிலான வேறுபாடு, இறுதியாகப் பார்க்குமிடத்து, செலாவணி வெளியிடும் உரிமையை விவேகத்துடன் ஆள்வதற்கும் விவேகமின்றி ஆள்வதற்கும் இடையிலான வேறுபாடுதான். வேறுவிதமாகச் சொன்னால், மாறுந்தகைமை என்பது வெளியீட்டு அதிகாரத்துக்கு ஒரு முட்டுக் கட்டையே ஆகும். இதையும், மாற்றத்தக்கச் செலாவணி தவறான மேலாண்மையின் காரணத்தினால் மாற்றவொண்ணாச் செலாவணியாகும் போக்குள்ளது என்ற உண்மையையும் கூட மனத்தில் இருத்திக் கொள்வோமானால், செலாவணியின் விவேகமான மேலாண்மை கெட்டு விவேகமற்ற மேலாண்மையாகி மிகைவெளியீட்டில் போய் முடிவதைத் தடுப்பதற்கு மாறுந்தகைமை தொடர்பான கடப்பாடுகள் எவ்வளவு கடுமையாக இருக்க வேண்டும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க இயலும். ஆகவே, மாற்றத்தக்கச் செலாவணி கொண்ட நாடுகளில் விவேகத்துடன் மேலாண்மை செய்யப்பட்டு, நாணயம் நாட்டை விட்டுச் சென்றபோது, அதன் இடத்தைப் பிடிப்பதற்காகத் காகித பணம் அதிகமாகவில்லை என்பது மட்டுமின்றி, உள்ளபடியே குறையவும் செய்தது என்பதும், தங்கச் செலாவணியைக் காட்டிலும் கூடுதலான அறுதி அளவுக்கு வழக்கமாய் அந்த அதிகரிப்பு இருந்தது என்பதும் உண்மையானால், மாறுந்தகைமை தொடர்பான

கடப்பாடுகள் ''உருப்படியான உடனடி அறுதி மாறுந்தகைமையின்''[1] கடப்பாடுகளாய் இருந்தன என்பதுதான் காரணம். இப்போது நாம் பேராசிரியர் சம்னர் இப்படிக் கூறியதைப் புரிந்து கொள்ளலாம்:[2]

> ''செலாவணியின் மாறுந்தகைமை என்பது மனிதனின் உளச்சான்றை போன்றது. அதற்கு அநேக படிநிலைகள் உள்ளன; அது எவ்வளவு கண்டிப்பும் தூய்மையும் கொண்டதோ அவ்வளவு மதிப்புக்குரியது''.

இவ்வாறிருக்க, நமக்கு வழங்கப்படும் மாறுந்தகைமையின் படிநிலை என்னவென்று அறிந்து கொள்ளும் வரை ஒரு மாற்றவொண்ணாச் செலாவணியின் விளைவுகளிலிருந்து நாம் தடைகாப்பு பெற்றிருப் பதாக எண்ணிக் கொள்வது முட்டாள்தனமாகும். ஆக, இந்தியா வில், ரூபாயின் மாறுந்தகைமை எப்படிப்பட்டது? இது ஒத்தி வைக்கப்பட்டதும், சட்டநீக்கம் செய்யப்பட்டதும், வட்டார நீக்கம் செய்யப்பட்டதும், ஆகவே உயிர் நீக்கம் செய்யப்பட்டதுமான ஒரு வகை மாறுந்தகைமையாகும். உண்மையாகச் சொன்னால், இது மாறுந்தகைமையை மறுதலிக்கிற தவணையுரிமையே (moratorium) தவிர மாறுந்தகைமை அலல்வே அல்ல. ஏனென்றால் நடைமுறை யில் அயல்நாட்டுப் பண அனுப்பீடுகளுக்கு மாறுந்தகைமைக் கான வழிவகை என்பதன் பொருள் என்ன? மாற்றுவிகிதக் குறைவு நேரிடும் வரை ரூபாயைப் பொறுத்து ஒரு தவணையுரிமை அல்லது மாற்றவொண்ணாமை உள்ளது என்பதுதான் இதன் பொருள். மாற்றுவிகிதம் குறையாமல் இருக்கும்வரை ஒரு தவணையுரிமை இருந்து வருவது மட்டுமல்லாமல் குறைவு நேரிடும்போது தவணை யுரிமை அகற்றப்படுவதற்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை. அது அகற்றப்படாமலும் போகலாம். ஏனென்றால் அது உளச் சான்றைப் பொறுத்ததே தவிர சட்டத்தைப் பொறுத்ததன்று.[1] மாறுந்

---

1. வைசிராய் மாமன்றத்தின் நிதித்துறை உறுப்பினர் 1908 - 09க்கான தமது நிதி நிலை அறிக்கையில் (பக்கம் 23, அழுத்தம் மூலத்தில் உள்ளபடி) கூறியதாவது: ''வரம்பின்றி (தங்கம்) வெளியிட வேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்கி இருப்போமானால், கிடைக்கக்கூடிய அளிப்பு (Supply) முழுவதும் ஒரு சில வாரங்களில் தீர்ந்து போயிருக்கும்... **இந்தக் காரணங்களால் நாம் நமது சட்ட உரிமைகளை விடுவதில்லை எனத் தீர்மானித்தோம்... நமது வசதியைப் பொறுத்தல்லாமல் ரூபாய்களுக்கு மாற்றாக சவரன்கள் தர வேண்டிய கட்டாயம் நமக்கில்லை.** ஆகவே எந்த ஒரு நாளிலும் எந்த ஒரு தனியாளுக்கும் பவுண்டு 10,000க்கு மேற்பட்ட அளவுகளில் தங்கம் வெளியிடக் கூடாது என்று செலாவணி அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது''. 1907 ஆம் ஆண்டின் மாற்றுவிகித நெருக்கடியில் ரூபாயின் மாறுந்தகைமையில் அரசுக்குள்ள கடப்பாட்டு உணர்வு தொடர்பாக அதன்

(தொடர்ச்சி பின்பக்கம்)

தகைமை என்ற சொல்லின்மீது நமக்கு ஆசை என்றால், மாறுந் தகைமையின் இத்தகைய படிநிலை இடைநிறுத்த காலத்துக்குரிய வங்கி நோட்டுகளின் மாற்றவொண்ணாமையிலிருந்து வெகுதூரம் விலகிநிற்கிற ஒன்றுதானா? ஆம் என்கிறவர்கள் அப்படியே சொல்லட்டும். அதிநுணுக்கமான கற்பனைத் திறன் வாய்க்கப்பெறாத ஒருவரைப் பொறுத்தவரை, இப்படி ஒரு மாறுந்தகைமைக்கும் அறுதி மாற்றவொண்ணாமைக்கும் இடையிலான வேறுபாடு மிகவும் மெல்லியது. ஒரு அமைப்புகளும் அடிப்படையில் வேறுபட்டவை யென்று அவரை நம்ப வைப்பதற்கில்லை. சொல்லப்போனால், இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் விலைகள் என்னும் சிக்கலை நாம் பகுத்தாய முற்படும்போது இவ்விரு அமைப்புகளும் வேறுபட்டவை அல்ல என்றும், நடைமுறையில் எல்லா வகையிலும் இரண்டுக்குமான ஒற்றுமை முழுநிறைவானது என்றும் காட்டுவதற்கு மற்றொரு சான்று காண்போம்.

ஆயினும், ஒரு மாற்றவொண்ணாச் செலாவணியைச் சிறப்பாக மேலாண்மை செய்வதன் மூலம் தங்கத்துக்கு மிகை மதிப்பு ஏற்படாமல் செய்யலாம் என்றும், இவ்விதம் அதற்கும் முற்ற முழுக்க மாற்றத்தக்க செலாவணிக்கும் பெரிய வேறுபாடு ஏதும் இல்லாமற் போகலாம் என்றும் சொல்லப்படலாம். ஆனால் ஒரு மாற்றவொண்ணாச் செலாவணி அவ்வளவு சிறப்பாக மேலாண்மை செய்யப்படுமா என்பது நடைமுறைச் செயல்பாடு தொடர்பான கேள்வி. மேலும், விலைச் சிக்கலைப் பொறுத்தவரை தங்கத்துக்கு

(அடிக்குறிப்புத் தொடர்ச்சி)

போக்கினை எடுத்துரைக்க இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன! மாறுந்தகைமையின் படித்தரம் நிர்வாக விருப்புரிமையைப் பொறுத்ததாகையால், நடைமுறையில் அது எந்த அளவுக்குச் செயலாக்கப்படுகிறது என்பதை வரையறுத்துச் சொல்வது கடினம். நடைமுறையில் ரூபாய் மாற்றத்தக்கதாய் உள்ளது என்ற எண்ணத்தைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதே அதிகாரப்பூர்வ சாட்சியத்தின் முயற்சியாக உள்ளது. அப்படியானால் அதை ஏன் சட்டப்படி மாற்றத்தக்கதாக்கக்கூடாது. ஏனென்றால் மாறுந்தகைமை நடைமுறையில் முழுமையடைந்தால் அரசு உள்ளபடியே ஏற்றுக்கொள்வதாக அதிகாரபூர்வ சாட்சியத்திலிருந்து தெரிய வருவதற்கு மேல் கூடுதலான கடப்பாடுகளை அதன்மீது சுமத்த சட்டப்படியான மாறுந்தகைமையால் முடியாது. மாற்றுவிகித ஊகவணிகர்கள் இதைச் சாதாரணமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்ற அச்சத்தினால் அரசு இப்படிச் செய்வதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் ஏன் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது? அவர்கள் ரூபாய் வைத்திருப்பவர்கள் இல்லையா? ஆயினும் இந்த வாதுரையின் உட்பொருள் போதிய அளவுக்கு உணரப்பட்டதாகத் தெரியவில்லை. செலாவணியின் மதிப்பு எப்போதுமே ஓர்

மிகை மதிப்பு இல்லாமற்போவது மாற்றவொண்ணாச் செலாவணியை மாற்றத்தக்கச் செலாவணிக்கு நிகராய் நிறுத்திடப் போதுமானதா என்பதும் கூட நிலைமைகளைப் பொறுத்ததே. இந்தக் கேள்விகள் எல்லாம் அவற்றுக்குரிய சரியான இடங்களில் பரிசீலிக்கப்படும்.[1] இந்தக் கட்டத்தில் மாற்றவொண்ணாச் செலாவணியின் இயல்பான உள்ளாற்றல்களையே பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

தங்க மாற்று திட்டம் என்ற பெயரினால் இந்திய பணத் திட்டத்தின் உண்மை இயல்பை மறைத்துவிட முடியாது என்பதை இங்கே குறிப்பிடுவது போதுமானது. தங்கம் வரம்பற்ற சட்டச் செலாவணியாகும் என்றபோதிலும், அதனுடன் கூடவே பொறுப்பார்ந்த செலா வணியின் இன்னொரு வடிவமும் வரம்பின்றி வெளியிடப் படுகிறது. இது கிட்டத்தட்ட மாற்றவொண்ணாச் செலாவணி ஆகும், இதுவும் வரம்பற்ற சட்டச் செலாவணியின் தன்மையைப் பெற்றுள்ளது என்ற உண்மையில் இந்தியப் பண திட்டத்தின் சாரம் அடங்கியுள்ளது.

இப்படி விளக்கப்படுமிடத்தே, இந்தியாவில் இப்போதுள்ள செலாவணி அமைப்பு 1898இல் அரசினால் வரையறுக்கப்பட்டு ஃபௌலர் குழுவினால் இயற்றப்பட்ட செலாவணி அமைப்புக்கு எதிர்மாறானது என்பதை அறிவதற்கு நுண்மாண் நுழையல ஆற்றல் ஏதும் தேவையில்லை. எந்தக் காரணத்தினால் வங்கி சாசனச் சட்டம் இங்கிலாந்தில் வங்கி இடைநிறுத்தச் சட்டத்துக்கு எதிர்மாறானதாய் இருந்ததோ, அதே காரணத்தால் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவையாகும். இரண்டு சட்டங்களின்படியுமே இங்கிலாந்தில் செலாவணி ஒரு கலப்புச் செலாவணியாக, பகுதி அளவுக்குத் தங்கமாகவும் பகுதி அளவுக்குத் தாளாகவும் இருந்தது. வங்கி இடைநிறுத்தச் சட்டத்தின் மூலம் தங்க வெளியீடு வரம்புக்குட்பட்டதும் தாள் வெளியீடு வரம்பற்றதும் ஆயிற்று என்றால், வங்கி சாசனச் சட்டத்தின்படி இந்நிகழ்முறை தலைகீழாக்கப்பட்டு தாள் வெளியீடு வரம்புக்குட்பட்டதும் தங்க வெளியீடு வரம்பற்றதும்

1. ரூபாய்க் கணக்கில் தங்கத்தின் மிகை மதிப்புக்கு (Premium) வகை செய்யும் காரணங்களை அறிய, பார்க்கவும்?

2. அத்தியாயம் VI. குறிப்பாகத் தங்கக் கணக்கில் ரூபாய் மதிப்பு குறையாமலே பொதுவான ரூபாய் மதிப்புக் குறைவு எப்படி ஏற்படக் கூடும் என்பதற்கு விளக்கமாய் அமையும் காரணங்களை அறிய, பார்க்கவும் அத்தியாயம் VIஇன் முடிவு மற்றும் அத்தியாயம் VIIஇன் தொடக்கம்.

ஆயிற்று என்பதுதான் வேறுபாடு. இதேவழியில், இந்திய அரசாங்கத்தின் மூலத் திட்டத்தின்படி, ரூபாய் வெளியீடு வரம்புக்குட்பட்டதாகவும், தங்க வெளியீடு வரம்பற்றதாகவும் இருக்க வேண்டும். இப்போதுள்ள அமைப்பில் தங்க வெளியீடு வரம்புக்குட்பட்டதாகியுள்ளது; அதேபோது ரூபாய் வெளியீடு வரம்பற்றதாகியுள்ளது.

இது இந்திய அரசு தொடக்கத்தில் யோசித்து வைத்திருந்த திட்டத்தின் மீதொரு முன்னேற்றமா? அந்தத் திட்டத்திற்குச் சொல்லப்பட்ட ஒரே மறுப்புரை அது ரூபாயை மாற்றவொண்ணாததாக்குகிறது என்பதே.[1] ஆனால் மாறுந்தகைமை இப்படியோர் அவசிய நிபந்தனையா? ஆம் என்றால் எப்போது? ஒரு செலாவணியின் மதிப்பைக் காப்பதற்கு மாறுந்தகைமை அவசியம் என்ற கருத்து எடுத்த எடுப்பிலேயே விபரீதமான ஒன்று. வாழைப்பழங்களை ஆப்பிள் பழங்களாக மாற்றினால்தான் வாழைப்பழங்களின் மதிப்பைக் காக்க முடியும் என்று எவரும் சொல்வதில்லை. வாழைப்பழங்களுக்கு ஒரு தேவை (demand) இருப்பதாலும் அவற்றின் வழங்கல் வரம்புக்குட்பட்டதாய் இருப்பதாலும் அவை தம் மதிப்பைக் காத்துக் கொள்கின்றன. செலாவணியை இந்த விதிக்கு விலக்காகக் கருதிக் கொள்வதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. செலாவணி என்பது மதிப்புக்குப் பொதுவான அளவை ஆவதால் வாழைப்பழங்களின் மதிப்பைக் காட்டிலும் செலாவணியின் மதிப்பை நிலைப்படுத்துவதில் கூடுதல் அக்கறை கொண்டுள்ளோம், அவ்வளவுதான். செலாவணியின் மதிப்பை, அல்லது இவ்வாறே வேறு எந்த ஒன்றின் மதிப்பையும் காப்பதற்கு வேண்டியதெல்லாம் அதன் அளிப்புக்கு (Supply) உருப்படியானதொரு வரம்புதான். மாறுந்தகைமை பயனுள்ளது. அது நேரடியாக ஒரு செலாவணியின் மதிப்பைக் காக்கிறது என்பதல்ல காரணம் - அது இவ்விதம் காப்பதாகக் கருதுவதே அபத்தம். அது செலாவணியின் வழங்கலுக்கு வரம்புகட்கும் விளைவை ஏற்படுத்துகிறது என்பதுதான் காரணம். ஆனால் அந்த நோக்கத்தை அடைவதற்கு மாறுந்தகைமை ஒரே வழியன்று. செலாவணி வெளியீட்டுக்கு அறுதி வரம்பு விதிக்கிற ஒரு திட்டம் செலாவணியின் வழங்கல் மீது இதே விளைவை - பார்க்கப் போனால் இன்னுங்கூட சக்தி மிக்க விளைவை - ஏற்படுத்துகிறது. ஆக,

---

1. லிண்ட்சே, புரோபின் இருவருமே இந்த அடிப்படையில் இந்திய அரசின் திட்டத்தைத் தாக்கினார்கள். தங்களுடைய திட்டங்கள் இதைக் காட்டிலும் உயர்வானவை என்று [illegible] அவை எப்படியும் ஒருவிதமான மாறுந்

நாணயச்சாலைகள் ரூபாய் நாணயமடித்தலுக்கு அறவே மூடப்பட்டு இருந்திருக்குமானால் செலாவணி வெளியீட்டின் மீது அறுதி வரம்பு விதிக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட மாற்றவொண்ணாத ரூபாய் மாறுந்தகைமையின் நோக்கங்கள் அனைத்திற்கும் பயன் பட்டிருக்கும். அது மட்டுமல்ல. இப்படிப்பட்ட மாற்றவொண்ணாத ரூபாய்ச் செலாவணி இன்று இந்தியாவில் நாம் வைத்திருக்கும். போலித்தனமான மாறுந்தகைமையுள்ள ரூபாய் வகைக்கு எத்துணையோ மேலானதாக இருந்திருக்கும்.[1] அறுதி வரம்பு இருக்கு மானால் ரூபாய் மதிப்பில் சரிவு ஏற்படும் ஆபத்து ஏதும் இல்லாது போயிருக்கலாம். எப்படியாயினும், ரூபாய் மதிப்பு வரைமுறை யற்று உயரக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கும். ஆனால் தங்கத்தை பொதுவான சட்டச் செலாவணி ஆக்கியதன் மூலம் இந்த ஆபத்து உருப்படியான முறையில் தவிர்க்கப்பட்டது. செலாவணியின் மீது அறுதி வரம்பு கட்டுவதன் இரண்டாவது விளைவு, வெளியீடு களின் பரிமாணம் தொடர்பான சிக்கல் அனைத்துக்கும் ஒரே அடியாக தீர்வு காணப்பட்டுவிட்ட காரணத்தினால் அதனை மேலாண்மை யிலிருந்து விடுவிப்பதாக இருந்திருக்கும்.

ஆகவே இவ்வகைகளிலெல்லாம் தங்க மாற்று திட்டமானது வெளியீட்டுக்கு நிர்ணய வரம்புடனும் தங்கத்தின் துணையுடனும் கூடிய மாற்றவொண்ணா ரூபாய் என்கிற ஆரம்பத் திட்டத்தின் ஊறுபாடு ஆகும். மேலும், விலைவாசியைக் கட்டுப்படுத்தும் கண்ணோட் டத்தில், மாற்று நியமமானது தொடக்கத் திட்டத்தின் மீதொரு முன்னேற்றமாக இருந்ததென்று சொல்வதற்கில்லை. தொடக்க அமைப்பை இப்படி உருத்தெரியச் செய்வது வருத்தத்திற்குரிய செய்தி அல்ல என்று சொல்ல முடியும்தான். தங்கம் மதிப்பின் நியமமாய் இருக்கிறதா, அல்லது பொறுப்பார்ந்த பணம் (Fiduciary money) மதிப்பின் நியமமாய் இருக்கிறதா என்பதைப் பொருட்படுத்தாதத் தேவையில்லை. ஏனென்றால் இவ்விரண்டில் எதுவும் ஒரு நிலை யான மதிப்பு நியமத்தை வழங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. தங்க திட்டம் என்பது காகித திட்டத்தைப் போலவே நிலையற்றதென மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இரண்டுமே சுருக்கத்துக்கும் பெருக்கத்துக்கும் எளிதில் இடந்தரக் கூடியவையே ஆகும். இதெல் லாம் உண்மைதான் என்பதில் ஐயமில்லை. இருந்தபோதிலும் எந்த ஒரு பண அமைப்பிலும் வரைமுறையற்ற சுருக்கத்துக்கான

1. உறுதியற்ற திட்டத்தை செலாவணி திட்டத்துடன் ஒப்புநோக்குகையில் பேராசிரியர் பிஷர் இந்தப் பார்வைகளை அறவே காணத் தவறி விட்டதாகத் தோன்றுகிறது. பார்க்கவும்: அவரது வாங்குந்திறன்..., 1911, பக்கம் 131 - 32.

ஆபத்து ஏதுமில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.[1] வரை முறையற்ற பெருக்கம் ஏற்படும் சாத்தியப்பாட்டுக்கு எதிராகத்தான் கவனமாய் இருக்க வேண்டும். ஆனால் வரைமுறையற்ற பெருக் கத்தின் சாத்தியப்பாடு பணத்தின் இயல்பைப் பொறுத்து மாறுகிறது. மதிப்பிடும் முறை திட்டமான உலோகப் பணமாய் இருக்கும்போது மிக அதிகமாய்ப் பெருக்கம் ஏற்பட முடியாது. ஏனென்றால் உற்பத்திச் செலவே போதிய வரம்பு கட்டும் காரணியாகச் செயல் படுகிறது. மதிப்பின் முறை என்பது மாற்றத்தக்கத் காகித பணமாய் இருக்கும்போது சேம வைப்புத் தொடர்பான வழிவகைகள் அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுகின்றன. ஆனால் மதிப் பிடும் முறை என்பது அடக்கச் செலவைக் காட்டிலும் கூடுதலான மதிப்புடையதும் மாற்றவொண்ணாததுமாகிய பணத்தாலானதாய் இருக்கும்போது அச்செலாவணி வரைமுறையற்றுப் பெருக்கமடை யும் ஆபத்து நிறைந்திருப்பதாகத்தான் சொல்ல வேண்டும். வரை முறையற்ற பெருக்கம் என்பது மதிப்புக்குறைவு அல்லது விலை யேற்றத்துக்கு மறுபெயராகும். ஆகவே வங்கி சாசனச் சட்டம் வங்கிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மீது எவ்வித முன்னேற்றமும் காணவில்லை என்று சொல்ல முடியாது. பார்க்கப்போனால் அது ஒரு பெரிய முன்னேற்றமாகவே இருந்தது. எப்படியென்றால் மிக எளிதில் பெருக்கத்துக்கு உட்படக்கூடிய செலாவணியின் இடத் தில் அவ்வளவு எளிதில் பெருக்கத்துக்கு உட்படாத செலாவணியை அது கொண்டுவந்தது. இப்போது ரூபாயானது ஒரு மதிப்பு இழந்த நாணயம் ஆகும்;[2] மாற்றவொண்ணாதது ஆகும்; வரம்பற்ற சட்டச்

1. பார்க்கவும்: ஹாட்ரி, ஆர்.ஜி. முன் வந்தது, அத்தியாயம் I.

2. இந்தியச் செலாவணி தொடர்பான எழுத்தாளர்கள் சிலர் ஏன் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொள்வது கடினமாய் உள்ளது. பார்க்கவும்: இந்தியப் பொருளாதாரச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தின் திரு. மதனின் ஆய்வறிக்கை மீதான விவாதம் (இந்திய பொருளாதார ஏடு, பாகம் III, பகுதி 4, தொடர்எண். 12, பக்கம் 560) ரூபாயை மதிப்புக் கெடச் செய்தல் என்பது அதே எடையை நீடிக்கச் செய்து அதனைத் தரங் கெட்டதாக்குவது அல்லது அதே தரத்தைக் காத்துக் கொண்டு எடையைக் குறைப்பது என்ற வாதத்தை மேற்கொண்டிருக்குமானால் எப்படித் தெரிந்திருக்குமோ அப்படி கண்கூடாகத் தெரியவில்லை என்பது உண்மைதான். ஆனால் பணம் மற்றும் நாணயங்கள் பற்றிய கட்டுரை யில் (பகுதி II, அத்தியாயம் I, பத்தி. 8) ஹாரிஸ் சுட்டிக்காட்டுவதுபோல, ''நாணயச்சாலை யிலோ நாணயங்களிலோ எந்த மாற்றமும் செய்யாமல் நாணயங்களின் வகைப் பெயர்களை மாற்றுவது,'' ''எடுத்துக்காட்டாக ஒன்பது பென்னிகளை, அல்லது ஒன்பது பென்னியில் இருக்குமளவு வெள்ளியை ஷில்லிங் என்று அழைக்க வேண்டும் என்பது'' மதிப்புக் கெடச்

செலாவணி ஆகும். இந்நிலையில் அது வரைமுறையற்ற பெருக்கத்தின், .அதாவது மதிப்புக்குறைவு அல்லது விலையேற்றத்தின் வாய்ப்பை தன்னகத்தேக் கொண்ட மரபைச் சேர்ந்ததாகும். இதற்கு எதிரான ஒரு காப்புக்கூறு என்ற முறையில், தொடக்கத்தில் வகுக்கப்பட்ட திட்டம் தான், அதாவது இந்தியச் செலாவணி அமைப்பை 1844 ஆம் ஆண்டின் வங்கி சாசனச் சட்டத்தால் ஆளப்படும் ஆங்கிலேயச் செலாவணி அமைப்பை ஒத்ததாக்கும் விதத்தில் ரூபாய்கள் வெளியிடுவதற்கு வரம்பு கட்டுகிற திட்டம்தான் மேலான திட்டம் என்பதில் ஐயமில்லை.

மேலே முன்வைக்கப்பட்ட காரண காரியவாத முறையில் வலுவேதும் உண்டானால் மாற்று திட்டம் குறித்து சேம்பர்லின் குழு கொண்டிருந்த கருத்துடன் ஒத்துப்போவது எளிதன்று. பார்க்கப் போனால், இந்த ஆணையம் என்னென்னவோ கூறியிருந்த போதிலும் இந்தச் செலாவணி அமைப்பை தகர்ந்து விழச் செய்யக்கூடிய ஏதோ ஒரு பலவீனம் அதில் எங்கோ இருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே அந்த திட்டத்தின் அடித்தளங்களை ஒரு புதிய கோணத்தில் ஆராய்வது அவசியமாகிறது.

இயல் 6

செலாவணி மாற்றுத் திட்டத்தின் நிலைத் தன்மை

வெள்ளியைத் தங்குதடையின்றி நாணயமாக்குவதற்கு இந்திய நாணயச் சாலைகள் மூடப்பட்ட நேரத்தில் நாட்டில் இரு கட்சிகள் இருந்தன - ஒன்று இம்மூடலுக்கு ஆதரவானது, மற்றொன்று எதிரானது. ரூபாய் மதிப்பின் வீழ்ச்சியால் சங்கடத்தில் சிக்கிக் கொண்ட அன்றைய அரசு தங்கக் கொடுப்புகளின் சுமையிலிருந்து தணிவு பெறும் நோக்குடன் நாணயச்சாலைகளை மூடவும் ரூபாய் மதிப்பை உயர்த்தவும் விரும்பியது. மறுபுறம், ரூபாயின் செலாவணி மதிப்பு உயர்வதால் இந்திய வணிகத் துறைக்கும் தொழில் துறைக்கும் பேரழிவு ஏற்படும் என்று நாட்டின் உற்பத்தி நலன் சார்பில் வலியுறுத்தப்பட்டது. *1873-1893* காலத்தில் இந்தியத் தொழில் துறை நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிச் சென்றதற்கானக் காரணங்களில் ஒன்று செலாவணி வீழ்ச்சியால் இந்திய ஏற்றுமதி வணிகத் துறைக்குக் கிடைத்த பெருங்கொடை ஆகும் என்று வாதிடப்பட்டது. நாணயச் சாலை மூடலால் ரூபாயின் வீழ்ச்சி தடுக்கப்பட்டது என்றால், இது போன்ற ஒரு நிகழ்ச்சியால், இந்திய வணிகத் துறைக்கு நன்மை, தீமை இரண்டும் விளைந்தே தீரும் என்று அஞ்சப்பட்டது. இந்தியாவிற்கு மாறாக இது வெள்ளி பயன்படுத்தும் நாடுகளுக்கு ஒரு பெருங் கொடையை வழங்குவதாகிவிடும், தங்கம் பயன்படுத்தும் நாடுகளுக்கு மாறாக செலாவணி வீழ்ச்சியிலிருந்து இந்தியா பெற்ற பெருங்கொடையைப் பறிப்பதாகிவிடும் எனப்பட்டது.

கோட்பாட்டு அளவில் இந்த அச்சங்கள் ஏற்கெனவே எள்ளி நகையாடப்பட்டுவிட்டன. ஆகவே கோட்பாடு வழங்கியத் தீர்ப்பை பிற்கால வரலாறும் உறுதி செய்திருப்பது கருத்துக்குரியது. ரூபாயின் வீழ்ச்சி தடுக்கப்பட்ட போதிலும் இங்கிலாந்து போன்ற ஒரு தங்க திட்ட நாட்டுடனோ சீனா போன்ற ஒரு வெள்ளி திட்ட நாட்டுடனோ இந்தியாவின் வணிகம் பின்னடைவுக்கு உள்ளாகவில்லை. இதற்கு மாறான நிலைமையைக் காட்டுவதற்குப் பின்வரும் புள்ளி விவரங்கள் போதிய சான்றாகின்றன:

ரூபாயின் வீழ்ச்சி தடுக்கப்பட்டதானது இந்திய நிதித்துறையின்

சாலைகள் மூடப்பட்டதிலிருந்து எதிர்பார்க்கப்பட்டவாறே அமைந்தது. வரிவிதிப்பில் முக்கிய குறைப்புகளும் சமூகப் பண்பாட்டுக்குப் பெருஞ்செலவும் செய்யப்பட்ட போதிலும் நாணயச்சாலை மூடலுக்குப் பிறகு வந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் பற்றாக்குறைகள் அதிகமில்லை.

இப்போது செலாவணி அமைப்பு பழுதற்றது என்பதற்கான ஐயந்திரிபற்ற சான்றுகளாக இந்த உண்மைகளை விளக்கப்படுத்தும் போக்கு சில எழுத்தாளர்களிடையே காணப்படுகிறது. நாட்டின் வாணிகம் பின்னடைவுக்கு உள்ளாகவில்லை என்றால்,[1] மேலும் நாட்டின் நிதிநிலை மேம்பட்டுள்ளது என்றால்,[2] இந்த விளைவுகள் எந்தச் செலாவணியின் செயல்பாட்டுக்கு உரித்தாக்கப்படக் கூடுமோ அந்தச் செலாவணி நல்ல நிலையில் இருந்தாக வேண்டும் என்பதே பொருள் என வாதிடப்படுகிறது. செலாவணி அமைப்பின் பழுதற்ற நிலையை எளிதாய்க் கருதும் இத்தகைய கருத்துகள் எவ்வளவுதான் நியாயம்போல் தெரிந்தாலும், நம்பவைப்பதற்கு இன்றியமையாத தர்க்கப் பொருத்தம் இல்லாதவை என்று செலாவணி பயிலும் மாணவர்களை எச்சரிக்கத் தேவையில்லை. வணிகமானது நல்ல நிலையில் உள்ள பணத்தைப் பொறுத்ததாய் இருப்பதில் ஐயமில்லை. ஆனால் வணிகத்தின் வளர்ச்சியே பணம் நல்ல நிலையில் இருப்பதற்கு இறுதியான சான்றாகாது. தரங்கெட்ட நாணயமடித்தல் நடைபெற்ற காலங்களில் - ஒரு நேரம் இது சர்வசாதாரணம் - சமூக அவலமும் அதனால் ஏற்படும் தொல்லையும் சகிக்கவொண்ணாதவையாக இருந்தன. ஆனால் அதே காலங்களில் நாடுகள் வணிகத்தில் பெருமளவு முன்னேற்றம் காணமுடிந்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் நாணயமடித்தல் தரங்கெட்டும் ஓயாமல் மாறிக்கொண்டும் இருந்தது, மேலும் நீண்ட காலம் உள்நாட்டுப் போரும் குழப்பமுமாய் இருந்தது. அக்காலத்திய இங்கிலாந்து குறித்து லிவர்பூல் பிரபு - மோசமான செலாவணியின் தீமைகளை சமகாலத்திய அரசாளர்கள் அனைவரை விடவும் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தவர் குறிப்பிடுகிறார்:

> ''எவ்வாறாயினும், நமது நாணயங்கள் பெரும் குழப்ப நிலையிலிருந்த இந்தக் காலம் முழுவதிலும், நாட்டின் வாணிகம் மென்மேலும் மேம்பட்டுச் சென்று கொண்டிருந்தது என்பதை

1. கின்ஸ், முன் வந்தது, பக்கம் 3.

2. டி.டி. பார்பர், மதிப்பின் நியமம், பக்கம். 224.

3. **அரசாட்சியின் நாணயங்கள் குறித்து ஓர் ஆய்வுரை** (1880 மறு அச்சு), பக்கம். 135.

யும், வணிக நிலுவை அநேகமாய் எப்போதுமே இந்நாட்டுக்கு ஆதரவாய் இருந்தது என்பதையும் உறுதியாகச் சொல்லலாம்.''[3]

செலாவணி மோசமான நிலையில் இருக்கும்போதும் கூட வாணிகம் அதிகரிக்க முடியும் என்பதற்கு இந்தியாவின் அனுபவத்திலிருந்தே எளிதில் சான்று தரலாம். இந்திய வணிகம் 1873க்கும் 1893க்கும் இடையில் பாய்ந்து முன்னேறியது போல் வேறெந்தக் காலத்திலும் நடைபெற்றதில்லை. அக்காலத்தில் இந்தியச் செலாவணி நல்ல நிலையில் இருந்ததா? மறுபுறம் வணிகம் நல்ல நிலையில் இருந்ததென்றால் செலாவணி மோமான நிலையில் இருந்ததே அதற்குக் **காரணம்** என்று வாதிட முடியும். 1873க்கும் 1893க்கும் இடையில் இந்திய வணிகம் ஓர பெருங்கொடை பெற்றதால் செழித்து வளர்ந்தது. ஆனால் இந்தப் பெருங்கொடை இந்தியத் தொழிலாளியைப் பிழிந்து பெறப்பட்டது. விலைகள் உயர்ந்ததுபோல் விரைவாக அவரது கூலி உயரவில்லை. அதாவது அக்காலத்திய செழுமைக்கு அடித்தளம் செலாவணி வீக்கத்தால் கூட்டி வந்த கொள்ளையே தவிர பொருளுற்பத்தி அல்ல.

இதேபோல், புதிய செலாவணி அமைப்பு தங்கக் கொடுப்புகளின் சுமையைப் போக்கி, வரி செலுத்தும் இந்தியரின் துயரைத் தணித்திருப்பதால் அது சிறந்த ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் தயக்கமின்றி ஒப்புக்கொண்டுவிட முடியாது. செலாவணி வீழ்ச்சியுறும் காலத்தில் இந்தியாவின் தங்கக் கொடுப்புகள் எனும் சுமைக்குச் சரியான மூல காரணம் என்ன என்பதைத் தவறாகப் புரிந்து கொள்வதை இந்தக் கண்ணோட்டம் வெளிப்படுத்துகிறது. தங்கக் கொடுப்புகளின் சுமைக்கு வெள்ளியின் தங்க மதிப்பிலான வீழ்ச்சியே காரணம் என்று பரவலாகக் கருதப்பட்டுள்ளது. இந்தியா ஒரு தங்க திட்ட நாடாக இருந்திருக்குமானால் அந்தப் பெருஞ் சுமையிலிருந்து தப்பியிருக்கும் என்பது இக்கருத்தின் உட்பொருளாவதைத் தவிர்க்க முடியாது. இது ஒரு பிழையான கருத்து என்பதை விளக்கிக் காட்டத் தேவையில்லை எனலாம்.[1] தங்கக் கொடுப்புகளின் மதிப்பு அதிகமானதால் இந்தியாவின் சுமை கூடுதலாயிற்று என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தங்கக் கடனாளிகள் அனைவர் மீதும் - அவர்களின் நியமம் தங்கமானாலும் வெள்ளியானாலும் - அழுந்திய ஒரு சுமைதான் இது என்பது போதிய அளவு உணரப்படுவதில்லை. இவ்வகையில், ஆஸ்திரேலியா போன்ற ஒரு தங்கத் திட்ட நாட்டின்

---

[1] [illegible] பேராசிரியர் மார்ஷல்

நிலை இந்தியா போன்ற ஒரு வெள்ளி திட்ட நாட்டின் நிலையி லிருந்து வேறுபட்டதாய் இருக்கவில்லை. இந்நாடுகள் தங்கக் கடனாளிகளாய் இருந்த வரையில், ஒரே காரணத்தால், அதாவது அவை பட்ட கடன்களை அளவிடும் திட்டத்தின் மதிப்பேற்றத்தால் ஒரே விதமாய் அவை ஒவ்வொன்றும் பாதிப்புற்றன. இந்நாடுகளில் ஒன்று தங்க உருவிலும், மற்றது வெள்ளி உருவிலும் கடன்களை அடைத்ததால் அவற்றின் நிலைமையில் எந்த வேறுபாடும் ஏற்பட வில்லை - இந்தியா தன் கடன்களை அடைப்பதற்கு வெள்ளி யைப் பயன்படுத்தியதானது ஓர் ஒளிக்கோட்ட ஊடகமாகப் பயன் பட்டது. அது தாங்கிய சுமையின் பருமனை இவ்வூடகத்தின் வழி யாகப் பார்க்க முடிந்தது என்பதைத் தவிர. வெள்ளியின் வீழ்ச்சி இந்தியாவின் தங்கக் கொடுப்புகள் எனும் சுமையின் அளவீடே தவிர, அச்சுமைக்குக் காரணம் அன்று. ரூபாயின் வீழ்ச்சி தடுக்கப் பட்டதை வரி செலுத்துகிறவருக்கான துயர் தணிப்பின் முதற் சான்றாகவும், ஆகவே செலாவணி அமைப்பு நல்ல நிலையில் இருப்பதற்கான ஆதாரமாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. மிகை யாக விலை கொடுத்து நன்மை பெறப்பட்டிருக்கலாம் என்பது சாத்தியமே.

செலாவணி மாற்று திட்டத்திற்கு உட்பட்டு வணிகம் பெருகிய தாலும் அரசின் நிதிநிலை துடிப்புடன் இருந்தாலும் கவரப்பட்ட போதிலும், சேம்பர்லைன் ஆணையம் இத்தகைய வாதங்களை அத்திட்டத்திற்கு ஆதரவான அடிப்படைகளாக ஏற்றுக் கொள்ள வில்லை. செலாவணி அமைப்பு ரூபாயின் மாற்று மதிப்பை ஒரு நிலையான தங்கச் சந்தையில் வைத்துக் காக்க வல்லது என்பதையே அது தலைக் காரணமாய்க் கொண்டது.[1] ஆகவே மாற்று திட்டத்திற்கு துக்கு ஆதரவாக ஆணையம் இப்படிச் சொல்லியிருப்பதை நாம் ஆராய முற்பட வேண்டும். இச்சிக்கலைத் தெளிந்துரைக்கத் தேவை யான விவரங்களை அட்டவணை எண். XXVIII தருகிறது.

1. அறிக்கை, பக்கம் 18, 20.

அட்டவணை XXVIII

ரூபாயின் தங்க மதிப்பு

டனில் அயற்செலாவணி வீதங்களின் வாயிலாக விக்கப்படுவது. வீதம் = 1 ஷீ .4பெ						தங்க வாயிலாக தெரிவிக்கப்படுவது											
							சவரன்களின் ரூபாய் விலை ரூபாய் 15=1 சவரன்					பொற்பாளத்தின் ரூபாய் விலை தோலா = ரூ. 23-14-4.					
டுகள்	உயர்ந்தபட்சம்			குறைந்தபட்சம்			ஆண்டுகள்	உயர்ந்தபட்சம்			குறைந்தபட்சம்			உயர்ந்தபட்சம்			குறைந்தபட்சம்		
	ஷி.பெ.			ஷி.பெ.				ரூ.அ.பை.			ரூ. அ. பை			ரூ. அ. பை.			ரூ. அ. பை		
- 93	1	3.969		1	2.625		1893	16	10	6	15	6	0	26	11	0	24	14	0
- 94	1	4.031		1	1.500		1894	19	0	0	16	1	0	32	4	0	25	9	0
- 95	1	1.906		1	0.000		1895	19	5	0	18	2	6	30	8	0	27	6	0
- 96	1	2.875		1	1.000		1896	17	7	0	16	1	0	27	13	6	27	2	0
- 97	1	3.842		1	1.781		1897	16	10	0	15	3	0	26	12	6	25	4	0
- 98	1	4.125		1	2.250		1898	15	7	0	15	1	0	24	10	0	24	0	0
- 99	1	4.156		1	3.094		1899	15	4	0	15	0	0	24	2	0	23	4	0
1900	1	4.375		1	3.875		1900	15	1	3	15	0	0	24	2	0	23	15	0
1901	1	4.156		1	3.875		1901	15	0	0	15	0	0	24	2	6	24	0	0
1902	1	4.125		1	3.875		1902	15	4	6	15	2	6	24	2	6	24	0	0

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1902-1903	1 4.156	1 3.875	1903	15 3 0	15 1 6	24 3 0	24 0 0
1903-1904	1 4.156	1 3.875	1904	15 5 0	15 1 3	24 2 0	24 0 3
1904-1905	1 4.156	1 3.937	1906	15 1 0	15 2 0	24 4 6	24 0 0
1905-1906	1 4.156	1 3.937	1906	15 1 0	15 2 0	24 4 6	24 0 0
1906-1907	1 4.187	1 3.937	1907	15 4 0	15 0 0	24 4 0	23 15 6
1907-1908	1 4.187	1 3.875	1908	15 1 0	15 0 0	24 10 0	24 2 0
1908-1909	1 4	1 3.875	1909	12க்கும் 3%க்கும்	இடையே	24 3 6	24 2 0
1909-1910	1 4.156	1 3.875	1910	15 5 0	15 0 0	24 3 6	24 2 0
1910-1911	1 4.156	1 3.875	1911	15 0 0	15 0 0	24 0 6	23 15 0
1911-1912	1 4.156	1 3.937	1912	15 0 0	15 0 0	24 0 0	23 14 0
1912-1913	1 4.156	1 3.970	1913	15 0 0	15 0 0	24 0 3	23 14 0
1913-1914	1 4.156	1 3.937	1914	15 14 0	15 2 0	26 10 0	23 15 6
1914-1915	1 4.094	1 3.937	1915	15 13 6	15 5 0	25 14 0	24 18 0

ஆணையம் விதித்த அளவுகோல் சரி என இப்போதைக்கு வைத்துக்கொண்டால் ரூபாய் அதன் தங்க மதிப்பைக் காத்துக் கொண்டிருப்பதாக மேலே கண்ட விவரங்களிலிருந்து சொல்ல முடியுமா? ஆணையத்தின் குறுகிய கண்ணோட்டத்திலும் கூட இச்செலாவணி அமைப்பு கேள்விக்கு இடமில்லாத வெற்றி பெற்றுள்ளது என்று கூறுவது மடமையல்ல என்றாலும் மிகை நம்பிக்கையாகவே இருக்கும்.

1893 ஜூனுக்கும் 1917 ஜனவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் தங்கத்திற்கான ரூபாய் வீதம் 7.53344 கிராம் சுத்தத் தங்கத்துக்கு 1 ரூபாய் சமம் என்பதாகக் கணக்கிடப்பட்டது. அந்த வீதத்தில் சவரன் 15 ரூபாய்க்குச் சமமாக வேண்டும், தங்கத்தின் நாணயச்சாலை விலை தோலா (அதாவது 180 கிராம் 100 ரகப் பொற்பாளத்திற்கு ரூ. 23-14-4 என்பதாக இருக்க வேண்டும், லண்டனில் மாற்று விகிதம் 1 ஷி.4பெ. என்பதாக இருக்க வேண்டும், தங்கத்துக்கான இறக்குமதிப் புள்ளி 1 ஷி. 4.125 பெ. என்பதற்கும் ஏற்றுமதிப்புள்ளி 1 ஷி. 3.906 பெ. என்பதற்கும் இடைப்பட்டு மாறியிருக்க வேண்டும்.

தங்கத்தின் பேரிலான மதிப்பு தொடர்பாக ரூபாய்க்குள்ள நிலைத்தன்மையைப் பொதுவாக ஆராய்ந்தால், நாணயச்சாலை மூடப்பட்ட நாளிலிருந்து 1898 வரையிலும் ரூபாயின் நிகர் மதிப்புக்கு மிகவும் குறைவாக இருந்தது என்பதைக் காணலாம். தங்கம் அல்லது சவரனின் மாற்றுவிகிதம் அல்லது விலையின் கணக்கில் அளவிடப்படும் ரூபாயின் மதிப்புக்குறைவு 25 சதவீதத்துக்கும் 30 சதவீதத்துக்கும் இடையில் எங்கோ நின்றது. மதிப்புக் குறைவு மிக அதிகமாக இருந்ததால், ரூபாய் தங்கத்துடன் நிலைக்குத் தரப் படாத போது அரசு சந்தித்த இடர்ப்பாடுகளை அது இரட்டிப்பாக்கி விட்டது. மாமன்ற உண்டியல்களை விற்பதென்னும் வழக்கமான வழியில் உள்நாட்டுக் கருவூலத்திற்கு நிதியளிப்பது முடியாத காரியம் ஆகிப் போயிற்று.[1] அரசுச் செயலர் ஒரு சங்கட நிலைக்கு ஆளானார். நிகர்மதிப்புக்கும் குறைவாக விற்க முன்வருவது செலாவணியை நிலைப்படுத்தும் கொள்கையின் தோல்விக்கு வழிவகுத்தது பற்றி சோகப்படுவதை குறித்தது. சந்தை வீதங்களுக்கு விற்க மறுப்பதில் கருவூலம் வறண்டு போகும் ஆபத்து இருந்தது. செயலர் சந்தையில் விடும் உண்டியல்களுக்கு ஒரு குறைந்தபட்ச வீதத்தை அல்லது அதிகபட்ச அளவை விதிக்க வேண்டுமென்று இந்திய அரசு ஆலோ

சனை கூறியது. அரசுச் செயலர் இரண்டில் எதற்கும் இணங்கவில்லை. ஆனால் மாற்றுவீதத்தை அளவு மீறிக் குறைத்துவிடாமலிருக்கும் பொருட்டு தான் எடுப்பனவற்றைக் குறைத்துக்கொள்ள இசைந்தார். நாணயச்சாலை மூடப்பட்ட பிறகு வந்த முதல் நிதியாண்டில் அரசுச் செயலர் எடுத்தவைதான் பதிவில் உள்ள மிகச்சிறு அளவாக இருந்துள்ளது:

அட்டவணை XXIX
மாமன்றம் எடுத்த தொகைகள் விவரம்

எடுக்கும் நாள்		எடுக்கும் தொகை (பவுண்டு 1,000)	எடுக்கும் வீதம் (ரூபாய்க்கு பென்னி)
1893	ஜூன்	2,478	15.039
	ஜூலை	25	15.974
	ஆகஸ்டு	78	15.243
	செப்டம்பர்	7	15.350
	அக்டோபர்	5	15.334
	நவம்பர்	617	15.251
	டிசம்பர்	14	15.242
1894	ஜனவரி	98	14.408
	பிப்ரவரி	1.023	13.787
	மார்ச்சு	1.915	13.870
	ஏப்ரல்	1.368	13.626

மாற்றுவீதம் குறைக்கப்பட்டுவிடாமல் காப்பாற்றுவதற்காக எடுக்கும் தொகைகளைக் கட்டுப்படுத்தியது முழு நன்மையாக இருக்கவில்லை. ஏனென்றால் உள்நாட்டுக் கருவூலத்திற்கு நிதியளிப்பதற்காக ஸ்டெர்லிங் கடன்கள் விளங்குவதென்னும் வழிமுறையை - எவ்வகையிலும் சிக்கனமே இல்லாத வழிமுறையை - நாட வேண்டிய அவசியத்தை அது திணித்தது.[1] உண்டியல் எடுப்பதன் மூலம் பணம் அனுப்புதல் உள்நாட்டுக் கருவூலத்தின் நிகர வழக்கீடுகளைக் காட்டிலும் 1893-94இல் பவுண்டு 6,588,000 குறைவாகிப் போயிற்று. இந்தப் பற்றாக்குறை பவுண்டு 7,430,000 என்னும்

1. பௌலர் குழுவின் முன் சர் எச். வாட்டர் பீல்டு அளித்த சாட்சியம், வினா 4332 - 39.

அளவுக்கு நிரந்தர ஸ்டெர்லிங் கடன்களால் ஈடுசெய்யப்பட்டது. இதன் மீதான வட்டி ஏற்கெனவே மிகையாக ஏறிப்போயிருந்த தங்கக் கொடுப்புகளின் சுமையைக் கூடுதலாக்கியது. இப்படியொரு தண்டத்துக்கு ஆளாவதற்கு மாறாக, அரசுச் செயலர் சந்தையை அடக்கியாளும் முயற்சியைக் கைவிட்டு, அதனைப் பின்தொடர லானார். ஆனால் நடப்பது நடக்கட்டும் என்னும் இந்தக் கொள்கைக் கும் ஒரு விலை இல்லாமற் போய்விடவில்லை. மாற்று விகிதத்தில் 1 ஷில்லிங் 4 பென்னிக்கும் கீழாக ஏற்பட்ட சரிவு உள்நாட்டுக் கரு வூலத்திற்கான பண அனுப்பீடுகளின் சுமையைக் கூடுதலாக்கிற்று. மேலும் அரசு அதன் ஐரோப்பிய அதிகாரிகளுக்கு - குடியியல் மற்றும் படையியல் அதிகாரிகளுக்கு - மாற்று விகித இழப்பீட்டுப்படி வழங்க வேண்டியதாயிற்று. இந்த உதவியை இதுவரை அது நிறுத்திக் கொள்ள வில்லை. நிகர் மதிப்புக்கும் கீழே ரூபாய் சரிவுற்றதால் அரசுக்கு ஏற்பட்ட செலவு ஒரு பெருந்தொகையாகும்.[1]

அட்டவணை[1] XXX

ரூபாய் மதிப்புக் குறைவினால் ஏற்பட்ட செலவு

ஆண்டு	மதிப்புக்குக் கீழே விற்கப் படும் உண்டி யல்களால் இழப்பு	மாற்றுவிகித இழப்பீட்டின்படி யால் இழப்பு	பிரித்தானியத் துருப்புகளுக்கு ஊதிய உயர்வி னால் இழப்பு	ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு வகையிலும் மொத்தம்	மூன்றாண்டுகளுக்கு எல்லா வகையிலும் மொத்தம் பவுண்டு	
					ரூபாயாக	1ஷி 4 பெ. வீதத்தில் ஸ்டெர்லிங்
					ரூ.	பவுண்டு
1894-95	*3,74,15,000*	*78,02,000*	*37,84,000*	*4,90,01,000*	*11,91,86,000*	*7,945,733*
1895-96	*3,05,91,000*	*87,18,000*	*49,38,000*	*4,42,47,000*		
1896-97	*1,66,48,000*	*48,95,000*	*44,25,000*	*2,59,38,000*		

இப்படியொரு நிலைமைக்கிடையே ரூபாயின் இறுதியான நிலைத்தன்மையில் அரசுக்குள்ள நம்பிக்கை இற்றுப்போயிருந்தால் வியப்பொன்றும் இல்லை. ஏனென்றால் 1896 அக்டோபரில் நிலைத்

தன்மைக்காக வேண்டி ரூபாய்க்கும் தங்கத்துக்கும் இடையிலான மாற்றுவிகிதமாக 16 பென்னிக்கு பதில் 15 பென்னியை வைத்துக் கொள்வதே மேலாய் இருக்கும் என்ற முடிவுக்கு மாமன்றத்தின் நிதித்துறை உறுப்பினரே வந்துவிட்டிருக்கக் காண்கிறோம்.[1] ஆனால் நிலைபெற்ற நிகர் மதிப்பிலிருந்து முழுதாக ஐந்தாண்டு காலம், இறங்கி சென்ற பின் ரூபாயானது 1898 ஜனவரியில் தங்க நிகர் மதிப்பை அடையும் அறிகுறிகள் காட்டியதால் இந்த யோசனை கைவிடப்பட்டது.

1898 ஜனவரிக்கும் 1917 ஜனவரிக்கும் இடையில் இரண்டு முறை ரூபாய் அதன் தங்க மதிப்புக்குக் கீழே சரிந்தது. 1907-8 ஆண்டானது மாற்று திட்டத்துக்கும் கீழே ரூபாயின் நிகர்நிலை தகர்வுற்ற இரண்டாவது சந்தப்பத்தைப் பதிவு செய்கிறது. சந்தையில் நிலவிய உள்ளபடியான மாற்று வீதங்கள் பின்வருமாறு:

அட்டவணை XXXI

மாற்றுவீதங்கள், இந்தியாவுக்கு லண்டன் ('தி டைம்ஸ்' ஏட்டிலிருந்து)

	நிகர்வீதம் = 1 ஷி. 4பெ.			
	கல்கத்தாவிற்கு		பம்பாய்க்கு	
நாள்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்	உயர்ந்தபட்சம்	குறைந்தபட்சம்
1907 செப்டம்பர்	1 41/32	1 331/32	1 41/32	1 331/32
அக்டோபர்	1 41/32	1 331/32	1 41/32	1 331/32
நவம்பர்	1 4	1 323/32	1 331/32	1 323/32
டிசம்பர்	1 315/16	1 327/32	1 315/16	1 327/32
1908 ஜனவரி	1 315/16	1 329/32	1 315/16	1 37/8
பிப்ரவரி	1 331/32	1 37/8	1 331/32	1 37/8
மார்ச்சு	1 329/32	1 327/32	1 329/32	1 327/32
ஏப்ரல்	1 37/8	1 327/32	1 327/32	1 327/32
மே	1 37/8	1 327/32	1 37/8	1 327/32
ஜூன்	1 329/32	1 327/32	1 37/8	1 327/32
ஜூலை	1 37/8	1 327/32	1 37/8	1 321/32
ஆகஸ்டு	1 329/32	1 327/32	1 329/32	1 327/32
செப்டம்பர்	1 331/32	1 329/32	1 331/32	1 37/8
அக்டோபர்	1 315/16	1 37/8	1 37/8	1 313/16
நவம்பர்	1 329/32	1 37/8	1 37/8	1 37/8
டிசம்பர்	1 315/16	1 329/32	1 331/32	1 37/8

1. பார்க்கவும் : ஹிராஸ் இந்திய நிதி மற்றும் வங்கித் தொழில், பக்கம் 168

ஓராண்டுக்கு மேல் நீடித்த ஒரு நெருக்கடிக்குப் பிறகு ரூபாய் அதன் பழைய தங்க நிகர் மதிப்புக்கு மீண்டு, உறுதியாக அல்ல வென்றாலும் இன்னும் ஏழாண்டுகளுக்கு அதில் நிலைத்திருந்தது. ஆனால் 1914-15ஆம் ஆண்டில் அது தன் நிகர் நிலையிலிருந்து மற்றொரு முறை வீழ்ச்சி கண்டது.

அட்டவணை XXXII

மாற்றுவீதங்கள், கல்கத்தாவுக்கு லண்டன் (இந்திய நேஷனல் வங்கியிலிருந்து)

மாதம்	1914		1915	
	அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
ஜனவரி	...	...	1 315/16	1 315/16
பிப்ரவரி	...	...	1 41/32	1 329/32
மார்ச்சு	...	...	1 4	1 315/16
ஏப்ரல்	1 315/16	1 329/32		
மே	1 41/4	1 315/16	1 315/16	1 37/8
ஜூன்	1 331/32	1 315/16	1 37/8	1 327/32
ஜூலை	1 331/32	1 313/16	1 322/32	1 323/32
ஆகஸ்டு	1 37/8	1 313/16	1 315/16	1 327/32
செப்டம்பர்	1 315/16	1 313/16	1 4	1 315/16
அக்டோபர்	1 315/16	1 315/16	...	...
நவம்பர்	1 315/16	1 315/16	...	...
டிசம்பர்	1 315/16	1 315/16	...	...

1916க்குப் பிறகு மாற்று திட்டத்தின் நிலைத்தன்மை சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்து உருவான ஆபத்தினால் அச்சுறுத்தப் பட்டது. வெள்ளியின் தங்க மதிப்பு சரிவுறுவது திண்ணம், அல்லது, எப்படியும், ரூபாயின் உள்ளார்ந்த மதிப்பு அதன் பெயர் மதிப்பைக் காட்டிலும் உயர்ந்ததாகிற ஒரு நிலைக்கு அது உயர வாய்ப்பில்லை என்பதுதான் இந்திய மாற்று நியமத்துக்கு அடிப்படையாக இருந்த கருத்து. ரூபாயின் உள்ளார்ந்த மதிப்பு அதன் பெயர் மதிப்புக்கு சமமாகும்படியான வெள்ளிவிலை அவுன்சுக்கு 43 பென்னி என்பதாக இருந்தது. ரூபாயின் உள்ளார்ந்த மதிப்பு அதன் பெயர் மதிப்புக்கும்

பென்னிக்கு மேல் உயராத வரை, செலாவணியாகப் புழக்கத்தி லிருக்கும் ரூபாய்க்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. வெள்ளி விலை அந்தப் புள்ளிக்கு மேல் உயர்ந்தவுடனே ரூபாயானது செலா வணி என்ற நிலையிலிருந்து உருக்கும் உலைக்குப் போய்விடும் ஆபத்து நெருங்கி வந்துவிட்டது. ஆக, 1904 செப்டம்பரிலிருந்து 1907 டிசம்பர் முடியவுள்ள குறுகிய காலத்தை விலக்காய்க் கொண்டால், வெள்ளியின் தங்க விலை 1872இலிருந்தே சரிந்து செல்லும் போக்கை தெளிவாகக் காட்டியுள்ளது. குறைந்த விலைதான் நிரந்தரம் என்ற எண்ணத்தைப் பரவலாக பதியச் செய்யும் அளவுக்கு அதன் விலை வீழ்ச்சி தொடர்ச்சியானதாகவும் சீரானதாகவும் இருந்தது. சொல்லப் போனால், இந்த எண்ணம் எவ்வளவோ உறுதியாக இருந்ததென் றால், மாற்று திட்டத்தை வகுத்தவர்கள் வெள்ளி விலையில் 43 பவு னுக்கு மேல் உயர்வு ஏற்படும் நேர்வினை ஒருபோதும் கணக்கில் கொள்ளவில்லை. இப்படி ஒரு நிலை பெரும்பாலும் எதிர்பார்க்கப் படாததால், இந்தியச் செலாவணி குறித்து அடுத்தடுத்து விசாரித்த குழுக்களிடமும் ஆணையத்திடமும் சாட்சியமளித்த சாட்சிகளில் எவரும் இக்காரணத்தைச் சொல்லி இந்தச் செலாவணி அமைப்பைக் குற்றஞ் சொல்லவில்லை. ஆனால் எதிர்பாராததும் கூட நிகழ லாம், 1916க்குப் பிறகு வருத்தத்திற்குரிய முறையில் அது நிகழத் தான் நாள் லண்டனில் திட்டமான தரத்தில் அவுன்சுக்கு வெள்ளி யின் ரொக்க விலை 26.5/8 பென்னியாக இருந்தது. அது 1915 பிப்ரவரி 10ஆம் நாள் 22.11/16 பென்னியாகக் குறைந்தது. 1916இல் அதே தேதி யில் அது 27 பென்னிக்குத் தாவிய போதிலும், ரூபாய் உருக்கப் படும் நிலைக்கும் கீழாகவே இருந்தது. இந்தத் தேதிக்குப் பிறகு அது வானளாவ உயர்ந்து சென்றது. 1917 பிப்ரவரி 9 ஆம் நாள் அது. 37.5/8 பென்னியாக உயர்ந்தது; 1918 பிப்ரவரி 8 ஆம் நாள் 43 பென்னி யாக் உயர்ந்தது; 1919இல் அதே தேதியில் 48.7/16 பென்னியாக உயர்ந்தது; இவ்விதம் ரூபாய் உருக்கப்படும் நிலையைத் தாண்டிப் போய்விட்டோம். ஆனால் 1920 பிப்ரவரி 11 ஆம் நாள் வெள்ளி விலையானது திட்டமான தரத்தில் அவுன்சுக்கு 89 1/2 பென்னி என்னும் பகாசுரத் தொகையை எட்டியபோது முந்தைய சாதனைகளை எல்லாம் முறியடித்து விட்டது.

ரூபாயின் உள்ளார்ந்த மதிப்பு அதன் பெயர் மதிப்புக்கு மேல் உயர்ந்ததால் உடனே ஒரு சிக்கல் எழுந்தது - ரூபாயைச் சுற்றோட் டத்தில் வைத்துப் பாதுகாப்பது எப்படி என்னும் சிக்கல். இச்சிக்க லின் தீர்வுக்கு இரு வழிகள் இருப்பதாகத் தோன்றியது. ஒன்று -

ரூபாயின் உலோகத் தரத்தைக் குறைப்பது. மற்றொன்று அதன் தங்க நிகர் மதிப்பை உயர்த்துவது. இதே போன்ற சிக்கலைச் சந்தித்த ஏனைய நாடுகளெல்லாம் தங்கள் வெள்ளி நாணயமாக்கத்தைச் சரிப்படுத்திக் கொள்ளும் முதல் வழிமுறையைக் கைக்கொண்டன. 1904-7 ஆண்டுகளில் வெள்ளி விலை உயர்வு பிலிப்பைன்சிலும் ஸ்ட்ரெயிட்ஸ் குடியேற்றங்களிலும் மெக்சிக்கோவிலும் இதே போன்ற சிக்கலைத் தோற்றுவித்தபோது இந்த வழிமுறையை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தனர்.[1] இந்தியாவுக்கான அரசுச் செயலர் இரண்டாவது செயல் வழியைக் கைக்கொண்டு, வெள்ளி விலை உயர்ந்தபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் ரூபாயின் நிகர் மதிப்பை மாற்றிக்கொண்டே இருந்தார். வெள்ளி விலையிலான மாற்றங்களைத் தொடர்ந்து நிகர் மதிப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள் கீழே தரப்படுகின்றன:

அட்டவணை XXXIII

ரூபாயின் நிகர் மதிப்பில் மாற்றம் செய்த நாள்	நிகர் மதிப்பின் உச்சம்	
	ஷி.	பெ.
ஜனவரி 3, 1917 ...	1	41/4
ஆகஸ்டு 28, 1917 ...	1	5
ஏப்ரல் 12, 1918 ...	1	6
மே 13, 1919 ...	1	8
ஆகஸ்டு 12, 1919...	1	10
செப்டம்பர் 15, 1919 ...	2	0
நவம்பர் 22, 1919 ...	2	2
டிசம்பர் 12, 1919...	2	4

இத்தகைய மாற்றங்களால் சமுதாயத்தில் விளைவுகள் ஏதும் ஏற்படுவதில்லை என்பதுபோல் இவ்விதம் ரூபாயின் நிகர் மதிப்

1. பார்க்கவும்: இ.டபிள்யூ. கெமரர், நவீனச் செலாவணிச் சீர்திருத்தங்கள், 1916, பக்கம். 349

போடு ஈராண்டு காலம் விளையாடி முடித்தபின் அரசுச் செயலர் 1919 மே 30 ஆம் நாள் பாபிங்டன் ஸ்மித் தலைமையில் ஒரு புதிய செலாவணிக் குழுவை நியமித்தார். இந்தக் குழு ''ஒரு நிலையான தங்க மாற்று திட்டத்தை உறுதிசெய்வதற்கான'' நடவடிக்கைகளுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமாம். இந்தக் குழுவின் பெரும்பான்மை அரையாண்டு காலம் அலசி ஆராய்ந்தபின் பின்வருமாறு அறிக்கை அளித்தது:[1]

'i) ரூபாய்க்கு நிலைத் தன்மையை மீட்டளிப்பதும், நடைமுறைச் சாத்தியமான அளவுக்குக் கூடிய விரைவில் செலாவணி அமைப்பு தானே இயங்கும் நிலையைத் திரும்ப ஏற்படுத்துவதுமே குறிக்கோளாய் இருத்தல் வேண்டும்.

'ii) நிறுவப்படவுள்ள நிலையான உறவு தங்கத்துடன் அமைய வேண்டுமே தவிர ஸ்டெர்லிங்குடன் அல்ல.

'iii) ரூபாய் அதன் நிகழ் எடையையும் தரத்தையும் தக்க வைத்துக் கொள்ளும்போதே ஓர் அடையாள நாணயமாகத்தான் இருக்கும் என்று, அதாவது அதில் அடங்கியுள்ள வெள்ளியின் புலியன் மதிப்பு அதன் மாற்று மதிப்பை விஞ்சாது என்று நடைமுறைச் சாத்தியமான வரை உறுதி அளித்திடப் போதிய அளவில் ரூபாயின் தங்கச் சந்தை உயர்ந்திருக்க வேண்டும்.

''மிகக் கவனமாய்க் கருதிப் பார்த்தபின்'' (குழு கூறியது:) ''ரூபாய்க்கும் தங்கத்துக்கும் இடையே நிறுவப்படவுள்ள நிலையான உறவு என்பது அயல்நாட்டு மாற்று, உள்நாட்டுச் சுற்றோட்டம் இரண்டுக்குமே 11.30016 கிராம் தரமிக்க தங்கத்துக்கு ஒரு ரூபாய் என்ற வீதத்தில் இருக்க வேண்டும் என்று ஒருமனதாக (எமது உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர - அவர் தனியாக ஓர் அறிக்கை எழுதி ஒப்பமிட்டுள்ளார்) பரிந்துரை செய்கிறோம்''.

---

1. பார்க்கவும்: அறிக்கை, 1920 ஆம் ஆண்டின் P.P. Cd. 527, பத்தி 59.

அதாவது ரூபாய் 2 ஷில்லிங்குக்கு (தங்கம்) சமமாய் இருக்க வேண்டும்.

குறைந்த மாற்றுவிகிதத்துக்கு ஊக்கம், உயர்ந்த மாற்று விகிதத் துக்கு தண்டம் என்ற பழைய குரலை ஒலித்த சிறுபான்மை அறிக்கை யானது தங்கச் சவரனுக்கு அல்லது 113.0016 கிராம் திராய் தூய செம்பொன்னுக்கு 15 ரூபாய் என்ற பழைய வீதத்தை வைத்துக் கொள்ள வாதிட்டது. நியூயார்க்கில் வெள்ளி விலை 92 செண்டுக்கு மேல் இருந்து வரும்வரை பழைய ரூபாயுடன் ஒப்பிடுகையில் குறைந்த தரமுடைய இரண்டு-ரூபாய் வெள்ளி நாணயம் வெளியிடு வதற்குப் பரிந்துரை செய்தது.

1920 பிப்ரவரி 2 ஆம் நாள் வெளியிட்ட அறிவிப்புகளின் மூலம், அரசுச் செயலரும், மற்றும் இந்திய அரசினரும் கூட குழுப் பெரும் பான்மையின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டனர். இந்திய அரசு ரூபாய்க்கு 7.53344 கிராம் என்ற பழைய நிகர் மதிப்பை கைவிட்டு, 11.30016 கிராம் திராய் என்ற புதிய நிகர் மதிப்பைக் கைக்கொண்டது. இப்போது ரூபாய் தங்கத்துடனான அதன் புதிய நிகர்மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டுள்ளதா?

இந்த உண்மையை அறிந்து கொள்வதில் லண்டனிலான மாற்றுவிகித விலைகூறல் எவ்விதத்துக்கும் வழிகாட்டியாகாது. ஏனென்றால் ரூபாயின் மதிப்பு 2 ஷி. **தங்கம்** என்பதாக இருந்ததே தவிர, 2 ஷி. ஸ்டெர்லிங் என்பதாக இருக்கவில்லை. தங்கமும் ஸ்டெர்லிங்கும் முழுதொத்தவையாக இருந்திருப்பின் கதையே வேறு. ஆனால் போர்க்காலத்தில், நடைமுறையில் மாற்ற வொண்ணாததே ஆகிய பணம் வெளியிடப்பட்டதால், தங்கத்தின் கணக்கில் ஸ்டெர்லிங் மதிப்பு குறைந்து போயிருந்தது. ஆகவே தங்கத்துடன் தன் நிகர் மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டு விட்ட ஒரு செலாவணியைத்தான் நாம் நமது திட்டமாகக் கொள்ள வேண்டும். அமெரிக்க டாலர்தான் இத்தகைய செலாவணியாக இருந்தது.

மதிப்பை அளவிடுவதில் நேரடியாகவே உதவிகரமாய் உள்ளது. மேலும், உள்ளபடியான ரூபாய்-ஸ்டெர்லிங் விலை கூறலை ரூபாயைக் கொண்டு வாங்கியிருக்க வேண்டிய ஸ்டெர்லிங் தொகையுடன் ஒப்புநோக்குவதன் மூலம் அதனை ஓர் அளவையாகவும் நாம் ஈடுபடுத்த முடியும். நியூயார்க்குக்கும் லண்டனுக்கும் இடையே நடப்பிலிருக்கும் குறுக்கு வீதத்தால் சரிசெய்யப்படும்போது 11.30016 கிராம் தரமிக்க தங்கத்தின் சமதையாக அதனை ஈடுபடுத்த முடியும்.[1]

மாற்று நிகர் மதிப்புடன் ஒப்பிடுகையில், நியூயார்க்கிலோ, லண்டனிலோ உள்ளபடியே காணப்படும் மாற்றுவிகிதமானது ரூபாய் மதிப்பில் தடுமாறச் செய்யும் வீழ்ச்சியைச் சுட்டுகிறது.

---

1. இந்தக் கணக்கீட்டுக்கான சூத்திரம் பின்வருமாறு :

x பென்னி	=	1 ரூபாய்
	=	11.30016 கிராம் தரமுள்ள தங்கம்
23.22 கிராம் தரமுள்ள தங்கம்	=	1 டாலர்
D டாலர்கள்	=	1 பவுன் ஸ்டெர்லிங்
	=	240 பென்னி என்றால்,

$$x = \frac{11.30016 \times 240}{23.22 \times D} = \frac{11{,}680}{D} \text{ பென்னி.}$$

பார்க்கவும்: குஷ்போத், F.V., **இந்தியச் செலாவணிச் சிக்கல்**, 1921, பக்கம் 9.

அட்டவணை XXXIV

ரூபாயின் உள்ளபடியான தங்க மதிப்பும் அயல்நாட்டு மாற்றுகளின் கணக்கில் புதிய நிகர்நிலையும்

ிவில் ாரு	பம்பாய்க்கு நியூயார்க் செண்டுகளில்						லண்டனுக்கு பம்பாய் ஷில்லிங் - பென்னியில்					
	1920		1921		1922		1920		1921		1922	
	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்	நிகர் வீதம்	உள்ளபடியான வீதம்
ி	0.4866	0.4400	0.4866	0.2025	0.4866	0.2800	2 7 1/2	2 3 5/8	2 7 15/16	1 5 5/8	2 3 5/8	1 3 13/16
ரி	0.4866	0.4850	0.4866	0.2800	0.4866	0.2845	2 10 11/32	2 9 1/8	2 5 13/16	1 4 1/8	2 2 7/32	1 3 9/16
	0.4866	0.4850	0.4866	0.2625	0.4866	0.2787	2 7 29/32	2 5 3/4	2 5 31/32	1 3 1/4	2 2 29/32	1 3 5/16
	0.4866	0.4775	0.4866	0.2625	0.4866	0.2785	2 5 7/16	2 3 3/4	2 5 13/16	1 3 5/8	2 2 1/2	1 3 1/8
	0.4866	0.4325	0.4866	0.2675	0.4866	0.2930	2 6 19/32	2 2 1/8	2 5 7/32	1 3 1/2	2 2 1/4	1 3 9/16
	0.4866	0.4125	0.4866	0.2525	0.4866	0.2900	2 5 31/32	1 10 13/16	2 6 29/32	1 3 3/8	2 2 1/8	1 3 19/32
ு	0.4866	0.3900	0.4866	0.2400	0.4866	0.2900	2 5 31/32	1 8 1/16	2 8 9/32	1 3 1/4	2 2 5/8	1 3 5/8
டு	0.4866	0.3650	0.4866	0.2475	0.4866	0.2916	2 8 9/32	1 10 1/16	2 7 29/32	1 4 3/4	2 2 3/16	1 3 19/32
ம்பர்	0.4866	0.3325	0.4866	0.2675	0.4866	0.2875	2 9 9/16	1 10 1/16	2 7 15/32	1 5 1/16	2 2 6/16	1 3 9/16
ாபர்	0.4866	0.3025	0.4866	0.2825	0.4866	-	2 9 21/32	1 7 3/4	2 6 1/32	1 5 7/16	-	-
ர்	0.4866	0.3025	0.4866	0.2695	0.4866	-	2 10 9/16	1 7 1/8	2 5 16/32	1 4 1/8	-	-
ர்	0.4866	0.2650	0.4866	0.2775	0.4866	-	2 9 9/16	1 5 1/4	2 4	1 3 7/8	-	-

ரூபாயின் அயல்நாட்டுத் தங்க மதிப்புடன் கூடவே, சவரன்கள், பொற்பாளம் என்ற கணக்கில் அதன் உள்நாட்டு மதிப்பையும் கருதிப் பார்ப்போம்.

அட்டவணை XXXV

ரூபாயின் தங்க மதிப்பும் சவரன்கள் மற்றும் தங்கத்தின் விலைக் கணக்கில் புதிய நிகர் மதிப்பும்

மாதம்	1920		1921		1922	
	பிரித்தானிய சவரன் விலை நிகர் மதிப்பு 10 ரூபாய் = 1 சவரன்	100 செறிவு தோலா ஒன்றுக்கு பொற்பாளத்தின் விலை நிகர் மதிப்பு ரூபாய் 15-14-10=1	பிரித்தானிய சவரன் விலைநிகர் மதிப்பு 10 ரூபாய் = 1 சவரன்	100 செறிவு தோலா ஒன்றுக்கு பொற்பாளத்தின் விலை நிகர் மதிப்பு ரூபாய் 15-4-10=1 தோலா	பிரித்தானிய சவரன் விலை நிகர் மதிப்பு 10 ரூபாய் = 1 சவரன்	100 செறிவு தோலா ஒன்றுக்கு பொற்பாளத்தின் விலை நிகர் மதிப்பு ரூபாய் 15-14-10=1 தோலா
	ரூ.அ.பை.	ரூ.அ.பை.	ரூ.அ.பை.		ரூ.அ.பை.	
ஜனவரி	பெயரளவு	28 0 0	பெயரளவு		17 14 0	
பிப்ரவரி	"	22 0 0	"		17 14 0	
மார்ச்சு	"	24 0 0	"		17 14 0	
ஏப்ரல்	"	24 8 0	18 12 0		...	
மே	"	22 12 0	19 0 0		...	
ஜூன்	"	22 4 0	19 12 0	அதிகாரப் பூர்வபுள்ளி விவரங்கள் இன்னும் வெளியிடப் படவில்லை	...	அதிகாரப் பூர்வ புள்ளி விவரங்கள் இன்னும் வெளியிடப் படவில்லை
ஜூலை	"	23 4 0	20 9 0		...	
ஆகஸ்டு	"	21 8 0	20 9 0		...	
செப்டம்பர்	"	25 4 0	19 2 0		...	
அக்டோபர்	"	27 6 0	18 14 0		...	
நவம்பர்	"	28 10 0	18 18 0		...	
டிசம்பர்	"	27 12 0	18 6 0		...	

இந்த அட்டவணைகள் குறித்து எதுவும் சொல்லத் தேவையில்லை. ரூபாயானது 2 ஷில்லிங் (தங்கம்) என்பதிலிருந்து தொலை

தூரத்தில் இருப்பது மட்டுமல்ல, 1 ஷி. 4 பெ. (ஸ்டெர்லிங்) என்ப தாகக் கூட இருக்கவில்லை.

இந்த உண்மைகள் மாற்று திட்டத்தின் பயனற்ற தன்மைக்கு மறுக்க முடியாத நிரூபணமல்லவா? தங்கத்தின் வழிப்பட்ட தனது மதிப்பைக் காத்துக் கொள்ள வேண்டிய ஒரு செலாவணி அமைப்பு அப்படிக் காத்துக் கொள்ளத் தவறுமானால் அதனை எப்படி ஒரு பழுதற்ற செலாவணி அமைப்பென்று கருத முடியும்? இப்படி அவ்வப்போது முறிவடையக் கூடிய ஒரு செலாவணி அமைப்பின் பொறியமைவில் எங்கோ ஏதோ குறை இருந்தாக வேண்டும். 1893இல் ரூபாய் வீழ்ந்தது சொல்லப்போனால் நிகர் மதிப்புக்குக் கீழாக இருந்தது, 1900 வரையிலும் சிறிதுகூட உண்மையான உறுதிப்பாட் டுடன் தனது நிகர் நிலையை அடையவில்லை. ஏழாண்டுகால இடைவேளைக்குப் பிறகு மறுபடியும் 1907இல் ரூபாய் நிகர்மதிப்புக்குக் கீழே வீழ்கிறது. 1914 ஆம் ஆண்டு ரூபாய் மதிப்பில் மற்றொரு வீழ்ச்சியைக் கண்டது. 1917க்குப் பிறகு விரைவான மதிப்புயர்வு, 1920க்குப் பின் மீண்டும் வீழ்ச்சி. இந்த வேடிக்கையான நிகழ்வி லிருந்து இயல்பாகவே எழுகிற கேள்வி இதுதான். இந்த சந்தர்ப்பங் களில் ரூபாய் அதன் தங்க நிகர் நிலையைக் காத்துக்கொள்ளத் தவறியது ஏன்? இந்தக் கேள்விக்கு ஒரு சரியான விடையென்பது மாற்று திட்டத்தின் பலவீனம் எதில் உள்ளது என்பதை வெளிப் படுத்தும்.

ரூபாய் அதன் பொதுவான வாங்குந்திறனை இழந்துவிட்டது என்பதுதான் ரூபாய் மதிப்புக் குறைவுக்கு நிறைவான காரணம் சொல்லக்கூடிய ஒரே அறிவியல் விளக்கமாக இருக்கும். ஒரு செலா வணி அல்லது கணக்கலகு என்பது அதன் பெறுமானத்தைப் பொறுத்தே, அதாவது அதைக் கொண்டு வாங்கக்கூடிய பண்டங் களைப் பொறுத்தே வேறொரு செலாவணி அல்லது கணக்கலகின் வழியில் மதிக்கப்பெறும். ஒரு தூலமான எடுத்துக்காட்டைக் குறிப் பிடுவதானால், இந்திய ரூபாய்கள் இந்தியப் பண்டங்களை வாங்கக் கூடியவையாக இருக்கும் அளவுக்கும், இருக்கும் வரையிலும் ஆங்கி லேயர்களும் மற்றவர்களும் அந்த ரூபாய்களை மதிக்கிறார்கள். மறுபுறம், ஆங்கிலேய பவுன்கள் (இவ்விதம் ஏனைய கணக்கலகுகளும் கூட) ஆங்கிலேயப் பண்டங்களை வாங்கக்கூடியவையாக இருக்கும்

மதிக்கிறார்கள். இந்தியாவில் ரூபாய்களின் வழங்குந்திறன் உயர்ந்தால் (அதாவது இந்திய விலைவாசி குறைந்தால்), அதே போது பவுன்களின் வாங்குந்திறன் குறைவதாகவோ மாறாமல் நீடிப்பதாகவோ அல்லது அவ்வளவு துரிதமாய் உயராததாகவோ இருக்குமானால் (அதாவது இந்திய விலைவாசியுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலேய விலைவாசி உயருமானால்) முன்னை விடக் குறைந்த ரூபாய்களே பவுனின் மதிப்பைக் கொண்டிருக்கும், அதாவது பவுன் வழியில் ரூபாயின் மாற்று மதிப்பு உயரும். மறுபுறம், இந்தியாவில் ரூபாய்களின் வாங்குந்திறன் குறைந்தால் (அதாவது இந்திய விலைவாசி உயர்ந்தால்), அதே போது பவுன்களின் வாங்குந்திறன் உயர்வதாகவோ நிலைத்து நிற்பதாகவோ அல்லது அவ்வளவு விரைவாய்க் குறையாததாகவோ இருக்குமானால் (அதாவது இந்திய விலைவாசியுடன் ஒப்பிடுகையில் ஆங்கிலேய விலைவாசி குறைந்தால்) ஒரு பவுனின் பெறுமானம் இன்னுமதிக ரூபாய்களாக இருக்கும், அதாவது பவுன் வழியில் ரூபாயின் மாற்று மதிப்பு குறையும்.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், இந்தியச் செலாவணியில் ஒரு வீழ்ச்சி ஏற்படுவதற்கான உண்மைக் காரணத்தை இந்திய விலைவாசியின் அசைவியக்கத்தில்தான் தேடவேண்டும். இந்தக் கருதுகோளின் செல்லுபடித்தன்மை குறித்து எவ்வித ஐயமும் எழாது இருக்கும்பொருட்டு, மதிப்பு வீழ்ச்சி ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் ஒவ் வொன்றையும் எடுத்து, அவ்வீழ்ச்சி ரூபாயின் வாங்கும் திறனிலான வீழ்ச்சியுடன் ஒருங்கு நிகழ்ந்ததா அல்லவா என்பதைக் கண்டறிவோம்.[1]

1. அடுத்துவரும் அட்டவணைகளுக்கான புள்ளிவிவரங்கள் - வேறுவிதமாய்க் குறிப்பிடவில்லையென்றால் - விலை ஆய்வுக் குழுவின் அறிக்கை, கல்கத்தா, 1914 என்பதிலிருந்து எடுத்துத் தரப்படுகின்றன.

அட்டவணை XXXVI

காலம் I, 1890-99

ஆண்டுகள்	புழக்கத்தில் உள்ள செலாவணி ரூபாய்கள் + நோட்டுகள்		இந்தியாவில் விலைக்குறியீட்டு எண் 1890-94=100	இங்கிலாந்தில் விலைக்குறியீட்டு எண் 1890-94=100
	தொகை கோடி ரூபாய்	குறியீட்டு எண் 1890-94=100		
(1)	(2)	(3)	(4)	(5)
1890	120	.92	113	104
1891	131	100	106	105
1892	141	108	100	199
1893	132	101	.96	99
1894	129	.99	85	93
1895	132	101	89	90
1896	127	.97	99	89
1897	125	96	120	90
1898	122	93	109	91
1899	131	100	108	94

அட்டவணை XXXVII

காலம் II, *1900-1908*

ஆண்டுகள்	புழக்கத்தில் உள்ள செலாவணி ரூபாய்கள் +		இந்தியாவில் விலைக் குறியீட்டு எண் *1890-94 = 100*	இங்கிலாந்தில் விலைக் குறியீட்டு எண் *1890-94 = 100*
	தொகை கோடி ரூபாய்	குறியீட்டு எண் *1890-94=100*		
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*
1900	*134*	*103*	*126*	*103*
1901	*150*	*115*	*120*	*98*
1902	*143*	*109*	*115*	*96*
1903	*147*	*113*	*111*	*97*
1904	*152*	*116*	*110*	*100*
1905	*164*	*126*	*120*	*100*
1906	*185*	*142*	*134*	*107*
1907	*190*	*145*	*138*	*113*
1908	*181*	*139*	*147*	*104*

அட்டவணை XXXVIII

காலம் III, 1909-14[1]

ஆண்டுகள்	புழக்கத்தில் உள்ள செலாவணி ரூபாய்கள் + நோட்டுகள்		இந்தியாவில் விலைக் குறியீட்டு எண் 1890-94=100	இங்கிலாந்தில் விலைக் குறியீட்டு எண் 1890-94 = 100
	தொகை	குறியீட்டு எண்		
(1)	(2)	(3)	(4)	(5)
1909	198	152	138	105
1910	199	152	137	110
1911	209	160	139	114
1912	214	164	147	117
1913	238	182	152	124
1914	237	182	156	124

அட்டவணை XXXIX

காலம் IV, 1915 - 1921[2]

ஆண்டுகள்	புழக்கத்தில் உள்ள செலாவணி ரூபாய்கள் + நோட்டுகள்		இந்தியாவில் விலைக் குறியீட்டு எண்	இங்கிலாந்தில் விலைக் குறியீட்டு எண்
	தொகை கோடி ரூபாய்	குறியீட்டு எண் 1913=100	1913=100	1913 = 100
(1)	(2)	(3)	(4)	(5)
1915	266	104	112	127.1
1916	297	116	125	159.5
1917	338	132	142	206.1
1918	407	155	178	226.5
1919	463	180	200	241.9
1920	411	160	209	295.3
1921	393	114	183	182.4

1. 1913, 1914 ஆண்டுகளுக்கான புள்ளி விபரங்கள் திரு. சிராஸ் இந்தியாவின் நிதி மற்றும் வங்கிஇயல் என்ற புத்தக பின் சேர்க்கையிலிருந்து எடுக்கப்பட்டது. மூன்றாம் பத்தியில் உள்ள புள்ளிவிபரங்கள் அதிலிருந்து எடுக்கப்பட்டது.

2. விலைக்குறியீட்டு எண்களுக்கு உதாரணம் : சர்வதேசக் கழகம், செலாவணி பற்றிய குறிப்பாக,

ஆக, ரூபாயின் தங்க மதிப்பிலான வீழ்ச்சி ரூபாயின் பொதுவான வாங்குந்திறனிலான வீழ்ச்சியுடன் ஒருங்கு நிகழ்வதாகும் என்ற வாதத்தை இந்த அட்டவணைகள் உறுதி செய்கின்றனவா, இல்லையா? ரூபாயின் தங்க மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டபோது அதன் பொதுவான வாங்குந்திறன் என்ன? இந்த வினாவின் வெளிச்சத்தில் மேற்கண்ட அட்டவணைகளில் தரப்பட்டுள்ள உண்மைகளைப் பரிசீலித்தோமானால், இந்த வாதத்தின் செல்லுபடித்தன்மை குறித்து சந்தேகமே இருக்க முடியாது. 1893க்கும் 1898க்கும் இடையில் ரூபாயின் பொதுவான வாங்குந்திறனில் முறிவற்ற முன்னேற்றம் இல்லையென்றாலும் சீரான முன்னேற்றம் ஏற்பட்டதால் ரூபாயின் தங்க மதிப்பு முன்னேறியது என்பதை இந்த அட்டவணைகளிலிருந்து அறியலாம். மேலும் அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் மாற்றுவிகிதம் வீழ்ச்சியுற்றபோது (1908, 1914, 1920 ஆண்டுகளில் இப்படித்தான் நிகழ்ந்தது) அந்த ஆண்டுகள்தான் இந்தியாவில் விலைவாசி உயர்வின் சிகரங்களைத் தொட்டன என்பதைக் காணலாம். அதாவது அந்த ஆண்டுகளில்தான் ரூபாயின் பொதுவான வாங்குந்திறனில் மிகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. ரூபாயின் மாற்று மதிப்பு இறுதியாகப் பார்க்குமிடத்து அதன் பொதுவான வாங்குந்திறனால் ஆளப்பட்டாக வேண்டும் என்ற வாதத்துக்கு மேலும் நிரூபணம் தேவைப்பட்டால், 1920இலிருந்து ரூபாய் - ஸ்டெர்லிங் மாற்று விகிதத்தின் அசைவியக்கங்கள் அந்த நிரூபணத்தை வழங்குகின்றன.

அட்டவணை XL

நாள்	இந்தியாவில் ரூபாய் விலைகள், 1913=100	இங்கிலாந்தில் ஸ்டெர்லிங் விலை 1913=100	சராசரி மாற்று வீதம் கல்கத்தாவுக்கு லண்டன்	ரூபாய்-ஸ்டெர்லிங் வாங்குந்திறன் நிகர்நிலை 16 பெ x பத்தி 3 / பத்தி 2
(1)	(2)	(3)	(4)	(5)
			d.	d.
1920 -				
ஜனவரி	202	289	27.81	22.89
பிப்ரவரி	203	306	32.05	24.12
மார்ச்	194	301	29.66	25.40
ஏப்ரல்	193	300	27.88	25.95
மே	190	298	25.91	25.77
ஜூன்	192	293	23.63	25.08
ஜூலை	196	282	22.63	24.49
ஆகஸ்ட்	193	263	22.75	24.70
செப்டம்பர்	188	244	22.31	24.94
அக்டோபர்	188	232	19.88	24.00
நவம்பர்	186	215	19.69	22.62
டிசம்பர்	179	209	17.44	21.81
1921 -				
ஜனவரி	169	200	17.66	21.96
பிப்ரவரி	164	191	16.31	20.98
மார்ச்	162	183	15.53	20.40
ஏப்ரல்	163	186	15.75	19.63
மே	170	182	15.44	17.98
ஜூன்	172	176	15.53	17.14
ஜூலை	171	163	15.38	17.40
ஆகஸ்ட்	178	161	16.25	16.36
செப்டம்பர்	178	157	17.22	15.82
அக்டோபர்	178	156	17.02	14.65
நவம்பர்	173	161	16.25	14.89

(1)	(2)	(3)	(4)	(5)
1922 -				
ஜனவரி	162	156	15.88	15.41
பிப்ரவரி	159	156	15.59	16.70
மார்ச்	160	157	15.34	15.70
ஏப்ரல்	160	159	15.19	15.90
மே	162	159	15.59	15.70
ஜூன்	169	160	15.63	15.14
ஜூலை	170	158	15.69	14.87
ஆகஸ்ட்	166	153	15.66	14.74

ஆனால், ரூபாயின் தங்க மதிப்பிலான இந்தக் காலவட்ட வீழ்ச்சிகள் (மாற்றுவிகித வீழ்ச்சி என்றும் சொல்லப்படுவது) ஏற்படுவதற்குரிய காரணங்களுக்கான புள்ளிவிவரச் சான்றினால் உறுதி செய்யப்படும் கோட்பாடு பார்வை இப்படி இருந்தபோதிலும் இதனை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை. ரூபாயின் தங்க மதிப்பிலான வீழ்ச்சிக்கு பாதிகமான வர்த்தக நிலுவைதான் காரணம் என்பது அதிகாரப்பூர்வமாகத் தரப்படும் விளக்கம். மாற்று திட்டத் தின் முக்கிய ஆதரவாளர்களான திரு. கீன்ஸ்[1], திரு. ஷிராஸ்[2] போன்ற வர்களின் கருத்தும் இதுதான்.

இப்படி ஏதோ ஒரு முறையில் காரணங்காட்டியது தான் 1920 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலாவணிக் குழுப்பத்திற்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. மற்றபடி ரூபாயின் மாற்று மதிப்பை உயர்த்தும் கொள்கைக்கு எப்படி விளக்கம் அளிப்பது? இந்தியச் செலாவணி பற்றிய ஸ்மித் குழுவும்[3] சரி, இந்திய அரசும்[4] சரி, ரூபாய் மிகக் கடுமையான மதிப்பு வீழ்ச்சிக்கு உள்ளாயிற்று என்ற உண்மையை அறிந்தே இருந்தன. இந்தியாவில் விலைகள் உயர்ந்தது இந்த உண்மைக்குச் சான்றாக அமைந்தது.

---

1. முன் வந்தது, பக்கம். 16
2. முன் வந்தது, பக்கம். 4.
3. பார்க்கவும்: அறிக்கை, பக். 19-21.
4. இந்தியாவில் விலை ஏற்றங்கள் குறித்து அரசிடமிருந்தான குறிப்புரை. 1919 ஆம் ஆண்டின் செலாவணிக் குழு அறிக்கைக்குப் பிற்சேர்க்கை.

இந்நிலையில், ரூபாய்க்கு 1 ஷி. 4 பெ. வாங்குந் திறன் கூட இல்லாதபோது ரூபாயின் தங்க மதிப்பை 2 ஷில்லிங் தங்கமாக உயர்த்தும் பேச்சே இல்லை. இந்தியச் செலாவணியை நிலைப் படுத்துவது பற்றி ஸ்மித் குழு மனம்போன போக்கில் பேசிக் கொண் டிருந்தது. ஆனால் இந்தக் கண்ணோட்டத்திலும் கூட ரூபாயைத் தங்கத்தோடு பிணைக்க வேண்டும் என்று அக்குழு வற்புறுத்தியதை சற்றே அபத்தம் என்றுதான் கருதவேண்டும். பேராசிரியர் மார்ஷல் சொல்வதுபோல் நிலையான மாற்றுவிகிதம் என்பது உலகின் இருப்புப்பாதை அகலங்களை முதன்மைப் பாதையுடன் ஒன்றாக்கு வதைப் போன்றது. ஒரு நிலையான செலாவணி மாற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுவது இதுதான் என்றால் ''முதன்மைப் பாதை'' யாக இல்லாமற் போய்விட்ட தங்கத்துடன் ரூபாயைப் பிணைப் பதால் என்ன பயன்? விலைகளை அளவிடும் திட்டத்தின் வழிப் பட்ட ஒரு மாற்றுவிகிதம்தான் மக்களுக்கு வேண்டியதாகும். தங்கத்தோடு பிணைப்பதென்றால் ஸ்டெர்லிங்கோடு பிணைப் பறுக்க வேண்டும். பொருட்படுத்துவது ஸ்டெர்லிங் தானே தவிர, தங்கமன்று. தங்கத்துக்கு மேல் ஸ்டெர்லிங்கிற்குள்ள இந்த முக்கியத் துவத்தைக் கருத்தில் கொள்ளும்போது எழும் கேள்வி. மாற்று விகிதத்தை நிலைப்படுத்தும் கொள்கை ஏதும் தேவைப்பட்டதா? முதலாவதாக ஸ்டெர்லிங் விலைகளையும் ரூபாய் விலைகளை யும் ஒன்றாக இயங்கும்படிச் செய்வது சாத்தியமானால்தான் இப்படி ஒரு கொள்கை வெற்றி பெறக்கூடும் என்பதை உள்வாங்கிக் கொண் டிருக்க வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் அவற்றை ஒன்றுக் கொன்று மாற்றிக் கொள்வதற்கான விகிதம் மாறாமல் இருக்கக் கூடும். ஸ்டெர்லிங் மீது இந்திய அரசுக்கு இருந்த கட்டுப்பாடு என்ன? விரும்பப்பட்ட விளைவைத் தோற்றுவிக்கும் விதத்தில் ரூபாயை அவர்கள் கட்டுப்படுத்தியிருக்கக் கூடும். ஆனால் அதெல் லாம் ஸ்டெர்லிங்கில் ஒரு பாதகமான அசைவினால் கெட்டு வீணாகியிருக்கலாம். ஸ்டெர்லிங்குடன் பிணைக்கும் கொள்கையின் வெற்றி பெரிதும் விரும்பத்தக்கதென்றாலும், பெரிதும் சிக்கலானது. ஆனால் அது தேவைப்பட்டதா?

ஆக, முதன்மையாகப் பார்த்தால், நிலைப்படுத்தல் என்னும் பிரச்சினை இரு செலாவணிகளுக்கிடையே வாங்குந்திறன் தொடர் பான நிகர் நிலையிலிருந்து ஏற்படும் இயல்பல்லாத பிறழ்வு

பொறுத்தவரை, வாங்குந்திறன் தொடர்பான ரூபாய்-ஸ்டெர்லிங் நிகர்நிலையிலிருந்து இயல்பல்லாத பிறழ்வுகள் ஏதும் ஏற்பட வில்லை. மறுபுறம், இந்திய மாற்றுவிகிதத்தின அசைவியக்கம் ஏறத்தாழ அந்நிகர் நிலைக்கு நெருக்கமாகவே அமைந்திருந்தது. ஆகவே மாற்று விகிதத்தை நிலைப்படுத்தும் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கு எவ்வித அடிப்படையும் இருக்கவில்லை. ஆனால் இயல்பல்லாத பிறழ்வுகள் ஏற்பட்டதாகவும், குழுவானது அதற்கே வெளிச்சமான சில காரணங்களினால் ரூபாயின் மாற்று மதிப்பு அதன் பொதுவான வாங்குந்திறனால் நியாயப்படுத்தப்படும் நிலைக்குத் திரும்பிச் செல்ல வாய்ப்பில்லை என்று நம்பியதாகவும் வைத்துக் கொண்டால், அது அம்மாற்று மதிப்பை ரூபாயின் வாங்கும் திற னுக்குரிய எல்லைக்குள்ளேயே நிர்ணயித்திருக்க வேண்டும். உண்மை என்னவென்றால் ரூபாய்க்குக் குழு நிர்ணயித்த மதிப்பு ஒருபோதும் இருந்ததில்லை. ரூபாய்க்கு அதன் வாங்குந்திறன் தொடர்பான நிகர் நிலைக்கு இவ்வளவு மேலே ஒரு மதிப்பைக் கொடுத்ததன் மூலம் ரூபாயை நிலைப்படுத்துவதென்னும் எளிய பிரச்சினைக்குக் குழு உருவாக்கிய தீர்வானது பணச் சுருக்கம் (அல்லது ரூபாயின் அறுதி மதிப்பை உயர்த்தல்) என்கிற இன்னும் மிகப்பெரிய, அறவே வேறுபட்ட ஒரு பிரச்சினையைக் கொண்டுவந்து விட்டது என்பது கண்கூடாய்த் தெரிகிறது. குறிக்கோளை அடைவது எப்படி? இந்தச் சிக்கலைக் குழு பரிசீலிக்கவே இல்லை. ஏன்? வெள்ளியின் விலை உயர்ந்துவிட்டதாலா? இருந்தாலும் இருக்கலாம். ஆனால் தங்க நிகர் மதிப்பில் ஒரு திருத்தம் தேவைப்படுகிற அளவுக்கு வெள்ளியின் மதிப்பு நிரந்தரமாக அவ்வளவு உயர்த்தி இருந்துவரப் போகிற தென்று குழு உறுதியாக நம்பி இருக்க முடியுமா என்பது சந்தேகம் தான். வெள்ளி விலை உயர்வை அக்கறையுடன் ஆராய்ந்து பார்க்கிற எவரும் இந்த உயர்வு பெரிதும் ஊக வணிகத் தன்மையதாக இருந்ததே தவிர நிரந்தரமாகியிருக்க முடியாது என்பதைக் கண்டிருக்கலாம்.

அட்டவணை XLI

வெள்ளி விலை ஸ்டெர்லிங் (பென்னி)[1]

ஆண்டு	உயர்ந்தபட்சம்	குறைந்த பட்சம்	சராசரி	மாறுபாட்டின் வீச்சு
1913	29 3/8	25 15/16	27 9/16	3 7/16
1914	27 3/4	22 1/8	25 5/16	5 5/8
1915	27 1/4	22 5/16	23 11/16	4 15/16
1916	37 1/8	26 11/16	31 5/16	10 7/16
1917	55	35 11/16	40 7/8	19 11/16
1918	49 1/2	42 1/2	47 9/16	7
1919	79 1/8	47 3/4	57 1/16	31 3/8
1920	89 1/2	38 7/8	61 7/16	50 5/8
1921	43 3/8	30 5/8	37	12 3/4

ஆனால் வெள்ளி விலை உயர்வு ஊகவணிகத் தன்மையதாய் இல்லை என்று வைத்துக்கொண்டால் ரூபாய் மதிப்பு உயர்த்தப்பட்டது என்று பெறப்படுமா? குழுவின் பிணியறிதல் ஒரு பேராபத்துப் பிழையாயிற்று. குழுவிடம் தரப்பட்ட உண்மைகளை வைத்துக்கொண்டு, விலையின் அசைவியக்கங்களை அரசல்புரசலாய் அறிந்திருக்கிற எவரும் கூட வெள்ளியின் மதிப்பு உயர்ந்ததால் ரூபாயின் மதிப்பும் உயர்ந்துவிட்டதென்ற முடிவுக்கு எப்படி வந்திருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். மறுபுறம், நடந்தது என்னவென்றால், தங்கமும் வெள்ளியும் உள்ளிட்ட பொதுவான சரக்குகளின் கணக்கில் ரூபாயின் மதிப்பு குறைந்துபோய்விட்டது. சொல்லப்போனால் வெள்ளியின் மதிப்புயர்வு ரூபாய்க்கு மதிப்புச் சரிவு ஆயிற்று. இவ்வுண்மைக்கான இறுதி சான்றாகப் பின்வரும் அட்டவணை உள்ளது.

1. கிர்கால்டி எழுதிய பிரித்தானியப் போர் நிதியாக்கம், 1921, பக்கம். 35, 1921க்கான புள்ளி

அட்டவணை XLII

ரூபாயின் மதிப்புச் சரிவு

காலம்	இந்தியாவில் (பம்பாய்) தங்கப் பாளத்தின் விலை 180 கிராம் தோலாவுக்கு		இந்தியாவில் (பம்பாய்) வெள்ளிவிலை 100 தோலாவுக்கு		இந்தியாவில் விலைக் குறியீட்டு எண் 1913 = 100
	ரூ.	அ	ரூ.	அ	
1914	24	10	65	11	...
1915	24	14	61	2	112
1916	27	2	78	10	125
1917	27	11	94	10	142
1918	(ஜூலை) 34	0	(மே 16) 11	7 2	178
''			(நவம்பர் 28) 82	10	...
'' ஆகஸ்டு	30	0	...		...
'' செப்டம்பர்	32	4	...		...
1919 மார்ச்	32	0	13	3 0	200

இவ்வாறு, வெள்ளியின் விலையில் ஏற்பட்ட உயர்வானது பொதுவான விலையுயர்வின் அல்லது ரூபாய் மதிப்புச் சரிவின் ஒரு பகுதியாக அமைந்தது. ரூபாயின் பொன் மதிப்பை சவரனுக்குப் பத்து ரூபாயாக உயர்த்த வேண்டுமென செலாவணிக்குழு விரும்பியது. ஆனால் அப்போது சந்தையில் ஒரு சவரன் வாங்குவதற்கு 20 ரூபாய் தேவைப்பட்டது. தங்கக் கணக்கில் ரூபாய் எந்த அளவுக்கு மதிப்பில் சரிவுற்றது என்றால், குழு அறிக்கை தருவதற்குச் சில மாதங்கள் முன்னதாக **ஸ்டேட்ஸ்மன்** (கல்கத்தா ஏடு) எழுதியது:

''நீங்கள் நாட்டில் ஒரு சவரனுடன் வந்திறங்கினால், அரசு அதனை உங்களிடமிருந்து எடுத்துக்கொண்டு, அதற்குப் பிரதியாக உங்களுக்கு 11 ரூபாய் 3 அணா தரும். நீங்கள் நாட்டிலேயே இருந்து ஒரு சவரன் வைத்திருக்க நேரிட்டால், அதை செலாவணி அலுவலகத்துக்குக் கொண்டு சென்றால், அதற்காக உங்களுக்குப் பதினைந்து ரூபாய் கிடைக்கும். மறுபுறம், நீங்கள் அதைக் கடைத் தெருவிற்குக் கொண்டு சென்றால், இருபத்தொரு ரூபாய்க்கு வாங்கிக் கொள்வார்கள்''.

இந்த உண்மைகள் சாராம்சத்தில் சரியானவை என்பதை இந்திய அரசின் நிதித்துறை ஏற்றுக்கொண்டது.[1] என்றாலும் இவற்றைப் பொருட்படுத்தாமல் குழுவானது ரூபாய்க்கு 2 ஷீ. தங்க நிகர்நிலையைப் பரிந்துரை செய்தது, அது ரூபாயை வெள்ளியுடன் குழப்பிக் கொண்டது. அதனால் ரூபாயைச் சுற்றோட்டத்தில் தக்கவைத்துக் கொள்ளும் பிரச்சினையையும், தங்கக் கணக்கில் அதன் மாற்று மதிப்பை உயர்த்துவதையும் வேறுபடுத்திப் பார்க்க தவறியது. ரூபாயின் மதிப்பு உயர்ந்திருந்தால் மட்டுமே இரண்டாவதாகச் சொன்ன தீர்வு பொருந்தக் கூடியதாகும். ஆனால் வெள்ளி தான் ரூபாயின் கணக்கில், மதிப்புயர்வு பெற்றிருந்தது என்பதால், ரூபாயின் தரத்தைக் குறைப்பதற்கு முன்மொழிவதுதான் செயலுக்குகந்த ஒரே தீர்வாக இருந்திருக்கும். குழுவானது ஒரு கணக்கலகு என்ற முறையில் ரூபாய் கணக்கில் அளவிடப்பட வேண்டிய வேறெந்தச் சரக்கையும் போலவே ரூபாயிலிருந்து வேறான ஒரு சரக்காக வெள்ளியைக் குழு கருதியிருந்தால் அது செய்த மோசமான பிழையை அநேகமாய்த் தவிர்த்திருக்கலாம். ஆனால் ரூபாயின் பொதுவான வாங்குந்திறன் என்பது, தான் ஆராய்ந்து அறிக்கையளிக்குமாறு கூறப்பட்ட பொருள் குறித்த பரிசீலனையில் எவ்வகையிலும் முக்கியத்துவமுள்ள ஒரு காரணி என்று அக்குழு கருதவில்லை போலும். ரூபாயின் மாற்று மதிப்பைக் காத்து நிலைநிறுத்துவதற்கு அதன் பார்வையில் முதன்மையான முக்கியத்துவம் பெற்றது சாதகமான வர்த்தக நிலுவையாகவே இருந்தது. குழு அதன் அறிக்கையை வரைந்த நேரத்தில் இந்தியா அப்படியொரு வர்த்தக நிலுவையைப் பெற்றிருந்தது. எப்படியென்றால், குழுவானது மாற்று நியமம் குறித்துப் பொதுவாகக் கருத்துச் சொல்லும் போக்கில் குறிப்பிட்டதாவது:

> ''ரூபாயின் மதிப்பு 1 ஷி. 4 பெ. என்பதற்குக் கீழாக குறைந்துவிடாமல் தடுப்பதில் செலாவணி அமைப்பு வெற்றி பெற்று விட்டது. சாதகமான வர்த்தக நிலுவையுடன் கூடிய ஏற்றுமதி நாடு என்ற இந்தியாவின் நிலையில் சூழ்ந்த மாற்றங்கள் ஏற்பட்டிராவிட்டால், இந்த வகையில் தகர்வு ஏதும் ஏற்படுமென்று அஞ்சுவதற்குக் காரணமே இல்லை.''[1]

பிரச்சினையை இந்தக் கோணத்தில் பார்த்துச் சென்ற செலாவணிக் குழுவானது சாதகமான வர்த்தக நிலுவை 1 ஷி. தங்க மாற்று

விகிதத்தை நிலைநிறுத்தியது என்றால், இதேபோன்ற ஒரு வர்த்தக நிலுவை ஏன்[1] ஷி. தங்க மாற்றுவிகிதத்தை நிலைநிறுத்தக்கூடாது என்று வாதிட்டது முற்றிலும் இயல்பே.

மேலும், குழுவின் பரிந்துரைகளை ஏற்க வேண்டிய தேவை கழிந்து போனபின் ஏற்றுக்கொண்டது ஏன் என்பதற்கு இப்படி ஏதேனுமொரு எடுகோளின் அடிப்படையில்தான் விளக்கம் தர முடியும். ரூபாயின் உள்ளார்ந்த மதிப்பு அதன் பெயர் மதிப்பை விஞ்சினாலும் கூட, இந்தியாவில் ரூபாய்கள் மிகப் பெருமளவில் இருப்பதைக் கருத்தில் கொண்டால் சுற்றோட்டத்திலிருந்து ரூபாய் மொத்தமாய் மறைந்துபோகும் ஆபத்து ஏதுமில்லை.[2] என்ன நடந்திருக்கும் என்றால், ரூபாய்கள் ஒட்டுமொத்தமாய் உருக்கப் படும்நிலை ஏற்பட்டிருக்காது. மாறாக முறைகேடாகவும் சட்டப் புறம்பான முறையிலும் இடையறாது சிறிது சிறிதாய் எடுக்கப் பட்டிருக்கும். ரூபாய் நாணயத்தை உருக்குவதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் எதிராக இந்திய அரசு அப்போது பிறப்பித்திருந்த ஆணைகள் மீறப்படும் நிலைக்கு இது வழிகோலியிருக்கும். குழு அறிக்கையளித்த நேரத்தில் (1919 டிசம்பர்) வெள்ளியின் விலை உயர்வாகத்தான் இருந்தது. ஆனால் 1920இல் அறிக்கையின் மீது அரசு நடவடிக்கை எடுத்தபோது நிச்சயமாக அது சரிந்து கொண் டிருந்தது. பார்க்கப்போனால், 1920 ஆகஸ்டு 31ஆம் நாள், ரூபாயின் தங்க மதிப்பை மாற்றுவதற்கான சட்ட முன்வடிவு மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது, தங்கம் தோலாவுக்கு 23 1/4 ரூபாய் விலையில் விற்றுக்கொண்டிருந்தது. அதேபோது சவரன் பத்து ரூபாய்க்குச் சமமாக இருக்க வேண்டுமென்றால் தங்கத்தின் சந்தை விலை தோலாவுக்கு ரூ. 15-14-0 என்பதாக இருந்திருக்க வேண்டும். அதாவது ரூபாயுடனான தங்கத்தின் சந்தை விகிதத்துக்கும் புதிய நாணயச்சாலை விகிதத்துக்கும் ரூ. 71/2 அல்லது 33 சதவீத வேறுபாடு இருந்தது. மேலும், வெள்ளியின் விலையும் கிட்டத்தட்ட 44 பென்னி யாகக் குறைந்துபோய் விட்டது. அதாவது சுற்றோட்டத்திலிருந்து ரூபாயை எடுத்துக் கொண்டு போய் உருக்கிவிடும் ஆபத்து ஏது மில்லை.[3] ஆனால், இப்படியொரு வேற்றுமை இருந்தபோதிலும்,

---

1. பார்க்கவும்: இந்திய நாணயமாக்க (திருத்த) சட்டமுன்வடிவு குறித்து, மாண்புமிகு திரு. டாட்டா ஆற்றிய உரை, S.L.C.P., பாகம் 59, பக்கம் 112.

2. பார்க்கவும்: 1919 ஆம் வருடத்தைய குழுவிடம் திரு. கீன்ஸ் அளித்த சாட்சியம், வினா 2,665-68.

அரசாங்கம் ரூபாய்க்கான தங்க நிகர் நிலையை உயர்த்தி நிர்ணயிப் பதற்கு அவசரமாகச் செயல்பட்டது. இந்த அவசர நடவடிக்கைக்கான நிதிக் காரணம் கண்கூடாகவே தெரிந்தது. அடுத்து வரவிருந்த அரசமைப்பியல் மாற்றங்கள் பிரித்தானிய இந்தியாவில் மாகாண நிதியாக்கத்தையும் பேரரசின் நிதியாக்கத்தையும் அறவே வெவ் வேறாகப் பிரிக்க இருந்தன. பழைய நிதியமைப்பில், மைய அர சானது மாகாண நிதியாக்கத்தின் ஒவ்வொரு தீர்விலும் வழக்கமாய் எடுத்துக் கொண்ட பெரும்பங்கு ஒரு புறமிருக்க, தனக்கே சொந்த மான செல்வதாரங்களின் துணைகொண்டு நிறைவு செய்ய முடியாமல் மிச்சமிருந்த தன் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு மாகாண அரசுகளிடமிருந்து பங்களிப்புகளின் வடிவில் ''நன்மைகளை'' விதிக்கும் உரிமை மைய அரசுக்கு இருந்தது. புதிய அரசமைப்பில் இந்த அதிகாரத்தை அது பறிகொடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. ஆகவே மைய அரசானது குறிப்பாக எவருக்கும் வரி விதிப்பது போல் தெரியாமலே உதவி பெறுவதற்காக ஏதேனுமொரு செல்வாதாரத்தைத் தேடிக் கொண்டிருந்தது. மாற்று வீதத்தை உயர்த்துவது இதைச் செய்வதற்கு மகிழ்ச்சிகரமான வழியாகவேத் தோன்றியது. ஏனென்றால் ''உள்நாட்டுக் கட்டணங்களில்'' பெரு மளவு மிச்சம் பிடிப்பதற்காகவே அது திட்டமிட்டு உயர்த்தப்பட்டது. ஆனால் நிதியாக்கக் கண்ணோட்டத்தில் உயர்ந்த மாற்றுவீதம் விரும்பத்தக்கதெனக் கொண்டால், இந்த உயர்ந்த மாற்றுவீதத்தைக் காத்து நிலைநிறுத்துவது எப்படி?[1] வெள்ளியின் விலை சரிவுற்று, தங்கக் கணக்கில் ரூபாயின் மதிப்பு குறைந்துபோகும் அறிகுறிகள் தென்பட்டதோடு, குழுவின் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க அரசு முற்பட்ட நேரத்தில் வர்த்தக நிலுவையும் இந்தியாவுக்குப் பாதகமாகிவிட்டது. ஆனால் கண்மூடித்தனமான இந்தச் சட்ட மானது வர்த்தக நிலுவை உரிய காலத்தில் சாதகமாகி, ரூபாயின் 2 ஷி. தங்க மதிப்பைக் காத்து நிலைநிறுத்தத் துணைசெய்யும் என்ற எதிர்பார்ப்பைத்தான் அடிப்படையாகக் கொண்டது. அரசின் கணக்கீடுகள் குறித்த ஒரு சரியான பொருள் விளக்கமே இஃதென்பது, செலாவணிக் குளறுபடிக்கு விளக்கமளித்து வங்காள வர்த்தக அவைக்கு அது எழுதிய கடிதத்திலிருந்து எடுத்த பின்வரும் பகுதியால்

1. இந்திய மாற்று வீதம் பற்றிய அண்மைக்கால விவாதங்களில், இந்திய மாற்று வீதத்தை 2 ஷி. தங்கமாக உயர்த்துவதன் உள்நோக்கம் இதுதான் என்பது கண்டுகொள்ளப்படவே

மெய்ப்பிக்கப்படுகிறது.[1] வாணிகத்துக்குப் புத்துயிர் ஊட்ட சர்வதேசக் கடன்கள் வழங்கப்படுவதன் அவசியம் குறித்துப் பேசிய பிறகு கடிதம் கூறுவதாவது:

''ஆனால் மற்றபடி அவர்கள் (இந்திய அரசினர்) இப்போது நிகழ்ச்சிகளின் இயல்பான போக்கை மட்டுமே நம்பியிருக்க முடியும். மாற்றுவீதத்தை வலுப்படுத்துவதற்கு இறக்குமதிகளைக் குறைப்பதோடு கூட சாதகமான ஏற்றுமதி நிலைமைகள் மீண்டு வருவதையுமே நம்பியிருக்க முடியும். உலக வர்த்தகத்தின் இப்போதைய சூழலில் நிலைத்தன்மை எட்டாக்கனியே என்பதை அனுபவம் காட்டியுள்ளது. ஆனால் இயற்கை நிலைமைகளின் செயற்பாடு செலாவணிக் குழுவின் அறிக்கையில் வலிந்துரைக்கப்பட்டுள்ள நிலைக்கு இறுதியாக மாற்று வீதம் நிர்ணயிக்கப்படுவதை அனுமதிக்காமலிருக்கக் காரணம் ஏதும் இருப்பதாக இந்திய அரசு கருதவில்லை.''

இவ்விரு பார்வைகளில் எது சரி? ரூபாய் மதிப்புக் குறைவுக்கு அதன் குறைந்த வாங்குந்திறன் காரணமா? அல்லது பாதகமான வர்த்தக நிலுவை காரணமா? நிற்க, மாற்றுவீதம் வீழ்ச்சி அடைவதற்கு பாதகமான வர்த்தக நிலுவையைக் காட்டி விளக்க மளிப்பது இந்தியாவின் அதிகாரப்பூர்வ இலக்கியத்தில் புதியதொன்று என்பதை உடனே சுட்டிக்காட்டியாக வேண்டும். 1873-க்கும் 1893-க்கும் இடைப்பட்ட காலத்தில் மாற்றுவீதம் குறைவது சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. ஆனால் எந்த ஓர் அதிகாரியும் பாதகமான வர்த்தக நிலுவையை இதற்குக் காரணமாய் காட்டி விளக்கம் சொல்லவில்லை. மேலும், பாதகமான வர்த்தக நிலுவை என்னும் கோட்பாடு 1907, 1914, 1920 ஆண்டுகளில் நடைபெற்ற வீழ்ச்சிக்கு இறுதியான விளக்கம் ஆக முடியுமா? முதலாவதாக, கண்ணுக்குத் தெரிகிறவையும் தெரியாதவையுமான எல்லா வகையினங்களையும், கருத்திலெடுத்துக் கொண்டால் ஒரு நாட்டு வர்த்தகத்தின் நிலுவைத் தான் நேராக வேண்டும். மாற்றுவீதத்திலான வீழ்ச்சிக்கு பாதக நிலுவையைக் காரணமாக்கும் இந்தக் கோட்பாடு இந்தியக் காகித செலாவணி அறிக்கைகளில் இடம் பெறுவது வழக்கமாய் உள்ளது. இந்த அறிக்கைகளோடு இணைத்தளிக்கப்படும் விளக்கவுரைகள், மாற்றுவீதம் வீழ்ச்சியடைந்திருக்கும் ஆண்டுகளிலும் கூட இந்தியாவின் ஏற்றுமதிகளுக்கு எப்படி இறக்குமதிகளால் விலை தரப்படுகிறது என்பதை வகைவாரியாகக் காட்டுகின்றன. இந்தியாவிலிருந்து ''வெளிக்கசிவு'' என்பதாக ஒன்று இல்லவே இல்லையென்று

1. டைம்ஸ் ஆப் இந்தியாவின் வெளியிடப்பட்ட கடிதம் நவம்பர் 20, 1920 பக். 14 பத்தி. 6.

இவ்விதம் வற்புறுத்திச் சொல்ல இந்த உரைகள் தவறுவதே இல்லை. வேடிக்கை என்னவென்றால் இதே அறிக்கைகள் பாதகமான வர்த்தக நிலுவை குறித்தும் விடாப்பிடியாகப் பேசுகின்றன. இந்திய ஏற்றுமதிகள் அனைத்துக்கும் விலை தரப்படுவதாக ஏற்றுக் கொண்ட பின், நிலுவை என்று பேசுவதற்கு என்ன மீதமுள்ளது என்பதைப் புரிந்துகொள்வது கடினம். பணத்தால் நேர் செய்யப் படும் அந்த வர்த்தகப் பகுதியை ஏன் ''நிலுவை'' என்று குறிப்பிட வேண்டும்? நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளில் இடம் பிடிக்கும் கத்திக் கரண்டிகள் அல்லது வேறெந்தச் சரக்கின் கணக்கிலும் வர்த்தக நிலுவை குறித்துப் பேச முடியும். இருநாடுகளின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் எந்த அளவுக்குப் பணம் நுழைகிறது என்பது வேறெந்தச் சரக்கு குறித்தும் எப்படியோ அதேபோல் ஒப்பீட்டு மதிப்புகளின் விதியால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு நாட்டை விட்டு முன்னைக் காட்டிலும் கூடுதலான பணம் வெளியேறிச் சென்றால், ஏனைய சரக்குகளுடன் ஒப்பிடுகையில் அது விலை மலிவாகி விட்டது என்றே பொருள். ஆனால் சரக்கு ஏற்றுமதிகளைக் காட்டிலும் சரக்கு இறக்குமதிகள் அதிகமாகின்றன என்ற பொருளில் பாதக நிலுவை என்பதாக ஒன்று இருந்தால், மேலும் ஒரு கேள்வி எழுகிறது: ஏற்றுமதிகள் குறைந்து போவதும் இறக்குமதிகள் அதிகரிப் பதும் ஏன்? வேறுவிதமாகச் சொன்னால், இயல்பான வர்த்தகச் சம நிலை நிலவுவதாகக் கொண்டால், பாதகமான வர்த்தக நிலுவைக்கு என்ன காரணம்? இதற்கு அதிகாரபூர்வ விளக்கம் ஏதுமில்லை. பார்க்கப்போனால், இப்படியும் ஒரு கேள்வி எழுப்ப முடியுமென்று அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் எதிர்பார்க்கப்படவே இல்லை. ஆனால் இந்தக் கேள்வி அடிப்படையானது. மேற்கூறிய அர்த்தத்தில் பாதகமான வர்த்தக நிலுவை என்பது நாடு அங்கு கொண்டுபோய் விற்பதற்கு நல்ல சந்தையும், அங்கிருந்து வாங்குவதற்கு மோசமான சந்தையும் ஆகியுள்ளது என்பதை வேறுவழியில் கூறுவதே ஆகும். நிற்க, ஒரு சந்தையில் நிலவும் விலைவாசி அதற்கு வெளியே நிலவும் விலைவாசியைக் காட்டிலும் உயர்ந்திருக்கும்போது, அங்கு கொண்டு போய் விற்பதற்கு நல்ல சந்தையாகவும் அங்கிருந்து வாங்கு வதற்கு மோசமான சந்தையாகவும் அஃதமைகிறது. ஆகவே, ஒரு பாதகமான வர்த்தக நிலுவை மாற்று வீதக் குறைவுக்குக் காரண மானால், மேலும் வெளிவிலைகளைக் காட்டிலும் உள்விலைகள் உயர்ந்திருப்பது பாதகமான வர்த்தக நிலுவைக்குக் காரணமானால் மாற்றுவீதக் குறைவு என்பது வாங்குந்திறனில் செலாவணிக்கு

விளக்கத்திற்கு ஓர் அடி முன்கூட்டிய விளக்கமாகும். இச்சிக்கலைத் தவிர்க்க எவ்வளவுதான் முயன்றாலும், ரூபாயின் மாற்று மதிப்பிலான வீழ்ச்சி ரூபாயின் வாங்குந்திறனிலான வீழ்ச்சியின் விளைவுகளில் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வருவது தவிர வேறு வழியில்லை.

நிற்க, ரூபாயின் வாங்குந் திறனிலான வீழ்ச்சிக்கு என்ன காரணம்? அபத்தமானது என்று சொல்ல முடியாவிட்டாலும் குழப்பமான ஆவணமாகிய விலை விசாரணைக் குழுவின் அறிக்கையில்[1] மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் சரக்கு வழங்கலில் ஏற்பட்ட குறைவு இந்தியாவில் விலையுயர்வுக்கான காரணங்களில் ஒன்றாகக்[2] காட்டப்பட்டது. ஒரு செலாவணியின் அளவு அதன் மதிப்பை நிர்ணயிக்கும் தலைக் காரணியாகும் என்று கிட்டத்தட்டப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தத்துவத்தைக் கருத்தில் கொண்டால், இந்த குழு கைக்கொண்ட காரண காரிய விளக்கமுறை சற்றே வியப்புக்குரியது. ஆனால் குழுவானது விலையுயர்வுக்கு இந்தக் குறிப்பிட்ட காரண விளக்கத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தது ஏன் என்று எண்ணிப் பார்ப்பதற்குப் போதிய காரணம் உள்ளது. இந்தியச் செலாவணியின் மேலாண்மை தொடர்பான அரசின் நிலை சற்றே நுட்பமானது. ஏற்கெனவே காகித செலாவணி வெளியீடு அரசின் கையில் இருந்தது. நாணயச்சாலையை மூடியதன் மூலம் அது ரூபாய்ச் செலா வணியின் மேலாண்மையையும் கையில் எடுத்துக் கொண்டது. ரூபாய்ச் செலாவணி, காகித செலாவணி ஆகியவற்றின் வெளியீட்டின் மீது அனைத்துக் கட்டுப்பாடும் உடையதாய் இருப்பதால் அரசாங்கம் செலாவணியால் விளையக் கூடுமெனச் சொல்லப்படும் எந்த விளைவுகளுக்கும் நேரடிப் பொறுப்பாகிறது. அரசாங்கம் எதிர்க்கட்சியினரின் ஓயாத தாக்குதலுக்கு ஆளாகி வருவதை மறக்கலாகாது. காரணங்களைத் தேடுவதில் எதிர்க்கட்சியினரும் மிகையாக நியாயம் பார்ப்பதில்லை. இந்நிலைமையின் விளைவாக அரசாங்கம் மிக எச்சரிக்கையாக நடக்கிறது. எதை ஏற்றுக்கொள்வது என்பதில் கவனமாய் உள்ளது. வங்கி நோட்டுகள் மிகையாக

---

1. இந்தியாவில் விலையுயர்வு பற்றி ஆராய்வதற்காக 1910இல் இந்தக் குழு அமர்த்தப்பட்டது. திருவாளர்கள் தத்தா, ஷிராஸ், குப்தா ஆகியோர் அதில் இடம்பெற்றனர். முதலாவதாகவும் கடைசியாகவும் குறிப்பிட்ட ஆணையர்கள் இந்திய அரசின் நிதித்துறையிலும் அங்கம் வகிப்பதால், இந்தக் குழுவை ஏறக்குறைய அதிகாரபூர்வ அமைப்பாகவே கருதலாம். குழு செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் 1914 இல் ஐந்து நூற்பாகங்களாக வெளிவந்தன. முதல் பாகத்தில் திரு. தத்தா ஒப்பமிட்ட அறிக்கை இடம்பெற்றது.

2. பார்க்கவும்: அறிக்கை, பத்தி 126 - 127.

வெளியிடப்பட்டதால் மதிப்புக் குறைவு அடைந்தன என்று கூறி 1811இல் ஹார்னர் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கேசில்ரீக் பிரபு காமன்ஸ் சபைக்கு ஒரு வேண்டு கோள் விடுத்தார் - மதிப்புக் குறைவு உண்மையாகவே இருந்தாலும் அதனை நாடாளுமன்ற அவை ஏற்றுக்கொள்ளக் கண்டால் நெப்போலியன் என்ன செய்வார் என்பதைக் கருதிப்பார்க்கும்படி கேட்டுக் கொண்டார். இந்திய அரசாங்கம் இதே நிலையில்தான் உள்ளது. ஏதேனுமொரு கோட்பாட்டை அது ஏற்றுக்கொண்டால் எதிர்க்கட்சி என்ன செய்யும் என்று யோசிக்க வேண்டியிருந்தது. இந்திய அரசாங்கம் மாற்றுவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பாதக வர்த்தக நிலுவையையே ஒரு காரணமாக காட்டி வருவது எதனாலோ, அதனால்தான் குழுவும் விலையுயர்வுக்கு பண்டப் பற்றாக்குறையைக் காரணமாக்கியுள்ளது. இரு கோட்பாடுகளுமே அரசின் கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை முன்வைத்து, இவ்விதம் அதற்கு வரக்கூடிய எந்தப் பழியிலிருந்தும் அறவே விடுவிக்கும் சிறப்பைப் பெற்றுள்ளன. வர்த்தக நிலுவை கெட்டுப்போனால் அரசால் என்ன செய்ய முடியும்? சரக்குகளின் வழங்கல் குறைந்து போனால் அது அரசின் குற்றமா? இப்படியொரு திண்ணிய கவசத் திற்குள் மறைந்து கொண்டு அரசாங்கத்தால் பாதுகாப்பான முறை யில் இயங்க முடியும்![1] ஆனால் இந்தியாவில் விலையுயர்வுக்குக் காரணம் அளவுக்கு அதிகமான செலாவணிதான் என்ற விளக்கத்தைக் குழு தந்த விளக்கம் செல்லாமலடித்து விடுகிறதா? பணத்தின் மதிப்பானது பணத்துக்கும் பண்டங்களுக்குமான ஒரு சமன்பாட்டின் (கைமாற்றின்)[2] விளைவு ஆகும். அந்தச் சமன்பாட்டுக்கு பணப்பக்கம் சரக்குப் பக்கம் ஆகிய இரு பக்கங்கள் இருப்பது கண்கூடு. கைமாற்றுச் சமன்பாட்டின் விளைவு ஒரு மாற்றத்துக்கு உள்ளாகும்போது,

---

1. ஆனால் பண்டப்பற்றாக்குறை என்னுமிந்த விளக்கம், செலாவணியை வீக்கமடையச் செய்வதற்கான பழியிலிருந்து அரசை விடுவிப்பதற்காக முன்வைக்கப்பட்டதெனத் தோன்றும் இந்த விளக்கம் குழுவின் அறிக்கை மீளாய்வு செய்யும் தீர்மானத்தில் அரசாங்கத்தால் மறுதலிக்கப்பட்டது. அநேகமாய் ஏனென்றால் இப்டியோர் ஒப்புதல் இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் இந்தியா மேலும் ஏழையாகிக் கொண்டிருக்கிறது என்று காட்டுவதற்கான ஒரு வாதமாகக் கொள்ளப்படலாம். ஆனால் இந்தக் கோட்பாட்டை மறுதலித்த பின், இந்தியாவில் ஏற்பட்ட விலையுயர்வுக்கு விளக்கம் சொல்லக் கூடுதலான பண வெளியீடு என்பது தவிர வேறெந்தக் காரணமும் விட்டுவைக்கப்படுவதில்லை என்பதை அரசாங்கம் அதற்கிருந்த பரபரப்பில் உணரத் தவறியது.

அதாவது பொதுவான விலைவாசி மாறும்போது இந்த இரண்டில் எது தீர்மானிக்கும் காரணி என்பது பொருளாதார அறிஞர்களிடையே காலங்காலமாய் இருந்துவரும் பூசல். பணத்தின் மதிப்பு அல்லது பொதுவான வாங்குந்திறன் பற்றிப் பேசும்போது சமன்பாட்டின் பணப் பக்கத்தைக் காட்டிலும் சரக்குப் பக்கமே அதைத் தீர் மானிக்கும் தலைக்காரணி என்று வற்புறுத்துகிற பொருளாதார அறிஞர்கள் இருக் கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பொதுவான விலைகள் குறைந்தால் அதற்குப் பணத் தட்டுப்பாடு இல்லாது போகலாம். மறுபுறம் சரக்குகளின் அல்லது ஏற்படும் அதிகரிப்பு அதற்குக் காரண மாய் இருக்கலாம். மேலும், பொதுவான விலைகள் உயர்ந்தால், பணத்தின் அளவிலான அதிகரிப்பைக் காரணமாய் காட்டுவதை விடவும் சரக்குகளின் அளவிலான குறைவைக் காரணமாய் காட்டுவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள். சில பொரு ளாதார அறிஞர்கள் செய்வதுபோல் இவ்விதம் நிலை எடுப்பது சாத்தியமே. ஆனால் பணத்தின் அளவுத் தத்துவம் இதனால் கவிழ்க்கப்பட்டு வருகிறது என்று எண்ணிக்கொள்வது தவறாகும். இவ்வாறு நிலையெடுப்பதன் மூலம் அவர்கள் அளவுத் தத்து வத்தைக் கொஞ்சம் கூட சேதப்படுத்துவதில்லை என்பதே உண்மை. அவர்கள் இதனை வேறுவிதமாகச் சொல்கிறார்கள். அதற்குமேல் ஒன்றும் இல்லை. சரக்குகளின் அதிகரிப்பு அல்லது குறைவு குறித்துப் பேசுகையில் அதற்கு இணையாகச் செலாவணியின் அதிகரிப்பு அல்லது குறைவையும் அவர்கள் உட்படுத்திக் கொள்வார்கள் என்றால் பொதுவான விலைவாசியின் மீதான விளைவு என்ன வாயிருக்கும் என்பதை கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறுவதில்தான் இந்நிலைப்பாட்டின் பலவீனம் அடங்கியுள்ளது. செலாவணியின் அளவு உட்பட்ட சரக்குகளின் அளவு அதிகரிக்குமானால் பொதுவான விலைகள் குறைவதற்குக் காரணம் ஏதுமில்லை. இதேபோல் செலா வணியின் அளவு உட்பட சரக்குகளின் அளவு குறையுமானால் போதுவான விலைகள் உயர்வதற்குக் காரணம் ஏதுமல்ல. சரக்கு விளக்கமானது பண மதிப்பின் அளவு விளக்கத்துக்கு மறுபக்கமே தவிர வேறல்ல. மேற்கூறியதன் வெளிச்சத்தில் குழுவின் வாதத்தை மறுவார்ப்பு செய்து, இந்தியாவில் விலை உயர்வுக்குக் காரணம் பண்டங்களின் வழங்கல் குறைந்தவுடன் கூடவே செலாவணியின் வழங்கல் குறையவில்லை என்பதுதான் என்று அதன் மொழியி லிருந்து விலகாமலே கூறமுடியும். சுருங்கச்சொல்லின் செலாவணி மிகையாக வெளியிடப்பட்டிருப்பதால் ரூபாயின் வாங்கும் திறன் குறைந்தது. 1893இல் நாணயச்சாலைகள் மூடப்பட்டதிலிருந்து

இந்தியாவில் பெருமளவாகப் பண வெளியீடு நடைபெற்றுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

1893-98 ஆகிய முதற்காலம் தான், செலாவணிப் பெருக்கத்தைப் பொறுத்தவரை, ஒப்பளவாகச் சொன்னால் தயக்கமும் எச்சரிக்கையும் சேர்ந்த கொள்கையால் குறிக்கப்பெற்ற ஒரே காலம் ஆகும். நாணயச்சாலைகள் மூடப்பட்ட நேரத்தில் செலாவணி ஏற்கனவே தேவைக்கதிகமாக இருந்தது என்ற நன்கு தெரிந்த உண்மையே காரணம் என்பதில் ஐயமில்லை. என்றாலும், இந்தக் காலம் செலாவணிப் பெருக்கத்திலிருந்து விலக்குப் பெற்றதாய் இருக்கவில்லை.[1] நாணயச்சாலைகள் மூடப்பட்ட நேரத்தில், மக்கள் கையாண்டு வந்த வெள்ளிப் பாளத்தின் மதிப்பு குறைந்துபோனது. இந்த இழப்பை ஈடுசெய்யும்படி அரசை நிர்ப்பந்திப்பதற்காக அக்கறையுள்ள தரப்பினர் ஒரு கிளர்ச்சியை உருவாக்கினர். இறுதியில், நாணயச்சாலைகளை மூடும்படி அரசைக் கட்டாயப்படுத்திய அதே சர் ஜேம்ஸ் மக்கே (இப்போது இஞ்சிகேப் பிரபு) வங்கிகளிடமிருந்து வெள்ளியை எடுத்துவிடுமாறு அரசை இணங்கச் செய்தார். வெள்ளியை நாணயமாக்கி ஏற்கனவே தேவைக்கு மேலிருக்கும் செலாவணி அளவை கூடுதலாக்குவதற்கு பதில் இழப்புக்கே ஆனாலும் வெள்ளியை விற்க அனுமதிக்கும்படி அரசினர் அரசுச் செயலாளருக்கு முன்மொழிந்தார். அரசுச் செயலர் மறுத்துவிட்டதால் வெள்ளி நாணயமாக்கப்பட்டு செலாவணியை கூடுதலாக்கியுள்ளது. 1893-94ல் மாமன்ற உண்டியல்கள் நிறுத்தப்பட்டதால் அவர்களின் கருவூலங்களில் பெருந்தொகையான ரூபாய் தற்காலிகமாக திரண்டது. இந்தச் செயல் நடைமுறையில் செலாவணிச் சுருக்கத்திற்கு ஒப்பாயிற்று. ஆனால் அரசினர் பிற்பாடு அவ்வுண்டியல்களை இருப்புப் பாதை அமைப்பதற்கு செலவிட தீர்மானித்தனர். இந்தக் கொள்கை செலாவணியைக் கூடுதலாக்குவதற்கு ஒப்பானதாகும். 1894-க்குப் பிறகு மாமன்ற உண்டியல்களின் மறு வருகையையும் இதே விளைவைக் கொண்டிருந்தது. ஏனென்றால் ஒவ்வொரு முறை உண்டியல்கள் விற்கப்படும்போதும் செலாவணி கூடுதலாகும். தங்கத்தைக் கடனாகப் பெற்று உள்நாட்டுக் கருவூலத்திற்கு நிதியளித்திட பெரும் செலவு பிடிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டால் மீண்டும் விற்பனையைத் தொடங்கியது மன்னிக்கத் தக்க செயலாகவே இருந்தது. ஆனால் காகித செலாவணி சேம

வைப்பில் பொறுப்பார்ந்த பகுதியை 8 கோடியிலிருந்து 10 கோடியாக அதிகப்படுத்தி,[1] இவ்விதம் 2 கோடி நாணய ரூபாய்களை புழக்கத்தில் விட்டதுதான் மன்னிக்கவே முடியாததாய் இருந்தது. செலாவணிக் கொள்கையில் இது இடம் பெறுவதற்கு நிதித்துறை அமைச்சர் கிஞ்சிற்றும் கவனம் செலுத்த மறுத்த காரணத்தால் இவ்விதம் மன்னிக்க முடியாததாகிறது. அவர் வாதிட்டதாவது:

> ''செலாவணிச் சேம வைப்பின் முதலீடு தொடர்பான பிரச்சினையை விவாதிக்கையில், அத்தகைய வெளிக்காரணிகளை ஏறெடுத்து நோக்கிட நமக்கு உரிமையுள்ளதா என்று சற்றே ஐயுறுகிறேன்.''[2]

ஆக, முதற்காலகட்டத்தின் போது ஏற்பட்ட செலாவணி அதிகரிப்புகள் இரண்டாவது காலகட்டமாகிய 1900-1908இல் ஏற்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் அற்பசொற்பமாகவே இருந்தது. இரண்டாவது காலகட்டத்தில்தான் அரசாங்கம் சற்றோட்டத்தில் ஒட்டிய செலாவணியின் அளவில் அதிசயத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. இந்தக் காலத்தில் ரூபாய் நாணயம் அடிக்கப்பட்டதை பற்றிக் குறிப்பிடுகையில், அரசாங்கத்தின் கொள்கையை கடுமையாக குறை கூறக் கூடியவரான திரு. கீன்ஸ் கூறியதாவது:[3]

> ''1900ல் ரூபாய் நாணயடித்தலானது குறிப்பிடத்தக்க அளவில் புதிய நாணயம் அடித்தலுக்கு ஆண்டுதோறும் ஒருசீரான வேண்டலை மறுபடியும் தொடக்கிவைத்தது (1901-02ல் குறைந்த, 1903-04ல் உயர்ந்த தேவை, ஆனால் ஒருபோதும் இயல்பு மீறிய வேண்டல் அன்று). நாணயச்சாலைகளில் இந்த வேண்டலை நிறைவு செய்ய முடிந்தது, இதுபோக மிச்ச நேரமும் இருந்தது. 1903-04ல் மட்டும் லேசாய் கொஞ்சம் இடர்ப்பாடு இருந்தது. 1905-06ல் தேவை விரைவுற்றது, 1905 ஜூலையிலிருந்து அது நாணயமாக்கப்படாத வெள்ளியை நாணயமாக்குவதிலிருந்து கிடைத்த புதிய வழங்கலையும் விஞ்சி போய்விட்டது. ஆனாலும் அரசாங்கத்தின் நிதானம்

---

1. 1896 ஆம் ஆண்டின் சட்டம் XV மூலமாக.
2. நிதி அறிக்கை, 1896-97, பக்கம் 89.
3. மேலது, பக்கம் 131 - 35.

இழப்பதற்கு இந்த சிறு பீதியே போதும் என்றாயிற்று. ஆவேச மாய் நாணயமடிக்கும் தொழிலில் இறங்கிவிட்ட அரசினர் சாதாரண முன்யோசனைப் பார்வைகள் பற்றிய நினைப்பின்றி அவ்வாறே தொடர்ந்து செய்துவந்தனர். 1906-07 காலத்தில் மும்முரமான பருவங்கள் எப்படி அமையும் என்பதை காணக் காத்திராமல் கோடை மாதங்கள் முழுக்க அவர்கள் நாணய மடித்துக் குவித்தார்கள். 1906 கோடையைப் போலவே 1907 கோடையிலும் அவர்கள் 1907-08 பருவத்தின் செழுமை உறுதி யாகும் வரை காத்திருக்காமல் தொடர்ந்து நாணயமடித்தார்கள்.

தெளிவாகத் தெரிவது என்னவென்றால், ''சில சமுதாயங்கள் பீர் பருகுவதில் காட்டும் அதே தொடர்ச்சியான வேட்கையுடன் ஒரு சமுதாயம் செலாவணியைப் பருகினாற்போல்'' இந்தக் கால கட்டத்தில் அரசினர் தங்கள் கொள்கையை வகுத்தனர். இந்தக் காலம் காகித செலாவணி பெருமளவில் பெருக்கமடைவதையும் கண்டது. 1903 வரை செலாவணி நோட்டுக்கள் அவற்றின் வெளி யீட்டு வட்டத்திற்கு வெளியே தான் சட்டச் செலாவணி ஆகும் என்பதால் மட்டுமல்ல, அவற்றை ரொக்கமாக்கும் திறன் அவற்றை வெளியிட்ட வட்டங்களின் அலுவலகங்களோடு கட்டுப்படுத்தப் பட்டதாலும் செலாவணி நோட்டுகளின் பயன் வரம்புக்குட் பட்டதாய் இருந்தது. இது இந்தியாவில் தாள் செலாவணியைப் பரப்புவதற்கு ஒரு கடுமையான வரம்புக்கூறு ஆயிற்று. 1903 ஆம் ஆண்டின் சட்டம் VIஇன் மூலம் ரூ. 5 என்பது பர்மா தவிர்த்த பிரித்தானிய இந்தியாவில் சர்வ பொதுவானதாகப்பட்டது; அதாவது எல்லா வட்டங்களிலும் சட்டச் செலாவணி ஆக்கப்பட்டது; மேலும் வெளியீட்டு அலுவலகங்களிலும் ரொக்கமாக மாற்றத்தக்கதாக்கப் பட்டது. இதனுடன் கூடவே தாள் செலாவணி சேம வைப்பின் பொறுப்பார்ந்த பகுதி 1905 ஆம் ஆண்டின் சட்டம் III என்பதால் 12 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. முதல் நிகழ்ச்சி நோட்டுகளின் சுற்றோட்டத்தை விரிவாக்குவது மட்டுமே நோக்கமாய்க் கொண்டது ஆனால் இரண்டாவது நிகழ்ச்சியின் விளைவு ரூபாய் செலாவணி யின் மதிப்பைக் குறைப்பதாக இருந்தது.

மூன்றாவது காலம் (1909-14) இந்தியாவில் செலாவணிப் பெருக்கத்தின் நண்ணோட்டத்தில் வப்பளவில் மிகமான காலமாய்

இருந்தாலும், எவ்விதத்தும் மந்த காலமாய் இருக்கவில்லை. இக் காலத்தின் முதல் மூன்றாண்டுகள் ரூபாய் நாணயமடித்தலை பொறுத்த வரை உணர்ச்சி வேகம் அடங்கிக்கிடந்த ஆண்டுகளாய் இருந்தன என்று சொல்லலாம். ரூபாய் நாணயமடித்தலில் நிகர அதிகரிப்பு ஏதும் நிகழாத 1910ம் ஆண்டையும், சிறு அளவில் மட்டுமே அதிகரிப்பு நிகழ்ந்த 1911 ஆம் ஆண்டையும் விதிவிலக்காகக் கொண்டால், 1909, 1912 ஆண்டுகளில் நிகழ்ந்த நாணயமடித்தல் 24 லட்சத்திலிருந்து 30 லட்சம் வரை இருந்தது. ஆனால் இந்தக் காலகட்டத்தின் கடைசி ஈராண்டுகளில் ரூபாய் நாணயமடித்தல் திடுமென உயர்ந்தது. அப்போது மொத்தத் தொகை 261/2 கோடியை அடைந்தது. இந்தக் காலத்தில் காகித செலாவணியும் பெருமள வில் பெருக்கமுற்றது. 1909ல் ரூ. 5 இந்தியாவின் ஏனையப் பகுதி களில் முன்பு செய்யப்பட்டது போலவே, பர்மாவிலும் சர்வப் பொதுவானதாக்கப்பட்டது. இவ்விதம் சர்வ பொதுவானதாக்கும் நிகழ்முறை, இக்காலத்தில் மேலெடுத்துச் சொல்லப்பட்டது. காகித செலாவணிச் சட்டம் (1910ன் சட்டம் II) வழங்கிய அதிகாரத்தின் படி அரசாங்கம் 1910ல் ரூ. 5, ரூ. 50 நோட்டுக்களையும், 1911ல் ரூ. 100 நோட்டுக்களையும் சர்வ பொதுவாக்கிற்று. காகித செலாவணி அதிகரிப் பதற்கு இப்படி ஊக்கமளித்ததுடன் கூடவே, அரசு உள்ளபடியே செலாவணி வெளியீட்டின் பொறுப்பார்ந்தப் பகுதியை 1911ம் ஆண்டின் சட்டம் VII கொண்டு 12 கோடியிலிருந்து 14 கோடியாக அதிகப்படுத்தியது. இவ்விதம் கூடுதலாக 2 கோடி ரூபாய்களைச் சுற்றோட்டத்தில் விட்டது.

நான்காவது காலகட்டத்தில் (1915-1920) முன்யோசனைக் கட்டுப்பாடுகள் அனைத்தும் தூக்கிவீசப்பட்டன.[1] இந்தக் காலகட் டத்தில் தான் உலகப்போர் நிகழ்ந்தது, இந்தப் பெரும் போர் இந்தியப் பொருளுற்பத்திக்குத் தேவையைத் தோற்றுவித்தது, மாட்சிமை தங்கிய முடியாட்சியின் சார்பில் பெரும் செலவை ஏற்கவேண்டிய அவசியத்தையும் அரசின் மீது சுமத்தியது. இந்த இரு நிகழ்ச்சிகளாலும் நடப்பு வாங்கும் சாதனங்களில் ஒரு பெரும் அதிகரிப்பு அவசியமாயிற்று. இந்தத் தேவையை ஈடுசெய்ய அரசுக்கு மூன்று வழிகள் இருந்தன. 1) தங்கம் இறக்குமதி செய்தல், 2) ரூபாய்

1. இக்காலத்தின் செலாவணிக் கொள்கையை நோக்குவதற்கு இந்த ஆண்டுகளுக்கான இந்திய அரசின் ஆண்டு நிதி அறிக்கைகளே முதல் ஆதாரமாகும்.

நாணயமடித்தலை அதிகமாக்குதல், 3) காகித செலாவணியை அதிகமாக்குதல். தேவையான செலாவணியை வழங்கிட போதுமான வழிவகைகள் ஏதும் இந்திய அரசிடம் இருக்கவில்லை என்று எண்ணி விடக் கூடாது. இந்தியாவில் இந்திய அரசுக்கு என்ன செலவு ஏற்பட்டாலும், லண்டனில் அரசுச் செயலரிடம் அது ஈடுசெய்யப்பட்டது. ஆகவே, போதிய வழிவகைகள் இருந்தன. அவற்றைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதில்தான் இடர்பாடு இருந்தது. சாதாரணமாக அரசுச் செயலர் இந்தியாவில் ரூபாய் நாணயம் அடிப்பதற்காக தன் பொறுப்பிலிருக்கும் தங்கத்தைக் கொடுத்து வெள்ளி வாங்குகிறார். இந்தக் காலகட்டத்தின் முதல் ஈராண்டுகளுக்கு இந்த வாடிக்கையான முறை கடைபிடிக்கப்பட்டது. செலாவணி இந்த வழியில் அதிகமாக்கப்பட்டது. ஆனால் வெள்ளி விலையில் ஏற்பட்ட உயர்வு அந்த வாய்ப்பைக் குறைத்துவிட்டது. ஆகவே அரசுச் செயலர் தங்கத்தை வெளியில் அனுப்புவதா, காகித செலாவணி வெளியிடுவதா என்று இரண்டில் ஒன்றை தீர்மானிக்க வேண்டியிருந்தது. இரண்டில் முன்னது நாட்டுப்பற்றில்லாததாக கருதப்பட்டது. சொல்லப்போனால், லண்டனில் தனக்கு வரப்பெறும் தங்கத்தை இந்தியாவிற்குச் சொந்தமென குறித்திடுவது கூட பேரரசுக் கண்ணோட்டத்தில் அறவே கொடுமையானது என்று அரசுச் செயலர் நம்பினார். ஆனால் இந்தியாவில் கூடுதல் செலாவணிக்கான வேண்டலை ஈடுசெய்வது எப்படி? கலந்தாலாசித்ததன் விளைவாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்னவென்றால்: தங்கம் ஈடுபடுத்தாமல் இந்தியாவில் செலாவணிக்கு வகைசெய்திட மிகச் சிறந்த திட்டம் இதுவே, அதாவது ஒருமுனையில் அரசுச் செயலர் இந்தியாவின் சார்பில் வரப்பெறும் தங்கத்தை பிரித்தானிய கருவூல உண்டியலில் வாங்குவதில் முதலீடு செய்வது மறுமுனையில் இந்திய அரசாங்கம் இந்த உண்டியல்களைப் பிணையமாகக் கொண்டு செலாவணி நோட்டுக்கள் வெளியிடுவது. இந்த வழிமுறைக்காக இந்திய காகித செலாவணியின் அடிப்படைத் தத்துவத்தில் ஆழ்ந்த திருத்தம் தேவைப்பட்டது என்பது நோக்கற்பாலது. உலோகச் சேம வைப்புகளுக்கும் முனைப்பான சுற்றோட்டத்திலிருக்கும் நோட்டுகளின் மொத்தத் தொகைக்குமான விகிதமானது ஒரு கணிசமான காலப் பகுதியில் முதலீடு செய்யப்பட்ட சேம வைப்புகளை அதிகப்படுத்தவும் அதற்கு ஈடாக உலோகச் சேம வைப்புகளைக் குறைத்துக் கொள்ளவும் வேண்டிய அளவுக்கு வலுவான நிலையை வெளிப்படுத்தி

முதலீடு செய்வதன் மூலம் பொறுப்பார்ந்த செலாவணி வெளியீட்டை அதிகமாக்குவதுதான் அந்தத் தத்துவம். இதன் முதன்மையான விளைவு என்னவென்றால் காகித செலாவணியின் அளவு மக்களின் பழக்கவழக்கங்களால் ஆளப்பட்டது. ஏனென்றால், குறிப்பிட்ட எத்தருணத்திலும் பொறுப்பார்ந்த செலாவணி வெளியீட்டின் அளவு என்னவாயினும் ஒருகாலத்தில் உலோக சேம வைப்புகளாய் இருந்தவற்றையே குறித்தது. புதிய ஏற்பாட்டில் பழைய கோட்பாடு கைவிடப்பட்டு உலோக பின்பலம் ஏதுமில்லாமல் காகித செலாவணி வெளியிடப்பட்டது. இதைவிடவும் முக்கியமானது என்ன வென்றால் அதன் பருமன் மக்களின் பழக்கவழக்கங்களால் நிர்ண யிக்கப்படுவதற்கு பதில், அரசின் தேவையிலும் அதன் வசமிருந்த பிணையத்தின் அளவாலும் நிர்ணயிக்கப்பட்டது. ஆபத்தானதும் எளிதானதுமாகிய இந்த வழிமுறையை இந்திய அரசு எத்தகைய ஆர்வத் துடிப்புடன் கைக்கொண்டதென்றால், பிணையங்களை ஈடாக்கி வெளியிடக்கூடிய நோட்டுகளின் அளவை அதிகமாக்கும் விதத்தில் அது நான்காண்டுக்குள் ஒன்றன் பின் ஒன்றாக எட்டு சட்டங்கள் இயற்றியது. சட்டங்கள் விதித்த வரம்புகளில் செய்யப் பட்ட மாற்றங்களையும் உள்ளபடியே அவற்றின்படி செய்யப் பட்ட மொத்த வெளியீடுகளையும் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை XLIII

செலாவணி நோட்டுகள் வெளியீடு

செலாவணி நோட்டுகளின் பொறுப்பார்ந்த வெளியீட்டைக் குறித்துரைக்கும் சட்டங்கள்

I. பொறுப்பார்ந்த வெளியிடுவதற்கான வரம்புகள்	1915 சட்டம் V	1916 சட்டம் IX	1917 சட்டம் XI	1917 சட்டம் XIX	1918 சட்டம் VI	1919 சட்டம் II	1919 சட்டம் XXVI
	இலட்சம் ரூபாய்கள்						
அ) நிரந்தரம்	14.00	14.00	14.00	14.00	14.00	14.00	14.00
ஆ) தற்காலிகம்	6.00	12.00	36.00	48.00	72.00	86.00	106.00
மொத்த வரம்பு	20.00	26.00	50.00	62.00	86.00	100.00	120.00
II. செலாவணி நோட்டுகளின் மொத்த வெளியீடுகள்	61.63	67.73	86.38		99.79	153.46	179.67[1]
வெள்ளி	32.34	23.57	19.22		10.79	37.39	47.44
தங்கம்	15.29	24.16	18.67		27.52	17.49	32.70
III. சேம வைப்பு							
பிணையங்கள்	14.00	20.00	48.49		61.48	98.58	99.53

ஆனால் இந்தச் சுலபமான வழிமுறையைக் காலவரம் பின்றித் தொடர்வது நோட்டுகளின் மாறுந்தகைமைக்கு கேடாகி விடும். ஆதலால் செலாவணிக்கான தேவை அதிகரித்ததுடன் கூடவே காகித பணம் அதிகரித்ததானது நடப்பு வாங்குஞ் சாதனங் களை வழங்குவதற்கும் மேலும் நீர்த்துப்போன காகித வெளியீடு களுக்குப் பின்பலம் தருவதற்கும் உலோகப் பணம் வழங்க முற்படும்படி அரசைக் கட்டாயப்படுத்தியது. வெள்ளியின் விலை உயர்ந்து சென்றதானது அரசைத் தங்கம் நாடும்படி செய்தது இயல்பே. 1917 ஜூன் 29 ஆம் நாள் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது, இச்சட்டத்தின்படி இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் தங்கம்

முழுவதும் ஸ்டெர்லிங் மாற்று வீதத்தின் அடிப்படையிலான ஒரு விலையில் அரசிடம் விற்கப்பட வேண்டும். தங்கத்தை மொகர்களாக நாணயமடிப்பதற்கென்று பம்பாயில் ஒரு தங்க நாணயச்சாலை திறக்கப்பட்டது.[1] பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் தங்கம் பெறுவதற்கு ஆவேச முயற்சிகள் செய்யப்பட்டன. 1917 ஜூன் 9 ஆம் நாள் தங்க ஏற்றுமதிக்கான தடையை அமெரிக்க ஐக்கிய அரசு அகற்றியதாலும், தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் தங்கத்துக்கான சந்தை விடுவிக்கப்பட்டதாலும் ஓரளவு அந்த உலோகத்தின் வழங்கலை அரசு பெறமுடிந்தது; 1919 ஜூலை 18 முதல் நிலவுகிற மாற்று வீதத்துக்கு இணையான வீதத்தில் கனடாவில் உள்ள ஒட்டாவா நாணயச்சாலையிலும், 1919 ஆகஸ்டு 22 முதல் போட்டி வழிப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு நியூயார்க்கிலும் பொற்காசு அல்லது பொற்பாளம் வைப்பிலிடுவதற்கு ஈடாக இந்தியாவுக்கு உடனடியாகத் தந்திவழி மாற்றல்கள் செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. லண்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் நேரடியாகத் தங்கம் வாங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. முடிவில், தனியார் தங்கம் இறக்குமதி செய்வதை ஊக்கப்படுத்துவதற்காகக் கொள்முதல் விலை 1919 செப்டம்பர் 15 முதல் மாற்றப்பட்டது. இவ்விதம் ஸ்டெர்லிங் மதிப்புக் குறைவுக்கு இடம் விடப்பட்டது. ஆனால் இவ்விதம் பெறப்பட்ட தங்கம் அற்ப சொற்ப அளவாகவே இருந்தது. மேலும், தங்க வெளியீடானது அரசு மனத்திற் கொண்டிருந்த நோக்கத்துக்குப் பயன்படவில்லை. அதாவது அதனைச் சுற்றோட்டத்தில் தக்க வைத்துக் கொள்வதற்குப் பயன்படவில்லை. ரூபாயானது தங்கக் கணக்கில் பெருமளவுக்கு மதிப்பிறங்கிப் போயிற்று. இதனால் மாற்றுவீதத்தில் தங்கம் எவ்வளவு விரைவாக அரசால் வெளியிடப்பட்டதோ அதே விரைவுடன் புழக்கத்திலிருந்து வெளியேறிவிட்டது. அரசாங்கத்தால் செய்ய முடிந்ததெல்லாம், தங்க, வெள்ளிக் காசுகளைச் செலாவணி நோக்கங்கள் தவிர வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதை சட்டப் புறம்பென்று கூறித் தடைசெய்ததும், அவற்றின் ஏற்றுமதியைத் தடுத்ததும் தான். 1917 ஜூன் 29, செப்டம்பர் 3 நாட்களின் அறிவிக்கைகள் மூலம் அது இவ்வாறு செய்தது. தங்கத்தை நம்பிக் கொண்டிருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட அரசினர் ரூபாய் நாணயமடித்தலை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை மீண்டும் தொடங்கினர். அந்த உலோகம் வாங்குவதை எளிதாக்கித் தரும் பொருட்டு தனியார் கணக்கில் இந்தியாவிற்குள் வெள்ளி இறக்குமதி செய்வது 1917 செப்டம்பர் 3ஆம் நாள் தடைசெய்யப்பட்டது. என்றாலும் இந்த நடவடிக்கையானது உலகின் குறைந்த வெள்ளி வழங்

1. 1918 ஆம் ஆண்டின் சட்டம் XIV.

கலுக்கான சிறு போட்டியாளர்களில் ஒரு சிலரைத்தான் அகற்றியது. உலக அளவிலான தேவை எந்த அளவுக்கு வலுவாக இருந்ததென்றால், அரசுச் செயலரால் போதிய வெள்ளி வழங்கல் பெற முடியவில்லை. குறைந்த மதிப்புள்ள வெள்ளி நாணய வகைகளுக்குப் பதிலாக நிக்கல் காசடித்தலின் மூலமும்[1] ரூ. 1,[2] ரூ.2-8[3] போன்ற குறைந்த மதிப்புகளுக்கு நோட்டுகள் வெளியிடுவதன் மூலமும் பெருமளவுக்கு வெள்ளியை சிக்கனப்படுத்தியும் கூட இந்நிலை. ஆகவே அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கம் அவர்களின் சேமவைப்பில் வைத்திருக்கும் வெள்ளி டாலர்களில் ஒரு பகுதியை விடுவிக்கும் பொருள் குறித்து அணுகப்பட்டது. அமெரிக்க அரசு ஒப்புதல் தெரிவித்து, பிட்மன் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின் படி இந்திய அரசு தரமிக்க அவுன்ஸ் ஒன்றுக்கு 101 1/2 செண்டு விலையில் கணிசமான அளவு வெள்ளி திரட்டியது. இக்காலத்தில் வாங்கப்பட்ட மொத்த வெள்ளியின் அளவு பின்வருமாறு:

அட்டவணை XLIV

ரூபாய் நாணயமடித்தல், 1915-20

ஆண்டு	திரந்த சந்தையில் கொள்முதல் செய்த வெள்ளி திட்ட அவுன்ஸ்	அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து கொள்முதல் செய்த வெள்ளி திட்ட அவுன்ஸ்	மொத்த நியம அவுன்ஸ்
1915-16	8,636,000		
1916-17	124,535,000		
1917-18	70,923,000		
1918-1919	106,410,000	152,518,000	
1919-20	14,108,000	60,875,000	
	324,612,000	213,393,000	538,005,000

1. 1918 சட்டத்தின் IV, 1919 சட்டத்தின் XXI.

2. 1917-ஆம் ஆண்டின் டிசம்பர் முதல் தேதியிலிருந்து முதல் தடவையாக வெளியிடப்பட்டது.

ஆக, 1900 முதல் 1914 முடிய அரசானது சுமார் 532 மில்லியன் நியம அவுன்ஸ் வெள்ளியை நாணயமாக்கியது என்ற உண்மையை நினைவுகூர்ந்தால்[1] இந்த ஐந்தாண்டுக் காலத்தில் அரசு நாணய மடித்த வெள்ளியின் அளவு முன்சென்ற 14 ஆண்டுகளில் அடித்த நாணயங்களை காட்டிலும் 5 மில்லியன் அவுன்ஸ் கூடுதல் என்றாகிறது.

இவ்வாறு ரூபாயின் தங்க மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வரம்பற்ற அளவுகளில் மாற்றவொண்ணாத செலாவணி வெளியிடு வதற்கான அதிகாரத்தை செலுத்தியதன் தவிர்க்க முடியாத விளை வாகும். வரலாறு அறிந்துள்ள மாற்றவொண்ணாச் செலாவணி கள் அனைத்தின் நிலையும் இதுவே. ஆனால் ரூபாய் செலாவணி தொடர்பாக வரிவிலக்குத் தரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அரசுக்கு அதை வரம்பற்ற அளவுகளில் வெளியிட உரிமை உள்ளதென்றால், வீழ்ச்சி நேரிடும்போது அதன் விளைவு களை எதிர்த்து சமாளிக்கவும் அதனிடம் செல்வாதாரங்கள் உள்ளன. ஆகவே இந்த செல்வாதாரங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த வாதமுறையின் அடிப்படை என்னவென்றால், ரூபாய் ஓர் அடையாளச் செலாவணிதான். தங்கமாக மீட்டெடுக்கும் கோட்பாட்டை பிரயோகிப்பதன் மூலம் தங்கத்துடன் நிகர்நிலை யில் வைத்துக் காக்கப்படுகிறது என்றால், இதே போன்ற ஒரு வழிமுறையை கைக்கொள்வதன் மூலம் ரூபாயின் மதிப்பையும் தங்கத்துடன் நிகர்நிலையில் வைத்துக் காப்பது சாத்தியமாக வேண்டும்.[2] தேவைப்படுவது போதுமான ஒரு தங்க நிதியமே. அரசிடம் அந்நிதியம் இருக்கும்வரை ரூபாயின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்படும் சாத்தியப்பாடு குறித்து நாம் கவலைக்கொள்ளத் தேவை

---

1. பார்க்கவும்: 1919 ஆம் ஆண்டின் செலாவணிக் குழுவிற்கு அளித்த சாட்சியத்தில் எல். அபிராம்ஸ் அளித்த விவரங்கள் - சாட்சியக் குறிப்புகள், வினா. 37 -41.

2. லாஃப்லின் அவரது பணக் கோட்பாடுகள் நூலின் அத்தியாயம் XV இல் அடையாளப் பணத்தின் விதிகளை கருத்துக்குரிய முறையில் எடுத்துரைக்கிறார். லாஃப்லின் பணம் தொடர்பான அளவுத் தத்துவத்துக்கு எதிராளி என்பதை இங்கே சொல்லி வைக்கலாம். ஆனால் அடையாளப் பணம் பற்றிப் பேசுகையில் அவர் உள்ளூர அதனை ஏற்றுக் கொண்டுவிடுகிறார்.

இல்லை என்று உறுதி அளிக்கப்படுகிறது. இந்திய அரசாங்கத் திடம் இப்படி ஒரு நிதியம் இருக்கிறது. ரூபாயின் தங்க மதிப்பு நிகர்நிலைக்குக் கீழே சரிவுற்ற மூன்று சந்தர்ப்பங்களிலுமே அந்த நிதியம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. மீட்சி நிகழ்முறை முக்கிய மாக மூன்று வழிகளில் நடைபெறுகிறது: 1) எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் எனப்படுகிறவற்றின் விற்பனை; இவ்வழியில் அரசாங்கம் லண்டனில் உள்ள தங்கத்திற்குப் பிரதியாக இந்தியா வில் ரூபாய்கள் பெறுகிறது; 2) இந்தியாவில் ரூபாய்கள் பெற்றுக் கொண்டு உள்நாட்டளவில் தங்கத்தை விடுவித்தல்; 3) மேலும் ரூபாய்கள் சுற்றோட்டத்தில் செல்வதைத் தடுப்பதற்காக அரசுச் செயலரின் மாமன்ற உண்டியல்களை நிறுத்திவிடுதல். இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக, செலாவணி சுருக்கமடைகிறது. அதன் மதிப்பு நிகர்நிலைக்கு உயர்கிறது. மூன்று வழிகளையுமே பயன் படுத்தலாம் என்றாலும், முதலாவதுதான் இந்த மீட்சி நிகழ் முறையில் அரசாங்கத்தால் கைக்கொள்ளப்படும் ஒரு முக்கிய வழி யாகும். இந்த வழிமுறை பயன்படுத்தப்பட்ட மூன்று சந்தர்ப்பங் களிலும் மீட்சி எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டது என்பதைப் பின்வரும் மூன்று அட்டவணைகளில் இருந்து அறியலாம்.

செலாவணி மீட்சி, 1907-8

அட்டவணை XLV

காலம்	எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் விற்பனையின் மூலம்		அந்தந்த மாதத்திலும் அரங்கத் தங்க இருப்பில் தங்கக் குறைவை விடுவிப்பதன் மூலம்	அந்தந்த மாதத்திலும் தனியார் பொற்காசு ஏற்றுமதி	அரசுச் செயலரின் எடுத்தவை
	விலை கூறப் பட்ட தொகை	விற்கப்பட்ட தொகை			
1907 -					
செப்டம்பர்	...	...	152,000	14	858,896
அக்டோபர்	...	...	254.000	9,109	921,678
நவம்பர்	...	...	532,000	3	427,344
டிசம்பர்	...	...	338,000	2,501	571,905
1908					
மார்ச் 26	500,000	70,000	226,000 (முழு மாதத்துக்கு)	...	172,669
ஏப்ரல் 2	500,000	449,000			
,, 9	500,000	340,000			
,, 16	500,000	441,000	461,000	...	66,834
,, 23	500,000	329,000			
,, 30	500,000	205,000			
மே 7	500,000	81,000	645,000	...	62,764
,, 14	500,000	145,000			

	(2)	(3)	(4)	(5)	(6)
	820,000	793,000			
	500,000	500,000			
	1,000,000	755,000			
			334,000	...	169,810
	1,000,000	70,000			
	500,000	இல்லை			
	500,000	50,000			
	500,000	470,000			
	500,000	304,000			
	500,000	500,000			
			16,000	...	186,847
	1,000,000	968,000			
	1,000,000	860,000			
	1,000,000	418,000			
			354,000	...	262,217
	500,000	310,000			
	500,000	இல்லை			
	500,000	இல்லை			
ர் 3	500,000	இல்லை			
			502,000	...	1,431,012
10	500,000	இல்லை			
ம்	15,320,000	8,058,000	4,394,000	249,942	

II. 1914 16இல் செலாவணி மீட்சி

அட்டவணை XLVI

காலம்		எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் (2000)	அரசுச் செயலர் எடுத்தவை (இலட்ச ரூபாய்)
1914	ஏப்ரல்	இல்லை	270
	மே	,,	61
	ஜூன்	,,	68
	ஜூலை	,,	66
	ஆகஸ்டு	2,778	72
	செப்டம்பர்	1,515	25
	அக்டோபர்	1,895	41
	நவம்பர்	1,044	32
	டிசம்பர்	1,250	30
1915	ஜனவரி	225	29
	பிப்ரவரி	இல்லை	181
	மார்ச்சு	,,	287
	மொத்தம்	8,707	1,162
1915	ஏப்ரல்	இல்லை	1.53
	மே	,,	1.03
	ஜூன்	651	17
	ஜூலை	651	1.03
	ஆகஸ்டு	3,377	17
	செப்டெம்பர்	50	2.17
	அக்டோபர்	இல்லை	2.25
	நவம்பர்	,,	2.02
	டிசம்பர்	,,	3.28
1916	ஜனவரி	,,	5.26
	பிப்ரவரி	,,	6.02
	மார்ச்சு	,,	6.33
	மொத்தம்	4,893	30.37

III. *1920 இல் மீட்சி*

அட்டவணை XLVII

எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களின் விற்பனை (ஆயிரம் பவுன் கணக்கில்)

ா நாள்	ஒவ்வொரு விற்பனையிலும் விலைகூறப்பட்ட தொகை	ஒவ்வொரு விற்பனையிலும் விண்ணப்பிக்கப்பெற்ற தொகை	ஒவ்வொரு விற்பனையிலும் விற்கப்பெற்ற தொகை	விற்கப்பெற்ற தொகையின் மேன்மேலுமான மொத்தம்
வரி 2	1,000	770	770	770
, 8	1,000	8,449	990	1,760
, 15	2,000	300	300	2,060
, 22	2,000	4,890	2,000	4,060
, 29	2,000	1,334	5,000	5,394
வரி 5	2,000	32,390	2,000	7,394
, 12	2,000	41,312	2,000	12,394
, 19	2,000	122,335	2,000	14,394
, 26	2,000	78,417	2,000	16,394
சு 3	2,000	64,931	2,000	18,394
, 11	2,000	117,185	2,000	20,394
, 18	2,000	153,589	2,000	22,394
, 25	2,000	56,295	2,000	24,394
, 31	2,000	35,050	1,988	26,382

ஏப்ரல் 1				
,, 8	2,000	16,721	2,000	28,382
,, 15	2,000	48,270	2,000	30,382
,, 22	2,000	59,020	2,000	32,382
,, 29	1,000	53,210	1,000	33,382
மே 6	1,000	89.514	1,000	34,382
,, 13	1,000	101,625	1,000	35,382
,, 20	1,000	122,279	1,000	36,382
,, 26	1,000	85,620	1,000	37,382
ஜூன் 3	1,000	101,821	1,000	38,382
,, 10	1,000	109,245	1,000	39,382
,, 15	1,000	122,991	1,000	40,382
,, 24	1,000	73,391	1,000	41,382
ஜூலை 1	1,000	106,751	1,000	42,331
,, 8	1,000	63,690	1,000	43,382
,, 15	1,000	101,830	1000	44,382
,, 22	1,000	103,960	1,000	45,382
,, 29	1,000	75,486	1,000	46,382
ஆகஸ்டு 5	1,000	101,260	1,000	47,382
,, 12	1,000	112,230	1,000	48,382
,, 19	1,000	114,767	1,000	49,382
,, 26	1,000	117,390	1,000	50,382
செப்டம்பர் 2	1,000	126,425	1,000	51,382
,, 7	1,000	117,200	1,000	52,382
,, 13	1,000	115,095	1,000	53,382
,, 21	1,000	122,590	1,000	54,382
,, 28	1,000	120,050	1,000	55,382

அரசானது எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களைப் பெருமளவில் விற்றது மட்டுமல்லாமல், உள்நாட்டுச் சுற்றோட்டத்துக்கான ரூபாய்களுக்காகத் தங்கமும் விற்றது. இதற்கு முன் அரிதாகவே அது இப்படிச் செய்தது.

III. 1920இல் மீட்சி

அட்டவணை XLVIII

தங்கம் விற்பனை

விற்பனை எண்	விற்பனை நாள்	ஏற்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளின் குறைந்தபட்ச வீதம்			ஏற்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளின் சராசரி வீதம்			விற்கப்பட்ட அளவு (தோலா)	பம்பாய் கடைத் தெருவில் கிராமப்புறப் பொற்பாளம் விலை		
		ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.
1.	1919 செப்டம்பர் 3	25	8	0	26	12	1	3,29,130	28	10	0
2.	,, 17	24	8	0	24	10	0	3,96,640	26	1	0
3.	அக்டோபர் 6	25	8	0	25	9	8	3,26,000	27	0	0
4.	,, 20	26	15	3	27	0	2	3,34,000	28	0	0
5.	நவம்பர் 3	27	14	6	27	15	6	3,25,000	28	5	0
6.	,, 17	26	15	0	27	0	11	5,18,500	28	2	0
7.	டிசம்பர் 8	26	0	6	26	4	6	10,00,650	27	10	0
8.	1920, ஜனவரி 5	26	4	3	26	7	9	7,63,300	27	3	0
9.	,, 19	26	13	3	26	14	7	8,00,000	27	5	0
10.	பிப்ரவரி 5	25	2	3	25	9	7	7,56,450	25	6	0
11.	,, 19	16	2	3	21	9	1	9,60,590	23	4	0
12.	மார்ச்சு 3	18	8	0	18	12	4	12,96,125	21	7	0
13.	,, 17	21	6	0	21	7	7	12,53,325	22	13	0
14.	ஏப்ரல் 7	22	7	3	22	9	4	12,46,200	24	0	0
15.	,, 21	23	7	4	23	8	6	10,68,175	24	4	0
16.	மே 5	20	13	3	21	3	2	11,96,750	21	8	0
17.	,, 19	21	0	3	21	1	7	12,46,050	21	12	0
18.	ஜூன் 9	21	8	9	21	9	8	11,32,350	22	2	6
19.	,, 23	20	14	10	21	0	5	12,25,250	21	8	0
20.	ஜூலை 7	21	1	4	22	2	2	12,81,500	21	6	0
21.	,, 21	22	0	11	22	0	11	12,42,000	22	5	0
22.	ஆகஸ்டு 4	22	5	6	22	6	3	12,78,950	22	7	0
23.	,, 19	23	9	4	23	10	2	5,54,500	23	7	0
24.	செப்டம்பர் 1	22	8	3	22	10	8	8,27,700	23	1	6
25.	,, 14	23	9	4	23	12	11	2,30,500	23	8	0

1920இல் அரசுச் செயலர் இந்திய அரசின் மீது மாமன்ற உண்டியல்கள் ஏதும் எடுக்கவில்லை.

முன்சென்ற இரு சந்தர்ப்பங்களிலும் இந்தப் பொறியமைவு கண்ட வெற்றியானது ரூபாயின் மதிப்பை மீட்டுக் கொடுக்கும் சிறப்புத் தன்மை அதற்குள்ளது என்ற நம்பிக்கையை வலுப்படுத்தி விட்டது. ஆனால் 1920 ஆம் ஆண்டின் நெருக்கடியில் இந்தப் பொறியமைவுக்கு ஏற்பட்ட தோல்வி அதன் பொதுவான பயன்திறன் குறித்து எச்சரிக்கை காக்கும் போக்கினை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கிறது. இந்தப் பொறியமைவு செயல்படுத்தப்படாதால்தான் மாற்றுவீதம் வீழ்ச்சியுற்றது என்று சொல்ல முடியாது. மறுபுறம், எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களின் விற்பனை தொடர்பாக 1907-8 காலத்திய நெருக்கடியின்போது அரசுக்கிருந்த பார்வையுடன் ஒப்பிடுகையில் 1920இல் அதன் பார்வை ஆழ்ந்த மாற்றத்துக்குள்ளாகி இருந்தது. அந்த நெருக்கடியில் அரசு ஒரு கருவியைப் போல் நடந்து கொண்டது, தனது தங்கச் சேம வைப்பின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, அது எந்த நோக்கத்திற்குப் பயன்பட வேண்டுமென்று உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கே அதைப் பயன்படுத்த மறுத்துவிட்டது. இந்திய அரசு அதன் தங்கத்தை விடுவிக்க இணங்கச் செய்வதற்காக ஒரு தலைமைக் கணக்காளர் மண்டியிட்டுக் கெஞ்ச வேண்டியதாயிற்று[1]. 1907இல் அது தன் தங்கச் சேமவைப்பைப் பண்படுத்தத் தவறியமைக்காக சேம்பர்லைன் ஆணையம் அதனைக் கடிந்துதிட்டியதால்தானோ என்னவோ 1920 ஆம் ஆண்டு நெருக்கடியில் எதிர்திசை மன்ற உண்டியல்களை விற்பதென்னும் கொள்கையை இவ்வளவு துணிச்சலாக வகுக்கப்பெற்றது. பொதுமக்கள் அந்தக் கொள்கையைத் ''திட்டமிட்ட கொள்ளை'' என்று அறியாத்தனமாகக் குறை கூறுவது பெருமளவில் நடைபெற்றது.

ஆனால் நிதித்துறை அமைச்சர் அசைந்து கொடுக்கவில்லை. அவர் வாதிட்டார்:[2]

> ''இது நமது மாற்றுவிகிதக் கொள்கையின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று... லண்டனிலிருந்து இந்தியாவுக்குத் தோராய

1. சேம்பர்லைன் ஆணையத்திடம் திரு. எப்.சி. ஹாரிசன்: அளித்த சாட்சியம். வினா 10, 209.

2. 'எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள்'' தொடர்பான தீர்மானத்தின் மீது ஆற்றி உரை, 1920 மார்ச் 10, எஸ்.எல்.சி.பி. பாகம் LVIII பக்கம் 1291.

மான தங்கப் புள்ளியில் மாமன்ற உண்டியல்கள் வாயிலாகப் பண அனுப்பீடுகளுக்கு வகை செய்ய வேண்டும் என்பது மட்டுமல்ல. மாற்றுவீதம் பலவீனப்படும் நேரத்தில் இந்தியா விலிருந்து லண்டனுக்கும் தங்கப் புள்ளியில் இவ்வாறே செய்ய வேண்டும்; எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் என அறியப் படும் ஸ்டெர்லிங் அனுப்பீட்டின் விற்பனை வாயிலாக இதைச் செய்யவேண்டும். இது தங்க ஏற்றுமதிக்கு ஒரு மாற்றுவழி, அவ்வளவுதான். இது புதிய செய்தியன்று - ஆண்டுக்கணக்கில் நாம் எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்றுக் கொண் டிருக்கிறோம்... நாம் இப்படிச் செய்யாவிட்டால் மாற்று விகிதக் கொள்கை உருப்படியாவதில்லை... நாம் எதிர்த் திசை மாமன்ற உண்டியல்களை விற்றிருப்பதற்குக் காரணம், ஒரே காரணம் இதுதான்.. மாற்றுவீதத்தைக் கூடுமானவரை தங்கப் புள்ளிக்கு நெருக்கமாக வைத்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியே இது... நமக்குத் தரப்படும் அழுத்தத்துக்குப் பணிந்து, எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் விற்பதை அறவே நிறுத்தி விடுவோமானால் விளைவு என்னவாக இருக்கும்? எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை வேறு ஏதேனும் ஒரு வழிமுறையில், அல்லது இப்போது செயலில் இருக்கும் வீதங்களிலிருந்து வேறான வீதங்களுக்கு விற்க வேண்டும் என்ற கோரிக்கையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ரூபாய்களை வெளி செலாவணியாக மாற்று வதற்கான வசதிகள் அடியோடு விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் புரிந்துகொள்ள முடிய வில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பம்பாயில் நாம் மாற்றுவீதத்தை அதன் 'இயற்கை நிலையை'க் காணும்படி விட்டுவிட வேண்டும் என்று வலியுறுத்தப் படுவதைப் பார்க்கிறேன். இந்த முழக்கம் என்னைக் கவர்வ தில்லை. இந்தச் சொற்றொடரை அண்மைக் காலத்தில் பயன் படுத்தியுள்ள அர்த்தத்தில் பயன்படுத்துவதாக இருந்தால், மாற்று வீதத்தில் 'இயற்கை நிலை' என்பதாக ஒன்றே இல்லை. ஏனென்றால் உள்நாட்டுச் செலாவணியை வேறொரு செலா வணியாகப் பெயர்க்கும்போது ஒருவிதமான பொது அளவை இருக்க வேண்டும். இரு செலாவணிகளுமே அந்தப் பொது அளவைக்குக் கொண்டுவரக் கூடியதாய் இருக்க வேண்டும். அது தங்கமாக இருக்கலாம், வெள்ளியாக இருக்கலாம், ஸ்டெர்

இருக்கலாம். இதை நாம் நமக்கு அடிப்படையாகக் கொள்கிறோம். ரூபாய் **ஏதோ ஒன்றுடன்** பிணைக்கப்பட வேண்டும்,[1] அது அவ்வாறு பிணைக்கப்பட்டால் ஏதோ ஒர திட்டமான வீதத்தில் பிணைக்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாதபடி இதற்குத் தேவைப்படுவது என்னவென்றால், அந்த வீதத்தைக் காப்பதற்காக சிலநேரம் எதிர்த் திசை மாமன்ற உண்டியல்களை விற்பதற்கு நாம் அணியமாய் இருக்க வேண்டும். எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் அறவே விலக்கிக் கொள்ளப்பட்டால், நமக்கு ஒரு தங்க திட்டமும் இருக்காது, தங்க மாற்று திட்டமும் இருக்காது, எவ்வகையான திட்டமும் இருக்கவே இருக்காது.''

ஆனால் அதிலிருந்து எழும் கேள்வி இதுதான்: ''எதிர்த்திசை என்ற உண்டியல்களின் விற்பனை மாற்று வீதத்தை சரி செய்வதில் பயன்திறன் மிக்கதாய் இருந்தால், அது இவ்வளவு மோசமான தோல்வியில் முடிந்தது ஏன்? நிதித்துறை அமைச்சர் இரத்தினச் சுருக்கமாகவும் கோவையாகவும் இதற்கு விடையிறுத்தார். அவர் கூறியதாவது:

''ரூபாயின் சந்தை விலைக்கும் கோட்பாட்டுப்படியான தங்க நிகர் மதிப்புக்குமான இடைவெளியைக் குறுக்கத் தவறி விட்டோம் என்றால்... அதிகப்படியான எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்றுவிட்டோம் என்பதல்ல காரணம்; நாம் அவற்றை மிகக் குறைவாகவே விற்றிருப்பதுதான் காரணம். இங்குள்ள வர்த்தக சமுதாயத்தவர் எவரானாலும் அவருக்கு நான் சொல்லிக் கொள்கிறேன், முரண்படும் அச்சமின்றிச் சொல்லிக் கொள்கிறேன்... நேரடியாக அப்படியே 20, 30 அல்லது 40 மில்லியன் எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்பதற்கு நம் செல்வாதாரங்கள் உதவியிருந்தால்... ரூபாயின் சந்தை விலைக்கும் அதன் கோட்பாட்டின்படியான தங்க விலைக்கும் அநேகமாய் எவ்வித இடைவெளியும் இருந்திருக்காது.

---

1. 1920 ஜூன் 21 நாளிட்ட அவசரச் சட்டம் நுநுநு வாயிலாக, இந்திய நாணயமடித்தல் சட்டம் (1906 சட்டம் நுநுநு) பிரிவு 11இல் குறிப்பிடப்படும் தங்க நாணயங்கள் பணங்கொடுப்பிலோ கணக்குப் பதிவிலோ சட்டச் செலாவணி இவ்வாறு போயின. ஆனால் 21 நாள் தவணைக் காலத்தில் ரூ. 15 என்ற விகிதத்தில் அரசு அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. இந்த அவசரச் சட்டம் 1920 செப்டம்பர் 9 வரை நீடித்தது. அந்நாளில் 1920 சட்டம் தூதூதூங்நு வாயிலாக சவரன் மறுபடியும் சட்டச் செலாவணி ஆக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் தங்கத்துக்கு இந்தியாவில் சட்டத் தகுநிலை ஏதுமில்லை.

நமக்குள்ள இடர்ப்பாடுகளில் ஒன்று எதிர்த்திசை மாமன்ற உண்டியல் களை நாம் மிகக் குறைவாக விற்க வேண்டியதாயிற்று என்பதுதானே தவிர மிக அதிகமாய் விற்றுவிட்டோம் என்பதன்று''.[1]

விற்கப்பட்ட எதிர்த்திசை உண்டியல்களின் அளவு ''மிகக் குறைவாக'' இருக்குமானால் இந்த வாதத்தில் சற்றே வலு இருந் திருக்கும். உள்நாட்டில் தங்கம் பெருமளவில் வெளியிடப்பட்டது, மாமன்ற உண்டியல்கள் அடியோடு நிறுத்தப்பட்டன, இவற்றை யன்னியில் 20, 30 அல்லது 40 மில்லியன் அல்ல, 55½ மில்லியன் எதிர்த்திசை மாமன்ற உண்டியல்கள் விற்கப்பட்டன, அப்படி இருந்தும் ரூபாயானது 2 ஷி. தங்கத்தை அடைவது இருக்கட்டும், 1 ஷி. 4 பெ. ஸ்டெர்லிங்குக்கு மேல் உயரவில்லை. எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களின் விற்பனை மாற்றுவீதத்தை சரி செய்வ தற்குப் போதுமானதாய் இல்லாமற் போனது ஏன்? இது நம்மை இந்த மீட்சியின் பயன்திறன் தொடர்பான முழுப் பிரச்சினையையும் ஆராய்வதற்கு அழைத்துச் செல்கிறது.

மீட்சி என்பது செலாவணியின் ஒரு வடிவத்துக்குப் பதிலாக வேறொரு வடிவத்தைக் கொண்டுவந்து வைப்பதில் போய் முடிய லாம், அல்லது செலாவணி ஓய்வு பெறுவதில் போய் முடியலாம் என்று எடுத்த எடுப்பிலேயே கருதிக் கொள்வது அவசியமாகும். இது ஒரு வடிவத்துக்கு வேறு வடிவம் பதிலியாவதில் போய் முடிவதாய் உள்ள வரை இதனால் ஆவது ஒன்றுமில்லை. ஏனென்றால் செலா வணிப் பதிலியாக்கம் என்பது செலாவணிச் சுருக்கம் அன்று.[2] ஒரு செலாவணியின் மதிப்பை மீட்டுக் கொடுப்பதற்கு இன்றி யமையாதது. அதன் சுருக்கமே, அதாவது அதனை ஓய்வு பெறச் செய்தல், அதனை நீக்கம் செய்தல் என்பதே. இந்தப் பொறியமைவு தொடர்பான முக்கியக் கேள்வி எந்த அளவுக்குச் செலாவணியை மீட்க முடியும் என்பதன்று, எந்த அளவுக்கு அதனை ஓய்வுபெறச் செய்ய

---

1. மேலது, பக்கம் 1301.

2. அமெரிக்கப் பச்சை நோட்டுகளை மிகவும் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு எனலாம். 1875 ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி, தங்கத்துடன் நிகர்நிலையை மீட்பதற்காக அவை 1879க்குள் போதிய எண்ணிக்கையில் ஓய்வுதரப் பெற்றன. ஆனால் 1878ஆம் ஆண்டில் இதற்கு எதிர்நிலையாகப் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் வாயிலாக, இவற்றில் 347,000,000

முடியும் என்பதுதான். இந்தச் சிக்கல் தொடர்பாக இப்போது நிலவும் கண்ணோட்டத்தில், இந்த அளவானது இந்திய அரசு மற்றும் அரசுச் செயலரின் வசமுள்ள தங்கச் செல்வாதாரங்களின் பருமனால் நிர்ணயிக்கப்படுவதாகக் கேள்விக்கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது. இந்தத் தங்கச் செல்வாதாரங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன, எவ்வாறு பகிரப்படுகின்றன என்பதை முதலில் தெளிவாக்குவோம். இந்தத் தங்கச் செல்வாதாரங்கள் 1) காகித-செலாவணிச் சேம வைப்பு, 2) தங்க திட்டச் சேம வைப்பு, 3) அரசுச் செயலரின் ரொக்க நிலுவைகள் ஆகியவற்றுக்கிடையே பகிரங்கப்படுவதை நினைவுகூரலாம். மாற்றுவீத நெருக்கடி ஏற்படும்போது அரசினர் பத்திரமாக நம்பியிருக்கக் கூடிய மூன்று ''பாதுகாப்பு வரிசைகள்'' என்று இந்தச் செல்வாதாரங்கள் குறித்துப் பேசுவது வழக்கம். ஆனால் அவை அப்படித்தானா? அவை யாவும் ''தடையிலா''ச் செல்வாதாரங்களாக இருக்குமானால், அதாவது தனதாக்கப்பட்ட செல்வாதாரங்களாக இல்லாதிருக்குமானால், செலாவணியை ஓய்வுபெறச் செய்யும் நோக்கங்களுக்கு அவை அப்படி இருக்க முடியும். அவை தனதாக்கப்படாதவை என்பது எந்த அளவுக்கு? தாள் - செலாவணிச் சேம வைப்பிலிருந்து அரசுச் செயலர் தங்கம் எடுக்க முடியுமா? முடியும், ஆனால் அப்போது அவர் அதனை வேறு ஏதேனும் ஒன்றால் மாற்றீடு செய்தாக வேண்டும், அல்லது அந்த அளவுக்கு நோட்டுகளை நீக்கம் செய்தாக வேண்டும். அரசுச் செயலர் தன் ரொக்க நிலுவைகளிலிருந்து தங்கம் எடுக்க முடியுமா? முடியும், ஆனால் அப்போது அவர் தன் கருவூலத்தை நிரப்புவதற்காகக் கடன் வாங்கியாக வேண்டும், அல்லது தன் உண்டியல்களை வாங்குவதற்கு யாரேனும் இருந்தால் இந்திய அரசாங்கத்தின் பேரில் உண்டியல் வரைய வேண்டும். இது ரூபாய்ச் செலாவணி வெளியிடுவதற்க ஒப்பானது. தாள் - செலாவணிச் சேம வைப்பிலுள்ள தங்கமும் ரொக்க நிலுவைகளில் உள்ள தங்கமும் எவ்விதத்தும் பயனற்றவை. ஏனென்றால் ரூபாய்ச் செலாவணியை நீக்கம் செய்வதற்கு இந்தத் தங்கம் இடம் கொடுப்பதில்லை. ஆனால் ரூபாய்ச் செலாவணியின் மதிப்பு வீழ்ச்சியுறும்போது அம்மதிப்பை மீட்டுக் கொடுப்பதற்கு இவ்வாறு நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மீட்சியின் பயன்திறன் அரசுச் செயலரின் தங்கச் செல்வாதாரங்களை பொறுத்திருப்பதுபோல் பேசுவது அறவே அபத்தமானது. இது முக்கியமான செய்தி. இதை விளக்குவதற்கு ஓர் எடுத்துக் காட்டு தருவதும்கூட பொருத்தமாகவே இருக்கும். ரூபாய்கள் வைத்திருக்கிற சு என்பவர் அவற்றுக்குப் பாதியாக தங்கம் பெற விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் மூன்று வணிக

முகப்புகளுக்குச் செல்லலாம்: 1) ரொக்க நிலுவைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் கட்டுப்பாட்டு அதிகாரியின் முகப்பு; 2) காகித செலாவணிச் சேம வைப்புக்குப் பொறுப்பு வகிக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியின் முகப்பு; அல்லது 3) தங்க திட்டச் சேம வைப்பினது பாதுகாவலரின் முகப்பு. சு ஆனவர் முதலாமவரிடம் சென்றால், என்ன முடிவு? ரொக்க நிலுவை அந்த அளவுக்குக் குறைக்கப்படுகிறது. ரொக்க நிலுவை குறைந்தபட்சமாக இருக்க வேண்டும், அது அவ்வாறே இருப்பதாக வைத்துக் கொண்டால், கட்டுப்பாட்டு அதிகாரி இந்தியாவின் பேரில் ஓர் உண்டியல் வரைந்து, தங்கத்துக்காகப் பெறப்பட்ட ரூபாய்களை இவ்விதம் மீண்டும் விடுவித்துச் சுற்றோட்டத்தில் விடுவதன் மூலம் தன் கடன் தீர்வுத் திறத்தைக் காத்துக் கொள்வதற்காக உடனே குறைவை ஈடுசெய்து கொள்ள வேண்டும். இவ்விதம் செலாவணி சுருங்கிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சு ஆனவர் செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் சென்றால் நடப்பது என்ன? கட்டுப்பாட்டு அதிகாரி அவருக்குத் தங்கம் தருகிறார். ஆனால் காகித செலாவணிக் கணக்கு சட்டப்படியான ஒரு தனிக் கணக்கு என்ற அனுமானத்தின் பேரில், அவர் சு இடமிருந்து வரப்பெற்ற ரூபாய்களைத் தன் சேம வைப்பிலிருந்து வெளியிடப்பட்ட தங்கத்தின் இடத்தில் வைத்துவிட வேண்டும். ஆக இங்கேயும் என்ன நிகழ்கிறது என்றால், சேம வைப்பின் இயைபு ஒரு மாற்றத்துக்கு உள்ளாகிறது. ஆனால் மொத்தத் தாள் செலாவணி மாறாது உள்ளது. ஆகவே காகித செலாவணிச் சேம வைப்பிலுள்ள தங்கமும் ரொக்க நிலுவைகளும் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படுகிற அளவுக்கு, இதன் விளைவு செலாவணியை ஓய்வுபெறச் செய்வதன்று. ''பாதுகாப்புப் படை வரிசைகள்'' என்று இவை குறித்து அடிக்கடி பேசுகிறார்களே, இப்படிப் பேசுவது இந்த இரண்டும் தனதாக்கப் பட்ட செல்வாதாரங்களே தவிர தடையிலாச் செல்வாதாரங்கள் அல்ல என்ற உண்மையைக் காணத் தவறுவதாகும்.

அப்படியானால் ரூபாய்ச் செலாவணியை ஓய்வுபெறச் செய்வதற்கு அரசிடம் மிஞ்சியிருக்கும் செல்வாதாரம் என்ன? தங்க திட்டச் சேம வைப்பு மட்டுமே. இந்தச் சேம வைப்பின் தொகை மட்டுமே குறிப்பிட்ட எந்தப் பயனுக்காகவும் தனதாக்கப்படாதது ஆகும். இது தடையிலா ரொக்கம். அந்த அளவுக்கு மட்டுமே அரசானது ரூபாய்ச் செலாவணியின் தங்க மதிப்பில் வீழ்ச்சி ஏற்படும் போது அச்செலாவணியை மீட்பது சாத்தியமாகும். இந்த அளவுக்கே

மனித்திலிருந்துவது முக்கியமாகும். அது செலாவணியை ஓய்வு பெறச் செய்துவிடும் என்பதில்லை, அது அப்படிச் செய்யாமலும் போகலாம். அது அப்படிச் செய்யாமல் விட்ட நேர்வுகள் ஏராளம். இரு எடுத்துக்காட்டுகளே போதும். நாணயச்சாலை மூடப்பட்ட முதற்காலகட்டமாகிய 1893-98இல் எப்படிப் பெரும் எண்ணிக்கை யிலான ரூபாய்கள் அரசின் கையில் திரண்டுவிட்டன என்பதை நினைவு கூரலாம். ரூபாயின் மதிப்பை உயர்த்துவதற்காக வேண்டி அவற்றைப் பூட்டி வைத்திருக்க வேண்டும். மாறாக இந்திய அரசு இருப்புப் பாதைகளையும் ஏனையப் பொதுப்பணிகளையும் விரிவு படுத்தியதன் மூலம் அந்தப் பணத்தை சுற்றோட்டத்தில் விடு வித்தது. தானே ரூபாய்களைச் செலவிடுவது பொதுமக்கள் செல விட்டால் ஏற்படக்கூடிய விளைவுக்கு மாறுபாடான ஒரு விளைவைத் தரும் என்பதுபோல் அரசு இவ்வாறு செய்தது. இதே போலத்தான் 1920இல் எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை விற்பனை செய்த திலும் அரசு பொறுப்பற்ற முறையில்தான் நடந்துகொண்டது. இந்த எதிர்த்திசை மாமன்ற உண்டியல்களை நேர் செய்வதற்காக அரசுச் செயலர் தாள் செலாவணிச் சேம வைப்பிலிருந்து தங்கம் எடுத்தார். ஆனால் சேம வைப்பிலிருந்து எடுக்கப்பட்ட தங்கத்தின் அள வுக்கு நோட்டுகளை நீக்கம் செய்வதற்குப் பதிலாக, இடைக்கால அடிப்படையில் பிணையங்கள் தயாரிப்பதன் மூலம் இடை வெளியை இட்டு நிரப்ப அரசு 1920 ஆம் ஆண்டுச் சட்டம் XXIஇன் படி அதிகாரங்கள் எடுத்துக்கொண்டது. அதாவது மீட்சி நடை பெற்ற போதிலும் ஓய்வு பெறச் செய்தல் நடைபெறவில்லை. அவ்வளவு தங்கமும் வெறுமனே விரயமாயிற்று. ஏனென்றால் விலைகள் மீதோ மாற்று விகிதத்தின் மீதோ அது உண்டாக்கிய விளைவு ஒன்றுமில்லை. 1920 மார்ச்சில் இயற்றப்பட்ட இந்தச் சட்டம் தற்காலிகமாய்ச் சிறிதுகாலம் நீடிப்பதற்கானது 1920 அக் டோபரில் காலாவதியாக வேண்டும். அதற்குள் அரசானது செலா வணியை ஓய்வுபெறச் செய்ய வேண்டியதாயிருக்கும். அரசு இதைச் செய்யாமல் காகித செலாவணிச் சட்டத்தை மாற்றி அமைத்தது. தற்காலிகமாக அல்ல, நிரந்தரமாகவே மாற்றியது (1920 சட்டம் XLV). அரசினர் தங்களின் ''படைக்கப்பெற்ற பிணையங்களை'' ஓய்வுபெறச் செய்வதன் மூலம் முடிந்தவரை மிகச் சிறு அளவுக்கு செலாவணியை நீக்கம் செய்யக் கோருகிற விதத்தில் சட்ட வழி வகைகள் மாற்றப்பட்டன. அரசின் நிதிநிலை அறிக்கையில் பற்றாக் குறைகள் ஏற்பட்டு விட்டதால், இதுவும் கூட செய்யப்படவில்லை.

ஆனால் இத்தகைய அசட்டு நடவடிக்கைகள் மறுபடியும் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் கூட, தங்க நியமச் சேம வைப்பால் இடமளிக்கப்படுவதற்கு மேல் கூடுதலான அளவில் செலாவணியை ஓய்வுபெறச் செய்ய அரசால் முடியாது என்பதே உண்மை. அந்தச் சேம வைப்பு பொய்த்துவிடுமானால் அரசுக்கு இரண்டே வழிகள்தான் மிச்சமுள்ளன: 1) ரூபாய்களை உருக்கிப் புலியனாகத் தங்கத்துக்கு விற்பதும், மேற்கொண்டு செலாவணியைச் சுருக்கிச் செல்வதும், அதன் மதிப்பு பழைய நிலைக்கு மீட்கப்படும் வரை இதையே தொடர்வதும்; அல்லது 2) தங்கம் கடன் வாங்குவது. இந்த இரண்டுமே அதிகம் செலவாகக் கூடிய வழிமுறைகள் என்பது தெளிவு. ரூபாயில் அடங்கியுள்ள புலியனுக்கு அதை புலியனாக வடிப்பதற்கென்று வாங்கியபோது ஆன செலவை விட இப்போது விற்கும் நேரத்தில் கூடுதலாய் விலை கிடைக்காவிட்டால், ரூபாய்களை புலியனாக விற்பது இழப்பில்தான் முடியும். தங்கம் கடன் வாங்குவதாகிய இரண்டாவது நிகழ்முறையானது செலாவணியை ஓய்வுபெறச் செய்வதற்கான ஒரு சேமநிதியை உண்டாக்கும் நோக்கத்திற்காக எளிதில் நாடத்தக்கதன்று. பார்க்கப் போனால், இத்தகைய வழிமுறைகளுக்கு அதிகச் செலவாகும் என்பதாலும், மாற்று திட்டத்தின் நிலையின்மைக்கு இவ்வழிமுறைகளை நாடுவதே முழுச் சான்று ஆகிவிடும் என்பதாலும்தான், அரசானது ஒரு மாற்றுவிகித நெருக்கடியில் சாத்தியமான பாதுகாப்பு வழிகளென்று அவற்றை எண்ணிப் பார்த்ததே இல்லை. ஆனால், தங்க திட்டச் சேம வைப்பானது அதனளவில் மாற்று விகிதத்தைக் காத்து நிலைநிறுத்துவதற்குப் போதுமானதாய் இருக்க முடியாது என்பதை அரசு ஏற்றுக் கொள்வது உறுதியெனத் தோன்றுகிறது. எப்படியென்றால், 1907-8 ஆண்டிலிருந்து லண்டனுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான அரசாங்க நிலுவைகளின் பரவலில் ஒரு முழுமையான மாற்றம் தொடங்கக் காண்கிறோம். அந்த காலம் வரை தன் உள்நாட்டுக் கருவூலத்திற்கு நிதி வழங்க அவசியமான அளவுக்கு மட்டுமே பணம் எடுப்பது அரசுச் செயலரின் கொள்கையாக இருந்தது. அதற்குப் பிறகு, இந்திய அரசால் வழங்க முடிந்த அளவுக்குப் பணமெடுக்கும் வழக்கம் ஆரம்பமாயிற்று. இந்திய அரசு நிதித்துறை விவகாரங்களில் ஓங்கி நின்றிருப்பதால் வரிவிதிப்பை அதிகமாக்குவதன் மூலமும் நிதிநிலை அறிக்கையில் உபரிகளுக்கு

நிலுவைகள் குவிந்தன.[1] உள்நாட்டுக் கருவூலத்துக்கு இப்படிப் புதுமையான வழியில் நிதித் திரட்டுவதற்கு மனநிறைவளிக்கும் படியான அதிகாரபூர்வ விளக்கம் ஏதும் தரப்பட்டதே இல்லை.[2] ஆனால் இந்த நிலுவைகளைத் திரட்டுவதன் குறிக்கோள் உண்மையான தங்க திட்ட சேம வைப்புக்குத் துணையாக இரண்டாவது தங்கச் சேம வைப்புக்கு வழிசெய்வதுதான் என்று நாம் சொன்னால் பெருந்தவறாகி விடாது. இந்தத் துணிச்சலான முயற்சியிலிருந்து அரசு இப்போதைக்குப் பெறக் கூடிய வலிமை என்னவானாலும் சரி, இது நிரந்தரமாய் இருக்க முடியாது என்பது கண்கூடாய்த் தெரிகிறது. அரசு நிதிவளங்களை இன்னுங்கூட மக்களின் விருப்பத்துக்கேற்பக் கட்டுப்படுத்துவதானால், கருவூலத்தை இயங்கச் செய்வதற்கு அவசியமான குறைந்தபட்ச அளவாக ரொக்க நிலுவைகளை அடக்கி வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். தங்க திட்டச் சேம வைப்பைத் தவிர வேறு எந்தச் சேம வைப்பையும் அரசு சார்ந்து நிற்க முடியாமற் போகும்.

செலாவணிச் சேமவைப்புக்கும் நோட்டுகளுக்கும் என்ன உறவோ, தங்க திட்டச் சேம வைப்புக்கும் ரூபாய்க்கும் அதே உறவுதான். இவ்விரு சேம வைப்புகளுக்குமே நோக்கம் என்னவென்றால், முறையே அதனதன் ஆதரவைப் பெற்றுள்ள செலாவணிகள் வீழ்ச்சியுறாமல் அல்லது கழிவுக்கு போய்விடாமல் தடுப்பதுதான். ஆனால் வைப்பு தொடர்பாக ரூபாயையும் தாளையும் அரசு நடத்துகிற முறையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு வெளிப்படுகிறது. காகிதத்தைப் பொறுத்தவரை, முன்பே பார்த்ததுபோல, சேம வைப்பானது சட்டப்படியான ஒன்று; இந்திய காகித செலாவணியின் அடிப்படை முழுவதும் மாற்றப்பட்டிருக்கிற போதும் கூட சேம வைப்பு தொடர்பான வழிவகைகள் கண்டிப்பானவை. இவற்றை அரசு மதிக்காவிட்டால் அது சட்ட மீறலாகும். இப்போது ரூபாயானது வெள்ளியில் அச்சிடப் பெற்ற நோட்டுதானே தவிர வேறொன்றும் இல்லை.[3] இந்நிலையில்

---

1. புள்ளிவிவரங்களுக்குப் பார்க்கவும்: அத்தியாயம் VII.

2. பார்க்கவும்: இந்தியத்துறை அலுவலக நிலுவைகள் பற்றிய குறிப்புரை, 1913 ஆம் ஆண்டின் C. D, 6619.

3. உண்மையில் நாம் நமது ரூபாய்ச் செலாவணியை அடையாளச் செலாவணியின் நிலைக்குத் தாழ்த்திவிட்டோம். குறிப்பிட்ட அளவு பொறுப்பார்ந்த செலாவணி (தாளா உலோகமா என்பது பொருட்டன்று) வெளியிடப்பட்டிருக்கும் வங்கியாளர்களின் நிலையில் தான் நடைமுறையில் இப்போது நாம் இருக்கிறோம். இந்தப் பொறுப்பார்ந்த செலாவணியின் மதிப்பைக் காப்பதற்காக, முறைப்படியான வர்த்தகத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அது முன்வைக்கப்படும்போது தங்கத்துக்கு அதை மாற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் நாம் இருந்தாக வேண்டும்'' என்கிறது 1903-4 ஆண்டுக்கான நிதி அறிக்கை, பக்கம் 14.

சேமவைப்பு தொடர்பான வழிவகைகள் தாள் செலாவணியை ஆளும் வழிவகைகளோடு ஒப்பிடத்தக்கவையாக இருக்க வேண்டும். தங்க திட்டச் சேம வைப்பு தொடர்பாக விதிமுறை ஏதும் இல்லை என்பது விசித்திரமாகத் தோன்றலாம்.[1] ரூபாயை மீட்பது அரசின் கடப்பாடு அல்ல என்பதோடு, சேமவைப்பையும் கூட அரசு காத்தாக வேண்டும் எனத் தோன்றவில்லை. அது இப்படியொரு சேம வைப்பைக் காத்திருப்பது, இந்தச் சேமவைப்பு கலைந்து போவதாகக் கொண்டால் அதனை அரசு மாற்றீடு செய்யும் என்பதற்கு எவ்வகையிலும் உத்தரவாதம் ஆகாது.[2] இத்தகைய வேறுபாடுகள் ஒருபுறம் இருக்க தங்க திட்டச் சேம வைப்பு போதுமானதொரு சேமவைப்பு தானா? வழக்கமாக அதிகாரபூர்வ வெளியீடுகளில் தங்க நியமச் சேம வைப்பின் பருமன் தொடர்பாகத் தரப்படும் விவரங்கள் ஒரு பொருளற்ற அடுக்குதான். கடன் பொறுப்புகளை வெளிக்காட்டாமல் சொத்துக்களை மட்டும் காட்சிப் பொருளாக்குவதால் என்ன பயன்? அந்தச் சேம வைப்பு போதுமானதா என்பதைக் கணிக்க இயலவேண்டுமானால், ரூபாய்களின் மொத்தச் சுற்றோட்டம் என்னவென்று நமக்குத் தெரிய வேண்டும். எவ்வாறாயினும், ரூபாய்களின் சுற்றோட்டத்தைச் சேம வைப்புடன் நாம் ஒப்புநோக்கும்போது இரண்டுக்குமான விகிதம் செலாவணி அமைப்பின் நிலைத்தன்மையில் நம்பிக்கையூட்டப் போதுமான அளவுக்குப் பெரியதாய் இல்லை.

---

1. சேம்பர்லைன் ஆணையம் கூறியது: ''நெருக்கடியின் போது அரசின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதில் தீமைகள் உள்ளன. சேம வைப்பின் தன்மையும் அளவும் ஒரேவிதமாய் அச்சு மாறாமல் இருக்க வேண்டும் என்பது விரும்பத்தக்கதன்று. ஆகவே தங்க திட்டச் சேமவைப்பு சட்டத்தால் அமுங்கு செய்யப்பட வேண்டும் என்று நாம் கருதவில்லை''. - அறிக்கை, பிரிவு 101.

2. 1920 மார்ச் 17 ஆம் நாள் இந்தியத் தாள் செலாவணி (தற்காலிகத் திருத்தம்) சட்ட முன்வடிவின் மீது உரையாற்றுகையில் நிதித்துறை அமைச்சர் குறிப்பிட்டார்: ''..நடைமுறைக் கண்ணோட்டத்தில் தாள் செலாவணிச் சேம வைப்பு மறுபடியும் மாற்றித் தரப்பட்டு முடியும்வரை தங்க திட்டச் சேம வைப்பை விட்டுவைப்பதே விரும்பத்தக்கது... அரசுச் செயலர் திண்ணிய உள்நாட்டுக் கடன் பொறுப்புகளுக்கு மாமன்ற உண்டியல்கள் மூலம் நிதிகள் பெற முடியாமற் போனால் இப்படித்தான் செய்ய வேண்டும். அப்போது அவர் தங்க நியமச் சேமவைப்பை பயன்படுத்த இயலும். நாம் இங்கே தங்க திட்டச் சேமவைப்பை வரவு வைக்கலாம். மூன்றாவதாக ஒரு கூறு உள்ளது. அதுவே இறுதியாதெனக் கருதுகிறேன். நீங்கள் தாள் செலாவணிச் சேம வைப்புக்கு ஈடாக இயங்கும்போது காகித செலாவணிச் சேம வைப்புக்குள் இயங்கியாக வேண்டும். தங்க திட்ட சேமவைப்புக்கு ஈடாக இயங்கும்போது

மொத்தம்

அட்டவணை XLIX

தங்க நியமச் சேமவைப்பின் பரவலும் ரூபாய்ச் சுற்றோட்டத்துக்கான அதன் விகிதமும்

(1000 பவுன் ஸ்டெர்லிங் கணக்கில்)

ஆண்டு தோறும் மார்ச் 31	இங்கிலாந்தில்						இந்தியாவில்				மொத்தச் சேமவைப்பு இங்கிலாந்தும் இந்தியாவும்	சுத்தோட்டத்திலிருக்கும் ரூபாய்களின் அளவு கோடிக் கணக்கில்	சுற்றோட்டத்திலிலுள்ள ரூபாய்களுக்கு சேமவைப்பின் சத விதம் பவுண்டு = ரூ. 15[1]
	ஸ்டெர்லிங் பிணையங்களின் கெர்முதல் மதிப்பு	குறுகிய அதிவிடுப்பில் ரொக்கம்	உள்நாட்டு கருவூலத்துக்கு தற்காலிகக் கடன்	இங்கிலாந்து வங்கியில் வைப்பகவுள்ள தங்கம்	மொத்தம்	இந்தியாவில் நாணயமடித்த ரூபாய்கள்	கருவூல நிலுவைகளிலிருந்து வரவேண்டிய கடன்	கருவூல நிலுவைகளுக்கு தற்காலிகக் கடன்	தங்கம்	மொத்தம்			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
1901	-	-	-	-	-	-	1,831	-	1,200	3,031	3,031	143	3.1
02	3,454	-	-	-	3,454	-	-	-	-	-	3,454	138	3.7
03	3,810	-	-	-	3,810	-	1	-	-	1	3.811	136	3.4
04	6,377	-	-	-	6,377	-	167	-	-	167	6,544	144	6.8
05	8,377	-	-	-	8,377	-	152	-	-	152	8,529	152	8.4
06	12,165	-	-	-	12,165	-	287	-	-	287	12,452	164	10.7
07	12,519	-	-	-	12,519	4,000	301	-	22	4,323	16,842	178	10.6

(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
13,187	-	1,131	-	14,318	4,000	-	-	-	4,000	18,471	191	11.2
7,414	-	470	-	14,318	4,000	-	-	-	4,000	18,471	187	7.1
13,219	3,011	-	-	7,884	10,587	-	-	-	10,587	18,764	186	13.8
15,849	1,477	-	-	16,230	2,534	-	-	-	2,534	18,764	184	14.8
16,748	1,074	-	-	17,822	1,934	-	-	-	1,934	19,956	182	14.9
15,946	1,006	-	1,620	18,572	4,000	35	-	-	4,035	22,607	191	14.8
17,165	25	-	4,320	21,510	4,000	22	-	-	4,022	25,532	187	17.2
12,149	8	-	1,250	13,407	-	70	7,000	5,238	13,308	25,715	204	18.9
16,219	5,792	-	-	22,011	-	1	4,000	239	4,240	26,251	212	15.7
25,406	6,001	-	-	31.407	-	-	-	103	103	31,510	227	120.8
28,453	6,000	-	-	34.453	-	-	-	-	-	34.453	219	23.5
29,729	6,016	-	-	35,745	-	-	-	-	-	35,745	228	23.5

ந்தைக் கணக்கிடுகையில் சேமவைப்பின் ரூபாய்ப் பகுதி விடுபட்டுள்ளது.

இவ்வளவு சிறியதொரு சேமவைப்பினால் செலாவணியை ஓய்வுபெறச் செய்யும் நிகழ் முறையை எவ்வாறு போதிய அளவுக்கு நிறைவேற்ற முடியும்? அது எப்போதுமே இதைச் செய்து விடாது என்பதை 1920ஆம் ஆண்டின் நெருக்கடி அளவுக்கு அதிகமாகவே மெய்ப்பித்தது. ஆனால் மாற்று திட்டத்தின் ஆதரவாளர்கள் என்ன சாதிக்கிறார்கள் தெரியுமா? சேமவைப்பு சிறிதாய் இருப்பதால் எவ்விதப் பாதிப்பும் இல்லை என்கிறார்கள். ஏனென்றால் சேம வைப்பு வைத்திருப்பதே அயல் நாட்டுப் பண அனுப்பீடுகளுக்காகத்தானாம். இந்நிலையில் சேமவைப்பு பெரிதாய் இருக்கத் தேவையில்லையாம். அப்படித்தான் என்று ஏற்றுக்கொண்டால், சேமவைப்பின் பருமன் எந்நிலையிலும் போதுமானதாய் இருந்திட, அதனை நிர்ணயிக்க வேண்டியது என்ன? வழிகாட்டுவதற்கு ஒரு விதியை வகுத்துரைக்கும் ஒரே ஒரு முயற்சி பேராசிரியர் கீன்ஸ் செய்ததாகும். இந்தியாவின் வர்த்தக நிலுவையில் சாத்தியமாகக் கூடிய மாறுபாடுகளில் அவர் அந்த விதியைக் காண்கிறார்....[1] இப்போது சேம வைப்பை ஒழுங்குபடுத்துவது எனும் சிக்கல் இதனால் மேலும் தெளிவாகிறதா? முன்பே விளக்கிச் சொன்னது போல பாதகமான வர்த்தக நிலுவைக்கு செலாவணியின் மதிப்புக் குறைவு காரணமாய் இருக்கும். அதாவது சேமவைப்பானது இந்த மதிப்புக் குறைவு காரணமாய் இருக்கும். அதாவது சேமவைப்பானது இந்த மதிப்புக் குறைவின் ஆழத்தைப் பொறுத்து மாறுபட வேண்டும் என்பதே திரு. கீன்ஸ் கூறுவதன் பொருளாகும். ஆனால் ஓர் அரசு எப்படி இதைச் செய்வது? விலைவாசியின் அசைவியக்கத்தை எடுத்துக்காட்டுவதன் மூலமாகத்தான். ஆனால் இந்திய அரசு அதன் செலாவணி மேலாண்மை முழுவதிலும் விலைச் சிக்கலின்பால் கவனமே செலுத்துவதில்லை. பார்க்கப்போனால், மேலே சுட்டிக் காட்டியது போல, மாற்றுவீத வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணங்களை அது புரிந்துகொண்டுள்ள விதம் உண்மையான புரிதலுடன் அடியோடு மாறுபடுகிறது. இந்த உண்மையான புரிதலை உறுதியாகப் பற்றிக் கொண்டால்தான் நெருக்கடியைத் தவிர்க்க முடியும். உண்மையான புரிதல் கைவராத நிலையில் அது கண்ணை மூடிக்கொண்டு செலாவணி வெளியிட்டுக் கொண்டே போகிறது. பாதகமான வர்த்தக நிலுவை எனப்படுவது வந்து சேரும்வரை இது தொடர்கிறது. அதன் நோக்கமெல்லாம் ஒரு தங்கச் சேம வைப்பை வைத்துக் காப்பதுதான். அந்தச் சேம வைப்பு அதனிடம் இருக்கும்

1. மேலது, பக்கம் 166-7.

வரை எவ்வளவு செலாவணி வெளியிட வேண்டுமென்று அது நின்று நிதானித்து யோசிப்பதில்லை. நோட்டு வெளியீடுகளுக்கும் சேம வைப்புக்குமான விகித இடையுறவு வரையறுக்கப்படாத நிலையில், மாற்று திட்டத்திற்கு நிலைத்தன்மை சேமவைப்பைப் பொறுத்ததாய் இருக்கும்வரை எப்போதும் தெளிவற்றதாகவே இருக்கும்; செலாவணி அமைப்பிடம் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் சிக்கலானதாகவே இருக்கும். அது மட்டுமல்ல, அயல்நாட்டுப் பண அனுப்பீடுகளுக்கான மீட்சிப் பொறுப்பு சிறியதெனத் தோன்றினாலும், மாற்று திட்டத்துக்கு நிலைத்தன்மை மீண்டு விடாமல் அறவே கெடுத்துவிடக்கூடிய அளவுக்குத் தெளிவற்றதாகலாம்.

ஆனால் தங்கச் சேம வைப்பு என்பது ஒரு செலாவணியின் மதிப்பை வைத்துக் காப்பதற்கு இவ்வளவு முக்கியமான ஒன்றா? மாற்று திட்டத்தை ஆதரிப்பவர்கள் அனைவரும் அந்தத் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இந்தக் கருத்தினால் ஒரு நொடிப்பொழுதும் விமர்சனம் தாங்க முடியாது. எல்லாப் பண வகைகளும் தங்கத்துடன் நிகர்நிலையில் இருந்து வருவதற்கு ஓர் உருப்படியான காரணம் தங்கச் சேம வைப்புதான் என்பது மோசமான பொய்மையாகும்.[1] இப்படிக் கருதுவது காரண காரிய வரிசையைப் புரட்டிப் போடுவதாகும். சுற்றோட்ட ஊடகத்தின் மதிப்பைக் காப்பது தங்கச் சேமவைப்பு அன்று. மாறாக, சுற்றோட்ட ஊடகத்தின் அளவுக்கு வரம்பிடுவது தான் அதன் மதிப்பை வைத்துக் காப்பதற்குப் போதுமானதாய் இருப்பது மட்டுமல்லாமல், நாட்டில் இருக்கக் கூடிய தங்கச் சேம வைப்பைத் திரட்டுவதையும் தக்கவைத்துக் கொள்வதையும் சாத்தியமாக்கவும் செய்கிறது. செலாவணியின் அளவு மீதான வரம்பை நீக்கி விடுவோமானால், அது தன் மதிப்பைக் காத்துக் கொள்ளத் தவறி விடும் என்பது மட்டுமல்ல, தங்கச் சேம வைப்பு ஏதும் திரளுவதையும் தடுத்துவிடும். பார்க்கப்போனால் செலாவணியின் மதிப்பைப் பாதுகாப்பதற்குத் தங்கச் சேமவைப்பு அவ்வளவு முக்கியமானதல்ல. செலாவணியின் வெளியீட்டுக்கு ஒரு வளைந்து கொடுக்காத வரம்பு இருக்குமானால், செலாவணியின் மதிப்புக்குச் சிறிதும் கேடில்லாமல் தங்கச் சேம வைப்பை அறவே ஒழித்துவிடலாம்.

ஐரோப்பிய வங்கிகள் தங்கள் சேம வைப்புகளைக் கொண்டுதான் தங்கள் செலாவணிகளின் மதிப்பைக் காத்துக் கொள்கின்றன என்பதால், இந்திய அரசு ரூபாயின் மதிப்பைக் காப்பதற்கு ஒரு சேம வைப்பைத் திரட்ட வேண்டுமென்று சேம்பர்லைன் ஆணையம் பரிந்துரை செய்தது. இதைவிடவும் கூடுதலாய் உண்மையைத் திரித்துச் சொல்ல எவராலும் முடியாது. ஆணையம் பரிந்துரை செய்ததற்கு நேர்மாறானதைத்தான் ஐரோப்பிய வங்கிகள் செய்தன. அவற்றின் தங்கம் மறைந்து போவதுபோல் தெரிந்தபோதெல்லாம் அவை தங்களின் செலாவணிகளை ஒப்பளவில் மட்டுமின்றி அறுதியாகவும் குறைத்துக் கொண்டன. தங்கள் செலாவணிகளை வரம்புக்குட்படுத்தியதன் மூலமாகத்தான் அவை செலாவணி மதிப்பைக் காத்துக்கொண்டன, தங்களின் தங்கச் சேம வைப்புகளையும் கூட காத்துக் கொண்டன.

ஆகவே, சேமவைப்பு என்ற ஒன்று இருப்பது தங்க திட்டத்துக்கு எவ்வகையிலும் வலுச்சேர்ப்பதாய் இருக்க முடியாது. மறுபுறம், சேமவைப்பு பிறந்த கதையை ஆராய்ந்து பார்ப்போமானால், அப்படி ஒன்று இருப்பது அத்திட்டத்தைப் பெரிதும் வலுக்குறைய செய்யக்கூடிய ஒன்றே ஆகும். அரசு தன் தங்க திட்டச் சேம வைப்பை எப்படி பெறுகிறது? வங்கிகள் செய்வதுபோல் வெளியீடுகளை குறைத்துக் கொள்வதென்னும் அதே வழியில் அரசு தன் சேம வைப்பை அதிகமாக்கிக் கொள்கிறதா? நேர்மாறானதே நடப்பு. இந்தியத் தங்க திட்டச் சேம வைப்பின் யாப்பு எவ்வளவுத் தனி விதமானது என்றால், அதில் சொத்துக்களும் (அதாவது சேம வைப்பும்) கடன் பொறுப்புகளும் (அதாவது ரூபாயும்) ஆபத்தான முறையில் ஒன்றிணைந்து உள்ளன. அதாவது ரூபாய்ச் செலாவணி அதிகரிக்காமல் சேமவைப்பு அதிகரிக்க முடியாது. சேம வைப்பானது ரூபாய் நாணயம் அடிப்பதில் பெறப்படும் லாபங்களைக் கொண்டு உருவாக்கப்படுவதுதான் இந்த ஆபத்தான நிலைமைக்குக் காரணம். இந்நிலையில் ரூபாய் நாணயமடித்தலை அதிகமாக்குவதன் தொடர் விளைவாக மட்டுமே சேம நிதியம் வளர முடியும் என்பது கண்கூடாய்த் தெரிகிறது. ரூபாய் நாணயம் அடித்தலில் என்ன லாபம் கிடைக்கும் என்பது ரூபாயின் அடக்க விலைக்கும் அதன் மாற்று மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டின் அளவைப் பொறுத்தது. ஏறத்தாழ நிலையாகவே இருக்கும் நாணயச் சாலைக் கட்டணங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், இந்நிலைமையில் ஆக முக்கியக் காரணி வெள்ளியின் விலைதான். சேம வைப்பின்

கணக்கில் வரவு வைப்பதற்கு லாபம் ஏதும் கிடைக்குமா என்பது ரூபாய்கள் ஆக்கப்பட வேண்டிய வெள்ளிக்குத் தரப்படும் விலையைப் பொறுத்தது.[1]

திரு. எம்.எல். ரெட்டிகாருவுக்கு விடையளிக்கும் விதத்தில் பின்வரும் அறிக்கை அவையில் முன்வைக்கப்பட்டது:

கொள்முதல் செய்யப்பட்ட வெள்ளியின் சராசரி அடக்க விலையைக் காட்டும் அறிக்கை -

ஆண்டு	அரச நாணயச்சாலை திட்ட அவுன்சுக்கு சராசரி அடக்க விலை	இந்தியத் துறை அலுவலகம் திட்ட அவுன்சுக்கு சராசரி அடக்க விலை	நிதியாண்டு
	பெ.	பெ.	
1893	365/16	கொள்முதல் இல்லை	1893-94
94	291/4	,, ,,	1894-95
95	303/8	,, ,,	1895-96
96	305/16	,, ,,	1896-97
97	277/8	,, ,,	1897-98
98	271/4	,, ,,	1898-99
99	271/2	28	1899-1900
1900	281/4	29	1900-01
01	2715/16	கொள்முதல் இல்லை	1901-02
02	245/16	22.80	1902-03
03	2311/16	27.19	1903-04
04	261/2	27.14	1904-05
05	277/16	29.74	1905-06
06	311/18	31.59	1906-07
07	303/16	31.27	1907-08
08	247/16	கொள்முதல் இல்லை	1908-09
09	2311/16	,, ,,	1909-10
10	247/8	,, ,,	1910-11
11	2413/16	,, ,,	1911-12
12	2715/16	28.71	1912-13
13	281/16	28.71	1913-14
14	245/16	கொள்முதல் இல்லை	1914-15
15	241/4	33.96	1915-16
16	305/8	33.96	1916-17
17	4715/16	48.20	1917-18
18	495/8	52.04	1919-20
19	507/8	பால்டுவின் சுரங்கங்களிலிருந்தும் பெர்த் நாணயச்சாலைகளிலிருந்தும் தனி விலைக்குக் கொள்முதல்	1920-21

சேம வைப்பானது அதன் மூலத் தோற்றத்தின் தன்மையினால் ஒரு தீமை ஆகிறது என்பது மட்டுமல்ல. அதன் ஆவணத் தன்மையை கருத்தில் கொள்ளும்போது சேம வைப்பானது நெருக்கடி நேரத்தில் முற்றமுழுக்க நம்பத்தக்கது என்று சொல்வதற்கில்லை. சேமவைப்பை அரசு முதலீடு செய்வதன் நோக்கம், அந்த முதலீட்டின் வடிவமான பிணையங்களிலிருந்து கிடைக்கும் வட்டியைச் சேர்த்து அதனைக் கூடுதலாக்குவதற்குத் துணைபுரிவதுதான் என்பதில் ஐயமில்லை. அரசாங்கத்தைக் குறைகூறும் விமர்சகர்கள் **பெரிய** சேம வைப்பாகவும், அதே போது **உலோகச்** சேம வைப்பாகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால் சேம வைப்பின் மூலத் தோற்றத்தைக் கருத்தில் கொண்டால் இவ்விரு கோரிக்கைகளும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை என்பதை அவர்கள் உணருவதில்லை. சேம வைப்பு பெரியதாய் இருக்க வேண்டுமானால், அது முதலீடு செய்யப்பட்டாக வேண்டும். பார்க்கப்போனால், சேம வைப்பு முதலீடு செய்யப்படவில்லை - என்றால், வருத்தப்பட வேண்டிய அளவிற்கு அற்பசொற்பமானதாகவே இருந்திருக்கும்.[1] ஆனால் இவ்வகையான சேமவைப்பில் ஆபத்து ஒன்றுமில்லையா?

இப்படிப்பட்டதொரு சேம வைப்பில் அடங்கியுள்ள ஆபத்தின் வழியை ஜெவோன்ஸ் பின்வருமாறு நன்றாகச் சுட்டிக்காட்டினார்:[2]

(முன்பக்க அடிக்குறிப்பு)

1. சட்டப்பேரவை விவாதங்கள், பாகம் II, எண். 3, 1921 செப்டம்பர் 10, பக்கம். 181.

வெள்ளியின் விலை டு.சனிஞ. அல்லது கீனிநுனிடுனி என்ற முறையில் அமைந்தது என்ற தகவல் இல்லாத நிலையில், அரசுச் செயலர் வெள்ளிக்குக் கொடுக்க வேண்டியிருந்த விலை அரசு நாணயசாலையின் ஆட்சியர் கொடுத்ததைக் காட்டிலும் அதிகம் என்று சொல்வது கடினம்.

---

1. 1900-1 முதல் 1920 -21 முடிய நாணயமடித்தல் இலாபமாகப் பெறப்பட்டுத் தங்க நியமச் சேம வைப்பில் வரவு வைக்கப்பட்ட தொகை பவுண்டு 28,573,606 மட்டுமே. அதேகாலத்தில் வட்டியைக் கொண்டும் உண்டியற் கழிவைக் கொண்டும் கிடைத்தது பவுண்டு 13,306,847; அதாவது நாணயமடித்தலால் கிடைத்த லாபத்தில் கிட்டத்தட்ட பாதியளவு. பார்க்கவும்: கணக்கீடுகளும் மதிப்பீடுகளும், 1921-22. 1921 ஆம் ஆண்டின் ஆணை எண். 1517, பக்கம். 20.

2. பணம், பக்கம் 227.

''.... நல்ல அரசு நிதியங்களும் நல்ல உண்டியல்களும் எப்போதுமே ஏதேனும் ஒரு விலைக்கு விற்கத்தக்கனவாய் இருக்கும் என்று சொல்லலாம். இவ்வகைப்பட்ட வலுவான சேம வைப்புடன் ஒரு வங்கிநிறுவனம் எப்போதுமே அவற்றின் கடன் தீர்வுத் திறத்தைக் காத்து வரக்கூடும். ஆனால் சமுதாயத்தைப் பொறுத்தவரை நோயைக்காட்டிலும் இந்த மருந்து மோசமாய் இருந்து விடக்கூடும். சேமவைப்பை வலுக்கட்டாயத்தின் பேரில் விற்பது பணச்சந்தையின் தோற்றுவிக்கும் குழப்பமானது பணக்கொடுப்பை நிறுத்திவைப்பதைக் காட்டிலும் மோசமான ஊறு விளைவிக்கக்கூடும்.....''

இதே முறையில் மாற்றுவிகித நெருக்கடி நேரிடும் நேரத்தில் தங்கமாக மாற்றப்படுவதற்கென சந்தையில் இடப்படும் பிணையங்களின் மதிப்பிலான ஒரு சரிவு சேம வைப்பில் வட்டியால் வரும் அதிகரிப்பைத் துடைத்தெறிந்துவிடாது என்று யாரால் சொல்ல முடியும்? எப்படியாயினும், பிணையங்களின் முழுமதிப்பும் ஈடேற்றம் செய்யப்படுவதாகக் கொண்டால், மீட்சிக்குரிய ஈடேற்றம் செய்யப்படுவதாகக் கொண்டால், மீட்சிக்குரிய சந்தர்ப்பம் வரும் போது சேம வைப்பில் ''மூழ்கப்'' போகும் ரூபாய்களின் தொகை அந்த ரூபாய்கள் திருப்பி வாங்கப்படும் விலையைப் பொறுத்தது. ரூபாயின் வீழ்ச்சி சிறிதாய் இருந்தால், செலவாணியில் சிறு பகுதியை மட்டும் ஓய்வு பெறச்செய்வதற்கு அது போதுமானதாய் இருக்கும்; அதன் மதிப்பை மீட்டுக் கொடுக்க அதனால் முடியாதற்போகலாம்; 1920 இல் நடந்தது இதுவே. இதனால் பெரியசேம வைப்பாகத் தோன்றக்கூடியது மிகவும் போதாக்குறையதாக முடியக்கூடும். ஆனால், கட்டியெழுப்பக்கூடிய சேமவைப்பின் ஒப்பீட்டுப் பருமன் தொடர்பான பார்வைகள் ஒருபுறம் இருக்க, அறவே அசட்டை செய்யப்பட்டுவிட்டதாகத் தோன்றும் செய்தி என்னவென்றால், **சேமவைப்புகளைக் கட்டியெழுப்பும் நிகழ்முறை செலாவணியை அதிகப்படுத்தும் நிகழ்முறையை நேரடியாகவே அவசியப்படுத்துகிறது.** ரூபாய்களை நாணயமாக்குவதன் வழியாக அல்லாமல் தங்க நியமச்சேம வைப்பைக் கட்டியெழுப்ப முடியாது என்ற உண்மையை சேம்பர்லைன் ஆணையம் அறிந்திருந்தது. பார்க்கப் போனால், தங்கச் செலாவணி வேண்டுமென விரும்பக்கூடியவர்கள் ஒன்றை நினைவிற் கொள்ளும்படி அது எச்சரிக்கையிட்டது. அதாவது தங்கம் ''மற்றபடி நாணயமடிக்கவேண்டிய புதிய ரூபாய்களின்'' இடத்துக்கு வருமானால், ''புதிய நாணயமடித்ததிலிருந்து பெறப்பட்டிருக்கக்கூடிய லாபத்தின் அளவுக்குத் தங்க திட்டச் சேம வைப்பின் வலிமையைக் குறைப்பதே விளைவாகும்.[1]

''தங்க நியமச் சேமவைப்பின் இயல்பான வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய ''ஒரு கொள்கையைப் பரிந்துரை செய்திடாமல், குழுவானது ரூபாய் நாணயமடிக்க அரசை அனுமதித்தது. ஆனால் இப்படியொரு சேமவைப்பில் ஆபத்து ஒன்று மில்லையா? ஒரு சேமவைப்பு பிற்பாடு எந்தத் தீமையைத் தணிக்கு மென்று எண்ணப் படுகிறதோ அதே தீமையைத் தோற்றுவிக்கும்போது அந்தச் சேம தங்கதிட்ட சேம வைப்பை அதிமாக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறவர்கள் இப்படியொரு சேமவைப்பு இருப்பதில் அடங்கியுள்ள ஆபத்துகளை உணர்ந்திருப்பதாகச் சொல்வதிற் கில்லை. தங்க திட்ட சேம வைப்பு அப்போது பணவீக்கம் ஏதும் இருக்காது, ரூபாயின் வாங்குந்திறனில் வீழ்ச்சியேதும் இருக்காது, அதனை ஓய்வுபெறச்செய்யவேண்டிய தேவை இருக்காது.

தங்க திட்ட சேம வைப்பின் மூலத்தோற்றத்தைக் கணக்கில் கொள்ளும்போது அது ரூபாய்ச் செலாவணியின் கண்மூடித்தனமான வெளியீட்டுக்குத் தடையாகச் செயல்படுத்துவதற்கு பதில், அதற்கு நேரடிக் காரணமாகவே அமைந்துவிடுகிறது, மாற்றவொண்ணாச் செலாவணியின் விளைவுகளை எதிர்த்தடிக்காமல் அவற்றை முற்றச்செய்யக்கூடியதாகவே இருந்தது. இதற்குமேல் ஒரு குதர்க்கம் இருக்கமுடியாது. செலாவணியை வரம்புக்குட்படுத்தும் நோக்கத்திற் காகவே ஏற்படுத்தப்பட்ட தங்க திட்ட சேமவைப்பு போன்ற ஒரு பொறியவைவைச் செயல்படுத்தவேண்டுமானால் செலாவணியை அதிகப்படுத்தியாக வேண்டும் என்ற உண்மை இச்செலாவணி அமைப்பைப் பழுதாக்குமென்று வியக்க முற்படுகிறோம். மாற்று திட்டத்திற்கு ஆதரவாகப் பென்னம்பெரிய பெயர்களெல்லாம் துணைக்கழைக்கப்பட்டுள்ளன. திரு.லிண்ட்சே தமது திட்டத்திற்கு மறுக்கவொண்ணாத முன்னுதாரணங்கள் தேடிப்பிடிக்க அரும்பாடு

★ 1876 இல், திரு.லிண்ட்சே தமது **கல்கத்தா ரெவ்யூ** பக்கங்களில் முதன்முதலாகத் தமது திட்டத்தை விரித்துரைத்தபோது, அதற்கு இணையான எதையும் குறிப்பிடவேஇல்லை. 1892இல், **ரிக்கார்போவுன்** மாற்றுவிகிதப் பரிகாரம் என்ற நூலில் அவர் தமது திட்டத்திற்கு ஓர் ஆதரமாக ரிக்கார்டோவின் பெயரைக் குறிப்பிட்டார். ஆனால் என்றால் அவர் தமது திட்டத்திற்கு ஓர் ஆதரமாக ரிக்கார்டோவின் பெயரைக் குறிப்பிட்டார். ஆனால் 1898 இல் தன்நிலையை மாற்றிக்கொண்டார். எந்த அளவிற்கு என்றால் ரிக்கார்டோவின் பொற்பாலித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதற்காக புரோபினைக் குற்றஞ்சொன்னார். **எக்கனாமிக் ஜெர்னல்**, மேலது). அவர் ரிக்கார்டோவைத் தமக்குரிய ஆதாரம் என்ற நிலையிலிருந்து இறக்கிவிட்டதற்கு அநேகமாய் என்ன காரணமென்றால், ரிக்கார்டோ உலோக நியமத்தை

(தொடர்ச்சி பின்பக்கம்)

பட்டு முயன்ற பிறகு,[1] அயர்லாந்தியச் செலாவணி பற்றிய நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையே அதற்கு அடிப்படை என்று ஃபௌலர் குழுவிடம் சொல்லிக்கொண்டார்.[1] அங்கு அவர் உறுதியான அடிப்படையில் நின்றார். இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையிலான மாற்றுவிகிதத்தை நிலைப்படுத்துவதற்காக அயர்லாந்து வங்கி இங்கிலாந்து வங்கியில் வரவுக்கணக்கு தொடங்கி, லண்டனில் நிர்ணய விலைக்குப் பிணையங்கள் விற்கவேண்டும் என்றும் கூட இக்குழு பரிந்துரை செய்தது. மாற்று திட்டமானது லண்டனில் உள்ள தங்கச் சேமவைப்பைச் சார்துள்ளவரை, மாற்றுவிகிதம் பற்றிய அயர்லாந்தியக் குழுவின் திட்டத்தை லிண்ட்சே அப்படியே விசுவாசத்துடன் பாத்தெழுதினார் என்றுதான் கூறியாக வேண்டும். ஆனால் குழுவின் உயிர்நாடியான பரிந்துரைக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அறவே அலட்சியப்படுத்திவிட்டார். இப்பரிந்துரையில் கூறப்பட்டதாவது:[2] **''ஆனால் அதே நேரத்தில் அயர்லாந்தில் தாள் செலாவணியின் மிகை வெளியீட்டைக் குறைப்பதன் மூலம் அதன் மதிப்புக்குறைவை சரிசெய்ய அது (அயர்லாந்து வங்கி) உறுதியளிக்கவில்லையென்றால் இந்தப்பரிகார முறையினால் முன்மொழியப்பட்டுள்ள நன்மைகள் எல்லாம் அதிகப் பயன்**

(முன்பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்து எழுதினார் என்று பலரும் அறுதியிட்டு சொல்கின்றனர். **சிக்கனமும் பாதுகாப்பும் நிறைந்த செலாவணிக்கான முன்மொழிவுகள்** என்று அவர் கொடுத்த தலைப்பிலிருந்தே இப்படிச்சொல்கின்றனர். இந்த **முன்மொழிவுகள்** நூலிலிருந்து பின்வரும் பகுதியை எடுத்துக்காட்டுவது பொருத்தமாய் இருக்கும் : ''அண்மையில் புவியின் பிரச்சினைகள் குறித்து நடைபெற்ற விவாதத்தின்போது, ஒரு செலாவணி குறைவற்றதாக இருக்கவேண்டுமானால் எந்நிலையிலும் மாறாத மதிப்புடையதாய் இருத்தல்வேண்டும் என்று ஓரளவு நியாயமாகவே வாதிடப்பட்டது. ஆனால் நம்முடைய செலாவணியானது வங்கிக்கட்டுப்பாட்டு மசோதாவினால் இத்தகைய ஒன்றாகிவிட்டது என்றும் சொல்லப்பட்டது. ஏனென்றால் அந்த மசோதாவின் மூலமாக நாம் தங்கத்தையும் வெள்ளியையும் நமது பணத்தின் நியமம் என்ற நிலையிருந்து விவேகமாக உதறிவிட்டோம். இந்தக் கருத்தை ஆதரித்தவர்கள் எதைக் காணவில்லையென்றால், இப்படிப்பட்ட ஒரு செலாவணி மாறக்கூடியதாய் இருப்பதற்கு பதில், மிகப்பெரிய மாறுபாடுகளுக்கு உட்பட்டதாகும் என்பதையே. அந்த அளவின் வழியாக அதன் மதிப்பையும் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்வதாகும். ஒரு நியமம் இல்லையேல் செலாவணியானது அதை வெளியீடுபவர்களின் அறியாமையினால் அல்லது நலன்களினால் ஏற்படும்படியான எல்லா ஏற்றஇறக்கங்களுக்கும் உள்ளாகும்.''

---

1. ஆற்றல் வாய்ந்த ஆவணமாகிய இவ்வறிக்கையை புவியின் அறிக்கை சற்றே மங்கச் செய்துவிட்டது. இரு அறிக்கைகளிலும் அடங்கியிருப்பது ஒரே கோட்பாடுதான் என்றாலும் முன்னது1826 வரை அச்சிடப்படாததால் இந்நிலை. பார்க்கவும்: பிரபுக்கள் சபை ஆவணம் 48, ஆண்டு 1826.

இல்லாதவையாகவும், மிகவும் வரம்புக்குட்பட்ட காலத்துக்கே நீடிப்பவையாகவும் இருந்துவிடும்.'' பார்க்கப்போனால், வெளியீட்டை வரம்புக்குட்படுத்துவதற்கு எவ்வளவு அழுத்தம் தரப்பட்டதென்றால், அயர்லாந்திய செலாவணிச் சீர்திருத்தம் தொடர்பாக மக்களவையில் தீர்மானம் கொண்டுவந்த பார்னெல் மேற்சொன்னக் குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்படவில்லையென வருந்திய போது,[1] அவருக்குப் பதிலளித்துப் பேசிய தார்ண்டன் சுட்டிக் காட்டினார்: குழுவிதித்த உயிராதார நிபந்தனையை மதிக்காமல் இருக்கும்வரை அயர்லாந்தியச்செலாவணியை நிலைப்படுத்த எதுவும் உதவாது. மாற்றுவிகிதங்களை முளையடித்து நிறுத்தியதிலான அண்மைக்கால அனுபவம் அந்த உயிராதார நிபந்தனையின் முக்கியத்துவத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மாற்று விகிதத்தை உள்மதிப்புடன் கூடவே செலாவணியின் வெளிமதிப்பும் குறைந்துபோவதைத் தடுப்பதற்கான ஒரு வழியே ஆகும். முளையடித்து நிறுத்துவது செலாவணியின் வெளிமதிப்பை அதன் உள்மதிப்பிலிருந்து இவ்விதம் விலக்கிப்பிரிப்பது எப்படி என்பது நோக்கற்பாலது.[2] நிர்ணயித்த விலைக்கு உள்நாட்டுச் செலாவணியைக் கொடுத்து அயல்நாட்டுச் செலாவணியை வாங்குவதன் மூலம் அயல்நாட்டுச் சரக்குகளைக் கொள்முதல் செய்வதற்கு இடமளிப்பதே முளையடித்து நிறுத்துவதன் முதன்மையான விளைவு. இந்த நிர்ணய விலையானது இரு செலாவணிகளின் பொதுவான வாங்குந்திறன் குறித்த நிகர்நிலையால் நிர்ணயிக்கப்படும்போது இருப்பதைக் காட்டிலும் கூடுதலாகும். குறைந்த விலைக்குப்பெறப்பட்ட அயல் நாட்டு செலாவணியைக் கொண்டு மக்கள் அயல்நாட்டுச்சரக்குகளை வாங்குவதற்கு வாய்ப்பளிப்பதன் மூலம் இந்த முளையடித்தலானது மேலும் உயர்த்துகிறது. ஆகவே மாற்றுவிகிதம் நிலையாத இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் இரு நாடுகளிலும் விலைவாசிகளின் நிறுத்தியிருப்பதன்று. அது இப்படியே தொடருமா என்பது உள்நாட்டுச் விலைகளில் ஏற்படும் அசைவியக்கயங்களைப் பொறுத்தது. முளையடித்து நிறுத்தியதால் அயல்நாட்டு விலைகளில் ஏற்பட்ட உயர்வைக்காட்டிலும் உள்நாட்டு விலைகள் கூடுதலாக, உயர்ந்தால், இந்தப் பொறியமைவு முறிவுற்றே தீரும். இந்தக்கண்ணோட்டத்தில் தான், செலாவணி வெளியீட்டுக்கு வரம்பு விதிப்பது தொடர்பாக

---

1. பார்க்கவும். ஹன்சார்டு நாடாளுமன்ற விவாதங்கள், பாகம் XIV, பக்கம் 7591

2. பார்க்கவும்: டி.இ. கிரிகோரியின் இரத்தினச் சுருக்கமான கூற்று, **அயற்செலாவணிகள்,** பக்கம் 85.

மாற்றுவிகிதம் பற்றிய அயர்லாந்தியக்குழு விதித்த நிபந்தனை உயிராதாரத் தன்மையுடயதெனக் கருதப்படவேண்டும். அந்த நிபந்தனையை ஒழுகத்தவறுவதன் மூலம் இந்தியச் செலாவணியானது அயர்லாந்தியக் குழுவின் அந்த அறிக்கையில் மிகச்சிறப்பானது எதுவோ அதனுடன் முரண்படுகிறது.

திரு.லிண்ட்சே தனது மாற்று திட்டத்தை ஏற்படுத்துகையில் செலாவணியை வரம்புக்குட்படுத்தும் பிரச்சினையின்பால் கிஞ்சித்தும் கவனம் செலுத்தவில்லை என்பதற்குப் பெரிதும் காரணம் என்னவென்றால், ஒரு புதிய செலாவணி அமைப்பை உருவாக்கியவர் என்ற முறையில் அவர் பெரும்புகழ் பெற்ற போதிலும், ஒரு செலாவணியின் மதிப்பு தொடர்பான கோட்பாட்டைச் சிறிதும் அறியதவராகவே இருந்தார். அவரும்சரி, 90களில் இந்திய மாற்றுவிகித இடர்களுக்குப் பரிகாரம் காண்பதற்காகத் தங்கள் சமார்த்தியத்தை பயன்படுத்தித் திட்டங்கள் வகுத்த பற்பல செலாவணி வணிகர்களும் சரி[1], மாற்றுவிகிதத்தை நிலைப்படுத்துதல் என்பது அடிப்படையில் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்து வதன் மூலம் அதன் வாங்குந்திறனை நிலைப்படுத்தும் பிரச்சினையே ஆகும் என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. [2]நீண்ட காலக் கண்ணோட்டத்தில் ஒரு செலாவணியின் வாங்குந்திறனே இறுதியாகப் பார்த்தால் அதன் மாற்று மதிப்பை ஆளும என்ற உண்மையைத் தங்கமாற்று திட்டம் கண்டுகொள்வதில்லை. மாற்று விகிதத்தை நிலைப்படுத்தி, வாங்குந்திறன்பற்றிய பிரச்சினையை எப்படியோ போகட்டும் என, விடுவதே அதன் நோக்கம். உண்மைக் கொள்கை என்பது செலாவணியின் வாங்குந்திறனை நிலைப்படுத்தி, மாற்றுவிகிதத்தை எப்படியோ போகட்டும் என விடுவதாக இருக்க வேண்டும். சேம்பர்லைன் ஆணையமானது மாற்று திட்டத்தை இந்தக் கோணத்தில் கருதிப் பார்த்திருக்குமானால் அதனை ஒரு பழுதற்ற திட்டம் என்று அழைத்திருக்கமுடியாது. அடிப்படைகளில் இத்திட்டம் அதற்கு நேர்மாறாகவே இருந்தது.

இப்போது, மாற்று திட்டத்தின் இந்தப் பலவீனம் குறித்து ஒருவருக்கு இன்னமும் நம்பிக்கை வரவில்லை என்றால், அதன்

1. பார்க்கவும் : அத்தியாயம் IV.

2. பார்க்கவும்: பௌலவர் குழுவிடம் திரு. லிண்ட்சே வழங்கிய சாட்சியம், வினா 4,190-95 மாற்று

நிலைத்தன்மையை ஆராய்கையில் திட்டம் முறிவுற்ற சந்தர்ப்பங்களை மட்டுமே நாம் எடுத்துக்கொண்டோம் என்று அவர் சொல்லக் கூடும். இப்படிப்பட்ட பரிசீலனை முறையற்றது எனக்கருதி அவர் இப்படிச்சொல்லக்கூடும்: நிலைத்தன்மை காக்கப்பெற்ற ஆண்டுகள் குறித்து என்ன சொல்வது? 1901 முதல் 1907 முடிய, அல்லது 1909 முதல் 1914 முடிய ரூபாயின் தங்க மதிப்பைக் காத்துவந்த ஒரு செலாவணி அமைப்புக்கு ஆதரவாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லையா? இது பொருத்தமான கேள்விதான் இந்தக்கேள்விக்கு அடிநாதமாக இருக்கும் நிலைப்பாடு மிகவும் வலுவானதென்று கருதப்படுகிறது. இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் மாற்று திட்டத்தின் எதிராளிகளைப் பார்த்து, இது ஒரு நிலையான திட்டம் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் அதன் தங்கமதிப்பை காத்துக் கொள்ளத் தவறியதாகக் காட்டுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.[1]

இந்நிலைப்பாடின் செல்லுபடித்தன்மை உண்மைபோல் தோன்றக்கூடிய அனுமானங்களைப் பொறுத்ததாகும். இந்த அவமானங்கள் மிகப்பரவலாய் நிலவுகின்றன. இதனால்தான் இது வரை மாற்று திட்டத்துக்கு எதிராக எடுத்துரைக்கப்பட்ட வாதம் முழுப் பயன் தரவேண்டுமானால், இந்த அனுபவங்கள் பயனற்றவை என்பது முழுமையாக வெளிப்படுத்தவேண்டும். ஒரு செலாவணியின் மதிப்பில் தங்கம் போன்ற குறிப்பிட் ஒரு சரக்கின் கணக்கில் வீழ்ச்சியைத் தோற்றுவிக்கவில்லையென்றால் பொதுவாகச் சரக்குகள் என்ற கணக்கில் எந்தமிகையும் ஏற்படவில்லை என்று பொருள். பொதுவாகப் பண்டங்களுடனான ஒப்பீட்டில் செலாவணியின் மதிப்பில் ஒரு உள்ளங்களுக்கே கூட விளங்காத ஒரு காலம் இருந்தது.[2]

குறிப்பாகச் சொன்னால், புலியன் அறிக்கை மீதான விவாதத்தின் போது நிலைமை இதுதான். இன்னும் சொல்லப்போனால் இந்தக் கருத்தாக்கம் செல்லாது என்றுகூட உயர்நிலையில் இருப்பவர்கள் தீர்ப்புச் சொன்னார்கள்.[3] குறியீட்டு எண்கள் என்ற ஏற்பாடு

---

1. போடுவெல், ''இந்தியாவுக்கு ஒரு தங்கச் செலாவணி,'' **எக்கனாமிக் ஜெர்னல் 1911: இந்தியாவில் விலையுயர்வு குறித்து விசாரணை அறிக்கை**, 1914, பக்கம் 94.

2. கேசில்ரீக் பிரபு நியமத்தை ''ஒரு மதிப்புணர்வு'' என்று வரையறுத்து இலக்கணப் படுத்தியதை புலியன் விவாதங்களின்போது கேனிங் தூற்றியதற்கு குறித்து அவருக்குள்ள அறியாமையைத்தான் காரணமாகச் சொல்லவேண்டும்.

3. **சிக்கனமும் பாதுகப்பும் நிறைந்த செலாவணிக்கான முன்மொழிவுகள்** என்பதில் ரிக்கார்டோ சொல்கிறார்: ''நாம் ஒரு செலாவணியின் மதிப்பை ஒரு செலாவணியின் மதிப்பை மேற்கூறிய சோதனையால் நிர்ணயிப்பது முடியாத காரியம் என்று தெளிவாய்த் தெரிகிறது.''

இல்லாத நிலையில், உருமாதிரியான ஒரு பண்டத்தை, மதிப்புக் குறைவை எடுத்துச்சொல்லும் சுருக்கமான முறையில் இப்படி எளிதில் நம்பிக்கை வைத்ததைப் பொருட்படுத்தவேண்டி இருக்க வில்லை. ஆனால், இன்று இக்கருத்து எவ்வித அடிப்படையும் அற்ற தாகும். இப்போது, செலாவணியின் மதிப்பில் மாற்றம் ஏற்பட் டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், பொதுவாகச் சரக்குகளின் விலைகள். சரக்கின் விலையும் மாறியுள்ளது என்று காட்டப்படத் தேவையில்லை. தங்கம்போன்ற ஒரே ஒரு சரக்கை மதிப்புக்குறைவின் அளவையாகக் கொள்வது ஏன்? தங்கத்தின் மதிப்புக்குறைவு ஏனைய எல்லாச் சரக்குகளின் கணக்கிலும் ஒரு செலாவணியின் மதிப்புக் குறைவுக்குத் துல்லியமான அளவையாக இருக்குமானால் என்றாலும் அனுமதிக்காகவே இருக்கும். ஆனால் நிலைமை இதுவன்று. உள்நாட்டுப் போர்க்காலத்தில் பச்சை நோட்டு கள் குறித்து ஐக்கிய அரசிற்கு ஏற்பட்ட அனுபவம் குறித்துப் பேரா சிரியர் டபிள்யூசி மிட்செல் கூறுகிறார்.[1]

> ''இந்த அளவுக்குத் கவனம் ஈர்த்த தங்க விலையிலான ஏற்ற இறக்கங்கள் சரக்குகளின் விலைகளிலான தீவிர ஏற்ற இறக் கங்களைக் காட்டிலும் மிகவும் மட்டாகவே இருந்தன. தங்க விலைகூறல்கள் எப்போதும் சரக்கு விலைகளிலான மாற்றங் கள் அளாவிய களத்தின் வெளிவரம்புகளுக்குள் அடங்கி இருந்தன. போர்க்காலத்தில் சரக்குகளின் திரளைக் காட்டிலும் துரிதமாகவே தங்கமானது சென்றபோது, பெரும்பாலான சரக்குகள் பின்தொடர்ந்து சென்றன என்றாலும், இன்னும்கூட மெதுவாகவே சென்றன. சரக்குகள் அசையாது நின்றன, அல்லது இன்னும்கூட மெதுவாகப் பின்தொடர்ந்தன. சரக்கு விலைகள் இப்படி இன்னுங்கூட மந்தமாய் அசைவு போருக்குப் பின் மேலும் தெளிவாய் வெளிப்படுகிறது. விலைகளின் வீழ்ச்சி விரைவாக நடைபெறவில்லை. சரக்குகளின் விலைவாசி பத்தாண்டடு காலம் தங்கத்தின் விலைவாசியைக் காட்டிலும் உயர்வாகவே நீடித்திருந்தது என்பது இதைவிடவும் வேடிக்கை யான செய்தி''.

மாற்று திட்டத்தை ஏற்றுநடப்பவர்கள் நடத்த முற்படும் சோதனை தவறானது என்பதையும், அது ஒரு செலாவணியின்

மதிப்பைத் துல்லியமாகக் காட்டாது என்பதையும் இதிலிருந்து அறியலாம். மாற்று திட்டத்திற்கு இந்தச் சோதனையைப் பிரயோகிக்கும்படி வற்புறுத்திக் கேட்டிருப்பவர்கள் தங்கக்கணக்கில் ஒரு செலாவணி அடையும் **குறிப்பான** மதிப்புக்குறைவுக்கும் சரக்குகளின் கணக்கில் ஏற்படும் அதன் **பொதுவான** மதிப்புக் குறைவுக்கும் இடையில் வேறுபடுத்தி காண்பதற்குச் சரிவர அக்கறை காட்டி பேசியிருக்கமாட்டார்கள்.[1] இடைநிறுத்தக் காலத்தில் இங்கிலாந்து வங்கிக்கு ஏற்பட்ட அனுபவமானது, ஒரு செலாவணி பொதுவான மதிப்புக்குறைவுக்கு உட்பட்டபோதிலும் குறிப்பான மதிப்புக்குரிய அறிகுறி ஏதும் காட்டாத நிகழ்வுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்:

அட்டவணை L

இங்கிலாந்து வங்கி நோட்டுகளின் மதிப்புக் குறைவு[1]

	இவற்றின் கணக்கில் வங்கி நோட்டுகளின் மதிப்புகளது சதவீதம்	
	1) தங்கம்	2) சரக்குகள்
1797	100.0	110
1798	100.0	118
1799	100.0	130
1800	107.0	141
1801	109.0	153
1802	...	119
1803	...	128
1804	103.0	122
1805	103.0	136
1806	...	133
1807	...	132
1808	...	149
1809	...	161
1810	...	164
1811	123.9	147
1812	130.2	148
1813	136.4	149
1814	124.4	153
1815	118.7	132
1816	102.9	109
1817	102.2	120
1818	104.6	13

1. பார்க்கவும்: பேராசிரியர் நிக்கல்சன் எழுதிய அரசியல் **பொருளாதாரக் கோட்பாடுகள்** (1897) பாகம் II, அத்தியாயம் XV, பத்தி4, மற்றும் எ.ஃப்எ . வாக்கர் எழுதிய **பணம்**, 1878, பக்கம் 387-91.

எவ்வகை மதிப்புக் குறைவு பெருந்தீங்கு என்பதை அடுத்த அத்தியாத்தில் விவாதிப்போம். இப்போதைக்கு இங்கிலாந்து வங்கியின் இந்த அனுபவத்தை இல்லாமலே பொதுவான மதிப்புக் குறைவு ஏற்படமுடியும் என்ற உண்மை பெறப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டால், மாற்று திட்டத்தன் ஆதரவாளர்கள் நீண்டகாலப் பகுதிகளில் ரூபாயானது குறிப்பான மதிப்புக் குறைவின் அறிகுறிகள் காட்டவில்லை என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்குக் காரணமே இல்லை. எந்நிலையிலும் மாற்றவொண்ணாததும் வெளியீட தொடர்பாக ஒழங்குபடுத்தப்படாததும் ஆகிய ஒரு வங்கி நோட்டு கிட்டத்தட்ட முப்பதாண்டு காலத்திற்குத் தன் நிகர் மதிப்பைக் காத்துக் கொண்டிருப்பதானது ரூபாயின் அனுபவம் மாற்று திட்டத்திற்கு ஆதரவான சான்றாவதைக் காட்டிலும் மிக அதிகமாகவே இடைநிறுத்த அமைப்புக்கு ஆதரவான சான்றாகக்கூடும். பின்னதைக் காட்டிலும் முன்னதில் பெரிய அதிசயம் உள்ளது. ஏனெனில் மதிப்புக் குறைவுக்கு உள்ளாகிக் கொண்டிருந்த (இங்கிலாந்திலிருந்து இது தெரிகிறது) என்ற உண்மை ஒரு புறம் இருக்கா, ஒருவிதமான மாறுந் தகைமையில் கொண்டிருந்த நம்பிக்கையால் ரூபாய் மதிப்பு நிலைநிறுத்தப்பட்டது. இந்த நம்பிக்கை மிகக் குறைவானதே, மிகத் தொலைவானதே என்றாலும் இங்கிலாந்து வங்கி நோட்டுகளைப் பொறுத்தவரை அதற்கு இடமேயில்லை. ஆனால் இடைநிறுத்தக் காலத்தின் செலாவணி அமைப்பு நீண்டநெடுங் காலத்திற்குக்

---

1. ஹாட்ரீ எழுதிய **கடன்-செலாவணியும் செலாவணியும்**, பக்கம் 269, தங்கக்கணக்கில் நோட்டுகளின் மதிப்புகள் குறித்து பேராசிரியர் ஃபாக்ஸ்வெல் சொல்கிறார்: ''1808-09 வரை கட்டுப்பாட்டுக் காலத்தில் இங்கிலாந்து வங்கி நடந்து கொண்ட முறை குறித்துக்குறை சொல்வதற்கு அடிப்படையான ஆதாரம் ஏதுமில்லை என்பதை அவ்வங்கியை மிகக் கடுமையாகக் குறைகூறும் விமர்சர்களே ஏற்றுக்கொள்கிறார்கள். அதுவரை பார்க்கப் போனால், தாள்-செலாவணியின் மதிப்பில் உண்மையான குறைவு ஏதும்ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவுன்ஸ் ஒன்றுக்கு -4 என்ற விலை 1803-09 ஆண்டுகளுக்கு மாறாமல் இடம்பெறுகிறது. உண்மையில் இது ஒரு தன்னிச்சையான விலை, அயல்நாட்டுத் தங்கம்கொள்முதல் செய்வதெற்கென்று வங்கியே நிர்ணயித்த விலை.''

ஆன்ரெடஸிக்கான முன்னுரை, பக்கம் xvi 1810வுரை இங்கிலாந்து வங்கியின் மாற்றவெண்ணா நோட்டுகளில் குறிப்பான மதிப்புக்குறைவு ஏதும் ஏற்படவில்லை என்ற ஐயப்படாடு சிலருக்குஇருப்பதாகத் தெரிகிறது. இந்த உண்மைக்கு நேரடிச்சான்று தரக் கூடிய விவரங்கள் கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. ஆனால் சுற்றடிச்சான்று இருக்கவே செய்கிறது. தங்கத்தின் மீதான மதிப்புயர்வுதான் அப்போது மதிப்புக்குறைவை அளப்பதற்கு அறியப்பட்ட ஒரே வழிமுறையாக இருந்தது என்பதையும், ஹார்னரும் ரிக்கார்டோவும் மற்றவர்களும் இங்கிலாந்து வங்கியின் பகிரங்கப் பகைவர்களாக இருந்தார்கள் என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். இந்நிலையில் 1810க்கு முன்னர்

குறிப்பான மதிப்புக்குறைவைத் தோற்றுவிக்க எவர் ஒருவரும் வியந்து போற்றியதாகவே நியாயப்படுத்தியதாகவே தெரியவில்லை.

மதிப்புக் குறைவைத் தங்கக் கணக்கில் அளவிடும் இந்த வழிமுறை வேறோர் அனுமானத்திற்கு அடிப்படை ஆக்கப்படா விட்டால் ஒப்பளவில் தீங்கற்ற கருத்தே, ஆகும். ஒரு செலாவணி யின் பொதுவான மதிப்புக் குறைவும் குறிப்பான மதிப்புக்குறைவும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத நிகழ்வுகள் என்ற அந்த வேறோர் அனுமானம்தான் மாற்று திட்டத்தைத் தாங்கி நிற்கிறது. இதற்கு நேர்மாறாக, இங்கிலாந்து வங்கியின் இந்த அனுபவத்திலிருந்து மாற்று வட்டத்தின் ஆதரவாளர்கள் பெறவேண்டிய முக்கியப் படிப்பினை, மேற்சொன்ன மதிப்புக்குறைவுகளின் அசைவியக்கங் கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று விளக்கிக் காட்டு வதில்தான் அடங்கியுள்ளது. செலாவணியின் பொதுவான மதிப்புக் குறைவை, நடந்து முடிந்திருக்கும்போது அந்த மதிப்புக்குறைவு குறிப்பிட்ட வரம்பைத் தாண்டிச் செல்லுமானால், ஏனையவை மதிப்புக் குறைவு எந்த நேரத்திலும் நிகழலாம் என்ற கூற்று அந்தப் படிப்பினையைத் தொகுத்துச் செல்வதாக அமையக்கூடும். பொதுவான மதிப்புக்குறைவு குறிப்பிட்ட வரம்பைத் தாண்டிச் செல்லுமானால் குறிப்பான மதிப்புக்குறைவு உடனேயோ பிற்பாடோ நிகழ்கிறது. பொதுவான மதிப்புக் குறைவையெடுத்து குறிப்பான மதிப்புக்குறைவு நிகழ்வதற்குமுன் எவ்வளவு இடைக்காலம் ஆகும் என்பது வெவ்வேறு சரக்குகளை வெவ்வேறு தருணங்களில் தொடு கிறது. அவற்றுக்கான தேவையின் ஒப்பீடு வலிமையால் தீர் மானிக்கப்பட்டவாறு பொதுவான ஒழுங்கில் அவை வகிக்கும் இடத்திற்கேற்ப இது நிகழ்கிறது. செலாவணி நோக்கங்களுக்கோ தொழில்துறை நோக்கங்களுக்கோ தங்கத்திற்கு தேவை ஏதும் இல்லையென்றால் தங்கக் கணக்கில் செலாவணியின் மதிப்புக் குறைவு தாமதப்படலாம். அயல்நாட்டுப் பண அனுப்பீடுகளை செய்வதற்குத்தான் தங்கத்திற்கான தேவை முதலில் உணரப்படு கிறது. அங்குதான் குறிப்பான மதிப்புக் குறைவு முதன்மையாகத் தலையெடுக்கிறது. ஆனால் அங்கேயும் கூட அது தலையெடுக்கத் தேவையில்லை. ஏனென்றால், அயல்நாட்டவர் தயக்கமின்றி தங்கம் போல் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதே அளவுக்குச் சிறப்பான ஏனைய சரக்குகள் கிடைக்கின்றனவா, இல்லையா என்பதைப் பொறுத்தே அனைத்தும் அமைகிறது. இப்போது, இந்தியாவைப் பொறுத்தவரை குறிப்பான மதிப்புக்குறைவைவத் தள்ளிப்போடும்படியான இந்த மூன்று காரணிகளுமே ஏறத்தாழச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ரூபாயானது ஒரு முழுமையான சட்டச்செலாவணி ஆகும். தங்கத்தின் உதவியை நாடவேண்டிய கட்டாயம் இல்லாமலேயே ரூபாயால் செயலளவில் கடன்களைத் தீர்க்கமுடியும். இந்தியா போன்ற ஏழை நாட்டில் தங்கத்திற்கான தொழில்துறை வேண்டல் மிகப் பெரியதாக இருக்கமுடியாது.[1] ஆதலால் பொதுவாக மதிப்புக் குறைந்த ரூபாயானது நாட்டின் உள்வணிகத்தில் உடனடி மதிப்புக் குறைவின் அறிகுறிகள் காட்டுவதில்லை. அயல்நாட்டுக் கொடுப்புகளைப்

1. வெவ்வேறு நாடுகளில் தங்கத்தின் நுகர்வு தொடர்பான பின்வரும் அட்டவணை கருத்துக்குரியது:

★ தங்கத்தின் நுகர்வு தரமிக்க அவுன்ஸ் 85 ஷி. வீதம் மிலியன் கணக்கில் பவுன்ஸ் ஸ்டெர்லிங்

	1915	1916	1917	1918	1919	1920
தொழில்துறைக்கலைகள்						
ஐரோப்பா மற்றும் அமெரிக்கா	17.0	18.0	16.0	17.0	22.0	22.0
இந்தியா (அடுத்து வரும் மார்ச்சு 31 முடியவுள்ள ஆண்டு)	1.4	5.1	19.6	-3.3	27.7	5.1
சீனா	-1.7	2.6	2.6	0.04	11.5	-3.7
எகிப்து	-0.8	-0.2	-0.1	-0.0	-0.0	?
பணமாகக் கிடைக்கும் நிலுவை (வேறுபாடு)	80.5	68.0	48.2	64.9	13.8	46.6
உலகம்	96.4	93.5	86.3	79.0	75.0	70.0

★ இந்தப்புள்ளிவிவரங்கள் பொருளாதாரப் புள்ளிவிவரத் திறனாய்வு (Review of Economic Statistics)ஏட்டில் திரு. ஜோசப் கிட்சின் தந்திருப்பவை. முக்கியமாக பாகம்3, அண் 8, 1921 ஆகஸ்ட், பக்கம் 257, 1914க்கு முற்பட்ட புள்ளிவிவரங்கள் வேண்டுமானால், மேற்சொன்ன அட்டவணை, பக்கம் 258 பார்க்கவும்.

இயல்புக்கு மாறான 1917, 1919 ஆண்டுகளை விட்டு விட்டு, புள்ளிவிவரங்களை ஆள்வாரி அடிப்படையில் சுருக்கிப் பார்த்தால், இந்தியாவின் தங்க நுகர்வு குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைவானது என்று சொல்லியாகவேண்டும். மேலும், இந்தியாவிற்கான புள்ளிவிவரங்களில் தொழில்துறை நுகர்வும் அதேபோல் பணத்துறை நுகர்வும் அடங்கி இருப்பதையும் குறிப்பிடவேண்டும். இன்னும் சொல்வதென்றால் ஒப்பிட்டு ஆராயும்போது, இந்தியா தொடர்பாகவும் ஏனைய நாடுகள் தொடர்பாகவும் அலகாக எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவான சரக்குகளின் கணக்கில் தங்கத்தின் மதிப்பு இவ்வளவு அதிகமாய்க் குறைந்துபோகிற இந்தக்காலத்தில் அதன் உற்பத்தி குறையுமானால் அதற்காகக் கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. அதன் பயன்பாடு விரிவாக்கப்படுமானால் ஒரு வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகத்தான் இருக்கமுடியும். இந்தியாவில் தங்கத்தின் இறக்குமதியும் பயன்பாடும் அதிகரிக்குமெனில் அதுகுறித்து வருந்துவது அறிவுடைமை ஆகாது. தங்கத்தின் பயன்பாடு எவ்வளவு அதிகரிக்கிறதோ, அதன் உற்பத்தி எவ்வளவு குறைவாகிறதோ, இன்றுள்ள

பொறுத்தவரை இந்தியாவின் நிலைமை இதே அளவுக்கு வலுவானது. அபத்தமாக அனுமானம் செய்து கொள்ளப்படுவதுபோல் இந்தியாவுக்குச் சாதகமான வர்த்தக நிலுவை இருப்பதல்ல இதற்குக் காரணம். அயல்நாட்டவர் தங்கத்திற்கு மாற்றாக ஏற்றுக்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட சில அவசியப்பண்டங்கள் இந்தியாவிடம் இருப்பதுதான் உண்மையான காரணம்.[1] ரூபாயின் பொதுவான மதிப்புக்குறைவு முக்கியமாக இந்தியாவின் அயல்நாட்டு வர்த்தகத்தில் நுழையும் சரக்குகளை அளாவியிருக்கும்போதுதான் குறிப்பான மதிப்புக்குறைவு நிகழும். மதிப்புக்குறைவு அவற்றுக்குப் பரவுவது தவிர்க்கமுடியாத ஒன்று. சரியாவே இப்படிச் சொல்லப்பட்டுள்ளது.[2]

> ''ஒரு நவீனச் சமுதாயத்தில் வெவ்வேறு பண்டங்களின் விலைகளும் ஒரு முழுமையான ஒழுங்கமைப்பாக அமைகின்றன. இந்த ஒழுங்கமைப்பில் பல்வேறு உறுப்புகளும் நுட்பமான தொழில்-வணிக நிகழ்முறையின் மூலம் தொடர்ந்து ஒன்றுக்கொன்று சரி செய்யப்படுகின்றன. முக்கியப் பண்டங்களின் விலையில் ஏற்படும் எந்த எடுப்பான மாற்றமும் இந்த அமைப்பின் சமநிலையைக் கெடுக்கிறது. அந்தச் சமநிலையை மீட்பதற்காக ஏனைய பண்டங்களின் விலைகளை மறுபடியும் சரிக்கட்டும் தொடர்வரிசையான மாற்றங் களைத் தொழில் - வணிக நிகழ்முறைகள் உடனே முடுக்கிவிடுகின்றன.''

இந்தியாவைப் பொறுத்தவரை, உள்நாட்டு வர்த்தகத்துக்கான உற்பத்திக்கும் வெளிவர்த்தகத்திற்கான உற்பத்திக்கும் உள்ள இடைத்தொடர்பு ஏனைய நாடுகளில் காணப்படுவதுபோல் அவ்வளவு நிலைமையில் இதனால் ஏற்படக்கூடிய ஒரே வேறுபாடு பொதுவான மதிப்புகுறைவின் வேகத்தை மட்டுப்படுத்துவதுதான். அதாவது அயல்வர்த்தகச் சரக்குகளை இது அவ்வளவு விரைவில் பாதிப்பதில்லை. ஆனால் இறுதியில் அதன் விளைவு அவற்றின் விலையை உயர்த்தவிடாமல் இதனால் தடுத்திட முடியாது. அவற்றின் விலை உயர்ந்துவிட்டால் அவ்வளவுதான் அவசியம் என்றாலும் அவற்றை அயல்நாட்டவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். தங்கத்திற்கான வேண்டல் உருவாகி, செலாவணியின் குறிப்பான மதிப்புக்குறைவில் போய் முடிந்தாகவேண்டும். நிலைமையை

---

1. பேராசிரியர் மார்ஷல் சாட்சியம், I.C.C 1898, வினா 11, 793,

2. மிட்சல், மேலது, பக்கம் 258.

இப்படி எடுத்துரைப்பது இங்கிலாந்து வங்கியின் அனுபவத்திற்கும் அதேபோல் இந்தியாவின் அனுபவத்திற்கும் நெருக்கமாய் ஒத்துப் போகிறது. இங்கிலாந்து வங்கியைப் பொறுத்தவரை ''மாபெரும் தீங்கு,'' அதாவது வங்கி நோட்டுகளின் குறிப்பான மதிப்புக் குறைவு (இதுகுறித்து ஹார்னர் எவ்வளவோ குறைப்பட்டுக்கொள் கிறார்) 1809இல், 13 ஆண்டுகள் கழித்துத் தலைதூக்கியது. இதே போல், இந்தியாவைப் பொறுத்தவரை, குறிப்பான மதிப்புக்குறைவு வெவ்வேறு கால இடைவெளிகள் விட்டுத் தலைதூக்கும் போக்கினைக் காண்கிறோம். குறிப்பான மதிப்புக் குறைவைத் தவிர்க்கும் நோக்கத் திற்காகவும் கூட, செலாவணியின் பொதுவான மதிப்புக் குறைவில் கவனம் செலுத்துவது அவசியம் என்பது அதிலிருந்து முழுமையாக வெளிப்படுகிறது.

கோட்பாடுகளும் அதேபோல் வரலாறும் தாங்கி நிறுத்து கின்ற இந்த உண்மைகளைக் கருத்தில்கொள்ளும்போது சற்றே நீண்ட காலங்களுக்கு ரூபாய் தன் தங்க மதிப்பைக் காத்துக் கொண் டுள்ள நிகழ்வு எவர் ஒருவரையும் அச்சுறுத்தி, மாற்று திட்டம் ஒரு நிலையான திட்டம் என்று ஏற்கும் நிலைக்குத் தள்ளிவிடத் தேவையில்லை. சொல்லப்போனால், அந்த உண்மையான ஏற்றுக் கொள்வது மேலே கூறியிருப்பதன் மதிப்பை இம்மியாகவும் குறைத் திடாது. ஏனென்றால் ஒரு செலாவணியின் பொதுவான மதிப்புக் குறைவு நாலாவட்டத்தில் தங்கக் கணக்கில் அதன் குறிப்பான மதிப்புக் குறைவைக் கொண்டுவந்து சேர்க்கும் என்பதே நம் நிலை. ஆகவே, ரூபாயின் குறிப்பான மதிப்புக்குறைவு நிகழவில்லை என்று நம்மிடம் காட்டப்பட்டாலும் கூட, கணக்கலகின் பொதுவான மதிப்புக் குறைவுக்குத் தடைபோடுவதுதான் மிகச்சிறந்த செலா வணி அமைப்பு என்ற கருத்திலிருந்து நாம் பின்வாங்கத் தேவை யில்லை. மாற்று திட்டம் இப்படிப்பட்ட கட்டுப்படுத்தும் தாக்கம் எதற்கும் வகைசெய்வதில்லை. பார்க்கப்போனால் மதிப்புக்குறைவைக் கட்டுப் படுத்தும் கருவியாகிய அதன் தங்கச் சேம வைப்பே கருவி யாகிய அதன் தங்கச்சேம வைப்பே இத்தகைய மதிப்புக் குறைவிற்கு நேரடிக் காரணம் ஆகிறது. இப்போதைக்குக் குறிப்பான மதிப்புக் குறைவு இல்லையென்பது ஒரு குறிப்பிடத்தக்க, கருத்துக்குரிய நிகழ்வு, அவ்வளவுதான், அதில் மாற்று திட்டத்தின் பாதுகாப்பான தன்மைக்குச் சான்று தேடுவதென்பது. ஒரு முட்டாளின் சொர்க்கத்தில் வாழ முற்படுகிறவர்களுக்கெல்லாம் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு விரைவிலோ பிற்பாடோ நம்மை ஆளாக்கிக் கொள்வதாகும்.

இயல் 7

பொன் திட்டத்திற்குத் திரும்பி வருதல்

செலாவணி மாற்றுத் திட்டம் என்பது ரூபாயின் பொன் சமன்பாட்டைத் தக்கவைத்திருக்கும் திறன்பெற்றது என்று அதன் சார்பாகக் கூறப்படுவதை நாம் ஆராய்ந்தோம். அந்தத் தரத்தின் தகுதிகளையும், தகுதியின்மையையும் தீர்மானிப்பதற்கு இந்த அளவுகோலைத்தான் சேம்பர்லின் குழு வரையறுத்துள்ளது. ஆனால், இந்த அளவுகோல் போதுமானது என்பது வாதத்திற்கெல்லாம் அப்பாற்பட்டதா? வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால் ரூபா யானது அதனுடைய தங்க சமன்பாட்டைத் தக்க வைத்துக் கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம்; பெரும்பாலும் அது செய்வதில்லை என்றபோதிலும், அவ்வாறு செய்வதாகவே வைத்துக் கொள்வோம்; அதை வைத்துமட்டும் ஒரு நல்ல நிதி அமைப்பு முறைக்கான நோக்கங்கள் அதற்குக் கீழ்ப்பட்டது என்று ஆகுமா?

செலாவணி மாற்றுத் திட்டத்தில் பணம் என்பது அது வாங்கும் தங்கத்தின் அளவுக்கு மட்டுமே முக்கியத்துவமுடையது என்ற போதிலும் ''நாணய அச்சிடல் முறையானது, அதைத் தங்கத்திற்குச் சமமாக வைத்திருக்கும்படி சாதுர்யமாகச் செய்யப்படுகிறது'' இந்த வழியில்தான் இந்த முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.[1] ஆனால் பணத்தைப் பயன்படுத்துபவர்களை எது உண்மையில் கவலை கொள்ளச் செய்கிறதென்றால், அந்தப் பணம், தங்கத்திற்கு எந்தளவு மதிப் புடையது என்பது அல்ல: ஆனால், அந்தப்பணம் பொதுவாக எந்தளவு பொருட்களுக்கு (அதில் தங்கம் என்பது மிகச் சிறிய பங்குதான்) மதிப்புடையதாகும் என்பதே. ஆகையால் அனைத்து இடங்களிலும் பொதுவாகச் சரக்குகளுக்குச் சமதையாகப் பணத்தை நிலையாக வைத்திருக்க முயற்சிக்கப் படுகிறது; அது முறையானதே; ஏனென்றால், மக்களின் நலனுக்கு மிகவும் தேவைப்படுவது மதிப்புமிக்க உலோகங்கள் அல்ல; சரக்குகள், சேவைகள் என்பவைதாம் நேரடிப் பயன்பாட்டுக்குத் தேவையாக உள்ளன. தங்கத்தின் மதிப்புக்கு

சமதையாகப் பணத்தை ஸ்திரமாக வைத்திருக்கவேண்டுமென்பது தங்க வியாபாரிகளுக்கு மட்டுமே முக்கியத்துவமுடையதாகும்; ஆனால் சரக்குகள் சம்பந்தப் பட்ட மட்டில், பணத்தின் நிலையான தன்மை தங்கம் விற்பனை செய்பவர்கள் உள்ளிட்டுப் பொதுவாக அனை வரையும் பாதிக்கிறது. 1919 ஆம் ஆண்டில் இந்தியச் செலாவணி குழு குழுவுக்கு (Indian Currency Committee) அளித்த தனது சாட்சியத்தின் பொழுது பேராசிரியர் கீன்ஸ் (Prof. Keynes) கூடப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:[1]

> ''இந்திய விலைகள், எந்தவொரு குறிப்பிட்ட உலோகம் அல்லது குறிப்பிட்ட அன்னியக் காகித நாணயம் குறித்து நிலை யாக இருப்பதைவிடச் சரக்குகள் சம்பந்தமாக நிலையாக இருப் பதையே நான் எப்பொழுதும் இலக்காகக் கொண்டுள்ளேன். அது இந்தியாவிற்கு மகத்தான முக்கியத்துவமுடையதாக எனக்குத் தோன்றுகிறது.''

சொல்லப்போனால், அவர் ஆதரித்த உயர் செலாவணித் தீர்வு என்பது இந்த லட்சியத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டதா என்பதைப் புரிந்துகொள்வது சற்று சிரமமாக இருக்கும். உயர் செலாவணி என்பது ஒரு பயனற்றதிட்டமாகும்; எவ்வா றென்றால், அது, ரூபாயின் வாங்கும் சக்திக்கு ஏற்றாற்போன்று இல்லை. அரசாங்கம் தலையிட்டு விலைகளை நிர்ணயம் செய்வதால், உயர்செலாவணிக்கு அவர் விவரித்த நல்ல நோக்கங்கள் அதற்கு இருக்கிறதா என்று கூறமுடியாது. நடப்பிலுள்ள விலைமட்டம் அதை எவ்வகையிலும் பாதிக்காது; உயர் செலாவணி என்பது எதிர் கால விலைவாசி உயர்வைத் தடுக்காது. அது, விலைகளைக் கணக்கிடுவதற்கான அடிப்படையை மட்டுமே மாற்றமுடியும். கடந்த காலத்தில் பழைய அடிப்படைக்கோட்டிலிருந்து நிச்ச யிக்கப்பட்ட விலைகள் சுலபமாக மாறியதைப் போல, எதிர் காலவிலைகளும் புதியஉயர் அடிப்படைக் கோட்டிலிருந்து சுலப மாக மாறமுடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இந்த அம்சத்தைக் கீன்ஸ் கவனியாது விட்டு விட்டார்; அதாவது, செலாவணி என்பது விலைமட்டத்தின் குறியீட்டுப் புள்ளி மட் டுமே என்பதையும், அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் விலைமட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருப் பதையும் அவர் காணத்தவறிவிட்டார்; அதேபோன்று அது தாங்கும்

கேள்வி 2,690

வரைபடம் - 4

1873 - 93-ல் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் விலைவாசியும், கூலிகளும்



திராணியற்ற மற்றொரு பெயரை அதற்குச் சூட்டுவதன் மூலம் அதைச் செய்யமுடியாதென்பதையும் அவர் காணத் தவறிவிட்டார்; இது, 1920 ஆம் ஆண்டில் ரூபாயின் சட்டப்படியான மதிப்பு 2 ஷில்லிங் (தங்கம்) ஸ்டெர்லிங் என்று நிச்சயிக்கப்பட்டு, ஆனால், நடை முறையில், அது 1 ஷில்லிங் 4 டாலர் / ஸ்டெர்லிங் அளவுக்குக் கூட இல்லாமல் போய், அதன்விளைவாக ரூபாயின் செலாவணி என்பது, அதனுடைய வாங்கும் சக்தியினால் தீர்மானிக்கப்பட்ட அளவுக்கு மூழ்கிப் போனதிலிருந்து நிரூபிக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பிரச்சினை நீங்கலாகச் செலாவணி மதிப்புத்தரத்தின் திறமையான ஆதரவாளர் கூறியது நம்மிடம் உள்ளது: அதாவது, பணப்புழக்க முறையின் உண்மையான தகுதி என்பது, பொதுவாகச் சரக்குகள் சம்பந்தமாக அதன் மதிப்பளவுகோல் நிலையானதாக வைத்திருப்ப தில் அடங்கியுள்ளது.

ஒரு காகித நாணயமுறையைத் தீர்மானிப்பதற்கு இதுதான் சரியான வழிமுறை என்றால், நாம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும்; 1893 ஆம் ஆண்டில் நாணயசாலை மூடப்பட்டதிலிருந்து இந்தியாவில் விலைகள் எந்த வழியில் சென்றன என்று நாம் கேட்க வேண்டும். இது, ஒரு அடிப்படையான கேள்வி என்றபோதிலும் செலாவணி மாற்றுத்திட்ட மதிப்பின் நல்ல தன்மையைப் பாராட்டும் பலரில், ஒருவர்கூட இதில் கவனம் செலுத்தவில்லை. இந்தக் கண்ணோட்டத்தில், செலாவணி மாற்றுத் திட்டம் குறித்துப் பேராசிரியர் கேம்மரோ (Prof.Kemmerer) அல்லது திரு.சிர்ராஸ் (Mr.Shirras) என்ன கூறுகிறார்கள் என்பதை அவர்களுடைய புத்தகங்களிலிருந்து ஒருவர் தேடுவது வீணாகத்தானிருக்கும்.

இந்தியக் காகிதநர்ணயம் குறித்துச் சேம்பர்லின் குழுவோ அல்லது ஸ்மித் குழுவோ இந்தியாவில் விலைகள் குறித்த பிரச் சினையை ஆராய, ஒருபோதும் சிரமப்பட்டதில்லை[1]; இருந்தும் அந்தக் கணிப்பு அடிப்படையில் திருப்தியில்லாமல், அந்தத் தரத்தின் சரியான தன்மையையோ அல்லது வேறெவற்றையோ குறித்த மதிப்பின் தன்மை குறித்து, எவரொருவரும் எவ்வாறு கருத்து தெரிவிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்வது உண்மை யிலேயே சிரமமானதாகும்.

விலைகள் என்ற நிலைப்பாட்டிலிருந்து செலாவணி மாற்றுத் திட்டத்தர மதிப்பைக் காணும்பொழுது அதுவே மற்றொரு

விஷயத்திற்கான முக்கியமான காரணமாகவும் ஆகிறது; ஆதாவது, இந்திய நாணய சாலைகள், வெள்ளியில் நாணயப்புழக்கத்தை ஏன் நிறுத்தியதென்றால், ரூபாயின் மதிப்பு குறைந்துகொண்டே போய் விலைவாசி அதிகரிப்பில் போய் முடிந்தது என்ற முக்கியமானதொரு காரணமும் அதில் அடங்கியுள்ளது.[1] ஆகையால், நாணயசாலைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் விலைவாசி வீழ்ச்சி அடைந்திருக்கவேண்டும்; பேராசிரியர் பிஷரின் (Prof.Fisher)[2] சொற்றொடர்படிக் கூறுவதென்றால், பணச் சேமிப்பிடத்திற்கும் வெள்ளி, தங்கம் சேமிப்பிடத்திற்குமிடையிலான குழாய்த் தொடர்பு என்பது, நாணயசாலைகள் மூடப் பட்டதால் துண்டித்துப் போயிற்று அல்லது மூடப்பட்டுவிட்டது என்பதோடு, தங்க சேமிப்பிடத்திலிருந்து வெள்ளியானது பண சேமிப்பு இடத்திற்குப் போவதையும் தடுத்து விட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாணயசாலை மூடப்பட்டபின், ஏற்கனவே புதிதாக அச்சிடப்பட்ட வெள்ளி நாண யங்கள் பணமாக மாறிப் புழக்கத் திலிருந்த ரூபாய்களின் வாங்கும் சக்தியைக் குறைக்கவில்லை. இவ்வாறிருக்கும்பொழுது, நாணய சாலை மூடப்பட்டதன் விளைவு எவ்வாறு ஏமாற்றமளிப்பதாக இருந் திருக்கமுடியும்? விலைகள் என்ற நிலைப்பாட்டிலிருந்து காண்போமே யானால், ரூபாயானது, முன் எப்பொழுதும் இருந்திராத அளவுக்கு ஒரு பிரச்சினையாகியுள்ளது. நாணயசாலை மூடப்பட்டதிலிருந்து, இந்தியாவில் விலைவாசி உயர்வானது, நாட்டின் வரலாற்றில் முற்றிலும் கண்டிராததாகும். சொல்லப்போனால், இந்தியாவில் நாணயசாலைகள் மூடப்படுவதற்கு முன்பு, வெள்ளி-தங்க சேமிப் பிற்கும், ரூபாய்-பணப் புழக்கச் சேமிப்பிற்குமிடையிலான குழாய்த் தொடர்பு சரியாக இருந்த சமயத்திலிருந்த விலைவாசி உயர்வென்பது, நாணயசாலை மூடப்பட்டுக் குழாய்த்தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்புள்ள விலைவாசி உயர்வோடு ஒப்பிடும்பொழுது மிக அற்ப மாகும். எனவே, விலைகள் என்ற நிலைப்பாட்டிலிருந்து காணும் பொழுது, நாணயசாலை மூடப்பட்டதானது நல்லதாக இருப் பதை விட, சாபக்கேடாகவே முடிந்துள்ளது; விலைவாசி மட்டம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே போய் இந்தியாவில் வாழ்க்கை என்பது சகிக்கமுடியாததான நிலையில் உண்மையில் அது சாபக் கேடாகவே இருந்தது. விலைவாசி உயர்வினால் இந்திய மக்கள் அடைந்த துன்ப, துயரத்தைப்போல், வேறெந்த மக்களும் அடைந்ததில்லை. யுத்த காலத்தின்பொழுது விலைவாசி மட்டம்

---

1. மேலே குறித்தது பார்க்க 3 ஆவது பகுதி

2. ரூபாயின் வாங்கும் சக்தி; 1911, பக்கம் 128

என்பது பயங்கரமான அளவுக்கு உயர்ந்தது; உணவு, உடைவாங்க வழியற்றுப்போய் ஆண்களும், பெண்களுமாக ஏராளமானோர் தற்கொலை செய்துகொண்ட செய்தி பத்திரிக்கைகளில் வந்தவண்ணமாக இருந்தன. அவ்வாறு தற்கொலை செய்தவர்கள் எண்ணிக்கை ஏதோ அற்பசொற்பமல்ல. இந்தியாவில் நாணயசாலைகள் மூடப்படாமல், அது முற்றிலும் வெள்ளித் தரத்தையே கொண்டிருக்கும் நாடாக இருந்திருக்குமானால், இங்கே விலைவாசி உயர்வென்பது மிக அதிகமானதாக இருந்திருக்கும் என்று வாதாடப்படலாம். இக்கருத்திற்கு ஆதரவாகப் பல விஷயங்களைக் கூறலாம் என்பதில் ஐயமில்லை. சர்வதேச அளவில் கைவிடப்பட்ட வெள்ளியானது ஒரு மதிப்புத்தரமாகச் செயல்படத் தகுதியற்றது என்பது முற்றிலும் உண்மையே. அந்த அளவுக்கு வெறும் வெள்ளித்தரம் என்பதைவிடச் செலாவணித் தரமதிப்பு என்பது மேம்பட்டதுதான். ஆனால், அது தங்கநாணயத் தரமதிப்புத்தரத்தைப் போன்று அந்தளவு நல்லதாயிருக்குமா?

உண்மையான செலாவணி விகிதங்களுக்கான விளக்கம் என்பதை, வாங்கும்சக்தி சமன்பாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கூறும்பொழுது, இந்தக் கேள்விக்கு 'ஆம்' என்று கூறும்படி ஒருவர் இட்டுச் செல்லப்படலாம். ஏனென்றால், தங்கத்தின் விலையும் ரூபாயின் விலையும் சமமாக இருப்பதால், ரூபாயின் தங்க மதிப்பு பராமரிக்கப்படுகிறதென்று வாதிடப்படலாம்.[1] செலாவணித் தரத்தின் நோக்கங்கள் இதை நோக்கித்தான் உள்ளன என்றும் அதைச் செய்துள்ளன என்றும் கூறமுடியும்; எவ்வாறென்றால், தங்க-தர சேமிப்பு ஒருபோதும் குறையவில்லை என்பதற்கு இந்தியாவிற்கு வெளியே உள்ள அதே அளவிலேயே இந்தியாவிற்குள்ளும் பொதுவான விலைவாசி உள்ளது என்பது அதற்கு ஒரு சான்றாகும். இவை போன்ற அனுபவஅறிவுக் கருத்துப்படிச் செலாவணி மதிப்புத்தரம் என்பது ஒருதங்க நாணயமதிப்புத்தரத்தைப்போன்று அந்தளவு நல்லது என்று கருதப்படலாம். இந்திய விலைகள், தங்கவிலைகளைவிட அதிகம் இல்லையென்றால், ஏன் அவற்றின் விலைகள் அதிகமாயிருக்கின்றன, இந்திய விலைகளை குறைந்த மட்டத்திலேயே வைத்திருப்பது நன்மை தருவதாக இருக்காதா என்று எவரும் கேட்கக்கூடும். ஆனால், நாம்

1. பேராசிரியர் கெம்மெரோ, அல்லது பேராசிரியர் கீன்ஸோ செலாவணி மதிப்புத் தாக்கத்தாகாவாக இவ்வாறு கூறவில்லை என்பதை கணக்கிலெடுத்துக் கொள்ள

இந்தக்கேள்வியை எழுப்பப்போவதில்லை. இந்திய விலைகள் தங்கத்தின்விலை அளவுக்கு மட்டும் உயர்ந்திருந்தால் நாம் திருப்தியடைவோம். தற்பொழுது இந்தியவிலைகள் தங்கத்தின் விலை உயர்ந்துள்ள அளவுக்கு மட்டும்தான் உயர்ந்துள்ளனவா? இந்தியாவில் விலைகள், தங்கத்தின் விலை அளவுக்கு மட்டும் உயர்ந்திருக்கவில்லை, ஆனால் தங்கத்தின் விலைகளை விட அதிகமாக உயர்ந்துள்ளது என்ற வியப்புக்குரிய நிகழ்ச்சிப் போக்கையே இங்கே கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் வெளிப்படுத்துகின்றது. செலாவணி தரமதிப்பின் பயனுறுதன்மையைச் சோதிப்பதற்காக இந்திய விலைகளைத் தங்கத்தின் விலையோடு ஒப்பிடும்பொழுது, நாம் யுத்த காலத்தைக் கட்டாயம் கணக்கிடக்கூடாது; காரணம் என்னவென்றால், பெரும் பாலான நாடுகள், மதிப்புத்தரமாகத் தங்கத்தை வைத்திருந்ததை யுத்தகாலத்தில் கைவிட்டுவிட்டன. அந்தக் காலக்கட்டத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டாலுங்கூட, அது, இந்த முடிவைப் பொருள்ரீதியில் பாதிக்கவில்லை; இந்தியா, யுத்தத்தில் ஈடுபட்ட நாடு என்றில்லையென்றபோதிலுங்கூட, இந்தியாவில் விலைவாசிகள், யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளின் விலைவாசிகளை விட மிகக் குறைந்தது இல்லை; இந்த நாடுகளில் பல, பணவீக்க காகித நாணயத்தைக் கொண்டிருந்தன. ஒரு குறுகிய காலகட்டம் தவிர இதர காலகட்டங்களில் அவை அமெரிக்காவின் தங்க விலைகளை விட நிச்சயம் அதிகமாயிருந்தன.

செலாவணித் தரமதிப்பிற்கு ஆதரவாகச் செய்யப்பட்ட ஊகமானது, விபரங்களுக்கு பொருத்தமாயில்லை என்பது தெளிவு. இங்கிலாந்தின் பொதுவான விலைவாசி மட்டத்தைவிட இந்திய விலைகளின் ஸ்தல அதிகரிப்பு இருந்தது என்பது கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவேண்டியது ஆகும்; செலாவணித் தரமதிப்பின் கோளாறுகளை மிகைப்படுத்தாத பேராசிரியர் கீன்ஸ்கூடத் தன்னுடைய சுயேச்சையான பரிசீலனை மூலம் பின்வரும் முடிவிற்கு வருகிறார்.:[1]

> ''சௌவர்பெக்கின் (Sowerbeck) இங்கிலாந்திற்கான விலைவாசிக் குறியீட்டு எண்ணுடன் ஒப்பிட்டுக் காணும்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றம், **இதர இடங்களில் நடைபெற்ற மாற்றங்களை விட மிக அதிகமாக** இருக்கின்றது.''

1. ''இந்தியாவில் சமீபத்திய பொருளாதார நிகழ்ச்சிகள் '' தி எக்னாமிக் ஜர்னல், மார்ச், 1909 பக்கம் 54 - அழுத்தம் மூலக் கட்டுரையில் இல்லை.

''இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியும் மொத்தத்தில் அதிகம் என்றபோதிலும், இந்திய மக்கள் பிரதானமாகத் தங்கள் சொந்த உற்பத்திப்பொருட்களை வைத்தே வாழ்கிறார்கள். இத்தகைய உற்பத்திப் பொருட்களில் ஒரு பெரும்பகுதி, உற்பத்தி முதல் நுகர்வுவரை, ஒரு மிகச்சிறு பிராந்தியத்திற்குள்ளேயே அடங்கிக்கிடக்கின்றது. அவர்கள் அன்னிய வர்த்தகம், தங்கம் மற்றும் தங்க செலாவணிகளுடன் ஒரு தொலைதூரத் தொடர்பை மட்டுமே கொண்டிருக்கின்றனர். சொல்லப்போனால், காலப் போக்கில், நாட்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்த கத்தில் மதிப்புகளின் சமனநிலையில் ஏற்படக்கூடிய கணிச மான பாதிப்பு, இத்தகைய ஸ்தலவிலைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்; ஆனால், ஒன்றிரண்டு விதிவிலக்குகள் தவிர, இந்தியாவைப் போன்ற நாட்டில் இத்தகைய பாதிப்புகளின் தாக்கங்கள் மெதுவாகத்தான் பரவும் என்பதுடன், அவ்வாறு பரவும்பொழுது தங்களுடைய பாதிப்பு தாக்கங்களின் பெரும் பகுதியை இழந்து விடும்''.

இவ்விரண்டுக்குமிடையிலான தொடர்பு பலமற்ற நிலை யில் இருக்கும் காரணத்தால் சர்வதேச வர்த்தகத்தில் நுழையும் இத்தகைய இந்தியப் பொருட்களின் விலைகள், அவ்வாறில்லாத பொருட்களின் விலைகளுக்கேற்ப ஏறத்தாழ அதே அளவிலேயே இருக்கும் என்று எப்பொழுதும் கூறமுடியாது. தவிரவும், இந்த பலமற்ற தொடர்பானது, உண்மையான செலாவணி விகிதம் சுட்டிக்காட்டக் கூடிய மட்டத்தைவிட ஒரு காகிதநாணயத்தின் பொதுவான வாங்கும் சக்தியை பாதிப்பிற்கு ஆளாவதையும் அனுமதிக்கிறது; சர்வதேச வர்த்தகத்தில் பெருமளவில் நுழையும் இந்திய சரக்குகளின் விலைகள் ஸ்தல செல்வாக்குகளினால் நிச்சயிக்கப்படவில்லை என்பதும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவேண்டும். கோதுமை, தோல்கள், அரிசி மற்றும் எண்ணெய் வித்துகள் போன்ற இத்தகைய ஏற்றுமதிப் பொருட்கள் சர்வதேச சரக்குகளாகும்; அவை, உள்நாட்டுச் சரக்கு விலைகள் மற்றும் சேவைகளிலிருந்து உருவாகும் தாக்கத்திற்கு முற்றிலும் ஆட்பட்டவை அல்ல. யுத்தம் போன்ற வழக்கத்திற்கு மாறான நிகழ்வுப்போக்குகள் நீங்கலாக இவ்விரு சூழ்நிலைமை களின் ஒட்டுமொத்த விளைவு என்பது வர்த்தகத்திற்குரிய மற்றும் வர்த்தகத்திற்குட்படாத பொருட்களின் விலைகள் ஒன்றுக்கொன்று அனுசரணையாகப் போவதை எதிர்க்கும்.[1]

இது உண்மையானால் செலாவணி தரமதிப்பின் பராமரிப்பு என்பது ரூபாய்க்கும், தங்கத்திற்குமிடையில் வாங்கும் சக்தியின் சமனநிலையைக் கொண்டிருக்கிறது என்றபோதிலும் அது **அனைத்து** சரக்குகள் சம்பந்தமாகவும் இவ்விரு பணப்புழக்கங்களுக்கிடையே வாங்கும் சக்தியின் சமனநிலை ஆகாது. தேவைப்படுவதெல்லாம் சர்வதேச வர்த்தகத்தில் நுழைந்துள்ள இத்தகைய பொருட்களை வாங்குவதற்கான ரூபாயின் வாங்கும் சக்தியானது தங்கத்திற்கு சமமாக இருக்கவேண்டும் என்பதாகும்; அவ்வாறிருந்தால்தான் தங்க கையிருப்பைக் காலிசெய்யவேண்டிய தேவைஅடிக்கடி எழாது. தங்கக் இருப்பைப் பாதுகாத்து வைத்திருப்பதன் ஒரே பொருள் என்ன வென்றால் சர்வதேச வர்த்தகப்பொருட்கள் சம்பந்தப்பட்டமட்டில் சமத்துவமான விலைகள் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

ரூபாயானது அதனுடைய தங்கமதிப்பைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளவேண்டும் என்று விளக்கும்பொழுது அது ஒட்டு மொத்தத்தில் இந்தியவிலைகள், தங்கவிலைகளைவிட அதிகமாகி, அதன்மூலம் செலாவணி தர மதிப்பென்பது தங்க நாணய தர மதிப்பை அந்தளவு நல்லது என்ற அனுபவ அறிவுக் கண்ணோட் டத்தை மாசுபடுத்தி விடக்கூடும் என்ற சாத்தியப்பாட்டைத் தடுக்க வில்லை.

விலைவாசிகளில் ஏற்படும் அனைத்து மாற்றங்களும் ஏறக்குறையத் தனிநபரின் நலனை பாதிக்கிறது என்பது சுட்டிக்காட்டப் படவேண்டும்.[1] எனினும், நவீன பொருளாதார அமைப்பின் பொதுவான நெகிழ்ச்சித் தன்மையானது, அதனுடைய மூலதனம் மற்றும் உழைப்பை, விருப்பமானதைச் செய்யும்திறன், புதியதைக் கண்டு பிடிக்கும் அறிவாற்றல், தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகர் களின் அறிவுத்திறன் போன்றவற்றின் மூலம் விலைகளின் வழக்க மான மற்றும் தற்காலிக ஏற்ற இறக்கப் போக்குகளை சமாளித்துக் கொள்ளும். ஆனால் விலைவாசி மட்டத்தில் ஒரு மாற்றம் என்பது பொதுவானதாகவும், ஒரே திசைவழியிலேயே விடாப்பிடியாகச் செல்லுவதாகவும் இருந்தால், அது வேறுவிதமான விஷயமாகும். விலைவாசி ஏற்ற இறக்கம் தற்காலிகமானது மட்டுமே, பழைய வழக்கமான நிலைமைக்குத் திரும்பிவிடும் என்ற எதிர்ப்பார்ப்பின்

1. இதைத்தொடர்ந்து மேயோஸ்மித்தினுடைய ''விலைவாசி மாற்றங்களும் தனிநபர் நலனும்'' என்ற கட்டுரையின் சுருக்கப்பட்ட கருத்தாகும். இது 1900 வருட மார்ச் மாத ''அரசியல் விஞ்ஞானக் காலாண்டிதழ்'' என்ற ஏட்டின் 14-17 பக்கங்களில் வெளியானது.

அடிப்படையிலான ஏற்பாடுகள், தொடர்ந்து பயனற்றதாகவே போகும். விலைவாசி ஏற்ற இறக்கத்தினால் ஏற்படும் பாதிப்பை மற்றொன்றி லிருந்து கிடைக்கும் லாபத்தைக் கொண்டு சரிக்கட்ட முடியாது. சுருங்கக்கூறின், ஒரே திசைவழியிலான இத்தகைய விலைவாசி ஏற்ற இறக்கம் என்பது, சாதாரண வர்த்தக விவேகத்தை பாதிக்கவே செய்யும் என்பதுடன் எதிர் காலத்திற்கான அனைத்துத் திட்டங்களையும் பாழ்படுத்துவிடும்; இது எண்ணற்ற தடைகளையும் அல்லது இழப்பையும் ஏற்படுத்தி அந்த நபருடைய பொருளாதார நலன்என்பது அவருடைய கட்டுப் பாட்டைவிட்டு முற்றிலும் போய்விடும் என்றும், வாழ்க்கைக்கான போராட்டத்தில் விவேகம் என்பதோ, முன்கூட்டியே சிந்தித்தல் என்பதோ மற்றும் பிரயாசை என்பதோஎவ்விதப்பயனையும் தராது என்று பலமான, அதே சமயத்தில் அளவற்றபாதிப்பை ஏற்படுத்தி விடும். ஆனால், ஸ்திரத்தன்மை என்பதன் தீங்கான விளைவுகள் மிகப்பெரியவை; தான் செய்வதை நம்பும் பேராசிரியர் மார்ஷல் (Marshall) பொருளாதார வாழ்வின் நாணயமுறைக்குரிய அடித்தளங்களில் உரிமை பெறாத மாற்றங் களைச் செய்வதற்கெதிராகப் பொதுவான தப்பெண்ணம்நிலவுவது ஒரு ஆரோக்யமான தப்பெண்ணம் என்று கருதுகிறார்; இருந்துங் கூட, அதனுடைய மாறுந்தன்மையைக் குறையச் செய்வதன் மூலம் சமூகங்களின் பொருளாதார நலனைப் பாதுகாப்பது குறித்து ஏராளமாகச் செய்ய முடியுமென்று கருதுகிறார்.[1] 1896 ஆம் ஆண்டிலிருந்து தங்கத்திற்கு ஏற்பட்டதைப் போல மதிப்பின் தரம் குறைந்து கொண்டேவருவது ஒரு தீங்காகும். ஆனால், செலாவணித் தரத்தைப் போல தொடர்ந்து குறைந்துகொண்டேவரும் மதிப்பின்தரம், அதுவும் தங்கத்தின் தரத்தைவிட மிகஅதிகமாக குறைந்துகொண்டே போகும் மதிப்பின் தரத்தை ஒரு நல்ல மதிப்புத்தரம் என்று கூறமுடியுமா? வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், விலைவாசிகளை மிக அதிகம் அதிகரிக்கச் செய்யக்கூடிய மதிப்புத்தரத்தை ஒரு நல்ல மதிப்புத்தரம் என்று கூறமுடியுமா?

இந்த வெளிச்சத்தில் காணும்பொழுது ''இந்தியக் காகிதப்பணம் மற்றும் நிதி'' (Indian Currency and Finance) என்ற தன்னுடைய கட்டுரையில் பேராசிரியர் கீன்ஸ், செலாவணித் தரமதிப்பு என்பது எதிர்காலத்திற்கான லட்சியதரத்தின் ஒரு முக்கியமான அம்சத்தைக்

கொண்டிருக்கின்றது என்று கூறியிருப்பது விநோதமாக உள்ளது;[1] இந்தக் கண்ணோட்டத்தைப் பின்னர் சேம்பர்லின் கமிஷனும் ஆமோதித்துள்ளது. ஒரு பணப்புழக்க முறையைத் தீர்மானிப்பதற்குப் பொதுவாக சரக்குகள் சம்பந்தப்பட்டமட்டில், அதன் வாங்கும் சக்தியின் ஸ்திரத் தன்மைதான் அளவுகோல் என்றால், பொருளாதார மாணவர்களில் சிலர் மட்டுமே பேராசிரியர் கீன்ஸ் கூறும் கருத்தை ஏற்பார்கள். ஒருக்கால் 1920 ஆம் ஆண்டைய பேராசிரியர் கீன்ஸாக இருந்தால், அவரே தங்கச் செலாவணித் தரமதிப்பைவிடத் தங்க நாணயத் தரமதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பர்; ஏனென்றால், பின்னர் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களைவிட முன்னர் இருந்த விலைகளில் மாற்றங்கள் குறைவாக இருந்தன.

இச்சந்தர்ப்பத்தில், இந்தியா ஒரு தங்கநாணயமதிப்புத்தரம் கொண்டிருக்கக்கூடிய நாடு என்று பரவலாக உள்ள தவறான கருத்து குறித்துக் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது. ஏதாவது இரண்டு நாடுகள் ஒரே மதிப்புத்தரத்தைக் கொண்டுள்ளனவா என்பதைக் கண்டறியச் சிறந்த நடைமுறைச் சோதனை, அந்நாடுகளின் விலைவாசி மட்டங்களில் உள்ள ஏற்றஇறக்கங்கங்களின் தன்மையைக் கண்டறிவதில் உள்ளது என்பது ஏற்கப்படலாம். பேராசிரியர் மிச்செல் (Prof. Mitchel) பல்வேறு நாடுகளின் விலைவாசி மட்டங்களையும், டாலர் (Green back Period) காலகட்டத்தில் அமெரிக்க விலைவாசி மட்டத்தையும் மிக ஜாக்கிரதையாகவும், விவேகத்துடனும் செய்த சோதனை நம்பகமானது; அவர் கூறுகிறார்:[2]

> ''இரண்டு நாடுகள் ஒரே மாதிரியான நிதிஅமைப்பு முறையையும், ஒருவரோடொருவர் முக்கியமான வர்த்தக உறவுகளையும் கொண்டிருக்கும்போது அவர்களுடைய விலைவாசி- குறியீட்டெண் காண்பிப்பதுபோல் அவர்களுடைய விலைவாசி மட்டங்களின் ஏற்றஇறக்கம் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இந்த ஒருமித்த அம்சம் எந்தளவு பலமுடைய தென்றால், தேவையற்ற சரக்குகளின் பட்டியலிலிருந்து பெறப்பட்ட குறியீட்டு எண்களைக் கொண்டும், பல்வேறு வருடங்களின் உண்மையான விலைகளை அடிப்படையாகக் கொண்டதுமான விபரங்களை ஒன்றுசேர்த்து

1. மேலது, ப. 36

2. Gold Prices, and wages under Greenback Standard, 1908, p.27

வைத்தும் ஒப்பிட்டுப் பார்த்தால் கூட, இவ்விரு நாடுகளின் விலைவாசியில் ஒரேமாதிரியான ஏற்ற இறக்கங்களைக் காணலாம்.''

யுத்தத்திற்கு முன்பு, இங்கிலாந்து, தங்கநாணயத் தரமதிப்பைக் கொண்டிருந்த நாடு என்பதை நாம் இப்பொழுது அறிவோம்; அதேபோன்று, இந்தியா மற்றும் இங்கிலாந்தின் சமகால விலைவாசி ஏற்ற இறக்கங்களுக்கிடையே நெருக்கமான தொடர்பு இருந்ததில்லை யென்பதையும் நாம் அறிவோம். இதை வைத்துக்கொண்டு, இந்தியா ஒரு தங்கநாணயத்தரமதிப்பைக் கொண்டிருந்த நாடாக இருந்தது என்று கூறுவது மனமயக்கமேயாகும். மறுபுறத்தில், இந்தியா இன்னும் ஒரு தங்கநாணயத்தரமதிப்பைக் கொண்டிருக்கும்நாடாக ஆகவில்லை என்பதை அங்கீகரிப்பது நல்லது; இல்லையென்றால், தங்க நாணயத்தரமதிப்பு இருப்பதால்தான் இந்தியாவில் விலைவாசிகள் அதிகவிசேஷமாக அதிகரித்திருக்கின்றன என்று கூறிப் பேராசிரியர் பிஷர் செய்த அதே தவறை நாமும் செய்துவிடுவோம்;[1] உண்மையில் இந்தியாவில் விலைவாசி அதிகரிப்பு என்பது தங்கநாணயத் தரமதிப்பு இருந்ததால் அல்ல, தங்கநாணயத்தரமதிப்புஇல்லாததால் ஏற்பட்ட தாகும்.

இந்தியா எவ்வாறு தங்கநாணயத் தரமதிப்பு நாடாக முடியும்? தங்க நாணயத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம்தான் அதைச் செய்யமுடியும் என்பதே அதற்கான வெளிப்படையான பதிலாகும். தங்கநாணயம் இல்லாமல் ஒரு தங்கநாணயத்தரமதிப்பு இருக்க முடியாதென்று கூறும் கருத்து முற்றிலும் முட்டாள்தனமானதென்று பேராசிரியர் கீன்ஸ் ஏளனம் செய்கிறார்.[2] நாணயமும், மதிப்புத் தரமும் இரண்டு வித்தியாசமான விஷயங்கள் என்ற கருத்தை அவர் கொண்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. நிச்சயமாக அவர் கருத்து தவறானது. ஏனென்றால், ஒரு சமுதாயத்திற்கு ஒரு செலாவணி நாணயம், ஒரு மதிப்புத்தரம், அதனுடைய பொருளாதார வாழ்வைத் தொடர்ந்து கொண்டுசெல்ல மதிப்பு, சேமிப்பு போன்றவை தேவைப் படுகின்றன; இந்த மூன்று செயல்பாடுகளும் வெவ்வேறு இடைச் சாதனங்களைக் கொண்டு செய்துகொள்ளமுடியும் என்று வாதிடுவது

இயல்பாகவே தவறானதாகும். மறுபுறத்தில், பேராசிரியர் தவன்போர்ட் (Prof. Davenport) வலியுறுத்துவது:[1]

''பணத்தின் அனைத்து வெவ்வேறு வகையான பயன்பாடுகள் என்பவை வெவ்வேறு அம்சங்களேயாகும்; அல்லது இடைச் செயல்பாட்டை வலியுறுத்துவதாகும். நிறுத்தி வைக்கப்பட்ட தொகை என்பது இடைப்பட்டதின் நிறுத்தி வைக்கப்பட்ட தெகையாகும். ஆகையால், மீண்டும் பொதுவான இடைப்பட்டது எதுவானாலும் அது உண்மையில் மதிப்புத்தர அம்சமேயாகும். இதன் செயல் பாடுகள் இரண்டல்ல, ஆனால் ஒன்று என்பது தெளிவு; அத்துடன், இடைப்பட்டது என்பது வாங்கும் சக்தியின் ஒரு சேமிப்பு இடம்தான். பண்டமாற்றத்தின் இரண்டாவது பகுதி நிறுத்தி வைக்கப்படலாம். இடைப்பட்டது என்பது பொதுமைப் படுத்தப் பட்ட வாங்கும் சக்தியாகும். தாமதம் என்பது விசேஷ மாக இடைப்பட்ட செயல்பாடுகளுக்கு உள்ள உரிமைகளில் ஒன்றாகும்''.

இவ்வாறு, ரூபாய் என்பது காகிதநாணயமாக இருப்பதால் மதிப்பின் தரமாகவும் உள்ளது. இந்தியாவில் மதிப்பின் தர மாகத் தங்கத்தை வைக்க நாம் விரும்பினால், நாம் அதை இந்தியா வின் நாணயமுறைக்கும் புகுத்தவேண்டும். இந்திய நாணய முறையின் ஒருபகுதியாகத் தங்கத்தை ஆக்கினால் இந்தியா வின் விலைவாசி மட்டத்தில் என்ன வித்தியாசத்தை அது ஏற்படுத்தக்கூடும் என்று கேட்கப்படலாம். இந்தக் கேள்விக்கு விடை யளிக்கவேண்டுமென்றால், ரூபாய்ப் பணப்புழக்கத்தின் தன்மையை அப்பட்டமாகக் காட்டுவது அவசியம். ஒரு விஷயம் இப்பொழுது சம்மதிக்கப்படலாம்; அதாவது, ஒரு மதிப்புத் தரம் என்பது விரிவடையும்: அதைப்போன்றே, சுருங்கும் திறன் பெற்றிருக்க வேண்டும் என்பதே அது: அத்தகைய தன்மை பெற்ற மதிப்புத்தரம் என்பது சுலபமாக விரிவடையும் திறனைப் பெற் றிராத (இத்தகைய மோசடி. காகிதரூபாய் இதைச் செய்யும் திறன்பெற்றது.)[2] ஆனால், அது ஏற்றுமதி செய்யமுடியாது அல்லது உருக்கமுடியாது என்பதால் சுலபமாகச் சுருங்க முடியாது

1. மேலது, ப. 255 - 56.

2. இப்பகுதி முழுமையாக இல்லை.

அல்லது விரும்பும் பொழுதெல்லாம் மாற்ற இயலாது. ஏற்று மதி செய்யக்கூடிய பணத்துடன் ஒப்பிடும்பொழுது இத்தகைய பணத்தின் விளைவுகளை, மறைந்த மாண்புமிகு திரு.கோகலே ஒரு உரையில் சிறப்பாக விளக்குகிறார். அதில் அவர் கூறுகிறார்:[1]

> ''தங்கத்தைப் போன்றோ அல்லது 1893ஆம் ஆண்டுக்கு முன்னர் வெள்ளியைக் கொண்டிருந்தது போன்றோ, தற்பொழுது நாம் பெற்றிருக்கும் செயற்கையான காகித நாணயம் போன்றோ, தானாகவே தன்னைச் சரி செய்துகொள்ளும் காகிதநாணயத்தைப் போன்றோ நீங்கள் வைத்திருந்தால் அதில் என்ன வித்தியாச மிருக்கிறது? இந்தியாவில் இருப்பதைப்போன்று வர்த்தகத்தின் தேவைகளைச் சந்திக்க, ஏற்றுமதிக் காலத்தில் தங்கம் அல்லது வெள்ளி நாணயங்கள் கணிசமாகத் தேவைப்படும்; வருடத்தில் ஆறுமாதங்களுக்கு இத்தகைய நிலைமை இருக்கும்; ஏற்றுமதி காலம் சுறுசுறுப்பாக இருக்கும்பொழுது சரக்குகளை வாங்கு வதற்காக நாட்டின் உட்பகுதிகளுக்குள் பணம் அனுப்ப வேண்டி யிருக்கும். இந்த அம்சமானது இரண்டு நிலைமைகளுக்கும் பொதுவானது. தற்பொழுதுள்ளதைப்போல நீங்கள் செயற்கை யான காகித நாணயத்தை வைத்திருந்தாலும் சரி, அல்லது 1893க்கு முன்பாக வைத்திருந்த வெள்ளி நாணயத்தை வைத்திருந் தாலும்சரி இது பொதுவானதுதான். ஆனால் வித்தியாசம் இதுதான். மீதமுள்ள தேக்கமான ஆறுமாத காலத்தில் காகிதநாணயம் மிக அதிகமாக இருக்கும்; தானாகவே தன்னைச் சரிசெய்துகொள்ளும் முறையின் கீழ் இந்த அதிகக் காகித நாணயத்தைச் சரி செய்துகொள்ள மூன்று வழிமுறைகள் உள்ளன. தேவைக்கு அதிகமாக உள்ள நாணயங்கள் வங்கிகளுக்குத் திரும்பிவரலாம், அரசாங்கப் பொக்கிஷ அறைக்குத் திரும்பி வரலாம் அல்லது ஏற்றுமதி செய்யப்படலாம் அல்லது உருக்கிக் கொள்ளப் படலாம். ஆனால் உங்களுடைய காகித நாணயம் தானாகவே தன்னைச் சரிசெய்து கொள்ளும் நிலையில் இல்லாதபோது, நாணயம் என்பது செயற்கையான அடையாளபூர்வ நாணய மாக யிருக்கும்பொழுது, அதாவது தற்சமயத்தில் நமது ரூபாயைப் போன்று உள்ளபோது மூன்று வழிகளில் இரண்டு அடைபட்டு விட்டது. பெரும் இழப்பின்றி நீங்கள் ரூபாயை ஏற்றுமதி செய்ய முடியாது, பெரும் இழப்பின்றி நீங்கள் ரூபாயை உருக்க முடியாது; எனவே உபரியாக உள்ள நாண

யங்கள் வங்கிகளுக்கும் அரசாங்கப் பொக்கிஷ அறைக்கும் திரும்பி வர வேண்டியிருக்கும்: அல்லது மக்கள் அவைகளை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இரண்டாவதாகச் சொல்லப் பட்ட நிலைமையானது நீர் தேங்கியுள்ள மண்ணைப் போன்ற தாகும்; சரியான வடிகால் இல்லாமல், அதிலிருக்கும் ஈரப்பதம் அகற்றப்படாமல் உள்ள நீர் தேங்கியுள்ள மண்ணைப் போன்ற தாகும். இந்தநாட்டில் வங்கி வசதிகள் போதுமானவை அல்ல; எனவே நமது பணம் வங்கிகளுக்கோ அல்லது அரசாங்கப் பொக்கிஷ அறைகளுக்கோ விரைவாகத் திரும்பி வருவ தில்லை. இதைத்தொடர்ந்து நாட்டின் உட்புறத்திற்கு அனுப்பப் பட்ட கூடுதல் பணம் குட்டை நீர்போல இங்குமங்கும் கிடந்து, அந்தமண் முழுவதையும் ஒரு சதுப்பு நிலமாக்கி விடுகின்றது. மூன்று வழிகளில் இரண்டை நிறுத்தி விடுவது என்பது, காகித நாணயத்தின் ஒரு பகுதி தேவையற்றது என்றாக்குவதன் மூலம் விலைவாசியை உயர்த்திவிடும் என்பதை மறுக்க முடியாது.''

இந்திய நாணயத்தின் ஒருபகுதியாகத் தங்கம் இருந்திருக்கு மானால் விரிவுபடுத்துவது என்பதின் தேவைகளை அது சமாளித் திருக்கமுடியும் என்பதோடு, ரூபாய் அறிந்திராத அளவுக்குக் காகித நாணயத்தைச் சுருக்குவதை அனுமதித்திருக்கவும் கூடும். தங்கம் விரிவுபடுத்தவும் முடியும், சுருக்கவும் முடியும்: அதேபொழுதில் ரூபாயானது விரிவுபடுத்த மட்டுமே முடியும், சுருக்கமுடியாது என்பதை வைத்துப் பார்க்கும்பொழுது, தங்கம் என்பது மதிப்பின் தரத்தில் ரூபாயின் தரத்தைவிட உயர்ந்ததாகும். முன்னர் ஏற்கனவேயே கூறப்பட்டதை வேறுவார்த்தைகளில் கூறுவதாகும் இது; அதாவது இந்தியப் பணப்புழக்கத் தரம் என்பது தங்கமாகவோ அல்லது தங்கச் செலாவணி மதிப்புத் தரமாகவோ இருப்பதற்குப் பதிலாக அனைத்து அம்சங்களிலும் வங்கி நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்ட காலத்தின் காகிதப் பவுண்டைப் போல் மாற்றமுடியாத ரூபாய் தரமாக உள்ளது என்றும், கூடுதல் ஸ்தல விலைவாசி உயர்வென்பது இவ்விரு முறை களையும் அடையாளம் காட்டக்கூடிய மாற்றமுடியாத சாட்சிய மாகுமென்றும், இவ்விரண்டுக்குமுரிய குணாம்சமாகுமென்றும் ஏற்கனவேயே கூறியதை மீண்டும் வெவ்வேறு வார்த்தைகளில் கூறுவதாகும்; தங்கம் சம்பந்தப்பட்ட அறிக்கையின் வார்த்தைகளில் சொல்வதென்றால்:[1]

1. பேரா. கேனனின் நூல், மறுபதிப்பு, ப. 17.

''இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியாத பணத்தை அல்லது ஏற்றுமதி செய்யக்கூடிய நாணயமாக மாற்றமுடியாத பணத்தை, ஒரு நாட்டின் சுழற்சி சாதனமாக மிக அதிகளவில் கொண்டிருப்பதன் விளைவே இது''.

ஆகையால் இந்திய விலைவாசி மட்ட அதிகரிப்புக்குச் சிறிது நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால் அதற்கு அத்தியாவசிய மாகச் செய்யவேண்டியது ''ஏற்றுமதி'' செய்யக்கூடிய ஏதாவதொரு வடிவிலான பணத்தை, அதாவது தங்கம் போன்ற பணத்தை, இந்திய நாணய முறையின் எதிர்தரப்பாக (Counterpart) இருக்க அனுமதிக்க வேண்டும்.

சேம்பர்லின் கமிஷனானது, இந்தியாவில் தங்க நாணயத் திற்கெதிராக ஒரு வாதத்தை வைப்பதற்கு மிகுந்த சூழ்ச்சித்திறனைப் பயன்படுத்தியுள்ளது.[1]

அது முன்வைத்த காரணங்களாவன:

1) இந்திய மக்கள் தங்கத்தைப் பதுக்கி வைப்பார்கள் என்பதோடு நெருக்கடியான நேரத்தில் அதை வெளியே கொண்டு வர மாட்டார்கள். 2) இந்தியா, ஒரு மிகவும் ஏழைநாடு; அதனால் தங்கத்தைப் போன்ற விலையுயர்ந்த பொருளைப் பணப் புழக்கமாகக் கொண்டிருக்க முடியாது. 3) இந்திய மக்களின் வரவுசெலவு மிகக்குறைவானது; தங்கத்தைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவது இயலாத காரியம். 4) ரூபாயாக மாற்றப் பட்டுள்ள காகிதம்தான் இந்திய மக்களுக்கேற்ற சிறந்த வகை யான காகிதநாணயம்; அதுதான் மிகவும் சிக்கனமானது; தங்க நாணயத்தை அறிமுகப் படுத்துவதென்பது காகித நாணயங்கள் அதைப் போன்றே ரூபாய்கள் என்பனவற்றின் செல்வாக்கை ஒவ்வாததாக்கிவிடும். பதுக்கிவிடுவார்கள் என்று கூறுவது பழைய பூச்சாண்டி யாகும்; பதுக்கி வைப்பதென்பது சட்டத்திற்குக் கட்டுப்படாதது என்றால் இந்த வாதத்திற்கு உண்மையில் ஏதாவது அர்த்த மிருக்கும்:

---

1. [illegible] 15, 10 [illegible] நாணயம் [illegible] நான்காவது

ஆனால் இந்த விஷயமானது முற்றிலும் வேறுமாதிரியானது. பணமானது மிகவும் விற்பனையாகக்கூடிய சரக்காதலால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நாணயமுறையில், குறுகிய காலங்களில் அதன் மதிப்பு குறைந்திருக்கும்பொழுது அனைத்து மக்களாலும் அது தொடர்ந்து பதுக்கி வைக்கப்படும் என்ற நிலை ஏற்படாது; அதாவது, அது சேமித்துவைப்பதற்கான மதிப்பாகக் கருதப்படாது. ஆனால், அதை வைத்திருப்பவர் அதை மதிப்புகளின் சேமிப்பாகக் கருதும் பொழுது ஒப்பிட்டுக் காண்பார்; அதாவது, அந்தப்பணத்தை இப்பொழுது செலவிடுவதால் அவருக்குக் கிடைக்கும் பயன்பாடுகளை, அதைச் சேமித்து வைப்பதால் எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய பயன்பாடுகளோடு ஒப்பிட்டுக் காண்பார்; அவ்வாறு காணும்பொழுது, தற்சமயம் கிடைக்கக் கூடிய மிகஉயர்ந்த பயன்பாடுகளைவிட எதிர்காலத்தில் அதிகப் பயன்பாடு கிடைக்கலாம் என்று கருதினால் அவர், எதிர்கொள்ள நேரிடும் ஆபத்து மற்றும் காலவிரயத்தைப் பற்றிக் கவலைப் படாமல் பணத்தைப் பதுக்கியே வைப்பார். மறுபுறத்தில், எதிர்காலப் பயன்பாட்டைவிடத் தற்காலிகப் பயன்பாடு அதிகமானது என்றால் அவர் பணத்தைப் பதுக்கிவைக்கமாட்டார். அவ்வாறிருக்கும் பொழுது, இந்தியமக்கள் தங்க நாணயத்தைப் பதுக்கிவைப்பார்கள் என்று ஆட்சேபணை கூறுவதைப் புரிந்துகொள்வது சிரமமாகி விடுகின்றது. அவர்கள் தங்கத்தைப் பதுக்கிவைக்கிறார்கள் என்றால், அதன்பொருள் அவர்கள் தற்சமயம் எதையும் வாங்க விரும்பவில்லை என்பதாகும்; அல்லது, தங்கத்தை விட மட்டமான மற்றொரு நாணய முறையைக் கொண்டிருக்கிறார் என்றும், அதை முதலில் செலவு செய்துவிட இயற்கையாகவே விரும்புகிறார்கள் என்றும் பொருளாகும். தேவைப்பட்ட நேரங்களில் இந்தியாவிலிருந்து மதிப்புமிக்க உலோகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள சம்பவங்களும் உண்டு;[1] இது எதைக்காண்பிக்கிறதென்றால், பரவலாகக் கருதுவதைப் போல மிகப்பெருமளவிற்குப் பதுக்கிவைத்திருக்கும் பழக்கம் கிடையாது; அவர்கள், ஏற்றுமதிக்குரிய காகித நாணயத்தை வெளியேவிடாமல் சில சமயங்களில்[2] பதுக்கி வைத்திருந்தார்களென்றால் அது அந்த மக்களுடைய குற்றமல்ல; ஆனால், பணக் கையிருப்பின்பகுதி சேமித்து

1. திரு. தலால், சேம்பர்லின் குழுவிற்குக் கொடுத்த மகஜரைக் காண்க. 3ஆவது பகுதி No.XXXIII.

2. 1907-08 ஆம் வருட நெருக்கடியின்போது இதைச் செய்தார்களென்று இந்திய மக்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டது. இருந்தும்கூட அந்த நெருக்கடியின்போது தனிப்பட்ட கணக்கில் தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் கவனிக்கவேண்டும்.

வைப்பதற்கான மதிப்பாக இல்லாத காகித நாணய முறையின் குற்றமாகும். பதுக்கிவைப்பது என்பதிலிருந்தெழும் வாதமானது, அது ஒருவாதமாக இருக்குமானால், இந்திய மக்களுக்கு எதிராக மட்டு மல்ல எந்த மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்த முடியும்.

இந்தியாவில் தங்கநாணயத்திற்கெதிரான இரண்டாவது வாதமானது முதலில் சொல்லப்பட்டதைவிட பலமானது அல்ல. புழக்கத்திலிருந்து தங்கம் மறையுமானால், அதற்கான காரண மென்பது மற்றொருவகைப்பட்ட பணம் அதிகளவில் புழக்கத்திற்கு விடப்பட்டிருக்கும் என்பதன்றி வேறெதுவாகவும் இருக்கமுடியாது. 90ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் தங்கநாணயமதிப்புத் தரத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற பிரச்சினை எழுந்தபோது, இத்தாலியும், ஆஸ்திரேலியப் பேரரசும் தங்கத்தைச் சுழற்சிக்குக் கொண்டுவரு வதற்காகச் செய்த வீணாண முயற்சிகளைச் சிலர் சுட்டிக்காட்டினர். அவர்களுடைய தங்கம் மறைந்ததென்பது உண்மையே; ஆனால், அது அவர்களுடைய வறுமையினால் ஏற்பட்டதல்ல. அது, அவர் களுடைய காகித நாணயத்தால் ஏற்பட்டதாகும். எந்த நாடும் தங்கநாண யத்தைப் பராமரிக்க முடியும்; ஆனால் அது மலிவான பதிலியை வெளியிடக் கூடாது.

மீண்டும், செலாவணிகள் மிகச் சிறியதாக இருப்பதால் தங்கம் புழக்கத்திற்குச் சரிப்படாது என்பதால், தங்கச் சுழற்சியே கூடாது என்பது சரியான முடிவாகாது; ஆனால் தங்கநாணயத்தின் அலகு (Unit) என்பது நிலைமையைச் சந்திப்பதற்கேற்றற்போல் மிகச்சிறிதாக இருக்க வேண்டும். சுழற்சியில் உள்ள சிரமங்கள் நாணய அச்சிடல் குறித்த பிரச்சினையை எழுப்புகிறது. ஆனால் நாணய அச்சிடல் குறித்த விஷயங்கள், மதிப்பின் தரமாக எது இருக்க வேண்டும் என்ற பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப் படக்கூடாது. சவரன், சுழற்சியில் இல்லையென்றால், அதன் பொருள் இந்தியா, தங்க நாணய முறையைக் கொண்டிருக்கக் கூடாது என்பதல்ல. சவரன் என்பது புழக்கத்தில் ஈடுபடுத்துவதற்கு மிகப் பெரிதாக இருக்கிறதென்றே பொருளாகும். இப்படிப்பட்ட விஷயம் ஏதாவது இருக்குமானால் அது சவரன் என்பது ஒரு அலகாக இருப் பதற்கு எதிராக இருக்கும்; தங்க நாணயமுறை என்ற கோட்பாட்

வேறெதாவது நாணயத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே அதிலிருந்து பெறப்படும் முடிவாகும்.

தங்க நாணயத்திற்கெதிராகக் கூறப்படும் நான்காவது வாதமானது உண்மையான ஒன்றாகும்; ஆனால், தங்க நாணயத்திற்கு உரியதென்று கூறப்படும் போக்கு அதற்கு உள்ளதா அல்லது இல்லையா என்று சாட்சியளிக்கக்கோரி வேண்டுகோள் விடுவதைத் தவிர, அதை நிரூபிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. ஆனால், காகிதத்தை ரூபாயாக மாற்றும் பணப்புழக்க முறையில் எந்தவொரு ஆபத்தும் இல்லையா என்று நாம் கேட்கமுடியும். ரூபாயின் மதிப்பு மீது காகிதத்திற்கு எவ்வித விளைவும் கிடையாதா? அந்தக் கமிஷனானது இந்தப் பிரச்சினையை ஆராய்ந்திருந்தால், ஒருக்கால், பொதுவாக உள்ள கண்ணோட்டப்படி சம்மதிக்கச் செய்யப்பட்டிருக்கும்; அதாவது, காகித நாணயம் என்பது மாற்றப்படக் கூடியதாகையால், அது ரூபாயின் மதிப்பையோ அல்லது வாங்கும் சக்தியையோ பாதிக்க முடியாது என்ற பொதுவான கண்ணோட்டத்தை ஏற்கும்படி செய்யப்பட்டிருக்கும்; ஆனால், அந்த கமிஷன், அந்தப் பிரச்சினையை ஆராய்ந்திருக்குமா என்பது மிகுந்த ஐயத்திற்குரியதே. இந்தக் கண்ணோட்டத்தில் அது தவறானதாகும்; அது பாதுகாக்கப்படாத அளவுக்குக் காகித அலகின் (Unit) மதிப்பைக் குறைத்து விடுவதிலிருந்து அதைத் தடுப்பதில்லை; ஏனென்றால் போட்டியின் மூலம் அது, தான் மாறக்கூடிய அலகின் தேவையைக் குறைத்து விடுகின்றது; இதன் மூலம் அதனுடைய மதிப்பில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறு, காகிதமானது, காகிதநாணயம் என்றளவில் சிக்கமானது என்றபோதிலும், ரூபாயின் மதிப்புக்கு ஆபத்தானதாகும். ரூபாய் என்பது சர்வசாதாரணமாகத் தங்கத்திற்கு மாற்றப்படமுடியும் என்ற நிலைமை இருக்குமானால் இந்த ஆபத்து ஒரு வரம்புக்கு உட்பட்டிருக்கும்.

வரைபடம் - 5

ரூபாய் -ஸ்டெர்லிங் மாற்று விகிதத்தில் மாதாந்தர ஏற்ற இறக்கங்கள்



மேலே வலியுறுத்தப்பட்டதில் ஏதாவது வலிமை இருக்குமானால், அது தங்கநாணயம் என்பது வெறும் ''உணர்ச்சிபூர்வமானது'', ''விலையுயர்ந்த ஆடம்பரம்'' என்றில்லாமல், இந்தியத் தரத்தின் மதிப்பை நிலையாக வைத்திருப்பதற்கான உயர்ந்த நலனின் அவசியத்தினால் ஏற்பட்ட தேவை என்பது தெரியும்; இதன்மூலம் எந்தளவு அற்பமானதாக இருந்தாலும், அந்த அளவுக்கு விலைவாசி உயர்வின் வேண்டாத விளைவுகளிலிருந்து இந்திய மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கான தேவை ஆகும்.

இந்திய அரசாங்கம் தயாரித்து, பௌலர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறையிலிருந்து விலகிச்சென்றதை ஒவ்வொரு அம்சத்திலும் நியாயப்படுத்துவதன் மூலம், சேம்பர்லின் கமிஷன் எவ்வாறு தவறு செய்துள்ளது என்பதை நாம் இப்பொழுது காண்போம். ஆனால், அது ஒரு கேள்வியை எழுப்புகிறது: அந்த லட்சியம் எவ்வாறு ஈவிரக்கமின்றித் தோற்கபடிக்கப்பட்டது? தங்கம் என்பதுவே இந்தியாவின் நாணயமாக இருக்கவேண்டுமென்று பௌலர் குழு கூறியிருக்கும்பொழுது, அது எவ்வாறு இந்தியாவின் நாணயமாக இல்லாது நின்றுபோயிற்று? தங்கம் என்பது மறுக்கமுடியாத செலாவணிப்பணமாக இருப்பதால், அதை அனுமதிக்கவிடாமல் கதவுமூடப்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது. பேராசிரியர் பிஷரின் வார்த்தைகளில் கூறுவதென்றால், இந்தியாவின் பணச் சேமிப்பில் தங்கத்தின் செயல்பாடு என்பது, சட்டம் சம்பந்தப்பட்டமட்டில் வெள்ளிக்கு இருப்பதாகக் கூறப்பட்டதைவிட மிகஅதிகளவு சுதந்திரம் தங்கத்தின் செயல்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பணத்தின் வடிவில் வெள்ளிக்கு ஒரு குறுகலான மதிப்புதான் கொடுக்கப்பட்டுள்ளது. அது சேமிப்புக்குள் செல்ல ஒருவழியாக உள்ளது; ஆனால், அது வெளியேறுவதற்கான வழி அங்கே இல்லை. மறுபுறத்தில், தங்கமானது ஒரு குழாய் தொடர்புமூலம் அதே சேமிப்பிற்குள் அனுமதிக்கப்படுகின்றது; அது, அதற்கு உள்ளே செல்லவும், வெளியேறுவதற்குமான வழியைத் தந்துள்ளது. அப்படியானால், இந்தியாவின் பணப் புழக்க சேமிப்பிற்குள் தங்கம் ஏன் குவிவதில்லை? இப்பிரச்சினை குறித்து முறையாகப் புரிந்து கொள்வதானது 1898 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட் ட நல்லமுறைக்கு திரும்பிட முதற்படியாகும்.

இப்பிரச்சினையின் இந்த அம்சம் குறித்து அணுகமுயற்சிக்கும் நூல்களை ஆராய்ந்தால், இந்தியாவின் நாணயமுறைக்குள் தங்கம் வராததற்காக இரண்டு விளக்கங்கள் வழக்கமாக முன்வைக்கப்படுவதைக் காணலாம். அவைகளில் ஒன்று, அரசாங்க உண்டியல்களை

அரசாங்கத்தின் செயலாளர் விற்பனை செய்வதென்பதாகும். இந்த உண்டியல்களை விற்பனை செய்வதன் விளைவாக இந்தியாவிற்குத் தங்கம் போவதைத் தடுக்கமுடியும் என்று கூறப்படுகிறது. இந்திய நாணயம் குறித்து வல்லுநராகக் கருதப்படும் திரு.சுபேதார், ஸ்மித் குழு முன்பு அளித்த சாட்சியத்தில் (Q,3502) குறிப்பிடுகின்றார்:

> "1905 ஆம் ஆண்டிலிருந்து நமது நாணயக் கொள்கையைக் கட்டுப்படுத்தி வந்தவர்கள் தங்கம் இந்தியாவிற்குப் போவதையும், சுழற்சிக்கு விடப்படுவதையும் திட்டமிட்டே தடுத்து வந்தனர்."

கவுன்சில் உண்டியல்கள் என்பதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்திலிருந்தே ஒரு வரலாறு உண்டு.[1] இந்திய அரசாங்கம் அதனுடைய வருவாயை இந்தியாவில் பெறுகிறது. பணம் கொடுக்க வேண்டிய கடமையை இங்கிலாந்தில் கொண்டிருக்கின்றது என்ற வினோதமான நிலைமை அதற்கு ஏற்பட்டுள்ளது; இது இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் பணம் அனுப்பவேண்டிய அவசியத்தை அதன்மீது திணித்துள்ளது. கிழக்கிந்தியக் கம்பெனியின்காலத்திலிருந்து தங்கம் அனுப்புவதைத் தவிர்ப்பதற்காக இத்தகையதொரு வழியில் பணம் அனுப்பும் ஏற்பாடு இருந்துள்ளது. கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் மூன்று முறைகள் மூலம் அனுப்பவழி இருந்தது: 1) இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குத் தங்கமாக அனுப்புவது; 2) இந்திய அரசாங்கத்திடமிருந்து வரவேண்டிய தொகைக்காக இங்கிலாந்தில் பணம் பெற்றுக்கொள்வது. 3) இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டிய சரக்குகளை வாங்கும்பொருட்டு இந்தியாவிலுள்ள வர்த்தகர்களுக்கு முன்பணம் தருவது; அதற்கான பணத்தை, இந்தப் பொருட்களை அடைமானமாக வைத்துள்ள கம்பெனி இயக்குநர்களுக்கு இங்கிலாந்தில் அளித்துவிடவேண்டும். இம்மூன்றில் கடைசியாகச் சொல்லப்பட்ட இரண்டு முறைகள் மீது அவர்கள் அதிகமாகச் சார்ந்திருந்தனர். காலப்போக்கில் சரக்குகளை அடைமானம் வைத்துக் கொண்டு பணம் அனுப்பும்முறை கைவிடப்பட்டது;

---

1. Cf. the Memorandum by Sir Henry Waterfield relating to the system of effecting remittances from India, Appendix to the Fowler Committee's Report, p. 24; also memorandum by F.W. Newmarch on the sale of Council Bills and Telegraphic Transfers.

''தீங்கான கடன் கொடுக்கும் முறையைப் புகுத்தி வர்த்தகத்தின் சாதாரணவழியில் குறிக்கிடுவது'' அந்தமுறை என்றுகூறி கைவிடப் பட்டது. இந்தியா மீதான உண்டியல்கள் விற்கப்படுவது இந்த மூன்று மாற்று முறைகளிலும் சரியானது எனத் தொடரப்பட்டது [1]; கவுன்சிலில் அரசாங்கச் செயலாளரால் தொடர்ந்து கொண்டு செல்லப்பட்டது; கம்பெனியிடமிருந்து இந்திய அரசாங்கத்தை மன்னர் எடுத்துக்கொண்டபோது, இந்த உண்டியல், கவுன்சில் உண்டியல் என்ற பெயரைப்பெற்றது. அரசாங்கச் செயலாளரின் கரங்களில் இந்தக் கவுன்சில் உண்டியல் இருந்தபொழுது அது சில மாறுதலுக்காளாயிற்று. இந்த விற்பனைகள் இப்பொழுது வாராந் திர விற்பனைகள்[2] என்றறியப்பட்டன; அவை இங்கிலாந்து வங்கி யினால் செய்யப்பட்டன; அது, இந்தியாவிற்கான அரசாங்கச் செய லாளர் சார்பாக ஒவ்வொரு புதன்கிழமையும் விளம்பரங்கள் செய்யும்; பம்பாய், சென்னை அல்லது கல்கத்தாவில் இந்திய அரசாங் கம் கோரும் உண்டியல்களைக் கொடுப்பதற்காக அடுத்து வரும் புதன்கிழமைக்குள் டெண்டர்கள் அனுப்பவேண்டுமென்று இந்த விளம்பரங்கள் அறிவிக்கும். உண்டியலுக்கான டெண்டர் கட்டணமாக விலையின் 1/32 பென்னி குறைந்தபட்ச அளவாக இருக்கும்:[3] கவுன்சில் உண்டியல் என்பது ஒரேமாதிரியாக இருக்கவில்லை. மறுபுறத்தில் நான்கு வகைகளான உண்டியல்கள் இருந்தன. (1) சாதாரணச் செலாவணி உண்டியல்கள் ஒவ்வொரு புதன் கிழமையும் விற்கப்பட்டன; இவை ''கவுன்சில்கள்'' என்றழைக்கப் பட்டன; (2) தந்தி மூலம் பரிமாற்றம் (Transfers) என்பது புதன் கிழமைகளில் விற்கப்பட்டன; இவை சுருக்கமாகப் ''பரிமாற்றங்கள்'' என்றழைக்கப்பட்டன.[4] (3) சாதாரண செலாவணி உண்டியல்கள் என்பதைப் புதன்கிழமை தவிர வாரத்தின் இதர நாட்களில் விற்கப் பட்டன. இவை ''இடைப்பட்டவைகள்'' என்றறியப்பட்டன.

---

1. நான்காவது ஒன்றும் இருந்தது. இந்திய அரசாங்கம் ஸ்டெர்லிங் உண்டியல்களை லண்டன் மீது இந்தியாவில் வாங்கி, அவற்றை வசூலிக்கும் பொருட்டு அரசாங்கச் செயலாளருக்கு அனுப்பியது - அது 1877 ஆம் ஆண்டில் சிறிது காலத்திற்குப் பின்பற்றப்பட்டது, பின்னர் கைவிடப்பட்டது.

2. 1862 ஜனவரி 22ஆம் தேதி முதல் அரசாங்கச் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் கவுன்சில் உண்டியல்கள் விற்பனை தொடங்கி 1862 நவம்பர் வரை சென்றது. மாதந்தோறும் விற்பனை செய்யப்பட்டன. 1862 நவம்பர் முதல் மாதமிருமுறை விற்பனை செய்யப்பட்டன ஆகஸ்ட் முதல் அவை வாரந்திரவிற்பனைகள் ஆயின.

3. 1862 ஜனவரி முதல் மார்ச் வரை குறைந்தபட்ச அளவென்பது ஒரு பார்த்திங்காக இருந்தது; அது1862 மார்ச்சில் 1/8 பென்னியாகவும், 1875 ஜனவரியில் 1/16 ஆகவும் 1882ல் 1/32 ஆகவும் குறைக்கப்பட்டது. அதிலிருந்து இந்த அளவிலேயே தொடர்ந்தது.

4. இது முதன்முதலாக 1876 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

4) தந்தி மூலம் பரிமாற்றம் என்பது புதன்கிழமை தவிர இதர நாட்களில் விற்கப்பட்டபோது, அது ''விசேஷமானவை'' என்றழைக்கப் பட்டது. இப்பொழுது, அரசாங்கச் செயலாளர் இந்தியாவிற்குத் தங்கம் போவதைத் தடுப்பதற்காக அவருடைய கவுன்சில் உண்டி யல்கள் இயந்திரத்தை எந்த வழியில் பயன்படுத்தப்போகிறார்? விலையும் விற்பனை அளவும் சீராக அமைக்கப்பட்டிருப்பதால் தங்கம் இந்தியாவிற்குப் போகாது என்று கூறப்பட்டது. இது எந்த அளவுக்கு பௌலர் குழுவின் கொள்கையைத் தோற்கடித்துள்ளது என்று நாம் ஆராயும் முன்னர், விளக்கத்திற்காகப் பின்வரும் விபரங்கள் அளிக்கப் படுகின்றன. (அட்டவணை L1 மற்றும் L11 பக்கம் 579 மற்றும் பக்கம் 582).

இந்த அட்டவணைகளை ஆராய்ந்தால் இரண்டு உண்மை கள் ஒரே நேரத்தில் தெளிவாகும். அதிலொன்று, அரசாங்கச் செய லாளர் கவுன்சில் உண்டியல்களை மிகப்பெரும் எண்ணிக்கையில் விற்றுள்ளார் என்பது தெரியவரும். நாணயச்சாலைகளை மூடு வதற்கு முன்பாகக் கவுன்சில் உண்டியல்கள் விற்பனையானது அரசாங்கச் செலவு அளவுக்கு இருந்தது; உண்மையில் எடுக்கப் பட்டது, பட்ஜெட் மதிப்பீட்டுத் தொகையிலிருந்து மாறுபட்டிருக்க வில்லை. நாணயச்சாலைகள் மூடப்பட்டதிலிருந்து அரசாங்கச் செயலாளர் அரசாங்கச் செலவுக்காக எடுத்தபணம், அரசாங்கப் பொக்கிஷங்களின் தேவையை மட்டும் கொண்டிருக்கவில்லை. நாணயசாலை மூடப்பட்டதிலிருந்து அரசாங்கச் செயலாளர் முயற்சித்த தாவது:[1]

''1. அவ்வாண்டுக்கான வழிமுறைத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வரவு- செலவுத் திட்டத்தில் (பட்ஜெட்டில்) வரையறை செய்யப்பட்டுள்ள பணத்தை அந்த நிதியாண்டிற்குள் இந்திய அரசாங்கப் பொக்கிஷசாலைகளி லிருந்து எடுத்துக்கொள்வது.

''2. நாணயங்கள் அச்சிடுவதற்காக வெள்ளியை வாங்கத் தேவைப்படும் பணத்திற்காக மேற்கொண்டும் அரசாங்கப் பொக்கிஷ சாலைகளிலிருந்து எடுப்பது.

''3. எதிர்பாராத வளமான பருவகாலம் ஏற்படும்பொழுது இங்கிலாந்தில் அரசாங்கக்கடனைக் குறைக்கும்பொருட்டோ அல்லது

தவிர்க்கும் பொருட்டோ பண ஒதுக்கல் செய்வதற்காக இவ்வாறு மேற்கொண்டும் பணம் எடுப்பது.

''4. வர்த்தகத்தின் வசதிக்காகக் கூடுதல் உண்டியல்கள் மற்றும் பரிமாற்றங்கள் விற்பது

''5. அரசாங்கச் செயலாளர் இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்தோ அல்லது எகிப்திலிருந்தோ இந்தியா விற்கு வாங்கிய சவரன்களுக்கான பணத்திற்காக இந்தியா மீது தந்தி பரிமாற்றம் செய்தது''.

இவ்வாறு பணம் எடுத்துக்கொண்டதன் விளைவு என்ன வென்றால் இந்தியாவின் வர்த்தக நிலுவைக்கும் இங்கிலாந்தின் பொக்கிஷ சாலைகளில் நிலுவை அதிகரித்தளவில் இருப்பதற்கும், லண்டனில் இந்திய நிதி முடக்கப்பட்டுக் கிடப்பதற்குமிடையில் அனுசரித்துப் போகச் செய்வதற்காகக் கவுன்சில்கள் ஒரு பெரும் பங்கை வகிக்க வேண்டியுள்ளது என்பதாகும்.

முன்சொன்ன அட்டவணைகளை ஒப்பிடும்பொழுது கவனிக்க வேண்டிய இரண்டாவது அம்சமானது, அரசாங்கச் செயலாளர் எந்தவிலையில் விற்கிறார் என்பதைக் குறித்ததாகும். நாணய சாலை கள் மூடப்படுவதற்கு முன்பு கவுன்சில் உண்டியல்களின் விலை யானது அரசாங்கச் செயலாளரின் கட்டுப்பாட்டையும் மீறிப் போயிருந்தது; எனவே அவர் வாராந்திர விற்பனையின் போது தனது உண்டியல்களுக்கு மிக அதிகப்படியான தொகையை அளிப்பதை ஏற்க வேண்டியிருந்தது. ஆனால், நாணயச் சாலைகள் மூடப்பட்டிருந்ததானது அதை மீண்டும் தயாரிக்கும் முழு உரிமை யையும் அரசாங்கச் செயலாளருக்குக் கொடுத்திருக்கும்பொழுது அவர் மிக அதிகமான தொகையில் கேட்பவருக்கு ரூபாயை ஏலம் விடவேண்டிய பழைய பழக்கத்தைத் தொடர்ந்து பின்பற்றுவது ஏன் என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. இத்தகைய ஏகபோக நிலைமை தனக்கிருப்பதை அவர் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய உண்டியல் களை அவர் 1 ஷில்லிங் 4 1/8 டாலர் அல்லது 4 3/32 டாலர் குறைவாக விற்றிருக்கக்கூடாது எனறு வலியுறுத்தப்பட்டது; அவ்வாறானால் ஒரு சவரன் தங்கம் 15 ரூபாய் என்றாகும்; அது, இந்தியாவில் தங்கஇறக்குமதி ஏற்றுமதி விலையாகும். நடைமுறையில் அரசாங்கச் செயலாளர் தன்னுடைய அந்தஸ்தின் பலனைத் தானே கைவிட்டார்; தங்க இறக்குமதிக்குக் கீழான விலையில் அளிக்கப்பட்ட ஒப்பந்த மனுக்களை அவர் ஏற்றுக்கொண்டார்; அவர் தன்னுடைய உண்டியல்களுக்குக்

குறைந்தபட்ச விலைகளைப் பெற்றதிலிருந்தே இதைக் காண முடியும். உள்நாட்டுக் கவுன்சில் உண்டியல்கள் அரசாங்கப் பொக்கிஷச் சாலையின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் பண அளவுக்கு மட்டுமே விற்கப்பட்டிருக்குமானால், தங்கஇறக்குமதி விலையை விடக் குறையாமல் விற்கப்பட்டிருக்குமானால், தங்கமானது இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கக்கூடும் என்ப தோடு இந்திய நாணய சாதனத்தின் பகுதியாக விளங்கக்கூடும் என்றும் சொல்லப்பட்டது. இந்த நிலையில், அரசாங்கச் செய லாளரின் செயல்பாடுகளுடைய ஒட்டுமொத்த விளைவானது இந்தியத் தங்கத்தை லண்டனில் முடக்கி வைப்பதாகும் என்று சொல்லப்பட்டது. இந்தியத் தங்கத்தை லண்டனில் பயன்படுத்தியது அல்லது தவறாகப் பயன்படுத்தியது குறித்து நாம் இங்கே ஆராய வில்லை. ஆனால், லண்டனில் இந்திய நிதியை நிர்வகிப்பதில் இந்தியாஅலுவலக ஊழல்களை நியாயப்படுத்தி, அதை ஒரு விஞ்ஞான பூர்வ அடிப்படையில் வைப்பதற்காகத் தங்கள் சேவையை அளிக்க முன்வந்துள்ளவர்களுக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்த வேண்டும்:

டௌனிங் தெருவின் ஒரு பக்கம் நடக்கும் செயல்பாடு ஒரு பலமான விமர்சனத்திற்குள்ளாகாமல், அத்தெருவின் மறுபக்கத் திற்குக் கொண்டு செல்லப்படமுடியாது என்று பஹேகாட் (Bagehot) கூறியதற்கு, அவர்களுடைய நம்பிக்கைகளில் வெளிப்பட்டதை விட அதிகமான சூழ்ச்சித்திறம் தேவைப்படுகின்றது. அரசாங்கச் செயலாளரின் செயல்பாடுகள், முற்றிலும் இல்லையென்றபோதிலும் இந்தியாவிற்குள் தங்கம் இறக்குமதி செய்வதைத் தடுத்துள்ளது; முற்றிலும் இல்லையென்ற போதிலுங்கூடத், தேவையான அளவுக்குத் தடுத்துள்ளது என்பதை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். தற்பொழுது, பௌலர் குழுவினுடைய நோக்கம் தோல்வியடைந்து விட்டது என்று கருதுபவர்களின் கருத்து சரியானது என்பதில் ஐயத் திற்கிடமில்லை; அரசாங்கச் செயலாளரின் குறுகலான செயல் முறை என்பதை இந்தியாவிற்குள் தங்கத்தை இறக்குமதி செய்வதற்குத் தான் இட்டுச்செல்லும் என்ற அவர்களது கருத்து சரியானதுதான். ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட தங்கம் என்பது இந்தியாவில் பணப்புழக்கத்தின் ஒரு பகுதியாக விளங்கும் என்று கருதுவதற்கு என்ன நியாயம் இருக்கின்றது? அரசாங்கச் செயலாளரின் நிதியா தாரச் செயல்பாடுகளை இல்லாது செய்வதானது தங்கத்தை இந்தியா வின் நாணயமாகத் தானாகவே மாற்றிவிடுமென்று கருதுவது

நடப்புக்கு வருமா என்பது முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையைச் சார்ந்துள்ளது.

பௌலர் குழுவின் லட்சியம் தோல்வியுற்றதை விளக்குவதற்காகக் கூறப்படும் மற்றொரு விளக்கமானது, தங்கநாணயங்களைச் சுதந்திரமாக அச்சிட இந்தியாவில் ஒரு தங்கசாலை இல்லையென்பதாகும். தங்கத்தைச் சுதந்திரமாக அச்சிடுவதற்காகத் தங்கசாலைகள் திறக்கப்படவேண்டுமென்பது பௌலர் குழுவின் மிகவும் முக்கியமான சிபாரிசாகக் கருதப்படுகிறது. சொல்லப்போனால், அந்த சிபாரிசை அரசாங்கம் செய்யாது விட்டுவிட்டதானது பெரும் சோர்வுக்குக் காரணமாகியுள்ளது. 1900 ஆம் ஆண்டில், அரசாங்கப் பொக்கிஷசாலையின் முரட்டுத்தனமான அணுகுமுறைகாரணமாக இந்திய அரசாங்கம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டதானது, தங்க நாணயத்தின் ஆதரவாளர்களைக் கடுங்கோபங்கொள்ளச் செய்தது. 1911 ஆம் ஆண்டில் சர்.வி.தக்கர்ஸே, உயர்சட்டமன்றக்கவுன்சிலில் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்; வேறெந்தத் தங்கநாணயம் அச்சிடுவதற்காக இல்லையென்றாலும், அரசாங்கப் பொக்கிஷசாலை சம்மதித்தால், சவரன் அச்சிடுவதற்காக ஒரு நாண்ய சாலை திறப்பது அவசியமென்று அரசாங்கத்தை வலியுறுத்தி இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தார். கவுன்சிலின் ஒருமித்த விருப்பத்திற்கேற்ப, இதற்கு அனுமதியளிக்கும்படி அரசாங்கப் பொக்கிஷசாலையை அணுகும்படி அரசாங்கச் செயலாளரை இந்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டது.[1] இது சம்மந்தமாக அரசாங்கப் பொக்கிஷசாலை அரசாங்கத்தின் செயலாளருக்கு இரண்டு மாற்றுத் திட்டங்களைக் கொடுத்தது.[2]

1. தங்கத்தை சவரன்களாக அச்சிடுவதற்கென்றே முற்றிலும் அதனுடைய கட்டுப்பாட்டின்கீழ் அரசாங்க நாணயசாலையின் ஒரு கிளை பம்பாயில் நிறுவப்படலாம்; அல்லது

2. பம்பாயில் உள்ள நாணயசாலையின் மீதான கட்டுப்பாடு முற்றிலும் அதனிடம் மாற்றித்தரப்படவேண்டும். இந்திய அரசாங்கம் இவ்விரு மாற்றுத் திட்டங்களில் எதையுமே ஏற்கவில்லை. அரசாங்கச் செயலாளர் இந்திய உணர்வுகளுக்குச் சலுகை தரும்விதத்தில்

---

1. காமன்ஸ் சபை நடவடிக்கைகள் 495 பக்கம் 57 (1913)

2. முன்சொன்னது பக்கம் 64

இந்திய நாணயசாலையின் பத்து ரூபாய் தங்கக்காசு அச்சிட அனுமதி யளித்தார். அரசாங்கப் பொக்கிஷசாலை கொடுத்த யோசனையை விட இந்தத் தீர்வையே இந்திய அர்சாங்கம் ஏற்றுக்கொண்டது; எனினும், அப்பொழுது விசாரித்துவந்த சேம்பர்லின் கமிஷன் இந்த விஷயத்தைப் புதிதாக ஆராயவேண்டுமென அரசாங்கம் விரும் பியது. அந்தக் குழுவானது தங்க நாணயம் அச்சிடும் நாணயசாலை நிறுவப்படவேண்டுமென்று சிபாரிசு செய்யவில்லை; [1] ஆனால் அந்த நாணயம் சவரன்களாக அச்சிடப்பட்டு, அது இந்திய உணர்வு களுக்கேற்றாற்போலிருந்தால், அவ்வாறு அச்சிடுவதற்கான செலவு குறித்து அரசாங்கம் கவலைப் படவில்லையென்றால், அந்த நாணய சாலை நிறுவுவதற்கு எவ்வித ஆட்சேபணையுமில்லையென்று அந்தக் குழு கூறியது.[2] குழுவினுடைய இந்தக் கண்ணோட்ட மானது 1900ஆம் ஆண்டில் கொண்டிருந்த நிலையிலேயே இருந்தது; உலகயுத்தம் தொடங்கும் வரை அப்படியே இருந்தது. யுத்தம் தொடங்கியதானது, அரசாங்க நாணயசாலையின் ஒரு கிளையாக பம்பாய் நாணயசாலையைத் துவங்கும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது; இங்கே தங்க நாணயங்கள் அச்சிடப்பட்டன. ஆனால் இது மீண்டும் 1919 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. 1919 ஆம் ஆண்டின் காகித நாணயக்குழு இதை மீண்டும் திறக்கும்படி சிபாரிசு செய்தது;[3] இந்தத் திட்டம் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது; உயர்கவுன் சிலின் மாண்புமிகு உறுப்பினரொருவர் இந்தப் பரிந்துரையை அரசாங்கம் ஏற்கச் செய்வதற்காக ஒரு ஆசைவார்த்தை காட்டினார்; இதற்கான செலவை அரசாங்கம் ஏற்கும் பொருட்டு ''நாணயச்சாலை'' என்ற தலைப்பின்கீழ் வரவு- செலவுத் திட்ட மதிப்பீடுகளை அதிகரிப்பதாக ஆசைவார்த்தை காட்டினார். எனினும், அரசாங்கம் இந்தத் திட்டத்தை ஏற்கவில்லை; எனவே, இந்தியா ஒரு வினோத மான காட்சியைக் கண்டது; தங்கம் என்பது 1835-93 ஆம் ஆண்டுகளுக்கிடையே சட்டபூர்வ நாணயமாக இல்லாதபோது இங்கே தங்கசாலை இருந்தது; ஆனால் 1893ஆம் ஆண்டி லிருந்து தங்கம் இங்கே சட்டபூர்வ நாணயமாக இருந்தபோது தங்கசாலை இல்லை. பௌலர் குழுவின் நோக்கத்தை முன் கொண்டு செல்லும் விஷயத்தில், பகிரங்க நாணயசாலை என்ன செய்ய முடியும் என்பதைக் கற்பனை செய்வதுகூட சிரமம்;

---

1. அறிக்கை, பகுதிகள் 69-71

2. The Commission recommended that if a gold Mint was not established in India, Govt. should

சேம்பர்லின் கமிஷன் முன்பு, பகிரங்கத் தங்கசாலையைத் திறக்கக் கோரி வாக்கு மூலம் கொடுத்த ஒருவருடைய (திரு. வெப்) சாட்சியானது ஒரு தங்கசாலையிலிருந்து என்ன எதிர்பார்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட உதவுகிறது. இவரை விட, வேறு யாரும் இதற்காக வாதாடியிருக்க முடியாது.

''ஒரு தங்க சாலையிலிருந்து கிடைக்கும் பிரதான ஆதாயம் என்று நீங்கள் எதிர்பார்ப்பது, புழக்கத்தில் தங்கக் காசுகளின் எண்ணிக்கையை நீங்கள் அதிகரிக்க முடியும் என்பதாகும். அது, பல போக்குகளில் ஒரு போக்காகும்.

''வேறெதாவது ஆதாயம் இருக்கிறதா? - ஆதாயம் எது வென்றால், நாடு என்பது நாணய முறைக்குரிய செயலமைப்புத் திட்டத்தை பொருத்திருக்கும்; இதை நான் நாணய இயக்க ஏற்பாட்டின் அத்தியாவசியப் பகுதியாகவே காண்கிறேன்; மக்களின் கோரிக்கைக்கேற்ப நாணயத்தை அச்சிடும் நாணயசாலையை கொண்டிருக்கும்.

''அதில் என்ன அத்தியாவசியமாய் இருக்கிறது என்று நீங்கள் கேட்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஒரு முறையான நாணய முறைக்கு, தங்க நாணய முறைக்கு, அது அத்தியாவசியம் என்று நீங்கள் கருதுவதாக நான் நினைத்தால் சரிதானே? ஆம்.

''தங்க நாணயம் அச்சிட ஒரு தங்க சாலை வேண்டுமென்பது அத்தியாவசியமானது இல்லையா? ஆம். இந்தியாவிலேயே அது தேவை.... அன்னியப் பரிவர்த்தனைகளுக்கான அரசாங்கச் செயலாளரின் நிர்வகிப்பை அது, ஓரளவுக்குப் போக்கிவிடும்; அவ்வாறானால், அரசாங்கச் செயலாளர் எடுக்கும் ஏதாவதொரு நடவடிக்கையைப் பொதுமக்கள் அங்கீகரிக்காதபட்சத்தில், மக்கள் தங்களிடமுள்ள தங்கத்தைச் சட்டபூர்வ நாணயங்களாக மாற்றிக் கொள்ள முடியும். அது ஒரு பாதுகாப்பான ஏற்பாடு: சொல்லப்போனால் ஒரு கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடு; இந்திய மக்கள் உலோகத்தைக் கொடுத்துத் தங்கள் சொந்தப் பணத்தை அதே இடத்திலேயே பெற முடியும்.''

சுதந்திரமாகத் தங்கத்தை இறக்குமதி செய்ய அனுமதித்தால் அது நாணயப் புழக்கத்தின் பகுதியாக மாறிவிடும் என்று முன்பு கருதியதைப் போன்று, இங்கே மீண்டும் ஒரு கருத்து எழுந்துள்ளது; தங்சாலை என்பது தங்க பணப்புழக்கத்திற்கான உத்தரவாதம் என்றெழுந்துள்ள கருத்தானது உள்நோக்கமற்றதாகத் தெரிகிறது.

வரைபடம் - 6

1893- 1922 ஆண்டுகளில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் விலைவாசி அளவு ஒப்பீடு.



மறுபுறத்தில், தங்கசாலைகள் திறக்கப்பட்டு தங்க நாணயங்களோ அல்லது தங்கப் பணப்புழக்கமோ இல்லாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. லண்டனிலுள்ள அரசாங்க நாணயசாலையின் நாணய அச்சிட்ட வரலாற்றிலிருந்து பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். 1797-1821 வரைப் பட்ட அல்லது 1914-18 ஆம் வருடங்களின் யுத்தகாலத்தில், வங்கி நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்ட காலத்தில் தங்க நாணய அச்சிடலின் அளவு என்பது இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது பயனுள்ளதாகும். இவ்விரண்டு கால கட்டங்களிலும் தங்கசாலை திறந்திருந்தது; ஆனால் மொத்தத் தங்க நாணயங்கள் அச்சிட்டது எவ்வளவு? இந்த வங்கி நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படட காலகட்டம் முழுவதிலும் தங்க நாணயங்கள் மிகச் சொற்ப அளவிலேயே அச்சிடப்பட்டன; 1807,1812 மற்றும் 1814-16 வருடங்களின் போது அரசாங்க நாணய சாலையில் தங்க நாணயம் அச்சிடப்படவேயில்லை! மீண்டும் யுத்தகாலத்தில் 1915 ஆண்டிலிருந்து தங்க நாணயம் அச்சிடுவது குறைந்தது என்பதுடன் 1917 லிருந்து முற்றிலும் நின்றுவிட்டது.[2] இந்த உதாரணங்கள் ஒன்றைத் திட்டவட்டமாகக் காண்பிக்கின்றன. தங்கசாலை என்பது ஒரு உபயோகமான அமைப்பு என்ற போதிலும், தங்கத்தை அங்கே ஈர்ப்பதற்குத் தந்திரம் எதுவும் இல்லை என்பதைக் காண்பிக்கின்றன. தங்கத்தின் சுழற்சி என்பது சில காரணிகளைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது என்பதையும், இலவசமாகத் தங்க நாணயங்களை அச்சிட்டுத்தரத் தங்கசாலை இருந்தாலும், இல்லையென்றாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இது நடைபெறுகிறது என்பதை மேலே குறிப்பிட்ட வரலாற்றுப்பூர்வ சம்பவங்களிலிருந்து ஐயத்திற்கிடமின்றிப் புரிந்து கொள்ள முடிகிறது.

பணப்புழக்கக் காரணங்களுக்காக இரண்டு வகைப்பட்ட சாதனங்கள் பயன்படுத்தப்படும்பொழுது நல்ல சாதனம், கெட்ட சாதனத்தைச் சுழற்சியிலிருந்து விரட்டி விடுகின்றது என்பது அரசியல் பொருளாதாரத்தின் உறுதியான கருத்தாகத் தற்பொழுது உள்ளது. இந்தக் கோட்பாட்டை இந்திய நிலைமைகளுக்குப் பயன்படுத்தும் பொழுது ஒரு விஷயம் தெளிவாகின்றது; — ரூபாய்களை வெளியிடுவது என்பது வரம்பின்றி இருக்கும் வரை இந்தியாவில் தங்கம் என்பது சுழற்சிக்கு வராது. தங்கப் பணப்புழக்க முறையை

1. G.R. Porter: Progress of the Nation. P. 568

2. பார்க்க: அரசரின் நாணயச் சாலை துணை மாஸ்டரின் அறிக்கை, 1921

அமுல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்துபவர்கள் இந்த முக்கியமான கோட்பாட்டை முற்றிலும் கவனியாது விட்டு விட்டனர்; ரூபாய்கள் வரம்பின்றி வெளியிடுவதற்கெதிராக ஒரு விரலைக் கூட அவர்கள் உயர்த்தியதில்லை. இந்திய அலுவலக முறைகேடுகளைக் கடுமையாக எதிர்ப்பவரும், அரசாங்கச் செயலாளரும் மட்டுமே அவருக்குத் தேவைப்படும் பணத்திற்கு ஒப்பந்தம் செய்யும் படிச் செய்தால், தங்கம் இந்தியாவிற்குள் வந்து குவிந்து, அதன் நாணயம் புழக்கத்தின் பகுதியாக இருக்குமென்ற கண்ணோட்டத்தின் பலமான ஆதரவாளருமான திரு. வெப், சேம்பர்லின் குழுவிற்குப் பின்வரும் சிபாரிசைச் செய்கிறார்:

> ''கவுன்சில் டிராப்ட்கள் விற்பனை என்பது அரசாங்கத் தேவைகள் அளவுக்கு மட்டுமே கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப் பட வேண்டும்; 1 ஷில்லிங் 4 1/8 டாலர் முதல் 1 ஷில்லிங் 4 3/32 டாலர் போன்றவற்றிற்குக் குறைவாக எவ்வித ஒதுக்கீடும் எந்தச் சூழ்நிலையிலும் செய்யக்கூடாது; அதாவது, இந்தியாவிற்குள் தங்கம் இறக்குமதி செய்வதற்கான தற்போதைய நாணய அளவுக்கு குறைவாக ஒதுக்கீடு செய்யக் கூடாது. அரசாங்கச் செலவுகளுக்காக லண்டனில் தேவைப்படும் அளவு பணத்தை பெற்றவுடன் **கவுன்சில் டிராப்ட்களை மேலும் விற்கக்கூடாது; ஒரே ஒரு விதி விலக்கு மட்டும் உண்டு; மேற்கொண்டும் நாணயங்கள் வெளியிட உலோகங்கள் வாங்குவதன் காரணத்திற்கு மட்டும் டிராப்ட்கள் விற்கலாம்; அதுவும் மக்களுக்கு முறையாக அறிவிக்கப்பட வேண்டும்.** கவுன்சில் டிராப்ட்களின் அத்தகைய விசேஷ விற்பனை என்பது தங்க இறக்குமதிக்கான நாணய அளவுக்குக் குறைவாக இருக்கக் கூடாது.''[1]

இந்தியாவில் தங்க நாணயங்களை அச்சிடுவதற்காகத் தங்க சாலை திறக்கும்படி அரசாங்கத்திடம் கோரி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து சட்டமன்றக் கவுன்சிலில் பேசும்பொழுது சர். வி. தாக்கர்ஸே மீண்டும் குறிப்பிட்டார்:

> ''ஒரு விஷயத்தில் நான் என்னைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன். ரூபாய்களை அச்சிடும் உரிமையை

அரசாங்கம் கைவிட்டு விட வேண்டுமென்றோ நான் ஆலோசனை தரவில்லை. தங்கநாணயக் கையிருப்பைத் தொடர வேண்டுமென்றும் நான் கூறவில்லை; அது இன்றிருப்பது போல் நமது காகித ரூபாய்க் கொள்கையின் இறுதியான உத்தரவாதமாக இருக்க வேண்டும். என்னுடைய யோசனையானது நடப்பிலுள்ள ஏற்பாட்டில் எவ்வழியிலும் குறுக்கிடவில்லை; அது, அவைகளுக்குத் துணையாகவே இருக்கும்..... இந்திய அரசாங்கம் அதனுடைய திறனின் உச்சபட்ச அளவுக்குத் தங்கத்தைச் சேமித்து வைக்கட்டும்; ஆனால் அது பயன்படுத்திக் கொள்ள முடியாத உபரித் தங்கமானது மக்கள் விரும்பினால் நாணயமாக அச்சிடப்பட்டுச் சுழற்சிக்கு விடப்படலாம். நம்முடைய விரிந்து வரும் வர்த்தகம் மற்றும் நமக்குச் சாதகமான நிலைமை என்ற நிலையில் சாதாரண நேரத்தில் தங்கம் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படும்; **இந்தியாவில் தங்க நாணயம் அச்சிடுவதற்காக வசதிகள் செய்யப்படுமானால் அது சுழற்சிக்குள் போகும்.**[1]

இவை நிச்சயம் தங்கப் பணப்புழக்கத்தை மேம்படுத்துவதற்கான வழிகள் அல்ல. சொல்லப்போனால், அவை அதற்கு எதிரானதாகும். ரூபாய்கள் நாணயங்களாக வெளிவந்து கொண்டிருக்கும்வரை தங்கமானது, தங்கப் பணப் புழக்கத்திற்குள் வராது. சொல்லப்போனால், அரசாங்கச் செயலாளர் அதிகமாகப் பணம் எடுப்பதற்கு எதிராகவும், அதைத் தொடர்ந்து இந்திய நிதி லண்டனுக்கு மாற்றப்பட்டு அவை அரசாங்கச் செயலாளரால் தவறான முறையில் நிர்வகிக்கப்படுவதற்கு எதிராகவும் ஒரு புறத்தில் குரலெழுப்பப்படுகின்றது; மறுபுறத்தில் ரூபாய்களை நாணய வடிவில் கூடுதலாகத் தயாரிக்க அனுமதிப்பது என்பது பணப்புழக்கத்தின் ஒரு அடிப்படைக் கோட்பாடு குறித்து வருந்தத்தக்க அறியாமையை வெளிப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல, ஆனால், இந்தச் சிரமம் முழுவதும் எதிலிருந்து துல்லியமாக எழுகிறது என்பதைக் குறித்துத் தெரிந்து கொள்வதில் முற்றிலும் தோல்வியடைந்து விட்டதையே காண்பிக்கின்றது. இந்திய அரசாங்கமானது எந்தவொரு குறிப்பிட்ட நடவடிக்கைக்கும் அரசாங்கச் செயலாளரைக் கட்டுப்படுத்த முடியாது[2]

1. S.L.C.P. Vol. 1, பக்கம் 637-38 அழுத்தம் மூலநூலில் இல்லை.

2. The legal position of the Secretary of State and the extent to which he can be bound by the provisions of any law passed by the government of India were well explained by Sir. James Westland in his speech on the Indian Paper Currency (Amendment) Bill, which afterwards became Act 11 of 1898; Compare also the peculiar wording of that Act.

என்பது உண்மையே; அவர் அடிக்கடி வருடாந்திர வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைவிட அதிகமாகச் செலவழித்து விடுகிறார். ஆனால், இந்தப் பிரச்சினை இருந்து கொண்டே வருகின்றது. அரசாங்கச் செயலாளர், 1893ஆம் வருடத்திற்கு முன்பில்லாத அளவிற்கு அதற்குப்பின் மிக அதிகமாகப் பணம் எடுக்க முடிந்தது எவ்வாறு? அரசாங்கச் செயலாளர் இந்தப் பணத்தை லண்டனில் எவ்வாறு செல வழித்தபோதிலும், அதை அவர் இந்தியாவில் கொடுக்க வேண்டும் என்பது நினைவு படுத்திக்கொள்ளப்பட வேண்டும். 1893ஆம் ஆண் டுக்கு முன்பு அவர் குறைவாக எடுத்தார் என்றால் அதற்கான காரணம், அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கான வழிவகை குறைவாக இருந்தது என்பதுவேயாகும்; 1893 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர் அதிகம் எடுத்தார் என்றால் அதற்கான காரணம், அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கான வழிவகை அதிகமாக இருந்தது என்பதாகும். கொடுப்பதற்கான வழிவகை எவ்வாறு அதிகரித்தது? அவர் ரூபாய் நாணயங்களை அச்சிட முடிந்ததே அதற்கான காரணமாகும். சொல்லப்போனால், பணம் எடுப்பது என்பது அதன் தேவைக்கேற்ற அளவையும், ரூபாய்களை அச்சிடும் அவர் திறமை அளவையும் வரம்பாகக் கொண்டிருந்தது. எனவே இந்தியாவின் நலன்களுக்கு அரசாங்கச் செயலாளர் துரோகம் இழைத்து விட்டார் என்று அவரைக் குற்றஞ்சாட்டுவதும் அதேசமயத்தில் அந்த துரோகம் இழைப்பதற்கான வழிவகையாக ரூபாய் நாணயங்களை அச்சிட அவருக்கு அனுமதியளித்ததும் முட்டாள்தனமாகும்; தங்கப் பணப்புழக்கம் தேவையென்றால் அதற்குக் காரணம் ரூபாய் என்பது மோசமானதொரு தர மதிப்பைக் கொண்டிருக்கிறது என்பதனாலாகும்; அவ்வாறானால், தேவைப் படுவது அரசாங்கச் செயலாளர் பணம் எடுப்பதற்கு ஒரு வரம்பு கட்டுவதோ அல்லது ஒரு தங்க நாணய சாலை திறப்பது என்பதோ அல்ல; ஆனால், ரூபாய் நாணயங்கள் அச்சிடுவதை நிறுத்தக்கூடிய ஒரு சிறிய சட்டம் என்பதுவேயாகும். அதன்பின்பே தங்கம் என்பது - ரூபாயுடன் தங்க விகிதத்தைக் கொண்டுள்ள சட்டபூர்வ செலாவணிப் பணமாக - இந்தியப் பணப்புழக்கத்தின் ஒரு பகுதியாக விளங்கும்.

ரூபாய் நாணயத்தை அச்சிடுவதை நிறுத்துவது என்பது ஒரு போதுமான தீர்வாக இருக்கும் என்பது 1898-1902ஆம் ஆண்டு களின்போது, இந்தியப் பணப்புழக்க வரலாற்றில் ஏற்பட்டதும் தற்பொழுது மறக்கப்பட்டு விட்டதுமான சம்பவத்தால் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது. தங்கம், சட்டபூர்வ செலாவணிப் பணமாக

சி.இ.டாகின்ஸ் (C.E. Dawkins) அச்சமயத்தில் தங்க நாணயசாலை இல்லையென்ற போதிலுங்கூடப் பின்வருமாறு பேசினார்:

> ''இந்தியா இறுதியில் அதனுடைய பணப்புழக்க விஷயத்தில் மாறுதலான ஒரு காலகட்டத்தைக் கடந்து எந்த இலக்கை அடைவதற்காக வருடக்கணக்கில் போராடிக் கொண்டிருந்ததோ அந்த இலக்கை அடைந்துவிட்டது; ஒரு தங்கத் தரத்தையும் ஒரு தங்கப் பணப்புழக்கத்தையும் ஏற்படுத்தி விட்டது; பரிவர்த்தனை என்ற விஷயத்தில் நடைமுறை உறுதியை அடைந்துள்ளது; இது தனி நபருடைய மற்றும் அரசாங்கத்தினுடைய நிதிக்கு ஒரேமாதிரியான ஆசுவாசத்தை அளித்துள்ளது.''[1]

தங்கத்தின் மகத்தான மிகுநிறைவு குறத்துத் திரு. டாகின்ஸ் மேலும் குறிப்பிடுகின்றார்.

''.... நாங்கள் ஏறத்தாழ தங்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டு விட்டோம்...'' பணப்புழக்க நிலைமையில் அப்பொழுது ஏற்பட்ட மாற்றத்தை அப்போதைய வைஸ்ராயாக இருந்த கர்ஸன் பிரபு பின்வரும் வார்த்தைகளில் மிக விரிவாக விவரிக்கின்றார்:[2]

> ''இந்தியாவில் சட்டபூர்வச் செலாவணியாக சவரனைக் கொண்டுள்ள ஒரு புதிய சகாப்தத்தைத் திரு. டாகின்ஸ் வெற்றிகரமாகத் துவக்கி வைத்துள்ளார்; பரிவர்த்தனையில் ஸ்திரமானதன்மை என்பது ஒரே மாதிரியான வடிவத்தில் இருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். தீயதே நடக்கும் என்று கூறும் அனைத்து தீர்க்கதரிசிகளின், அதிலும் குறிப்பாக நாம் இந்தியாவிற்குள் தங்கத்தை வரவழைக்க முடியாது, அப்படிக் கிடைத்தாலும் இங்கே நமது கரங்களில் அதை வைத்திருக்க முடியாது, அது நமது விரல்களின் வழியே நழுவிப் போய் விடும், அவசியமான வினியோகத்திற்காக நாம் கடனாகக் கூட வாங்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் செய்யப்பட்ட முன்னறி விப்பை மீறி இந்த மகத்தான மாற்றம் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது. சொல்லப் போனால், தொட்டதெல்லாம் பொன்னாக மாறவேண்டுமென்று பிரார்த்தித்து வரம்பெற்ற புராணத்தில் குறிப்பிடப்படும் மன்னனின் நிலைமையில் நாம் ஏறத்தாழ இருக்கிறோம்; தான் உண்ண வேண்டிய உணவை

1. நிதியாதார அறிக்கை, 1990-1 ப. 14.
2. முன்சொன்னது பக்கம் 19

அந்த மன்னன் தொட்டபொழுது அது ஜீரணிக்க முடியாத தங்கமாக மாறிவிட்டதைக் கண்டு வேதனையுடன் வியப் படைந்தானாம். ஏராளமான தங்கத்தை நாம் பெற்றிருக்கின் றோம்; ரூபாய்களுக்கு நாம் தங்கத்தைத் தருகின்றோம்; அதேபோன்று தங்கத்திற்கு ரூபாய்களைத் தருகின்றோம்; அதாவது உண்மையில் நாம் ஒரு முழுமையான மாற்றத்தக்க தன்மையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் - இந்த நிலைமையைத்தான் காரிய சாத்தியமற்றது என்று வல்லுநர்கள் ஓராண்டுக்கு முன்பு எள்ளிநகையாடினார்கள்.''

1900-1இல் நிலவிய இந்த நிலைமையை 1910-11ல் நிலவிய நிலைமையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்; உதாரணத்திற்குச் சொல்வ தென்றால் அவ்வாண்டில் நிலவிய பணப்புழக்க நிலைமை குறித்து பேசும்பொழுது சர் ஜேம்ஸ் மெஸ்டன் (தற்பொழுது பிரபு) குறிப் பிட்டார்[1]:-

''நாம் பணப்புழக்கக் கொள்கையில் பல மாற்றங்களைக் கடந்து வந்துள்ளோம் என்பதுடன் ஒரு சில தவறுகளை மட்டும் செய்யவில்லை; ஆனால், நமது நடவடிக்கையின் பரந்த வழிகளும், நம்முடைய இலக்குகளும் தெளிவானவை என்ப துடன் தவறில்லாதவையுமாகும்; நமது லட்சிய முன்னேற்றத் திற்காக மகத்தான அல்லது அடிப்படையான தியாகம் எதுவும் செய்யப்படவில்லை. பௌலர் குழுவிற்குப் பின்னர் அந்த முன்னேற்றம் உண்மையானதாகவும், தொடர்ச்சியாகவும் இருந்தது. அந்த லட்சியத்தை அடைவதற்கு முன்பு இன்னுமொரு மகத்தான நடை முன்னோக்கிப் போட வேண்டியுள்ளது. நாம் இந்தியாவை உலகத் தங்க நாடுகளுடன் இணைத்துள்ளோம், ஒரு தங்க-பரிவர்த்தனைத் தரத்தையும் எட்டியுள்ளோம் என்பதுடன் அதை நாம் சீராக வளர்த்துக் கொண்டும், மேம்படுத்திக் கொண்டும் வருகின்றோம். அடுத்த மற்றும் இறுதியான நடவடிக்கை என்பது ஒரு உண்மையான தங்க நாணயப் புழக்கமாகும். அது காலப்போக்கில் வருமென்று நான் நிச்சயம் நம்புகின்றேன்.....''.

இந்தப் பேச்சாளரின் குறைவாக மதிப்பிடும் குறிப்புகளை இந்த வினாடிக்கு ஒரு புறம் ஒதுக்கி வைத்தாலுங்கூட, 1900 ஆம் ஆண்டில்

---

1. நிதியாகாரு அறிக்கை 1910-11, ப. 346.

இந்தியா ஒரு தங்கப் பணப்புழக்கத்தைப் பெற்றிருந்தது என்ற அம்சம் அவ்வாறே இருந்தது. ஆனால் 1910ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த நிலைமையைக் கவனிக்கும்பொழுது அது அவ்றாறில்லை. இந்த வித்தியாசத்திற்குக் காரணமென்ன? 1893-1900 ஆண்டுகளுக்கிடையே ரூபாய்கள் அச்சடிக்கப்படவில்லை, ஆனால் 1900-1910 ஆம் ஆண்டு கட்கிடையில் ஏராளமான அளவில் நாணயங்கள் அச்சிடப்பட்டன. முதல் காலகட்டத்தின் பொழுது நாணயங்கள் அச்சிடுவதற்கான தூண்டுதல் மிக அதிக அளவிலிருந்தது. செலாவணி என்பது முற்றிலும் ஸ்திரமானதாக இருக்கவில்லை; ஆனால் அரசாங்கமானது உள்நாட்டுச் செலவினங்களுக்கென்று அதிகரித்த அளவில் நாணயங்களை அச்சிட்டது. உயர்மட்டச் சட்டமன்ற கவுன்சிலில் பேசும் பொழுது ஒரு மாண்புமிகு உறுப்பினர்[1] பின்வருமாறு கேட்டார்:

> ''அரசாங்கம் தனக்கென்று நாணயசாலைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதாவது ஆட்சேபணை உள்ளதா? வெள்ளியின் குறைவான மதிப்பையும், தங்கம் மற்றும் ரூபாயின் விலைகளுக்கிடையில் ஒரு பெரும் வித்தியாசம் இருப்பதைக் கணக்கி லெடுத்துக் கொண்டு, இன்றுள்ள பற்றாக்குறையின் ஒரு கணிசமான பகுதியைக் குறைப்பதற்காகப் போதுமான அளவு லாபம் சம்பாதிக்க அரசாங்கம் ரூபாய்களை அச்சிடக்கூடாதா? இது வருவாய்க்கான சட்டபூர்வ ஆதார ஊற்றாகவும், நமது பொருளாதார நிலைமையின் சிரமத்தைத் தணிக்கக்கூடிய சக்தி படைத்ததாகவும் எனக்குத் தோன்றுகிறது''.

ஆனால் அப்பொழுது இந்தியாவிற்கான நிதிப்பொறுப்பாளராகயிருந்த சர் ஜேம்ஸ் வெஸ்ட்லாண்ட பின்வருமாறு பதிலளித்தார்[2]:

> ''வெள்ளியைத் தற்போதைய குறைவான விலையில் வாங்கி அதை நாணயமாக அச்சிட்டு ரூபாயின் மதிப்பிற்கேற்ப வெளியிட வேண்டுமென்று ராஜாங்கக் கவுன்சிலின் வர்த்தக உறுப்பினர்களுள் ஒருவர் கூறிய திட்டத்தைக் கேட்டு நான் சற்று வியப்படைந்தேன் என்பதை நான் ஒத்துக்

---

1. This was no other than the Hon. Fazulbhai Vishrm, the wellknown financier of Bombay. Cl. his speech in the Financial Statement 1894-95, P. 46.
2. நிதியாதார அறிக்கை 1894-95, ப. 123

கொண்டேயாக வேண்டும்..... இந்த ஆசை காட்டல் குழிக்குள் விழ நான் நிச்சயம் மறுக்கின்றேன்...''.

மீண்டும் 1898இல் நாணய முறைக் கடுமையைத் தணிப்பதற்காக அரசாங்கம் ரூபாய்களை அச்சிட வேண்டுமென்று திருலிண்ட்சேயின் சில ஆதரவாளர்கள் விரும்பியபோது சர் ஜேம்ஸ் வெஸ்ட்லேண்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்[1]:

''..... நமது கருத்துப்படி வெள்ளியின் தரம் என்பது தற்பொழுது ஒரு கடந்தகால விஷயமாகிவிட்டது. தங்கத்தின் தரத்தை எப்படி அடைவது என்பதுதான் நம் முன்னிருக்கும் ஒரே பிரச்சினை. பகிரங்கத் தங்கசாலைகள் என்ற நிலைக்கு நாம் திரும்பிச் செல்ல முடியாது. தங்கசாலைகளைப் பொதுவாகப் பொதுமக்களுக்கு நாம் திறந்து விடலாம் அல்லது தங்கநாணயங்களை நாமே அச்சிட்டுக் கொள்வதற்கு நாம் திறக்கமுடியும். இந்த இரண்டு விஷயத்திலும், வெள்ளி மதிப்பளவுக்கு ரூபாயின் மதிப்பு சரிந்துவிடும். தங்கசாலைகளை மக்களுக்குத் திறந்து விடுவதென்றால் ரூபாயின் சரிவு துரிதமாக இருக்கும். அரசாங்கம் மட்டுமே அச்சிடுவதற்கு அதைத் திறந்துவிடுவதென்றால் ரூபாயின் சரிவு மெதுவாக இருக்கும் என்பதுடன் அது தவிர்க்க முடியாததுமாகும்''.

ரூபாய்களை அரசாங்கம் அச்சிட வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு சி.இ. தாகின்சும் (C.E. Dawkins) கடுமையாக நிந்திக்கிறார். நாணய அச்சிடல் மூலம் லாபம் கிடைக்கும் என்ற வாய்ப்பைக் காண்பித்து இந்தத் திட்டத்தைப் பகிரங்கமாக எதிர்க்காமல் அவர் ஏற்கும்படிச் செய்வதற்காகத் தூண்டப்பட்ட பொழுது அவர் பின்வருமாறு கூறினார்[2]:

''வெள்ளியினால் லாபம் கிடைக்கும் என்பதை மிக நேர்மையான அரசாங்கத்தின் கண்கள் முன்பு கூட அப்பட்டமாகக் காண்பிக்க வேண்டாமென்று என்னுடைய மதிப்பிற்குரிய நண்பரிடம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகின்றேன். இத்தகைய லாபங்கள் என்பது ஒரு முறை

---

1. [illegible] 1900, 1, பக்கம் 163

உங்களுடைய நடவடிக்கையில் ஒரு தீர்மானகரமான அம்சம் என்ற நிலை ஏற்படுமானால், ஸ்திரமான தன்மைஎன்பதற்கு விடை கொடுத்துவிட வேண்டியதுதான்.''

நாணயத்தை அச்சிடக் கூடாதென்று அரசாங்கம் உறுதி பூண்டிருப்பதற்கு மற்றொரு காரணம், அது, கவுன்சில் உண்டியல் களை அளவற்ற தொகைக்கு நிச்சயிக்கப்பட்ட விலையில் விற்கும் பொறுப்பை ஒருபோதும் ஏற்காதது ஏன் என்பதற்கான காரணங் களை ஆராய்வதிலிருந்து தெரிகிறது. அரசாங்கமானது இத்தகைய தொரு பொறுப்பை ஏற்கமுடியாது. ஏனென்றால் அது ஒரு ஸ்திர மான விலையை வைத்திருக்க முடியாது, அதைவிடக் குறைவான விலைக்கு விற்க வேண்டியிருக்குமென்று சேம்பர்லின் கமிஷன் வாதித்துள்ளது. அளவுக்கதிகமான வகையில் அரசாங்கம் ரூபாய் நாணயங்களை அச்சிட்டதன் விளைவாக ஏற்பட்ட பலவீனமான நிலைமையை இது ஒத்துக் கொள்கிறது என்றளவில் இது உண்மையே. ஆனால் 1900 ஆம் ஆண்டில் இந்தப் பொறுப்பை ஏற்கும்படி முதல் தடவையாக அரசாங்கம் கேட்டுக்கொள்ளப் பட்டபோது அது கொடுத்த விளக்கம் நிச்சயம் இதுவல்ல. உண்டி யல்களை வரம்பின்றி விற்றுக் கொண்டே போவதென்பது, ரூபாய் நாணயங்களை வரம்பின்றி அச்சடித்துக் கொண்டே போவதாகும் என்பதை அரசாங்கம் முற்றிலும் நன்றாக அறியும். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்க மறுத்ததன் காரணம், அவர்கள் ரூபாய் நாணயங்களை அச்சிட விரும்பாததுதான். இதுதான் மூலாதாரமான காரணம் என்பதை மாண்புமிகு திரு. தாகின்ஸ் அப்பட்டமாக்கி விட்டார்;[1] இத்தகையதொரு பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டுமென்று கூறியவர்களுக்கு அவர் நினைவுபடுத்தினார்:

> ''அரசாங்கத்தின் வெள்ளி நாணயக் கையிருப்பென்பது வெகு வேகமாக ஒரு கட்டத்தை அடைந்துவிட்டது; வரம்பற்ற மாற்றங்களை (கவுன்சில் உண்டியல்கள்) தொடர்ந்து சமாளிப்பது சாத்திய மற்றது என்ற நிலைக்கு வந்து விட்டது. ஆகையால் விலையைப் படிப்படியாக அதிகரிப்பதன் மூலம் தேவைகளைக் கட்டுப்படுத்துவதென்று அரசாங்கச் செயலாளர் தீர்மானித் துள்ளார் என்பதுடன் அவசரமற்றவற்றைக் களைந்து விட்டு, அதே சமயத்தில் தங்கத்தை இந்தியாவிற்கு அனுப்புமள

1. அவருடைய வரவு-செலவுத் திட்ட உரை, நிதியாதார அறிக்கை 1900-1, பக்கம். 27.

வுக்கு அவசரமற்ற கோரிக்கைகளை எழுப்புவர்களை எச்சரித்தும் உள்ளார். வேறெந்த வழியும் நடைமுறை சாத்திய மற்றது. அரசாங்கச் செயலாளரின் பொறுப்பென்பது 1 ஷில்லிங் 4 5/32 டாலர் என்ற அளவைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தங்கப் பணப்புழக்கத்துடன் கூடிய தங்கத் தரம் என்ற லட்சியம் அடையப்பட வேண்டிய நேரத்தில் இந்தியாவின் நிதி அமைச்சர் சர் எட்வர்ட் லா அரங்கத்திற்கு வந்து, புதிய பணப்புழக்கத்திற்கான முழு வடிவத்தையும், கவலைப்படாத கடற்கொள்ளைக்காரனைப் போன்று சுக்கல் நூறாக உடைத்தெறிந்து விட்டார்; இது முட்டாள் தனமானது என்பதுடன் மற்றவர் உணர்வுக்கு மதிப்பளிக்காத போக்குமாகும். 1900ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் தேதிய அவருடைய குறிப்பானது முழுச் சம்பவப் போக்கையும் மாற்றிவிட்டது.[1] அந்தக் குறிப்பில் பின்வரும் முக்கியப் பகுதி உள்ளது:-

''15. இத்தகைய அம்சங்களை ஆராய்ந்ததன் விளைவாக ஒரு விஷயம் ஒத்துக்கொள்ளப்பட் வேண்டுமென்று நான் நினைக்கிறேன்; காகித நாணய இருப்பில் பத்திரமாக வைக்கப் படவேண்டிய தங்கம், தற்சமயத்திற்குப் பணத்தை அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்ய வைப்பதற்கான அதே விதி களின் கீழ் ஒழுங்குபடுத்தப்படலாம் என்று நினைக்கின்றேன்.

ரூபாய் நோட்டு சுழற்சியில் அதிகரிப்பு ஏற்படும்வரை யிலோ, அல்லது நடப்பு நிலைமைகளில் வேறெதாவது மாற்றம் வரும் வரையிலோ, உத்தேச அதிகபட்ச அளவாக 70 லட்சம் பவுண்டு பண அளவிற்குத் தங்கத்தைப் பணப்புழக்க இருப்பில் பத்திரமாக வைத்திருக்கலாமென்று நான் நினைக்கிறேன். எனினும் இந்தத் தொகையே இறுதியானது என்று கூற நான் தயாராயில்லை; இது ஒருதலைப்பட்சமானதுதான் என்ப தோடு, சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் அரசாங்கத்தின் கரங் களைக் கட்டிப் போடக் கூடிய எந்தவொரு பகிரங்க அறிவிப்பு செய்வதையும் நான் விரும்ப வில்லை; அத்தகையதொரு நிலைமை இன்று காணப்பட வில்லையென்றாலும், வருங் காலத்தில் அந்தத் தொகையைக் குறைக்க நேரிடலாம்.''

காகித நாணய இருப்பில் அதிகபட்ச அளவு தங்கத்தை வைத்திருப்பதென்பதில் மாற்றங்களோடு கூடிய இந்த நிகழ்ச்சிக் குறிப்பு (Minute) இந்தியக் காகித நாணய முறையின் அடித்தளமாக தொடர்ந்து இருந்து வருகின்றது என்பதை விளக்கும்போது இந்த நிதி அமைச்சர், தங்க நாணயமதிப்புத்தரம், மற்றும் தங்கப் பணப்புழக்கம் என்ற லட்சியத்திற்கு என்ன நேரிடும் என்ற கேள்வியை ஒரு வினாடிக்காவது யோசித்தாரா என்பது தெரியவேயில்லை. தங்க நாணய மதிப்புத் தரம் என்பதைச் சாதிப்பதற்கு அவர் உதவினாரா அல்லது கையிருப்பில் கொண்டிருக்க வேண்டிய தங்கத்திற்கு ஒரு வரம்பு கட்டுவதன் மூலம் தங்க நாணய மதிப்புத் தரம் என்பதையே அவர் கைவிடும்படிச் செய்கிறாரா? இந்த நடவடிக்கைக் குறிப்பு கொள்கை அமல்படுத்தப்படுவதற்கு முன்னர் ரூபாய்கள் வெளியிடப்படுவது வரம்புக்குட்பட்டும், தங்கம் வெளியிடப்படுவது வரம்பற்ற அளவிலுமிருந்த 1844 ஆம் ஆண்டின் வங்கி சாசனச் சட்டத்தைப் போன்றே (Bank Charter Act) ஏறத்தாழ இந்தியக் காகித நாணய முறையும் இருந்தது. இந்த நடவடிக்கைக் குறிப்பானது தங்கம் வெளியிடப்படுவது வரம்புக்குட்பட்டும் ரூபாய்கள் வெளியிடப் படுவது வரம்பற்ற அளவுக்கும் இருக்க வேண்டுமென்று கூறுகிறது; இது வங்கி செயல்பாடு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதற்கு முற்றிலும் நேர் எதிரானதாகும். இந்த நடவடிக்கைக்குறிப்பின் மகத்தான முக்கியத்துவம் இதில்தான் பொதிந்துள்ளது; அது, இந்திய காகித நாணய முறையில் தங்கத்திற்குப் பதிலாக ரூபாயைப் புகுத்தும் கொள்கையை வேண்டுமென்றே வரையறுத்துள்ளது என்பதுடன் 1893-லிருந்து வந்துள்ளதும் 1900ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப் பட்டதுமான லட்சியத்தைத் தோல்வியுறவும் செய்கிறது.

இது, தங்க நாணய மதிப்புத் தரத்தைக் கைவிடுவதாகும் என்பதை சர் எட்வர்ட் லா உணர்ந்திருந்தாரானால் ஒருக்கால் அவர் இந்த நடவடிக்கைக் குறிப்பைப் பதிவு செய்திருக்கமாட்டார்; ஆனால் தங்க நாணய மதிப்புத் தரத்தையும், தங்கப் பணப்புழக்கக் கொள்கைக் கும் இவ்வாறு குழிபறித்து அத்துடன் காகித நாணய முறையின் ரூபாய்ப் பகுதி மீது வரம்பு விதிப்பதற்குப் பதிலாகக் காகித நாணய முறையின் தங்கப் பகுதி மீது வரம்பு விதிக்கும் இந்த நடவடிக்கைக் குறிப்பின் நோக்கத்தில் மறைமுகமாகப் பொதிந்துள்ளது எது? அவற்றை, இந்திய அரசாங்கம் 1900ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி யன்று அனுப்பிய 302ஆம் எண்ணுள்ள கடிதத்தில் காணலாம்; அது கூறுகிறது:-

''2..... கடந்த டிசம்பருக்குப்பின் தங்க வரவு தொடர்ந்தது என்பதுடன் அதிகரிக்கவும் செய்தது. எட்டு மாதங்களுக்கு மேலாகத் தங்கம், காகித நாணய இருப்பில் அதிகரித்தது என்பதுடன் ஜூன் 18ஆம் தேதிய கடிதத்தில் கூறப்பட்டுள்ள வரம்பைவிட வெள்ளி குறைந்துள்ளது. ஜனவரிமாத நடுப்பகுதி வாக்கில் இந்தியாவின் காகித நாணய இருப்பில் தங்கக் கையிருப்பு 50 லட்சம் பவுண்டுகள் என்றளவை எட்டியது. அந்தக் கடிதத்தில் கொடுக்கப்பட்ட ஆலோசனை உடனே செயலுக்கு கொண்டு வரப்பட்டது; அதன்பின் பெரிய மாவட்ட கஜானாக் களுக்கு சவரன்களை அனுப்பினோம்; வரவேண்டிய பாக்கிக் காகவோ அல்லது ரூபாய்களுக்குப் பரிவர்த்தனையாக தங்கத் தையோ விரும்பும் எவரொருவருக்கும் அவற்றை வினியோகிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு அனுப்பினோம்; மார்ச் மாதத் தில் ராஜதானி நகரங்களிலும், ரங்கூனிலும் பண ஆணை களுக்குப் பதிலாகச் சவரன்களை வழங்கும்படி தபால் அலுவலகத்திற்கு உத்தரவிட்டோம்; அத்துடன் ராஜதானி நகரங்களிலும், ரங்கூனி லும் அரசாங்கக் கணக்கில் பணம் தரும்போது முடிந்தளவிற்கு சவரன்களாக வழங்கும்படி ராஜதானி வங்கிகளை நாம் கேட்டுக் கொண்டோம். இந்த நடவடிக்கைகள் அனைத்தும், நமது உபரி தங்கத்தில் பெரும் பகுதி வெகு விரைவில் நம்மிடமிருந்து சென்றுவிடும் என்ற எதிர்பார்ப்பில் எடுக்கப்பட்டவை அல்ல; ஆனால் மக்களிடம் தங்கத்தை வைத்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் காலப்போக்கில் கணிசமான அளவு தங்கத்தைப் பொது சுழற்சிக்குக் கொண்டுசென்று அவ்வாறு செய்வதன்மூலம் அதிகத் தங்கக் கையிருப்பின் காரணமாகவும் ரூபாய்க் கையிருப்பு குறைவதன் காரணமாகவும் வரவிருக்கும் வருடங்களில் நாம் அனுபவித்த சிரமங்களைப் போக்கிவிடும் என்ற நம்பிக்கையில் எடுக்கப்பட்டவை ஆகும்.

''3. இந்தச் சிரமங்களைச் சமாளிப்பதற்காகவும், முடிந்தால், ரூபாய் நோட்டுகளையும், தங்கத்தையும் கொடுத்து ரூபாய்களைக் கேட்பவர்களுக்கு நாணயங்களை அளிப்பதற்காக நாம் கூடுதல் நாணயங்களை அச்சிட்டோம்...''

''14. இரண்டாவது பாராவில் விவரிக்கப்பட்டுள்ள நட வடிக்கைகளின் விளைவை உன்னிப்பாகக் கவனித்ததை நாம் குறிப்பிடலாம். தங்கத்தை வெளியிட்டது கணிசமாக இருந்தது;

முடிவில் புழக்கத்திலிருந்த தொகை, அச்சமயம்வரை வெளியிடப்பட்டிருந்த சுமார் 20 லட்சத்தில், 12½ லட்சத்திற்குமேல் புழக்கத்திலிருந்தது என்று மதிப்பிடுகிறார்; ஆனால், இந்தக் கணக்கில் பல நிச்சயமற்ற புள்ளிவிவரங்கள் உள்ளன. பணத்தைப் போல் ஒரு விரும்பத்தகுந்த அளவுக்குத் தங்கம், பயன்படுத்தலுக்குப் போயுள்ளது என்று நாம் இன்னும் கூற இயலாது.

''15. ரூபாய் நோட்டுகளும், தங்க வெளியீடும் சுட்டிக்காட்டுவது போல, மக்களின் ரூபாய்த் தேவைகளைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டுமென்பது மிகவும் தேவையான தொன்றாகும். ஆகையால் மேலும் நாணயங்கள் (ரூபாய்களாக) அச்சிட வேண்டுமென்ற, மேலே முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அனுமதி தர வேண்டுமென்று மேன்மை தங்கிய பிரபுவை நாங்கள் பலமாக வற்புறுத்துகிறோம்....

''17. ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட இத்தகைய கூற்றுக்களின் அடிப்படையில் எங்களுடைய ஆலோசனை ஆராயப்பட வேண்டு மென்று நாங்கள் விரும்பவில்லை. ஏற்றுக் கொண்ட கடமையைப் பூர்த்தி செய்திட அது அவசியம் தேவைப்படுகிறது என்ற நடைமுறை அம்சத்திலிருந்தே பிரதானமாக அதைக் கூறுகிறோம்; இதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் கூறவில்லை என்றபோதிலும் சட்டப்படி அதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்; மிக அதிகமான சிரமமின்றி அதை நாம் செய்யமுடியுமென்ற நிலை உள்ளவரை அதைச் செய்வது விரும்பத்தக்கது என்று நாங்கள் கருதுகின்றோம்; அதாவது, தங்கத்தைக் கொடுத்து ரூபாய்களைக் கேட்பவர்களுக்கும், ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துப் பணத்தைக் கேட்பவர்களுக்கும், சவரன்களுக்குப் பதிலாக ரூபாய்களை வைத்திருக்க விரும்புபவர்களுக்கும் அதைத்தர சட்டபூர்வமாகக் கடமைப்பட்டுள்ளோம்.''

ரூபாய் நாணயங்கள் அச்சிடப்பட வேண்டுமென்பதற்காக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள வாதங்கள் பல்வேறு வகையானவை. ஒரு தங்கநாணய மதிப்புத் தரத்தையும், ஒரு தங்க நாணய புழக்கத்தையும் உருவாக்கத் தொடங்கிய ஒரு அரசாங்கம், அதிகரித்தளவிலான தங்கத்தைக் கண்டு தனது லட்சியம் விரைவில் நிறைவேறப் போகிறது என்று கருதவதற்குப் பதிலாக மிகவும் கவலைப்படுவது எங்கும் கேட்டிராத ஒன்று என்று எடுத்த எடுப்பிலேயே தெரியும். இப்பிரச்சினையின் உளவியல் ரீதியான அம்சம் ஒருபுறமிருக்கட்டும், ரூபாய் நாணயங்கள் அச்சிடுவதற்கு அரசாங்கம் இரண்டு காரணங்களைத்

தனது சொந்த அறிக்கையில் கூறியுள்ளது: (1) ரூபாய்கள் வேண்டு மென்று எப்பொழுது கேட்கப்பட்டாலும் கொடுக்க வேண்டிய கடமை தனக்கு உள்ளது என்று அது தானாகவே உணர்கிறது. (2) மக்கள் தங்கத்தை விரும்பவில்லை. இந்த வாதங்களில் என்ன வலிமை உள்ளது? முதலாவது கூற்றை எடுத்துக் கொண்டால், பணம் கொடுக்க வேண்டிய கடமை தனக்கு இருப்பதாக அரசாங்கம் ஏன் கருத வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. கடன் பட்டிருப்பவரின் கடமை எதுவென்றால், நாட்டின் சட்டபூர்வப் பணத்தில் திருப்பித்தர வேண்டுமென்பதாகும். நாட்டின் சட்டபூர்வ பணமாகத் தங்கத்தை வைத்திருக்கும்பொழுது அரசாங்கம் வெட்கப் படாமல் அல்லது கெஞ்சலின்றி அதைக் கொடுத்துத் தனது கடமை யைச் செய்யமுடியும். இரண்டாவதாக மக்கள் தங்கத்தை விரும்ப வில்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது?

அரசாங்கம் வெளியிட்ட தங்கம் அதனிடமே திரும்பி வந்துள்ள தானது, மக்கள் அதை விரும்பவில்லை என்பதற்குச் சான்றாகும் என்று கூறப்படுகிறது. இது ஒரு தவறான கருத்து. இந்தியா போன்ற நாட்டில் அரசாங்கத்திற்கு வரவேண்டிய பாக்கிகள் என்பதுதான், மக்களுடைய செலவில் பெரும் பங்காக உள்ளது; அந்தப் பாக்கி களைத் தீர்ப்பதற்காக மக்கள் தங்கத்தைக் கொடுக்கும்போது, தங்கம் அரசாங்கத்திற்குத் திரும்பி வருகிறது என்பதன் பொருள் இது தான் - அவர்கள் தங்கத்தைப் பணமாகச் செலவழிக்கத் தயாராகயிருக் கிறார்கள் என்று கூறப்படுவதற்கான ஆதாரமாக இது உள்ளது. ஆனால், மக்கள் தங்கத்தை விரும்பவில்லை என்பது உண்மை யானால், மக்களே தங்கத்தைக் கோரும்போது அரசாங்கம் அதைத் தர மறுக்கிறது என்ற அம்சத்துடன் எவ்வாறு அது பொருந்துகிறது? நிரந்தரமான மறுப்பு என்பது ஒரு நிரந்தரமான கோரிக்கை என்பதை உள்ளடக்கியில்லையா? இத்தகைய சிந்தனைப் போக்கில் நிலை யான தன்மை இல்லை. உண்மையில், இத்தகைய குழப்பமான ஆலோசனைகள் அனைத்தும் ஒரு உண்மையைத் திசை திருப்பவே பயன்படுத்தப்படுகின்றன; அதாவது, அரசாங்கம் ரூபாய்களை அச்சிட ஆவலாக இருப்பது மக்கள் தங்கத்தை விரும்பாத காரணத் தால் அல்ல: ஆனால், கூடுதலாக ரூபாய், நாணயங்களை அச்சிடு வதிலிருந்து கிடைக்கும் லாபத்திலிருந்து ஒரு தங்க சேமிப்பை ஏற்படுத்துவதற்கு அது ஆவலாக இருக்கிறது என்ற உண்மையைத் திசை திருப்பவே பயன்படுத்தப்படுகிறது. இந்த உள்பொதிந்த நோக்க

வாதமானது, அந்தக் குறிப்பை எழுதியவர் வாதிடும் பகுதியிலிருந்து பிரதானமாக வெளிப்படும் உண்மையான நோக்கத்திற்கான ஒரு மூடுதிரையே ஆகும். அவர் வாதிடுவதாவது:

"16. ஏற்கனவேயே முதலீடு செய்யப்பட்ட 10 கோடியுடன் சேர்த்து 70 லட்சம் பவுண்டு அதிகபட்ச அளவாக, நடப்பு நிலைமைகளின் கீழ்த், தங்க நாணயச் சேமிப்பில் வைக்கப்பட வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்படுமானால், அத்தகைய உதவி சேமிப்பில் மோசடி செய்வதன் மூலம் தான் பெற முடியும் என்பது வெளிப்படை; அது ஒரு தரமான பரிவர்த்தனையைப் பராமரிப்பதன் தொடர்பாக வைத்திருக்க வேண்டியதென்று அறிவுறுத்தப்பட்ட அளவிற்குத் தங்கத்தை அளிக்கத் தவறி விடும். இந்த நோக்கத்திற்குப் போதுமான தொகையைத் திட்ட வட்டமாகக் கூற இதுவரை எந்த உயர்பொறுப்பாளரும் முயல வில்லை; ஆனால், ஒரு கணிசமான அளவு தொகை தேவைப் படுகிறதென்று ஒரு பொதுவான கருத்து இருக்கிறது; நானும் அதனுடன் முற்றிலும் உடன்படுகிறேன். இத்தகையதொரு பெரிய தொகையைப் பெறுவதற்கு மிகவும் தயாரான வழி யானது, தங்கத்தைக் கடன் வாங்குவது என்பதாகும். ஆனால், நாணயக் கமிஷனின் கருத்தானது இத்தகையதொரு வழியை கடுமையாக எதிர்க்கிறது என்பதால் இந்தப் பிரச்சினை விடை யளிக்கப்படாமல் இருக்கிறது: தேவையான அளவு தங்க இருப்பை எவ்வாறு பெறுவது?

"17. இந்தக் கடினமான பிரச்சனைக்கு வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற தீர்வை ஊகிக்க நான் துணிய வில்லை; ஆனால் ஒரு சில ஆலோசனைகளை அளிப்பதற்குத் துணிகிறேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த சிரமத்தைச் சமாளிப்பதற்கு அது கணிசமான அளவு உதவி செய்யக்கூடும் என்று நான் நம்புகிறேன். ஒரு விசேஷமான 'தங்க நாணய பரிவர்த்தனை நிதியை' உருவாக்க விரும்புகிறேன். அது சுதந் திரமானதாக இருக்கும்; ஆனால், பரிவர்த்தனை காரணங் களுக்காக அதிவிசேஷமாகத் தேவைப்படும் நேரங்களில் நாணயச் சேமிப்பின் தங்க ஆதாரங்களோடு சேர்த்துப் பயன் படுத்தப்படும். இந்த நிதிக்கான அடித்தளமானது, தற்பொழுது நாணயச் சேமிப்பில் தங்கமாக வைக்கப்பட்டுள்ள 70 லட்சம் பவுண்டுக்கு மேலே உள்ள தங்கத்தை ரூபாயாக மாற்றும் பொழுது கிடைக்கும் லாபமே.

''ரூபாய்களை அச்சிடுவதற்கான உண்மையான காரணம் குறித்து ஏதாவது ஐயப்பாடு இப்போது இருக்க முடியுமா? மக்கள் தங்கத்தை விரும்பாததால் ரூபாய்கள் அச்சிடப் பட்டன என்று பறைசாற்றிய எழுத்தாளர்கள், இந்தியாவில் பரிவர்த்தனை மதிப்புத் தரத்தின் தோற்றம் குறித்த வரலாற்றைச் சரியாகப் படித்திருக்கிறார்கள் என்று கூறமுடியாது.

ஆனால், காகித நாணய முறை என்ற சரியான முறையை ரூபாய்களை அச்சிடுவதென்ற தன்னுடைய நாசகாரக் கொள்கையினால் சரியற்றதாக்கியவர் தீங்கான அறிவாளி சர்-எட்வர்டு-லா தானா? அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களும், அதைப் போன்றே அதனுடைய ஆதரவாளர்களும், ஆக அனைவருமே, இது பௌலர் குழுவின் லட்சியத்திலிருந்து விலகிச் செல்வதாகும் என்பதை ஒத்துக் கொண்டுள்ளனர்.[1] பௌலர் குழுவின் சிபாரிசுகளில் எந்தத் திட்ட வட்டமான அம்சத்தில் அரசாங்கம் விலகிச் சென்று உள்ளது என்பது இந்தியக் காகித நாணயம் குறித்த அதிகாரப்பூர்வ அல்லது அதிகாரப் பூர்வமற்ற பிரசுரங்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பௌலர் குழுவின் சிபாரிசுகள் என்பவை யாவை? இந்திய அரசாங்கம் வெட்கித் தலை குனியும் வகையில் பௌலர் குழு சொன்னதாக வழக்கமாக சுட்டிக்காட்டப்படுவது, (இது திரும்பக் கூறுவதைப் போன்றது):

''நாங்கள் இங்கிலாந்து சவரனை இந்தியாவில் ஒரு சட்டப்பூர்வ நாணயமாகவும் மற்றும் ஒரு நடப்பு நாணயமாகவும் கொண்டு வருவதற்கு ஆதரவாக உள்ளோம். அதே சமயத்தில், இந்திய நாணயச் சாலைகள் வரம்பின்றித் தங்கக் காசுகளை அடிப்பதற்குத் திறந்துவிடப்பட வேண்டும் என்றும் கருதுகிறோம்.... ஒரு தங்க மதிப்புத்தரத்தையும் மற்றும் தங்கம் வெளியே செல்லவும் உள்ளே வரவுமான கோட்பாடுகளின் அடிப்படையில் காகித நாணயம் சக்தி வாய்ந்த முறையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதை எதிர் நோக்கி நாங்கள் இத்தகைய நடவடிக்கைகளை ஏற்கும்படி சிபாரிசு செய்கிறோம்.''

இது உண்மையே. ஆனால், அரசாங்கத்தைக் குறை கூறுபவர்கள், இதே குழு பின்வருமாறு சிபாரிசு செய்துள்ளதை மறந்து விடுகிறார்கள்.

போதிலும் அந்த அடையாள நாணயங்களின் பெயரளவு மதிப்புக்குச் சட்டபூர்வ வரம்பு நிச்சயிக்கப்படவில்லை; ஏனென்றால், மொத்தப் பரிவர்த்தனையின் மதிப்பு ஸ்திரமாக இருப்பதால் ஒவ்வொன்றுக்கும் ஏன் தனியாக நிச்சயிக்கப்பட வேண்டும்?''

மாற்றப்பட வேண்டிய அவசியம் குறித்துக் கூறுகையில் அந்தக் குழு பின் வருமாறு கருதியது:[1]

''இங்கிலாந்திற்கு வெளியே தங்க நாணய மதிப்புத் தரத்தையும், நாணயத்தையும் இரண்டு நாடுகள் கொண்டுள்ளன; அவை வரம்பெற்ற அளவிற்கு வெள்ளி நாணயங்களையும் அனுமதிக்கின்றன. பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுமே இவ்விரு நாடுகளாகும். பிரான்ஸில், 5 பிராங்க் நாணயம் என்பது வரம்பற்ற அளவுக்குச் சட்டபூர்வ நாணயம் ஆகும்; உள்நாட்டுக் காரியங்களுக்கு தங்கத்திற்கு சமமாக உள்ளது. இதே குறிப்பு அமெரிக்காவில் வெள்ளி டாலருக்கும் பொருந்தும்..... பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் வரம்பற்ற செலாவணியாக வெள்ளி நாணயங்களை அச்சிடாதபடி நாணயச் சாலைகள் தற்போது மூடப்பட்டுவிட்டன. இவ்விரு நாட்டிலும் இத்தகைய நாணயங்களைச் சட்டப்படி தங்கமாக மாற்ற முடியாது; இவ்விரு நாட்டிலும், அது உள்நாட்டுக் காரியங்களில் தங்கத்திற்குச் சமமானதாகும். சர்வதேச அளவில் கொடுக்கப்படவேண்டிய பணத்தைப் பொருத்தமட்டில் பிரான்ஸும், அமெரிக்காவும் சர்வதேசப் பரிவர்த்தனைப் பொருளான தங்கத்தையே இறுதியில் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.கடைசிப் புகலிடமாக அவர்கள் வைத்திருக்கும் தங்கம்தான் அன்னிய பரிவர்த்தனைகளுக்கிடையே செயல்பட்டுத் தங்களுடைய காகித நாணயம் முழுவதையும் அதனுடைய பெயரளவு மதிப்பில் உள்ள நாட்டு விஷயங்களுக்காகப் பராமரித்து வருகிறது.''

முன் கூறிய பாராக்களில் நாம் விளக்கியிருப்பது போல் இந்தியாவின் காகித நாணயப் பிரச்சினை அவ்வாறு உள்ளதால் அந்த நாட்டிற்கான ஒரு வித்தியாசமான கொள்கையை பிரான்சிலும் அமெரிக்காவிலும் பின்பற்றப்படுவதை விட ஒரு வித்தியாசமான கொள்கையை சிபாரிசு செய்வது அவசியம்

1. அறிக்கை பாராக்கள் 57 முதல் 60 வரை.

என்று கருதவில்லை; அதாவது, ரூபாய்கள் கொடுத்துத் தங்கம் கேட்பவருக்கு அதைத் தரும்படியோ அல்லது வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பணம் வைத்திருப் பவர்கள் தேவைக்காகத், தங்கத்தைப் பணத்திற்கு பதிலியாக்கும் பொருட்டோ ஒரு சட்டப்படியான கடமையை இந்திய அரசாங்கத்தின் மீது திணிக்க நாங்கள் விரும்பவில்லை. இந்தக் கடமையானது இந்திய அரசாங்கத்தின் மீது ஒரு சட்டப் படியான கடன் பொறுப்பை, அதாவது முன்னமேயே குறிப் பிடாமல், திடீரெனப் பணத்தைக் கொண்டு வந்து தங்கத்தைக் கேட்பவர்களுக்கு அதை ஒரு நொடியில் தர வேண்டிய சட்டப்படியான கடன் பொறுப்பை ஏற்படுத்திவிடும்; எங்கள் கருத்துப்படி இந்தச் சட்டப்படியான கடன் பொறுப்பு ஏற்கப் படத் தேவையில்லை.''

இந்தக் குழுவானது தன்னுடைய கருத்துக்களில் உறுதி கொண்டிருந்த போதிலும், பணச் சுழற்சியில் ஏராளமான ரூபாய் களை வைத்திருந்தவர்களின் வாதங்களினால் ஆகர்ஷிக்கப்பட்டு சில சந்தேகங்களைக் கொண்டிருந்தது:

''இந்திய நாணயச் சாலையில் வெள்ளி நாணயங்களை அச்சிட மறுத்ததானது, ரூபாயை ஒரு திட்டவட்டமான விகிதத்தில் தங்கத்திற்கு நிரந்தரமாகப் பரிவர்த்தனை செய்ய முடியும் பொருட்டு நடைமுறையில் காகித ரூபாய்களை அச்சிடுவது குறித்தும் இத்தகைய ஒரு கட்டுப்பாட்டை விதிக்குமா; இத்தகைய ஐயப் பாடுகளினால் அதிர்ச்சியுற்ற குழுவானது பின் வருமாறு ஒத்துக் கொண்டது.

''ரூபாயின் தங்க மதிப்பை பாதிக்கக்கூடிய சக்திகள் சிக்க லானவை என்பதுடன், அவற்றின் செயல்முறைகள் கண்ணுக்குப் புலப்படாதவையுமாகும்; ஆகையால், நாணயச் சாலைகளில் வெள்ளி நாணயங்களை அச்சிட மறுப்பது நடைமுறையில் காகித ரூபாய் அச்சிடுவதை ஒரு வரம்புக்கு இட்டுச் செல்லும் என்றும், அது குறித்த தேவைக்கு வரம்பு கட்டும் என்றும், பணத்தை ஒரு குறித்த விகிதத்தில் தங்கத்திற்கு நிரந்தரமாகப் பரிவர்த்தனை செய்ய இட்டுச் செல்லும் என்றும் கூற இயலாது.''[1]

இந்தக் குழுவானது இத்தகையதொரு அவசரத் தேவைக்குத் தீர்வாக ஒரு கருத்தைக் கூறியது; எப்பொழுதெல்லாம் ரூபாய், நாணய

மதிப்பை விடக் குறைகிறதோ, அப்பொழுதெல்லாம் அயல் நாடு களுக்கு அனுப்ப வேண்டிய பணத்திற்காக ரூபாயைத் தங்கமாக மாற்றித் தரும் கடமையை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கருதியது. இத்தகையதொரு எளிய தீர்வைக் கண்ட பின் எழும் அடுத்த கேள்வியானது, அரசாங்கம் எவ்வாறு அத னுடைய தங்க சேமிப்பைப் பெற்றிருக்கும்? அத்தகையதொரு தங்க சேமிப்பைப் பெற்றிருப்பதற்கு ஒரு வழி கடன் வாங்குவது என்ப தாகும். ஆனால் அந்தத் திட்டமானது குழுவிற்கு ஏற்புடைய தல்ல. ஏனென்றால், அதனுடைய அறிக்கையின் மற்றொரு பகுதி யில் அது அரசாங்கத்தைக் கண்டிக்கிறது.[1]

> ''தங்கள் நிதி ஆதாரங்களைச் சிக்கனமாக நிர்வகித்தல், ஒரு உறுதியான பொருளாதாரத்தைக் கொண்டிருத்தல், மற்றும் தங்கம் குறித்த தங்களது கடமைகள் அதிகரிப்பை கட்டுப் படுத்தல்.
>
> அல்லது கடன் வாங்குவது என்பது ஒரு தீங்கான கோட்பாடு.
>
> ஒரு தங்க நாணய மதிப்புத் தரத்தை நிறுவுவது அல்லது பராமரிப்பது''[2]

தங்கம் கடன் வாங்குவது என்ற திட்டத்தைக் குழு வெறுக் கிறது. ஆனால், கடன் வாங்குவதன் மூலம் தங்க சேமிப்பு உரு வாக்கப்படக் கூடாதென்றால் வேறெந்த வழிகளில் அதை உருவாக்க முடியும்? இந்தக் குழுவானது, அதனுடைய உறுப்பினர் ஒருவர் அறிவு மந்த நிலையில் ஒரு ஆலோசனை கூறும் வரை, தங்க சேமிப் பிற்கு மாற்று வழிமுறைத் திட்டத்தைக் கண்டுபிடிக்கும் பிரச்சினை யில் கணிசமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது; அந்த உறுப்பினர் கூறினார்: 'நல்லது, ரூபாய்களை அச்சிடுவதற்கு அரசாங்கங்களை ஏன் அனுமதிக்கக்கூடாது? அது அனுமதிக்கப் பட்டிருக்குமானால் அது கடன் வாங்காமல் ஒரு தங்க சேமிப்பைச் சுலபமாக உருவாக்கியிருக்க முடியும்; அதன் பிறகு அயல் நாட் டிற்கு அனுப்ப வேண்டிய பணத்தை மாற்றித் தரும் கடமையை அது நிறைவேற்ற முடியும்' இந்த யோசனையானது தீங்கற்றதாகக் கருதப்பட்டு குழு அதை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டது; ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் அதனுடைய அறிக்கையிலும் அதை

---

1. அறிக்கை பாரா. 70

2. See the Reservations to the Report by Campell Holland and Muir Report P. 27.

உள்ளடக்கிக் கொண்டது; அதனுடைய உறுதியான வார்த்தைகளில் அதைத் தவறின்றிக் காணமுடியும்.

ரூபாய் நாணயங்கள் அச்சிடுவதற்கு அரசாங்கத்திற்கு அனுமதி யளிக்க இந்தக் குழு தெரிவித்த காரணங்களுக்கு இது சரியான அல்லது சரியற்ற விளக்கமாக இருக்கலாம். ஆனால், இந்த சிபாரிசில் அடங்கியிருப்பது என்ன என்பதை அந்தக் குழு உணரவில்லை என்ற அம்சம் அப்படியே உள்ளது. முதலாவதாக, ரூபாய் நாணயம் அச்சிடுவது தொடருமனால் தங்க நாணய மதிப்புத் தரம் மற்றும் காகித நாணயம் ஆகியவற்றிற்கு என்ன ஏற்பட்டிருக்கும்? இது சம்பந்தமாக ஒரு புறத்தில் தங்க நாணயத் தரம் மற்றும் காகித நாணயம் என்ற லட்சியத்தையும் மறுபுறத்தில் ரூபாய் நாணயங்கள் அச்சிட அனுமதிப்பது என்பதையும் வரையறுத்துள்ள ஒரு குழுவை, 1819ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் தேதியன்று பின்வரும் அபகீர்த்தி வாய்ந்த தீர்மானத்தை இயற்றிய இங்கிலாந்து வங்கி இயக்கு நர்கள் குறித்து பகேஹோட் (Pagehot) கொண்டிருந்ததைவிட அதிக மரியாதை அளிப்பது சாத்தியமா?

> ''வங்கியானது பரிவர்த்தனைகளில் நல்ல பலனை அடையும் பொருட்டும், மதிப்பு வாய்ந்த உலோகங்கள் வந்து குவியும் பொருட்டும் பத்திரங்கள் வெளியிடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சிலர் கூறுவதை நிர்வாக சபை ஆராயாமல் முடியாது. ஆனால், இத்தகைய கருத்துக்கு எவ்வித சரியான ஆதாரமும் இருக்கவில்லை என்றே நிர்வாக சபை கருதுகிறது.''

இயக்குநர்களின் கருத்துக்கள் அவற்றினுடைய முட்டாள் தனத்திற்குத் தனிச்சிறப்பு வாய்ந்ததென்றால், பௌலர் குழுவின் கருத்துக்கள் அதை விடக் குறைந்ததா? அவைகளுக்கிடையில் வித்தியாசம் ஏதும் உண்டா? அந்தத் தீர்மானத்தில் உட்பொதிந் திருந்த உணர்வுகளைக் குறித்து பகேஹோட் விமர்சிக்கையில் அது, பௌலர் குழுவின் சிபாரிசுகளிலிருந்து வித்தியாசப்படவில்லை என்று கூறுகிறார்.... அந்த இயக்குநர்கள், பொருளாதார ரீதியான தாக்கம் குழப்பமாக இருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள்; அவர்கள் பத்திரங்கள் குறித்துத் திருப்தியாக இருந்தார்கள்; தங்கம் குவிவதைப்

இயக்குநர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட மூதுரையாக இதைக் கருதும் நேரத்தில், அதற்கு மாறாக பௌலர் குழு தங்கள் சிபாரிசுகளை உருவாக்கியுள்ளார்கள். தவிரவும், இந்திய நாணயப் புழக்கத்திற்குள் தங்கம் வந்து குவிவது குறித்து அவர்கள் ஆவலாக இல்லை யென்று சொல்ல முடியாது. மறுபுறத்தில் அதைத்தான் அவர்கள் ஆவலோடு எதிர்நோக்கியிருந்தனர். இதன் பொருட்டு அவர்கள் தங்களுடைய வார்த்தைகளை மிகச் சாக்கிரதையாக எடைபோட்டுத் தங்களுடைய பிரதான நோக்கத்திற்கு முரண்படுகிற எதையும் அனுமதித்திருக்கக் கூடாது. 'கிரேஷம் விதி' என்று அறியப்பட்ட அந்த அடிப்படையான கோட்பாட்டிற்குப் போதுமான கவனம் செலுத்தாததால் அந்தக் குழுவானது தன்னை முட்டாளாக ஆக்கிக் கொண்டது மட்டும் அல்ல: அதனுடைய அறிக்கையின் முதல் பகுதியில் அது உருவாக்கிய பிரதான லட்சியத்தையே அது தோற்கடித்து விட்டது.

இரண்டாவதாக, ரூபாய்களை அச்சிடும் ஓர் அதிகாரத்தை அரசாங்கத்திற்கு அளிக்க வேண்டியது தேவைதானா? தீர்மானிக்கப் பட வேண்டும் என்று இக்குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட பிரச்சினையின் தன்மைதான் என்ன? நாம் அதை மீண்டும் விவ ரிப்போம். ஹேர்சல் குழுவானது[1] 1892ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் தன்னிடம் அளித்த ஆலோசனைகளை மாற்றியமைக்கும் முறையில் ஒரு பாதுகாப்பான வாசகத்தை அதில் புகுத்தியது; அதன் மூலம் நாணயச் சாலைகள் பொதுமக்களுக்கு மூடப்பட்டது என்றா லும், ரூபாய்களை அச்சிடுவதற்காக அரசாங்கத்திற்குத் திறந்து வைக்கப்பட வேண்டும்; இந்த விதி காண்பிப்பது என்னவென் றால், ஆய்வுக்குப் பின்னரும் கூட இந்தக் குழுவானது அது ஆராய்ந்த நாணய முறைகளில் காகித நாணயம், தங்கத்துடனான, சிறிது தங்கத்துடனோ அல்லது தங்கம் இல்லாமலோ எவ்வாறு அதனுடைய சமன நிலையைப் பராமரித்தது என்ற ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் மிக அதிக அளவு அறியாமையில் இருந்தது. வெளி யிடுவதற்கான வரம்பு என்பதுதான் இச் சமன நிலையைப் பரா மரிக்கிறது என்று அது புரிந்து கொண்டிருந்தால் அது அறிமுகப் படுத்தியிராது. எனினும், இந்த விதி தீங்கானது என்ற போதிலும், இந்த அனுபவ அறிவற்ற தவறைச் செய்ததற்காக அந்தக் குழு மன்னிக்கப் படலாம்; ஏனென்றால், நாணயச்சாலை மூடப்பட்டதால் காகித நாணயப் புழக்கம் திடீரெனச் சுருங்கிவிடும் என்று அந்தக் குழுவானது

1. பார்க்க: இயல் - 4ல் ப. 571.

பயந்ததாலும், தங்கத்தைச் சட்டப்பூர்வச் செலாவணியாக ஆக்காததால் அது காகித நாணயத்திற்குக் கூடுதலாக ஏற்பாடு செய்ய வேண்டியது தேவை என்றும் கருதியது; ரூபாய்களை அச்சிட அதிகாரம் பெற்ற அரசாங்கம் இதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்றும் அது கருதியது. அதிர்ஷ்டவசமாக, இந்தக் கூடுதலைச் செய்ய வேண்டிய வாய்ப்பு அரசாங்கத்திற்கு 1898 ஆம் ஆண்டு வரை எழவில்லை; ஆகையால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை எழவில்லை. முன்பு கூறியபடி, அத்தகையதொரு நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டபோது, அது அந்த அதிகாரத்தைப் பயன் படுத்த மறுத்தது - இந்தியக் காகித நாணயத்திற்குத் தேவைப்படும் கூடுதல்கள் ரூபாய்களை மேலும் அச்சிட்டுக் கொள்வதற்குப் பதிலாகத் தங்கம் அதிகமாக வருவதன் மூலம் செய்ய முடியும் என்ற கருத்தை அது கொண்டிருந்தது. ரூபாய் நாணயங்களை அச்சிடு வதன் மூலம் தேவைப்படும் கூடுதல்களைச் செய்வது பாதுகாப்பானது மற்றும் பொருளாதார ரீதியில் நல்லது என்றும் கிளர்ச்சி செய்து நிர்ப்பந்தம் கொடுத்து கொண்டிருந்த திரு. லிண்ட்சேயின் பலமான எதிர்ப்பாளராக அரசாங்கம் இருந்தது. ஒருபுறம் இந்திய அரசாங்கத் திற்கும், மறுபுறம் திரு. லிண்ட்சேயிற்குமிடையிலான இந்தத் தகராறை அரசாங்கம் நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டியிருந்து; இந்திய அரசாங்கம் தங்க நாணயங்களை அச்சிடுவதன் மூலம் கூடுதல்கள் வெளியிட விரும்பியது: திரு. லிண்ட்சே ரூபாய்களை அச்சிடுவதன் மூலம் அதைச் செய்ய விரும்பினார்; இதன் காரணமாக பௌலர் குழு உருவாக்கப்பட்டது. தங்கம் வந்து குவிவதை விடக் காகித நாணயத்திற்குக் கூடுதலாக அதிக ரூபாய்கள் அச்சிடப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆவலாய் இருந்திருந்தால், பௌலர் குழுவை நியமிக்க வேண்டிய தேவையே இருந்திராது. அத்தகையதொரு அதிகாரம் அதற்கு ஏற்கனவேயே ஹெர்சல் குழுவால் கொடுக்கப் பட்டிருந்தது. அரசாங்கம் அத்தகைய தீங்கான அதிகாரத்தைப் பயன் படுத்த விரும்பாததால், ஒரு புதிய குழுவிற்கு மேல் முறையீடு செய்வது அவசியமாகியது. நாணய முறையில் ஏற்பட்ட பண முடைக்குத் தீர்வு காணும் பொருட்டுக் காகித நாணயத்தை எந்த அளவுக்கு விரிவுபடுத்துவது என்ற உடனடிப் பிரச்சினையை எதிர் நோக்கியிருந்த குழுவானது, அதற்குத் தனது அறிக்கையின் ஒரு பகுதியில் தீர்வு கண்டுள்ளது; அதாவது, தங்கம் என்பது சட்டப் பூர்வச் செலாவணியாக ஆக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு செய்தால், பணத்தைக் கொடுத்துக் கடனைத் தீர்க்க இயலாதவர்,

அறிக்கை கூறியது. பரிவர்த்தனையின் பொதுவான சாதனமாகத் தங்கம் இருக்க அனுமதிக்கப்பட்டால் ரூபாய்களை அச்சிட வேண்டும் என்ற யோசனையானது மிகையானதும் தேவையற்றதும் ஆகும் அல்லவா?

மூன்றாவதாகத் தங்கச் சேமிபபை அதிகரிப்பதற்கான சாதனமாக ரூபாய்களை அச்சிட வேண்டும் என்ற யோசனையானது, ரூபாயின் மதிப்பைப் பராமரிப்பதைக் கருத்தில் கொண்டது என்று நியாயப் படுத்த முடியுமா? ரூபாயின் மதிப்பைப் பராமரிக்க வேண்டும் என்றால் அதை வெளியிடுவதற்கு ஒரு வரம்பு விதிப்பது அத்தியாவசியமான ஒன்றாகும். ஷில்லிங் நாணயம் வெளியிடுவதற்கு வரம்பு விதிக்கப் பட்டிருப்பதைத் தொடர்ந்து அதனுடைய மதிப்பு பராமரிக்கப்படு கிறதென்று இந்தக் குழு மிகவும் கற்றறிந்த முறையில் பேசுகிறது. ஆனால், அதனுடைய அளவுக்கு வரம்பு உள்ள ஷில்லிங் எவ்வாறு தனது மதிப்பைப் பராமரிக்கிறதென்பதை இந்தக் குழு புரிந்து கொண்டதா? செலாவணி நாணயத்தின் மீதான வரம்பல்ல, ஆனால் மொத்த நாணய அளவின் மீதான வரம்பு தான் ஷில்லிங்கின் மதிப்பைப் பராமரிக்கிறது என்பது உண்மையானால் ஷில்லிங் ஏன் வரம்பற்ற அளவில் வெளியிடப்படவில்லை? ஷில்லிங்கைத் தயார் செய்வது ரூபாயைத் தயார் செய்வது போனறே லாபகரமான தாகும். இங்கிலாந்து அரசாங்கம் ஏன் அதை வரம்பற்ற அளவிற்கு அச்சிடவில்லை? வரம்பற்ற அளவுக்கு ஷில்லிங்கைக் கொடுக்க முடியாதென்பதுதான் காரணமா? அரசாங்கமானது அதனுடைய நிதி அமைச்சருக்கு, அரசாங்க அமைச்சர்களுக்கு, மற்றும் ஏராளமான அதிகாரிகள் மற்றும் எழுத்தர்களுக்கு அவர்களுடைய ஊதியத்தை ஷில்லிங்குகளால் கொடுத்து, அவர்கள் தங்கள் முறைக்குப் பலசரக்கு கடைக்காரர்கள், பால்காரர்கள், மதுபான வியாபாரிகள் மற்றும் கசாப்புக் கடைக்காரர்களுக்கு ஷில்லிங்குகளால் கொடுக்க முடியும் என்றால், ஷில்லிங்குகளை அதிகமாக அச்சிடுவதைத் தடுப்பற்கு எதுவும் இல்லை. அளவற்ற அளவுக்கு ஷில்லிங்குகளை யாரும் கொடுக்க முடியாது என்ற காரணத்தால் அளவற்ற அளவுக்கு யாரும் அதை வைத்திருப்பதில்லை. சட்டப்பூர்வ நாணயத்திற்கு வரம்பு இருக்கும் காரணத்தால் மொத்தச் சந்தை இல்லை என்பது, அளவுக்கு மீறி ஷில்லிங்குகளை அச்சடிப்பதென்பதிலிருந்து அரசாங்கத்தைத் தடுத்துள்ளது. எனவே, சட்டப்பூர்வ நாணயம் மீதான வரம்பு என்பது ஷில்லிங் மதிப்பைப் பராமரிப்பதோடு சம்பந்தப்பட்டதல்ல என்று இந்தக் குழு வாதிடுவது தவறானது ஆகும். மறுபுறத்தில் நாணய வெளியிடலுக்கு வரம்பு விதிப்பதுதான் ஒரு அடையாளப்

பூர்வ நாணயத்தின் மதிப்பைப் பராமரிப்பதற்கான முக்கிய நிபந்தனை என்றால், சட்டப்பூர்வ நாணயம் மீது வரம்பு விதிப்பதுதான் அத்தகையதொரு வரம்பை வெற்றிகரமாக்குவதற்கான ஒரு வழியாகும்.

நாணய மாற்றம் குறித்த அதனுடைய கண்ணோட்டம் சம்பந்தப்பட்டமட்டில், அது சொல்லும் காரணங்களும் அந்த அளவிற்குக் குழப்பி விடுகின்றன. பிரான்சுக்கும் அமெரிக்காவிற்கும் போதுமானது எதுவோ, அது, இந்தியாவிற்கும் போதும் என்று சொல்வதானது, குருடன் மற்றொரு குருடனை அழைத்துச் செல்வது போல் ஆகும். அது நாணய மாற்றமல்ல: ஆனால் அவர்களுடைய தங்கம்.

''அன்னியப் பரிவர்த்தனைகளின் ஊடே செயல்பட்டு, அவர்களுடைய காகித நாணயம் முழுவதையும் உள்நாட்டுக் காரியங்களுக்கு அதனுடைய பெயரளவில் மதிப்பில் பராமரிக்கிறது'' என்று வாதிடுவது முற்றிலும் தவறானதாகும். மாறாக, பிரான்சுக்கும் அமெரிக்காவுக்கும்தங்களுடைய காகித நாணயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நாணய மாற்றம் தேவைப்படவில்லை. ஏனென்றால் வெள்ளி ப்ராங்க்கும், வெள்ளி டாலரும் அளவில் முற்றிலும் வரம்புக்கு உட்பட்டவை. சொல்லப்போனால் அதிகத் தங்க வரத்தினால் பாதுகாக்கப் படுவதற்குப் பதிலாக நாணய வெளியீட்டை வரம்புக்கு உட்படுத்தியதானது, அவற்றினுடைய மதிப்பைப் பராமரித்ததோடு மட்டும் அல்ல, அந்நாடுகளில் எந்த அளவிற்கு தங்கம் இருந்ததோ அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் அனுமதித்தது. அந்தக் குழு வானது தற்சமயம் நீண்ட, மற்றும் அர்த்தமற்ற வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதற்கு பதிலாக அதிகமான அளவில் நாணயம் வெளியிடு வதைக் கட்டுப்படுத்த வேறு பல வழிகள் அங்கே இருக்கும்வரை, ரூபாய் சம்பந்தப்பட்ட மட்டில் செலாவணிக்கு ஒரு வரம்பு விதிப்பது குறித்தோ அல்லது நாணயம் மாற்றம் குறித்தோ விதிமுறை செய்வ தற்கு அவசியம் இல்லை என்று வலியுறுத்தியிருக்க வேண்டும். சட்டப் பூர்வ நாணய வரம்பு அல்லது நாணய மாற்றம் என்பது, அவை நாணய வெளியிடலுக்கு வரம்பு கட்டுவது என்பதைக் கொண்டு வரும் கருவியாக இருப்பதால் மட்டுமே அவை அத்தியாவசிய மானவை என்று சொல்ல முடியும்; நாணய வெளியிடலுக்குத் தேவைப்பட்ட வரம்பை வேறுவழிகளில் அளிக்க முடியுமானால் நாணய மாற்றம் அல்லது சட்டப்பூர்வச் செலாவணிக் கட்டுப்பாடு

அளவுக்கு ஒரு போதுமான வரம்பு ஆகாதா? சொல்லப்போனால், நாணயச் சாலைகள் மூடப்பட்டது ரூபாய்கள் வெளியிடுவது மீது சக்தி வாய்ந்த வரம்பாக இல்லை என்றால், வேறு எது இருந் திருக்கக் கூடும்? நாணயச் சாலைகள் மூடப்பட்டதானது காகித நாணயங்களை ஒழுங்குபடுத்துவது என்பதில் நிச்சயிக்கப்பட்ட வெளியீட்டு முறை என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் காகித நாணயத்தை ஒழுங்குபடுத்தியது போன்று ஆகாதா? அது அவ்வாறு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு இருக்கையில் எழக்கூடிய ஒரே ஒரு கேள்வியானது, சுழற்சியில் ஏற்கெனவே இருக்கக் கூடிய ரூபாயின் மொத்த அளவானது, நாட்டின் உள்நாட்டுச் சுழற்சிக்காக எப்பொழுதும் தேவைப்படும் பணத்தின் குறைந்த பட்ச அளவைவிடக் குறைந்துள்ளதா? இந்திய அராங்கமானது சுழற்சியில் உள்ள ரூபாயின் மொத்த அளவு அத்தகையதொரு குறைந்தபட்ச அளவைவிட அதிகமாகிக் கொண்டுவருகிறது என்பதை முன்பே கண்டு அதற்கெதிராக நடவடிக்கை எடுத்தது. அரசாங்க மானது, 1898 ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் தேதி அனுப்பிய தகவலில் தங்களுடைய திட்டங்களை வரையறை செய்து பின்வருமாறு கூறியது:-

> ''9..... இந்தத் தவறுக்கான பிரதான காரணங்களில் ஒன்று (ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பைப் பராமரிப்பது) நாணயச்சாலைகள் மூடப்படுவதற்கு முன்பாக நமது ரூபாய் சுழற்சியானது முழுமையாக, முழுமையிலும் அதிகமாக, வர்த்தகத்திற்குத் தேவையான அனைத்தையும் அளிக்கும் அளவுக்கு அதிகரித்துத் தங்கம் என்ற வடிவில் மேற்கொண்டும் எவ்விதக் கூடுதலுக்கும் இடமில்லாது செய்து விட்டதுதான் என்று நாங்கள் தற்பொழுது தெரிந்துள்ளோம்..... இரண்டு நாடு களுக்கிடையே நிலையான பரிவர்த்தனை விகிதம் இருக்க அவசியமான நிபந்தனையானது ஒரு நாட்டின் காகித நாணயம் மற்றொரு நாட்டோடு ஒப்பிடும்பொழுது தேவைக்கதிகமாக இருந்தால், அவ்வாறு அதிகமாக உள்ள நாணயம் ஒரு காலத் திற்குச் சுழற்சியிலிருந்து எடுக்கப்பட்டு விடவேண்டும் என்ப தாகும்; எனவே, நமது சுழற்சிச் சாதனமானது நாட்டிற்கு வெளியே சம மதிப்பைப் பெற்றிராத வெள்ளி நாணயத்தால் முழுவது மாக அமைந்திருக்க வேண்டாம்; ஆனால், இதர இடங்களிலும் நாணயமாகப் பயன்படுமளவுக்குத் திறன் பெற்றதாக இருக்கும் வகையில் ஓரளவு தங்கத்தையும் கொண்டதாக இருக்க வேண்டும்; இதன் மூலம், அது எங்கே அதிகம் தேவைப்

படுகிறதோ அந்த இடத்திற்கு இயல்பான வழியில் பாய்ந் தோடும். நம்முடைய மொத்தக் காகித ரூபாய், தற்சமயம் ஏறத்தாழ 120 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது; இதோடு சேர்த்து 10 கோடிக்கு நாம் காகித ரூபாய் நம்பிக்கைப் பத்தி ரங்கள் வெளியிடலாம்.

''10. தேவைக்கதிகமாக உள்ள ரூபாய் சுழற்சி குறித்துச் சரியாகச் சொல்லுவது சாத்தியமற்றது; இதில் தேவைக் கதிகமாக உள்ளதை அகற்றும் பொருட்டு அதன் சுழற்சியை எந்த அளவு குறைக்க வேண்டுமென்பது உண்மையான அனுபவம் மூலம் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும்.... ஆனால், இந்தத் தொகை சமாளிக்கக் கூடிய வரம்புக்குள்தான் இருக்கிறதென்று சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. உதா ரணத்திற்குச் சொல்வதென்றால், அரசாங்க பொக்கிஷசாலை களில் இருப்பது உள்ளிட்ட தொகை உட்பட சுழற்சியிலுள்ள காகித நாணயங்கள் ஏறக்குறைய 24 கோடிக்கு இருக்கும். தற்பொழுது சுழற்சியிலுள்ள காகித நாணயம் முழுவதையும் 160 லட்சம் பவுண்டு தங்கமாகத் திடீரென மாற்றுவதாக நாம் கற்பனை செய்வோம்; உண்மையில் நடப்பிலுள்ள சுழற்சியில் ஒரு பகுதியாவது இல்லாமல் இந்திய வர்த்தகம் செயல்பட முடியாது; வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஏற்றுமதி வேகத்தைக் குறைக்கும் பொருட்டு ரூபாயின் மதிப்பை ஓரளவுக்கு உயர்த்தாமல், அந்தத் தொகைக்குரிய தங்க நாண யத்தை வெளிநாட்டுக்கு அனுப்புவது சாத்தியமல்ல. இதுதான் பிரச்சினை என்றால், 24 கோடி ரூபாய் வெளியில் இருக்கும்; ஒரு தங்க நாணயம் 16 ஷில்லிங் என்ற நிரந்தரமான பரிவர்த் தனை விகிதத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்; இதோடு சேர்ந்து ஒப்பீட்டு மதிப்பில் தங்கச் சுழற்சியும் இருக்கும்; இந்த நாணய மாற்றுக்கு இந்த 24 கோடி ரூபாய் என்பது அதிகபட்சத் தொகையாகும்; தேவைப்படும் தொகை இதைவிடக் குறை வாகத்தானிருக்கும்.

''11. நாணயச் சுழற்சியில் குறைத்தல் என்பது 1893 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது போன்ற அதே வழியில் செய்யப் படலாம்; அதாவது, நமது நிலுவையைவிட 20 கோடி அதிகமாக நமது சேமிப்பு வரும்வரை கவுன்சில் உண்டியல்கள் மூலம்

போல் சக்தியற்றதுமாகும்; முதலாவதாக 20 கோடியை நிரந்தரமாக முடக்கி வைப்பதென்பது அதன் மீதான வட்டியை நாம் இழக்கச் செய்யும் அல்லது பணம் எடுப்பதை நிறுத்தி வைத்த காலத்தில் இங்கிலாந்தில் தங்கம் கடன் வாங்கிய தொகைக்கு வட்டி இழப்பை ஏற்படுத்தும்; இரண்டாவதாக, வெள்ளி நாணயம் குவிந்திருப்பதானது பரிவர்த்தனை சந்தை நிரந்தரமான தீங்காகி விடும் என்பதுடன் ரூபாயின் எதிர்காலம் மீது நம்பிக்கை வைப்பதை முற்றிலும் தடுத்து விடும். அந்தத் தொகையை நாம் சுழற்சியிலிருந்து எடுத்து விடுவதோடு மட்டுமல்ல: ஆனால், நமது நோக்கமானது அது நாணய வடிவிலிருப்பதை நிறுத்திவிட்டு அந்த நாணய இடத்தைத் தங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் கடைப்பிடிக்கும் முறை மூலம் காண்பிக்க வேண்டும். ஆகவே, நமது திட்டமானது நடப்பிலுள்ள ரூபாய் நாணயத்தை உருக்கி, உருவழித்துப் பிழம்பாக்கியவுடன் வெள்ளியின் இடத்தை எடுத்துக் கொள்வதென்ற நடைமுறை காரணத்திற்காகவும் மற்றும் நமது நடவடிக்கைகளில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும் முதலாவதாக ஒரு தங்கச்சேமிப்பை (கடன் வாங்குவதன் மூலம்) ஏற்படுத்த வேண்டும்.''

சுழற்சியிலுள்ள ரூபாய்களின் மொத்த அளவானது தேவைக்கும் அதிகமாகியுள்ளது என்று அந்தக்குழு கூறியதானது பரிவர்த்தனை அதிகரித்து வந்ததன்மூலமும், தங்கம் குவிந்து கொண்டிருந்ததன் மூலமும் நிரூபிக்கப்பட்டது. எனவே, நாணயச்சாலைகள் மூடப்பட்டதானது ஒருசக்திவாய்ந்த வரம்பை ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை; இதைக் குழுவும் ஒத்துக் கொண்டுள்ளது. [1]ஆனால், நாணயச்சாலைகள் மூடப்பட்டதானது சுழற்சியிலுள்ள ரூபாய்கள் அளவுமீது சக்திவாய்ந்த வரம்பைக் கொண்டிருக்க வில்லையென்றால் தீர்வுதான் என்ன? அயல்நாட்டுக்கு அனுப்ப வேண்டிய பணத்தை மாற்றித் தருவதற்கென உறுதி செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்ட தங்கசேமிப்புத் திட்டமானது, அதிகப் பணத்தை அச்சிடுவதன்மூலம், அந்த நோக்கத்தை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டதா? ஷில்லிங்கின் மதிப்பில் செய்ததுபோல் ரூபாய்களுக்கு வரம்பு விதிப்பதென்பது அவற்றினுடைய மதிப்பைப் பராமரிக்குமென்றால், தேவைக்கதிகமாயுள்ளது

1. அறிக்கை, பக்கம் 17

என்று குழு பயந்த ரூபாய்களின் அளவைத் தங்க சேமிப்பின் பொருட்டு மேலும் அதிகரிப்பதற்கான அனுமதியானது அந்த அளவைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதா?

பௌலர் குழுவின் அறிக்கையை எரிச்சலடையாமல் படிப்பதென்பது சிரமமானது. ரூபாய்களை அச்சிடுவதற்கான அனுமதியானது அனைத்துவழியிலும் கேடுவிளைவிப்பதாகும். அது ஒரு உண்மையான தங்கத் தரத்தை நாசம் செய்வதாகும்; அது, பணத் தட்டுப்பாட்டுக்கு எதிரான நிவாரணமாகத் தேவைப்படவில்லை என்பதுடன், ரூபாயின் மதிப்பைக் குறைப்பதை நோக்கமாகவும் கொண்டது. ஐயத்திற்கிடமின்றி இருந்ததுபோல, அது ஒரு தங்க நாணய மதிப்புத்தரம் மற்றும் காகித நாணயத்தைக் கொண்டிருக்க ஆவலாக இருந்ததென்றால், அது நாணயங்கள் அச்சிடப்படுவதை முற்றிலும் நிறுத்தியிருக்கவேண்டும் என்பதுடன், தங்கத்திற்குப் பண மாகத் தர அரசாங்கம் தயாராக உள்ளது என்ற அறிவிப்பையும் வெளியிடாது செய்திருக்கவேண்டும். அதைச் செய்யத்தவறியதானது நாடு ஒரு நல்லமுறையை இழக்கும்படி செய்துவிட்டது என்ப துடன், உண்மையில், கவனக்குறைவாக என்றபோதிலும் காகித நாணயம் உள்ளிட்டு இந்திய நாணயம் முழுவதையும் 'மாற்ற முடியாத ரூபாய்' என்ற அடிப்படை மீது வைக்க உதவியுள்ளது. ஹெர்சல் குழு அறிமுகப்படுத்தி, பௌலர் குழு எவ்வித இரக்கமு மின்றி ஆதரவளித்த அந்தத் தீங்கான விதியின் முக்கியத்துவத்தைச் சிலரே உணர்ந்துள்ளனர்; அதாவது, தங்கத்திற்காக ரூபாய்களைத் தரஅரசாங்கம் எப்பொழுதும் தயாராகவிருக்கிறது: ஆனால், ரூபாய் களுக்கு அரசாங்கம் தங்கம் தரவேண்டும் என்ற எதிர்விதி இல்லாத தால், இந்த விதியானது இங்கிலாந்து வங்கி, மாற்றமுடியாத காகித ரூபாய்களை வெளியிடுவதற்கு வங்கிக் கட்டுப்பாடு அதிகாரம் பெற்றிருந்ததைப் போலவே மாற்றமுடியாத காகித ரூபாய்களையும் சட்டப்பூர்வ நாணயமாக வரம்பின்றி வெளியிடுவதற்கு இந்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிப்பதான ஒரு சுலபமான மூடு திரையே ஆகும். சரியான திசைவழியில் முதலாவதாக எடுக்க வேண்டிய நடவடிக்கை, இந்த அறிக்கையை ஒதுக்கித் தள்ளிவிட்டு மேலே குறிப்பிட்ட இந்திய அரசாங்கத் தகவல் வரையறுத்தபடி ஒரு பாதுகாப்பான மற்றும் சரியான ஆலோசனைகளுக்கு வேகமாகத் திரும்பிவருவதென்பதாகும். முதலாவது நிபந்தனையானது, நாண யங்கள் அச்சிடுவதை நிறுத்துவதுதானே தவிரப் பொதுமக்கள்

தானா என்பது, ரூபாய் எந்த அளவு தங்கமதிப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைப் பொறுத்துள்ளது. எந்தளவு ரூபாய் சுருக்கப் படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கொண்டு நாணயங்கள் அச்சிடப்படுவது நிறுத்தப்பட்டவுடன் தங்குதடையின்றித் தங்கம் உள்ளே வந்துவெளியே போவதை அடிப்படையாகக் கொண்டு ஒரு சக்திவாய்ந்த தங்கநாணய மதிப்புத்தரத்தைக் கொண்டிருக்கும் நிலையில் இந்தியா இருக்கும். சட்டப்பூர்வ நாணயமான ரூபாயைக் குறைக்க வேண்டிய தேவையும், அதை மாற்றவேண்டிய தேவையும் அவசியப்படாது. சுழற்சியிலுள்ள அதனுடைய அளவு, குறைந்தபட்ச அளவுக்கு கீழேயே எப்பொழுதும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப் பட்டால், அதனுடைய மதிப்பானது, வரம்புக்குட்பட்ட அதனுடைய அளவைக் கொண்டு அப்படியே பராமரிக்கப்படும். நடப்பில் உள்ள காகித நாணயமுறையின் ஆதரவாளர்கள், அந்தக் காகித நாணயம் சிக்கனமானது மற்றும் பாதுகாப்பானது என்று துவக்ககால முதலே கூறிவருகிறார்கள். தங்கம் மற்றும் சரக்குகளை வைத்துப் பார்க்கும் பொழுது அது பாதுகாப்பானது என்று கூறப்படுவது பரிசோதிக்கப் பட்டுள்ளது; அதற்கான ஆதாரமானது இந்தப்பகுதியிலும் அதற்கு முந்தைய பகுதியிலும் ஆராயப்பட்டு உள்ளது; ஒரு பாதுகாப்பான காகிதநாணயத்தை உருவாக்குவதற்கான அத்தியாவசியமானவை இன்னும் எந்தளவு தேவைப்படுகிறது என்பது விளக்கிக் காட்டப் பட்டுள்ளது. அது சிக்கனமானதா என்பதை மதிப்பிடுவதற்காக நாம் இப்பொழுது முயற்சிக்கவேண்டும்; அது உண்மையிலே அவ்வாறு ஆயின், அதனுடைய எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வாதத்தில் ஓரளவு பொருத்தமிருக்கும். எனவே, ரூபாய்க் காகித நாணயம் தாக்கம் ஏற்படுத்திய பொருளாதாரத்தை ஆராயவேண்டி உள்ளது. கெம்ளர் கூறுகிறார்:[1]

> ''ஒரு மாற்றக்கூடிய பணமானது, அதற்கான தோற்ற மூல காரணத்தைப் பெரும்பாலும்அது மதிப்பு வாய்ந்த உலோ கங்களைச் சிக்கனப்படுத்துவதிலும் மற்றும் சமூகத்திற்கு ஒரு சேமிப்பைச் சாத்தியமாக்குவதிலும் காண்கிறது. காகித நாண யமோ முதன்மையான நாணயத்திற்கு பதிலிகள் ஆக்கப்பட்டால், அத்தகைய பதிலிகள், மதிப்புவாய்ந்த உலோகங்களின் தேவை யைக் குறைத்து விடுகின்றன. எந்தளவு வித்தியாசம் வருமென் றால், நாணயம் அச்சிடத் தேவையான தங்கம் மற்றும் வெள்ளிக்கான தொகையும் அதோடு சேர்த்து மீட்சிநிதிக்கான

1. Money and Credit Investments in Relation to Prices P.63.

தொகையையும் சேர்த்தால் எவ்வளவு வருமோ அந்தளவு வித்தியாசம் வரும். மதிப்புவாய்ந்த உலோகங்களை இவ்வாறு சிக்கனப்படுத்துவதானது சந்தையில் கூடுதலான அளவில் வினியோகமாவதில் போய் முடியும்.''

இதேவகையான லாபம் மாற்றமுடியாத பணத்தைப் பயன் படுத்துவதால், சொல்லப்போனால், மிகப்பெரும் அளவில் பயன் படுத்துவதால் கிடைக்கும்; ஏனென்றால், முதன்மையான பணத்தை அதை மாற்றும்போது இருக்கக்கூடிய மீட்புநிதிக்குக்கூடப் பயன் படுத்த வேண்டிய தேவையில்லை. இத்தகைய கருத்துக்கள் போன்றவை இந்தியக் காகித நாணயமுறை ஒரு வியக்கத்தக்க பொருளாதாரம் என்றும், இந்த வழியை மிகவும் முன்னேறிய நாடுகள்கூடப் பயன் அளிக்கும் முறையில் பின்பற்றலாம் என்று கருத்து தெரிவிக்கும் அளவுக்குப் பேராசிரியர் கீன்ஸை இட்டுச் சென்றது. ஒரு மாற்ற முடியாத காகித நாணயமானது எவ்வித வருத்தமும் இன்றி ஒரு நாடு கடைப்பிடிக்க வேண்டிய மிகவும் சிக்கனமான காகிதநாணயம் என்று பேராசிரியர் கெம்மரரோ அல்லது பேராசிரியர் கீன்ஸோ சிபாரிசு செய்கிறார்கள் என்ற இரக்கமற்ற முடிவை இதிலிருந்து நாம் பெற மாட்டோம். நாங்கள் கவலைப்படுவதெல்லாம், ரூபாய்க் காகித நாணயம் உண்மையிலேயே சிக்கனமானதா என்பதைக் கண்டறிவது குறித்தேயாகும். ரூபாய் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் நிகழ்ச்சிப் போக்கைக் கவனமாக ஆராய்ந்தால் இந்தியக் காகித நாணய மானது சிக்கனமானது என்ற கூற்றைக் கவலையுடன் கவனிக்க வேண்டிய ஒன்றாகக் கருதுவது சாத்தியம் அல்ல. முதலாவதாகத் தங்க மானது, லண்டனின் உள்ள அரசாங்கச் செயலாளருக்கு அவருடைய கவுன்சில் உண்டியல்களுக்காக அளிக்கப்படுகின்றன அல்லது தங்க மானது இந்தியாவில் வரிகளைச் செலுத்துவதற்காகவும் அல்லது வேறு வகையிலும் இந்திய அரசாங்கத்திற்கு அளிக்கப்படுகிறது. இந்தத் தங்கத்திலிருந்து அரசாங்கச் செயலாளர், வெள்ளிவாங்க ரூபாய்களாக அச்சடிக்கிறார். வெள்ளியின் விலையானது விகிதாச் சாரத்தை விடக் குறைவாக இருப்பதால் ரூபாயின் அடக்கவிலைக்கும் தங்கத்தின் விற்பனைவிலைக்குமிடையே ஒரு வித்தியாசம் காணப் படுகிறது. சொல்லப்போனால், இந்த வித்தியாசம் இருக்கும் அள வுக்கு ஒரு லாபம் இருக்கிறது. ஆனால், நாணயம் அச்சிடுவதால்

அந்த அளவுக்குப் பயனற்ற செல்வப்பண்பை அது பிரதிபலிக் கிறது. லாபமானது, சமூகத்தின் எந்த ஒரு நடப்புக் காரியத்திற்கும் பயன்படுத்தப்பட வேண்டியதில்லை என்றால், அது ரூபாய்களை அச்சிட வேண்டியதேயில்லை. இந்தியாவின் ரெவின்யூ நிதி ஆதாரங் களிலிருந்த லாபங்கள் தனித்து வைக்கப்பட்டிருககும்வரை சிக்கனம் என்று சொல்லுமளவிற்குக் காகித ரூபாயில் எதுவும் இல்லை. மற்றொரு கண்ணோட் டத்திலிருந்து காணும்பொழுது இந்தியக் காகித நாணயம் என்பது சமூகத்திற்கு ஒரு வீணான சொத்தாகிறது. உலோக நாணயம் என்பது பிரதானமாக சமூக முதலீடு என்பதை பிரதிநிதித் துவப்படுத்துகிற மூலதனப்பொருளாகும். இதன் விளைவாகக் காகித நாணயத்தின் மூலதன மதிப்பு பராமரிக்கும்படியாகப் பார்த்துக் கொள்வது அவசியமாகிறது. காகித நாணயச் சேமிப்பு பிரச்சனை யின் இந்த அம்சம் குறித்து இந்திய அரசாங்கம் செயலற்று இருக்க வில்லை என்பதைக் காண்பது ஒரு மகிழ்ச்சியான நிலைமையாக உள்ளது; மிகச் சமீபகாலத்தில், அதனுடைய மூலதன மதிப்பைப்[1] பாதுகாக்க ஒரு தேய்மான நிதியையும் அது உருவாக்கியுள்ளது என்பதைக் காணவும் மகிழ்ச்சியாக உள்ளது. தற்பொழுது காகித நாணயத்திற்குப் பொருந்தும் காரணங்கள் ரூபாய் நாணயத்திற்கும் பொருத்தப்படவேண்டும். ரூபாய் நாணயமானது அதனுடைய மூலதன மதிப்பை பராமரிக்கிறதா? தங்க நாணய மதிப்புத்தர சேமிப்பு என்றழைக்கப்படும் அதனுடைய தங்கப் பகுதியானது வட்டியை அளிக்கும் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. வட்டியானது லாபத்திற்கான கூடுதல் ஆதாரம் என்பதில் ஐய மில்லை. ஆனால், பத்திரங்கள் தங்களுடைய மூலதன மதிப்பைப் பராமரிக்கின்றனவா? அது வெகுதொலைவில் உள்ளது. காகித நாணயத்தின் பாதி ரூபாய்க்கு வருவோம். ரூபாயில் உள்ள தங்கமானது அதனுடைய மூலதனமதிப்பைத் தக்கவைத்துக்கொள்கிறதா? நகைச் சுவைமிக்க பொருளாதாரவாதிகள், வரைபடங்களையும், புள்ளி விபர விளக்கக் காட்சிப் படங்களையும் எண்ணற்ற அளவில் வரைந்து தள்ளினர்; அதில், ரூபாயின் பெயரளவு மதிப்பைக் காண் பிக்கக்கூடிய கருப்புக்கோடானது, ரூபாயின் தங்கமதிப்பைக் காண் பிக்கும் சிவப்புக் கோட்டை விட உயர்ந்தாற் போலிருந்ததானது வெள்ளியின் தங்கமதிப்பு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, ரூபாயின்

1. 1920 செப்டம்பர் 16ஆம் தேதியன்று இந்தியக காகித நாணயம் (திருத்த மசோதா மீது) பற்றி நிதி அமைச்சர் திரு. கொய்லி பேசியது S.L.C.P. Vol. LIX PP. 308 - 9

தங்க மதிப்பும் குறைந்துவிட்டதைக் காண்பித்தது. இதன் பொருள் என்ன? ரூபாய் என்பது வீணாகும் சொத்து என்பதையும், அது தயாரிக்கப்பட்டபொழுது அதற்கான செலவு அளவுக்குக்கூட பின்னாளில் அது மதிப்பற்றது என்பதையும் வெளிப்படுத்தியது. நிச்சயமாகத், தன்னுடைய பன்றியை வறுப்பகற்காக தன்னுடைய வீட்டிற்குத் தீ வைத்த பைத்தியக்காரச் சீனாக்காரனின் திட்டத்தில், இந்திய ரூபாய் நாணயத்தினுள்ளதைவிட அதிக பொருளாதாரம் இருந்தது. சீனாக்காரனின் வீடு மிகப் பழையதாகவும், வசிக்க லாயக் கற்றதாகவும் இருந்திருக்கக் கூடும். எனினும், இதையே தங்கப் பணத்தை வெள்ளிப் பணமாக மாற்றுவதற்காகச் சொல்லக்கூடாது; ஏனென்றால், தங்கத்தைவிட வெள்ளியானது மட்டமான வகைப்பட்ட முதலீடாகும். இவ்வாறு கண்டால், காகித நாணயம் என்பது குறைந்த அளவில் கூடச் சிக்கனமானது அல்ல. மக்கள் அதை மட்டுமே நோக்கியிருப்பதால் அது அவ்வாறு தோற்றமளிக்கிறது. ஆனால், தங்கநாணய மதிப்புத் தரச் சேமிப்புடன் ரூபாய் நாணயத்தின் அடக்கச் செலவையும் சேர்த்தால், இந்தியாவானது ரூபாய் நாணயத்திற்குப் பதிலாகத் தங்க நாணயத்தை அது பெற்றிருந்தால் அதற்கு அதிகத் தங்கம் தேவைப்படும் என்று சொல்ல முடியுமா?

எவ்விஷயத்திலும் அதிகத் தங்கம் என்பது தேவைப்பட வில்லை. ஆகையால், ரூபாய் நாணயங்கள் அச்சிடப்படுவது முழுமை யாக நிறுத்தப்படுவதுடன் இந்திய ரூபாய் என்பது உண்மையிலேயே சிக்கனமானதாக இருக்கும்; விலைவாசிகள் மிகவும் நிலையானதாக இருக்கும்; பரிவர்த்தனை என்பது பாதுகாப்பானதாக இருக்கும்; இந்த ஒரு வழிமுறை மூலம்தான் பாதுகாப்பானதாக இருக்கும்; ரூபாயானது மாற்றமுடியாதது என்ற போதிலும் 1873ஆம் ஆண்டி லிருந்து வருவது போல் பிரச்சினைக்குரியதாக இராது என்று எவ்வித சவால் பயமுமின்றி நாம் கூற முடியும்.

ஆனால், அவை அனைத்தும் நாட்டின் நலனுக்காக இருக்குமா? எவ்வழியிலும் இராது. 1797ஆம் ஆண்டின் காகிதப் பவுண்டு நாண யத்தை 1914 ஆம் ஆண்டு காகிதப் பவுண்டு நாணயத்துடன் ஒப்பிட்டுப் படிப்பினையைப் பெறுவதற்காக ஆராயும்போது பேராசிரியர் கேனன் (Prof. Cannan) குறிப்பிடுகின்றார்:[1]

''எந்தவொரு சமூகமும் எந்தவொரு அமைப்புக்கும் அளித்திராத அதிகாரத்தை, வரம்பின்றிப் பணத்தை உருவாக்கும் அதிகாரத்தை, இங்கிலாந்து வங்கிக்கு அளிப்பது என்ற பரிசோதனையானது அரசாங்கத்திடமோ அல்லது அரசாங்கத்தின் முழு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசாங்க வங்கியிடம் நவீன திட்டங்களை அளிப்பதென்பதோ ஒப்பிடுகையில் மிகச் சாதகமாக உள்ளது என்பதில் இந்நாட்களில் எவ்வித ஐயமுமில்லை. 1914-18 குறுகியகால யுத்த வருடங்களின் பொழுது அரசாங்கங்களும், அரசாங்க வங்கிகளும் ஏற்றுமதி செய்யக்கூடிய நாணயமாக மாற்ற இயலாத ரூபாய் நோட்டுக்களை வெளியிட்டன; 1810 ஆம் ஆண்டுக்கு முந்தைய 13 ஆண்டுக் காலத்தில் தங்க இருப்பு அளவில் இரு மடங்குக்கு மட்டுமே ரூபாய் நோட்டுகள் வெளியிடப் பட்டன; இதையே 1810ஆம் ஆண்டில் தங்கக் குழு மிகக் கடுமையாக விமர்சித்தது. இன்றுள்ளதோடு ஒப்பிடுகையில் அது முற்றிலும் அற்பமானதே.''

இந்தக் குற்றச்சாட்டு இந்திய அரசாங்கத்திற்குப் பொருந்தாது என்று சொல்லியிருக்கக்கூடிய காலமும் இருந்தது. இந்திய அரசாங்கம் ஒரு முறை செய்தது போல, நாணய நிர்வாகப் பொறுப்பைக் கைவிட வேறு சில அரசாங்கங்களும் ஆவலாயிருந்ததாகக் கூற முடியும். 1861ஆம் ஆண்டில் அரசாங்கம் காகித நாணயத்தை வெளியிடும் பொறுப்பை ஏற்றபோது அது கொண்டிருந்த கவலை பாராட்டத்தக்கது. பெரும் ராணுவக் கிளர்ச்சிச் சுமையால் பணியவேண்டியிருந்த - ஆனால், கையில் பணமில்லாத ஒரு அரசாங்கம் இந்தக் காகித நாணயத் திட்டத்தை, ஒரு லாப ஊற்றாக வரவேற்றிருக்கக்கூடும். ஆனால், அந்த அரசாங்கமானது பொறுப்புணர்வு அதிகமிருந்ததால், நாணயமாற்றம் என்பதை அதிகப்படியாக வெளியிடுவதற்கான தடையாகக் கருதித் திருப்தியடைய மறுத்தது. இந்தியாவின் நிதியாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிவகையாக, நெருக்கடிக்கு ஆட்பட்ட நிதி முதலீட்டாளர் திரு. வில்சன் 1860ஆம் ஆண்டில் உருவாக்கிய காகித நாணயத் திட்டம் நிராகரிக்கப்பட்டதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அவருடைய வாரிசு திரு. லெய்ங் (Laing) என்பவரால் நன்றாகக் கூறப்பட்டுள்ளது; கொந்தளிப்பான நிதி நிலைமை நிலவும் நாட்களில் அவருடைய கூற்றுக்களை முழுவதுமாக மீண்டும் பிரசுரிக்கலாம். அவர் கூறுகிறார்[1]:-

1. 1861 பிப்ரவரி 16ஆம் தேதியன்று காகித நாணய மசோதா மீது அவர் பேசியது. S.L.C.P. Vol. VII pp. 66-7

''சர் சார்லஸ் அப்டின் கோட்பாடுதான் மிகச் சிறந்தது என்று அவர் (திரு. லேயிங்) ஏன் சிந்தித்தார் என்பதற்கு மற்றொரு முக்கியக் காரணம் உண்டு. காகித நாணயமானது, அது அகற்றக்கூடிய உலோக நாணயத்தைப் போன்று ஒத்த தன்மை உடையதாக இருக்க வேண்டும் என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், திரு. வில்சனின் கருத்துப்படி மூன்றில் இரண்டு பங்குப் பத்திரங்கள் மற்றும் ஒரு பங்கு நாணயத்திற்கு எதிராக வெளியிடும் முறையானது எப்பொழுதும் இத்தனித்தன்மையை உறுதி செய்யாது என்ப துடன், உற்சாக மிக்க நேரத்திலும் யூக வாணிப காலத்திலும் இந்தச் சுழற்சியானது மட்டுக்கு மிஞ்சிய அளவில் விரிவு படுத்தப்படுவதில் கணிசமான ஆபத்து உள்ளது. அது ஒரு குறிப் பிடத்தக்க முக்கியத்துவம் உள்ள ஒரு அம்சம் என்று அவர் கருதினார். ஏனென்றால், கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியா வில் என்ன நடை பெற்றது என்பதைக் கண்டோமானால் தொழிலாளிகளின் சம்பளத்திலும், பொருட்களின் விலை களிலும் மிகப் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை நாம் காணமுடியும்; ஏற்கனவே துரித வேகத்தில் சென்று கொண்டு இருக்கும் வளர்ச்சிப் போக்கைக் காகித ரூபாயின் செயற்கையான பணவீக்க மூலம் நாம் துரிதப்படுத்தினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பது குறித்து அது நம்மை எச்சரிக்கும். காகித நாணயத்தை அதிக அளவில் வெளியிடுவதன் மூலம் விலையின் அதிகரிப்பை நீங்கள் இயல்புக்கு மாறாகத் தூண்டினால், ஆரோக்கியமான வர்த்தக நடவடிக்கையை அமைதியற்ற தூண்டலுக்கு கொண்டு சென்றால், அது நிச்சயம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். கடந்த இரண்டு அல்லது மூன்றாண்டுகளாக நாம் செய்ததை, நாம் தொடர்வோமானால் இதர நாடுகளின் போட்டியானது இந்தியத் தயாரிப்புப் பொருட்கள் பலவற்றை சந்தையிலிருந்து விரட்டி விடுவதில் போய் முடியும். எனவே, ஒரு பொதுவான முன்னேற்றத்திற்கான போக்கைத் தேவை யற்றுத் துரிதப்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு முன்பு அரசாங்கமானது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று அவர் கருதினார்; காகித நாணய முறையின் கீழ் இருந்த நிலைமை இதுதான்; அது ஒரு குறிப்பிடத்தகுந்த அளவிற்குப் பத்திரங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது: தங்கத்தால் அல்ல. சம்பளவிகிதம் மற்றும் வாழ்க்கைச் செலவு

குறைவை[1] ஏற்படுத்திவிட்டால், அத்தகையதொரு முன்னேற்றமானது அரசாங்கத்திற்கு ஒரு கடுமையான, தர்ம சங்கடமான அம்சமாகி விடும். இந்தக் காரணங்களால் தான், சர் சார்லஸ் உட் வரையறுத்தபடி இங்கிலாந்து ஏற்றுக்கொண்ட காகித நாணயக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதுதான் மிக விவேகமான வழி, என்று அவர் கருதினார்'.

நாணயமாற்றம் என்பதற்கு மேல் நாணய வெளியிடல் குறித்து ஒரு வரம்பை விதிக்க அரசாங்கம் ஆவலாக இருந்தது மட்டுமல்ல, ஆனால் ரூபாய்களை வெளியிடுவதற்கான சட்டபூர்வ அதிகாரம் தன்னிடம் விடப்பட வேண்டுமென்று அது விரும்பவில்லை. 1859 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேயன்று அரசாங்கச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் அந்நாளைய அரசாங்கம் பின்வருமாறு குறிப் பிட்டது:[2]

''தேவையை வைத்துக் காகித ரூபாய்களை மாற்றுவது என்பது அதை அளவுக்கு மீறி வெளியிடுவதற்கு எதிரான ஒரு போதுமான உத்தரவாதமாக இருக்க முடியாது என்பதை நாங்கள் நம்புகிறோம். இந்தக் காகித நாணயங்கள் மக்கள் நம்பிக்கையில் ஒரு முறை இடம் பெற்று விட்டால், அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் இந்திய அரசாங்கத்தின் கரங்களில் மட்டுமே விடப்படுமானால் ஒரு சிரமமான நேரத்தில் இந்த நம்பிக்கையை வைத்து அபாயகரமான அளவுக்கு ஆதாயம் காண்பதற்கான தூண்டுதல் மிக அதிகமாக இருக்கும். சட்டப்படி கட்டுப்படுத்துவதென்பது, அதாவது, ஒரு குறிப்பிட்ட அளவு அவசியம் வெளியிட வேண்டும் என்றோ அல்லது இந்தியாவில் உள்ள நிலுவைகளுக்கு ஏற்றதொரு தொகை அளவுக்கோ கட்டுப்படுத்துவதென்பது எங்களுடைய கருத்துப்படி தேவையானதாகும். இத்தகைய சட்டம் இந்தியாவில் சட்டமன்றக் கவுன்சிலில் நிறைவேற்றப்படக் கூடாது, ஆனால் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.''

---

1. இங்கிலாந்தில் வங்கி நிறுத்த காலத்தில் ராணுவத்தினர் மற்றும் கடற்படையினருக்குச் சம்பளம் தங்கத்தில் கொடுக்கப்பட்டது; அதிருப்தி பயத்தினால் அவ்வாறு செய்யப்பட்டது.

2. அதன் பிரதிக்கு காமன்ஸ் சபை (1860 ஆம் வருடம்) ஆவணம் 183ஐப் பார்க்க.

ரூபாய் நாணயம் குறித்து 1876ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கண்ணோட்டமும் இதே போன்று விவேகமானது. வங்காள வர்த்தக சபை, நாணயச் சாலைகளில் வெள்ளிக் காசுகளை இலவசமாக அச்சிட்டுத் தராமல் அவற்றை மூடும்படியும், தங்கக் காசுகளை இலவசமாக அச்சிட்டுத் தர அவைகளைத் திறக்காதிருக்கும்படியும் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தியதென்பதும் நினைவுபடுத்திக் கொள்ளப்பட வேண்டும் - இந்தத் திட்டமானது நடைமுறையில் ரூபாய் நாணயங்களை நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே நடைமுறையில் பொருளாகும். இந்திய அரசாங்கத்தின் பதிலானது கடுமையான கண்டனமாக இருந்தது. அது அறிவித்தது:[1]

> ''8..... யார் வேண்டுமானாலும் வெள்ளி நாணயம் அச்சிட்டுக் கொள்ளலாம் என்று நீண்ட காலமாக இருந்து வரும் சட்டபூர்வ உரிமையை நிறுத்தி வைப்பதன் மூலம் ரூபாயின் மதிப்பை வரம்பின்றி அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு ஒரு நடவடிக்கையை எடுக்கும்படி வர்த்தக சபை அரசாங்கத்தை அழைக்கிறது; சட்டபூர்வச் செலாவணி நாணயம் அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ்தான் அச்சிடப்பட வேண்டும் என்றும், ஒரே மாதிரியான விதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தின் விருப்பப்படி தற்காலிகமாக ஒரு பதிலி நாணய முறையைக் கொண்டு வரும்படி வர்த்தக சபை கேட்டுக் கொண்டது....''
>
> ''11. ஒரு சரியான நாணய முறைக்கு, அது தானாகவே செயல்பட வேண்டுமென்பது அத்தியாவசியமானதாகும். எந்த ஒரு குறிப்பிட்ட வினாடியிலும் சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனென்பதற்கு நாணய அதிகரிப்பு அல்லது குறைப்பு தேவைப்படுமா என்பதை எந்த ஒரு மனிதருமோ அல்லது ஒரு மனிதர்களின் குழுவோ தெரிந்து கொள்ள முடியாது. அதைவிட ஒரு குறிப்பிட்ட வினாடியில் துல்லியமாக எந்த அளவு அதிகரிப்பு அல்லது எந்த அளவு குறைப்பு தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. தன்னுடைய நாணயத்தை நல்ல நிலைமையில் வைத்திருக்க விரும்பும் எந்த ஒரு அரசாங்கமும் அந்தக் காரிய சாத்தியமற்ற கடமைக்காக முயற்சிப்பது நியாயப்

படுத்தப்படும் அல்லது ஒரு குறுகிய காலத்திற்குக் கூட ஒரு நிச்சயிக்கப்பட்ட உலோக மதிப்புத் தரமில்லாமல் சமூகத்தை விட்டு விடுவதை எந்த அரசாங்கமும் செய்ய முடியாது. 'திறந்த நாணய அச்சிடல்' முறையின் கீழ் அதிகாரபூர்வ தலையீடு இன்றித் இத்தகைய விஷயங்கள் தங்களைத் தாங்களே ஒழுங்கு படுத்திக் கொள்ளும்.''

இப்பொழுது, இதைக் காகித மற்றும் ரூபாய் நாணயம் நிர்வகிப்பது குறித்த கோட்பாடுகள் சம்பந்தமாக அரசாங்கம் பின்னர் வெளியிட்ட அறிவிப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். யுத்தத் தின் பொழுது இந்திய அரசாங்கம் பத்திரங்கள் வெளியிடுவதை அதிகரித்தபோது, அது இந்தியாவின் விலைவாசிகள் மீது ஏற் படுத்தப்போகும் விளைவுகளை உயர் சட்டமன்றக் கவுன்சிலின் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். ஆனால், யுத்த காலத்தின்போது இந்திய நிதி நிலை குறித்த மசோதாக்களை முன்மொழிந்த நிதி அமைச்சர் காலம் சென்ற மாண்புமிகு சர் டபிள்யு எம் மேயர் (Meyer) 1917ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் தேதியன்று இந்தியக் காகித நாணய (திருத்த) மசோதா மீது பேசுகையில் பின்வருமாறு பதிலளித்தார்.[1]

''யுத்தத்திற்கு முன்பு காகித நாணய சுழற்சி 60 கோடி யாக இருந்தது தற்பொழுது சுமார் 100 கோடி ரூபாயாக உள்ளது. ஆனால் மாண்புமிகு திரு. சர்மா, பணவீக்கம் என்று கேட்ட வுடனே நடுங்குகிறார். பொருளாதார விதிகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளில் ஒன்றான காகித நாணயத் தின் செயற்கையான பணவீக்கம் என்பது, காகித நாணய சுழற்சி முழுமையாக இல்லாத இடத்தில் மட்டுமே இருக்கிறது என்பதை நான் அவருக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். தற்பொழுது நாம் காகித நாணயத்தின் சுழற்சியில் உள்ள ஒவ்வொரு ரூபாயையும் பத்திரங்கள் மூலம் பாதுகாத்துள்ளோம்'' (அங்கே ஒரு பணவீக்கம் எவ்வாறு இருக்க முடியும்?)

ரூபாய் நாணயம் சம்பந்தமாக அரசாங்கக் கண்ணோட்டத்தில் உள்ள மாற்றமானது சம முக்கியத்துவம் உடையது ஆகும். 1908ஆம் ஆண்டில் ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு சம நிலையை விடக் கீழாக

1. S.L.C.P. Vol. LVI P. 35.

வீழ்ச்சி அடைந்தபோது, அது, அளவுக்கு அதிகமாக ரூபாய்களை அச்சிட்டதன் விளைவு என்று அரசாங்கத்திற்கு நினைவூட்டப் பட்டது. ஆனால், வர்த்தகத்தின் தேவைக்கேற்ப நாணயத்தைக் கூட்டு வதோ குறைப்பதோ சாத்தியமானது என்று அரசாங்கம் 1876ஆம் ஆண்டில் நினைக்கவில்லை என்ற போதிலும் 1908ஆம் ஆண்டில் இதற்கெதிரான கருத்தை அரசாங்கம் முன் வைத்தது. நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பேக்கர் வாதிட்டுக் கொண்டு போனார்[1]:- ''முதலாவதாக, இந்தக் காலகட்டத்தில் நாங்கள் அச்சடித்துள்ள புதிய நாணயங்கள் அனைத்தும் வர்த்தகத்தின் தேவைகளைச் சமாளிப் பதற்காக மட்டுமே அச்சிடப்பட்டவை. இந்தக் கோரிக்கைகளை நாங்கள் சமாளிப்பதற்காக அன்றி வேறெதற்காகவும் ஒரு ரூபாய் கூட சுழற்சியில் அதிகரிக்கப்படவில்லை....''. தற்பொழுது, நாணயத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தை ஒரு அரசாங்கத்திடம் ஒப்படைப்பது ஆபத்தானது என்றால் இவை போன்ற கோட்பாடுகளின் அடிப் படையில் அதனுடைய நம்பிக்கையை நிறைவேற்றப் போவதாகக் கூறும் இந்திய அரசாங்கத்திடம் அதை ஒப்படைப்பதும் அத்தகைய பெரும் ஆபத்தாக இருக்கும்! இவைகள்தான் சரியான கோட்பாடு என்று கருதும் அளவுக்கு யாரும் இந்நாட்களில் தவறாக போதிக்கப் படவில்லை. பாதுகாப்பு என்பது போதுமானால் மாற்றப்படு வதற்கான தேவை எங்கே இருக்கிறது? வர்த்தகத்தின் தேவைக் கேற்பவே நாணயம் வெளியிடப்படுவதென்றால் அதிகமாக வெளி யிடப்பட்டுவிடும் என்ற பயம் எதற்கு? அத்தகையதொரு கோட் பாட்டின் மீது செயல்பட்டு வரும் அரசாங்கமானது எவ்வித விசனமுமின்றி நாணயத்தை வரம்பற்ற அளவிற்கு அதிகரித்துக் கொண்டே போகலாம். இத்தகைய அப்பாவித்தனமான கோட்பாடு களைக் கொண்ட, நாணயம் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினால் நாசம் விளைந்த சம்பவங்கள் வரலாற்றில் நிறைந்து கிடக்கிறது. நாட்டிற்கு மகிழ்ச்சி தரும் விதத்தில் காகித நாணயமானது 1920ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் அதனுடைய அடிப்படையில் வெகுவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது - ஒருவர் அதை மோசடித்தனமானது என்று கூறலாம் - அது நிதியமைச்சர் விவரித்த கோட்பாட்டின் மீது ஒழுங்கமைக்கப்பட்ட நாணயங்களில் இருந்து இன்னும் வெகு தொலைவில் உள்ளது. நாணயச்சாலை மூடப்பட்டதிலிருந்து ரூபாய் நாணயம் என்பது தான் இந்திய மக்களின் நலனுக்குப் பிரதான ஆபத்து ஊற்றாக உள்ளது; குறிப்பாக, அதனுடைய வெளியிடல் குறித்த கோட்பாட்டினால்தான் இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் பிரபல வல்லுநர்களான பேராசிரியர் கீன்ஸ்[1], திரு. சிர்ராஸ்,[2]

மற்றும் சேம்பர்லின் குழு[3] போன்றவற்றின் ஆதரவு அந்த கோட்பாட்டிற்குக் கிடைத்திருப்பதே ஒரு ஆச்சர்யமான விசயமாகும். ரூபாய் நாணயத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தை அரசாங்கம் இழக்கும் படிச் செய்வதற்கான வாதத்தை அது மாற்ற முடியாது; ஏனென்றால், அந்தக் கோட்பாடு என்பதே சரியற்றது என்பதாகும். ரூபாய்கள், வர்த்தகத்தின் தேவைக்கேற்ப வெளியிடப்படுவதால் கூடுதலாக எந்தப் பணமும் இருக்க முடியாதென்ற தவறான கருத்து வந்ததற்குக் காரணம் பணத்தினுடைய விசித்திரமான தன்மையினால் அது மேலே தெரியவில்லை என்பதே. பணமென்பது ஒரு வாங்கும் சக்தியைக் கொண்டிருப்பதாலேயே அது தேவைப்படுகிறதென்று கூறப்படுகிறது. அது உண்மையென்பதில் எவ்வித ஐயமுமில்லை; ஆனால், மக்கள், பணத்தின் மதிப்பு நிலையற்றது என்று தெரிந்தும் கூட ஏன் அதை இடைவிடாமல் விரும்புகிறார்கள் என்பதை அது முற்றிலும் விளக்கவில்லை. சொல்லப்போனால், வாங்கும் சக்தி என்பதுதான் ஒரே கருத்தாக இருக்குமானால் நடப்பு வாங்கும் வழிவகைக்கு அத்தகையதொரு விருப்பத்தை நாம் காண முடியாது. பணமென்பது இதர பொருள்களை விட ஒரு வித்தியாசமான சாதகத்தைக் கொண்டுள்ளது என்ற அம்சத்தை வைத்தே அந்த விருப்பத்தைப் புரிந்து கொள்ள முடியும்; அதில் 'விற்பனைதகுதி' என்று மெஞ்சர் (Menger) அழைக்கும் அம்சம்தான் மிக அதிகமான அளவில் உள்ளது. எவரும் மலிவாக வாங்கி, மலிவாக விற்கலாம் என்பது ஒவ்வொருவரும் பணத்தின் மிகவும் விற்பனையாகும் வடிவத்தில் தங்களது நிதி ஆதாரங்களை வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதை மற்றொரு எளிய வழியில் கூறுவதாகும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது தேவையைவிட அதிகமாகப் பணத்தை வெளியிடக் கூடாதென்பது முற்றிலும் உண்மையே. ஆனால், எந்த ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும் முற்றிலும் நாணயப் புழக்கத்திற்காகப் பணத்தைக் கூடுதலாக வெளியிடக்கூடாது என்பதல்ல. அனைத்துப் பணமும் வர்த்தகம் அல்லது சேவைகளின் தேவைகளுக்காகப் பெறப்படுகின்றது; ஆனால், அனைத்துப் பணமும் நாணயமாக வைத்திருக்கப் படுவதில்லை. சொல்லப்போனால், அனைத்து சரக்குகளும் பணத்திற்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. ஏனென்றால் பணமானது நாணயமுறை அல்லாதவற்றிற்கும் பயன்படுத்தப்படும் விருப்பத்தைக் கொண்டுள்ளது. ரூபாய் விஷயத்தில் உபயோகதரம் என்ற விருப்பம் அங்கில்லை. எனவே, வர்த்தகத்தின் தேவைக்

3. அறிக்கை, பாரா 66.

காக வெளியிடப்பட்டபோதும் அது விரும்பினாலும், விரும்பா விட்டாலும் ஒரு நாணயமாகவே நீடிக்கிறது; இதன்மூலம் அத னுடைய தேய்மானத்தைக் கொண்டுவருகிறது. ரூபாய் என்பவை வர்த்தகத்தின் தேவைக்காகவே வெளியிடப்படுகின்றன என்று கூறுபவர்கள்கூட அத்தகையதொரு தேய்மானம் சாத்தியமானது என்பதை மறுக்கமுடியாது; இல்லையென்றால், நாட்டில் தங்கச் சேமிப்பு அதிகரிப்படவேண்டும் என்பதில் அவர்கள் ஏன் அதிகக் கவலை கொண்டிருக்கவேண்டும்? ஆனால், ரூபாய் நாணயத்திற் கான ஆபத்தானது அரசாங்கத்தின் விருப்பமற்ற தன்மை என்பத னால் மட்டும் எழுவதல்ல. அரசாங்கம் நீங்கலாகத் தங்களுடைய சககுடிமக்களின் நலனில் மிகுந்த ஆர்வம் கொண்ட ராஜ்யவாதிகள் பலரும் இந்தியாவில் இருக்கிறார்கள்; ரூபாய் நாணயம் அச்சிடு வதிலிருந்து கிடைக்கும் லாபத்தை நாட்டின் தார்மீக மற்றும் பொருளாயத முன்னேற்றத்திற்கு அரசாங்கம் பயன்படுத்தாததற் காகப் பல சந்தர்ப்பங்களில் அதைக் கண்டித்துள்ளனர்:[1] 1907 ஆம் ஆண்டில் ரூபாய்களை அச்சிடுவதில் கிடைத்த லாபமானது உண்மை யில் இரயில்வேக்களை விரிவுபடுத்துவதற்குப் பயன்படுத்தப் பட்டது. இத்தகைய நோக்கங்களுக்கு நாணயத்தை மோசடி செய்வதி லிருந்து நிச்சயம் எழக்கூடிய விளைவுகளை யூகிப்பவர்களுக்கு அது பேரச்சத்தையும், நம்பிக்கை யின்மையும் ஏற்படுத்தும். ரூபாய் நாணயத்தை நிர்வகிக்கும் அதிகாரத்தை அரசிடமிருந்து எடுப்பதன் மூலம் ஆபத்து மற்றும் தூண்டலுக்கான இந்த ஊற்றை அகற்றுவதற்கு இது தக்க தருண மில்லையா? ஆனால், எஞ்தக் கொண்டு இதைச் செய்வது? நிர்வாகத்தை ஒழித்துவிடுவது விரும்பத்தக்கது என்றால், நாணய மாற்றம் என்பது பற்றாக்குறை நடவடிக்கையே; ஏனென்றால், ரூபாயானது நாணயமாற்றத்திற்குப் பின்னும் நிர்வகிக்கப்படும் ரூபாயாகவே இருக்கும். ரூபாய் அச்சிடுவதை முழுமையாக நிறுத்துவது மட்டுமே இந்திய நாணய நிர்வகிப்பில் அரசாங்கத்தின் தலையீட்டை அகற்றும்; ஆகையால், நாம் கேட்க வேண்டியது இதுதான்: இது வினோதமாகத் தோன்றக்கூடும், ஒரு நிச்சயிக்கப்பட்ட வரம்பில் வெளியிடப்படக்கூடிய **ஒரு மாற்ற முடியாத ரூபாயில் தான் பாதுகாப்பு அடங்கியுள்ளது.**

---

1. [illegible]

நானாவிதக் கட்டுரைகள்

அறிக்கை, காட்சியம், புத்தக மதிப்புரைகள்,
முன்னு ரைகள் போன்றவை

குறிப்பு

இந்திய நாணயம் மற்றும் நிதி குறித்த அரசாங்கக் கமிஷன் 1924-25இல் இந்தியாவிற்கு வந்தது; நிதிநிலை முறையை ஆராய்ந்து இந்திய நாணயத்தைச் சீர்திருத்தும் பொருட்டு ஆலோசனைகளை வழங்குவதற்காக அது வந்தது. அந்தக் கமிஷனானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

இ. ஹில்டன் யங், தலைவர்

ஆர். என். முகர்ஜி
நார்காப் வாரன்
ஆர். ர. மன்த்
எம்.பி. தாதாபாய்
ஹென்றி ஸ்ட்ராகோச்
அலெக்ஸ் ஆர். முர்ரே
புருஷோத்தம்தாஸ் தாகூர்தாஸ்
ஜே.கி. கோயாஜி
டபிள்யூ.இ. பிரெஸ்டன்

ஜி.எச். பக்ஸ்டெர்
ஏ. அயங்கார் } செயலாளர்கள்

கமிஷன் வெளியிட்ட கேள்விப் பட்டியல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் டாக்டர் அம்பேத்கர் தன்னுடைய கருத்தை அறிக்கையில் விளக்கியுள்ளார். அவருடைய அறிக்கையும், கமிஷன் முன்பு அவர் அளித்த சாட்சியமும் கேள்வித் தாளுடன் இங்கே மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது.

1

சாட்சியம் குறித்த அறிக்கை

இந்திய நாணயம் குறித்த அரசாங்கக் கமிஷனுக்கு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், பார்-அட-லா சமர்ப்பித்தது :

1. கமிஷன் வெளியிட்ட கேள்விப் பட்டியலுக்கு பதிலளிக்கும் விதத்தில் என்னுடைய கருத்துக்களைக் கொண்ட பின்வரும் அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். கமிஷன் வெளியிட்ட கேள்விப் பட்டியல் சம்பந்தப்பட்ட மட்டில் கேள்வி எண் நான்கிலிருந்து நான் தொடங்குகின்றேன்; ஏனென்றால், அதுதான் பிரதான பிரச்சினை என்றும் அதன்மீது திட்டவட்டமான கருத்தைக் கமிஷன் கோருகிற தென்றும் நான் நம்புகிறேன்.

2. தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரமானது பின்வரும் காரணங்களினால் இந்தியாவிற்கு ஆதாயமானது என்பதாக இனியும் தொடரமுடியாது என்ற என்னுடைய கருத்தில் நான் உறுதியாக இருக்கின்றேன்:

(1) **அது, தங்க நாணய மதிப்புத்தரம் என்ற உள்ளார்ந்த ஸ்திரத்தன்மையைப் பெற்றிருக்கவில்லை** - ஒரு சுத்தமான தங்க நாணய மதிப்புத்தரம் என்பது ஸ்திரமானது; ஏனென்றால், சுழற்சியி லுள்ள தங்கமானது மிக அதிகமானது என்பதோடு வினியோகத்தில் கூடுதலாக வரக்கூடியதும் குறைந்த அளவிலேயே உள்ளதால் மதிப்புத் தரத்தின் ஸ்திரத்தன்மை வெகுவாக பாதிக்கப்படவில்லை. ஆனால், பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்ற விஷயத்தில் புதிய கூடுதல்கள் என்பது வெளியிடுபவரின் விருப்பத்தைச் சார்ந்திருப்பதாலும், அந்த அளவிற்கு அதிகப்படுத்த முடியுமென்பதாலும் மதிப்புத் தரத்தின் ஸ்திரத்தன்மை என்பது அதன் விளைவாகப் பெருமளவுக்கு பாதிக்கப் படும்.

(2) **உசிதம்போல் என்பதை ஒழுங்குபடுத்துவதற்கு அங்கே எதுவும் இல்லாததால் வெளியிடுவதில் உசிதமாக உள்ளது** - தங்க மதிப்புத்தரம் என்பது கடினமான மதிப்புத் தரம் என்று சில நேரங்களில் கூறப்படுகின்றது; அது மனிதகுலத்தின் மாறிக்கொண்டிருக்கும் செயல்பாட்டினை இயற்கைச் சக்கரத்தோடு பிணைத்துள்ளது; அதன்மீது மனித அமைப்பு எவ்விதக் கட்டுப்பாட்டையும் செலுத்த முடியாது என்பதுடன் இந்த அக்கறையற்ற தன்மையிலிருந்து தப்புவதற்குப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் வாய்ப்பளிக்கிறது என்றும் கூறப்படுகிறது. இதற்குப் பதிலளிக்கும்போது, அது ஒரு உசிதம் போலான நாணயம் என்றாலும், இந்த உசிதத்தை முறையாகப் பிரயோகிக்க அந்த நாணயத்திற்குச் சில வழிவகைகள் இருக்கும்போதுதான் அது அவ்வாறு இருக்க முடியும் என்பதையும் சொல்லியாக வேண்டும். பணத்தை வெளியிடுபவரின் உசிதத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஏதாவதொரு ஒழுங்குபடுத்தும் முறை இருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது பரிவர்த்தனை மதிப்புத் தரம் என்பது மாற்றக்கூடிய தரத்தைவிடத் (Convertible Standard) தாழ்ந்ததாக உள்ளது. ஒரு மாற்றக்கூடிய மதிப்புத்தரம் என்பதும் பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பதும் இதில் ஒரேமாதிரியானதுதான் என்பதுடன் அவை இரண்டும் நாணயம் வெளியிடுவதில் உசிதம்போல் செயல்படுவதை அனுமதிக்கின்றன. ஆனால், மாற்றக்கூடிய மதிப்புத் தரம் என்பது பரிவர்த்தனை மதிப்புத் தரத்தைவிட மேலானது; ஏனென்றால் முதலில் சொல்லப்பட்டதில் வெளியிடுபவரின் உசிதம் என்பது **ஒழுங்குபடுத்தப்பட்டது;** ஆனால், இரண்டாவது சொல்லப்பட்டதில் வெளியிடுபவரின் உசிதம் என்பது **ஒழுங்குபடுத்தப்படாதது.** பரிவர்த்தனை மதிப்புத் தரத்தில் அன்னியப் பரிவர்த்தனைகள் விதிமுறை என்றழைக்கப்படும் விதிமுறை உள்ளது. ஆனால், விதிமுறை என்று எதுவும் இல்லாதிருப்பதைவிட அத்தகைய விதிமுறை மேலானது என்ற போதிலும், அது நோக்கத்தை அடைவதற்கான தளர்ச்சியான, நேரடியற்ற வழியேயாகும் என்பதுடன் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அதை அடைந்து விடுவதற்காக நம்பியிருக்க முடியாது.

(3) **அது சிக்கனமானது. ஆனால், அந்தக் காரணத்தினாலேயே அது பாதுகாப்பற்றது.**

கள் அதைக் கண்டு மயங்குகிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் பாதுகாப்பானதா? நாணயத்தை அதன் மதிப்பில் வைத்திருக்க விரும்பும் எந்தவொரு திட்டமும் சிக்கனமானதாகவும், பாதுகாப்பான தாகவும் இருக்க வேண்டும். அது சிக்கனமாக இல்லையென்றாலும் பழுதில்லை. ஆனால், அது பாதுகாப்பானதாக இல்லையென்றால் அது நிச்சயம் பழுது. நாணயம் என்ற முறையில் தங்கத்தைச் சிக்கனமாக்குவது என்பது ஒரு மதிப்புத்தரமாக அதன் பயன் பாட்டிற்குக் குறைவு ஏற்படுத்தும் என்பதாகக் கூறுவது, தங்கத்தைப் பயன்படுத்துவதைவிடக் காகிதம் அல்லது ரூபாயைச் சாதனமாகப் பயன்படுத்துவது மிகவும் சிக்கனமானது என்று கூறுவதைப் போல் எளிதானது மற்றும் சுயசான்றானது என்று நான் தற்பொழுது கூற விரும்புகிறேன். நாணய உபயோகத்திலிருந்து தங்கத்தைப் பய னற்றது என்று கைவிடுவது எதன் பொருட்டு? அது குறிப்பது இதைத்தான்: தங்கத்தைப் பயன்படுத்துவதைச் சிக்கனம் செய்வதன் மூலம் நீங்கள் அதனுடைய வினியோகத்தை அதிகரிக்கின்றீர்கள்; அதனுடைய வினியோகத்தை அதிகரிப்பதன் மூலம் அதனுடைய மதிப்பை நீங்கள் குறைக்கின்றீர்கள், அதாவது, தங்கத்தின் மதிப்பைக் குறைக்கின்றீர்கள்; அதனுடைய உபயோகத்தில் சிக்கனம் செய்யும் காரணத்தால் அது மதிப்புக் குறைக்கப்பட்ட சரக்காகி விடுகின்றது; எனவே, மதிப்புத்தரமாகச் செயல்படுவது அந்தளவுக்கு தகுதியற்ற தாகி விடுகின்றது. எனவே **நீங்கள் தங்கத்தை சிக்கனமாக்கிக் கொண்டே அதே நேரத்தில் அதை ஒரு மதிப்புத் தரமாகவும் பயன் படுத்த முடியாது.** நீங்கள் தங்கத்தைச் சிக்கனமாக்க விரும்பினால் நீங்கள் அதை மதிப்புத் தரமாகப் பயன்படுத்துவதைக் கைவிட வேண்டும்; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பரிவர்த்தனைத் தரம் என்பதன் பொருளாதாரமானது, அதனுடைய பாதுகாப்போடு ஏற்புடையதல்ல.

3. ஆகையால், தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது என்பது தங்க நாணய மதிப்புத் தரத்திற்கும் பரிவர்த்தனை மதிப்புத் தரத் திற்குமிடையேயானதாக ஒரு போதும் இராது. தங்க நாணய மதிப்புத் தரத்தை நாம் விரும்பவில்லையென்றால், நாம், பேராசிரியர் பிஷர் கூறும் சமதையான மதிப்புத் தரத்திற்கோ அல்லது பேராசிரியர் ஜீவன்ஸ் (Jevons) கூறும் அட்டவணையான மதிப்புத் தரத்திற்கோ ஏதாவதொன்றிற்குப் போகலாம். வாய்ப்பு என்பது உண்மையில் இவ்விரண்டில் ஒன்றுக்கும் தங்க நாணய மதிப்புத் தரத்திற்குமிடையில் உள்ளது.

சமதையான மதிப்புத் தரமோ அல்லது அட்டவணையான மதிப்புத் தரமோ தங்க நாணய மதிப்புத் தரத்தைவிட மேம்பட்ட தாயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், அவற்றைச் செயல்பட வைப்பதற்கு முன்பு மனித குலம் முன்பிருந்ததைவிட மேலும் தத்துவ நிலைப்பட்டதாக வேண்டும்; அது நடக்கும் வரை தங்க நாணய மதிப்புத்தரம் என்பது ஒரே நாணய முறையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்; அதுதான் குறும்புத் தனமற்றதும், தவறாகப் புரிந்து கொள்ளாதபடி தெளிவானதுமாகும்.

4. அடுத்த முக்கியமான கேள்வியானது தங்க இருப்பு சம்பந்தப்பட்டதாகும். சேமிப்பு இடம், சேர்மானம் போன்ற விஷ யங்களை விவாதிக்கும் முன்பு, நாம் அதை விரும்புகிறோமா என்று தீர்மானிப்பது அவசியமானதாகும். அந்தக் கேள்வியானது அதன் பங்கிற்குத், தங்க நாணய மதிப்புத் தரம் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வடிவம் (mode) சம்பந்தமான மற்றொரு கேள்வியைச் சார்ந்துள்ளது. தங்க நாணய மதிப்புத் தரத்தை அறிமுகப்படுத்துவ தென்றால், நாணய சாலையைத் துவக்கித் தங்க நாணயங்களை வெளியிடுவதுதான் என்ற நினைப்பில் பலர் இருக்கிறார்களென்பதை நான் சொல்ல விரும்புகின்றேன். இதைவிடத் தவறானது வேறெதுவும் இருக்க முடியாது. தங்க நாணய மதிப்புத்தரம் என்பதன் பொருள் தங்க நாணயச்சாலையைத் துவங்குவதல்ல: ஆனால் தங்கம் என்பது பரிவர்த்தனைப் பொருளாக இருக்க வேண்டும். ஏனென்றால், நாணயம் என்பதுதான் தரம். தற்சமயம் தங்கம் பரிவர்த்தனைப் பொருளாக இருக்கும் பொருட்டு இதர நாணய வகைகளின் அளவுக்கு வரம்பு கட்டப்பட வேண்டும். நாணயத்திற்கு வரம்பு கட்டுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒருவழியானது அதை மாற்றத் தகுந்த தாக்குவது, மற்றொன்றானது அதன் வெளியிடலுக்கு ஒரு வரம்பு நிச்சயிப்பது. வரம்பு கட்டுவதற்கான வழிமுறையாக நாணயமாற்றம் என்பதை நீங்கள் பின்பற்ற முடிவெடுத்தால் ஒரு தங்கச் சேமிப்பைப் பராமரிப்பதற்கான காரணம் அங்கே இருக்கிறது. வரம்பு கட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நாணயம் மட்டுமே வெளியிடுவதென்று நீங்கள் முடிவு செய்தால், ஒரு தங்கச் சேமிப்பைப் பராமரிக்க வேண்டியதற்கு எவ்விதக் காரணமும் கிடையாது. இவ்விரண்டு முறைகளுக்கிடையில் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட முறையையே நான் ஆதரிக்கிறேன். எனது காரணங்கள் இரண்டு:

1) பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பதன் தீமைகளுள் ஒன்று, அது நிர்வாகத்திற்கு உட்படுவதாகும். தற்பொழுது மாற்றக் கூடிய ஒரு முறை என்பதும் ஒரு நிர்வாக முறையாகத்தான் உள்ளது. ஆகையால், மாற்றக்கூடிய முறையைப் பின்பற்றுவதன் மூலம் நாம் நிர்வாகத் தீமை என்பதிலிருந்து விடுபடவில்லை; அது உண்மையில் இன்றைய அமைப்பு முறையின் தீமையாக உள்ளது. தவிரவும், நிர்வாகமானது அரசாங்கத்தின் கரங்களில் இருக்கும் பொழுது, நாணய முறை நிர்வகிப்பென்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். நிர்வாகமானது ஒரு வங்கியிடமிருந்தால் தவறான நிர்வாகத்திற்கான வாய்ப்பு குறைவானதாக இருக்கும். ஏனென்றால், விவேகமற்று ரூபாய்களை வெளியிடுவது அல்லது தவறான நிர்வாகம் போன்றவற்றிற்கான தண்டனையானது அதை வெளியிடுபவரின் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும். ஆனால், அரசாங்கமே அதை வெளியிடும்போது தவறான நிர்வாகத்திற்கான வாய்ப்பு அதிகம்; ஏனென்றால் அரசாங்கப் பணத்தை வெளியிடுவதென்பது அங்கீகாரமளிக்கப்பட்ட மனிதர்களைக் கொண்டு நடத்தப் படுவதாகும்; இவர்களோ, மோசமான முடிவு அல்லது தவறான நிர்வாகம் போன்றவற்றால் ஏற்படும் தனிப்பட்ட நஷ்டத்திற்கு ஒருபோதும் பொறுப்பாளியாக மாட்டார்கள்.

2) நிர்வாகத்தை அகற்றுவது நீங்கலாக ஒரு நிச்சயமான ரூபாய் வெளியீட்டு முறை என்பது நாணய முறையில் தங்கத்தை மிகப்பெருமளவில் பயன்படுத்த வழிசெய்யும். தங்கத்தைப் பயன் படுத்துவதென்பது ஒரு முக்கியமான விஷயமாகும். தங்கத்தின் மதிப்புக் குறைவு காரணமாக ஏற்பட்ட தொடர்ச்சியான விலைவாசி உயர் வினால் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆகையால், தங்கம் விலை அதிகரிப்பதற்காகச் செய்யும் எதுவும் நல்லதற்காகத் தானிருக்கும். தங்கமும் அதை ஏற்குமானால் ரூபாயாகத் தங்கம் மிக அதிகமாகப் பயன்படும். தவிரவும், தற்பொழுது தங்கத்தைச் சிக்கனப் படுத்த வேண்டிய தேவையில்லை; ஏனென்றால், உலகம் முழுவதும் பணம் குவிந்துள்ளதால் தங்கத்தைச் சிக்கனப்படுத்த வேண்டுமென்று குறைவாகப் பேசுவது நல்லது. இந்த நோக்கில் காணும் பொழுது, ஒரு காலத்தில் வரப்பிரசாதமாகக் கருதப்பட்ட பரிவர்த்தனை மதிப்புத்தரம் தற்பொழுது சாபக்கேடாக உள்ளது. சிறிது காலத்திற்கு அது ஒரு உபயோககரமான காரியத்தைச் செய்தது. 1873 முதல் தங்க உற்பத்தி என்பது வீழ்ந்து விட்டது என்பதுடன், சொல்லப் போனால், பரிவர்த்தனை மதிப்புத் தரத்தினால் ஏற்பட்ட பொருளாதார விளைவு மிகுந்த பயனுள்ளதாகவிருந்தது; ஏனென்றால், உலக நாடுகளில்

பணப்புழக்கம் சுருங்கி வரும் நேரத்தில், அதை விரிவுபடுத்தி விலைவாசிகளில் பெரும் வீழ்ச்சியைத் தடுத்து சர்வதேச விலைவாசி முறையின் ஸ்திரத்தன்மையை அதன் மூலம் பராமரித்தது; ஆனால், தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து நாடுகளும் தங்க நாணய முறையைப் பின்பற்றுமேயானால் இது சாத்தியப் பட்டிராது. ஆனால் 1910க்குப்பின் நிலைமைகள் மாறின என்பதுடன் தங்க உற்பத்தியும் அதிகரித்தது; அதன் பின்பும் பரிவர்த்தனை மதிப்புத்தரம் தொடர்வது என்பது விலைவாசி உயர்வைத் தடுக்க நாடுகளுக்கு உதவி செய்யவில்லை என்பது மட்டுமல்ல, ஆனால் விலைவாசி உயர்வுக்கான நேரடியான காரணமாகவும் ஆகிவிட்டது. தங்கம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டதால் அது தேவையற்ற தாகியது. யுத்த காலத்தின் பொழுது முன்னெப்பொழுதும் கண்டிராத அளவில் காகித நாணயம் பயன்படுத்தப்பட்டதானது தங்கத்தின் மதிப்பில் மிகப்பெரும் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது; நடைமுறை யில் இவையனைத்தும் தங்க நாணயமாக அதைப் பயன்படுத்து வதில் சிக்கனமாக இருந்ததன் விளைவாகும். இதைத்தொடர்ந்து பேராசிரியர் கேனன் (Cannan) குறிப்பிட்டது போல் ''உடனடியான எதிர்காலத்தில் தங்கம் ஒரு சரக்கல்ல; அதனுடைய பயனானது கட்டுப்படுத்துவதற்கோ அல்லது சிக்கனப்படுத்துவதற்கோ விரும்பப் படும். கடந்த நூற்றாண்டின் இறுதி வருடங்களிலிருந்து தங்கம், அதன் வாங்கும் சக்தியைத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டும், அதன் மூலம் ஸ்திரமான மதிப்புத் தரமாக இருக்கும் பொருட்டும், அது மிக அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டது; தங்கத்தை வைத்திருப் பவர்கள் மேலும் அதிக இருப்பை வைத்துக் கொள்ளவும் அல்லது புதியவர்கள் புதிய இருப்பை வைத்துக்கொள்ள சம்மதித்தாலன்றி அது தேவையற்றதாகிவிடும். யுத்தத்திற்கு முன்பு ஐரோப்பாவின் பல்வேறு மத்திய வங்கிகள் புதிதாக வந்த தங்கத்தில் ஒரு பெரும் பகுதியை வாங்கிக் கொண்டு, பொதுவான விலைவாசியின் உண்மை யான அதிகரிப்பைத் தடுத்து விட்டன.'' அந்தத் தேவை இல்லாததல் அடுத்த சிறந்த காரியம் இந்தியாவிலும், கிழக்கு நாடுகளிலும் தங்க நாணயச் செலாவணியை அறிமுகப்படுத்துவது என்பதாகும். தங்க நாணயச் செலாவணியின் இந்த அறிமுகத்தை, மாற்றக்கூடிய முறைக்குப் பதிலாக நிச்சயிக்கப்பட்ட வெளியிட்டு முறையைச் கடைப்பிடிப்பதன் மூலம் செய்து முடிக்கலாம். முதலாவதாகச் சொல்லப்பட்டதானது, இரண்டாவதாகச் சொல்லப்பட்டதைவிடத் தங்கத்தை உண்மையான நாணயத்தில் பயன்படுத்த ஒரு பெரும்

5. பிரச்சினைக்கான தீர்வு அதுதான். என்னுடைய கண்ணோட்டம் என்ற நிலையில் நான் தங்க நாணய மதிப்புத் தரசேமிப்பை ஒழித்துவிட வேண்டும் என்பதற்கு ஆதரவாகவே உள்ளேன்: அது நாணயத்தின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதற்கு எவ்வித நடைமுறைப் பயனையும் அளிப்பதில்லை. தங்க நாணய மதிப்புத் தரச் சேமிப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்று நான் நினைப்பதற்கு மற்றொரு காரணமுமுண்டு. தங்க நாணய மதிப்பு தர சேமிப்பு என்பது ஒரு அம்சத்தில் வினோதமாக உள்ளது: அதாவது சொத்துக்கள், அதாவது சேமிப்பு மற்றும் கடன்கள், அதாவது ரூபாய் நாணய அதிகரிப்பு இல்லாமல் சேமிப்பை அதிகப்படுத்த முடியாது என்ற அம்சத்தின் காரணமாக ரூபாய்களின் ஆபத்தான சேர்மானம், சேமிப்பானது, ரூபாய்களை அச்சிடுவதிலிருந்து கிடைக்கும் ஆதாயத்திலிருந்து உருவாக்கப்படுகிறது என்ற அம்சத்திலிருந்து இந்தத் தீங்கான நிலைமை தோன்றுகிறது. அதனுடைய தோற்றுவாய் அவ்வாறிருக்க, இந்த நிதியானது ரூபாய் அச்சிடும் அளவு அதிகரிப்பதின் விளைவாகத்தான் வளர முடியுமென்பது தெளிவானது. தற்பொழுது பேராசிரியர் கேனன் குறிப்பிடுவதைப் போலத் தங்க நாணய மதிப்புத் தரத்தைப் புரிந்து கொள்ளும் நிர்வாகிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் சதவீதமானது வேதனை தரும் அளவில் குறைவாகவேயுள்ளது: ஆனால், அது, தங்கப் பரிவர்த்தனை முறையை புரிந்து கொள்பவர்களின் சதவீதத்தைவிடப் பத்து அல்லது இருபது முறை அதிகமாக இருக்கிறது, வருங்காலத்தில் இருக்கவும் கூடும். தங்கப் பரிவர்த்தனை முறையானது அறியாமையாலும் ஊழலாலும் நெறிபிறழும் சாத்தியப்பாடானது, சாதாரண தரம், நெறி பிறழும் சாத்தியப்பாட்டை விட மிகப் பெரியதாயிருக்கும். துரதிருஷ்டவசமாக இந்திய நாணய முறை வரலாற்றில் இத்தகைய நெறி பிறழ்பவர்களுக்கு ஏராளமான சான்றுகளுள்ளது. ஒரு சேமிப்பு என்பதானது அத்தியாவசியமானதொரு விஷயமென்ற கருத்தினால் ஆட்டிப் படைக்கப்பட்டு, சேர்த்து வைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறெதையும் கருத்தில் கொள்ளாமல், நாணயங்களை வெளியிட்டுக் கொண்டேயிருந்த முட்டாள்தனமான நிர்வாகிகளையும் நாம் ஏற்கனவே பெற்றிருந்தோம். நாணய சேமிப்பின் முறையான செயல்பாடானது வர்த்தகத்தை திடீரென வளரச் செய்வது எனக் கருதிக் கொண்டு அரசாங்கம் அந்தச் சேமிப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தங்களை அனுமதிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காகப் பரிவர்த்தனை தரத்தைக் கண்டிக்கும் எண்ணற்ற முட்டாள்தனமான வர்த்தகர்களுக்கு இந்த நாட்டில் பஞ்சமேயில்லை. அதே போல் இந்தச் சேமிப்பை, மக்களுக்குக் கல்வி புகட்ட வேண்டுமென

விரும்புகிறவர்களின் நண்பர்களெனத் தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பும் அதே போன்ற முட்டாள் தனமான அரசியல்வாதிகளும் நம்மிடையேயுள்ளனர். இந்த மூன்றில் ஏதாவ தொன்று கூட நல்லதைச் செய்வதைப் போன்று, ஒரு நாசத்தைச் சுலபமாகக் கொண்டுவர முடியும் என்பதோடு நாணயக் கோட் பாடுகள் குறித்த முழு அறியாமையினால் இது அனைத்தும் நடக்கிறது.

ஆகவே பரிவர்த்தனையின் தரத்தையும், அதே போன்று தங்க நாணய மதிப்புத்தரச் சேமிப்பையும் ஒழித்துக் கட்டக் கூடிய ஒரு நாணய முறையை அறிமுகப்படுத்துவது மிக நல்லதாகும்; இரண்டாவ தாகச் சொல்லப்பட்டது ஒரு விஷமத்திற்கான ஆதாரமாக இருக்கக் கூடும்.

6. அவ்வாறானால், இந்திய நாணயத்தைச் சீர்திருத்துவதற்கான என்னுடைய திட்டத்திற்குத் தேவைப்படுபவன:-

1) நாணயச் சாலைகள் மூடுவதன் மூலம் அரசாங்கம் ரூபாய்கள் அச்சிடாதபடி செய்ய வேண்டும்; நாணயச் சாலைகள் மக்களுக்கானவை மட்டுமே.

2) ஒரு பொருத்தமான தங்க நாணயத்தை அச்சிடும் பொருட்டு ஒரு தங்கசாலையைத் திறத்தல்

3) தங்க நாணயத்திற்கும் ரூபாய்க்குமிடையே ஒரு விகிதத்தை நிச்சயித்தல்.

4) ரூபாய், தங்கமாக மாற்றப்படக்கூடாது என்பதுடன் **தங்கமானது ரூபாயாக மாற்றப்படக்கூடாது;** அவ்விரண்டும் சட்டத் தால் நிச்சயிக்கப்பட்ட விகிதத்தில் வரம்பற்ற சட்டபூர்வ செலாவணி யான சுழற்சியில் இருக்க வேண்டும்.

7. நடப்பிலுள்ள சேமிப்பு, நாணயக் காரியங்களுக்காகத் தேவைப்படவில்லையென்றால் அதை என்ன செய்வது? அரசாங்கம், அதைச் சாதாரண வருவாய் உபரியாகக் கருதி அவசரமாகத் தேவைப் படும் எந்தவொரு பொதுக் காரியத்திற்காகவும் அதைப் பயன்படுத்து வதையே நான் விரும்புவேன். ஆனால், இந்தச் சீர்திருத்தப் பட்ட நாணயத்தில் கடுமையான பலவீனங்கள் இருக்கவே செய்யும்;

போலல்லாது, என்னுடைய நம்பிக்கையில் நான் உறுதியாக உள்ளேன்; ரூபாய் நாணயத்திற்கு ஒருமுறை சக்திவாய்ந்த முறையில் வரம்பு கட்டி விட்டால், அது, எவ்விதச் சேமிப்பு என்ற தேவையு மில்லாமல் அதனுடைய மதிப்பைப் பராமரித்து வரும் என்பதில் உறுதியாக உள்ளேன். ஆனால், நடப்பிலுள்ள மொத்த ரூபாய் நாணயம் மிக அதிகமாக இருப்பதால் வர்த்தக் மந்தம் ஏற்படும் சமயத்தில் அது அளவுக்கு அதிகமாகி அதன் காரணமாக அதன் மதிப்பை இழக்கக்கூடிய நிலையும் ஏற்படலாம். அத்தகையதொரு தற்செயல் நிகழ்ச்சிக்கெதிரான பாதுகாப்பாக, அரசாங்கம் தங்க நாணய மதிப்புத்தரச் சேமிப்பின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி ரூபாய் நாணயத்தை ஒரு கணிசமான அளவுக்குக் குறைக்கலாம் என்று நான் கூற விரும்புகிறேன்; அவ்வாறு செய்தால் கடுமையான மந்த நேரங்களில் கூட அது நிலைமையின் தேவைகளுக்கேற்ப வரம்புக்குட்பட்டு இருக்கலாம். நாணய பலவீனத்தின் இரண்டாவது ஊற்று காகித நாணயச் சேமிப்பின் விசித்திரமான சேர்மானத்தில் அடங்கியுள்ளது. அந்தப் பலவீனமானது ''உருவாக்கப்பட்ட பத்தி ரங்கள்'' (Created Securities) என்றழைக்கப்படும் பத்திரங்கள் இருப் பதன் காரணமாக ஏற்பட்டுள்ளது. காகித நாணயச் சேமிப்பின் இந்தப் பகுதி முடிந்தளவு விரைவில் மறைந்துவிட வேண்டுமென்று விரும்பு கின்றேன். இதைச் செய்தாலொழியக் காகித நாணயம் என்பது அது இருக்க வேண்டிய அளவுக்கு நெகிழ்ச்சி இல்லாது போய்விடும். எனவே, மீதமுள்ள தங்க நாணய மதிப்புத்தரச் சேமிப் பென்பது காகித நாணயச் சேமிப்பிலுள்ள ''உருவாக்கப்பட்ட பத்திரங்கள்'' என்பதை ரத்து செய்யப் பயன்படுத்த வேண்டுமென்று நான் சிபாரிசு செய்கின்றேன்.

8. மாற்றம் என்பதன் தன்மை மற்றும் வடிவம் குறித்து என்னுடைய கருத்தை வெளிப்படுத்தியதற்குப் பின்னர், இப்பொழுது நான் அடுத்த முக்கியப் பிரச்சினையை, அதாவது ''தங்கத்திற்கும் ரூபாய்க்குமிடையேயான விகிதம்'' என்ற பிரச்சினையை விவாதிக் கிறேன். யுத்த நடவடிக்கைகள் காரணமாக யுத்தத்திற்கு முந்தைய தங்கச் சமன நிலையைக் கொண்டிருக்கக் கூடிய தங்க நாணய மதிப்புத் தர நாடு ஒன்று கூட இல்லை. அவைகளில் சில, பெருமளவு தங்கம் வைத்திருந்து அதில் தவறிழைத்து விட்டன; இந்த அதிக உற்பத்தி காரணமாக ஒரு நம்பிக்கையுடன் பொருளாதாரத்தைப் பல நாடுகள் அணுக முடியாது போயிற்று.

எனினும், அந்தக் கடமை எந்தளவு சாத்தியமற்றதாகக், காலச் சூழலுக்குப் பொருத்தமற்றதாக இருந்தாலும் யுத்தத்திற்கு முந்திய

சமன நிலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்ற மிகுவிருப்பம் உலகம் முழுவதும் உள்ளதாகவே தெரிகிறது. ஆனால், இந்தியாவிற்கும், இதர நாடுகளுக்குமிடையே இந்த விஷயத்தில் வித்தியசாசமிருக்கின்றது. இதர நாடுகள் யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையை இன்னும் அடையவில்லை. மறுபுறத்தில் இந்தியா, யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை விட அதிகமாக அடைந்துள்ளது. இந்த வித்தியாசத்தின் விளைவாக இந்தியா மற்றும் இதர நாடுகளின் முன்புள்ள பிரச்சினைகள் வித்தியாசப்பட்டு உள்ளன. ஐரோப்பிய நாடுகளில் இந்தப் பிரச்சினையானது பணப்புழக்கத்தைத் தளர்த்துவதாக அதாவது, அதைப் பாராட்டுவதாக உள்ளது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், விலைகளில் வீழ்ச்சியைக் கொண்டு வருவதாக உள்ளது. இந்தியாவில் இந்தப் பிரச்சினையானது பணப் புழக்கத்தை உப்பச் செய்வதாக அதாவது நாணய மதிப்பைக் குறைப்பதாக உள்ளது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், விலைவாசிகளில் ஒரு அதிகரிப்பைக் கொண்டுவருவதாகும். 1 ஷில்லிங் 6 பென்னி தங்கம் என்பதிலிருந்து 1 ஷில்லிங் 4 பென்னி தங்கம் என்பதுதான் இது; வேறெதுவுமல்ல. யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை அடையு மளவிற்குப் பணத்தை உப்பச் செய்ய வேண்டுமா?

யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையை மீண்டும் ஏற்படுத்துவதென்பது நீதி வழங்குவதாகுமென்றும், நாம் நீண்ட காலமாகப் பழக்கப்பட்டுள்ள பழைய விலைவாசி மட்டத்தை நமக்குத் தருமென்றும் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரண்டு கருத்துக்களும் தவறானவை. முதலாவதாக, யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென்பது, யுத்தத்திற்கு முந்தைய விலைவாசி மட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதல்ல. எவ்வாறென்றால், வாங்கும் சக்தியைக் கொண்டு கணக்கிட்டால் 1925இல் 1 ஷில்லிங் 4 டாலர் தங்கம் என்பது 1914இல் 1 ஷில்லிங் 4 டாலர் தங்கத்தைப் போன்று இருந்திராது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதே அளவு பரிவர்த்தனை விகிதம் என்பதும் அதே மட்ட வாங்கும் சக்தியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இவ்விரண்டு நாணயங்களும் மொத்த அளவில் ஏராளமான மாற்றங்களைக் கொண்டுள்ள போதிலும் அவைகளுக்கு இடையிலான விகிதம் அதே போன்றே இருக்கலாம். ஆனால் மொத்த அளவில் வேறுபாட்டு அளவு சமமானதாகவும், அதே எண்ணப் போக்கை கொண்டதாகவும் இருக்க வேண்டும். இதுதான், யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையைப் பெயரளவுக்கு மீண்டும் ஏற்படுத்துவது என்பதன்விளை யாகும். யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையை மீண்டும்

மீண்டும் ஏற்படுத்துவது என்று பொருளானால் அதன் பின் 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பதிலிருந்து 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற திசை வழியில் விகிதத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அது 2 ஷில்லிங் தங்கம் என்ற திசை வழியில் அதிகரிக்கப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால் பணவீக்கத்திற்குப் பதிலாக அங்கே நாணயம் மேலும் பணச் சுருக்கம் செய்யப்பட வேண்டும். இரண்டாவதாக, யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையைப் பெயரளவிற்குக் கூட மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்பது அநீதியானது. கொடுக்கப்பட வேண்டிய தொகை என்றளவில் பணமானது, அது சம்பந்தப்பட்ட ஒப்பந்தங் களுக்குத் தொல்லை விளைவிக்கக் கூடாது. இன்றுள்ள அனைத்துக் கடன்களும் யுத்தத்திற்கு முன்பு 1914இல் ஒப்பந்தமாகியிருந்தால், யுத்தத்திற்கு முந்தைய விகிதம் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டு மென்பது லட்சிய நீதிக்குத் தெளிவாகத் தேவைப்படும். மறுபுறத்தில், நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் 1925இல் செய்யப்பட்டிருந் தால் நீதி என்பது 1925லிருந்த விகிதத்தை நாம் கணக்கிலெடுக்க வேண்டும் என்பதாகும். இது தொடர்பாக இரண்டு விஷயங்களை நாம் நினைவிற் கொண்டிருக்க வேண்டும்.

முந்தைய மந்தநிலை காலகட்டங்களிலும் மற்றும் பாராட்டு நிலை காலகட்டங்களிலும் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் உள்ளிட்டு நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தையும் நியாயமாக நிறைவேற்ற வேண்டுமென்றால், அவை ஒவ்வொன்றும் தனித்தனியாகக் கவனிக்கப் பட வேண்டும் - அதனுடைய சிக்கலான தன்மை மற்றும் பூதாகாரமான அளவு கரணமாகக் காரிய சாத்தியமற்றதொரு கடமை இது.

நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் பல்வேறு வருடங்களில் செய்யப் பட்டவை என்பதில் ஐயமில்லை. ஆனால், அவைகளில் பெரும் பாலானவை, மிகச் சமீபத்தில், சொல்லப்போனால் ஒரு வருட காலத்திற்குள் செய்யப்பட்டவை; மொத்த ஒப்பந்தக் கடன்கள் என்பதன் ஈர்ப்பு மையம் தற்காலத்திற்கு மிக அருகிலானது என்று கூறலாம். இவ்விரண்டு அம்சங்களையும் வைத்துக் காணும்பொழுது சிறந்த தீர்வென்பது 1 ஷில்லிங் 4 பென்சிற்கும், 1 ஷில்லிங் 6 பென்சிற்கு மிடையே ஒரு சராசரியை உருவாக்கி, அது 1 ஷில்லிங் 6 பென்சிற்கு அருகிலிருக்கும்படியும், 1 ஷில்லிங் 4 பென்சிலிருந்து விலகியிருக்கும் படியும் பார்த்துக் கொள்வதாகும். இதுதான் பேராசிரியர் பிஷரின் சாராம்சக் கருத்தாகும்; அவர் கூறுகிறார்: ''ஒரு நியாயமான பண மதிப்புத்தரம் என்ற பிரச்னையானது பின்னோக்கிக் காண்பதைவிட முன்னோக்கிக் காண்கிறது; **அது தன்னுடைய துவக்கத்தை நடப்பு வர்த்தகத்திலிருந்து துவக்க வேண்டும், யுத்தத்திற்கு முந்தைய**

கற்பனையான தரத்திலிருந்து அல்ல. முதலிலிருந்த வெள்ளி பவுண்டு நாணயத்தை மீண்டும் ஏற்படுத்துவதென்றோ அல்லது கிரேக்கம் மற்றும் ரோமாபுரியின் நாணய முறை மதிப்புத் தரங் களுக்குத் திரும்புவது குறித்தோ எவரும் பேசக்கூடும்.'' சுருக்கமாகச் சொன்னால், நாணயம் சம்பந்தமான விஷயங்களில் சரியானதே நியாயமானது.

9. வர்த்தகம் மற்றும் தொழில் மீது ரூபாயின் ஏற்ற இறக்கங் களின் விளைவுகள் சம்பந்தப்பட்ட மட்டில் குறைவான பரிவர்த்தனை என்பது வர்த்தகத்திற்கும் தொழிலுக்கும் ஊக்க ஊதியம் என்று அடிக்கடி கூறப்படுகின்றது. ஆனால், இது முக்கிய மான விஷயமல்ல. மிக முக்கியமான விஷயம் எதுவென்றால் நாணய மாற்றுக் குறைவு மூலம் லாபம் கிடைக்கிறதென்று வைத்துக்கொண்டால் எப்பொழுதிலிருந்து இந்த லாபம் எழுகிறது? வர்த்தகர்களில் பலர் இந்த லாபமானது ஏற்றுமதி வர்த்தகத்திற்குக் கிடைத்த லாபம் என்று கூறுகிறார்கள்; எனவே, ஏராளமானோர் இக்கூற்றைக் குருட்டுத்தனமாக நம்புகின்றனர் என்பதோடு குறைவான பரிவர்த்தனை **நாடு முழுவதற்குமே** ஆதாய ஊற்று என்று அனை வருக்கும் நம்பிக்கைக் கோட்பாடாக விளங்குகிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். குறைவான பரிவர்த்தனை என்பதன் பொருள் உயர் உள்நாட்டு விலைகள் என்று தற்பொழுது உணரப்படு கின்றது; இந்த லாபமானது வெளியேயிருந்து நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய, ஆனால், நாட்டிற்குள்ளேயே ஒரு வர்க்கத்தின் தலையில் கைவைத்து மற்றொருவர்க்கம் அடையும் ஆதாயமே அது என்பது உடனே தெளிவாக விளங்குகிறது. தற்பொழுது பாதிக்கப்பட்டு வரும் வர்க்கம், ஏழை உழைப்பாளி வர்க்கம் என்பதுடன், அதுதான் ஊக்க ஊதியத்தைப் பணக்காரர்களுக்கோ அல்லது வர்த்தக வர்க்கத் திற்கோ அளிக்கிறது. ஏழைகளிடமிருந்து செல்வம் பணக்காரர் களுக்கு இவ்வாறு மாற்றப்படுவது ஒரு போதும் நாட்டின் பொதுவான நலனுக்கானதல்ல. எனவே, நான், உயர்விலைகள் மற்றும் குறைவான பரிவர்த்தனை என்பதை வன்மையாக எதிர்க் கின்றேன் என்பதோடு நாட்டின் ஏழை வர்க்கங்களிடமிருந்து கள்ளத் தனமாக இவ்வாறு பணத்தை எடுப்பதற்கு எந்தவொரு நேர்மையான அரசாங்கமும் உடந்தையாயிருக்கக்கூடாது என்றும் வலியுறுத்து கிறேன்.

10. நான் இப்பொழுது இந்தியாவின் பருவகாலத் தேவை

தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பதுடன் பல நாடுகளில் வேறெந்தக் காரணத்தையும் விட இந்தக் காரணத்திற் காகவே நாணயம் என்பது உலோகம் மற்றும் காகிதக் கலவையாக உள்ளது. முதலில் சொல்லப்பட்டது உறுதியையும், ஸ்திரத் தன்மையையும், இரண்டாவதாகச் சொல்லப்பட்டது நெகிழ்ச்சித் தன்மையையும், அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்தியா வில் துரதிருஷ்டவசமாக காகித நாணயத் திட்டமானது அதற்கு நெகிழ்ச்சித் தன்மையை அளிக்கும் வடிவத்தில் இல்லை. இங்கிலாந்தில் இத்தகையதொரு காகித நாணயத்தின் கீழ் நெகிழ்ச்சியற்ற தன்மை என்பது சேமிப்பு நாணயம் என்ற திட்டத்தின்கீழ் சரி செய்யப்பட்டது; இந்த சேமிப்பு நாணயமானது நல்ல பத்திரங் களுக்கெதிராக வெளியிடப்பட்டது. பல்வேறு காரணங்களால் இந்தியாவில் சேமிப்பு நாணயம் என்பது வேர் கொள்வதில் தோல்வி கண்டது என்பதுடன் அதைத் தொடர்ந்து இந்தியாவின் காகித நாணயத்தின் நெகிழ்ச்சியற்ற தன்மையின் கடுமையைத் தணிக்க முடியவில்லை. ஆகவே நாம், நம்முடைய காகித ரூபாய், சேமிப்பில் பெரும் ஒதுக்கீடு செய்ய வேண்டும்; அதன் மூலம் நல்லவர்த்தகக் காகித நாணயத்தைப் பருவகாலத் தேவைகளுக்குச் சிறப்பாகப் பொருந்தும் விதத்தில் காகித நாணயமாக மாற்றுவது சாத்திய மாக்கப்படும்.

□□□

இந்தியாவில் உள்ள சாட்சிகளுக்காகக் கமிஷனால் அளிக்கப்பட்ட மகஜரின் பிரதி

இந்தியக் காகித நாணயம் மற்றும் நிதி குறித்து ஆராய் வதற்கான அரசாங்கக் கமிஷன் பரிசீலிக்க வேண்டிய பிரதான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும். இந்த பின் வரும் மகஜர், சாட்சியம் கூற விரும்புவர்கள் தங்களுடைய சாட்சியங்களைத் தயாரித்துக் கொள்ளும் பொருட்டு வெளியிடப்படுகிறது. இதை விரிவான தென்றோ அல்லது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் ஒவ்வொரு சாட்சியும் கட்டாயம் முயற்சிக்க வேண்டுமென்று விரும்புவதாகவோ கருதுதல் ஆகாது:-

1) இந்தியக் காகித நாணயம் மற்றும் பரிவர்த்தனைப் பிரச்சனைகளுக்கு ரூபாயை ஸ்திரமாக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவோ, அல்லது வேறெந்த வகையிலோ தீர்வு காண்பதற்கு தகுந்த நேரம் வந்துவிட்டதா?

உள்நாட்டு விலைகளிலும், அயல் நாட்டுப் பரிவர்த்தனை களிலும் உள்ள ஸ்திரத் தன்மையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் என்ன?

வர்த்தகம் மற்றும் தொழில் (விவசாயம் உள்ளிட்டு) ஆகியவை மீதும், தேசிய நிதி மீதும், ரூபாயின் அதிகரித்த மற்றும் வீழ்ச்சியுறும் விளைவுகள், ரூபாய் அதிக ஸ்திரமாகவோ அல்லது வீழ்ச்சியுற்றோ இருப்பதன் விளைவுகள் என்ன?

2) ரூபாய் என்பதை ஸ்திரப்படுத்துவது என்றால் அதை எந்தத் தரத்தில், எந்த விதத்தில் செய்வது?

3) நிச்சயிக்கப்பட்ட விகிதமானது இன்றுள்ள விகிதத்திலிருந்து பெருமளவு வேறுபடுமானால் அந்த மாற்றத்தை எவ்வாறு அடைவது?

4) தேர்ந்தெடுக்கப்பட்ட விலையில் ரூபாயை வைத்திருக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்?

யுத்தத்திற்கு முன்பிருந்த தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தர முறை தொடரப்பட வேண்டும் என்றால் எத்தகைய மாற்றங்களுடன் அதைச் செய்வது?

தங்க நாணய மதிப்புத்தரக் கையிருப்பின் உட்கூறு, அளவு, ஸ்தலம் மற்றும் வேலை வாய்ப்பு போன்றவை என்னவாக இருக்க வேண்டும்?

5) காகித ரூபாய் வெளியிடுவதைக் கட்டுப்பாடு செய்வது, எந்தக் கோட்பாடுகளின்படி செய்வது என்பதற்கான பொறுப்பை யாரிடம் கொடுப்பது? கட்டுப்பாட்டையும் அல்லது நிர்வாகத்தையும் இந்தியாவில் உள்ள இராஜாங்க வங்கிகளுக்கு மாற்ற வேண்டுமா; அவ்வாறானால், மாற்றத்தின் பொதுவான விதிகள் என்ன?

6) இந்தியாவில் தங்கத்தை அச்சிடுவது குறித்த கொள்கையும், தங்கத்தைப் பணமாகப் பயன்படுத்துவது குறித்த கொள்கையும் எதுவாக இருக்க வேண்டும்?

ரூபாய்களுக்குப் பதிலாகத் தங்கத்தைக் கொடுப்பது என்ற கடமையை மேற்கொள்ள வேண்டுமா?

7) இந்திய அரசாங்கத்தின் பணம் அனுப்பும் செயல்பாடுகள் எந்த முறையில் நடத்தப்பட வேண்டும்?

அவை அரசாங்க வங்கியால் நிர்வகிக்கப்பட வேண்டுமா?

8) அவ்வாறு எதாவது இருக்கும் பட்சத்தில், பருவநேரங்களில் காகித நாணயங்களைச் சமாளிப்பதற்கு மிகுந்த நெகிழ்ச்சித் தன்மையைப் பெற எத்தகைய நடவடிக்கைகள் விரும்பத்தக்கவை?

ஏதாவது இருந்தால், ஏதாவது இருக்குமானால் உண்டியல் களுக்கு எதிராகக் காகித நாணயங்களை வெளியிடுவது குறித்து என்ன விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

9) வெள்ளியை வாங்குவது குறித்த நடப்பிலுள்ள முறை களில் ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமா?

குறிப்பு: இந்தியாவிலுள்ள சாட்சிகளுக்கு மேலே சொல்லப் பட்டுள்ள கேள்விகள் காடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வாய் மொழியாகவும், எழுத்து மூலமாகவும் சாட்சியம் பெறப்பட்டதன் விளைவாக எழுப்பப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள அழுத்தம் தெளிவாகியுள்ளது.

அதன்படியே சாட்சிகளின் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மகஜரும், கமிஷன் தலைவரால் கேட்கப் படக்கூடிய கேள்விகளின் உப-பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

3

சாட்சியம்

இந்தியச் செலாவணி மற்றும் நிதி குறித்த அரசாங்கக் கமிஷனின் முன்பு 1925 டிசம்பர் 15ஆம் தேதி அளிக்கப்பட்டது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், பார் - அட் - லா, அழைக்கப் பட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டார்:

6047. (தலைவர்) டாக்டர் அம்பேத்கர், நீங்களும் ஒரு - பார் அட் - லா; இந்தியச் செலாவணி முறை குறித்து உங்களுடைய சிபாரிசுகளை ஒரு மகஜர் மூலம் கமிஷனுக்கு அளிக்கவும், விரிவாக கூறவும் அன்பு கூர்ந்து வந்துள்ளீர்கள்.

சமூகம் மற்றும் அரசியல் விஞ்ஞானக் கழகத்தின் பிரதிநிதி களில் ஒருவராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்று நினைக் கின்றேன்? - ஆம்.

6048. மற்றொரு மகஜரில் அவர்களுடைய கருத்துகள் கூறப்பட் டுள்ளன? - ஆம், அவ்வாறுதான்.

6049. இத்தகைய பிரச்சினைகளை மிக நெருக்கமாக ஆராயும் மாணவர் நீங்கள் என்று நான் கருதுகின்றேன் - இரண்டு ஆண்டு களுக்கு முன்பு அவ்வாறு இருந்தேன், ஆனால் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கியதிலிருந்து காகித நாணய சமீப வளர்ச்சிப் போக்குகள் குறித்துப் போதுமான கவனம் நான் செலுத்த இயல வில்லை; எனவே என்னுடைய விபரங்களும் புள்ளி விபரங்களும் ஒருக்கால் காலம் கடந்ததாக இருக்கலாம், ஆனால் இந்த விஷயம்

6050. நீங்கள் அரசியல் விஞ்ஞான மாணவராக இருந்து இருக்கிறீர்களா?

— சைடன்ஹாம் விஞ்ஞானக் கல்லூரியில் இரண்டு ஆண்டுக் காலம் பேராசிரியராக இருந்துள்ளேன் என்பதுடன் ரூபாய் பிரச்சனை குறித்து ஒரு புத்தகத்தையும் எழுதியுள்ளேன்.

6051. உங்கள் மகஜரில் இப்பிரச்சனை குறித்து ஒரு சில தனிப்பட்ட பங்களிப்புகளை விளக்குவதற்காக உங்களை ஒரு சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன்: இரண்டாவது பாராவில் உள்ள உபபிரிவு (i) ஒன்பதில் உங்கள் அறிக்கையைப் பின் வருமாறு தொடங்குகிறீர்கள். ''சுழற்சியில் உள்ள தங்கத்தின் மதிப்பு மிக அதிகமாய் இருப்பதால் ஒரு முழுப் பொன் திட்டம் என்பது நிரந்தரம் ஆனது'' என்றெல்லாம் சொல்கிறீர்கள். அது சம்பந்தமாக, எதை நீங்கள் ''முழுப் பொன் திட்டம்'' என்று குறிப்பிடுகிறீர்கள்?

— ஒரு சுத்தமான தங்க விகிதம் என்பதன் பொருள் மதிப்பின் தரமாகத் தங்கச் காசாக இருக்க வேண்டும் என்று பொருளாகும்.

6052. தங்கத்தைக் கொண்டிருக்கிற பணமா? - பெரும்பாலும்.

6053. சில அடையாளப் பூர்வப் பணத்தை உதவியாகக் கொண்டா? - ஆமாம். சில வகையான அடையாளப்பூர்வ நாணயம்.

6054. உங்களுடைய கருத்தானது அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பதால் தங்க விகித முறையையும், ஏராளமான தங்க நாணயங்களைச் சுழற்சியில் கொண்டு இருக்கக் கூடியதுமான ஒரு நாட்டை உதாரணம் காட்ட முடியுமா?

உதாரணத்திற்கு நான் ஜெர்மனி போன்ற நாட்டைச் சொல்ல முடியும், காகித நாணயத்தைச் சேமிப்பில் வைத்திருக்கும் சம்பவம் நீங்கலாக இங்கிலாந்தையும் நான் மேற்கோள் காட்ட முடியும்.

6055. இந்த இரண்டு விஷயங்களிலும் சுழற்சியின் நாணயமாக இருக்கக்கூடிய தங்கத்தின் உண்மையான அளவு ஒப்புநோக்கில் சிறிதாக உள்ளது?

— நான் ஒரு விஷயத்தைக் கூறலாமா?

நான் அழுத்தமாகக் கூற விரும்புவதெல்லாம் நடப்பில் உள்ள சுழற்சி அளவில் ஒப்பிடும்போது புதிதாகச் சேர்க்கப்படுபவை மிகவும்

சிறியதாகும்; எனவே புதிதாகச் சேர்க்கப்பட்டவை விலைவாசி மட்டத்தில் பெரிய மாறுதலைச் செய்ததில்லை. அதைத்தான் அந்தப் பாராவில் நான் உண்மையில் கூற விரும்பினேன்; ஆனால், வெளியிடு வோரின் விருப்பத்தினால் மட்டும் முற்றிலும் ஒழுங்கு அமைக்கப் பட்ட காகித நாணயத்தை நீங்கள் கொண்டிருக்கும்போது அவ்வாறு வெளியிடுபவர், நடப்பிலுள்ள காகித நாணய இருப்புடன் ஒரு புதிய அளவு காகித நோட்டுகளையும் கூடுதலாக வெளியிடலாம்; இதன் மூலம் ஒரு முறை நிச்சயிக்கப்பட்ட விலைவாசி மட்டத்தில் அவர் பாதிப்பு ஏற்படுத்தக்கூடும்.

6056. நீங்கள் குறிப்பிடக்கூடிய புதிய நிபந்தனைகள் என்பவை முறையான விரிவாக்கத்தின் போது தேவைப்படும் காகித நாணய அதிகரிப்பு என்று நான் கருதுகின்றேன் - இல்லை; தங்க வினியோ கத்தில் புதிய கூடுதல் என்று நான் கூறும் போது சுரங்கங்களின் உற்பத்தியைத் தான் நான் கூறுகின்றேன்.

6057. வருடந்தோறும் உலகில் கூடுதலாகக் கிடைக்கும் தங்கத்தின் அளவு மிகக் குறைவானதென்ற அம்சத்தை நீங்கள் விவரித்தீர்கள்? - அது ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு விலை மட்டத்தில் ஒரு பெரிய திருப்பத்தைக் கொண்டுவர முடியாது.

6058. உள் அலகு தங்கத்தின் ஸ்திரத் தன்மையோடு தொடர்பு கொண்டிருக்கிற எந்த வகையான காகித நாணயத்தையும் தரம் பிரித்துப் பார்க்க எந்த அம்சத்தில் அது உதவுகிறது? - நீங்கள் கேட்பது புரியவில்லை.

6059. சுழற்சியிலுள்ள தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாணயத்திற்கும், தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரத்தை அடிப்படை யாகக் கொண்டிருக்கும் நாணயத்திற்கும் இடையேயான ஸ்திரத் தன்மை சம்பந்தமாக உலகின் தங்க வினியோகத்தில் ஒரு அளவு விகித வருட அதிகரிப்பு என்பது எந்த அம்சத்தில் தனித்துப் பார்க்க வைக்கிறது?

— ஒரு குறிப்பிட்ட விலைவாசி மட்டத்தில் தொடங்கிப் புதிய நாணயத்தை நீங்கள் வெளியிடுவதென்பது அதை வெளியிடுபவரின் உறுதியையே முற்றிலும் சார்ந்திருப்பதால், அவர் நடப்பிலுள்ள [illegible] நாணயத்தையும் கூடுதலாகச் சேர்ப்பார்;

அதைச் செய்வதினின்று எதுவும் அவரைத் தடுக்காது. உதாரணத்திற்கு நான் ஒரு விளக்கத்தைத் தரலாமா? திவாலாகிவிட்ட ஒரு அரசாங்கம் அதனுடைய சில துறைகளுக்கு நிதி ஒதுக்க விரும்புகிறதென்று வைத்துக்கொள்வோம்; அவ்வாறானால் அது, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் செய்ததைப்போல நடப்பிலுள்ள கணிசமான அளவு நாணயத்துடன் கூடுதலாக ஒருவகைப்பட்ட அடையாள நாணயத்தையும் சுலபமாக வெளியிடலாம்.

6060. ஓரளவு தங்கத்தை சுழற்சியில்கொண்டு, அதற்கு உதவியாகக் காகிதநாணயத்தையும் சுழற்சியில் கொண்டிருக்கக்கூடிய ஒரு நாடு இருக்கிறதென்று நாம் கருதிக்கொள்வோம்; நீங்கள் முன் வைத்து வாதாடின ஒரு அம்சம் அது சம்பந்தமானது என்று நான் நினைக்கின்றேன்? — ஆம், ஒரு வழியில் சரிதான்.

6061. மறுபுறத்தில் தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தர அடிப்படையில் ஒரு நாணயம் உள்ளது. இந்த அம்சத்தில் கமிஷனுக்கு உதவி புரியும்பொருட்டு உங்களது சிபாரிசை விரிவாக்க முடியுமா; பணவீக்கம் என்ற சாத்தியப்பாடானது முற்றிலும் பரிவர்த்தனைத் தரத்தைக் கொண்டிருப்பதைவிட நீங்கள் தங்கத்தை சுழற்சியில் கொண்டிருக்கும் பொழுது மேலும் சாத்தியமற்றதாகி விடுவது ஏன்?

— பதில் இதுதான்; உங்களுடைய காகித நாணயத்தை ஒரு தங்க நாணயத் திட்டத்தின்கீழ் தங்கமாக மாற்றவேண்டிய கடன் பொறுப்பு உங்களுக்கு உள்ளது; சுழற்சியில் பத்திரங்களைக் கருவியாகக் கொண்டு அதன் மூலம் காகித நாணயம் வரம்புக்குட்பட்ட அளவில் வைக்கப்பட்டுள்ளது. நாணய மாற்றலுக்கான உங்களுடைய சேமிப்பு அனுமதிக்கும் அளவுக்கு மேல் சுழற்சியில் அதிகக் காகித நாணயத்தை நீங்கள் சேர்க்கமுடியாது. நாம் இந்தியாவில் பெற்றிருந்ததைப்போல தங்கநாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்தின் கீழ் உங்களுடைய சுழற்சிநாணயத்தைத் தங்கமாக மாற்றவேண்டிய கட்டுப்பாடு உங்களுக்குக் கிடையாது; நீங்கள் விரும்புமளவுக்கு நாணயம் வெளியிட உங்களுக்கு உரிமை உண்டு.

6062. சொல்லப்போனால் (சொல்லப்போனால் என்பதிலிருந்து துவங்கின்றேன்) உங்களுடைய உள்நாட்டுக் காகித நாணயத்தைப் பரிவர்த்தனைத் தரத்தின் கீழ் தங்கமாகவோ அல்லது தங்கத்திற்குச் சமமாக அன்னியக் காகித நாணயமாகவோ மாற்றவேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வதாய் இருந்தால், அது உங்கள் கருத்துப்படி பணவீக்கத்தைத் தடுப்பதில் இவ்விரண்டு முறைகளுக்கும் ஒரே

மாதிரியான திறன் உள்ளதென்று கருதுவது ஆகாதா? — அது எந்த வகையான மாற்றத்தை நீங்கள் பின்பற்றப்போகிறீர்கள் என்பதைப் பொறுத்து உள்ளது.

6063. எதுவாக இருந்தபோதிலும் நாணயம் வெளியிடும் அதிகாரம் படைத்தவர்கள், உள்நாட்டு நாணயத்தைக் கொடுத்துத் தங்கமாகக் கேட்பவர்களுக்கு அதை மாற்றித் தரவும் அல்லது ஒரு தங்க நாணய மதிப்புத்தரத்தைக் கொண்டுள்ள அன்னிய நாணயத்தின் மூலம் தங்கம் கிடைக்க வழிசெய்து தருவதையும் சட்டபூர்வக் கடமையாக ஏற்றுக்கொள்கிறார் என்று நான் கருதிக்கொள்கிறேன்? — எவ்விதக் கேள்வியுமின்றிக் கேட்கும்பொழுது தங்கத்தைத் தரச்சம்மதிப்பதுதான் உங்களுடைய கடமைப்பொறுப்பு என்றால், அது போதுமான தென்று கருதுகிறேன். அவ்வாறு கூறும்பொழுது நாணயமாற்றம் என்பது உணர்வைப் போன்றதென்றும், அது பல்வேறு அளவு களில் இருக்குமென்றும் நான் குறிக்கிறேன்; நாணயத்தின் மொத்த வெளியீட்டளவைக் கட்டுப்படுத்துவதற்கான அதனுடைய செயல் திறன் என்பது எவ்வகையான நாணயமாற்று முறையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதைச் சார்ந்துள்ளது. உங்களுடைய நாணய மாற்ற முறையானது அன்னியப் பரிவர்த்தனை நோக்கத்திற்காக மட்டுமே என்றால், அது நாணயவெளியிடலுக்குப் போதும்ான வரம்புகட்டுவதாகாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

6064. உள்நாட்டு நாணயத்தைத் தங்கமாகவோ அல்லது தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட அன்னிய நாணயங்களாகவோ தருவதன் மூலம் சர்வதேசச் செலாவணிக்கருவியாக மாற்றுவதான கடமை என்று நீங்கள் இப்பொழுது குறிப்பிட்ட கடமை அவ்வாறு உள்ளது; அப்படியானால், நாம் இப்பொழுது பரிசீலித்துக்கொண்டிருக்கும் நாணயப் பணவீக்க அபாயத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான போதுமான வழிவகையாக அது ஏன் உங்கள் கருத்தில் இல்லை? - ஏனென்றால் அன்னியப் பரிவர்த்தனையானது உள்நாட்டுப் பணவீக்கத்திற்கான அறிகுறியாக இருக்கவேண்டிய அவசியமில்லை. உதாரணத்திற்கு, இந்தியாவில் நமது சொந்த அனுபவம் கண்டுள்ளதும், பேராசிரியர் கீன்ஸ் கண்டுள்ளதும் என்னவென்றால், ரூபாயானது 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற விகிதத்தில் நீண்ட காலமாக இருந்தபோதிலும் இந்தியாவின் விலைவாசிகளும், இங்கிலாந்தின் விலைவாசி களும் மிகவும் வேறுபட்டதாக இருந்ததென்பதாகும். பரிவர்த்தனை என்பது ஒரு நாட்டின் விலைவாசி மட்டம் முழுவதோடும் முழு

சர்வதேச வர்த்தகத்தில் புகும் பொருட்களை மட்டுமே பாதிக்கிறது என்பதுடன் எந்தளவு பொருட்கள் என்பதையும், சர்வதேச வர்த்தகத்தில் நுழையும் பொருட்கள் மற்றும் நுழையாத பொருட்களுக்கிடையிலான விகிதம் எவ்வளவு என்பதையுமே உண்மையில் சார்ந்துள்ளது. ஒருநாட்டின் உள்நாட்டு வர்த்தகமானது அதனுடைய வெளிநாட்டு வர்த்தகத்தைவிட மிகவும் அதிகம் எனும்பொழுது வெளிநாட்டு வர்த்தகம் முக்கியத்துவமற்றதாகி விடுகிறது.

6065. உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டுவர்த்தகத்தைவிட அதிகம் என்று நீங்கள் கூறுவதன் பொருள் என்ன? - ஒரு நாட்டின் அனைத்துப் பொருட்களும் அல்லது அனைத்துப் பரிமாற்றங்களும் அன்னிய வர்த்தகக் காரணத்திற்காக அல்ல. உண்மையில், ஒரு நாட்டின் அன்னிய வர்த்தகம் மிகச்சிறிய அளவிலேயே கூட இருக்கலாம் என்பதுடன் அன்னிய வர்த்தகத்தில் நுழையும் பொருட்கள், அந்த வர்த்தகத்தில் நுழையாத பொருட்களின் மதிப்பை பாதிக்காது; அவைகளுக்கிடையிலான உறவுகள் மிக நெருக்கமாக இல்லாது போகலாம்.

6066. இந்தக் கேள்வியை ஒருவாறு பொதுமைப்படுத்தி இந்த வழியில் கூறுகிறேன்: காகித நாணயங்களுடனும், சுழற்சியில் தங்கத்துடனும் கூடிய ஒரு தங்க நாணய மதிப்புத் தரத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? அல்லது உள்நாட்டு நாணயத்தை வெளிநாட்டு நாணயமாக மாற்றக்கூடிய பரிவர்த்தனை மதிப்புத்தரத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? இவ்விரு விஷயங்களிலும் உள்நாட்டு நாணயத்தின் அளவானது சேமிப்புகளுக்கும், வெளியிலுள்ள உள்நாட்டு அடையாள நாணயத்திற்குமிடையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தைப் பாதுகாப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படவில்லையா? இவ்விரண்டிற்குமிடை யிலான உறவைப் பராமரிப்பதை உத்தரவாதப்படுத்துவது சுலபமானதா? - பரிவர்த்தனை விகிதங்களைவிட விலைவாசிகள் குறித்தே நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இவ்விரண்டு நாணயங்களுக் கிடையிலான பரிவர்த்தனை விகிதம் அதே போல் இருக்குமென்பதையும், இருந்தாலும் உள்நாட்டு விலைவாசி மட்டங்கள் இரண்டு நாடுகளிலும் வித்தியாசப்படலாமென்பதையும் நான் ஒத்துக் கொள்கிறேன்.

6067. எந்த இருநாடுகள்? - எந்த இருநாடுகளானாலும்; உதாரணத்திற்கு இந்தியாவையும், இங்கிலாந்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்; தங்கத்திற்கும் ரூபாயக்கும் அல்லது ஸ்டெர்லிங்கிற்கும் ரூபாய்க்கு

மிடையிலான விகிதம் ஸ்டெர்லிங்கைத் தங்கத்திற்குச் சமமானதாகக் கொண்டு அதாகவே இருக்கலாம்; உண்மையில் அது நீண்டகாலத்திற்கு அதாகவே இருந்தது; ஆனால், இவ்விருநாடுகளின் விலைவாசி மட்டத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டால் அவை வித்தியாசப்பட்டன; சிறிதுகாலத்திற்குப்பிறகு உள்நாட்டு விலைவாசிமட்டம் என்பது தன்னைத்தானே நிலைநிறுத்தி அன்னியப் பரிவர்த்தனை விகிதத்தைத் தன் வழிக்குக் கொண்டுவரும் என்று நான் ஒத்துக் கொண்டிருந்தேன்.

6068. மிகவும் பொருத்தமான விஷயங்களை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்பதில் ஐயமில்லை என்றபோதிலும், நான் பரிசீலித்து வரும் பிரச்சினையின் சரியான அம்சத்திலிருந்து நீங்கள் சற்று முன்னாலே சென்றுகொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது நான் அதை மற்றொரு கோணத்திலிருந்து முன் வைக்கிறேன். உண்மையில், இந்தியா இதுவரை கண்டறியாததென்று நீங்கள் கூறிய மிகவும் பொருத்தமான நாணயமுறையைக் கொண்டுள்ள நாடுகளை நாம் ஆராய்வோம்; இந்த நாடுகள், தேவையின் நிர்ப்பந்தம் காரணமாகப் பணவீக்கம் தேவை என்று உணர்ந்த நேரத்தில் ஏதாவது சிறுசிரமத்தையாவது உணர்ந்தார்களா? — யுத்தத்தில் தங்க நாணய மதிப்புத் தரத்தைக் கொண்டிருந்த நாடுகளுக்கு என்ன ஏற்பட்டது என்பதை நான் கூறுகிறேன். இல்லை; நான் சொல்லியபடி தங்கம் என்பதுவே பணவீக்கத்திற்கு ஆட்பட்டிருந்தது. அமெரிக்காவிலேயே நாம் கண்டது போல், அப்பொழுது, தங்கம், சுழற்சியில் அதிகளவில் இருந்ததால் அது பணவீக்கத்திற்கு ஆட்பட்டிருந்தது. நான் இவ்வாறு அதைக் கூறலாமா? அன்னியப் பரிவர்த்தனை காரணங்களுக்கான நாணயமாற்றம் என்பதுபோதுமான அளவுக்கு இல்லை; அந்த விஷயத்தைத்தான் நான் கூறவருகிறேன். நாணயமாற்றம் என்பது சக்திவாய்ந்த நாணயமாற்றமாக இருக்கவேண்டுமானால் அது பிரச்சினையற்ற நாணயமாற்றமாக இருக்கவேண்டும்; அது அனைத்து நோக்கங்களுக்கான நாணயமாற்றமாக இருக்கவேண்டும்; நான் அவ்வாறு கூறினாலும், என்னுடைய மகஜரில் நீங்கள் காண்பதுபோல் மாற்றக்கூடிய நாணயத்திற்கு ஆதரவாக நான் இல்லை.

6069. நாணயமாற்றத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய மாற்றம் என்று ஆய்வுசெய்வதன் மூலம் ஓரளவு குழப்பம் ஏற்படக் கூடும். தேவைப்படுவது நல்ல நாணயமுறைதானே; தற்பொழுது

திட்டவட்டமான தங்கமதிப்போடு ஸ்திரமாக இணைக்கப்பட வேண்டாமா? - நான் அதை ஏற்கவில்லை; அது சர்வதேச நோக்கங்களுக்கு ஸ்திரமானதாக இருக்கும்; உள்நாட்டு நோக்கங்களுக்கு அது ஸ்திரமானதாக இருக்காது.

6070. எனது கேள்வியைத் தெளிவாகக் கேட்டதாக நான் நினைக்கவில்லை. உள்நாட்டில் நாணய அலகாகப் பயன்படுத்தப்பட்டு வருவது தங்க மதிப்போடு உறுதியாகப் பொருந்தியிருக்கவேண்டும் என்பதைத்தான் உங்கள் சிபாரிசில் நீங்கள் விரும்புகிறீர்கள் என்று நான் கருதுகின்றேன். — தங்கம் அதிகமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றே விரும்புகிறேன். இன்றுள்ள சூழ்நிலைமைகளின் கீழ் தங்கத்தைச் சிக்கனப்படுத்தும் எந்தவொரு முறையையும் நான் எதிர்க்கின்றேன். ஏனென்றால், தங்கத்தைச் சிக்கனப்படுத்துவது விலைவாசிப் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல என்று நினைக்கின்றேன். என்னுடைய நிலைப்பாடானது இதர மக்களுடைய நிலைப்பாட்டிலிருந்து மிகவும் வித்தியாசப்பட்டது. என்னுடைய கருத்தில் நான் சிறிது முரட்டுத்தனமாக இருக்கலாம்.

6071. இல்லவே இல்லை. உங்களுடைய உண்மையான கருத்து என்ன என்பதை நாம் பரிசீலிப்போம். ஒருநாட்டின் நாணய அமைப்பில் நீங்கள் அடையவேண்டிய லட்சியம் யாது? தங்கம் சம்பந்தமாக உள்நாட்டு அலகு ஸ்திரமாக இருக்கவேண்டுமா? — ஆம், நிச்சயமாக, அது தங்கம் சம்பந்தமாக ஸ்திரமாக அல்ல, ஆனால், சரக்குகள் சம்பந்தமாக ஸ்திரமாக இருக்க வேண்டும்.

6072. இந்தியாவின் உள்நாட்டு நாணயம் எந்தமுறைகள் மூலம் ஸ்திரமாக இருக்கவேண்டுமென்று நீங்கள் சிபாரிசு செய்கிறீர்கள்? — அது, தங்கம் சம்பந்தமாக ஸ்திரமாக இருப்பதைவிடச் சரக்குகள் சம்பந்தமாக ஸ்திரமாக இருக்கவேண்டும்; அது உள்நாட்டு வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அது ரூபாய் நாணயங்கள் அச்சிடப்படுவதை முழுமையாக நிறுத்தித் தங்கத்தைப் பயன்படுத்தும்படிக் கூறிச் செய்யப்பட வேண்டுமென்று கூறுகிறேன்.

6073. உள்நாட்டு நாணயத்திற்கு மதிப்புத்தர, அளவாகத் தங்கத்தை நாம் நிராகரித்தால் வேறெந்த மதிப்புத் தர அளவை நாம் பின்பற்றுவது? — அதை நான் இங்கே தந்துள்ளேன். ஒன்று, பேராசிரியர் பிஷர் கூறிய அனைத்தையும் சமமாகப் பாவிக்கும் தரத்தைப் பின்பற்றவேண்டும். நீங்கள் தங்கத்தைப் பயன்படுத்தாமல் அதைச்

சிக்கனப்படுத்த விரும்பினால், நீங்கள், இவ்விரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

6074. பேராசிரியர் பிஷர் கூறும் தரத்தைக் குறித்து நெருக்கமாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது; ஆனால், இவ்விரண்டும் ஒரே மாதிரியான ஆலோசனைகளா? – பேராசிரியர் பிஷருடைய ஈடுகட்டும்தரம் தவிர, அவை அனைத்தும் ஒரே மாதிரியானவை. உண்மையில் அவ்வாறுதான் உள்ளன: நான் சொல்வதுபோல் சொல்வதென்றால் ஒரு மெடலின் இரண்டு பக்கங்கள். உதாரணத்திற்குப், பேராசிரியர் பிஷர் தங்க அலகிலுள்ள உலோகத்தைக் குறியீட்டெண்ணாக மாற்றுகிறார்; பேராசிரியர் ஜெவான்ஸ், சில குறியீட்டெண்படி அதிக அலகுகளையோ அல்லது குறைந்த அலகுகளையோ அனுமதிப்பார். இவ்விரண்டும் சிக்கலானவை என்று நான் நினைக்கிறேன். அனைத்து நடைமுறைக் காரியங்களுக்கும் தங்க நாணய மதிப்புத்தரம் போதுமானதென்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன்.

6075. நடைமுறை சாத்தியத்திற்குத் திரும்பி வருவோம். இந்திய நாணய அலகின் மதிப்பு ஒரு குறிப்பிட்டளவு தங்கம் சம்பந்தமாகத் தீர்மானிக்கப்படவேண்டுமென்று கருதுகின்றீர்கள்? – இல்லை. இந்தியா, நாணயத்தில் தங்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றே கூறுகிறேன். தங்கம் என்பது குறிப்பிட்டுச் சொல்லும் அலகாக மட்டும் செயல்படக்கூடாது.

6076. நான் அந்தக் கேள்வியிலிருந்து அடுத்த கேள்விக்கு வருகிறேன். நீங்கள் முன்வைக்கும் கண்ணோட்டத்தை நான் ஆராய்கிறேன். அது, உங்கள் மகஜரின் 4ஆவது பாராவிலுள்ள உப-பாராவில் (2) சிறப்பாக வெளியிடப்படுகிறது. அதில் நீங்கள் கூறுகிறீர்கள்: ''தங்க விலைக்குறைப்பின் காரணமாக உலகம் முழுவதும், தொடர்ச்சியான விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தங்கத்தின் விலை ஏற்றத்திற்காகச் செய்யும் எதுவும் நல்லது; தங்கம் விலை அதிகரிக்குமானால் நாணயமாகத் தங்கம் அதிகளவு பயன்படுத்தப்படும்.'' அந்தக் கருத்தைச் சரியாக நான் புரிந்துகொண்டால் அது தங்கநாணயப்பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது தங்கத்தைப் பயன்படுத்துவதைச் சிக்கனம் செய்கிறது. விவேகமானதும், அறிவுறுத்தப் படுவதும் எதுவென்றால், தங்கத்தை உபயோகப்

6077. அது, உலகில் தங்கத்தின் தேவை மற்றும் வினியோகத் திற்கிடையிலான எதிர்கால உறவைக் குறித்த கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதா? – ஆம்.

6078. தேவை சம்பந்தமாகக் காணும்பொழுது எதிர்காலத் தங்க வினியோகம் என்பது அதிகரிக்கக்கூடும் என்று நீங்கள் கருத்துக் கொண்டிருக்கிறீர்கள்? – இல்லை, அதிகரிக்காது; இதர மக்கள் தங்கத்தைப் பயன்படுத்தாமல், அது அதிகமாகவே இருக்கும்; அவர்கள் காகித நாணயத்தைப் பயன்படுத்துகிறார்கள்; தங்கத்தைப் பயன்படுத்தும்நிலையில் அவர்கள் இல்லை; எனவே தங்கம் என்பது பயன்படுத்தப்படவில்லை என்றபோதிலும், அளவில் அதிகமாகவே இருக்கும்.

6079. முதலாவதாக, அதுசம்பந்தமாக ஒரு பூர்வாங்கக் கேள்வி. நீங்கள், இங்கே, இந்தியாவின் நலன்களைக் கருதுகின்றீர்களா அல்லது உலகின் இதர பகுதிகளுக்கு இந்தியா அளிக்கக்கூடிய சேவை யைக் கருதுகிறீர்களா? - நான், இரண்டையும் கண்ணோட்டத்தில் கொண்டுள்ளேன்.

6080. அதைச் செய்வதன்மூலம், இந்தியா தனது சொந்த நலனுக்குப் பாடுபட்டுக்கொண்டே, அதேசமயம் உலகின் இதரபகுதி நலன் களுக்கும் பாடுபடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். தங்க நாணய முறையானது மிகவும் செலவுபிடிக்கக்கூடிய முறை என்று பொதுவாக உள்ள கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? – ஆம். அது அப்படித்தான்.

6081. ஆகவே, முதலாவதாக அதிகச்செலவு சம்பந்தப்பட்டதால் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய பாதகத்தை நாம் ஆராயவேண்டும். அந்தச் செலவுபிடிக்கும் முறையினால் இந்தியாவிற்கு என்ன நன்மை? – பேராசிரியர் கேனன் கூறுவதுபோல எவ்விதத் தவறுக் கும் இடமில்லாத, மிகவும் ஸ்திரமான மதிப்புத் தரத்தை நீங்கள் அடைவீர்கள்.

6082. தற்பொழுது அந்த வாய்ப்பு குறித்து இந்த வாதத்தின் வலிமை யானது, உலகில் தங்கவினியோகம் சம்பந்தமாக நடைமுறைக்கு வருவதை உங்கள் எதிர்ப்பார்ப்புகள் சார்ந்திருக்கவில்லையா? – ஆம்.

6083. உதாரணத்திற்கு, மறுபுறத்தில் உலகின் தங்க வினியோகத்தில் ஓரளவு குறைவு ஏற்பட்டு, அது உலக விலைவாசிகளின் பொதுவான அதிகரிப்பிற்கு இட்டுச்செல்லுமென்று வைத்துக்கொண்டால் தங்க

உபயோகத்தில் சிக்கனத்தை ஏற்படுத்துவதில் அது இதர நாடு களைப் போன்று இந்தியாவிற்கும் பலன்தருமென்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? – நல்லது. என்னுடைய பதிலானது அளவற்ற முறையில் சுருங்குவதைக் குறித்து நாம் பயப்படத் தேவை யில்லை. நாணய அதிகரிப்பிற்கான வழிவகை நம்மிடம் எப் பொழுதும் உண்டு. அளவற்ற முறையில் விரிவுபடுத்தப்படுவதற் கெதிராக நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவ்வாறு விரிவு படுத்தப்படுவது எப்பொழுதும் சாத்தியமே.

6084. நீங்கள், தங்கநாணய மதிப்புத்தரம் மூலம் இந்திய நாண யத்தைத் தங்கத்திற்கும் குறைவாக ஆக்கினால் உலகத் தங்க வினி யோகத்தில் குறைவு ஏற்பட்டு, அதன் விளைவாக ஏற்படக்கூடிய விலைகளின் பொதுவான வீழ்ச்சி என்பது இந்தியாவிலும் வெளிப் படாதா? – ஆம், நமது காகித நாணயத்தை அதிகரிப்பதன் மூலமோ அல்லது வேறுவகையில் காகிதநாணயத்தைத் திறமையாகக் கையாளு வதன் மூலமோ அதற்கெதிராகப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

6085. அந்தத் தியாகமானது, தங்க நாணயமுறையின் குணாம்ச மாகாதா? அந்த முறையை நீங்கள்தானே தேர்ந்தெடுத்தீர்கள்? – இல்லை. வரம்பற்ற அளவில் விரிந்துகொண்டே போகும் சாத்தியப் பாடுகளைத் தவிர்ப்பதற்காகவே, நான், தங்கத்தை நாணயமாக்கிக் கொண்டுள்ளேன். நான் கூறியபடி, ஒரு வரம்பற்ற அளவில் சுருக்கு வதற்குஎதிராக நீங்கள் எப்பொழுதும் பாதுகாத்துக் கொள்ளலாம். விலைகளின் வீழ்ச்சி என்பது எப்பொழுதும் தடுக்கப்பட முடியும்.

6086. தங்க விலைஏற்றத்தைச் செய்யும் எதுவும் நல்லது என்று நீங்கள் கொண்டுள்ள கருத்து குறித்து நான் இப்பொழுது உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். வரவிருக்கும் காலத்தில் தங்கத் தின் வினியோகத்திற்கும் தேவைக்குமிடையே உள்ள எதிர்கால உறவு குறித்து நீங்கள் ஏதாவது புள்ளிவிபர மதிப்பீடுகளுக்கு வர முடிந்ததா?

– நல்லது, 1923 ஆம் ஆண்டு இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது, சில ஆய்வுகள் செய்தேன்; அச்சமயத்தில் **ஹார்வர்டு வர்த்தக அளவுமானி தொடரில்** வந்த சில கட்டுரை

என்னுடைய கருத்தானது உலகிலுள்ள நாடுகள் காகித நாணயத்தை ஏராளமாகப் பயன்படுத்துவதால் நமக்குக் கிடைத்திருக்கும் தங்கம் எந்த அளவாயிருந்தாலும் உண்மையில் மிக அதிகமானதே. ஆகையால் தங்கத்தை மிச்சப்படுத்துவதைத் தவிர்க்கும் அந்த நாடுகள், தங்களுடைய சொந்த நலனுக்காகவும் உலகின் மீத மிருப்போர் நலனுக்காவும் செய்கிறார்கள்.

6087. உங்கள்பதிலின் பின்பகுதியை நான் புரிந்து கொள்ளவில்லை? – நான் சொல்ல வந்தது, சுரங்கங்களிலிருந்து தங்கம் வெட்டி எடுக்கப் படுவது அதிகரிக்கவில்லை என்ற போதிலும், நவீன காலத்தில் தங்கத் திற்கான பதிலிகளின் உபயோகம் மிக அதிக அளவிலுள்ளது; இதனால் சுரங்கங்களிலிருந்து கூடுதல் தங்கம் வரவில்லை என்ற போதிலும் நடப்பு சுழற்சியிலுள்ள தங்கத்தின் அளவானது ஒரு நீண்ட காலத்திற்கு உலகப் பரிமாற்றத்திற்குப் போதுமானதாகத் தோன்றும்.

6088. எதிர்காலத் தங்க விநியோகம் குறித்து உங்கள் மதிப்பீட்டை அந்தக் கமிஷன் முன்பு வைப்பதற்காகப் புள்ளிவிபரக் கணக்குகள் ஏதாவது உங்களிடம் உள்ளதா? – இல்லை. நான் எந்த மதிப்பீட்டை யும் செய்யவில்லை.

6089. இந்த விஷயமானது, சொல்லப்போனால், கமிஷனில் பரிசீலனைக்கு மிகுந்த முக்கியத்துவமுடையது. எனவே இதரர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற ஒன்றிரண்டு மதிப்பீட்டை உங்கள் முன்பு வைக்கின்றேன். இவைகள், பலவருடங்களாகத் தங்கத்தின் தேவைக் கும் வினியோகத்திற்குமிடையிலான உறவு பொதுவான தங்க விலைப்போக்கு மீது ஏற்படுத்தியுள்ள விளைவுகளின் மதிப்பீடாகும்.

— அவைகள் 1930 ஆம் வருடத்தில் பல்வேறு தேதிகளில் அதிகாரிகளால் முன்னறிவிப்பு செய்யப்பட்டவை. செய்யப்பட்டது என்னவென்றால், 1913 ஆம் வருடத்தை 100 புள்ளித்தரமாகக் கொண்டு 1930ஆம் வருடத்தில் பொதுவான விலைவாசிமட்டத்தை முன்னறி விப்பு செய்ய முயற்சிப்பதன் மூலம், விலைகள் மீது தங்க விநியோ கத்தின் தாக்கத்தை அளவிடவேண்டுமென்பதே. இதன்மூலம் இந்த விஷயத்தில் எதிர்கால உலகம் எப்படியிலிருக்கப் போகிறதென் பதைக் காணலாம். 1921 ஆம் ஆண்டில் சர்.ஜேம்ஸ் வில்சன் செய்த மதிப்பீடு இங்கே என்னிடமுள்ளது: இந்தக் காரணிகளின் விளைவானது

1930இல் பொதுவான விலைவாசி மட்டம் 115 புள்ளியில் ஸ்திரமாக இருக்கும் என்று இது மதிப்பிட்டுள்ளது. நடப்பு எண்ணிக்கை 158 புள்ளியைச் சுற்றி உள்ளது என்பதைக் காணும்பொழுதே கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையும் காண முடியும். அதன் பின் நீங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள **ஹார்வர்டு வர்த்தக அளவு மானியின்** மதிப்பீடும் உள்ளது: 1922இல் அது மதிப்பீட்டைச் செய்தது: அதன்படி 1930இல் பொதுவான விலைவாசி மட்டமானது 150 ஆக இருக்கும் என்பதுடன் அதே அளவில் நிரந்தரமாகவும் இருக்கும். அதன்பின் 1925இல் ஒரு மதிப்பீடு செய்த பேராசிரியர் கிரிஹோரி அங்கே உள்ளார். அவர் 1930இல் பொதுவான விலைவாசி மட்டம் 162 புள்ளி ஆக இருக்கும் என்றும், அந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென்றும் மதிப்பீடு செய்தார். எனவே உங்களுடைய கருத்தில் பெரும்பாலானவற்றைக் கொண்டிருப்பவர் அவர். இறுதியாகப் பிரபல வல்லுனர் திரு. ஜோசப் கிச்சன் அங்கே உள்ளார்: அவர் 1930இல் பொதுவான விலைவாசி மட்டம் 120 புள்ளி ஆக இருக்குமென்றும், அந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுமென்றும், 1925 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு முன்னறிவிப்பு செய்துள்ளார். நிலைமை குறித்து முன்னறிவிப்பு செய்ய நடந்த நான்கு முயற்சிகளில், மூன்று விலை வாசி குறையுமென்று அந்த நேரத்தில் எதிர்பார்த்தனர். கீழ் மட்டத் தில் அவை ஸ்திரமாக இருக்குமென்பதை இரண்டு நம்பின. அந்தக் கீழ் மட்டத்தில் அவை வீழ்ச்சி அடையுமென்று ஒரே ஒருவர் திரு.கிச்சன் நம்புகிறார்; மற்றொருவர் மட்டும் அவை இன்றிருப்பதை விட அதிகமாகும் என்றும், அதிகரித்துக் கொண்டிருக்குமென்றும் நம்புகிறார். அதை நான் இவ்வாறு கூறுகிறேன்: நிலைமையை மதிப்பீடு செய்ய மிக எச்சரிக்கையாகச் செய்யப்படும் இந்த முயற்சிகள் விலைகளை ஸ்திரமாக வைத்திருக்கும் பொருட்டுத் தங்க உபயோ, கத்தைச் சிக்கனப்படுத்துவது என்பது போன்ற யூகங்களைச் செய் வதற்கு முன் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்ற அவசியத்தை அது நமக்கு போதிக்கவில்லையா?— சொல்லப்போனால் விலைகள் அதிகரிப்பதைவிட அவை வீழ்ச்சிடைவதையே நான் விரும்புகிறேன் என்பதுடன், அவை வீழ்ச்சியடைந்தால், வேகமாக வீழ்ச்சியடைந்தாலும் நான் மகிழ்ச்சியடைவேன். விலைகள் அதிகரிப்பதைவிட அவை வீழ்ச்சியடைவதுதான் நாட்டிற்கு நல்லது என்று கருதுகிறேன். எனவே இத்தகைய மதிப்பீடுகள் என்னுடைய கருத்தைக் கூறுவதிலிருந்து உண்மையில் என்னைத் தடுக்கவில்லை.

6090. இருந்த போதிலும் உங்களுடைய கருத்திற்கு வெவ்வேறு

ஒருபோதும் செய்யாததால் அவைகளை மறுக்கும் நிலையில் நான் இல்லை. ஆனால், ஏற்கனவேயே நடப்பிலுள்ள தங்கம் மிக அதிக அளவிலுள்ளது. அந்த நாணயத்தை, எந்த நாணயத்தையும் பயன் படுத்தும் உலக நாடுகளின் திறன் மிகக்குறுகியது. தங்க வினியோக மென்பது நீண்ட காலத்திற்கு அப்படியே இருக்கக்கூடும் என்பதுடன் விலைவாசி வீழ்ச்சிக்கு எனது கருத்துபடி பெரும்வாய்ப்பு இல்லை. இவை போன்றவைதான் எனது நம்பிக்கையாக உள்ளன.

6091. அவ்வாறானால் மேலும் ஒரு கேள்வியுள்ளது. பரிவர்த் தனைத் தரத்தை ஒழித்துக் கட்டுவது குறித்து நீங்கள் இங்கே ஆராய் கிறீர்கள் என்று நான் பீடிகையிடலாமா? – ஆம்.

6092. 5ஆவது பாராவில் நீங்கள் கூறுகிறீர்கள்: ''தங்கநாணய மதிப்புத் தர சேமிப்பு என்பது ஒரு அம்சத்தில் விநோதமாக உள்ளது. அதாவது, இதுதான்: சொத்துக்கள் அதாவது சேமிப்பு கடன்களும், அதாவது ரூபாய் நாணயத்தில் அதிகரிப்பு என்பதில்லாமல் சேமிப்பு அதி கரிக்க முடியாது என்ற உண்மையான காரணத்தின்மூலம் ரூபாய்கள் ஆபத்தான அளவில் சேர்மானமாகியுள்ளது.'' இதைச் சற்று விரிவாகக் கூறும்படி நான் உங்களை கேட்டுக் கொள்ளப் போகின்றேன்; அத்துடன் நான் நினைப்பதை விரிவுபடுத்தவேண்டிய தேவை உள்ளது என்பதை உங்களுக்குப் புரியவைப்பதற்காக ஒரு விமர்சகரின் சில சாத்தியமான கேள்விகளை நான் முன்வைக்கிறேன். ஒரு விமர்சகர் கூறமாட்டாரா: ரூபாய் நாணயத்தில் அதிகரிப்பில்லாமல் சேமிப்பு அதிகரிக்க முடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள், அது எதற்காக என்று இந்த விமர்சகர் கூறலாம்? சேமிப்பில் அதிகரிப்பில்லாமல் ரூபாய் நாணயம் அதிகரிக்க முடியாதென்றால் அது மிகவும் விரும்பத் தகுந்ததோர் நிலைமையில்லையா என்று அந்த விமர்சகர் கூறக் கூடும். நான் கூறுவது புரிகிறதா? – இந்த வழியில் நான் விவரிக் கிறேன்; உதாரணத்திற்கு அங்கே, வங்கிப்பத்திரங்களும், ஒரு வங்கி யின் சேமிப்பும் உள்ளது. உதாரணத்திற்கு வங்கிச் சேமிப்புகளையும் வங்கிப் பத்திரங்களையும் ஒப்பிட்டால் நாணயங்களையும் இந்திய அரசாங்கத்தின் தங்கநாணயமதிப்புத்தர சேமிப்புகளையும் ரூபாய் வெளியீடுகளுடன் ஒப்பிட்டால் நீங்கள் இதைக் காண்பீர்கள்: வங்கி வெளியீடுகள் வரம்புக்குட்படுத்தப்பட்டபொழுது சேமிப்புகள் அதிகரித்ததையும், அதேபோன்று எதிரெதிர்மாறாகவும் இருக்கும். ஆனால் இங்கே, உதாரணத்திற்கு, உங்களுடைய சேமிப்பைக் குறைக்காமல், நீங்கள் ரூபாய் நாணயத்தைக் குறைக்க முடியாது.

6093. நான் சொல்லவிரும்புவது இதுதான்: அதுசரி, மற்றொரு கண்ணோட்டத்திலிருந்தும் இதைக் காணுங்கள். அது எவ்வாறிருந்த போதிலும், எனக்குப்படுவதெல்லாம் ரூபாய்நாணயத்தைக் குறைக் காமல் உங்களுடைய சேமிப்புகளைக் குறைக்க முடியாது என்பது தான்; அதைத்தான் நானும் செய்யவும் விரும்புகிறேன்? – முற்றிலும் உண்மை. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நான் கூற விரும்புவது இதுதான். உண்மையில் ஒரு சேமிப்பின் பயன் என்ன? நீங்கள் ஏராளமான சேமிப்பையும், சுழற்சியில் ஏராளமான ரூபாய் களையும் கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். நீங்கள் ஒரு பெரும் சேமிப்பை ஏதாவதொரு இடத்தில் பத்திரமாக வைத்திருந் தால், அது ஏதாவதொரு வழியில் ரூபாயின் மதிப்பைப் பாதிக்குமா? அது பாதிக்காது. ரூபாயின் மதிப்பானது அதனுடைய மொத்த அளவு மற்றும் சுழற்சியில் உள்ள மொத்த அளவு ஆகியவற்றினால் பாதிக்கப் படும். அதனுடைய மதிப்பிற்கும் சேமிப்பிற்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. அது ஒழுங்கமைக்கப்படாத நேரங்களைத் தவிர இதர நேரங்களில் அதற்குப்பின் ஆதரவு என்பது ரூபாயின் மதிப்பில் முற்றிலும் எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது. அந்த நாணயம் குறித்து ஒரு நம்பிக்கைக்கு அது இட்டுச் செல்லக்கூடும்; ஆனால், நாணயம் அத்தகையதொரு நிலைமைக்கு வரும்பொழுது மக்கள் சிறிது நம்பிக்கை வைப்பார்கள் என்று கூற விரும்புகிறேன்; நாணயம் என்பது முற்றிலும் பணவீக்கம் கொண்டுள்ளது என்று கூற விரும்புகிறேன்.

6094. நாணயத்தின் மதிப்பானது இறுதியில் வர்த்தகம் தொடர்பான மொத்த அளவினால் தீர்மானிக்கப்படுகிறது என்ற கூற்றை ஐய மின்றி ஏற்கிறேன். நான் சொல்வது இதுதான்: இந்த உறவானது மிக ஆபத்தான சேர்மானம் கொண்டுள்ளது; தங்கச் சேமிப்பு இருக்கிறது என்பதை மட்டும் வைத்து வரம்பின்றி நாணயங்களை நீங்கள் அச்சடித்துக்கொண்டே போகமுடியாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்த விஷயத்தை வரலாற்றுப்பூர்வமாக நீங்கள் ஆராய்ந்தால் இதுதான் உண்மையில் நடந்துள்ளது என்பது தெரியும். இந்தியாவின் வரலாற்றில், நாணயப்புழக்கத்தை அறிந்திருந்த மக்கள் கற்றுக்குட்டித்தனமான கருத்தை வைத்திருந்தார்கள்; அதாவது, தாங்கள் சிறிது சேமிப்பு வைத்திருக்கவேண்டுமென்றும், ரூபாய்கள் அந்தக் காரணத்திற்காகத்தான் அச்சிடப்பட்டன என்றும் கருதினார்கள்.

இந்தியாவில் நாணயங்கள் அச்சிடப்பட்டன. சர் எட்வர்டு லா, சுழற்சியில் இருந்த ரூபாய்களின் அளவினால் மிக அதிக அளவு ஆட்டிப்படைக்கப்பட்டதன் விளைவாகச் சிறிது சேமிப்பு இருக்க வேண்டுமென்றும் உணர்ந்தார்; இந்த அடிப்படையில் அவர், ரூபாய் நாணயங்களை அச்சிடுவதற்கு அரசாங்கம் அனுமதிக்கப்பட வேண்டு மென்று அரசாங்கச் செயலாளருக்கு ஆலோசனை கூறினார். ரூபாய் களின் அளவானது மொத்தத்தில் வரம்புக்கு உட்படுத்தப்பட்டால், ரூபாய்களின் மதிப்பானது தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளும் என்பதை அவர் சரிவர உணர்ந்திருந்தால் ரூபாயை அதிகரிப்பதற்கு அவர் நிச்சயம் போயிருக்க மாட்டார். இந்திய அரசாங்கம் 1893 ஆம் ஆண்டில் அரசாங்கச் செயலாளருக்குச் செய்த சிபாரிசையே நானும் சிபாரிசு செய்கிறேன்.

6095. உடனடி விஷயத்துக்கு வருவோம்: இத்தகைய நிலைமை களில் ஒரு சேமிப்பின் செயல்பாடு என்பது ஒரு ஸ்திரத்தன்மையை பராமரிப்பது தானே, இல்லையா? – ஒரு சேமிப்பு இருக்கக்கூடா தென்று நினைக்கிறேன். ஒரு நாணயம் என்பது ஒரு சரக்கைப் போன்றதுதான்: அது வினியோகம் மற்றும் தேவை என்ற விதி காரணமாக அதனுடைய மதிப்பைப் பராமரிக்கின்றது.

6096. ஒரு சேமிப்பின் செயல்பாடு என்பது ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதுவே என்ற கருத்தை நீங்கள் நிராகரிக்கிறீர்களா? - ஆம், நான் நிராகரிக்கிறேன். சேமிப்பிற்கு ஏதாவது சம்பந்தமிருக் கிறதென்று நான் நினைக்கவில்லை: உண்மையில் நாணயம் ஒரு வரம்புக்குள் இருக்கும்பொழுது ஒரு சேமிப்பு தன்னைத்தானே பராமரித்துக்கொள்கிறது. அது நாணயத்தைப் பராமரிப்பதில்லை.

6097. நாணயச் சீர்திருத்தத்திற்கு உங்களுடைய நடைமுறை ஆலோ சனைகளை இப்போது நாம் ஆராய்வோம். நீங்கள் கூறுகிறீர்கள்: ''இந்திய நாணயத்தைச் சீர்திருத்தும் எனது திட்டத்திற்குப் பின் வருவன தேவைப்படுகிறது: 1) நாணயங்களை அச்சிடாதபடி மூடிவிடுவது: இந்த நாணயச் சாலைகள் மக்களுக்கானவை மட்டுமே. 2) ஒரு பொருத்தமான தங்க நாணயம் அச்சிடுவதற்காகத் தங்கச் சாலையை திறப்பது. 3) தங்க நாணயத்திற்கும் ரூபாய்க்குமிடையே ஒரு விகிதத்தை நிச்சயிப்பது. 4) ரூபாய்களைத் தங்கமாகவோ, தங்கத்தை ரூபாயாகவோ மாற்றமுடியாது. ஆனால், அவ்விரண்டும் சட்டத்தி னால் நிச்சயிக்கப்பட்ட விகிதத்தில் வரம்பற்ற சட்டபூர்வ நாணயமாக சுழற்சியிலிருக்கும்.'' அந்தச் சூழ்நிலைகளின் கீழ் தங்க நாணயத்

திற்கும் ரூபாய்க்குமிடையிலான விகிதத்தை நீங்கள் எப்படிப் பராமரிக்கப் போகிறீர்கள், நாட்டின் வர்த்தக நிலுவைக்கேற்ப அவை களில் ஒன்று மதிப்பில் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ போகும்போது நீங்கள் எவ்வாறு தடுப்பீர்கள்? – நல்லது, ரூபாயானது மொத்தத்தில் வரம்புக்கு உட்படுத்தப்படும் காரணத்தால் தன்னுடைய மதிப்பைப் பராமரிக்கும்: ரூபாய்கள் இனியும் வெளியிடப்பட மாட்டாது.

6098. அது உயர்மதிப்புக்குப் போகாமல் எது தடுக்கும்? – அது ஒரே அடியில் உயர் மதிப்பிற்குப் போகமுடியாது: ஏனென்றால் தங்கம் அதற்குப் பதிலியாக உள்ளது. ரூபாய்களைத் தங்கமாக மாற்றமுடியாது. ரூபாயானது மொத்தத்தில் ஒரு வரம்பிற்குட்பட்டிருப்பதால் அது வீழ்ச்சியடைய முடியாது. ரூபாய்கள் மேலும் அச்சிடப்படக்கூடாது. ரூபாயானது உயர்மதிப்பு பெறமுடியாது: ஏனென்றால், தங்க நாணயம், நாணயமாகச் செயல்படும் மாற்று வழியிலும் உள்ளது.

6099. அதன் பிறகு நீங்கள் கூறுகிறீர்கள்:- ''ஆனால் இந்த ஒரு வாய்ப்பும் அங்குள்ளது; நடப்பிலுள்ள ரூபாய் நாணய அளவு மிக அதிகமாக இருப்பதால் ஒரு வர்த்தக மந்தம் ஏற்படும்பொழுது அது தேவையற்றதாகி விடுகிறது என்பதுடன் அதிகமாக இருப்பதன் காரணத்தால் அதனுடைய மதிப்பையும் இழக்கிறது. அத்தகைய தொரு தற்செயல் நிகழ்ச்சிக்கெதிரான பாதுகாப்பாக நான் ஒரு யோசனையைக் கூறுகின்றேன்; அதாவது, அரசாங்கம் ரூபாய் நாண யத்தை ஒரு கணிசமான அளவுக்குக் குறைப்பதற்குத் தங்க நாணய மதிப்புத்தர சேமிப்பின் ஒரு பகுதியைப் பயன்படுத்த வேண்டும்; அவ்வாறானால் கடுமையான மந்த நிலைமையாலும்கூட அது சந்தர்ப்பத்தின் தேவைக்கேற்ப வரம்புக்குட்பட்டதாக இருக்கும்.' அந்த திட்டம் எவ்வாறு நடக்கும்? - நீங்கள் சுழற்சியிலிருந்து ரூபாயை ஓரளவுக்கு குறைத்து அவற்றை மீண்டும் வெளியிடக்கூடாது - ஒரு நிச்சயிக்கப்பட்ட வரம்புக்கு முறைப்படி ரூபாயைக் குறைத்துக் கொள்ளலாம்.

6100. ஆகையால் அந்த அளவுக்கு ரூபாய்கள் தங்கமாக மாற்றப் பட முடியாது? - வரம்பு எட்டப்படும் வரை அது ஒரு போதும் தங்கமாக மாற்றப்பட முடியாது: ஆகையால், மந்தமான நேரங்களில் கூட அது ஒருபோதும் கூடுதலாக இருக்காது - ரூபாயைத் தங்கமாக

வெகுவாகப் பயப்படவில்லை: ஆனால் அது நிகழலாம் என்ற காரணத்தால் இந்தப் பாதுகாப்பு அம்சத்தை நான் முன்வைக்கிறேன்.

6101. விகிதம் என்ற பிரச்சினைக்கு வரும்பொழுது நீங்கள் கூறுகின்றீர்கள்: ''ஐரோப்பிய நாடுகளில் இந்தப் பிரச்சினையானது பணப் புழக்கத்தைத் தளர்த்துவதாக, அதாவது, அதன் மதிப்பை உயர்த்துவதாக உள்ளது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், விலைகளில் வீழ்ச்சியைக் கொண்டுவருவதாக உள்ளது. இந்தியாவில் இந்தப் பிரச்சினையானது பணப்புழக்கத்தை உப்பச் செய்வதாக அதாவது, நாணய மதிப்பைக் குறைப்பதாக உள்ளது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், விலைவாசிகளில் ஒரு அதிகரிப்பைக் கொண்டு வருவதாக உள்ளது; 1 ஷில்லிங் 6 பென்னி தங்கம் என்பதிலிருந்து 1 ஷில்லிங் 4 பென்னி தங்கம் என்பதுதான் இது; வேறெதுவுமல்ல. யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையை அடையுமளவிற்குப் பணத்தை உப்பச் செய்ய வேண்டுமா?'' யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென்பது யுத்தத்திற்கு முந்தைய விலைவாசி மட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதல்ல, ஏனென்றால் தங்கத்தின் விலைகளில் மாற்றம் இருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள்? – ஆம்:

6102. மேலும், நீங்கள் சுட்டிக் காண்பித்தீர்கள்: ''இது தொடர்பாக இரண்டு விஷயங்களை நாம் நினைவிற் கொண்டிருக்க வேண்டும். நாணய மதிப்பு தாழ்த்தப்பட்ட அல்லது உயர்த்தப்பட்ட முந்தைய ஒவ்வொரு காலகட்டங்களிலும் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் உள்ளிட்டு நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தையும் நியாயமாக நிறைவேற்ற வேண்டுமென்றால் அவை ஒவ்வொன்றும் தனித் தனியாக கவனிக்கப்பட வேண்டும் - அதனுடைய சிக்கலான தன்மை மற்றும் பூதாகாரமான அளவு காரணமாகச் காரிய சாத்தியமற்றதொரு கடமையிது.

6103. ஆனால் ஒப்பந்தங்களில் மிகப் பெரும்பாலானவை சமீப நாளில் செய்யப்பட்டவையென்று கூறுகிறீர்களே? - நல்லது, என்னுடைய தகவலானது ''புள்ளி விபரப்'' பத்திரிக்கையில் பேராசிரியர் கேனன் எழுதிய கட்டுரைகளில் ஒன்றிலுள்ள ஒரு சிறு குறிப்பை ஆதாரமாகக் கொண்டது.

6104. ஒப்பந்தங்களின் எண்ணிக்கை குறித்து ஒரு சரியான மதிப்பீட்டை எங்களுக்குத் தரும் புள்ளி விபரங்கள் ஏதாவது கிடைக்குமா? –

அது ஒரு யூகமென்றே நான் நினைக்கிறேன்! அது ஒரு பொது அறிவுப் பிரச்சினை.

6105. அதன் பிறகு நீங்கள் கூறுகிறீர்கள்: ''மொத்த ஒப்பந்தக் கடமைகளின் ஈர்ப்பு மையம் எப்பொழுதும் தற்காலத்திற்கு அருகிலேயே உள்ளதாகக் கூறப்படுகிறது.'' என்று. அந்த ஆதாரங்கள் உங்களைப் பின்வரும் முடிவுக்குக் கொண்டு செல்லும்: இவ்விரண்டு அம்சங்களைக் கவனிக்கும் போது சிறந்த தீர்வானது 1 ஷில்லிங் 4 பென்ஸ் மற்றும் 1 ஷில்லிங் 6 பென்ஸுக்கு இடையே ஒரு சராசரியை ஏற்படுத்துவது: அது 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதை விட 1 ஷில்லிங் 6 பென்ஸிற்கு அருகேயிருக்கும். அதை நான் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. நீங்கள் சிந்திக்கும் விதமானது இறுதியில் நீங்கள் 1 ஷில்லிங் 6 பென்ஸ் விகிதத்தின் ஆதரவாளரென்று என்ன நினைக்கச் செய்கிறது? – அது 1 ஷில்லிங் 6 பென்ஸிற்கு அருகிலிருக்கும், 1 ஷில்லிங் 4 பென்ஸிற்குத் தூரத்திலிருக்கும்.

6106. எந்த விகிதத்தை நீங்கள் முன் வைக்கிறீர்கள்? - அது சிரமமானது. சொல்லப் போனால் 1 ஷில்லிங் 6 பென்ஸ் நல்லதாயிருக்குமென்று நான் நினைக்கிறேன். அது மிகப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தாது.

6107. இறுதியாக ரூபாயின் விகிதம் அதிகரிப்பது மற்றும் குறைவது சம்பந்தமான பிரச்னையில் உங்கள் கருத்து 9-ஆவது பாராவில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் கூறுகிறீர்கள்: ''தற்பொழுது ஒரு குறைவான பரிவர்த்தனை என்பது அதிகரித்த உள்நாட்டு விலை என்றே பொருளாகும் என்றும், அது உணரப்பட்டால், அது இந்த லாபமானது நாட்டின் ஒரு வர்க்கத்தைப் பாதித்து மற்றொரு வர்க்கத்திற்குக் கிடைத்த லாபமல்ல என்பது உடனே தெளிவாகி விடும்.'' என்று. எந்த வர்க்கம் ஆதாயம் அடைகிறது, எந்த வர்க்கம் நஷ்டமடைகிறது? - வர்த்தகப் பிரிவு லாபமடைகிறது; தொழிலாளிகளின் பிரிவு லாபமடையவில்லை. உற்பத்திக்கான அனைத்துக் காரணிகளின் விலையும் மாற்றமடையவில்லை. விலையைப் போல் ஊதியங்கள் வேகமாக மாற்றமடையவில்லை என்பதுடன் இந்தப் பிரிவுகள் தான் பாதிக்கப்பட்டுள்ளன.

6108. பருவகாலத் தேவைகளைச் சமாளிக்கும் நெகிழ்ச்சித் தன்மையை அளிக்கும் பொருட்டு நாணய ஏற்பாடுகள் செய்வதென்ற

டத்தில் இருந்தோ அல்லது நடைமுறைக் கண்ணோட்டத்தில் இருந்தோ நீங்கள் ஏதாவது ஆலோசனை வைத்திருக்கிறீர்களா? - நான் மிகச் சுருக்கமாகச் சொன்னது போலப் பருவகாலத் தேவைகளுக்கு ஏற்றாற் போல் நமது நாணயம் நெகிழ்ச்சித் தன்மையுடையதாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், வர்த்தகக் காரியங்களுக்கு உதவியாக இருக்கக் கூடிய வர்த்தகப் பத்திரங்கள் நாணயமாக மாற்றப்படுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதன்மூலம் வர்த்தகப் பத்திரமானது அரசாங்கப் பத்திரங் களை விட நாணய வெளியிடலுக்கு ஒரு அடித்தளமாக அமைக்கப்படும். ஜெர்மன் அரசாங்க வங்கியின் திட்டங்களை நாம் கடைப்பிடிப்பது இந்தியாவிற்கும் நல்லது என்று நான் நினைக்கிறேன். 1894-ஆம் வருடத்திய இங்கிலாந்து வங்கிச் சட்டத்தைப் பருவகாலத் தேவை களுக்கு ஏற்றாற் போல் சில மாற்றங்களுடன் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

6109. அது விரிவு படுத்துவதற்கான ஒரு திட்டம் தானே? – தற்சமயத்திற்குச் சில விதிகளின் கீழ் காகிதப் பத்திரங்கள் விரிவுபடுத்தப்படுவது.

6110. பிணைப்பத்திரம் வெளியிடுவதை விரிவுபடுத்துவதற்கான விதியில்லையா அது? - அதே தான்.

6111. சரி சம விகித வரி செலுத்துவதற்குப் பதிலாகவா? - ஆம். இரண்டிற்கும் அது போதுமான பாதுகாப்பு என்று நான் கருதுகிறேன்.

6112. (பேராசிரியர் கோயாஜி) உங்கள் கருத்துப்படி தங்க நாணய மதிப்புத் தரம் என்பதின் பிரதான தகுதி, அது நிகழக்கூடிய ஏற்ற இறக்கங்களுக்கு எதிராகச் சில வரம்புகளை வைக்கிறது? - மிகச் சரி.

6113. ஆனால், சில விஷயங்களிலிருக்கின்றன. உதாரணத்திற்குச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தங்கம் என்பது ஒரு நாட்டிற்கு எந்தளவிற்கு நாணயம் தேவைப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொள்ளவில்லை? - ஆம்! நான் தங்க நாணயத் தரத்திற்கு ஆதரவாயிருப்பது, சமதையான முறைகள் சாத்தியமானவையல்ல என்பதால் என்று சொல்ல முடியும். அவை சாத்தியப்படுமானால் தங்க நாணய மதிப்புத் தரத்தை உடனடியாக நான் நிராகரித்து விடுவேன். அதை நான் விரும்பவேயில்லை.

6114. தங்க நாணய மதிப்புத்தரம் என்பது வர்த்தகத் தொழில் சுழற்சி விளைவுகளை நிவர்த்திக்குமா? – இல்லை.

6115. அவ்வாறானால், ஒரேயொரு அம்சம்தான் உள்ளது. ஐந்தாவது பாராவில் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள், ''நாணயத்தின் ஸ்திரத் தன்மையைப் பராமரிப்பதில் தங்க நாணய மதிப்புத்தரச் சேமிப்பினால் எவ்வித நடைமுறைப்பயனுமில்லை என்பதால் அதை ஒழித்து விட ஆதரவாக நானுள்ளேன்.'' என்று. இந்த யூகத்திலிருந்து காகித நாணயச் சேமிப்பை ஏன் ஒழிக்கக் கூடாது? ஏனென்றால், காகித நாணய மதிப்பு அதனுடைய வரம்புகளைத் தானே சார்ந்துள்ளது? – சரிதான்.

6116. நீங்கள் அதை ஒழிப்பீர்களா? - இந்தக் காரணத்திற்காக இல்லை. ஏனென்றால், காகித நாணய வெளியிடல் மீது ஒரு உறுதி யான வரம்பை நாம் விதிக்கவில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் தங்க நாணய மதிப்புத் தரத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிற இடத்தில் ரூபாய்கள் வெளியிடல் மீது ஒரு திட்டவட்டமான வரம்பை நான் வைக்கிறேன். காகித நாணய விஷயத்தில் இது குறித்த முடிவை அரசாங்கத்திடம் விட்டு விடுகிறோம்.

6117. அது சாத்தியமென்று நினைக்கிறீர்களா? ஏனென்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால், ஒரு வரம்புக்குட்பட்ட வருமானங்கள் போன்றவைகளும் மக்கட் தொகை அதிகரிப்பும் சேர்ந்து ரூபாயின் உபயோக வாய்ப்பை அதிகரிக்கும். சுழற்சியிலுள்ள தங்கமானது ரூபாயைப் போல் பத்து மடங்கு ஆகும் வரை நாங்கள் தங்கத்தில் தான் நாணயம் அச்சிடுவோம், ரூபாய் அச்சிட மாட்டோம் என்று என்றென்றைக்கும் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? அது நாட்டிற்கு வசதியாக இருக்க முடியுமா? – அவ்வாறே இருக்குமென்று நினைக்கிறேன். தங்கத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகத் தங்கத் தினால் ஆதரிக்கப்படும் காகித நாணயங்களை நாம் உபயோகிக்கலாம். கைக்குக் கை நாம் தங்கத்தை உபயோகிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை.

6118. சர், நார்காட் வாரன் (Sir.- Norgot Warren) உங்களுடைய மகஜரின் எட்டாவது பாராவின் பின்பகுதியை வைத்து நீங்கள் 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதற்குப் பதிலாக, 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்ற விகிதத்தை ஏற்கிறீர்கள் என்று நான் புரிந்து கொள்ளலாமா?

6119. (சர். அலெக்ஸாண்டர் முர்ரே) டாக்டர் அம்பேத்கர்! தலைவர் கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்கும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டீர்கள்: இந்திய அரசாங்கமானது தங்க மதிப்புக்கும் ரூபாயின் அடையாள மதிப்புக்குமிடையே லாபமடையும் பொருட்டு ரூபாய்களை அச்சிடத் தயாராயிருப்பதாக நீங்கள் குறிப்பிட்டீர்கள். உண்மையில் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்: - இதைத்தான் நான் குறிப்பிட்டேன்: அது ஒரு வரலாற்றுத் துணுக்கு. உதாரணத்திற்குச் சொல்வதென்றால் பௌலர் குழு ஆலோசனைப்படி சீர்திருத்தங்களை இந்திய அரசாங்கம் அறிமுகப்படுத்திய போது, ஒரு விஷயத்தை உணர்ந்தது. ரூபாயின் அதிகளவு சுழற்சிக்குத் தங்களிடம் எவ்விதச் சேமிப்பும் இல்லையெனக் கருதியது: பௌலர் குழுவானது தனது அறிக்கையின் 60-ஆவது பாராவில் அரசாங்கம் ரூபாய்களை அச்சிட்டு லாபத்தைத் தனக்காக வைத்துக் கொண்டால், அந்த லாபமானது ஒரு சேமிப்பாகப் பயன்படுத்தப்படுமென்று ஆலோசனை கொடுத்திருந்தது. நாணயம் அச்சிடத் தொடங்கிய 1901 ஆம் ஆண்டில் அரங்கத்திற்கு வந்த சர். எட்வர்டு லா, ரூபாய்களின் மொத்த அளவு மிக அதிகமாக இருப்பதால் ஏதாவதொரு சேமிப்பு அவசியமென்று கருதினார்: சேமிப்புத் தேவையென்றும் அது ரூபாய்களை அச்சிடுவதைத் தவிர வேறெந்த வழியிலும் இருக்க முடியாதென்றும் அவர் உணர்ந்ததால் ரூபாய் அச்சிடும் வேலையில் அவர் இறங்கினார்.

6120. நீங்கள் மட்டும் அவ்வாறு நினைக்கிறீர்கள்? - இல்லை, என் கருத்து இதுதான்: அனுப்பப்பட்ட தகவலை ஆழ்ந்து படித்தேன். மக்கள் தங்கத்தையோ அல்லது வேறு எப்பொருளையோ நாணயமாகப் பயன்படுத்த விரும்பாததால், ரூபாய் அதிக மதிப்புடன் அச்சிடப்பட்டது என்று சர். எட்வர்டு லா அந்தத் தகவலில் கூறியிருந்தார். ரூபாயானது மக்களின் தேவைக்கேற்ப அச்சிடப்பட்டதென்பதை நாம் புரிந்து கொண்டிருக்க முடியுமென்று நான் உணர்கிறேன். ஆனால், அந்த அறிக்கையில் அது குறித்து ஒரு விஷயம் கூட இல்லை. நாங்கள் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய போது பௌலர் குழு அறிக்கையின் 60-ஆவது பாராவை நாங்கள் கணக்கிலெடுக்கவில்லை என்று அவர் வெறுமனே கூறுகிறார்.

6121. ஆனால், நீங்கள் குறிப்பிடும் அந்த அறிக்கையில் 70 லட்சம் அல்லது அதைப் போன்ற மதிப்பளவுக்குத் தங்க சேமிப்பு இருக்க வேண்டுமென்று அவர் வரையறுத்துள்ளதாகக் கருதுகிறேன். இதற்கு எதிராக அவர் ரூபாய்களை வெளியிட்டார் என்று கூறுகிறீர்கள்?

- நிச்சயம் அவ்வாறுதான். தங்க நாணய மதிப்புத் தரசேமிப்பு என்பது தங்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. சேமிப்பு தேவைப்பட வில்லையென்று நான் கூறுகிறேன்.

6122. டாக்டர் அம்பேத்கர், நீங்கள் இங்கே ஒரு பொதுவான அறிக்கையை அளிக்கிறீர்கள்.

> ''துரதிருஷ்டவசமாக இந்தியாவின் நாணய முறை வரலாற்றில் இத்தகைய ஏறுமாறான போக்கிற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ஏற்கனவேயே, சேமிப்பு என்பது மிகவும் அத்தியாவசியமான விஷயம் என்ற கருத்தில் மூழ்கியுள்ள முட்டாள்தனமான நிர்வாகிகளை நாம் பெற்றுள்ளோம்; அவர்கள், சேமிப்பை அதிகப்படுத்துவது என்பதைத் தவிர வேறெதையும் கணக்கிலெடுக்காமல் நாணயங்களை வெளியிட்டுக் கொண்டே யிருந்தார்கள்.''

என்று. இப்பொழுது நீங்கள் அதைத் தலைவரிடம் திருப்பிக் கூறு கிறீர்கள்? – பேராசிரியர் கேனன் தன்னுடைய புத்தகத்தில் பயன் படுத்தியதைவிட மிகவும் மென்மையான உணர்வையே பயன் படுத்தியுள்ளேன்.

6123. உண்மையில் 1895 ஆம் ஆண்டில் பம்பாயின் முக்கியமான நிதி முதலீட்டாளர் ஒருவர் பரிந்துரைத்து, அந்நாளைய நிதி உறுப் பினரால் நிராகரிக்கப்பட்ட விஷயம் தானே இது? - அந்த அறிக்கை யில் இதைக் கண்டேன்.

6124. ஒரு நிமிடம். உங்களுடைய புத்தகத்தில் நீங்கள் அந்த பம்பாய் நிதி முதலீட்டாளர் பெயரையும் இந்திய அரசின் அந்த நிதியமைச் சரின் பெயரையும் கொடுத்துள்ளீர்கள்? - ஆம்.

6125. உங்களுடைய புத்தகத்தில் சமீபத்திய 1907-1908 ஆம் ஆண்டில் அதே கருத்தைத் தெரிவித்த பிரபல அரசியல்வாதியின் பெயரையும், அது இந்திய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டதையும் வெளியிட் டிருக்கிறீர்கள்: 1919ஆம் ஆண்டில் மற்றொரு பிரபல பொருளாதார நிபுணர் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படியானால், இந்திய அரசாங்கத்தின் நிர்வாகிகள் அந்த ஆலோசனையைத் தூக்கியெறிய வில்லை அல்லது நிராகரிக்கவில்லை என்று அந்த அறிக்கையை ஏன் மீண்டும் கலைவரிடம் சொல்கிறீர்கள்: சொல்லப்போனால்

நிராகரித்ததை நீங்கள் அறிவீர்கள்? - என்னுடைய பதில் இதுதான்: ஒவ்வொரு நிதியமைச்சரின் பட்ஜெட் உரையிலிருந்தும் உதாரணங்களை நான் தரமுடியும். சர். எட்வர்டு லாவுக்கு முன்பிருந்த கனவானின் பெயரை நான் மறந்துவிட்டேன்.

6126. சர். ஜேம்ஸ் வெஸ்ட்லேண்ட் மற்றும் சர். கிளிண்டன் டாக்கின்ஸ்? - ஆனால் அவர்கள் அதை ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை.

6127. இல்லை. ஒரு இந்தியர் தான் வெஸ்ட்லேண்டுக்கு இந்த ஆலோசனையைக் கொடுத்தார். அவர் அதை நிராகரித்தும் மீண்டும் அதை டாக்கின்ஸுக்கு கொடுத்தார்? - உங்களுடைய குறுக்கீடுகளுக்கு உரிய மரியாதையோடு சொல்கிறேன்: அனைத்து ரூபாய்களுக்கும் பின் பலமாக போதிய அளவு தங்க நாணய மதிப்புத் தரம் இருக்க வேண்டுமென்று சர். எட்வர்டுலா கூறினார். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், நான் இதைக் கூறுகிறேன்: இதர நிதி முதலீட்டாளர்கள் எந்த ஒரு சேமிப்பும் தேவையில்லை என்றும் ரூபாயானது தன்னைப் பராமரித்துக் கொள்ளுமென்றும் கூறினார்கள். சேமிப்பு தேவையென்று கூறிய சர். எட்வர்டு லா, அதன் பொருட்டு நாணயங்களை அச்சிட்டார். உண்மையில் இந்த யோசனைகளை நிராகரித்ததற்காக வெஸ்ட் லேண்ட் மற்றும் டாக்கின்ஸுனுடைய பயிற்சி மற்றும் எண்ணங்களுக்கு நான் போதுமான அளவிற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறேன். அவர்கள் நிலைப்பாடு சரியானது என்பதோடு சர். எட்வர்டு லாவின் நிலைப்பாடு நிச்சயம் தவறானது.

6128. சேமிப்பை உருவாக்கும் பொருட்டு ரூபாய்களை அச்சிட்டதாக சர். எட்வர்டு லா கூறவில்லை. நாணய வெளியிடலுக்கான பின்பலமாக அதை வைத்திருப்பதாகத் தான் அவர் சொன்னார். வேறு காரணங்களுக்காக அவர் ரூபாய்களை அச்சடித்தார் என்று நீங்கள் தான் அந்த விளக்கத்தில் கூறுகிறீர்கள். அதை அவர் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார். பௌலர் குழுவுக்கு முன்னதாகவே தங்கச் சேமிப்பு வேண்டுமென்று பல ஆலோசனைகள் வந்தன. அவை மிகுந்த பணச் செலவை ஏற்படுத்துபவை என்பதை இந்தக் குழு கண்டது. ஆனால், சேமிப்புத் தேவையென்றால் நாணயங்களை அச்சிடுவதன் மூலம் அதைப் பெறலாம் என்று லேசாக அறிகுறிகளைக் காட்டியது. சர். எட்வர்டு லாவுக்கு முன்பிருந்த இரு கனவான்களும் அது தேவை தான் என்று நினைக்கவில்லை.

– ஆனால் சர். எட்வர்டு லா அது தேவையென்று கூறி ரூபாய்களை அச்சிட்டார். பொதுவான குற்றச்சாட்டு எதையும் நான் செய்யவில்லை. எங்கே தேவைப்பட்டதோ அங்கே பாராட்டியிருக்கிறேன். அந்தக் குறிப்பையும் நான் உங்களுக்குத் தரமுடியும்.

6129. உங்களுடைய அனைத்துக் குறிப்புகளையும் நான் சரி பார்க்கிறேன். அதில் எதைக் காண விரும்புகிறீர்கள்? - பௌலர் குழுவின் சிபாரிசு இருந்தபோதும், ரூபாய்களை அச்சிடுவதன் மூலம் இந்திய அரசாங்கம் தனக்குத்தானே தங்கச் சேமிப்பை அளித்துக் கொள்ள முடியும். வெஸ்ட்லேண்டும் டாகின்சும் அந்தத் திட்டத்திற்குச் செவி சாய்க்க மறுத்தனர், ஏனென்றால், தங்கச் சேமிப்பு தேவையில்லையென்றும் ரூபாய் வெளியிடல் அளவுக்கு வரம்பு கட்டப்பட்டுள்ளதால் அது தன்னைத்தானே பராமரித்துக் கொள்ளும் என்றும் அவர்கள் உறுதியாக நம்பினார். ஆனால் சர் எட்வர்ட் லா, நிதி அமைச்சரானதும் ஒரு சேமிப்பு தேவை என்று உணர்ந்தார்.

6130. பௌலர் குழு அறிக்கை வருவதற்கு முன்பே வெஸ்ட்லேண்ட் நிதி உறுப்பினராயிருந்தார். அந்தச் சிபாரிசுகள் அமலுக்கு வந்தபோது அவர் அங்கில்லை என்றும், பௌலர் குழு அறிக்கை வந்தபொழுது டாகின்ஸ் உறுப்பினர் பதவியிலிருந்தார். ஆனால், இந்திய அரசியல்வாதிகளிடமிருந்து வந்த யோசனையை இவ்விருவரும் நிராகரித்தனர்? - அந்த விஷயத்தில் எவ்விதக் கருத்து வேற்றுமையும் கிடையாது.

6131. ஒரே வித்தியாசம் என்னவென்றால் ஒரு சேமிப்பை உருவாக்கும் பொருட்டு சர். எட்வர்ட் லா ரூபாய்களை அச்சிட்டார் என்று நீங்கள் அவருக்கு உள்நோக்கம் கற்பிக்கின்றீர்கள். அவர் செய்யவில்லை என்று நான் கூறுகின்றேன்; உண்மையில், அனுப்பப்பட்ட தகவலில் ஒரு தங்கச் சேமிப்பு இருந்ததென்று அவர் கூறுகிறார். 70 லட்சம் என்று நான் நினைக்கிறேன்? - அவ்வாறானால் நம்மிடையே ஒரு வேறுபாடு உள்ளது.

6132. (தலைவர்) வேடிக்கைக்காகச் சேமிப்பை அதிகப்படுத்துவதென்பதால் எவரொருவருக்கும் என்ன ஆதாயம் கிடைக்கப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை? - சரியே, ஒரு சேமிப்பு தேவையென்றும், ஒரு சேமிப்பில்லாவிட்டால் நாணய முறை செயல்பட

பட்டுள்ளார்கள். அது ஒரு பொதுவான மூடத்தனம் என்று நான் நினைக்கின்றேன். அது அங்குள்ளது.

6133. (சர். அலெக்ஸாண்டர் முர்ரே) உங்களுடைய புத்தகமான ''ரூபாயின் பிரச்னை'' என்பதன் 276 முதல் 278ஆம் வரையுள்ள பக்கங்களை உங்கள் குறிப்புக்காகத் தருகின்றேன்? – ஆம். சீர்திருத்தம் செய்யப்பட்ட பொழுது வெஸ்ட்லேண்ட் அங்கிருந்தார். பக்கம் 276.

6135. எந்தத் தேதி? - அது 1898-99ஆம் வருட பட்ஜெட் உரை, சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின் நிகழ்த்தப்பட்டது.

6136. அது 1894-95இல்? – இல்லை, டாக்கின்ஸ் அடுத்த பக்கத்தில் வருகிறார். நான் அளிக்கும் குறிப்பானது 276ஆம் பக்கத்திலுள்ள 1898-99ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை. சர் . எட்வர்ட் லாவின் பகுதிகள் பக்கம் 278இல் வருகின்றன.

6137. நீங்கள் கூறுவதைத் திருத்துவதற்காக நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? உங்களுடைய குறிப்பானது 1898-99 பட்ஜெட் உரை சம்பந்தப்பட்டதென்று நீங்கள் கூறினீர்கள். சொல்லப்போனால் நீங்கள் கொடுத்த குறிப்பு 1894-95 வருடத்திய உரையிலிருந்ததாகும்? - அவர் 1899இல் நிதி அமைச்சராகவிருந்தார்.

6138. அவர், அதை 1894-95இல் நிராகரித்தார்? - ஹெர்சல் குழுவிற்கும் பௌலர் குழுவிற்குமிடையே பெரும் வித்தியாசமில்லை என்பதே நான் கூறியதன் பொருள். அந்தக் கனவானுக்கெதிராக நான் குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன் என்று நீங்கள் நினைத்தால் அதற்காக வருத்தப்படுகிறேன்.

6139. (சர். அலெக்ஸாண்டர் முர்ரே) - நான் செய்வதெல்லாம் உங்கள் அறிக்கையின் 5ஆவது பாராவில் நீங்கள் சொன்னதைச் சுட்டிக் காட்டுவதுதான்.

— நான் சொல்வதெல்லாம் எவரொருவருக்கும் அந்தக் குழியில் விழும் ஆபத்துள்ளது என்பதே.

6140. (தலைவர்) உங்களுடைய புத்தகத்தில் இத்தகைய பிரபலமான ராஜீயவாதிகளை மெய்ப்பித்துக் காட்டியதாக நீங்கள் கூறுகிறீர்கள்? – ஆம்.

6141. (சர் புருஷோத்தம்தாஸ் தாகூர்தாஸ்) எட்டாவது பாராவில் ''யுத்தத்திற்கு முந்தைய சமன நிலைக்குத் திரும்புவதில் உலகின்

பல நாடுகள் ஆவலாக உள்ளதாகக்'' குறிப்பிடுகின்றீர்கள். மேலும் உலகமயமாக இருப்பதாகத் தோன்றுகிறது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அதன் பின் ''இந்தியாவிற்கும் இதரநாடுகளுக்குமிடையே வித்தியாசம் இருக்கிறது, இதர நாடுகள் யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை இன்னும் எட்டவில்லை, மறுபுறத்தில் இந்தியா உண்மையில் யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையை விட அதிகம் அடைந்துள்ளது'' என்று கூறிக்கொண்டே செல்கிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் அந்த இதர நாடுகள் யுத்தத்தின் பொழுது தங்கள் நாண மதிப்பில் பெரும் இழப்பைச் சந்திக்க நேரிட்டது? – முற்றிலும்.

6142. பணவசதி உள்ள நாடுகள், இல்லையா? - பழைய சமன நிலைக்கு அருகிலிருக்கும் இந்த நாடுகள் கூட, திரும்பிச் செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றன என்று நினைக்கின்றேன்.

6143. உதாரணத்திற்கு, நீங்கள் எந்தநாட்டை மனதில் வைத்து சொல்கிறீர்கள்? - நல்லது, நான், ஜெனீவா மாநாட்டின் நடவடிக்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றேன். அது என் நினைவில் இல்லை. ஆனால், இத்தாலி போன்ற நாட்டை நான் நினைக்கின்றேன். பிரான்ஸ் நாடு கூட ஒரு சமயத்தில் யுத்தத்திற்கு முந்தைய சமன நிலைக்கு மிக அருகாமையில் இருந்தது.

6144. சொல்லப்போனால் பிரான்ஸ் தற்பொழுது இவைகளில் மிக மோசமாக உள்ளது. ஆகையால் இந்தியாவிற்கும், யுத்த காலத்தின் பொழுது தங்கள் நாணய முறை கடுமையாகச் சீர் குலைக்கப்பட்டு இதுவரை சரிப்படுத்த முடியாத இதர நாடுகளுக்கிடையிலான வித்தியாசத்தை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்? - எனது கருத்தானது, ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் திரும்பிப் போகும் நிலையில் நாம் இருந்தாலுங்கூட அவ்வாறு செய்வது எப்பொழுதும் விவேகமாகாது அல்லது திரும்பிச் செல்லும்படி யோசனை கூறுவதும் விவேகமாகாது.

6145. அந்த விஷயத்திற்குப் பின்பு வருகிறேன்: இந்தியாவிற்கும் இதர நாடுகளுக்குமிடையே நீங்கள் செய்யும் ஒப்பீடானது நாணயப் பிரச்சினைகள் மற்றும் நிலைமைகள் சம்பந்தப்பட்ட மட்டில் பொருந்தாது என்று சொல்லக்கூடும் என்பதையே உங்களுக்குச் சுட்டிக்காட்ட நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ''முடியும்'' என்பது சம்பந்தப்

செல்ல முடியாத நிலையில் நாம் அதைச் செய்ய வேண்டுமா, நாம் செய்யமுடியுமா என்ற வித்தியாசத்தையே குறிக்கிறேன் - மிகவும் நல்லது. நான் சொல்வதைக் காட்டிலும் நீங்களே மிகவும் சிறப்பாகக் கூறிவிட்டீர்கள்.

6146. ஆகையால் இந்தியாவை, யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை அடைந்த நாடுகளோடு நீங்கள் ஒப்பிட்டால், முடிந்தவர்கள் யுத்தத்திற்கு முந்தைய சமனநிலைக்கு திரும்பிச் சென்றிருக்கிறார்கள்? - ஆம், உதாரணத்திற்கு இங்கிலாந்து; ஆனால், இங்கிலாந்தில் கூட அவர்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று ஒரு பலமான கருத்து வேகம் உள்ளது.

6147. நீங்கள் குறிப்பிடும் பலமான கருத்து வேகம் இருந்துங்கூட அவர்கள் யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை ஏற்பதற்குத் தங்களைத் தயாராக்கிக் கொண்டார்கள் என்றும் திரும்பிச் சென்றது குறித்து இப்பொழுது பெரும் புகார்களை நீங்கள் கேட்கவில்லை என்றும் நான் கருதுகிறேன்? - நான் சொல்ல முடியாது.

6148. உங்களுக்குத் தெரியாதா? திரும்பிச் சென்றவர்கள் ஒரு தவறைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னாலொழிய, இந்தியாவில், யுத்தத்திற்கு முந்தைய சமனநிலைக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்புபவர்களுக்கெதிராக குறிப்பான ஆட்சேபணை எதுவும் இருக்க முடியாது? - இல்லை. நான் அதைச் சொல்லவில்லை. அது விரும்பத்தக்கதுதானா என்ற பிரச்சினையையே நான் உண்மையில் எழுப்புகின்றேன்.

6149. அதற்கான விருப்பம் சம்பந்தப்பட்ட மட்டில் கீழ்மட்டத்தில் அந்தக் கருத்து தவறானது என்று கூறுகிறீர்கள்; இவ்விரண்டு கண்ணோட்டங்களும் தவறானவை என்று கூறுகின்றீர்கள். யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென்பது, யுத்தத்திற்கு முந்தைய விலைவாசி மட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதல்ல என்று கூறுகிறீர்கள். விலைவாசி மட்டத்தை அடையப் பரிவர்த்தனையை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்த வேண்டும் என்று இப்பொழுது நீங்கள் நினைக்கிறீர்களா? - இல்லை.

6150. அவ்வாறானால், அது மிகவும் தவறானதென்று எனக்குப் படவில்லை - இல்லை, நான் கூறுகிறேன், பரிவர்த்தனையும்

விலைவாசி மட்டமும் ஒன்றாகப் போவதில்லை என்று நீங்கள் எப்பொழுதும் கூற முடியாதென்ற போதிலுங்கூட....

6151. மன்னிக்கவும், என்னுடைய கேள்வியானது, பரிவர்த்தனை என்பது விலைவாசி மட்டத்தைச் சரிப்படுத்துவதற்கான நெம்பு கோலாக உபயோகிக்கப்பட வேண்டுமென்று நீங்கள் கருது கிறீர்களா? - இல்லை, நான் அதைச் சொல்லவில்லை

6152. ஆகையால், விலைவாசியைச் சரிப்படுத்துவதற்கான நெம்பு கோலாக விகிதத்தை மாற்றுவதென்பது அந்தக் கண்ணோட்டத் தில் விரும்பத்தக்கதல்ல? - ஆம். அது இல்லை.

6153. ஒரு விதிவிலக்காக, இந்தியாவின் விஷயத்தில், அது குறிப்பாக விரும்பத்தக்கது என்று நீங்கள் காண்பித்தாலொழிய எந்த நாடும் அதைச் செய்திருக்கவில்லை? - ஆனால், அது அனைத்து நாடு களிலும் நடந்துள்ளது.

6154. எந்த நாடுகள்? - அனைத்து நாடுகளும்

6155. எனது கேள்வியை நான் தெளிவாக்கினால் ...? - உங்கள் கேள்வி தெளிவாகக் கேட்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை.

6156. சிலநேரங்களில் நான், என்னுடைய கேள்விகளை மிகத் தெளிவாகக் கேட்பதில்லை. நான் ஒத்துக்கொள்கிறேன். யுத்தத் திற்கு முந்தைய சமனநிலையை அடைந்த எந்தநாடுகள் தங்க ளுடைய உள்நாட்டு விலைமட்டத்தைச் சரிசெய்து கொள்வதற் காகத் தாங்களாகவே கடந்துள்ளன? – இல்லை, சொல்லப்போனால் அவை அதைச் செய்யவில்லை.

6157. ஆகையால், குறைபாடு எங்கே உள்ளது? – குறைபாடு என்பது இந்தக் கண்ணோட்டத்தில்தான்; சிலர் இதைச்செய்யும் பொழுது அவர்கள் பழைய விலைவாசி மட்டத்திற்குத் திரும்பிச் செல்கிறார்கள் என்று கற்பனை செய்துகொள்கின்றனர். அது தவறானது, ஏனென்றால் 1914இல் 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பது 1925இல் அதே 1 ஷில்லிங் 4 பென்ஸ் அல்ல.

6158. விலைவாசிப் பிரச்சினை மீது 1 டாலர் 4 பென்ஸ் என்பதை [illegible] நான் குறிப்பிடுகிறேன்;

6159. கீழ்மட்டத்தில் மற்றொரு அம்சத்தை நீங்கள் குறிப்பிடு கிறீர்கள் என்று நினைக்கிறேன். ''யுத்தத்திற்கு முந்தைய சமன நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென்பது யுத்தத்திற்கு முந்தைய விலைவாசி மட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதென்றால் பின்பு 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பது 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற திசை வழியில் குறைப்பதற்குப் பதிலாக 2 ஷில்லிங் தங்கம் என்ற வழியில் அதிகரிக்கப்படவேண்டும். அதன்பிறகு நீங்கள்'' யுத்தத்திற்கு முந்தைய சமனநிலையைப் பெயரளவுக்குக் கூட மீண்டும் ஏற்படுத்துவ தென்பது அநீதியாகும்'' என்று கூறுகிறீர்கள். ''பெயரளவுக்குக்கூட'' என்ற வார்த்தைமூலம் நீங்கள் என்ன சிந்திக்கிறீர்கள்?'' – விலைவாசி மட்டத்தைக் கவனியாமல் என்பது.

6160. நீங்களே சம்மதித்துள்ளீர்கள் என்று நான் நினைக்கிறேன்...? – தற்பொழுது 1925 ஆம் ஆண்டை 1914 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் பொழுது 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற விகிதம் உள்ளது; அது ஒரு பெயரளவு மாற்றம் மட்டுமே; ஏனென்றால், விலைவாசிகள் நிச்சயம் மாறியுள்ளன.

6161. யுத்தத்திற்கு முந்தைய விகிதமாக 1 ஷில்லிங் 4 பென்ஸ் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பதி லிருந்து 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதாக ஒரு திட்டவட்டமான மாற்றத்தை நீங்கள் கோருகிறீர்கள்.

– அறிக்கையின் இறுதியில் அங்கே நாம் உண்மையில் காண்ப தென்ன என்று கூறியுள்ளதை நான் எனது துவக்க அம்சமாகக் கருதுகிறேன்.

''சுருக்கமாகச் சொன்னால் நாணய விஷயத்தில் உண்மை யானதுதான் வழக்கமானது'' என்று நான் கூறியுள்ளேன். எனவே 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பதை வழக்கமானதாகக் கொண்டு நான் துவங்கியுள்ளேன்.

6162. உதாரணத்திற்கு நான் விவாதித்துக்கொண்டிருக்கும் பரிவர்த் தனையானது இன்று 1 ஷில்லிங் 8 பென்ஸ். 1 ஷில்லிங் 6 பென்ஸ் உறுதிப்படுத்தப்படுவதற்காக என்னென்ன காரணங்களைக் கூறினீர் களோ அதையே 1 ஷில்லிங்க 8 பென்சிற்கும் நீங்கள் வற்புறுத்து வீர்கள் என்று நான் கருதுகிறேன்? – ஆம்.

6163. எனவே, பரிவர்த்தனை என்பது 1 ஷில்லிங் 6 பென்சுக்கு உயர்ந்திருந்தாலும், இல்லாவிட்டாலும், இதர நாடுகள் என்ன

செய்திருந்தபோதிலும் அதற்கான அடித்தளம் இருந்தே தீரும்; அந்தப் புள்ளி எவ்வாறு அடையப்பட்டது என்பதெல்லாம் கவனிக்கப்பட மாட்டாது? – எனக்கே உரிய வழியில் அதை விவரிக்கலாமா?

6164. நீங்கள் விரும்பினால் - இந்தப் பிரச்னையை நான் பார்க்கும் விதம் இவ்வாறுதான். இன்று நாம் 1 ஷில்லிங் 6 பென்ஸ் பெற்றுள்ளோம். அது என் மனதிற்கு ஒரு குறிப்பிட்ட விலைவாசி மட்டமாகத் தெரிகிறது. நாம் 1 ஷில்லிங் 4 பென்சிற்கு நாங்கள் திரும்பிப் போகவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நாம், நம்முடைய விலைகளை உயர்த்தவேண்டுமென்று எனக்குத்தோன்றுகிறது. நாணயத்தின் மொத்தஅளவை அதிகரிக்காமல் நாம் நிச்சயம் 1 ஷில்லிங் 4 பென்சை அடையமுடியாது; நமது விலைகளை அதிகரிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. நாணயத்தின் மொத்த அளவை அதிகரிக்கமால் நாம் நிச்சயம் 1 ஷில்லிங் 4 பென்ஸ் தங்கத்தை அடையமுடியாது. ஆகையால், எனது சிந்தையில் தோன்றும் முழுக் கேள்வியானது 1 ஷில்லிங் 4 பென்சிற்கு நாம் திரும்பிச் செல்லும் பொருட்டு நமது விலைகளை இன்றுள்ள அளவிலிருந்து அதிகரிக்கலாமா? தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையில் விலைகள் வீழ்ச்சியடைவது நல்லது என்று உணர்கிறேன். அந்த விஷயத்தில் இதுதான் எனது கருத்து.

6165. இதைநான் வேறுவழியில் எடுக்கிறேன். தொழிலாளர் சமூகத்தின் உறுப்பினர் என்ற கண்ணோட்டத்தில் கூறுவதாகக் குறிப்பிட்டீர்கள்; அதன் பொருள் தொழிலாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது அது விரும்பத்தகாதது? – ஆம், நான் மேலும் கூட சொல்வேன்; தேசிய நோக்கு நிலையிலிருந்து கண்டால்கூட வெகுவாக வீழ்ச்சியடையும் விலைகள் அதிகரித்து வரும் விலைகளைவிட மேம்பட்டவை.

6166. ஒரு உயர் பரிவர்த்தனை, 15 அல்லது 20 வருடங்களுக்குத் தொடர்ந்து இருந்துவந்ததைவிட அதிகமான புள்ளிக்குப் படிப்படியாகக் கொண்டுவரப்பட்ட பரிவர்த்தனையானது உற்பத்தியாளரின் நலன்களுக்கு விரும்பத்தகாதது என்று முன்வைக்கப்பட்ட வாதங்களை நீங்கள் கேட்டிருப்பீர்களென்று நினைக்கிறேன். அது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? – அது குறிப்பிடுவதெல்லாம் லாபத்தில் மந்தம் ஏற்பட்டுள்ளது என்பதுதான். தொழில்

6179. 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பது மாறுபட்ட லாபமா? – ஆம்.

6180. 25 அல்லது 23 வருடங்களுக்கு நீடித்துக் கொண்டே போகிறதே? – நான் சொல்லியதைப்போல நீங்கள் அதை எவ்வாறு விளக்குகிறீர்கள் என்பதைப் பொறுத்துள்ளது.

6181. உங்களுக்கு நீங்களே எவ்வாறு விளக்குவீர்கள்? – உற்பத்தியில் அவர் செலவிட்ட அனைத்தையும் அவர் திரும்பப் பெற இயலும் வரை அவர் ஒரு இழப்பாளர் என்று நான் கருதவில்லை.

6182. அந்தச் சோதனையை நீங்கள் ஒவ்வொருவருக்கும் வைப்பீர்களா? – அவர் வரவையும் செலவையும் சமாளித்துவிட்டார் என்று நான் கூறுவேன்.

6183. சராசரி பிரஜை தன்னுடைய விஷயத்தில் அதிகபட்சமாகப் பயன் படுத்துவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? – அது குறித்து எந்தக் கருத்தும் சொல்ல இயலாது.

6184. தற்பொழுது 8ஆவது பாராவில் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்: ''இது தொடர்பாக இரு விஷயங்களை மனதில் கொள்ளவேண்டும்''. ''நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் பல்வேறு காலங்களில் செய்யப்பட்டவை என்பதில் ஐயமில்லை.'' எந்த வகையான ஒப்பந்தங்களை நீங்கள் கருத்தில் கொண்டிருக்கிறீர்கள்? – உதாரணத்திற்கு குத்தகைகள்: மேலும் கட்டுமான ஒப்பந்தங்கள் போன்ற இதர ஒப்பந்தங்கள்.

6185. பரிவர்த்தனை என்ற பிரச்சினையோடு எவ்வாறு அவை வரும்? – அவை அதைப்போன்ற பண ஒப்பந்தங்களே: அவை அனைத்தும் பணஒப்பந்தங்களே:

6186. ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் அவ்வாறுதான் சொல்கிறீர்கள்? – ஆம்

6187. ஒரு மனிதன் ஒரு புறநகர்ப்பகுதியில் 4 ஆயிரம் ரூபாயில் ஒரு வீடு கட்டினால் அதுவும் இதன் கீழ் வரும்? – ஆம்; அது பணத்தை முதலீடு செய்வது.

6188. நாட்டின் பணமுதலீடு செய்யப்பட்டுள்ள அனைத்தையும் நீங்கள் கருத்தில் கொண்டிருக்கிறீர்கள்? – ஆம்: அது வாங்கும் சக்தியைக் கொண்டுள்ளது.

6189. அதன் பிறகு நீங்கள் கூறுகிறீர்கள்: ''இவ்விரு அம்சங்களையும் வைத்துப்பார்க்கும்போது சிறந்த தீர்வென்பது 1 ஷில்லிங் 4 பென்ஸிற்கும், 1 ஷில்லிங் 6 பென்ஸிற்குமிடையே ஒரு சராசரியை ஏற்படுத்துவதுதான்.'' என்று. 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பதற்கு பதிலாக ஒரு சராசரி என்று ஏன் நீங்கள் குறிப்பீடுகிறீர்கள்? – நான் அவ்வாறு சொல்வதற்குக் காரணம், 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற விகிதமிருந்தபோது 1925இல் சில ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கலாம். 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற விகிதத்தில் வாங்கும் சக்தி இருந்த பொழுது செய்யப்பட்ட சில ஒப்பந்தங்கள் இன்றும் இருக்கலாம் என்பதால் அனைவருக்கும் நீதி வழங்குவதற்குச் சிறந்தவழி அதுதான் என்று கருதுகிறேன்.

6190. 1914க்கு முன்பு பட்ட கடன்கள் வடிவத்திலான ஒப்பந்தங்கள் என்னாயிற்று? – அவைகளில் பல இன்றும் உள்ளன என்று நான் நினைக்கவில்லை.

6191. விவசாயிகள் கடன்பட்டவர்களுக்குத் தரவேண்டிய கடன்களனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அடைத்து விடுவார்களென்று நீங்கள் நினைக்கிறீர்கள் – எந்த ஒரு வர்த்தக ஒப்பந்தமும் ஐந்து வருடங்களுக்கு மேல் நீடிப்பதில்லை என்பதும், தரவேண்டியது மிகமிகக் குறைவென்பதும் என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். இது குறித்துப் புள்ளி விபரத் தகவலேதுமில்லை. இது சம்பந்தமாகப் பேராசிரியர் பிஷர் தன்னுடைய நூலில் சில கணக்குகளைக் கொடுத்துள்ளார். வட்டி விகிதமானது விலைவாசிகளுக்கு அனுசரணையாக மாறுபடுகிறதென்று அவர் அங்கே எழுதியுள்ளார். ஆதலால் வட்டி விகிதமென்பது விலைவாசி உயர்வு அல்லது வீழ்ச்சியுடன் ஒரு திட்டவட்டமான தொடர்பைக் கொண்டிருக்கிறது. பெரும்பாலான ஒப்பந்தங்கள், வர்த்தகரீதியில் மிகமிக அண்மைக் காலத்தைச் சேர்ந்தவை என்ற முடிவுக்கு அவர் வருகிறார்.

6192. நீங்கள் இந்தியாவைக் குறிப்பிடுகிறீர்களா? – நான் பொது

தெரியாது இந்தியாவில் வினோதனமானவை ஏதாவதிருக்கலாம். ஏன் அவ்வாறு இருக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை.

6193. இந்தியாவின் விஷயம் வித்தியாசப்பட்டதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? – அது அவ்வாறு தான் என்று சில சாட்சிகள் கிடைத்தாலொழிய நான் அவ்வாறு சிந்திக்கமாட்டேன்.

6194. இந்தியாவிலுள்ள பிரச்சினைகள் மேற்கு நாடுகளைப் போன்று அதே பிரச்சினைகளென்று நீங்கள் நினைக்கிறீர்களா? - அவை ஏன் இல்லை என்பதை நான் பார்க்கவில்லை.

6195. அவை நடைபெற்றால் அது உங்களுக்கு வியப்பாயிருக்கும்? – அது வியப்பாகத்தானிருக்கும்.

6196. விலைவாசி மட்டத்தைச் சரிப்படுத்துவது சம்பந்தப்பட்டமட்டில் பரிவர்த்தனை விகிதம் 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதிலிருந்து, 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்று பரிவர்த்தனை விகிதத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகச் சரிபடுத்துவதென்பது இப்பொழுது முடிவடையும் தறுவாயிலிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? – சில குழப்பம் இருக்கலாம்: 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பதிலிருந்து 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற நிலைமைக்கு நாம் திரும்பிச் சென்றால் அது ஊதியம் பெறுகிறவர்களுக்குப் பாதகமாக முடியும்.

6197. 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதிலிருந்து 1 ஷில்லிங் 6 பென்ஸ் வரை கீழிருந்து உயர் விகிதத்திற்குக் குழப்பம் உள்ளது? – அது தொழிலாளி வர்க்கத்தினருக்குச் சாதகமானது.

6198. அவ்வாறு சரிப்படுத்துவது முழுமையடைந்து விட்டதா அல்லது தவறாகச் சரிப்படுத்தப்பட்டது இன்னும் ஏதும் உள்ளதா? – நான் சொல்லமுடியாது: அது புள்ளி விபர ஆய்வு சம்பந்தப்பட்ட விஷயம். அதில் நான் நுழையவில்லை. ஆனால், பரிவர்த்தனையானது நீண்டகாலமாகவே 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்று ஸ்திரமாக உள்ளதாக நான் கருதுகிறேன்.

6199. அது எவ்வளவு காலம் ஸ்திரமாக இருக்கமுடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? – நான் துல்லியமாகச் சொல்ல முடியாது. ஆனால், ஸ்திரத்தன்மையின் அறிகுறிகளை அது உறுதியாக வெளிப்படுத்துகிறது.

6200. எவ்வளவு காலம் என்று உங்களுக்கு ஏதாவது யோசனை யிருக்கிறதா? – சில சாட்சிகள் 6 மாதம் என்றும் சிலர் 8 மாதமென்றும் கூறியுள்ளனர். அந்தக் காலகட்டத்திற்குள் தான் என்று நினைக் கிறேன்.

6201. இந்த ஸ்திரத்தன்மையைத் தீர்மானிப்பதற்கு 6 அல்லது 8 மாதங்கள் போதுமான காலகட்டம் என நீங்கள் நினைக்கிறீர்களா? – அதற்குரிய முக்கியத்துவத்தைத் தரவேண்டுமென்று நான் கூறு கிறேன். எனவே ஒரு சராசரியை நீங்கள் உருவாக்கலாம்.

6202. ஆனால், உங்களுடைய நேரடிவிசாரணையின் போது நீங்கள் 1 ஷில்லிங் 6 பென்ஸிற்கு ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பதாகக் கூறினீர்கள் – ஆம், ஏனென்றால், தேசிய அளவில் அது சிறந்தது; அது பணவீக்கத்தைக் கொண்டுவராது. அதுதான் நான் சொல்வது. 1 ஷில்லிங் 6 பென்ஸிற்குப் பின்னரும், அந்தமட்டத்திற்கு உண்மை யிலேயே தேவைப்படுவது 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்று நம்மைக் கூறச்செய்யும்பொருட்டு சரிசெய்யும் முறைபோக்கு முழுமையடைய வில்லையென்றால் அந்தஅளவிற்கு நாம் நிலைநிறுத்தவேண்டு மென்று நான் கூறுகிறேன்.

6203. இங்கே தொழில்கள் சம்பந்தமாகச் சரிசெய்வது குறித்து உங்களுக்கு ஏதாவது கருத்து இருக்கிறதா? எங்களுக்கு ஏதாவது கருத்து தரமுடியுமா? - ஒன்றுமில்லை.

6204. (திரு.பிரஸ்டன்) துரதிருஷ்டவசமான சேமிப்பு, தங்கநாணய மதிப்புத் தரசேமிப்பு சம்பந்தமாக சர்.அலெக்ஸாண்டர் முர்ரேக்கு நீங்கள் அளித்தவிடைகள் சம்பந்தமாக ஏதாவது தவறான எண்ணப் போக்கு இருக்குமானால் சில உண்மையான விபரங்களை ஆவணத்தில் பதிந்து வைப்பது சரியாயிருக்கும்; தங்க நாணய மதிப்புத்தர சேமிப்பு என்பது 1901 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தது என்பதுடன் அது முந்தைய 1900 ஆண்டு ஏப்ரலில் பெறப்பட்ட லாபத்தின் விளைவாகும். இன்று சேமிப்பின் மீதமானது 4 கோடி ஸ்டெர்லிங் ஆக உள்ளது: – ஆம் அது அவ்வாறுதானிருப்பதாக நினைக்கிறேன்.

6204. அ. நிதிஅமைச்சர் கடந்த ஆண்டு நாணயம் குறித்த தனது அறிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்:

அடுத்த சில வருடங்களுக்குள் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. சேமிப்புக்கடனாகத் தற்பொழுதுள்ள தொகையில் 27,449,950 பவுண்டு நாணயம், அச்சிடலால் கிடைத்த லாபமாகும்; மீதமுள்ள தொகை சேமிப்பில் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் மீதான வட்டிக் குவிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.'' மேலும் ரூபாய்கள் அச்சிடப்படவில்லையென்றால் இந்தச் சேமிப்பு அதிகரிக்கமுடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். கடந்த 3 ஆண்டுகளில் மூன்றிலொரு பங்கு அதிகரிப்பு எப்படி ஏற்பட்டது? – முதலீடுகள் மீதான வட்டி மூலம்.

6205. அந்தச் சேமிப்பு மீதானவட்டி அதோடு சேர்க்கப்படுவதற்காக வைத்திருக்கப்படும் நிலையில் அந்தச் சேமிப்பை, நீங்கள் மிகக் கடுமையாக வாதிட்டுத் தவிர்த்த அந்த முறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லாமல், ஒரு பயனுள்ள காரியத்திற்காக நீங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? - ஆம், சந்தேகமேயில்லை.

6206. அந்தச் சேமிப்பின் பயன் குறித்து மேலும் ஒரு அம்சம். 1908 ஆம் ஆண்டு உலக மந்த நிலை காலத்தில், அந்தச் சேமிப்பு இருந்திருக்க வில்லையென்றால் நமது வர்த்தகச் சமநிலையை நாம் ஒருபோதும் சமாளிக்கமுடியாதென்பது நீங்கள் அறிந்ததுதானே? அதை ஒப்புக் கொள்கிறீர்களா? – ஆம்.

6207. நன்றி ! - ஏதோ நடந்துள்ளது. அதற்கு நான் எதிர்ப்பைத் தெரிவித்தாக வேண்டும் - முதலீடுகள் மூலம் தங்கநாணய மதிப்புத் தரசேமிப்பை அதிகரிப்பதற்கு ஆதரவாக நான் இருக்கிறேன் என்று கூறுவதன் மூலம், நடந்துள்ளதற்கு நான் எனது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். ஒரு சேமிப்பு என்பது முதலீடு செய்யப்பட்டால், சேமிப்பு என்பதே இருக்கமுடியாது.

6208. (சர்.ரெஜினால்ட் மண்ட்) உங்களுடைய பிரதான நோக்கமானது உள்நாட்டு விலைகளை ஸ்திரப்படுத்துவது என்றே நான் கருதுகிறேன்? – நிச்சயமாக.

6209. அதன் பிறகு அந்த ஸ்திரத்தன்மையானது தங்க விலைகளுடன் இணைக்கப்பட்டு விடுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

6210. அது பிறகு உள்நாட்டு விலைகள் தங்க விலைகளுடன் இணைக்கப்பட்டு விடும். அவை இணைக்கப்பட்டதா? அவை தங்க விலைகளுடன் மாறுபடும்? – ஆம்.

6211. தற்பொழுது இந்த நோக்கத்திற்காகத் தங்க நாணயமில் லாமல் ஒரு தங்க நாணயப் பரிவர்த்தனைத் தரத்தை, ஆனால் அது அந்த லட்சியத்தை அடையாதென நீங்களும் கருதுவதாக நான் நினைக்கிறேன். – இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் அது இல்லை என்று நான் நினைக்கிறேன்.

6212. கடந்த காலத்தில் நடந்ததைப் பற்றி நான் பேசவில்லை. ஒரு தங்க நாணயப் பரிவர்த்தனைத் தரம் என்பது தானாகவே இயங்கும்படி செய்யப்பட்டால், அது இந்த லட்சியங்களை அடைய முடியுமென எங்களிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது? – எனக்குத் தெரியாது: அந்தந்தக் கருத்தைக் கொண்டிருப்போர் சிலர் இருக் கலாம், ஆனால், அது எவ்வாறு இருக்குமென்பதை என்னால் காண இயலவில்லை.

6213. ஒரு தங்க நாணயம் அதைச் சாதிக்கமுடியுமென்றும், தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் சாதிக்கமுடியாதென்பதை யும் நான் விளக்க விரும்புகிறேன். எனது முதலாவது அடிப்படை இதுதான்; பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது தங்கத் தேய்மானத்தை ஏற்படுத்துகிறதென்பதோடு ஒரு மதிப்புத்தரம் என்ற வகையில் பயன் அற்றதாகவும் செய்துவிடுகிறது. ஒரு தங்க நாணய மதிப்புத் தரம் என்பது தங்கத்தைச் சிக்கனப் படுத்துவதுடன் அதை மிதமிஞ்சிய தாகவும் ஆக்கிவிடுகிறது.

6214. அதை வேறுவகையில் சொல்லவேண்டாமா? நாம் தங்க நாண யத்தை இங்கே அறிமுகப்படுத்தினால் நாம் தங்கத்தின் மதிப்பை அதிகரிப்போம்; அவ்வாறு சொல்வதுதானே சரியாகவிருக்கும்? – அந்த வழியில் சொல்லலாம். ஆம். ஆகையால், தற்பொழுதுள்ள நிலைமையின் தங்கமானது நல்ல மதிப்புத்தரமாக கீழ் செயல் படலாம். என்னுடைய அடுத்த கேள்வியானது பரிவர்த்தனைத் தரத்தின் மூலம் நாம் உண்மையிலேயே பொருளாதாரத்தை ஆற்றல் வாய்ந்ததாகச் செய்கின்றோமா?

6215. பொருளாதாரப் பிரச்சினையை நான் எழுப்பவில்லை.

கருதுவதற்கான காரணத்தை அறியவே நான் முயற்சித்தேன். – அவை வேறெதுவாக இருப்பதைக் காட்டிலும் ஸ்திரமானது என்றே நான் சொன்னேன். தங்க நாணய மதிப்புத்தரத்தை நாம் பின்பற்றினால் நமது விலைவாசிகள் பரிவர்த்தனைத் தரத்தின் கீழிருப்பதை விட மிகவும் ஸ்திரமானதாயிருக்கும். தங்க நாணய மதிப்புத் தரத்தின் கீழ் அவை நிச்சயமாக ஸ்திரமானதாயிருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால், தங்கம் என்பதுவே நிச்சயமாக ஸ்திரமான மதிப்புத்தரமல்ல; ஆனால், ஒரு பரிவர்த்தனைத் தரத்தின் கீழ் நிச்சயம் அது அதிக ஸ்திரமாயிருக்கும்.

6216. அதிகளவு தங்கத்தை நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கும் காரணத்தினாலா? – ஆம்.

6217. வேறுபடுத்திக் காண்பதற்கு அதுதான் உங்களுடைய ஒரே காரணமா? – ஆம்.

6218. (சர் மானக்ஜீ தாதாபாய்) திரு புருஷோத்தம்தாஸ் தாகூருக்கு நீங்கள் அளித்த விடை சம்பந்தமாக நானும் ஒருபடி முன்னே செல்கிறேன்: ''நடப்பிலுள்ள ஒப்பந்தங்கள் பல்வேறு காலங்களில் செய்யப்பட்டவை என்பதில் ஐயமில்லை; ஆனால் அவற்றில் பெரும்பகுதி மிகச் சமீபத்தியவையாகும்; அனேகமாக ஒரு வருடத்திற்கு மேற்பட்டதாயிராது; ஆகையால், மொத்த ஒப்பந்தக் கடமைகளின் ஈர்ப்பு மையமானது எப்பொழுதும் தற்காலத்தின் அருகிலேயே உள்ளது என்று கூறப்படலாம்'' என்று 8ஆவது பாராவில் நீங்கள் கூறியுள்ளீர்கள். இந்த விஷயத்தை நீங்கள் குறிப்பிடும்பொழுது திட்டவட்டமான புள்ளிவிபரம் எதுவுமின்றி நீங்களாகப் பேசுகிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன் ? – ஆம்; பேராசிரியர் பிஷரினால் அத்தகையதொரு கணக்கு உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் கூறுகிறேன்.

6219. நீங்கள் இதை பொதுமைப்படுத்தப்பட்டதன் ஒரு வகையாகக் கூறுகிறீர்களா? – ஆம். என்னிடம் எவ்விதத் திட்டவட்டமான தகவலும் இல்லையென்று கூறினேன்.

6220. மொத்த ஒப்பந்தக் கடமைகளின் ஈர்ப்புமையம் மிக அருகாமையில் இருப்பதாக நீங்கள் பேசும்பொழுது அது ஒரு திட்டவட்டமான கால எல்லையாக இல்லை. அந்த ஈர்ப்பு மையமானது 12 மாத

சுற்றளவுக்குள் வருமா? – ஆம் அதுமாதிரிதான்.: எனவேதான் ஒரு வருட காலம் என்று நான் கூறினேன்.

6221. எனவே, 12 மாதங்களுக்கு முன்பு ஒரு நிச்சயமான விகிதம் இருந்திருந்தால் உங்கள் காரணப்படி நாங்கள் 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்று எடுத்துக் கொண்டது நியாயப்படுத்தப்படுகின்றது? – நிச்சயமாக; ஆம்.

6222. அதை எடுத்துக்கொள்வதில் நீங்களும் நியாயப்படுத்தப் படுகின்றீர்கள்? - ஆம்.

6223. இந்த விஷயத்தை விவாதிக்கும்பொழுது, 1 ஷில்லிங் 6 பென்ஸுக் காதரவாக நீங்கள் வாதிட்டபொழுது நீங்கள் உங்கள் கருத்தைப் பேராசிரியர் பிஷரின் மூதுரைப்படி உருவாக்கிக் கொண்டுள்ளீர்கள் என்று நினைக்கிறேன்? – ஆம்.

6224. இப்பொழுது பேராசிரியர் பிஷரின் மூதுரையை நம்முன் வைத்துள்ளோம்; அவர் பயன்படுத்திய சொற்கள்:-

> ''நியாயமான ஒரு பணத்தரம் என்ற பிரச்சினையானது பின்னோக்கிக் காண்பதைவிட முன்னோக்கிக் காண்கிறது; அது தன்னுடைய துவக்கத்தை, யுத்தத்திற்கு முந்தைய கற்பனை யான சமனநிலைகளில் அல்லாமல் தற்பொழுது நடப்பி லுள்ள வர்த்தகத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்''.

6225. பேராசிரியர் பிஷர் அந்த மூதுரையை முன்வைத்தபொழுது தன் முன்புள்ள ஐரோப்பிய நிலைமைகளை வைத்தே அதை உரு வாக்கினார் என்று நீங்கள் நினைக்கவில்லையா? - ஆம், ஆனால், அது கிட்டத்தட்ட எந்த நாட்டுக்கும் பொருந்தும். அது ஒரு பொதுவான கருத்துரை.

6226. என்னுடைய கேள்வியெல்லாம், அவர் அதைச் சொன்ன பொழுது ஐரோப்பிய நிலைமைகளைப் பார்வையில் கொண்டிருக்க வில்லையா? - நான் சொல்லஇயலாது.

6227. (தலைவர்) அது எந்த நிலைமைகளுக்கும் பொருந்தும் என்று

6228. (சர். மானக்ஜிதாதாபாய்) அந்த முடிவானது சொல்லப்பட்ட இந்த வார்தைகளால் நியாயப்படுத்ப்பட்டுள்ளதா? – அது இருக்கிறதென்று நினைக்கிறேன்.

6228.A. இருப்பாதக நினைக்கிறீர்கள்? - அவர் மேலும் கூறுகிறார், அவர் யுத்தத்தைக் குறித்துமட்டும் குறிப்பிடவில்லை, - அவர் கூறுகிறார்: ''முந்தைய வெள்ளி பவுண்டு அல்லது கிரேக்கம் மற்றும் ரோமின் நாணயத் தரங்களுக்குத் திரும்பிச் செல்லலாம் என்றும் ஒருவர் கூறலாம்''.

6229. இந்த 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்ற விகிதம் கடந்த 16 மாதங்களாக மட்டும் இந்தியாவில் தொடர்கிறது என்பதைத் தற்பொழுது நீங்கள் நன்கறிவீர்கள். இந்திய நிலைமைகளில் இந்த 16 மாத காலகட்டத்தை இப்பொழுது கணக்கிலெடுத்துக்கொண்டால் யுத்தத்திற்கு முந்தைய கற்பனையான சமனநிலை குறித்து நீங்கள் நினைக்கும் பொழுது என்ன கூறுவீர்கள்? இந்தியாவில் 16 மாத காலகட்டம் என்பது, ஒரு முடிவுக்கு வருவதில் ஏதாவது குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை ஏற்படுத்துமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? யுத்தத்திற்கு முந்தைய கற்பனையான சமனநிலையை அவர் குறிப்பிடுகிறார்; அவர் ஒரு நீண்ட காலகட்டத்தை எடுத்துக்கொண்டுள்ளார்? - இல்லை, இல்லை. அவர் 1914 ஐயே திரும்பவும் அவ்வாண்டில் நிலவிய சமன நிலைலையே குறிப்பிடுகின்றார். தகவல்படி 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்பது 16 மாதங்களாக இருந்து வருகிறதுதென்றால் அது உறுதிப்படுத்தப்படவேண்டுமென்று நான் கூறுகிறேன்.

6230. ஆம். ஆனால் அதற்கு முன்பாக, சில வருடங்கள் இடையில் தவிர, அது 20 வருடங்களாக 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்றளவிலேயே இருந்தது. நீங்கள் அவற்றையெல்லாம் ஒதுக்கித்தள்ளுகிறீர்களா? - ஆம். 20 வருடங்களுக்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதுவும் இன்று இல்லை. எனவே நாம் அதைக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.

6231. இது உங்கள் வாதம்? நீங்கள் நாட்டினுடைய விவசாயம் மற்றும் தொழில்கள் மீது அதனுடைய பொருளாதாரத் தாக்கத்தையும் நீங்கள் ஒதுக்கி விடுவீர்கள்? - அவை மிகச்சிறந்தவை என்று நான் கூறுகிறேன். 1ஷில்லிங் 6 பென்ஸ் என்ற விகிதத்தைக் கொண்டு வருவதன்

மூலம் லாபத்தில் சிறிது தொய்வு ஏற்பட்டிருக்கலாம் என்று நான் கூறுகிறேன்; ஆனால் தொழிலில் எவ்விதத் தொய்வும் இருக்காது.

6232. ஆம், ஆகையால் நீங்கள் அந்த அம்சங்களுக்கு மகத்தான மதிப்பையும் சேர்ப்பதில்லை. ஒட்டு மொத்தத்தில் அது நாட்டிற்கு நல்லதென்று நீங்கள் கருதுகின்றீர்கள்? - ஆம்.

6233. சிறிது கற்பனையான மற்றொரு கேள்வி நான் கேட்கிறேன். நம்முடைய அறிக்கையை எழுதுவதற்கு நாம் 6 மாத காலம் எடுக்கிறோம். அடுத்த 6 மாதங்களுக்குள் அந்த விகிதம் 1 ஷில்லிங் 8 பென்ஸ் என்றானால், அதை உங்களுடைய கணக்கிடு வதற்கான அடிப்படையாக நீங்கள் வைத்துக்கொள்வதில் நியாயப் படுத்தப் படுவீர்கள்? – நீங்கள் ஒரு சராசரி வகுக்கவேண்டுயமென்று நான் மீண்டும் கூறுவேன்.

6234. 1 ஷில்லிங் 8 பென்ஸ் மற்றும் 1 ஷில்லிங் 6 பென்ஸ் அல்லது 1 ஷில்லிங் 4 பென்ஸ்கிடையிலா? – 1 ஷில்லிங் 8 பென்ஸ் 1 ஷில்லிங் 6 பென்ஸிற்கிடையில்

6235. அது ஒரு சக்திவாய்ந்த பொருளாதார அரசியலாக இருக்கு மென்று நீங்கள் நினைக்கிறீர்களா? – எனக்குத் தெரியாது. ஒரு சரா சரியை நீங்கள் வகுக்கவேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட ஒப்பந் தத்திற்கும் நீங்கள் நீதி வழங்கமுடியாது. உதாரணத்திற்கு அமெரிக்க சுதந்திரப்போர் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நாணய முறை ஏற்ற இறக்க உதாரணங்களை நீங்கள் எடுத்துக்கொண் டால், அமெரிக்கர்கள் செய்வதெல்லாம் இம்மாதிரியான ஒரு காரியத்தையே. ஒரு சராசரியை வகுத்துக்கொண்டு அதை அடிப்படை யாக வைத்து அனைத்து ஒப்பந்தங்களையும் ரத்து செய்துவிடுவது. அவர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட ஒப்பந்தத்திற்கும் நீதி வழங்க இயல வில்லை. அது சாத்தியமற்றது.

6236. (சர். ஹென்றி ஸ்ட்ராகோச்) டாக்டர். அம்பேத்கர், தங்க நாணயப் பரிவர்த்தனையின் தரத்தை அறிமுகப்படுத்துவது விரும்பத் தக்கதல்ல என்பது குறித்து நீங்கள் வெளியிட்ட சில அறிக்கைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். நாணயமாற்றமென்பது பரிவர்த் தனையாக மாற்றுவதென்பது நாணய வெளியிடுவதற்கு வரம்பு

கட்டத்தில் கூறினீர்கள். நீங்கள் எழுப்பிய ஆட்சேபனைகளில் அதுவும் ஒன்று என்பதுடன் மற்றொரு நேரத்தில் தங்க நாணயப் பரிவர்த்தனை என்பது விரும்பத்தக்கதல்ல. ஒரு முழுமையான தங்கநாணய மதிப்புத்தரத்தின் கீழ் இருப்பதைவிட இதில் விலை வாசிகள் குறைவான ஸ்திரத்தன்மையிலிருக்கும் என்று நீங்கள் கூறினீர்கள்.

6237. தற்பொழுது நீங்கள் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மாணவர் களாயிருப்பதால் ஜெனிவா மாநாட்டில் நிகழ்ச்சிக் குறிப்புகளை நீங்கள் தொடர்ந்து படித்து வந்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை ? – நல்லது. லண்டனில் இருந்தபோது அதைச் செய்தேன். சமீபத்திலில்லை. ஆனால் தங்க நாணயப் பரிவர்த்தனைத்தரம் முன் வைக்கப்பட்டது என்பதை அறிவேன்.

6238. நல்லது, ஜெனிவா மாநாடு ஒரு சர்வதேச மாநாடு என்பதை யும், அந்த மாநாடு தங்கத்தின் வாங்கும் சக்தியை ஸ்திரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்தை அனைத்து நாடுகளும் ஏற்க வேண்டுமென்று ஒரு ஆலோசனையை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளதோடு அந்தக் காரணத்திற்காக மத்திய வங்கிகள் கூட்டுறவு வைத்துக் கொள்ள வேண்டும் சிபாரிசு செய் துள்ளது? - தங்கத்தின் வாங்கும் சக்தியை ஸ்திரப்படுத்துவதற்காக அதை அவர்கள் ஸ்திரப்படுத்த வேண்டும்: அதைச் செய்தார்களென்று நான் நினைக்கவில்லை. தங்களுடைய சொந்த நாணயத்தை ஸ்திரப் படுத்திக் கொள்வதற்காகச் செய்தார்கள்.

6239. தங்கத்தின் வாங்கும் சக்தியை ஸ்திரப்படுத்துவதற்காக அது செய்யப்பட்டதென்று அவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். எனினும் அது அவ்வாறுதானென்று நான் கூறுவதை நீங்கள் நம்ப லாம். தற்பொழுது அது ஒரு சர்வதேச அமைப்பு என்பதுடன்: தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரமானது தங்க நாணய மதிப்புத்தரம் உள்நாட்டில் கொண்டு வந்த ஸ்திரத்தன்மையைப் போன்று அத்தகைய ஸ்திரத்தன்மையைக் கொண்டுவரவில்லை என்ற உங்களது கண்ணோட்டத்தை அவர்கள் ஏற்கவில்லை என்ப தோடு அந்த முடிவுக்கும் வந்திருக்கிறார்கள்? - இல்லை, இல்லை. நான் கூறுவதெல்லாம் தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்தை முற்றிலும் மாற்ற இயலாத தரத்துடன் ஒப்பிடுகிறோம் என்பதுதான். யுத்தத்தின் பொழுது மோதிக்கொண்டிருந்த நாடுகள் முற்றிலும் மாற்ற இயலாத நாணயத்தைக் கொண்டிருந்தன: மாற்ற இயலாத

நாணயமென்பது நிச்சயம் பரிவர்த்தனை மதிப்புத்தரத்தை விட மிக மோசமானது. ஏனென்றால், பரிவர்த்தனைத் தரமென்பது சில மாற்றக் கூடிய தன்மைகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது பாராவின் இரண்டாவது உள் பாராவில் நானே குறிப்பிட்டிருப்பதைப் போல அவர்கள் தங்க நாணய மதிப்புத் தரத்தைத் தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்துடன் ஒப்பிடவில்லை: அவர்கள் தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்தை, அவர்கள் வைத்திருந்த காகித நாணயங்களோடு ஒப்பிட்டனர்.

6240. ஆனால் அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவே இல்லை. அவர்கள் ஒரு சிபாரிசு செய்துள்ளனர்? - அன்று நிலவிய சூழ்நிலைமைகள் சம்பந்தமாக - நான் அந்தளவுதான் கூறமுடியும்.

6241. நல்லது, எவ்வாறிருந்த பொழுதிலும், அது உண்மைதான். தற்பொழுது, அது தவிரத் தங்கத்தின் வாங்கும் சக்தியிலேயே ஒரு மாற்றம். தவிரத், தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது தங்க நாணய மதிப்புத்தரத்தைப் போல ஏன் ஸ்திரமானதாக இருக்கக்கூடாது என்பது எனக்குப் புரியவில்லை; நீங்கள் விடையளிக்கும் முன்பு தங்க நாணயப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் குறித்து நான் புரிந்து கொண்டதை நான் விளக்க விரும்புகிறேன். ஒரு தங்கநாணயப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது உள்நாட்டிற்குள் ஒரு மாற்ற இயலாத நாணயத்தை சுழற்சியில் கொண்டிருக்கும்; ஆனால், வெளிநாட்டில் சுலபமாக மாற்றலாம்; ஏற்றுமதிக் காரணங்களுக்காக அந்த நாணயத்தைத் தங்கமாக மாற்றிக் கொள்ளலாம். இப்பொழுது, அத்தகையதொரு மதிப்புத்தரமானது ஒரு தங்க நாணய மதிப்புத்தரத்தைவிட ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதில் ஏன் சக்தி குறைவாக உள்ளது என்பதை நீங்கள் விளக்கினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன் - நான் உங்கள் கேள்வியைப் புரிந்து கொள்கிறேன். என் பதில் இதுதான்: நாணய மாற்றம் என்பது நாட்டின் தேவைகளுக்கேற்றாற்போல் நாணயத்தின் மொத்த அளவிற்கு வரம்பு கட்டுவதற்கான கருவியாகும். வெளிநாட்டுக் காரணங்களுக்கான நாணயமாற்றம் என்பது நாணயத்தின் மொத்த அளவிற்கு வரம்பு கட்டப் போதுமான பயனுடையதல்ல. இதன் விளைவாக இத்தகையதொரு நாணயத்திற்கு ஸ்திரமான உள்நாட்டு விலைகளை நீங்கள் பெற்றிருக்க முடியாது.

6242. உள்நாட்டுக் காரணங்களுக்காக நாணய மாற்றம் செய்வதை

– ஏனென்றால் நாணய மாற்றமானது சக்தி வாய்ந்ததாயிருக்க வேண்டுமென்பதோடு முழுமையானதாகவும் இருக்கவேண்டும்.

6243. அது முழுமையானதா? - இல்லை.

6244. வெளிப்படையாக அது இருக்கிறது. அது முழுமையானது. வித்தியாசம் என்னவென்றால், ஒரு விஷயத்தில் நீங்கள் சர்வதேசப் பணத்தை சர்வதேசக் காரணங்களுக்காக மாற்றுகிறீர்கள், மற்றொரு விஷயத்தில் சர்வதேச அளவில் பயன்படுத்தப்படும் சர்வதேசப் பணத்திற்கோ அல்லது உள்நாட்டினுள் சுழற்சியில் இருக்கும் சர்வதேசப் பணத்திற்காகவோ மாற்றுகிறீர்கள். - இல்லை, இல்லை. விஷயம் இதுதான். நாணய மாற்றத்திற்கான உங்களுடைய கடமைகள், பரிவர்த்தனை மதிப்புத்தர விஷயத்தைப் போன்று குறைபாடாக இருப்பதால், எவ்வித பயமுமின்றி நீங்கள் அதிக நாணயத்தை வெளியிடக்கூடும்.

6245. ஆனால், நாணய மாற்றத்திற்கான கடமையானது இரண்டு விஷயங்களிலும் நாணய வெளியிடலுக்கு வரம்பு கட்டுகிறது என்று நீங்கள் இப்பொழுது கூறினீர்கள்? - ஆம், ஆனால் நாணய மாற்றம் என்பது நாணய மாற்றத்திற்கான வழிவகையின் செயல் திறனைப் பொறுத்துள்ளது. உங்களுடைய நாணய மாற்றம் என்பது முழுமையாக வேண்டுமென்றால், நாணயத்தை வெளியிடுபவர் எங்கு அதை அளித்தாலும் அதை மாற்றியாக வேண்டும் என்றானால் நாணய மாற்றம் என்பது முழுமையானதாகும்.

6246. ஆனால், என்னுடைய கருத்து என்னவென்றால், தங்க நாணயப் பரிவர்த்தனைத்தரம் என்பது உள்நாட்டு அடையாள நாணயத்தை வெளிநாட்டுக் காரணங்களுக்காகத் தங்கமாக மாற்றும் படி நாணய வெளியீட்டாளர்களைச் சட்டத்தால் பிணைத்துள்ளது? – அனைத்துக் காரணங்களுக்காக அல்ல.

6247. உள்நாட்டுக் காரணங்களுக்காக அடையாள நாணயத்தை மாற்ற வேண்டிய கடமையானது, அந்தப் பணத்தின் வாங்கும் சக்தியின் ஸ்திரத்தன்மையை ஏன் அதிகரிக்க வேண்டும் என்பதை இப்பொழுது நான் அறிவிரும்புகிறேன்? - ஏனென்றால், நாணயம் உள்ளிட்டு எந்தப் பொருளும் வினியோக அளவில் அது ஒரு வரம்புக்குட்பட்டிருப்பதால் தன்னைத்தானே பராமரித்துக் கொள்

கிறது என்ற கோட்பாடு உள்ளது. அரசியல் பொருளாதாரத்தின் முதலாவது ஆரம்பக் கருத்து அதுதான்; எந்தவொரு பொருளும், வினியோகம் வரம்புக்குட்பட்டிருக்கும் காரணத்தால் தன்னைத்தானே பராமரித்துக் கொள்கிறது. சரக்கு வினியோகம் வரம்புக்குட்பட வில்லையென்றால் அது மதிப்பிழந்தே தீரும்.

6248. அவ்வாறானால், தங்கநாணயத்துடன் தங்க நாணய மதிப்புத் தரம் என்பதில் தங்க நாணயம் சுழற்சியில் இருப்பதை விட வேறெதுவும் இராது என்று நீங்கள் கருதுகிறீர்களா? - இல்லை. ரூபாயும் சுழற்சியில் இருக்கும்.

6249. வங்கிப் பத்திரங்கள் இல்லையா? - ஆம், வங்கிப் பத்திரங்கள் இருக்கும், ஏன் இராது?

6250. நீங்கள் எவ்வாறு உள்நாட்டு நாணய வெளியிடலை ஒவ்வொரு விஷயத்திலும் மிகச் சக்திவாய்ந்த முறையில் வரம்பு கட்டுகிறீர்கள் என்பதை என்னால் காண இயலவில்லை - ஏனென்றால், நாணயச்சாலை மூடப்பட வேண்டுமென்று நான் கூறுகிறேன்.

6251. வங்கிப் பத்திரங்கள் வெளியிடுவது குறித்து என்ன சொல்வது? - அவைகள் பாதுகாப்பானவை. ஒரு பாதுகாக்கப்பட்ட பத்திரமானது நாணயத்தின் கூடுதலாக வெளியிடப்படுவதில்லை. நீங்கள் ஒரு குறிப்பிட்டளவு தங்கத்தை வங்கியில் சேமிப்பில் வைக்கிறீர்கள்; அதைப் பாதுகாக்கும் பொருட்டு அந்தளவு நாணயங்களை வெளியிடுகிறீர்கள்; அந்த நாணயமானது ஏற்கனவேயே உள்ள நாணயத்திற்குக் கூடுதலாகாது.

6252. நீங்கள் 100 சதவீதம் தங்கத்தினால் பாதுகாக்கப்பட்ட பத்திரங்களை வைத்திருக்க விரும்புகிறீர்களா? - நல்லது, 100 சதவீதத் தங்கம் என்று நான் கூறவில்லை.

6253. அவ்வாறானால், அதற்கெவ்வாறு வரம்பு கட்டுவீர்கள்? - நாணய மாற்றம் என்பது ஒரு வகையான வரம்பு கட்டுதல் என்றே பொருள் கொள்கிறேன். முற்றிலும், முழுமையாகவும் மாற்றக்

என்பதை நிச்சயித்து வரம்பு கட்டுவேன்; ஆகையால் வரம்பு கட்டப்பட்டது என்ற காரணத்தினால் அது தன்னுடைய மதிப்பைப் பராமரிக்கும். காகித நாணயமானது அது நாணய மாற்றம் செய்யப் படக்கூடியது என்ற காரணத்தால் தன்னுடைய மதிப்பைப் பரா மரிக்கும்.

6254. பருவ காலங்களில் தேவைப்படும் நாணயத்தை நீங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள்? - பருவகாலத் தேவையின் பொழுது பத்திரங் களுக்கெதிராக நாணயத்தை வெளியிட அனுமதிக்கும் பொருட்டு நீங்கள் பிணைப்பத்திரங்களை வெளியிடலாம்.

6255. வெளியிடுபவரின் விருப்பம் மற்றும் உறுதிப்படி இங்கே கூற வில்லையா? - ஆம், ஆம், ஆனால் நாணய மாற்றம் என்பது விருப் பத்தை ஒழுங்குபடுத்துகிறது. நாணய மாற்றம் என்பது, வெளியிடு பவரின் உறுதியை ஒழுங்கு படுத்தக்கூடிய கருவியாக உள்ளது. அங்கே எவ்வித உபாயமும் கிடையாது. தங்க நாணய மதிப்புத் தரத்தின் கீழ் கூடத் தங்கம் முற்றிலும் வெளியேறும் என்பதுடன், காகித ரூபாய்கள் மட்டுமே நாடு முழுவதிலும் மிதந்து கொண்டருக்கும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

6256. இரண்டு தங்கப் புள்ளிகளில் (Gold Points) சர்வதேச செலாவணி யாக மாற்றுவதென்ற கடமை, பணத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப் படுத்தப் போதுமானதா? ஏனென்றால், உள்நாட்டில் அதிகமாக வெளி யிட்டால் உங்கள் பணமானது தங்கம் சம்பந்தமாக மதிப்பிழக்கும்? – ஆம், நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அது நீண்டகாலம் பின்னர். அது நடைபெறும் முன்பு நீண்ட இடைவெளி இருக்கும்; சில நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் அது நடைபெறாமலும் போகலாம்.

6257. ஐரோப்பாவிலும், இதர நாடுகளிலும் யுத்தத்திற்கு முன்பு தங்க நாணய மதிப்புத்தரம் எவ்வாறு செயல்பட்டது? - அது நாணய மாற்றம் என்ற அடிப்படையில் செயல்பட்டது; வெளிக் காரணங் களுக்காக மட்டும் நாணய மாற்றம் என்பதல்ல.

6258. ஆனால், அந்த மதிப்புத்தரம் பிரதானமாகச் செயல்பட வில்லையா? மத்திய வங்கிகள் தங்கமாக மாற்றாமல் அன்னியப் பரிவர்த்தனையை வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் கடைசி

வழியாகத் தங்கம் ஒரு மையத்திலிருந்து மற்றொரு மையத்திற்குப் பாய்ந்து கொண்டிருக்கின்றது? - ஆனால், நாணய மாற்றம் சம்பந்தமான அவர்களுடைய ஏற்பாடுகள் மிகச் சரியானவை, மற்றும் முழுமையானவை.

6259. ஐரோப்பாக் கண்டத்தில் முற்றிலும் ஸ்திரமான நாணயங்களை வைத்திருந்த பல நாடுகள் நடைமுறையில், சுழற்சியில் எவ்விதத் தங்கத்தையும் வைத்திருக்கவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும்? - ஆம், அது அவ்வாறுதான்.

6260. (தலைவர்) உங்களுடைய இன்றைய முழு உதவிக்கு மிகவும் நன்றி டாக்டர்.

(சாட்சி வெளியேறி விட்டார்)

4

இந்தியச் செலாவணியின் இன்றையப் பிரச்சினை - 1*

2. ஷில்லிங்களுக்கு எதிராக ஒரு ஷில்லிங் 4 டாலர் விகிதாச்சாரம்

மகத்தான ஐரோப்பிய யுத்தமென்பது நடப்புக் கால நினைவில் வழக்கத்தின் மீறிய ஒரு சம்பவம் ஆகும். அதனுடைய நாசகாலப் போக்கின்போது அது பாதிக்காத விஷயம் எதுவுமே கிடையாது. அது பதம்பார்த்த அனைத்திலும் காகித நாணய முறைக்குக் கிடைத்த மிகப்பெரும் அதிர்ச்சி வேறு யாருக்கும் கிடைத்திராது; உலகின் அத்தகைய அதிர்ச்சிபெற்ற பிரதான நாணய முறைகளுக்கு உதாரணமாக ஜெர்மன் மார்க், ஆஸ்திரேலிய கிரவுன், ரஷ்ய ரூபிள், பிரான்ஸின் பிராங்க் மற்றும் இத்தாலிய லிரா ஆகியவற்றைச் சொல்லலாம்; அவை தங்களுடைய ஆரம்ப சமன நிலையிலிருந்து வெகுதூரம் சென்று விட்டன. இங்கிலாந்தின் பவுண்டும் அதற்கு இரையானது; யுத்தத்ததல் தீவிரமாக ஈடுபடாத ரூபாய் அதனுடைய பாதுகாவலர்களால் இறுக்கமாக வைக்கப்பட்டுவிட்டது.

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து துவக்கப்பட்ட சீரமைப் பின்போது மக்கள் காகித நாணயத்தின் மதிப்பு யுத்தத்திற்கு முன்பிருந்த நிலைமைகளுக்குத் திரும்பி வர வேண்டும் என்று விரும்பியது இயற்கையானது ஆகும். இந்த உலகக் கோரிக்கைக்கு ஆதரவாக இந்தியா வில தனது சார்பில் ஒரு திட்டவட்டமான திட்டத்தைக் கொண்டிருக்கக் கூடிய ஒரு கட்சி தோன்றியது. அந்தக் கட்சியின் கருத்துப்படி, இந்தியக் காகித நாணயமானது ரூபாய்க்கு, 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற விகிதாச்சாரத்தில் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி கருதியது; இது யுத்தத்திற்கு முன்பு இந்தியக் காகித நாணயத்தின் விகிதாச்சாரமாக இருந்தது. இந்தக் கோரிக்கையை இந்திய அரசாங்கம்

எதிர்த்தது; இந்த விகிதாச்சாரம் நல்லதாக இல்லை என்பதற்காக அல்ல; ஆனால், அதனுடைய கருத்தில் இது மேம்பட்டதல்ல என்பதால் எதிர்த்தது. அது இந்திய ரூபாய்க்கு 2 ஷில்லிங் விகிதாச்சாரம் என்பதை விரும்பியது அல்லது சொல்லப் போனால், அதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஐரோப்பாவிலிருந்த பல அரசாங்கங்கள் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற விவேகத்தைக் கொண்டிருந்த தோடு யுத்தத்திற்கு முந்தைய விகிதாச்சாரத்திற்குத் தங்களுடைய காகித நாணயத்தை மீண்டும் நிலை நிறுத்தவும் விரும்பின - இதுவரை அவை தூரத்திலே இருந்தன. மறுபுறத்தில் இந்தியக் காகித நாணயம் அதனுடைய யுத்தத்திற்கு முந்தைய விகிதாச்சாரத்தை ஏற்கனவே எட்டி விட்டது. இதன் காரணமாக யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்குத் திரும்பவருவதில் இந்திய அரசாங்கத்தின் அணுகுமுறை திருப்தியடையவில்லை; அது சேட்டை செய்யும் ஒரு குழந்தை மேலும் மேலும் வேண்டும் என்று கேட்பது போலவே இருந்தது.

இந்தக் கருத்து மாறுபாட்டையே இந்தக் கட்டுரையின் கருத்துப் பொருளாகக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கருத்து மாறுபாடு என்பது இரண்டு தனித்தனியான பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறது என்பதைத் துவக்கத்திலே உணர்வது அவசியமாகும்: (i) நம்முடைய பரிவர்த்தனையை நாம் ஸ்திரப்படுத்த வேண்டுமா? (ii) எந்த விகிதாச்சாரத்தில் நாம் ஸ்திரப்படுத்த வேண்டும்? இவ்விரு கேள்விகளும் வெவ்வேறான கேள்விகளாகும். இவ்விரு கட்சிகளும் என்ன சொல்லுகின்றனவென்பதை ஒருவர் கவனித்தால் அரசாங்கமோ அல்லது அதனுடைய எதிர்ப்பாளர்களோ நமது அலகின் மதிப்பை மாற்றி யமைப்பது என்பது, அதாவது, அதற்கு ஒரு புதிய மதிப்பைத் தருவது அல்லது, நடப்பிலுள்ள மதிப்பில் அதனை ஸ்திரப்படுத்துவது என்பதுதான் தங்களுடைய குறிக்கோள் என்ற விஷயத்தை அவ்விரு தரப்பினரும் தெளிவாக்கவில்லை என்பதைக் காண முடியும். இவ்விரு பிரச்சினைகளும் முற்றிலும் பிரிக்கப்படும் வரை நமது செலாவணியை மறுசீரமைக்கும் திசைவழியில் எவ்வித முன்னேற்றமும் இருக்காதென்று நான் அஞ்சுகிறேன். ஏனென்றால், ஒரு நாணயத்தின் மதிப்பை மாற்றும் நோக்கமானது ஸ்திரப்படுத்துவது என்பதிலிருந்து வித்தியசாமானது என்பதோடு மட்டுமல்ல, உண்மையில் நாணயத்தின் மதிப்பை மாற்ற விரும்புபவர்கள், இறுதியில் விரும்பப்பட்ட மதிப்பு அடையப்பட்டதும் அதை ஸ்திரப்படுத்தவே விரும்புகிறார்கள்.

ஆனால், மாறுதல் காலகட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் காகித

நாணயத்தின் மதிப்பை நாம் மாற்றியமைத்து கொண்டிருக்கும் பொழுது நாம் அதை ஸ்திரப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வது குழப்பத்தையே விளைவிக்கும். ஏனென்றால், இரண்டாவ தாகச் சொல்லப்பட்டது விகிதாச்சாரத்தை மாற்றுவது என்ற திட்ட வட்டமான கொள்கையைக் கொண்டிருக்கிறது: அதே சமயத்தில் முதலாவது சொல்லப்பட்டது விகிதாச்சாரத்தை ஸ்திரமாக வைத்திருக்க வேண்டுமென்ற திட்டவட்டமான கொள்கை என்பது ஆகும்.

இவ்விரு தனித்தனியான பிரச்சினைகள் குறித்த விவாதத் திற்குள் நான் செல்வதற்கு முன்பு ஒரு பரிவர்த்தனை விகிதம் என்பது எவ்வாறு சரியாகத் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொண்டோமா என்பதை நான் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இதை நாம் புரிந்து கொண்டால் ஒழிய, இந்தக் கருத்து மாறுபாட்டி லிருந்து எழும் இரண்டு பிரச்சனைகளின் பாதிப்புகளையும் விளைவு களையும் நாம் ஒரு போதும் புத்திசாலித்தனமாகப் பின் தொடர முடியாது; எளிமையாகச் சொல்வதென்றால், இரண்டு காகித நாணயங்கள் அல்லது அலகுகளுக்கு இடையேயான பரிவர்த்தனை விகிதம் என்பதன் பொருள் ஒன்றின் மதிப்பை மற்றொன்றை வைத்துச் சொல்வதாகும். தற்பொழுது கணக்கின் ஒரு அலகு என்பது கணக்கின் மற்றொரு அலகின் மதிப்பாகும்; அதனுடைய நலன் பொறுத்து அல்ல, அது ஒரு விந்தைப் பொருளாக இருக்க விரும்பினாலொழிய அது எதை வாங்க முடியும் என்பதை வைத்து மதிப்பிடப்படுகிறது: ஆங்கிலேயர்கள், இந்திய ரூபாய்கள் எந்த அளவுக்கு, எதுவரை இந்தியப் பொருட்களை வாங்க முடியும் என்பதை வைத்துத்தான் அதை மதிப்பிடுகிறார்கள் என்று இந்த விஷயத்தை ஒரு திட்டவட்ட மான வடிவத்தில் அறிமுகப்படுத்தும் நோக்கில் நாம் சொல்ல முடியும். மறுபுறத்தில் இங்கிலாந்தின் பவுண்டுகள் எந்த அளவுக்கு எதுவரை இங்கிலாந்துப் பொருட்களை வாங்க முடியும் என்பதை வைத்து இந்தியர்கள் அதை மதிக்கிறார்கள். ஆகையால், இந்தியாவின் ரூபாய்களின் வாங்கும் சக்திகள் அதிகரித்தாலோ அல்லது அப்படியே இருந்தாலோ அல்லது குறைந்த வேகத்தில் வளர்ந்தாலோ அதே சமயத்தில் இங்கிலாந்து பவுண்டுகளின் வாங்கும் சக்தி வீழ்ச்சி யடைந்தாலோ (அதாவது இந்தியாவின் விலைசி மட்டம் இங்கிலாந்து விலைவாசி மட்டத்திற்கேற்ப வீழ்ச்சியடைந்தால்) குறைவான ரூபாய்கள், பவுண்டுக்கு ஈடாகக் கருதும் நிலை ஏற்படும். வேறு

பரிவர்த்தனை மதிப்பு அதிகரிக்கும். மாறாக, இந்தியாவில் ரூபாய் களின் வாங்கும் சக்தி வீழ்ச்சியடையும்போது இங்கிலாந்தில் பவுண்டுகளின் வாங்கும் சக்தி அதிகரித்தால் அல்லது அதே நிலை யில் இருந்தால் அல்லது வேகமற்று வீழ்ச்சியடைந்தால் (அதாவது இந்தியாவின் விலைவாசி மட்டம் இங்கிலாந்தின் விலைவாசி மட்டத்திற்கேற்ப அதிகரித்தால்) குறைவான பவுண்டுகள் ரூபாய்க்கு ஈடாகக் கருதும் நிலை ஏற்படும். வேறு வார்த்தைகளில் கூறுவ தென்றால், இந்தியாவில் ரூபாய் விலைகள் அதிகரிக்கும்பொழுது, ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு வீழ்ச்சியடையும். இதிலிருந்து ஒரு பொதுவான கருத்தை வரையறுக்கலாம்; அதாவது, இரண்டு கணக்குப் பிரிவுகளின் பரிவர்த்தனை விகிதம் என்பது அவைகளின் வாங்கும் சக்திகளின் பரிவர்த்தனை விகிதத்திற்கு இணையாக இருக்கும் என்பதே அது.

சுருக்கமாகச் சொன்னால், இது வாங்கும் சக்தி சமன நிலைக் கோட்பாடாகும். இரண்டு நாணயங்கள் அல்லது இரண்டு கணக்குப் பிரிவுகளின் ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை விகிதத்தின் விளக்கமாகும்.

இந்தக் கோட்பாடு நன்றாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டு மென்று நான் வலியுறுத்துகிறேன். ஏனென்றால், நமது முக்கிய மாணவர்களில் சிலர் ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை விகிதமானது வர்த்தக நிலுவையின் விளைவு என்று கருத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்வது ஓரளவு சிரமம். உண்மையில், சர்வதேச வர்த்தகத்தின் இறக்குமதிக்காக, ஏற்று மதிகள் செய்யப்படுகின்றன என்பதுடன், அங்கே கொடுபடாத நிலுவை என்று எதுவும் ஒருபொழுதும் இருந்ததில்லை. வர்த்தக பாக்கியின் ஒரு பகுதி பணமாகக் கொடுக்கப்படுகின்றது என்பது உண்மையே; ஆனால், பணத்தினால் கொடுக்கப்பட்டுவிட்ட பகுதி நிலுவை என்று கூறப்படுவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. அதன் பொருளானது பணமென்பது இதர சரக்குகளைப் போலவே, சர்வதேச வர்த்தகத்தில் நுழைந்துள்ளது என்பதாகும். அங்கே, பணத்தைக் குறித்து விநோதமான எதுவும் கிடையாது. அல்லது சர்வதேச வர்த்தகத்தில் பணம் நுழையும் அளவுக்கு ஏற்படும் மாற்றங் களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது எதுவும் கிடையாது. ஒரு நாட்டின் வர்த்தகப் பரிமாற்றங்களில் எந்த அளவிற்குப் பணம் நுழைவது என்பது, இதர எந்தச் சரக்குகள் சம்பந்தமாகவும் உள்ள அதே ஒப்பீட்டு மதிப்புச் சட்டப்படி நிர்வகிக்கப்படும். ஒப்புநோக்குகையில் மிக மலிவாக இருக்கக்கூடிய சரக்கானது நாட்டை விட்டு வெளியே

போவதிலேயே குறியாக உள்ளது. ஒரு சமயத்தில் அது சமையல் உபகரணங்களாக இருக்கும், மற்றொரு சமயத்தில் அது ஆரஞ்சுகளாக இருக்கும், மூன்றாவது சமயத்தில் பணமாக இருக்கும்.

ஆனால், மொத்தத்தில் அபத்தமாகவும், முட்டாள்தனமாகவும் இருப்பது எதுவென்றால், ஒரு கணக்குப் பிரிவின் பரிவர்த்தனை விகிதம் என்பது அதனுடைய வாங்கும் சக்தியைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. ஆனால், வர்த்தக நிலுவையைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது என்ற கண்ணோட்டமே ஆகும். இந்தக் கண்ணோட்டமானது முற்றிலும் தலைகீழான காரண காரிய விதியாகும். பரிவர்த்தனை மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சியானது பாதகமான வர்த்தக நிலுவையுடனும், பரிவர்த்தனை மதிப்பில் அதிகரிப்பு என்பது சாதகமான வர்த்தக நிலுவையுடனும் சேர்ந்தே வருகிறது என்பது உண்மையே. ஆனால், பாதகமான வர்த்தக நிலுவை என்பது சரக்கு இறக்குமதிகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் சரக்கு ஏற்றுமதிகள் குறைந்து கொண்டு வருகிறது என்ற கண்ணோட்டத்தில் ஆகும். இதன் பொருளானது, அந்தக் குறிப்பிட்ட நாடு விற்பனைக்கான நல்ல சந்தையாகும். ஆனால், அங்கிருந்து வாங்குவது மோசமானது. அதே போன்று, சாதகமான வர்த்தக நிலுவையென்பது சரக்கு இறக்குமதி குறையும் நேரத்திலேயே சரக்கு ஏற்றுமதி அதிகமாகிறது என்ற பொருளில் ஆகும்; இதன் பொருள் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட நாடு வாங்குவதற்கான நல்ல சந்தையாகவும் விற்பனைக்கான மோசமான சந்தையாகும் என்பதே அது. சந்தையில் உள்ள விலை மட்டம் அதற்கு வெளியில் உள்ளதை விட அதிகமாக இருக்கும்பொழுது (அதைப் போன்றே பரிவர்த்தனை மதிப்பில் வீழ்ச்சியடைந்து அதோடு சேர்த்து பாதகமான வர்த்தக நிலுவை இருக்கும்போது) சந்தையானது பொருள்களை விற்பதற்கு நல்ல இடமாகவும், வாங்குவதற்கு மோசமான இடமாகவும் உள்ளது. அதே வழியில், சந்தையில் உள்ள விலைகளின் மட்டம் வெளியில் உள்ள விலை மட்டத்தை விடக் குறைவாக இருக்கும்பொழுது (அதே போன்று பரிவர்த்தனை மதிப்பு அதிகரித்து அதோடு சேர்ந்து சாதகமான வர்த்தக நிலுவை இருக்கும் பொழுது) அந்தச் சந்தையில் வாங்குவது நல்லது: விற்பது மோசமானது. இதைச் சுலபமாகச் சொல்லுவது என்றால், குறைவான விலைகள் என்பவை ஒரு அதிகப் பரிவர்த்தனை மதிப்பையும், மற்றும் ஒரு சாதகமான வர்த்தக நிலுவையையும் கொண்டிருக்கும்; அதிக விலைகள் என்பது குறைவான

மதிப்பு மாற்றங்களின் விளைவே ஆகும்; எதிரெதிர் மாறாக அல்ல; பரிவர்த்தனை மதிப்பில் செய்யப்படும் பரிவர்த்தனைகள் விலைவாசி மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகும், அதாவது, கணக்குப் பிரிவுகளின் வாங்கும் சக்தியில் ஏற்படும் மாற்றங்களாகும். இதுதான் மிகவும் அடிப்படையான அம்சம் என்பதுடன் இது குழந்தைக்குப் பால் புகட்டுவது போல உள்ளது என்று சிலர் கோபம் கொண்ட போதிலும், அது அவசியமானது என்றே நினைக்கிறேன். ஏனென்றால், சிலர் பரிவர்த்தனையின் ஸ்திரத்தன்மை குறித்து நம்பிக்கையற்ற முட்டாள்தனத்தில் பேசுவதோடு, அது விலைகள் என்ற பிரச்சனைகளோடு சம்பந்தப்படவில்லை என்ற போதிலும், அதற்குத் தங்கள் விருப்பப்படி பரிவர்த்தனையை நிச்சயிக்கிறார்கள். மறுபுறத்தில் பரிவர்த்தனையில் ஏற்படும் மாற்றங்கள் இறுதியில் விலை மட்டத்திலான மாற்றங்களாகும் என்பதுடன் அந்த அளவுக்கு மக்களின் பொருளாதார நலன் மீது ஆழமான தாக்கத்தைச் செலுத்தும். அதன் பிறகு ஒழுங்குபடுத்தும் பரிவர்த்தனையானது நாணயத்தின் வாங்கும் சக்தியை ஒழுங்குபடுத்தும் அதே விஷயம் என்பதை நினைவில் கொண்டு, இந்தக் கருத்து மாறுபாட்டினால் எழுந்துள்ள இரு பிரச்சனைகளை விவாதிக்க நாம் இப்போது செல்வோம்.

முதலாவதாக, நமது கணக்குப் பிரிவின் பரிவர்த்தனை மதிப்பை நாம் ஸ்திரப்படுத்த வேண்டாமா? நான் மேலே கூறியபடி அன்னியப் பரிவர்த்தனைகள் ஒரு நாட்டின் நாணய மதிப்பை இதர நாடுகளோடு ஒப்பிடுகின்றன. இரண்டு நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்புகள் அதே நாட்டிலேயே வாங்கி, விற்காத வர்த்தகர்களுக்குத் தான் முக்கியமானது என்பது இதிலிருந்து வருகிறது. மீண்டும் பரிவர்த்தனை மதிப்பு என்பது என்னவாக இருக்கிறது? அதாவது ரூபாயானது ஒரு ஷில்லிங் அல்லது இரண்டு பென்சுக்குச் சமமானதா என்பதெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல; ஆனால், இந்த எண்ணிக்கை எப்பொழுதும் ஒரே மாதிரியாகவும், முன் கூட்டியே தெரியக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது ஏற்ற இறக்கங்கள் மட்டுமே வர்த்தகர்களுக்கு முக்கியமானதாக இருக்கும். அவர் விரும்புவது எல்லாம் பரிவர்த்தனையின் மாறாத்தன்மையையே; இந்த மாறாத்தன்மையை உறுதி செய்வது என்பது ஸ்திரத் தன்மையின் பிரச்சினையாகும். இன்றைய சூழ்நிலைமையின் கீழ் நமது வர்த்தகர்களுக்கு இந்தப் பரிவர்த்தனை விகிதத்தின் மாறாத் தன்மைக்கு நாம் உத்தரவாதம் கொடுக்க முடியுமா? இந்தக் கேள்விக்கு விடையளிக்கப்

பரிவர்த்தனை விகிதத்திற்கான விளக்கம் என்ற முறையில் வாங்கும் சக்தி சமன நிலையின் அடிப்படையான கருத்தை நாம் திரும்பி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். பரிவர்த்தனையை நீங்கள் ஸ்திரப்படுத்த விரும்பினால், சம்பந்தப்பட்ட இரு நாணயங்களின் வாங்கும் சக்தியை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்பது இந்தக் கோட்பாட்டிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறானால், ஆழத்திலும், அதைப் போன்ற திசை வழியிலும் அவைகளுடைய செயல்பாடுகள் ஒரே மாதிரியாக இருக்கும். ஆகவே, பரிவர்த்தனையை ஸ்திரப்படுத்த நாம் சில கட்டுப்படுத்தக்கூடிய கருவிகளைப் பெற்றிருக்க வேண்டும்; அவை ஒரே திசை வழியில் இரண்டு நாணயங்களும் ஒன்றுக்கொன்று ஏற்ற அளவில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஒரு பொதுவான ஒழுங்குபடுத்தும் கருவியாகச் செயல்படும். இதுவரை ஒரு பொதுவான தங்க நாணய மதிப்புத்தரம் என்ற ஒரு நல்ல கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்புத்தரம் அமெரிக்காவைத்தவிர உலகம் முழுவதிலும் தற்போது நாசப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவைத் தவிர இதர இடங்களில் ஒரு தங்க நாணய மதிப்புத்தர அடிப்படையில், தானே இயங்கக் கூடிய ஸ்திர பரிவர்த்தனை என்பது சாத்தியமில்லாமல் போய்விட்டது.

காகித நாணய அடிப்படையிலான நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில், பரிவர்த்தனை ஸ்திரம் என்பதை இரண்டு வழிகளில் அடைய முடியும்.

1. இதர நாடுகளின் நாணயங்களை நாம் கட்டுப்படுத்த இயலாது. ஆகையால், நமது நாணயத்தை அவர்களுக்கு ஏற்றாற் போல் மோசடி செய்ய நாம் தயாராகி, அவை அந்த நாடுகளின் நாணயங்களின் மதிப்பு குறையும்போது அதை வரவேற்கத் தயாராக வேண்டும்.

2. நமது நாணயம் முழுவதையும் மோசடி செய்யாமல் நாம், குறித்த விகிதத்தில் அன்னியப் பரிவர்த்தனையை விற்கவோ வாங்கவோ தயாராக இருக்க வேண்டும். இவ்விரண்டு திட்டங்களும், ஸ்திரப்படுத்துவது என்பது மிகவும் தேவைப்படும் இடத்திற்கு சர்வதேசக் கடன் தருவதையும், மூலதனம் செல்வதையும் மீண்டும் ஏற்படுத்தும்; வேறெதுவும் இதைச் செய்ய முடியாது. ஆகையால்

மறைந்து போகும். முடிந்து போனது என்று கைவிடப்பட்ட சந்தைகள் மீண்டும் வளர்க்கப்படும்; அது வர்த்தகத்திற்கும் தொழிலுக்கும் ஒரு உத்வேகத்தை அளிக்கும். ஆனால், பெறப்படும் பலனானது அந்தச் செலவுக்கு ஈடாகாது என்பதில் ஐயமில்லை. நம்முடைய உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளை ஒப்பிடும்போது நம்முடைய வெளிநாட்டு நடவடிக்கைகள் மிக மிகச் சிறியவை. வெளிநாட்டுப் பரிவர்த்தனையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நமது விலைவாசி மட்டத்தில் தொடர்ந்த மாற்றங்கள் மூலமாக நம் முடைய உள்நாட்டு ஏற்பாடுகளைச் சீர்குலைப்பது ஒரு அற்பமான ஆதாயத்திற்கு ஒரு மிகப்பெரும் விலை கொடுப்பதாகும். ஏனென் றால், நிச்சயித்தல் என்பது மிகவும் பலன் உள்ளது என்ற போதிலும், அது இல்லாதது சர்வதேச வர்த்தகத்தை நடத்துவதற்கான ஒரு முழுத் தடையாக இல்லை என்பதை நமது வர்த்தகர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான உதாரணத்தை நம்முடைய சொந்த நாணய வரலாற்றிலேயே பெற்றிருக்கிறோம். ஏனென்றால், 1872-1892 ஆண்டுகளுக்கிடையில் இந்திய நாணயத்தில் மிகப் பெரிய ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டது. நமது வர்த்தகர்கள் இன்று போல் அன்றும் பரிவர்த்தனை ஸ்திரமின்மையை வர்த்தகத்திற்கான இடையூறு என்று அதற்கு எதிராகக் குமுறவில்லை.

ஆனால், நமது வரலாறு காண்பிப்பது என்னவென்றால், ஏற்ற இறக்கமான பரிவர்த்தனையின் கீழ் கூட அவை வளர முடியும் மற்றும் வளம் பெற முடியும் என்பது; அவர் களுடைய புதல்வர்கள் இதை எவ்வாறு செய்வது என்பதை உள் ளுணர்வாக அறிவார்கள் என்று நம்பப்படுகிறது.

நம்முடைய விலை மட்டத்தை அவர்களுடையதற்கு ஏற்றாற் போலக் கொண்டுசெல்ல இணக்கம் தெரிவித்ததன் மூலம் நம்முடைய மக்களின் நலனை, திவாலாகிப் போன அரசாங்கங்கள், மற்றும் அவர்களுடைய நம்பிக்கையற்ற அமைச்சர்களின் பொறுப்பில் விடுகிறோம். விஞ்ஞானத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை யில் நிர்வகிக்கப்படும் ஒரு நாணயமானது சிறந்தது என்பதில் ஐயமில்லை. முற்றிலும் வர்த்தகத்தின் அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்கென்றே நிர்வகிக்கப்படும் ஒரு நாணயத்தோடு இணைப்பது என்பது பொறுத்துக்கொள்ளக் கூடியதுதான். ஆனால், தன்னுடைய நாணயத்தை வைத்து வாழ்ந்துகொண்டிருக்கிற ஒரு கூட்டாளியுடன் கரங்கோர்த்துக் கொண்டு நமது நாணயத்தை நிர்வகிப்பதென்பது பொறுத்துக்கொள்ள முடியாததாகும்.

5

இந்தியச் செலாவணியின் இன்றையப் பிரச்சினை

இரண்டு ஷில்லிங்குகளுக்கு எதிராக ஒரு ஷில்லிங் நான்கு பென்ஸ் விகிதம்

இதுவரை முதலாவது பிரச்சினை. இப்பொழுது, இந்தக் கருத்து மாறுபாட்டிலிருந்து எழக்கூடிய, அதாவது, எந்த விகிதத்தில் நமது நாணயத்தை நாம் ஸ்திரப்படுத்துவது என்ற கருத்து மாறுபாட்டிலிருந்து எழக்கூடிய மற்றொரு பிரச்சினையை நான் எடுக்கிறேன். வாங்கும் சக்தி என்பதை வைத்து விளக்கும் பொழுது, இந்தப் பிரச்சினையானது தன்னை இந்த அளவிற்குச் சுருக்கிக் கொள்ளுகிறது: நடப்பில் உள்ள விலைவாசி மட்டத்தில் ஒரு வீழ்ச்சியை நாம் கொண்டுவர வேண்டுமா? அதாவது, வாங்கும் சக்தி அதிகரித்து அதன் மூலம் ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பை அதிகப்படுத்துவதா? இப்பொழுது, பணத்தின் மதிப்பில் ஏற்கப்பட்ட மாற்றங்கள், அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும், அனைத்து வர்க்கங்களையும் சமமாக பாதித்தால், அது ஒரு பொருட்டல்ல என்பதுடன் மேலே சொல்லப்பட்ட இத்தகைய பிரச்சினைகளுக்கு எவ்வித விவாதமும் தேவையில்லை. ஆனால், நாம் அனைவரும் அறிந்தபடி பணத்தின் மதிப்பு மாறும்பொழுது, அது ஒரு மனிதனுடைய வருமானத்தையும் மற்றும் அதே அளவிற்குச் செலவையும் பாதிப்பது போல் அனைத்துக் காரியங்களுக்கும் ஒரே மாதிரியான விகிதத்தில் மாறுவதில்லை. இதன் விளைவாக, நமது விலைவாசி மட்டம் செல்ல வேண்டிய திசை வழிகள் குறித்து நாம் நிச்சயிக்கும் முன்னரேயே ஒரு விஷயத்தை நாம் உறுதி செய்ய வேண்டியுள்ளது; நமது சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்மீது ஏற்படும் பாதிப்பு நியாயமானதாகவும், முறையானதாகவும் இருக்குமாறு நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சமூகத்தின் இன்றைய அமைப்பில் முதலீட்டு வர்க்கம்,

பட்ட வகைப்பிரிவுகள் உள்ளன. இது, ஒரு உண்மையான சமூகப் பிளவையும் மற்றும் ஒரு நடைமுறையில் மாறுபட்ட நலன்களுக்கும் ஏற்றாற் போல் உள்ளது. வர்த்தக வர்க்கம் என்பது அனைத்துப் பொருளாதார நடவடிக்கையின் மையமாகும்; ஒரு புறத்தில் அது முதலீட்டு வர்க்கத்தில் இருந்து பணத்தைக் கடன் வாங்குகிறது என்பதுடன் மறுபுறத்தில் ஊதியம் பெறும் வர்க்கத்தை வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறது. இந்த அளவு பணம் கொடுக்கப் படுமென்று பண ஒப்பந்தங்களும், உடன்பாடுகளும் அங்கே உள்ளன. பண ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபின் பணத்தின் மதிப்பு இந்த வழியிலோ அல்லது அந்த வழியிலோ மாறுகிறது. பணத்தின் மதிப்புக் குறையு மானால், அதாவது விலைகள் அதிகரித்து முதலீடு மற்றும் ஊதியம் பெறும் வர்க்கங்கள் பாதிக்கப்பட்டு வர்த்தக வர்க்கம் ஆதாயம் அடையு மானால், இந்த ஒப்பந்தங்கள் பொய்த்துப்போகும் என்பது தெளி வாகும். முதலீட்டு வர்க்கமும் மற்றும் ஊதியம் பெறும் வர்க்கமும் ஒப்பந்தத் தொகையை, வர்த்தக வர்க்கத்திடமிருந்து பெற்றுவிடும் என்பது உண்மையே. ஆனால், விலைவாசிகள் உயர்வு காரண மாக வர்த்தகர் தன்னுடைய உற்பத்திப் பொருளுக்குப் பணத்தின் மதிப்பு ஸ்திரமாக இருந்திருந்தால் எந்தளவு பணம் பெற்றிருப்பாரோ, அதைவிட அதிகமாகப் பெறுகிறார்; இதர வர்க்கங்களுக்கு அவர் அதே அளவு பணத்தைத் தருகிறார் என்பதுமட்டுமல்ல, ஆனால் அவர் களுக்கு குறைவான மதிப்புடைய பணத்தையே தருகிறார். அதே வழியில் பணத்தின் மதிப்பு அதிகரித்தால், அதாவது விலைவாசிகள் வீழ்ச்சியடைந்தால் வர்த்தக வர்க்கம் பாதிக்கப்படுகிறது என்ப துடன் முதலீடு செய்யும் மற்றும் ஊதியம் பெறும் வர்க்கம் பல னடைகின்றன. முன்பைப் போலவே, வர்த்தகர் ஒப்பந்தப்படி செய்து கொள்ளப்பட்ட தொகையை முதலீடு செய்யும் மற்றும் ஊதியம் பெறும் வர்க்கங்களுக்குக் கொடுக்கிறார் என்பதில் ஐயமில்லை. ஆனால், விலைவாசி வீழ்ச்சி காரணமாக வர்த்தகர் அவருடைய பொருளுக்குப் பணத்தின் மதிப்பு ஸ்திரமாக இருந்திருந்தால் என்ன பெற்றிருப்பாரோ, அதை விடக் குறைவாகப் பெற்றால், அவர் மற்றுமிரு வர்க்கங்களுக்கு அதே அளவு பணத்தை கொடுக்கிறார் என்பது மட்டுமல்ல, ஆனால் அதிகமதிப்புள்ள பணத்தை அவர் களுக்குக் கொடுக்கிறார்.

அவ்வாறானால், நாம் 2 ஷில்லிங் விகிதத்திற்குக் கீழிறங்கி னால் அதாவது நமது விலைகளில் ஒரு வீழ்ச்சியைக் கொண்டு வந்தால், நாம் நமது சமுதாயத்தின் முதலீடு செய்யக்கூடிய மற்றும் ஊதியம் பெறக்கூடிய வர்க்கங்களுக்கே நன்மை செய்தவர் ஆவோம்.

மறுபுறத்தில் 1 ஷில்லிங் 4 பென்ஸ் விகிதம் என்று நாம் மேல்நோக்கிச் சென்றால், நமது சமுதாயத்தின் வர்த்தக வர்க்கத்திற்கு நன்மை செய்தவர் ஆவோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நியாயம் வழங்கவேண்டுமானால், அந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட நேரத்திலிருந்த பணத்தின் மதிப்புக்கு ஏற்றாற் போல் பல்வேறு தரங்களை நிச்சயிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், தனித்தனியான ஒப்பந்தங்களுக்குத் தனித் தனியான தரங்கள் உருவாக்கப்படுவது சாத்திய மற்றதொரு காரியமே ஆகும். நடப்பிலுள்ள அனைத்து ஒப்பந்தங்களும் 1914 ஆம் வருடத்திற்கு முன்பாகச் செய்யப்பட்டிருந்தால், லட்சிய நீதி என்பது யுத்தத்திற்கு முந்தைய நாணயங்களின் சமனநிலையை மீண்டும் ஏற்படுத்துவதாகும்.

மறுபுறத்தில், நடப்பிலுள்ள அனைத்து ஒப்பந்தங்களும் 1924 செய்துகொள்ளப்பட்டதாகக் காணப்பட்டுள்ளது. நாம் 1924 ஆம் வருட மட்டத்தையே வைத்திருக்கவேண்டுமென்று நீதி கோருகிறது. இவ்விரண்டு அதீதப் போக்குகளிடையே செயல்படுவதுதான் நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்பதில் ஐயமில்லை. தற்பொழுது நமது ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பின் இவ்விரு அதீதப் போக்குகளும் இந்தக் காலகட்டத்தில் 1 ஷில்லிங் 3 7/8 மற்றும் 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்றிருக்கிறது. இது சிலருக்கு வியப்பாயிருக்கலாம். ஏனென்றால், ஒரு சமயத்தில் நமது ரூபாய் 2 ஷில்லிங் தங்கத்திற்குச் சமமானதென்று நமது விதிகள் அங்கீகரித்திருக்கையில், ஒருசமயத்தில் ரூபாயானது 3 ஷில்லிங் அளவுக்கு அதிகரித்தது என்பது நன்றாக அறியப்பட்டதே ஆகும். ஆனால் என்னுடைய கருத்துப்படி நாம் அவற்றை விட்டுவிட வேண்டுமென்பதாகும். இந்திய நாணயம் குறித்த ஆராய்வதற்கென அவ்வப்போது நியமிக்கப்பட்ட குழுக்களால் வெளியிட்ட அறிக்கைகளில் பாபிங்கடன் ஸ்மித் குழுவின் அறிக்கையைப் போன்று முட்டாள்தனமான அறிக்கை வேறெதுவும் கிடையாது என்று உடனே கூற முடியும்; அந்தக் குழுவின் சிபாரிசுகளை வைத்துத்தான் இந்தவிதி உருவாக்கப்பட்டது. எந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டதோ அந்தப் பிரச்சினையையே புரிந்துகொள்ள இயலாத, அறியாமையில் மூழ்கிய குழுதான் அது; இதன் விளைவாக அனைத்துப் பிரச்சினைகளையும் ஒன்றாகக் குழப்புவதில் அது போய் முடிந்தது. அனைவரும் அறிந்ததுபோல, இந்தக் குழுவானது, ரூபாயின் மதிப்பு 2 ஷில்லிங் தங்கமாக அதிகரிக்கப்படவேண்டுமென்று அறிக்கை வெளியிட்டது. அது, ரூபாய் மதிப்பு

விட்டன என்பதாகும். இந்த விபரங்கள் எவ்வாறு நிற்கமுடியும்? முழுக்கதையையும் கீழ்வரும் அட்டவணை சுருக்கித் தருகிறது.

தேதி	இந்தியாவில் தங்கப்பாளம் விலை(பம்பாய்) 100கிராம் தோலா விற்கு	இந்தியாவில் வெள்ளி விலை(பம்பாய்) 100 தோலா அளவு	இந்தியாவில் விலைவாசி குறியீட்டெண் 1913 = 100
	ரூ-அணா	ரூ-அணா	
1914	24-10	65-11	
1915	24-14	61-2	112
1916	27-2	78-10	125
1917	27-11	94-10	142
1918 ஜூலை	34-0	117-2	178
,, ஆகஸ்ட்	30-0	-	-
,, செப்டம்பர்	32-4	-	-
1919 மார்ச்	32-3	118-0	200

ரூபாயின் மதிப்பு அதிகரிப்பதற்குப் பதிலாக அது மிகப் பெருமளவு குறைந்துள்ளது என்பது இந்த அட்டவணையிலிருந்து தெளிவாகும். வெள்ளியின் விலையானது கருதக்கூடிய அளவை விட அதிகமாக அதிகரித்துள்ளது என்பதில், ஐயமில்லை; குழு வானது, பெரிதாகக் கூறுவதற்கு ஏதுமில்லாத நிலையில், ரூபாய் தன்னுடைய மதிப்பில் உயர்ந்துள்ளது என்ற முடிவை எடுத்துள்ளது. உண்மையில் ரூபாய் தனது மதிப்பில் குறைந்துள்ளது என்பதற்கு இந்தச்சூழ்நிலையே போதுமான சான்றாகும்: வெள்ளி சம்பந்தமாகவும், பொதுவாக சரக்குகள் சம்பந்தமாகவும் இதுதான்நிலைமை. 1913 ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1920இல் அதே அளவு வெள்ளியை வாங்கு வதற்கு அதிகரூபாய்கள் தேவைப்பட்டதென்றால் அதன்பொருள், ரூபாய், மதிப்பில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதாகும். குழுவானது, ரூபாயை வெள்ளியின் வார்ப்புக்கட்டி என்பதிலிருந்து பிரித்து, ரூபாயை

ஒரு நாணயமாகவும், மதிப்பின் அளவாகவும் பார்க்கத் தவறியதால் பெரும் தவறைச் செய்தது. ரூபாயின் மதிப்பு அளவாக 2 ஷில்லிங் தங்கப் பரிவர்த்தனை மதிப்பு ஒருபோதும் இருந்ததில்லை; எனவே, நமது தற்பொழுதைய பிரச்சினைக்குத் தீர்வாக அந்த வரம்பைக் கணக்கிலெடுக்காததில் நாம் முற்றிலும் நியாயப்படுத்தப்பட்டுள்ளோம். ஒரே ஒரு நியாயப்படுத்துதல் மட்டும் சரியானதென்று கருதப்படலாம்; இதில் அடங்கியுள்ள 2 ஷில்லிங் தங்கவிகிதம் என்பதற்கு ஆதவராகச் சொல்லப்படுவதே அது. 1 ஷில்லிங் 4 பென்ஸ் விகிதத்தைக் கோருபவர்களில் சிலர் அவ்வாறு செய்வதற்குக் காரணம் அவர்கள் கருத்துப்படி அது யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்குத் திரும்புவது என்பதாகும். தற்பொழுது விரும்பப்படுவது யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்குத் திரும்புவதென்றானால், விலைகளை வைத்துப் பார்க்கும்பொழுது 1924இல் 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பது 1914இல் இருந்த 1 ஷில்லிங் 4 பென்ஸ் போன்றதல்ல என்று அரசாங்கம் தெளிவாகக் கூறலாம். பலர், இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இது மறுக்கமுடியாத உண்மை. 1924இலும் அதைப்போன்றே 1914இலும் பரிவர்த்தனை என்பது 1 ஷில்லிங் 4 பென்ஸேயாகும். ஆனால் இந்தியாவில் விற்பனை விலைகளின் குறியீட்டெண் 1924இல் 176 ஆக இருந்தது. 1914 ஜூலையில் 100ஆக மட்டுமே இருந்தது. இதன்படிப் பார்த்தால் யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்கு நாம் திரும்பிவரவிரும்பினால் பின் அது ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்பதை வைத்துவராது. யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்குத் திரும்பி வருவதன் பொருள் யுத்தத்திற்கு முந்தைய விலைவாசிக்குத் திரும்பி வரவேண்டுமென்பதாகும். அதற்கு நமது நடப்பு விலைகளை 76 சதவீதம் நாம் குறைக்கவேண்டும். அதாவது ரூபாயின் மதிப்பை 76 சதவீதம் அதிகரிக்கவேண்டும். இறுதியில் இதன்பொருள் 2 ஷில்லிங் விகிதம் என்பதாகும். ஆனால், யுத்தத்திற்கு முந்தைய நிலைமைகளுக்கு நாம் ஏன் திரும்பிவரவேண்டுமென்று கேட்கப்படலாம். அதைச் செய்வதற்கு அவசியமில்லை. பழைய ஒப்பந்தங்கள் இனியும் அமலில் இல்லை என்பது நினைவுகொள்ளப்படவேண்டும். அவைகளில் பெரும்பாலனவை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தவறை இப்பொழுது சரிசெய்யமுடியாது. தவிர, எஞ்சியுள்ள பண ஒப்பந்தங்கள் பல்வேறு காலப் பகுதிகளைச் சேர்ந்ததாயிருந்தபோதிலும், சில ஒருநாள், சில ஒரு மாதம், சில ஒரு வருடம், சில 10 ஆண்டு, சில நூற்றாண்டு பழையது என்ற போதிலும், பெரும்பாலும் அவை சமீபத்திய

படுத்திக் கொள்வதை நாம் காணமுடியும். அந்த நிலைமையில் தங்கம் மீண்டும் ஒரு சர்வதேச மதிப்புத்தரமாகச் செயல்படும் என்பதோடு நாம் ஒரு ஸ்திரமான பரிவர்த்தனையையும் பெறமுடியும். ஆனால், அதற்கு முன்பாகத், தங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் நமக்கு ஸ்திரமான விலைகள் இருக்குமானால் அது நமக்கு எவ்விதத் தீங்கையும் நிச்சயம் இழைக்கமுடியாது.

இந்தக் கருத்து மாறுபாட்டின்போது ஒரு புதியநிலை தோன்றியுள்ளது; அது, நடப்பிலுள்ள நிர்வகிக்கும் நாணயமுறைக்குப் பதிலாக, நாணயம் தானாகவே செயல்படக்கூடிய ஒரு புதிய முறையை ஏற்படுத்த நாம் முதலில் நடவடிக்கை எடுக்கும்வரை நமது நாணயத்தைப் புனரமைக்கும் விஷயத்தில் நாம் எதுவும் செய்யக் கூடாது என்பதாகும். இந்த நிலைப்பாட்டில் எனக்கும் மிகுந்த ஆர்வமுண்டு; தானாகவேசெயல்படும் நாணயமுறையானது எப்பொழுதும் நிர்வகிக்கப்படும் நாணயமுறையைவிட எப்பொழுதும் மிகவும் ஸ்திரமாக இருக்கும் என்பதால் அல்ல: ஆனால், பின்வரும் பிரச்சினையை நினைவுபடுத்துவதால்; அதாவது, ஸ்திரத் தன்மையை அடைவது என்ற பிரச்சினையைவிட நமது கவனம் செலுத்தப் படவேண்டிய மிகவும் தகுதிபெற்ற ''ஸ்திரத்தன்மையை அடைந்த பின்னர் நாம் எவ்வாறு ஸ்திரத்தன்மையைக் கிட்டத்தட்ட அடைய முடியும்'' என்ற பிரச்சினையை நினைவுபடுத்துவதால் இந்த நிலைப் பாட்டில் எனக்கும் மிகுந்த ஆர்வமுண்டு. ஆனால், நிர்வகிக்கும் ஒரு முறைக்கும் தானாகவே செயல்படும் ஒரு முறைக்குமிடையில் நாம் தீர்மானிக்கும் வரை, நமது விலைமட்டத்தை ஸ்திரப்படுத்த நாம் எதுவும் செய்யக்கூடாதென்று கூறுவது பூமியையே நரகமாக்குவதாகும்; ஏனென்றால், தேவதூதர்கள் பூமியை சுவர்க்கமாக்கச் சம்மதிப்பதில்லை. அது முற்றிலும் வித்தியாசமான விஷயம் என்று நான் நினைத்ததற்கு அதுதான் காரணம். இது குறித்த சில விமர்சனங்கள் மற்றொரு நேரத்தில் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், இப்பொழுது அல்ல.

புத்தக விமரிசனம்

நாணயமும் பரிவர்த்தனைகளும் [1]

இந்திய நாணயமும் பரிவர்த்தனையும்

எழுதியவர் :

எச்.எல். சப்ளானி, எம்.ஏ.

(ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ், பம்பாய்) 1925

8Y 2 X 5Y2 *பக்கம் 184 விலை ரூ.4-8-0*

இந்தப் பிரசுரமானது ஒரு மட்டமான தயாரிப்பாகும். 180 பக்க அளவுக்குள், ஒரு சிக்கலான விஷயத்தை நூலாசிரியர் அவசர அவசரமாக எழுதியுள்ளார்; போதுமான தகவல்களோ அல்லது போதுமான விளக்கமோ இல்லை. ஆய்வுமுறை என்பது முற்றிலும் இல்லை. இந்நூலில் பல முரண்பாடுகள், பல சமரசங்கள் உள்ளன; ஆசிரியரின் சரியான நிலைப்பாடு என்னவென்று தெரிந்து கொள்வது சிரமமாக உள்ளது. இந்தியா ஏழைநாடாக இருப் பதால் சுழற்சியில் தங்கம் இருக்கமுடியாதென்று ஓரிடத்தில் கூறுகிறார். மற்றொரு இடத்தில், ரூபாய்கள் இருப்பதால் இந்தியா வில் தங்கம் சுழற்சியில் இல்லை என்று கூறுகிறார். பணஅளவுக் கோட்பாடு குறித்து அரசியல் பொருளாதாரத்தில் அதுவே எளிமை யான மற்றும் தெளிவான பகுதியாகும். விவாதத்திற்கு ஒரு பகுதியை அர்ப்பணித்த பின்னர், 1893க்குப் பின்னர் ரூபாயின் தோற்றமானது அதனுடைய வெளியிடலுக்கு வரம்புகட்டியதால் மட்டும் அல்ல என்கிறார்.

அன்னியப் பரிவர்த்தனைகள் என்ற பகுதியிலும் இதைப் போன்ற முரண்பாடு வெளிப்பட்டுள்ளது. அங்கே அவர் இரண்டு கோட்பாடுகளை – வாங்கும் சக்தி சமனநிலைக்கோட்பாடு மற்றும் வர்த்தக நிலுவைக்கோட்பாடு என்பனவற்றை – ஒப்பிட்டு முதலில்

சொல்லப்பட்டதை உண்மையான கோட்பாடு என்று கூறி அதற் காதரவாகத் தனது தீர்ப்பை வழங்கியுள்ளார். இருந்துங்கூட, புத்தகம் முழுவதிலும் வர்த்தகநிலுவை என்ற தவறான கோட்பாட்டின் அடிப்படையில் வாதிடுகிறார். மீண்டும், துவக்கப்பகுதியில், வெள்ளித் தரத்திற்கு மீண்டும் திரும்பி வருவதில் மடத்தனம் எதுவும் கிடையாது என்று கூறுகிறார்! ஆசிரியரின் கண்டுபிடிப்புப்படி நாணய நிர்வாகம் என்பது நமது நாணய முறையின் மாபெரும் குறைபாடுகளில் ஒன்றாகும். இருந்தாலும், இந்தத் தீமைக்குத் தீர்வு மாற்றக்கூடிய ரூபாய் என்று அவர் சிபாரிசு செய்கிறார்!

இந்திய நாணயத்தின் சீரமைப்பிற்காகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஆலோசனையையும் கிட்டத்தட்ட அவர் ஏற்றுக் கொள்வதன் மூலம் நூலாசிரியர் செய்யும் சமரசங்கள் தெளிவாகத் தெரிகின்றன. வெள்ளித் தரத்திற்குத் திரும்புவதென்று அதைப் போன்றே உலகமயமாக்கப்பட்ட தங்கப் பரிவர்த்தனை மதிப்புத் தரத்திற்குத் திரும்புவதென்றுமான டாக்டர் பிஷரின் திட்டத்தில் அவர் நல்லதைக் காண்கிறார். இருந்தபோதிலுங்கூட, தன்னுடைய 'மாற்றக் கூடிய ரூபாய்' என்ற சொந்த விருப்பத் திட்டத்தை, அதாவது, தங்க நாணயமாக மாற்றஇயலாத, ஆனால் தங்கப்பாளமாக மட்டும் மாற்றக்கூடிய திட்டத்தை வைத்துள்ளார். ஆசிரியர் அதை வெளிப் படுத்தவில்லை, ஆனால், அது ''சிக்கனமான மற்றும் பாதுகாப்பான நாணயத்திற்கான ஆலோசனைகள்'' என்ற புத்தகத்தில் ரிக்கார்டோ வெளியிட்ட திட்டமாகும். அதிர்ஷ்டவசமாக இங்கிலாந்து அதை ஏற்கவில்லை. காரணங்கள் எளிமையானவை. காகித ரூபாய்கள், ஒரு குறிப்பிட்டளவு எடையுள்ள தங்கப்பாளங்களாக மாற்றப்பட சட்டம் இயற்றப்படவேண்டும் என்பதன் பொருளானது, தங்கப்பாளங் களுக்கு இணையான காகிதரூபாய்கள் வைத்திருப்பவர்கள் மட்டுமே மாற்றமுடியும் என்பதாகும். இதரர்கள் மாற்றமுடியாது. வேறுவார்த்தை களில் கூறுவதென்றால், அத்தகையதொரு முறையானது நாணய மாற்றம் என்பதன் விளைவைக் கணிசமாகப் பலவீனப்படுத்தப் பண வீக்கத்திற்கே திறந்துவிடும் என்பது உணரப்பட்டது. எனவே இந்தத் திட்டமானது பாதுகாப்பானதாகக் கருதப்படமுடியாது. இந்தத் திட்டமானது சிக்கனமானதா என்பது அந்த நேரத்தில் விவாதிக்கப் படவில்லை; இங்கே சாவதானமாக ஆராயப்படலாம்; தங்களை நாகரீகமானவர்கள் என்று காண்பித்துக்கொள்வதற்காக ஏராளமான எழுத்தாளர்கள் இந்தியாவில் உள்ளனர். நம்முடைய நூலாசிரி யரும் அவர்களில் ஒருவர்; இவர்கள், தங்கத்தை நாணயமாகப் பயன்படுத்துவது காட்டுமிராண்டித்தனமானதென்று கூறி அதற்கு

எதிராக வசைமாரிபொழிகிறார்கள். இந்த நாகரீக எழுத்தாளர்கள். தங்களுடைய சக்தியை நாணயத்திற்காகச் செலவழிக்கிறார்கள்; பரிவர்த்தனைக்கான சாதனமாகத் தங்கத்தைப் பயன்படுத்துவதை விட மிகவும் சிக்கனமானது என்ற, யாரும் மறுக்காத விஷயத்தை ஏதோ, தாங்களே கண்டுபிடித்ததுபோல் விளக்கிக் கூறுவதற்கு தங்கள் சக்தியைச் செலவழிக்கிறார்கள். ஆனால், இதே எழுத்தாளர்கள் இத்தகைதொரு திட்டம் சிக்கனமானது என்பதுதவிர விலைகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் இது பாதுகாப்பானது என்பதை நிரூபிக்க ஒருபோதும் அக்கறை காட்டுவதில்லை. பாதுகாப்பை உத்தரவாதம் செய்யாத வெறும் பொருளாதாரத் திட்டமானது எவ்விதப்பயனையும் அளிக்காது. ஏற்கப்படவேண்டிய திட்டமானது சிக்கனமானதாகவும், பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும். சிக்கனமானதாகயில்லையென்றாலும் அதுபோதும். ஆனால், அது பாதுகாப்பானதாக இல்லையென்றால் அது நிச்சயம் போதாது. நாணயம் என்ற வகையில் தங்கத்தைச் சிக்கனப்படுத்துவது என்பது மதிப்புத்தரம் என்ற வகையில் அதனுடைய பயன்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் என்று நான் கூறுகின்றேன்; இது, சாதாரணமாக தங்கத்தைப் பயன்படுத்துவதைவிடப் பத்திரங்களைப் பயன்படுத்துவது மிகவும் சிக்கனமானதென்ற நாகரீக எழுத்தாளர்களின் கருத்துரையைப் போன்று விளக்கத்தேவையில்லாத விஷயமாகும். நாணயப் பயன் படுத்தலினின்று தங்கத்தைக் கைவிட வேண்டுமென்பதன் பொருள் என்ன? சுருக்கமான பொருள் இதுதான்: தங்கத்தைச் சிக்கனப்படுத்துவதன் மூலம் நீங்கள் அதனுடைய வினியோகத்தை அதிகரிக்கிறீர்கள்; அதனுடைய வினியோகத்தை அதிகரிப்பதன் மூலம் அதனுடைய மதிப்பைத் தாழ்த்துகிறீர்கள், அதாவது, தங்கம் சிக்கனப்படுத்தப்படுவதன் மூலம் மதிப்பிழந்த சரக்காகிறது; எனவே மதிப்புத் தரமாக செயல்படுவதில் அந்தளவுக்குத் தகுதியற்றதாகின்றது. காகித நாணயம் வெளியிடுவது அல்லது வேறெந்த பதிலி வெளியிடுவது உலோக நாணயத் தேவையைப் பாதிக்கிறது என்பதை மறுக்க முடியாது. காகித நாணயம் என்பது மாற்றப்படக்கூடிய அல்லது மாற்றப்படமுடியாத நாணயம் என்பது அது உலோகப் பணத்திற்கான தேவையைப் பாதிக்குமா அல்லது பாதிக்காதா என்று சிலர் தயங்குகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால், இது ஒரு தவறாகும். சோதனை எதுவென்றால், பத்திர வெளியீடுகள் என்பவை உலோக சேமிப்பினால் பாதுகாக்கப்

தேவையை அவை பாதிக்காது. ஆனால், அவை பாதுகாக்கப் படவில்லையென்றால் அதன்பின் அவை உலோகப் பணத்திற்கான - அவை மாற்றக்கூடியதென்றாலும் அல்லது மாற்றமுடியாததென்றாலும் - தேவையைப் பாதிக்கும். காரணம் இதுதான்: பாதுகாக்கப் பட்ட பத்திரங்கள் உலோகநாணயத்தை வெறுமனே பிரதிபலிக்கின்றன; ஆனால் பாதுகாக்கப்படாத பத்திரங்கள், மதிப்பு இருப்பை அதிகரிக்கின்றன. எனவே, நீங்கள் தங்கத்தைச் சிக்கனப்படுத்திக் கொண்டே அதை மதிப்புத்தரமாகவும் பயன்படுத்துவது என்பதைச் செய்யமுடியாது. நீங்கள் தங்கத்தைச் சிக்கனப்படுத்த விரும்பினால், மதிப்புத்தரம் என்ற வகையில் அதைக் கைவிடவேண்டும். தவிரவும், இன்றையநாளில் தங்கத்தைச் சிக்கனப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை; ஏனென்றால், உலகம் முழுவதிலும் பணம் குவிந்து கிடப்பதால் தங்கத்தைக் குறைவாகச் சிக்கனப்படுத்துவது நல்லது. இந்தக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது ஒருமுறை வரப்பிரசாதமாக இருந்த தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் இப்பொழுது சாபக்கேடாகியுள்ளது. சிறிதுகாலத்திற்கு அது ஒரு உபயோகமான காரணத்திற்குப் பயன்பட்டது. 1873லிருந்து தங்க உற்பத்தி வீழ்ச்சியடைந்து தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரத்தினால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகள் மிகவும் வரவேற்கத்தகுந்தவை; ஏனென்றால் உலக நாடுகளில் பணப்புழக்கம் சுருங்கிவரும் நேரத்தில், அதை விரிவுபடுத்த இது உதவியது; அதன்மூலம், விலைகள் வேகமாக வீழ்ச்சியடைவதைத் தடுத்து சர்வதேச விலை அமைப்பை ஸ்திரப்படுத்திப் பராமரிக்கஉதவியது; தங்கமதிப்புத்தரத்தை உருவாக்கியுள்ள நாடுகள் தங்கத்தை நாணயமாக ஏற்றுக்கொண்டால் இது தவிர்க்க இயலாததாயிருக்கும். ஆனால் 1910க்குப்பிறகு நிலைமைகள் மாறின என்பதுடன் தங்க உற்பத்தியும் அதிகரித்தது; இதன் விளைவு தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது விலைகள் உயர்வைத் தடுக்க நாடுகளுக்கு உதவி செய்யவில்லை என்பது மட்டுமல்ல: ஆனால் உண்மையில், ஏற்கனவேயே அதிகளவு தங்க உற்பத்தியின் காரணமா அது தேவைக்கதிமாகிவிட்டதால் அதனால் ஏற்பட்ட பொருளாதார விளைவால் விலைவாசி உயரவே உதவிசெய்தது. இந்நூலாசிரியர், 1911க்குப்பின் விலை உயர்வுக்குத் தங்கநாணயமதிப்புத்தரம்தான் காரணம் என்றுகூறி அதை நிந்தித்த பேராசிரியர் பிஷரையும், இதரர்களையும் மேற்கோள் காட்டுகிறார். ஆனால், தங்கமானது வேறிடத்தில் தங்கப் பரிவர்த்தனை மதிப்புத் தரமாகத் தொடர்ந்திருந்ததால் அது மோசமான மதிப்புத்தரமாக விளங்குகிறது என்ற

அம்சத்தைப் பேராசிரியர் பிஷர் கணக்கிலெடுக்க மறந்துவிட்டார். 1911க்குப் பின் தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் கைவிடப்பட்டு நாடுகள் தங்கத்தைச் சிக்கனப்படுத்துவதற்கு பதிலாக அதைப் பயன் படுத்தியிருந்தால், தங்கம் மிதமிஞ்சி இருந்திருக்காது என்பதுடன் அதைத்தொடர்ந்த விலைவாசிகள் உயர்வும் தடுத்து நிறுத்தப் பட்டிருக்கும்.

இந்தக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது தங்கப் பரிவர்த்தனை மதிப்புத்தரம் என்பது அதன் நோக்கத்தில் காலங் கடந்து விட்டது என்பதுடன் தற்பொழுது தீங்கை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில் காணும்பொழுது தங்கத்தைப் பயன்படுத்துவதில் சிக்கனம் செய்துகொண்டே அதை மதிப்புத்தரமாகவும் பராமரித்து வருகிற திட்டங்களுக்கு ஆதரவு தருவது சாத்தியமல்ல.

இந்நூலாசிரியர், ரூபாயைத் தங்கக்கட்டியாக மாற்ற வேண்டு மென்ற தனது திட்டத்தை உருவாக்கியபோது இத்தகைய அம்சங்கள் அவர்கண்ணில் படாமல் முற்றிலும் தப்பிவிட்டன. ஆனால், தங்கப்பாளமாக மாற்றிக்கொள்வதென்பது இந்நூலாசிரியரின் முழுத் திட்டத்தையும் உள்ளடக்கி இருக்கவில்லை. ரூபாய்களும், சிறு தொகைக் காகித ரூபாய்களும் சட்டப்படி தங்கக் கட்டியாக மாற்றிக் கொள்ளமுடியும் என்ற போதிலும் நூலாசிரியர் நாணயமாற்றத் துடன் ரூபாய்கள் மற்றும் சிறுதொகைக் காகித ரூபாய்கள் வெளியிடுவது மீது ஒரு வரம்புவிதிக்கவேண்டுமென்று கூறுகிறார். இந்தியாவில் நாணயம், வர்த்தகத்தில் அதனுடைய வழக்கமான முன்னேற்ற விகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் ஒரு குறிப்பிட்ட சிறு சதவீத அளவிற்கு வருடத்திற்கொருமுறை விரிவுபடுத்த அனு மதிக்கப்படவேண்டும். அந்தச் சதவீதத்திற்கு மேல், நாணயத்தை அதிகரிக்க அரசாங்கத்திற்கு எவ்வித அதிகாரமும் இருக்கக்கூடாது. ரூபாய்கள் மற்றும் சிறுதொகைக் காகித ரூபாய்கள் வெளியிடல் மீது நிச்சயமற்ற வரம்பு விதிப்பதற்கான காரணங்களைக் கூறும்பொழுது ஆசிரியர் குறிப்பிடுகிறார்: ''ஒரு மாற்றக்கூடிய ரூபாயானது'' தொகையில் சிறு அளவாக இருப்பதால் பணவீக்கத்திற்கெதிராகப் போதுமான பாதுகாப்பாக இல்லை; ஏனென்றால் பழைய பொரு

வகைப்பட்ட மாணவர்கள், இரண்டு வகைப்பட்ட கட்டணங்களில் போதிக்கப்படுகிறார்கள் என்ற அம்சத்தின் காரணமாகத்தான் இது ஏற்படுகிறது; இரண்டில் ஒன்றுகூட அவர்களுக்கு உறுதியான நம்பிக்கையையும், முழுநிறைவையும் அளிக்கவில்லை.

விமரிசனம்

1926[1] ஆம் வருடத்திய வரி விசாரணைக் கமிட்டியின் அறிக்கை

கமிஷன்கள் அறிக்கை தரும், கமிட்டிகள் விசாரிக்கும் என்பது ஆங்கிலேய அரசாங்கமுறையின் ஒரு வினோதமான அம்சமாகும். அது ஆங்கிலேய நாடாளுமன்றச் செயல்பாட்டின் ஒரு அடிப்படையான அம்சமாகும்: சமூக மற்றும் பொருளாதாரச் சட்டங்கள் இயற்றும் விஷயத்தில் அது திடீரென ஒருபோதும் முடிவுசெய்யாது. கமிட்டியும் கமிஷன்களும் ஒரு நாடாளுமன்ற சட்டங்களுக்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகளாகும். இதில் அறிவே செல்வம் என்ற நன்கறியப்பட்ட மூதுரையை அது பின்பற்றுகிறது. ஆங்கில நாடாளுமன்ற முறையின் இந்தக்கோட்பாடு இந்தியாவில் பின்பற்றப்படுகிறதைக் காண எவரும் மகிழ்ச்சியடைவார்: இத்தகைய கமிஷன்கள் மற்றும் கமிட்டிகள் நியமிக்கப்படுவதை அடிக்கடி எதிர்த்துக்கொண்டேயிருக்கும் நம்முடைய அரசியல் வாதிகள் நாட்டின் சிறந்த நலன்கருதிச் செயல்படுகிறார்கள் என்று சொல்லமுடியாது.

எனினும், வரிவிசாரணைக் கமிட்டி விஷயத்தில் அரசாங்கம் தான் அதை மூடிமறைக்க முயற்சித்தது என்பதுடன், அது ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டபோது அது சட்டசபையில் கோரியதைப் போன்று இல்லை. சட்டசபை விரும்பியதென்னவென்றால், வரி செலுத்தும் திறன் குறித்த விசாரணையாகும்; ஆனால், அரசாங்கமோ அத்தகையதொரு வரிச் சுமையானது அவர்களுடைய வரி தரக் கூடிய சக்திக்கு ஏற்றாற்போலில்லை என்பதை வெளிப்படுத்திவிடும் என்று பயந்து அத்தகைய விசாரணையை வைக்க விரும்பவில்லை. ஆனால் அத்தகையதொரு விசாரணை வைக்கப்பட வேண்டுமென்று

மக்களுடைய கருத்து அரசாங்கத்தை வற்புறுத்தியதால் அது சுற்றி வளைக்கும் முறையில் விசாரணையை இரு பகுதிகளாகப் பிரித்தது. 1) வரி விசாரணைக் கமிட்டி, 2) பொருளாதார விசாரணைக் கமிட்டி என்று பிரிக்கப்பட்டதின் விளைவாக இவ்விரு கமிட்டியின் அறிக்கையின் பயன்பாடும் கணிசமான அளவில் குறைந்து போய்விட்டது.

வரி விசாரணைக் கமிட்டி விசாரிக்க வேண்டியிருந்தது, 1) தற்பொழுது மக்களின் பல்வேறு வர்க்கங்களுக்கிடையே வரிப்பளு எந்த முறையில் சுமத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்வது, 2) முழு வரித்திட்டம் சமத்துவமாகவும் பொருளாதாரக்கோட்பாடுகளின் படியும் உள்ளதா: இல்லையென்றால் எந்த அம்சத்தில் குறைபாடு உள்ளதாக இருக்கிறது என்பதை ஆராய்வது; 3) பொருத்தமான ஆதார வரிவிதிப்பு குறித்து அறிக்கை தருவது ஆகியவை. இந்த அறிக்கையைத் தயாரித்தபொழுது கமிட்டி பின்வரும் மூன்று பிரச்சினைகளை ஆராய்வதற்குப் போதுமான இடம் ஒதுக்குவதில் நியாயமாக நடந்து கொள்வதில்லை. முதலாவது விஷயமானது, இந்த மூன்று பிரச்சினைகளில் மிகவும் முக்கியமானதாகும். இருந்தும் கூட இந்தப் பிரச்சினை பற்றி ஆராய்வதற்கு மொத்தமுள்ள 447 பக்கங்களில் வெறும் 13 பக்கம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பிரச்சினை அணுகப்பட்ட விதமும் திருப்திகரமாயில்லை. இந்தக் கமிட்டியானது எவ்விதக் காரணமும் கூறாமல் நாட்டின் மக்கள் தொகையை 11 வகைகளாகப் பிரித்து அவர்கள் மேலுள்ள சுமை குறித்து 10 1/2 பக்கங்களில் விவாதித்துள்ளது; அனைத்துப் பிரச்சினைகளிலும் மிகவும் முக்கியமான பிரச்சினையான இந்திய வரிவிதிப்பு முறையின்கீழ் தனிநபர் வரிவிதிப்பு என்பதை இந்தக் கமிட்டி தொடவேயில்லை. மக்கட்தொகையை 11 பிரிவாகப் பிரித்தால் மட்டும் போதும்: அது விரிவான பிரிப்பு என்று கமிட்டி ஏன் நினைத்தது என்பதைத் தற்பொழுது எவரும் தெரிந்துகொள்ளவே விரும்புவார். இருக்கக்கூடும் என்பதுதான் விடையானால், அது ஏன் 13 ஆக இருக்கக்கூடாது? மீண்டும், ஒரு வியாபாரிக்குள்ள சுமை என்ன என்பதைக் கமிட்டி எவ்வாறு கூற இயலும்? தனிநபர் வரிவிதிப்பு குறித்து அவர்கள் ஆராய்ந்திருந்தால், அவருக்குச் சுமையே இல்லை என்று ஒருக்கால் அவர்கள் கண்டுபிடித்திருக்கக்கூடும்! மீண்டும் மற்றொரு திட்டவட்டமான சம்பவத்தைப் - பருத்தி மீதான எக்ஸைஸ் வரியை எடுத்துக்கொள்வோம். அந்த வரியை ஒழித்துவிடுவது என்பது உழைப்பாளி மக்கட் பகுதியினருக்கு ஆதாயமானது என்று கூறுவதற்குக் கமிட்டி எவ்விதச் சிரமமும் படவில்லை. ஆனால், அது

நுகர்வோர் மீது மாற்றப்பட்டுள்ளதா என்பது கமிட்டிக்கு நிச்சயம் தெரியுமா? நான் கமிட்டிக்கு அநியாயமாக இருக்கவிரும்பவே யில்லை. ஆனால், இந்த விஷயத்தில் கமிட்டி யின் அறிக்கையானது மிகவும் ஏமாற்றம்தரும் ஆவணமானதாகவே உள்ளது என்பதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். கமிட்டியானது இந்தியாவில் வரிவிதிப்பிற்கான பல்வேறு ஆதாரங்களின் விவரமான வரலாற்றை விவரிப்பதற்காக ஏராளமான அளவில் இடம் ஒதுக்கியுள்ளது. அந்தளவு நல்லதுதான். ஆனால், ஒவ்வொரு வரிவிதிப்பையும் தனித் தனியாக விவாதிப்பதற்கு அந்த இடத்தில் பாதியையாவது கமிட்டி ஒதுக்கியிருந்தால் நல்லதாயிருந்திருக்கும். ஆனால், அவ்வாறு செய் யாமல் கமிட்டியானது முழுவதையும் ஒதுக்கித் தள்ளிவிட்டது. அதைச் செய்திருந்தால், வரிச்சுமையை பகிர்ந்துவிடுவது மற்றும் அநீதியான வரிகளை ஒழித்துவிடுவது குறித்த பிரச்சினைகளை ஆராய் வதில் கமிட்டி மேம்பட்ட நிலையில் இருந்திருக்கும். கமிட்டி அதைச் செய்ய இயலவில்லை. அதைப் போன்று அச்சிடும் செலவு தவிர நாட்டிற்கு 41/2 லட்ச ரூபாய்கள் செலவு வைத்துள்ள ஒரு கமிட்டி அத்தகைய விசாரணையின் ஒரு முக்கியமான பகுதியை ஆராய மறந்து விட்டது.

பிரதான பிரச்சினையை ஆராயத் தவறியதற்குப் பெரும்பாலும் அனுபவமற்றவர்களே அந்தக் கமிட்டியின் உறுப்பினர்களாக இருந்ததுதான் காரணமாகும். வதந்தியாக வரும்செய்தி உண்மை யாயிருக்கும் பட்சத்தில் அவர்களில் பெரும்பாலோர், அந்தக்கமிட்டி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட பின்னர்தான் பஞ்சாப் நிதி நிலைமை குறித்த அரிச்சுவடியையே படிக்கத் தொடங்கினார்கள். இத்தகைய குழுவிடமிருந்து வரும் அறிக்கையானது இந்த விஷ யத்தைப் பயிலும் மாணவர்களிடையே எவ்விதப் பிரதிபலிப்பையும் ஏற்படுத்தாதது வியப்புக்குரியதல்ல. எனினும், அறிக்கைக்காதரவாக ஒரு விஷயத்தைக் கூறமுடியும். அது ஒழுங்காக அமையப்பெற்ற, முழுவதும் பொதுஅறிவு நிரம்பிய ஆவணமாகும். அது மாணவரைத் திருப்தி செய்ய இயலவில்லையென்றால், அது நிச்சயம் அவ ருடைய அறிவுபூர்வ நடவடிக்கைகளுக்கான ஒரு அடிப்படையாக அமையும். கமிட்டியின் சில ஆலோசனைகளை அடுத்துவரும் கட்டுரைகளில் ஆராய்வேன் என்று நம்புகிறேன். தற்சமயத்தில் அந்த அறிக்கை குறித்துப் பொதுவான என் கண்ணோட்டம் குறித்த இந்த அறிக்கையுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

முன்னுரை [1]

இந்தியாவின் சரக்குப் பரிவர்த்தனைகள் குறித்த தன்னுடைய நூலுக்கு அறிமுகமாக ஒரு சில வார்த்தைகள் எழுத வேண்டுமென்று திரு.சால்வி (SALVI) யின் வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய நூலானது முன்னோடியானது இல்லையென்றாலும், இந்தத் துறையில் இதுவரை வந்துள்ள நூல்களில் எதையும் விட மிகவும் விரிவான நூலாகும் என்பது மிகத்தெளிவானது. ஒன்பது பகுதிகளில் அவர் சரக்குப் பரிவர்த்தனைகளின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்துள்ளதோடு சரிவரப் புலப்படாத ஒரு விஷயத்தில் மிகுந்த ஒளிபாய்ச்சியுள்ளார். சரக்குப் பரிவர்த்தனை என்ற விஷயமானது விவாசயத்துடன் நெருக்கமான தொடர்புடையது. இந்தியா ஒரு விவசாய நாடு என்ற போதிலும் இந்த விஷயத்தில் இதுவரை மிகச் சிறிய கவனமே செலுத்தப்பட்டுள்ளது. இந்திய விவாயிகளின் மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ள யாவரும் இந்த விரிவான மற்றும் போதனையூட்டும் நூல் வெளிவந்திருப்பதை வரவேற்காமல் இருக்கமுடியாது.

பம்பாய்,
29.12.1946.

பி.ஆர். அம்பேத்கர்

முன்னுரை[1]

திரு.எம்.ஆர். இத்குஞ்ஞி (M.R. IDGUNJI) யினுடைய 'சமூகக் காப்பீடும் இந்தியாவும்' என்ற நூலானது நன்கு திட்டமிடப்பட்ட ஆய்வுக்கட்டுரையாகும்.

இது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியானது பொதுவானது என்பதுடன் இரண்டு பிரதான தலைப்பு களையும் ஆராய்கிறது. 1) சமூகக் காப்பீட்டின் இரண்டு பிரதான கிளைகள், அதாவது, அ) தொழிலாளருக்கு நஷ்டஈடு, ஆ) நிதி ஆதாரங்கள், (Retunial technique) தொழில்நுட்பம் மற்றும் நிதியாதார நிர்வாகம் போன்ற சமூகக் காப்பீட்டின் பல்வேறு நிதிஅம்சங்கள். சமூகக் காப்பீட்டின் நிதியாதார அம்சங்கள் குறித்த விவாதமானது சமூகக் காப்பீட்டுத் திட்டங்களின் செயல்பாடு, சமூகக் காப்பீட்டுத் திட்டங்கள் சரியான வழிகளில் செயல்படும் பொருட்டு நிதியாதா ரங்களை உருவாக்குவதற்கான பல்வேறு முறைகள், மற்றும் சமூகக் காப்பீட்டின் நிதி சம்பந்தமான பகுதியோடு தொடர்புள்ள நிர்வாகத் தின் பிரச்சினைகள் போன்றவற்றை விவரிப்பதை நோக்க மாகக் கொண்டது.

இரண்டாம் பகுதியானது, இந்தியாவில் நிலவும் நிலைமைகள் சம்பந்தமான சமூகக் காப்பீட்டுப் பிரச்சினையை ஆராய்கிறது. இந்தப் பகுதியில் 1923ஆம் வருடத்திய இந்தியத் தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்ட விதிகள் மற்றும் நோய்க்காலக் காப்பீடு ஆகியவை நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளது. இதோடு சேர்த்து, சமூகப் பாதுகாப்பிற்கான பேவரிட்ஜ் (BEVERIDGE) திட்டம் மற்றும் நியூஜிலாந்தில் பின்பற்றப் படும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட் டுள்ளது. இந்த விவாதமானது இந்தியாவில் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறிவதில் முடிந் துள்ளது. சில அடிப்படையான சிரமங்கள் அகற்றப்பட்டு, நாடு பொருளாதார ரீதியில் கணிசமாக முன்னேறி, இன்று நாட்டில் நிலவும் கடும் வறுமை ஒழித்துக் கட்டப்பட்டாலொழிய இந்தியாவில் சரியான சமூகக் காப்பீட்டு நடவடிக்கைகள் சாத்தியமல்ல என்ற

கருத்தை ஆசிரியர் கொண் டிருக்கிறார். அவர் எடுத்த நிலைப்பாட்டிற்கு ஆதரவான காரணங்கள் தெளிவாகவும் பயமின்றியும் விவரிக்கப் பட்டுள்ளன. இந்தியா பிரதானமாக ஒரு விவசாய நாடு என்பதையும் விவசாய மக்களுக்குப் பாதுகாப்பு மிகவும் தேவைப்படுகிறதென்பதை உணர்ந்து இந்நூலாசிரியர் சமூகக் காப்பீட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் பயிர்க்காப்பீட்டுத் திட்டம் ஒன்றிற்கு யோசனை கூறுகிறார். இந் நூலாசிரியர் தரும் கருத்துப்படி அவர் சொல்லும் வழியில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டால் நமது நாட்டின் கிராமப்புற நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் பஞ்சங் களின் பயங்கரத் தாக்குதலைக் குறைப்பதற்கும் மிகவும் பயன்படும்.

சமூகக் காப்பீடு என்பது இந்தியாவில் ஒரு புதிய விஷய மாகும். இந்த விஷயம் குறித்து இந்தியர்கள் எழுதியிருப்பது இயற்கை யாகவே மிகக்குறைவு. இந்தச் சூழ்நிலைமைகளில் திரு. இத்குஞ்ஞி யின் நூலானது இந்த விஷயம் குறித்துப் படிக்கும் அனைத்து மாணவர்களாலும் வரவேற்கப்படும் என்பது நிச்சயம்; இவ் விஷயம் குறித்து ஏற்கனவே எழுதப்பட்டுள்ள சிறிய புத்தகங்களுக்குக் கூடுதல் நூலாகவும். இந்த விஷயத்தில் எழும் பிரச்சினைகளை விமர்சனநிலையில் ஆராயும் நூலாகவும் இது இருக்கும். அவருடைய நடை சரளமானது என்பதோடு அவருடைய விளக்கமும் மிகத் தெளிவானது.

பி.ஆர். அம்பேத்கர்.

சிறப்புப் பெயரகராதி

கே

ச

சி

செ

சே

சு

டா

டெ

டி

த

து

நா

நி

ப

பி

(குறிப்பு: அ.கு. - அடிக்குறிப்பு)

★ ★ ★